துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)

ஆற்றல்வளத் தனித்தகுதி பெற்றது, மொழிவாரிச் சிறுபான்மை நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்றது
அரும்பாக்கம், சென்னை – 600 106.

Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College (Autonomous)

College with Potential for Excellence, Linguistic Minority Institution
Affiliated to University of Madras, Arumbakkam, Chennai - 600 106.

தமிழ்த்துறை & தமிழ் இலக்கியத்துறை

நடத்தும்

பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு

நாள் : 21.04.2022

DEPARTMENT OF TAMIL & TAMIL LITERATURE

Organizing

INTERNATIONAL MODERN TAMIL LITERATURE CONFERENCE

Pranav Journals

பிரணவ் தமிழியல் ஆய்விதழ் (சிறப்பிதழ்)

Online Quarterly Journal - Peer Reviewed Journal

ISSN : 2582-9599

SPECIAL ISSUE 1 - VOLUME 1

முதன்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் **ப. முருகன்**

சிறப்பிதழ் ஆசிரியர்கள்

முனைவர் **சி. சதானந்தன்**

முனைவர் **க. கிரிவாசன்**

முனைவர் **த. சிவலிங்கம்**

தமிழ்த்திரு **அ. சதாசிவம்**

பதிப்புக்குழு

முனைவர் **கு. சுதாகர்**

முனைவர் **ஆ. இரமேஷ்**

முனைவர் **செ. செல்லப்பிள்ளை**

முனைவர் **த. கெஜலட்சுமி**

முனைவர் **க. ர. லதா**

முனைவர் **ஜ. சிவகுமார்**

முனைவர் **மு. ஏழுமலை**

முனைவர் **வெ. இராம்ராஜ்**

முனைவர் **ம. பிரபு**

தமிழ்த்திரு **ம. செந்தில்குமார்**

முனைவர் **கு. வடிவேல் முருகன்**

பிரணவ் தமிழியல் ஆய்விதழ் (சிறப்பிதழ்) : Online Quarterly Journal

Pranav Journal of Tamil (Special Issue) **Peer Reviewed Journal** : **ISSN : 2582 - 9599**

பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு – நாள் : 21.04.2022, தமிழ்த்துறை & தமிழ் இலக்கியத்துறை

துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி), அரும்பாக்கம், சென்னை–106.

Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College
(Autonomous-Affiliated to the University of Madras)
Gokul Bagh, 833 Periyar E.V.R. High Road, Arumbakkam, Chennai-600 106
Phone: 044-23635101, 23635102 Fax: 044-23635103
E-mail: dgvoffice@gmail.com website: www.dgvaishnavcollege.edu.in

திருவாளர் அசோக்குமார் முந்த்ரா
கல்லூரிச்செயலர் & மாநாட்டுப் புரவலர்

ஜெய் ஸ்ரீ கிருஷ்ணா

வாழ்த்துரை

தமிழில் சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், நவீன இலக்கியம் எனப் பல வகைகள் உண்டு. அதில் குறிப்பிடத் தகுந்தது நவீன இலக்கியமாகும். நவீன இலக்கியத்தில் கவிதை, சிறுகதை, புதினம் (நாவல்), நாடகம், கட்டுரை எனப் பல பிரிவுகள் உள்ளன. மனித உணர்வுகளை வெளிப்படுத்த எளிய வழி முறையாகத் திகழ்வது நவீன இலக்கியங்கள். அனைத்துத் தர மக்களையும் சென்று சேரும் இலக்கிய வடிவமாகவும் நவீன இலக்கியங்கள் திகழ்கின்றன. குறிப்பாகக் கவிதைகள் அனைவரையும் ஈர்க்கும் திறன் வாய்ந்தவை. இதற்குச் சான்றாக நானே இருக்கின்றேன். புதுக்கவிதையில் எனக்கும் பெரிதும் ஈடுபாடு உண்டு. நானும் புதுக்கவிதைகளை இயற்றியிருக்கிறேன். மேலும் மகாகவி பாரதியார் தொடங்கி இன்றுவரை உள்ள அனைத்துப் படைப்பாளர்களும் எளிதில் அணுகும் வண்ணம் தம் இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த நவீன இலக்கியம் குறித்து எங்கள் கல்லூரித் தமிழ்த்துறையினர் மாநாடு நடத்துவது சிறப்புக்குரியது. இது நாங்கள் நடத்தும் நான்காவது மாநாடாகும். திருக்கயிலாயப் பரம்பரைத் தருமபுர ஆதீனம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஐந்தாவது அனைத்துலக சைவ

Managed by SHRI VALLABHACHARYA VIDYA SABHA

சித்தாந்த மாநாடு 2018ஆம் ஆண்டு உலகமே வியக்கும் வண்ணம் நடந்தேறியது. அதனைத் தொடர்ந்து 2020 இல் இந்து தமிழ் திசை நாளிதழுடன் இணைந்து அனைத்துலகத் தமிழ்ச் சிற்றிலக்கிய மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 03.08.2021 அன்று தொடங்கி 09.08.2021 வரை ஏழு நாட்கள் சேக்கிழார் பன்னாட்டு மாநாடு இணையவழியில் மிகச்சிறப்பாக நடை பெற்றது. அதன் தொடர்ச்சியாகத் தற்போது பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு நடைபெற உள்ளது.

எந்தப் பணி கொடுத்தாலும் மிகச் சிறப்பாக நடத்தும் திறமைபடைத்த தமிழ்த்துறையினர் பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாட்டை நடத்துவது பெருமைக்குரியது. பன்னாட்டு மாநாடு என்ற பெயருக்கு ஏற்ப அயல்நாடுகளிலிருந்து மக்கள் தொடர்பை நம் கல்லூரிக்குக் கொண்டு வந்த பெருமை எம் பேராசிரியர் முனைவர் ப.முருகனுக்கு உண்டு. பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு வெற்றி பெற எல்லாம்வல்ல ஆண்டவன் அருள்புரியட்டும். பன்னாட்டு மாநாட்டிற்காக ஆய்வுக் கட்டுரைகளைப் பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களிடமிருந்து பெற்று அவற்றை ஒருங்கே திரட்டிச் செம்மையாக நூலாக்கம் செய்து பிரணவ் தமிழியல் ஆய்விதழில் **(Pranav Journal of Tamil - Peer Review Journal) ISSN** எண்ணுடன் சிறப்பிதழாக வெளியிடுவதைக் கண்டு அகமகிழ்கிறேன். பிரணவ் தமிழியில் ஆய்விதழ் உரிமையாளர்களையும் கல்லூரிக்காக எந்த நேரத்திலும் அயராது உழைக்கும் தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர் ப.முருகன்** உள்ளிட்ட தமிழ்த்துறையினரையும் இம் மாநாடு நேரத்தில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள். தங்கள் தமிழ்ப்பணி தொடரட்டும். தொடர்ந்து சிறக்கட்டும்.

அன்புடன்

அசோக்குமார் முந்த்ரா

18.04.2022

சென்னை – 106

Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College
(Autonomous-Affiliated to the University of Madras)
Gokul Bagh, 833 Periyar E.V.R. High Road, Arumbakkam, Chennai-600 106
Phone: 044-23635101, 23635102 Fax: 044-23635103
E-mail: dgvoffice@gmail.com website: www.dgvaishnavcollege.edu.in

முனைவர் **சேது. சந்தோஷ்பாபு**
கல்லூரி முதல்வர் & மாநாட்டுத் தலைவர்

பாராட்டுரை

"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது சொற்புதிது
சோதிமிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மாகவிதை"

என்று மகாகவி பாரதியார் குறிப்பிடுவது போல என்றும் புதிய புதிய இலக்கியங்கள் வந்த வண்ணம் இருக்கும் தமிழ்மொழியில் நவீன இலக்கியங்கள் என்றும் நீங்கா இடம் பெற்றவை. எல்லோரும் படிக்கும் வகையில் மட்டுமல்லாது படைக்கும் வகையிலும் புதுக்கவிதை, நாவல் எனப்படும் புதினம், எல்லோரும் பார்த்து ரசிக்கும் நாடகம், கட்டுரை ஆகியவை தொடங்கி இன்று கணினித்தமிழ் வரை நவீன இலக்கியத்தின் தாக்கம் மிகுந்துவிட்டது. மாணவர்களே எழுதும் எளிய தன்மை கொண்ட இலக்கியமாகத் திகழ்வது நவீன இலக்கியங்கள். அத்தகைய நவீன இலக்கியத்தில் தமிழ்த்துறையினர் மாநாடு நடத்துவது சிறப்பானது. செவ்வியல் இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் அதனைத் தொடர்ந்து நவீன இலக்கியங்கள் பற்றி பன்னாட்டு மாநாடு நடத்துவது முழுமையாகத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்ந்த மனநிறைவைத் தரும் என நம்புகிறேன்.

தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் தொடர்ந்து பல கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் நடத்தி வரும் தமிழ்த்துறையினர் தொடர்ந்தும் இந்த ஆண்டும் பன்னாட்டு

Managed by: SHRI VALLABHACHARYA VIDYA SABHA

நவீனத் தமிழிலக்கிய மாநாட்டை நடத்த உள்ளனர். மாணவர்களும் ஆய்வாளர்களும் பயன்பெறும் வண்ணம் மாநாட்டை நடத்துவதில் தமிழ்த்துறையினர் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றனர். தமிழ்க்கட்டுரைகள் மட்டுமல்லாது ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் ஆகிய பிறமொழிக் கட்டுரைகளும் சேர்த்து 92 ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றிருப்பதைப் பாராட்டுகிறேன்.

தமிழகம் மட்டுமல்லாது இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற தெற்காசி நாடுகளிலிருந்தும் போராசிரியர்களும் ஆய்வாளர்களும் தமிழார்வலர்களும் ஆய்வுக் கட்டுரைகள் அளித்திருப்பது இம்மாநாட்டிற்கும் நம் கல்லூரிக்கும் பெருமை தரக்கூடியதாகும். மாநாடு நடத்திக் ஆய்வுக் கட்டுரைகளை நூலாக்கம் செய்து பிரணவ் தமிழியல் ஆய்விதழில் **(Pranav Journal of Tamil - Peer Review Journal) ISSN** எண்ணுடன் சிறப்பிதழாக வெளியிடுவதைக் கண்டு அகமகிழ்கிறேன். நெஞ்சாரப் பாராட்டுகிறேன். ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் பிரணவ் தமிழியல் ஆய்விதழில் மின்னிதழாகவும் வெளிவருகிற இவ்வேளையில் ஆய்விதழின் உரிமையாளர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இதுபோல இன்னும் பல மாநாடுகளைத் தமிழ்த்துறைத்தலைவர் **முனைவர் ப.முருகன்** உள்ளிட்ட தமிழ்ப் பேராசிரியர்கள் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று மனதாராப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

18.04.2022 **அன்புடன்**

சென்னை – 106 சேது. சந்தோஷ்பாபு

www.nie.edu.sg
1 Nanyang Walk Singapore 637616 Tel: (65) 6790 3888
NTU Reg No. 200604393R

NIE
NATIONAL INSTITUTE OF EDUCATION SINGAPORE

முனைவர் **சீதாலட்சுமி**
இணைப்பேராசிரியர்
துணைத்தலைவர் / ஆசியமொழிகள் மற்றும்
பண்பாடுகள் (தமிழ்)
தேசியக் கல்விக்கழகம்,
நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

அன்புடையீர்,

வணக்கம்.

அனைவரும் நலமாக இருக்கிறீர்கள் என்று நம்புகிறோம். துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரியின் தமிழ்த்துறையும் தமிழ் இலக்கியத்துறையும் இணைந்து பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாட்டை 21.04.2022 ஆம் நாளன்று நடத்தவிருக்கிறார்கள். அவ்வகையில் கல்லூரித் தலைமை நிர்வாகத்தினருக்கும் கல்லூரிச் செயலர் **திருவாளர் அசோக்குமார் முந்த்ரா** அவர்களுக்கும் கல்லூரி முதல்வர் **முனைவர் சேது. சந்தோஷ்பாபு** அவர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநாட்டுச் செயலரும் தமிழ்த்துறைத் தலைவருமான **முனைவர் ப.முருகன்** அவர்களுக்கும் அவருக்குத் துணைநிற்கும் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் **முனைவர் கு.சுதாகர்** அவர்களுக்கும் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினருக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் ஆய்வுக் கட்டுரை எழுதியளித்திருக்கின்ற ஆய்வாளர்களுக்கும்

பேராசிரியர்களுக்கும் இம்மாநாடு தொடர்பான அனைத்து அறிஞர் பெருமக்களுக்கும் எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்த்துறையினரால் ஆண்டுதோறும் நடத்தப்பெறும் கருத்தரங்கிற்கு இரவு பகல் பாராது தமிழ்த்துறைத் தலைவருடன் தோளோடு தோள் கொடுத்துத் தொழில்நுட்ப அறிவுடன் மிகச்சீரிய அளவில் உழைக்கும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் **முனைவர் சி.சதானந்தன்** மற்றும் **முனைவர் க.கிரிவாசன்** ஆகியோருக்கும் என் இதயங்கனிந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு நடைபெறவிருக்கும் நவீனத் தமிழிலக்கிய மாநாடு அடிப்படையில் இன்றைய நிலையில் தேவையானதொரு மாநாடு. உலகம் சுமார் இரண்டரை ஆண்டுக்காலம் என்ன செய்வதென்று தவித்தபடி இருந்தாலும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அடுத்தடுத்துப் பல முனைப்புகளுடன் தன்னைத் தேற்றி வந்துள்ளது. தற்போது எல்லைகள் திறக்கப்பட்டு விமானப்பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யானறிந்தவரை இவ்வாறு நாட்டு எல்லைகளைப் பலநாடுகளும் பயணத்திற்காக மூடியதைக் கேள்விப்பட்டதில்லை. இத்தகு பின்னணியில் நம்முடைய படைப்புகள்தாம் மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும் கொவிட் 19 போன்ற அனுபவங்களையும் எடுத்துக்கூறும் தன்மையன. எனவே அனைவரும் வாழ்வில் ஒரு பகுதியாக இந்தக் கொவிட்19 அனுபவத்துடன் செலவிட்ட காலத்தையும் அதற்கு முன்பும் பின்பும் இடம்பெறும் காலத்தையும் வாழ்வையும் இணைத்துப் பார்க்க, எண்ணி வியப்புற, எண்ணி ஏங்கிட, எண்ணி எண்ணிக் கலங்கிட இலக்கியப் படைப்புகள் தேவை. அவ்வகையில் இம்மாநாட்டை உரியகாலத்தில் திட்டமிட்டு நடத்தும் மாநாட்டுக்குழுத்தலைவருக்கும் அதற்கு உறுதுணையாய் நிற்கும் கல்லூரி மேலாண்மைக் குழுவினருக்கும் தலைவருக்குத் தோளோடு தோள் கொடுத்து நிற்கும் ஏற்பாட்டு குழுவினருக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க! வளர்க!.

அன்புடன்

18.04.2022

சிங்கப்பூர்

சீதாலட்சுமி

முனைவர் **மனோன்மணி தேவி அண்ணாமலை**
இணைப்பேராசிரியர்
சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம்
மலேசியா.

துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரியின் தமிழ்த்துறையும் தமிழ் இலக்கியத்துறையும் ஏற்று நடத்தும் பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு வெற்றி பெற முதலில் என் அன்பினையும் வாழ்த்தினையும் கூற விழைகிறேன். மாணவர்களிடையே இலக்கிய ஆர்வத்தை ஊட்டுவதற்காகவும் அவர்தம் பேச்சாற்றலை வளம்பெறச் செய்வதற்காகவும் இக்கல்லூரிப் பலவகையில் தொண்டாற்றி வருவதாக அறிந்து மகிழ்ச்சியுற்றேன். மிகச்சிறந்த எண்ணங்களைத் தன்னகத்தே பதித்து வைத்திருப்பது எதுவோ அதுதான் இலக்கியம் என்பார் டி.எஸ்.இலியட்.

இலக்கியம் என்பது சிறந்த ஒரு குறிக்கோளை நம்நெஞ்சில் நிறுத்தி ஓர் உயர்ந்த வாழ்வை நாம் வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும். அவ்வகையில், எந்திரமயமான வாழ்க்கைப் போக்கினையே பின்பற்றி வாழும் இன்றைய மனிதர்களிடையே அறநெறிகள் அருகி வருதலைக் காணமுடிகின்றது. தமிழ்ச்சமூகத்தின் அறநெறி சார்ந்த வாழ்வியல் நெறிமுறைகளை இக்கால மக்களுக்கு எடுத்துரைப்பதற்குத் தமிழனுக்கு இருக்கும் ஒரேகருவூலம் தமிழிலக்கியங்கள்தான் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. நவீன இலக்கியங்களின் நோக்கமும் அன்பும் அறமும் சார்ந்த வாழ்வியல் முறையை மக்களுக்குக் கொண்டு சேர்த்தலே ஆகும் என்பதால் மக்கள் அறநெறிகளைப் பின்பற்றி உயர்ந்த குறிக்கோள்களும் ஒழுக்கமும் கொண்டு வாழ்தல் வேண்டும் என்ற நற்சிந்தனையில், இத்தமிழ்த்துறை தொடர்ந்து இது போன்ற மாநாடுகளை நடத்தி வருதல் போற்றுதற்குரிய செயலாகும். தனி ஒருவன் தன்னைத் திருத்திக் கொண்டாலே சமுதாயம் திருந்திவிடும் என்பதால் இம்மாநாடு தனிமனித விழுமியங்களை மீட்டெடுத்துச் சமூகமேம்பாட்டிற்கு வித்திடும் என்று நம்புவோமாக!

அன்புடன்

18.04.2022

மனோன்மணி தேவி அண்ணாமலை

மலேசியா

विश्वभारती
विश्वभारती
Visva-Bharati

आचार्य: श्री नरेंद्र मोदी
ACHARYA (CHANCELLOR)
SHRI NARENDRA MODI

संस्थापक: रवीन्द्रनाथ ठाकुर
Founder: Rabindranath Tagore

उपाचार्य: प्रोफेसर विद्युत चक्रवर्ती
UPACHARYA (VICE-CHANCELLOR)
PROF. BIDYUT CHAKRABARTY

NO: BB/TA/W-2/02/22

Santiniketan
18.04.2022

முனைவர் **செ. செந்தில்பிரகாஷ்**

தமிழ்ப்பேராசிரியர்
மொழிகள், இலக்கியம் மற்றும் நடுவண் பல்கலைக்கழகம்
விசுவ பாரதி நடுவண் பல்கலைக்கழகம்
சாந்தி நிகேதன் – 731235
மேற்குவங்கம்

மகிழ்வுரை

இலக்கியங்கள் மனிதனின் வாழ்வோடு இரண்டறக் கலந்தன. வாழ்வாங்கு வாழ வழி சொல்வன. மானுடம் உயிர்ப்புடன் வாழ உறுதுணையாக உதவி செய்வன. உள்ளம் தளரும் போதெல்லாம் ஊன்றுகோலாய் நின்று உதவுவன. பீடும் வாழ்வும் தரும் தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் புதுமையை ஏற்று மிளிர்வன. சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு என அழைக்கப்பெறும் சங்கம் மருவிய கால இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், புதுக்கவிதை இலக்கியம், சிறுகதை இலக்கியம், புதின இலக்கியம், நாடக இலக்கியம் எனத் தமிழ் இலக்கியங்கள் மிக நீண்ட வரிசையில் எண்ணிக்கைக்கு உட்படாத வகையில் அமைந்து சிறப்பது தமிழின் தனிச் சிறப்பாகும்.

शांतिनिकेतन, पश्चिम बंगाल, भारत–731235
SANTINIKETAN, WEST BENGAL, INDIA-731235
Website: www.visva-bharati.ac.in

தற்கால நவீன மற்றும் இயந்திர உலகில் செம்மாந்து நடைபோடும் நவீனத் தமிழ் இலக்கியங்களான கவிதை, சிறுகதை, புதினம், நாடகம் ஆகியனவற்றைப் பொருண்மையாகக் கொண்டு பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு எனும் மிகச்சிறந்த பெரிய மாநாட்டைத் தமிழ்நாடு, சென்னை, அரும்பாக்கம், துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரித் தமிழ்த்துறையும் தமிழ் இலக்கியத்துறையும் நடத்துவதை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரித் தமிழ்த்துறையானது ஆண்டுதோறும் கருத்தரங்குகளைத் தொடர்ச்சியாக நடத்தி வருகிறது. மேற்சொன்ன தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் வரிசையாக நடத்திவருவதைக் காணும்போது உள்ளம் பேருவகை அடைகிறது. நான் அறிந்த வரையில் பன்முக நோக்கில் செவ்வியல் இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், சித்தர் இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், சைவ சித்தாந்தம், சிற்றிலக்கியங்கள் எனப் பன்னாட்டு அளவில் கருத்தரங்குகளை நடத்தியவர்கள் இவர்களாகத்தான் இருப்பார்கள் என நம்புகிறேன். தற்போது இலக்கிய வரிசையில் நவீனத் தமிழ் இலக்கியத்தைக் கையில் எடுத்துள்ளனர்.

இத்தகைய தொடர்ச்சியான பெரு உழைப்பை நல்கித் தமிழிற்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்துவருபவரும் என்மீது அளவுகடந்த பேரன்பு உடையவருமான தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர் ப.முருகன்** அவர்களையும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களையும் மனதாரப் பாராட்டி மகிழ்கிறேன். குறிப்பாகத் தமிழ்த்துறைத் தலைவர் மாநாடு குறித்து என்னிடம் பேசும் போதெல்லாம் இரவு பகல் பாராது தன்னலம் பாராது தன்னுடன் அயராது பணியாற்றிவரும் தொழில்நுட்பத்திலும் மிகச்சீரிய உதவி புரிந்து வரும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களான **முனைவர் சி.சதானந்தன்** மற்றும் **முனைவர் க.கிரிவாசன்** ஆகியோரைப் பெருமிதத்தோடு குறிப்பிட்டுப் பேசுவார். அவ்விருவரையும் மனதாரப் பாராட்டுகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ்த்துறை தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கருத்தரங்கம் நடத்துவதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து நிதியும் கொடுத்து உதவிபுரிகின்ற கல்லூரிச் செயலர் **திருவாளர் அசோக்குமார் முந்த்ரா** அவர்களையும் கல்லூரி முதல்வர் **முனைவர் சேது. சந்தோஷ்பாபு** அவர்களையும் வணங்கி மகிழ்கிறேன்.

மாநாடு சிறப்பாக நடைபெற இதயங்கனிந்த வாழ்த்துகூறி அமைகிறேன்.

நன்றி.

செந்தில் பிரகாஷ்

மு. முருகேஷ்

சாகித்திய அகாதெமி – பாலபுரஸ்கார் விருதாளர்

முதுநிலை உதவி ஆசிரியர்,

'இந்து தமிழ் திசை' நாளிதழ்,

வந்தவாசி 604 408.

செல் : 94443 60421

நவீன இலக்கியத்தின் வளர்ச்சிக்கான முன்னெடுப்பு

தலைநகரான சென்னையில் கல்விப்பணியில் சிறந்து விளங்கும் துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி), 2024–இல் வைரவிழா காணவிருக்கிறது. டி.ஜி.வைணவக் கல்லூரி என்றாலே கல்வியில் சிறப்பிடமும், நல்லொழுக்கத்தில் முதன்மை இடமும் என்று சொல்லத்தக்க சிறப்பினையுடைய இக்கல்லூரி, இலக்கிய வளர்ச்சிக்கான பங்களிப்பை ஆற்றுவதிலும், சமுதாயப் பணிகளைச் செய்வதிலும் தன்னை ஆர்வத்தோடு இணைத்துக் கொண்டு திறம்பட செயலாற்றி வருகிறது.

கல்விபெற வருகிற மாணவர்களிடத்தில் மறைந்து கிடக்கும் பன்முகத்திறமைகளான கவிதை புனைதல், கட்டுரை எழுதுதல், பேச்சுத்திறன், ஓவியம் வரைதல் உள்ளிட்ட திறன்களை வெளிக்கொண்டுவர, பல்வேறு முன்னெடுப்புகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. மேலும், தமிழ்த்துறையின் சார்பில் மாதந்தோறும் நிகழ்வுகளை நடத்தி, மாணவர்களின் இலக்கிய ஆர்வத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது.

கல்லூரின் சார்பில் பல சர்வதேச கருத்தரங்குகளை நடத்துவதிலும் முன்னோடியான கல்லூரியாக டி.ஜி.வைணவக் கல்லூரி திகழ்கிறது. கருத்தரங்கில் வாசிக்கப்படும் பொருள் வாய்ந்த கட்டுரைகளை நூலாக்கம் செய்வதிலும் கல்லூரி ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

12–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பவணந்தி முனிவர் எழுதிய நன்னூலின் சூத்திரமானது, 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே' என்று சொல்கிறது. காலமாற்றத்தோடு சேர்ந்தே இலக்கிய வடிவங்களும் மாறி வருகின்றன. காலத்தைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களும், காலத்தை உள்ளுணர்ந்து எழுதப்படும் இலக்கியங்களுமே காலங்கடந்தும் பேசப்படும். இதனை மிகச்சரியாய் அறிந்திருக்கும் துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரியின் தமிழ்த்துறை மற்றும் தமிழிலக்கியத்துறை நடத்தும் 'பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு' பாராட்டுக்குரிய செயலாகும்.

கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய வடிவங்களில் இருபத்தியோராம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கவனத்தில் கொண்டே இத்தலைப்பிலான மாநாடு திட்டமிடப்பட்டுள்ளது. இன்றைய சூழலில் நவீன வாழ்க்கை முறை, தகவல் தொழில் நுட்பத்தின் அசூர வளர்ச்சி, உணவு, உடைமாற்றங்கள், கூட்டுக் குடும்பங்கள் குறைந்து வருதல் ஆகியவற்றை நவீன இலக்கியங்கள் எவ்விதம் பதிவு செய்கின்றன என்பது பற்றிய அவதானிப்பும் அக்கறையும் இன்றைய காலத்தின் அவசியத் தேவையாகும். இதனை ஆவணப்படுத்தும் நோக்கில் 92 கட்டுரைகளைத் தமிழகம் முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் ஆகியோரிடத்தில் பெற்றிருப்பதோடு, கர்நாடக மாநிலத்திலிருந்தும், மலேசியாவிலிருந்தும் கூட கட்டுரைகளைப் பெற்றிருப்பது கூடுதல் சிறப்பு.

இக்கட்டுரைகள் நூலாக்கம் பெறும் போது, அவற்றின் வழியாக இன்னும் பல நவீன இலக்கிய ஆய்வுகள் தொடர வழிவகுக்கும். 2022 ஏப்ரல் 21அன்று இக்கல்லூரியில் நடைபெறவுள்ள 'பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு' வெற்றி பெறவும், மாநாட்டுக் கட்டுரைகள் நூலாக்கம் பெற்று, இன்னும் பல புதிய ஆய்வு முயற்சிகளுக்கு வழிகாட்டியாக அமையவும் என் அன்பின் கனிந்த வாழ்த்துகளைப் பகிர்ந்து மகிழ்கிறேன்.

வைரவிழா காணவிருக்கும் கல்வியில் பெருமைமிகு துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)யின் தமிழ்ப்பணிகளும், இலக்கியச் செயல்பாடுகளும் தமிழ்மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் செறிவும் அர்த்தத்தையும் அளிக்குமென உறுதியாய் நம்புகின்றேன். இப்பணியில் ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் பங்களித்து வரும் அனைத்துப் பேராசிரிய பெருமக்களுக்கும் என் தோழமை மிகு வாழ்த்துகள்.

17.04.2022

வந்தவாசி

அன்புடன்

மு.முருகேஷ்

ஞான ராஜசேகரன் இ.ஆ.ப.

திரைப்பட இயக்குநர்

பெருமிதமாகச் சில வார்த்தைகள் . . .

தமிழகத்தினுடைய தலைநகரத்தில் உள்ள துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரியின் தமிழ்த்துறை மற்றும் தமிழிலக்கியத்துறை நடத்தும் பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாட்டில் கலந்து கொள்வதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். படிப்பாளிகளைப் படைப்பாளர்களாக மாற்றுவது எளிது. படிப்பாளிகளை ஆராய்ச்சியாளர்களாக மாற்றுவதற்கு இது போன்ற பன்னாட்டு மாநாடுகள் பெரிதும் உதவும். நவீன இலக்கியத்தில் திரைத்துறை சார்ந்த கட்டுரைகள் வந்திருப்பதைத் திரைப்பட இயக்குநராக இருந்து வரவேற்கிறேன். வாசகர்களை அடுத்த தளத்திற்குக் கொண்டு செல்ல பெரு முயற்சி எடுத்து வரும் வைணவக் கல்லூரி நிர்வகத்தாருக்கு என் மனமார்ந்த பாராட்டுகள். ஒரு நிறுவனம் மாநாடு நடத்துவதில் இருக்கும் அலுவலகச் சிக்கல்களை நானும் அறிவேன். அதைக்கடந்து பெரும் முயற்சி எடுத்து மாநாட்டை வெற்றி நடை போட வைத்த வைணவக் கல்லூரிச்செயலர் **அசோக்குமார் முந்த்ரா**, கல்லூரி முதல்வர் **முனைவர் சேது.சந்தோஷ் பாபு,** தமிழ்த்துறைத்தலைவர் **முனைவர் ப.முருகன்** மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும் என் பாராட்டுகளைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாநாடு மிகச்சிறப்பாக நடைபெறத் தன்னை முன்னிறுத்தாமல் தன் செயலை முன்னிறுத்தும் நல்லுள்ளங்களுக்கு இதயங்கனிந்த வாழ்த்துகள்.

அன்புடன்

17.04.2022

ஞான ராஜசேகரன்

முனைவர் சீதாலட்சுமி சுப்பிரமணியன்
நிறுவனர்
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

பாராட்டுரை

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்"

அமிழ்தனைய தமிழ் கூறும் நல்லுலகிற்கு முதற்கண் எங்கள் பணிவான வணக்கம்!!

நிகழும் சுபக்ருது ஆண்டு சித்திரைத் திங்கள் 8ம் நாள் துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி) தமிழ்த்துறை, தமிழ் இலக்கியத்துறை நடத்தும் பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு மிகச்சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது மிகக்குறுகிய காலத்தில் கலந்து ஆலோசிக்கப்பட்டுத் துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி முதல்வர் **பேராசிரியர் முனைவர் சே.து. சந்தோஷ்பாபு** மற்றும் கல்லூரிச் செயலர் கல்விச்செம்மல் **திருவாளர்**

#269,Lingi Chetty Street, Mannady Chennai-600001
Mob:9840502223,8248921346
www.pranavjournals.com
Mail:publisher@pranavjournals.com

அசோக்குமார் முந்த்ரா, இருவரின் ஒப்புதலோடும் மாநாட்டுச் செயலர் தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர் திரு. ப. முருகன்** அவர்களின் சீறிய முயற்சியாலும் தன் துறைசார்ந்த வல்லுனர் குழுவினரின் அயராத உழைப்பினாலும் மிகச்சிறந்த, 92 கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப் பெற்று, பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாட்டில் ஆய்வுத்தொகுப்பாக வெளிவந்துள்ளது.

ஊக்குவித்தலே ஒரு மனிதனை முன்னேற்றத்தை நோக்கி இட்டுச் செல்லும் என்பதற்கேற்பத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் திரு. ப. முருகன் அவர்களின் அன்பான ஊக்குவிக்கும் குணநலனே பல்வேறு வேலைப் பளுவினுக்கிடையேயும் சக பேராசிரியர் பெருமக்களை உற்சாகத்தோடு பணி செய்யத் தூண்டியது என்றால் மிகையாகாது. தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் பிரணவ் மின்னியல் ஆய்விதழில் பிரசுரிக்க மிகப்பெரிய ஆதரவினைத் தந்தமைக்கு மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறோம். இதுபோல இன்னும் பல மாநாடுகளை இந்த நிர்வாகம் நிகழ்த்தி அதன்மூலம் உலகம் முழுவதும் உள்ள தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், ஆய்வு மாணவர்கள் பயன்பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம். தங்களின் அளப்பரிய பணியில், பாராட்டு உரை வழங்க எங்களுக்கு ஒரு வாய்ப்பு நல்கிய நல்லுள்ளத்தை வாழ்த்தி வணங்கி அமைகிறோம்.

வளர்க தமிழ்!! வாழ்க வையகம்!!

இவண்

17.04.2022

பிரணவ் தமிழியல் ஆய்விதழ் குழு

Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College
(Autonomous-Affiliated to the University of Madras)
Gokul Bagh, 833 Periyar E.V.R. High Road, Arumbakkam, Chennai-600 106
Phone: 044-23635101, 23635102 Fax: 044-23635103
E-mail: dgvoffice@gmail.com website: www.dgvaishnavcollege.edu.in

முனைவர் ப.முருகன்
தமிழ்த்துறைத் தலைவர்
மாநாட்டுச் செயலர்

நன்றியுரை

தருமமிகு சென்னையின்கண் எங்கள் கல்லூரி பொன்விழா கண்டு சிறந்து விளங்கி வருகிறது. 1964 ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற இக்கல்லூரி கடந்த ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கும் மேலாகக் கல்விப் பணியின் மூலம் சமுதாயத் தொண்டாற்றி, கல்வியிலும் ஒழுக்கத்திலும் தலைசிறந்து விளங்கி வருவதோடு ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்றும் திகழ்கிறது. மாணவர்களிடையே இலக்கிய ஆர்வத்தை ஊட்டுவதற்காகவும் அவர்தம் பேச்சாற்றலை வளம்பெறச் செய்வதற்காகவும் ஒவ்வொரு கல்வியாண்டும் மாதந்தோறும் தமிழ்த்துறை சார்பில் இலக்கிய இன்பம் என்னும் இலக்கிய நிகழ்ச்சியும் தமிழ் இலக்கியத்துறை சார்பில் செந்தமிழ்க்கூடல், தமிழ்த்தேன் ஆகிய இலக்கிய நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. மேலும் தமிழ் இலக்கியத்துறை சார்பில் 2018 ஆம் ஆண்டு செம்மொழிப் பயிற்சிப் பயிலரங்கமும் 2019 ஆம் ஆண்டு சங்க இலக்கியப் பயிலரங்கமும் 2020 ஆம் ஆண்டு நாட்டுப்புறவியல் புதிய போக்குகள் பயிலரங்கமும் நடத்தப் பெற்றன. தமிழ்த்துறையில் கடந்த 2012 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ''இந்திய இலக்கியங்களில் கண்ணன்'' என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கமும், கவிராசன் தமிழ் மன்றத்துடன் இணைந்து ''தமிழ் இலக்கியங்கள்'' என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கமும், 2014 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் ''பக்தி இலக்கியங்கள் – பன்முகப் பார்வை'' என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கமும், 30.12.2016 ஆம் நாளன்று சென்னை, கோடம்பாக்கம், சித்தர் இலக்கிய மையத்துடன் இணைந்து ''சித்தர் இலக்கியங்கள்

பன்முகப் பார்வை'' என்ற பொருண்மையில் தேசியக் கருத்தரங்கமும், 01.03.2017 ஆம் நாளன்று ''செவ்வியல் இலக்கியங்கள் பன்முகப் பார்வை'' என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கமும், 31.01.2018 ஆம் நாளன்று ''பன்முக நோக்கில் இராமானுசர்'' என்ற பொருண்மையில் தேசியக் கருத்தரங்கமும், 2018 மார்ச்சுத் திங்கள் 08, 09, 10, 11 ஆகிய நான்கு நாட்கள் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதினம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத்துறையுடன் இணைந்து உலகமே வியக்கும் வண்ணம் ''ஐந்தாவது அனைத்துலக சைவ சித்தாந்த மாநாடும்'' 24.01.2019 ஆம் நாளன்று தினமணி நாளிதழுடன் இணைந்து ''தமிழ்க் காப்பியங்களில் வாழ்வியல் நோக்கு'' என்ற கருத்தரங்கமும் நடத்தியது. மேலும் பெரியபுராணத்தைச் சிறப்பிக்கும் வகையில் 03.08.2021 முதல் 09.08.2021 வரை ஏழு நாட்கள் சேக்கிழார் மாநாடு நடத்தப்பட்டது. எங்கள் கல்லூரித் தமிழ்த்துறை மற்றும் தமிழ் இலக்கியத்துறையால் ''பன்னாட்டு நவீனத் தமிழிலக்கிய மாநாடு'' என்ற பொருண்மையில் நிகழும் திருவள்ளுவராண்டு 2053 **சித்திரைத் திங்கள் 08** ஆம் நாள் வியாழக்கிழமை **(21.04.2022)** மாநாடு நடத்துகின்றோம்.

கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஆண்டுதோறும் தொடர்ச்சியாக நடத்துவதற்கு அனுமதி அளித்தும் ஆதரவு கொடுத்தும் வாழ்த்துரை வழங்கியும் எங்களை ஊக்கப்படுத்தி வருகின்ற கல்லூரிச் செயலர் **கல்விச்செம்மல் திருவாளர் அசோக்குமார் முந்த்ரா** அவர்களுக்கும், பாராட்டுரை வழங்கிய கல்லூரி முதல்வர் **முனைவர் சேது.சந்தோஷ்பாபு** அவர்களுக்கும் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நவீனத் தமிழிலக்கியங்களில் ஆழங்கால்பட்ட அயல்நாட்டு அறிஞர் சிங்கப்பூர், தேசியக் கல்விக்கழகம், நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் **முனைவர் சீதாலட்சுமி** அவர்கள் எப்போது அழைத்தாலும் உடனே தொடர்பு கொள்ளும் பண்பாளர். அம்மையாரைப் பொறுத்தவரை வைணவக் கல்லூரியின் எந்த மாநாடு, கருத்தரங்கங்கள் நடத்தினாலும் விழாவிற்கு வந்து வாழ்த்துரை வழங்கி எங்கள் விழாவைத் தன் விழாவாகக் கருதிச் செயல்படும் செயல் வீரங்கனை அவர்களுக்கும் நன்றி. மேலும் மேற்குவங்கம் சாந்திநிகேதன் விஸ்வபாரதி நடுவண் பல்கலைக்கழகத்தின் இலக்கியம் மற்றும் பண்பாட்டுப் பள்ளியின் மொழிகள் துறை தமிழ்ப் பேராசிரியர் **முனைவர் செ.செந்தில் பிரகாஷ்** அவர்கள் சிறந்ததொரு வாழ்த்துரையை வழங்கிய அண்ணாருக்கும் நன்றி. மாநாட்டிற்கு நல்லதொரு ஆலோசனை வழங்கிய அனைவருக்கும் நன்றி. மாநாட்டிற்கு மலேசிய சுல்தான் பல்கலைக்கழகத்தில் இருந்து தானும் கட்டுரை எழுதி தன் ஆய்வு மாணவர்களையும் கட்டுரை எழுத வைத்த பேராசிரியர்

முனைவர் மனோன்மணி தேவி அவர்களுக்கும் நன்றி. தெரிவு செய்யப்பெற்ற கட்டுரைகளைப் பிரணவ் ஆய்விதழில் வெளியிட்டு மகிழும் **பிரணவ் குழுமத்திற்கும்** நன்றி. நல்லதோர் கருத்துகளை மக்கள் மனத்தில் திரை மூலம் எடுத்து இயம்பி வரும் இந்திய ஆட்சிப் பணியாளரும் திரைப்பட இயக்குநருமான **திருமிகு ஞானராஜசேகரன்** அவர்கள் மாநாட்டிற்கு சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்தார் அவர்களுக்கும் நன்றி. மேலும் என் நீண்ட கால நண்பரும் பால சாகித்திய புரஸ்கார் விருதாளரும் கவிஞருமான **மு.முருகேஷ்** இந்து தமிழ் திசை நாளிதழில் முதுநிலை உதவி ஆசிரியராகப் பணியாற்றும் நண்பருக்கும் நன்றிகள் எந்நாளும் உண்டு. சாகித்திய அகாதெமி யுவபுரஸ்கார் விருதாளரும் வளர்ந்து வரும் இளம் எழுத்தாளருமான **வீரபாண்டியன்** மாநாட்டிற்கு அமர்வுத் தலைவராக இசைவு தந்து சிறப்பித்தவருக்கும் நன்றி.

கல்லூரிப்பணியோ தமிழ்த்துறைப்பணியோ எப்பணியாயினும் அப்பணியை மிகச் சிறப்பாகச் செம்மையாகச் செய்து முடிக்கும் எம்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் இதயங்கனிந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அலுவலகப் பணிகளுக்கு மிகப்பெரிய ஒத்துழைப்பு நல்கிய அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

மேலும் மாநாடு வெற்றி பெற ஆய்வு நெறி முறைகளைப் பின்பற்றிக் கட்டுரை எழுதிய அனைத்துப் பேராசியர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் தமிழார்வலர்களுக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!

19.04.2022 இங்ஙனம்

சென்னை **ப.முருகன்**

பொருளடக்கம்

1. இளம்பிறை கவிதைகளில் சமூக நிலை 25
தி. அணுராதா

2. ஈரோடு தமிழன்பனின் திசை கடக்கும் சிறகுகள் கவிதைகளில் தமிழ்மொழி சூழல் 30
முனைவர் து. அருண்பாண்டியன்

3. நேயர் விருப்பம் என்ற கவிதையில் அமைந்துள்ள மண் என்ற இயற்கைச் சிந்தனைகள் 35
முனைவர் மு. அலிபிநிஷா

4. மலேசியத் தமிழ் சிறுகதைத் துறையில் பெண் படைப்பாளிகள் 41
முனைவர் அழகேசன் அம்பிகாபதி

5. அருமை மகளே கவிதைத் தொகுப்பில் விழுமியங்கள் 49
சி. சு. அன்புக்கொடி பகவதி

6. காடு நாவலில் குறிஞ்சித் திணை 54
முனைவர் யோ. நே. ஆட்லின் பியூலா

7. தமிழாற்றுப்படையில் தொல்காப்பியர் 61
முனைவர் ஆ. இரமேஷ்

8. அலைவாய்க் கரையில் நாவலில் பெண்ணியக் கோட்பாடுகள் 68
க. இராமசுதா

9. மகாகவி பாரதியாரும் சமயமும் 72
முனைவர் வெ. இராம்ராஜ்

10. திரையிசைப் பாடல்களில் வேத புராணக் கருத்துகள் 83
திரு. இராஜகோபாலன் கிருஷ்ணன் சீனிவாசன்

11. திருவரங்கன் உலா நாவலில் அரங்கனும் அஷ்டப்பிரபந்த அரங்கனும் 90
திரு. இராஜ சீனிவாசன்

12. பாண்டியன் பரிசு பறைசாற்றும் பகுத்தறிவும் சமூக விடுதலையும் 94
வி. இலட்சுமி

13. கிடை குறுநாவல் : மேய்ச்சல் தொழில்சார் பண்பாட்டு அடைவு 99
முனைவர் மு. ஏழுமலை

14. கவிஞர் மு.மேத்தா கவிதைகளில் அரசியல் 106
முனைவர் சி.கங்காதரன்

15. கவிஞர் மீராவின் ஊசிகள் தொகுப்பில் காணலாகும் சமுதாயச் சிக்கல்கள் 113
முனைவர் வ. கணபதிராமன்

16. கவிஞர் மு.மேத்தா கவிதைகளில் சமுதாயம் 118
முனைவர் ப. கல்விராயன்

17. கவிக்கோ அப்துல்ரகுமான் உணர்த்தும் 'பித்தன்' 123
முனைவர் மு. கலைமாமணி

18. சமகாலப் புதினங்களில் இளைஞர்களின் வாழ்வியல் 128
த. கவிதா

19. 'காக்கைச் சிறகினிலே' இதழ் கூறும் தலையங்கச் செய்திகள் 134
ப. கார்த்திக்

20. விதைத்தவனும் விதைகளும் புதினத்தில் பெயர்ச் சூட்டுதல் 142
முனைவர் க. கிரிவாசன்

21. வண்ணநிலவனின் கடல்புரத்தில் மீனவ மக்களின் பொருளாதாரப் போராட்டங்கள் 152
முனைவர் உ. கிருஷ்ணன்

22. சோலை சுந்தர பொருமாளின் செந்நெல் புதினத்தில் சாதிய ஒடுக்குமுறை 157
முனைவர் ப. கீதா

23. முற்போக்குச் சிந்தனை மரபும் பாரதியாரும் 163
முனைவர் த. குணாநிதி

24. சிற்றிதழ்கள் வழி அறியலாகும் சீரிய இலக்கியம் : கி.ரா.வின்
'கதவு' சிறுகதை 171
இரா. குமரகுருபரன்

25. தாராபாரதி கவிதைகளில் பெண் சிந்தனை 178
முனைவர் த. கெஜலட்சுமி

26. தனிமனிதன் சிறுகதையின் மூலம் அறியலாகும் மொழி,
போர், காதல் தோற்றுவாய்கள் 186
மா. கோமதி

27. 'வீடும் விழுதுகளும்' சிறுகதைத் தொகுப்பில் சமூகவியல் பார்வை . .190
கௌசல்யா லட்சுமி ஜெய்சங்கர்

28. வாலியின் திரையிசைப் பாடல்களில் அணிநலன் 198
முனைவர் க. சங்கர்

29. கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதமும் இன்ப வாழ்வும் 203
டீ. சங்கீதா

30. விதைத்தவனும் விதைகளும் புதினத்தில் அறக்கருத்துக்கள் 213
அ. சதாசிவம்

31. சஞ்சாரம் நாவலில் கரிசல்நிலப் பண்பாட்டுச் சூழல் 219
முனைவர் சி. சதானந்தன்

32. நவீன இலக்கியத்தில் நாகஸ்வர கலைஞர்களின் நிலை 226
பொ. சம்பூர்ணம்

33. 'கவித்தூறல்' மலேசியத் தமிழ்க்கவிதைத் தொகுப்பில்
இயற்கைக் காதல் 229
சரண் சுக்லாம் ஆத்மலிங்கம்

34. அம்பையின் காட்டில் ஒரு மான் கதையில் பெண் 235
தே. சாமுவேல்

35. நறுமுகையின் 'நந்தவனம்' நாவல் : பெண் மைய நோக்குநிலை . . .245
ரா. சிலம்பரசன்

36. இந்திராவின் 'ஒற்றை வாசனை' சிறுகதைத் தொகுப்பில்
சமூகப்பிரச்சனைகள் 250
முனைவர் கு. சிவகாமி

37. எரியும் பனிக்காடு 255
முனைவர் ஜ. சிவகுமார்

38. புதுத்தடம் கவிதைத் தொகுப்பில் உழைக்கும் மக்கள் 266
முனைவர் த. சிவலிங்கம்

39. அம்பையின் 'மல்லுக்கட்டு' கதை – பெண்ணியப் பார்வை 271
முனைவர் இரா. சீதா

40. சிறிய கதையாம் சிறுகதையில் பல செய்திகள் 279
முனைவர் சீதாலட்சுமி

41. புதுக்கவிதை மரபில் புதுமைபித்தன் கவிதைகளும் விவாதங்களும் 284
முனைவர் கு. சுதாகர்

42. சோகவனம் சிறுகதை முன்னிறுத்தும் சூழல் மாற்றமும்
உயிர்களின் வாழ்வியல் மாற்றமும் 299
சு. கா. சுந்தரவதனி

43 இன்னொரு தேசிய கீதம் கவிதை நூல் முன்னிறுத்தும்
பன்முக அடையாளங்கள் 304
ம. செந்தில்குமார்

44. கவிஞர் வைரமுத்துவின் தமிழுக்கு நிறமுண்டு உணர்த்தும்
சமுதாய நிலை 311
முனைவர் செ. செல்லப்பிள்ளை

45. சூல் நாவல் காட்டும் வேளாண்மை 317
முனைவர் வெ. டில்லிபாபு

இளம்பிறை கவிதைகளில் சமூக நிலை

தி. அனுராதா

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
அக்சீலியம் கல்லூரி, காட்பாடி.

ஆய்வுச் சுருக்கம்

தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துவன இலக்கியங்கள். தனி மனிதனின் வாழ்க்கையைச் சமூக நிகழ்வுகளைப் பதிவு செய்வனவாகவே நமது முதன்மை வரலாற்று நூலான சங்க இலக்கியம் கவிதைப் படைப்பாகவே நமக்குக் கிடைத்திருக்கின்றது. இசையோடு இயைந்த ஒலிநயக் கவிதையின் ஈர்ப்பு சங்க காலப் புலவனை மட்டுமல்ல இன்றைய காலப் படைப்பாளர்களையும் ஈர்க்கப்பட்டு வருவதை அறிவோம். அந்த வகையில் வரலாற்றுத் தொடர்ச்சியாக உள்ள இலக்கிய வகைகளில் மரபுக் கவிதை எனும் வடிவத்தைப் புதுக்கவி மரபின் வழி சமூகத்தைப் பதிவு செய்யும் நோக்கை மையமிட்டதாக இளம்பிறையின் கவிதைகள் அமைகின்றன.

திறவுச் சொற்கள்

இளம்பிறை, அரக்காப்படி, தீண்டாமை, வெள்ளைக்காரன், நாடோடிகள், முதல் மனுசி, மௌனக்கூடு, நிசப்தம்

முன்னுரை

மக்கள் பலர் கூடி வாழும் இனக் குழுவே சமுதாயத்தின் முதல்நிலை என்று குறிப்பிடப்படுகிறது. சமுதாயம் என்ற சொல்லிலுள்ள தாயம் என்ற சொல்லுக்கு உரிமை என்று பொருள் கூறும் தமிழ் அகராதி.

கவிஞனும் சமுதாயமும்

ஒருவன் தான் பெற்ற அனுபவத்தை உலகிற்கு உணர்த்தி வாழ்வின் இன்றி யமையா நெறியினை விளக்கி மக்கட் சமுதாயத்திற்கு வழிகாட்டுவதற்கான வடிகாலாக கவிதை அமைகிறது. இத்தகைய கவிதைகளைப் படைக்கும் கவிஞர்கள் கற்பனையில், கனவுகளில் மிதக்கும் போது குறைகளே இல்லாத சமுதாயம் அவர்கள் கண்முன் நிழலாடு கிறது என்பதைப் பல்வேறு கவிஞர்களின் ஆய்வில் காணப்படுகிறது. உலகமே போற்றக்கூடிய குறையற்ற சமுதாயத்தைப் படைப்பது தான் கவிஞர்களின் முழு நோக்கமாக இருந்து வருகிறது. இப்பொது நோக்கில் பல கவிஞர்களைக் கூற முடியும்.

இளம்பிறை கவிதைகளில் சமூகநிலை

இளம்பிறை அவர்கள் சமூகத்தின் ஓர் அங்கமாக இருந்தே படைப்புகளை முன் வைக்கிறார். சமூகத்தைத் தொடர்ந்து அவரது சிந்தனை குவிகிறது. குறிப்பாகக் கிராமத்துச் சூழலோடு இருந்து பேசுகிறார்.

"ஐ பை அரக்காப்படி நெய்
வெள்ளைக்காரன் கப்பலிலே
தீயைக் கொளுத்தி வை"[1]

வெள்ளையனிடம் அடிமைப்பட்டு வாழ்ந்த மக்கள் அவனை எதிர்ப்பது போல சமூகத்தில் நிலவி வரும் கொடுமைகளை எதிர்க்கின்ற ஒரு எதிர்வுக் குரலாகக் காண முடியும். சமுதாயத்தில் மக்கள் அனுபவிக்கக் கூடிய சமூக அவலங்களைத் தம் கவிதைகளில் பரந்து பட அமைத்துள்ளார். அவர் படைப்புகளில் காணப்படும் சமூக அவலங்களை, 1. சாதி, 2. வறுமை நிலை, 3. தகுதிப் போட்டி, 4. நாடோடிகளின் அவல நிலை, 5. குழந்தைத் தொழிலாளர் நிலை எனப் பாகுபடுத்திக் காணலாம்.

சாதி

சாதிக்கப் பிறந்தவர்கள் நாம் என்பதையே மறந்து மனிதன் அனைவரும் சாதி, மதம் கொண்டு அலைகின்றனர் என்றும், சாதிப்பேய் தலைவிரித்தாடாத இடமேயில்லை என்றும் எங்கும் சாதி எதிலும் சாதி என்ற நிலை நீக்கமற நிலைத்திருக்கிறது என்றும் கூறும் இவர் சாதிய அழுத்தத்தைப் பதிவு செய்யும் போது சாதிய இறுக்கத்தால் அமைதியோ பயனோ இல்லை என்ற முடிவையும் கூறுகிறார்.

"தொடக்கத்தில் சாதி தொழிலையொட்டிக் கொள்ளப்பட்டது.

பின்னே பிறப்பையொட்டிக் கொள்ளப் பட்டது.

நாளடைவில் பிறப்பின் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டன."[2]

என்பார் திரு.வி.க. பாகுபாடின்றி ஓரினமாகத் திகழ்ந்த தமிழகத்தில் ஆரியர்களின் வருகைக்குப் பின்னால் சாதி தோற்றம் கொண்டது.

"வேல கெடச்சாலும் வித்த
பல கத்தாலும்
வாடகக்கி வீடு கேட்டா
சாதி கேட்டு இல்லேங்கிறான்"[3]

எனும் கவிதை விளக்கிச் சொல்வதைக் காணலாம். தாழ்ந்த சாதி என்ற காரணத்தினால் வாடகைக்கு வீடு தராத அவல நிலையை விளக்கியுள்ளார்.தாழ்ந்த சாதியினர் என்ற காரணத்தினால் அவர்களின் உழைப்பைச் சுரண்டுவதும் தீண்டாமை காரணம் காட்டி ஒதுக்கி வைப்பதுமான நிலையை,

"கோயிலோட வேலயின்னா
குடும்பத்தோட போயி செய்வோம்
களத்த செதுக்குவோம்
காவடிய தூக்குவோம்
அம்மன் குளியாட்ட
ஆழ்கெணறும் வெட்டுறோம்
அபிசேவம் பண்ணயில
வெளியில் தான் நிக்கிறோம்

ஆண்ட நொழஞ்சாதான்
கற்பூரம் காட்டுறாங்க
அவருக்கு மட்டுந்தான்
பிரசாதம் நீட்டுறாங்க”[4]

கோயிலின் உள்ளே அனுமதிக்காமல் வெளியில் இருந்தே இறைவனை வழிபடும் நிலையினை வெளி உலகுக்குக் காட்டிச் சொல்கிறார். தொட்டால் தீட்டு எனக் கருதி ஒதுக்கி வைக்கும் சாதியக் கொடுமையை விவரிக்கும் போது,

“விபூதிய அள்ளிப் போட்டு
வெலகு வெலகுங்கிறார்
கேவலத்த தாங்கிக்கிட்டு
கோயிலுக்குப் போயி வாரோம்
கல்லு செலய வச்சி
காசு போட உண்டி வச்சி
எல்லாமே சாமிக்கென
சொல்லிப் பொழச்சிக்கிட்டு
அநியாயந்தான் பண்ணுறாங்க”[5]

கோயிலின் உள்ளே அனுமதிப்பது தீட்டு எனக் கருதும் ஆதிக்கச் சாதியினரின் அடிமையினையும், தாழ்ந்த சாதியினர் கடவுளுக்காக அளிக்கும் பணத்தைக் கடவுள் பெயரைச் சொல்லி அனுபவிக்கும் சுரண்டலையும் எண்ணிச் சுவைபட விளக்குகிறார்.

“கோயிலுக்குப் போனாலும்
கூடுதில்ல நிம்மதிங்க
எழவெடுத்த ஊருக்குள்ளே
யாருகிட்டச் சொல்லி யழ”[6]

சாதி தீண்டாமையில் தாழ்த்தப் பட்டவர் களை ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கும் துயரத்தை அவலத்தோடு வெளிப்படுத்து கிறார் கவிஞர்,

“காணும் பொங்கலில்
குடியானப் பெண்களும்
சேரிப் பெண்களும்
அவரவர் தெருக்களில்”[7]

சாதியின் பெயரால் அன்பு அழிக்கப்படு வதையும், சாதி வேறுபாட்டில் பெண் களுக்குள்ளும் வேறுபாடு அடிமை முறை இருப்பதைத் தெருக்களிலும், சாதிய முறைப் பகுப்பு என தனது விளியாக எண்ணி கவிதை வடித்துள்ளார். சாதி ஒழிப்பு குறித்துப் பாடும் பாவேந்தர் பாரதிதாசன் சாதி என்ற சொல்லே,

“ஆரியச் சொல், அது புது நஞ்சு
பொய்க்காற்று”[8]

மனிதனின் மன மாற்றத்தால் மட்டும் சாதியை ஒழிக்க முடியும் என்கிறார் கவிஞர்.

வறுமை நிலை

வறுமை ஓர் உலகப் பிரச்சனை. விழுக்காட்டில் வேறுபட்டாலும் உலகின் பல்வேறு நாடுகள் இப்பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றன. நமது நாட்டில் நிகழும் பல போராட்டங்களுக்கும் குழப்பங்களுக்கும் பின்னணியில் பற்றாக்குறை இருப்பதைக் காண முடியும். திருவள்ளுவரும் கொடு மையில் மிகப் பெரிய கொடுமையாக ஏழ்மையையே குறிப்பிட்டுள்ளார்.

“இன்மையின் இன்னாதது யாது
எனின்
இன்மையின் இன்மையே
இன்னாதது”[9]

பசியின் கொடுமையை மணிமேகலை போன்ற தமிழிலக்கியங்கள் பெரிதும் பேசுகின்றன. வறுமையின் கொடுமையை இளம்பிறை மௌனக் கூடு என்ற கவிதை தொகுப்பில் வறுமையின் அவலத்தை,

"அம்மா
அடுப்பைப் பற்ற வை
குளிராவது காயலாம்"[10]

உணவு சமைக்கும் அடுப்பில் குளிர் காய்வது வீட்டில் ஒன்றும் இல்லாத அவல நிலையை உணர்த்துவதாக அமைந்துள்ளது. வறுமையில் வாடும் பல குடும்பங்களின் உண்மை நிலையை,

"மேலும்
வானில் நிலா
நினைவில் தோசை
வயிற்றில் பசி"[11]

பசியிருந்தும் உண்பதற்கு ஒன்றுமில்லாத துயர நிலையை விளக்கியுள்ளார். அவரே உண்பதற்கு உணவின்றி வயிறு சுருங்கி போயிருப்பதை,

"சேறு எரிந்து
சிவந்திருக்கும் கருங்கால்கள்
சோறு பஞ்சத்தால்
சுருங்கி விட்ட வயிறு" 12

என்கிறார். வறுமையால் உடல் கூற்றில் ஏற்படும் மாற்றத்தை ஆசிரியர்,

"இருவிழிகள் சாப்பிடுயென
குழிக்குள் விழுந்திருக்கும்
கன்னக் குழியல்ல
கன்னமே குழியால்
பல்லோடு பதிந்திருக்கும்" 13

இரு விழிகள் சாப்பிடுவதற்கு ஏதாவது கிடைக்குமா என எதிர்பார்த்து உண்பதற்கு ஒன்றும் இல்லாத காரணத்தினால் கண்கள் குழியால் ஒடுங்கி போயிருக்கும் அவல நிலையை விளக்கியுள்ளார். மேலும் அவரே,

"இல்லாத காரணத்தால்
சட்டை கிழ்த்திருக்கும்
இழுத்துப் போர்த்த எண்ணி
சேலையும் தோற்றிருக்கும்"[14]

வறுமையின் காரணமாக மாற்று உடை கூட வாங்க முடியாத வறுமையின் அவல நிலையை உணர்த்துகிறார்.

நாடோடிகளின் அவல நிலை

நாடோடிகள் என்போர் இருக்க இடமின்றி ஊர் ஊராகச் சென்று வயிற்றுப் பிழைப்பிற்காகப் பிழைப்பவர்களையே நாடோடிகள் என்று அழைக்கிறார்கள். இளம்பிறை மர நிழல் மனிதர்கள் என்ற கவிதையில் தெருமுனைகளிலும், பிளாட் பாரங்களிலும், சாக்கடை ஓரங்களிலும், மரத்தடியிலும், அழுக்கடைந்த உடலோடும், வறண்ட தலைமுடியோடும் வாழ வேண்டும் என்பதற்காகவே வாழும் நாடோடிகளின் அவல நிலையை வாழ்வியலாகப் படைத்துக் காட்டியுள்ளார்.

பகலில் எரிவது எங்கள்
வயிறுகளுந்தான்
சந்திரனை விரும்புகிறோம்
வெளிச்சத்திற்கு உதவுவதால்
மழையை வெறுக்கிறோம்
அடுப்புகளை
அணைத்து விடுவதால்"[15]

என்ற கவிதையின் மூலம் நிரந்தரத் தொழிலாளர்கள் என்ற ஊதியம் பெறும் வாய்ப்பு இல்லாதவர்கள். அவர்களின் வாழ்நிலை இன்னல்களைப் பார்வைக்கு வைத்துள்ளார். அவரது இச்சிந்தனையானது பொது நோக்குடைய படைப்பாளி என்பதைப் பறைசாற்றும். பாதுகாப்பின்றி வாழும் நிதர்சன நிலையை விளக்கியுள்ள இவர் புதுக்கவிதை ஆக்கத்தை ஒரு படைக் கருவியாகவே படைத்திருக்கிறார் என்பது புலப்படும்.

முடிவுரை

இவரின் கவிதைகளில் சமூக அக்கறை வெளிப்படுகிறது. சமூகத்திற்குள்ளே நடக்கும் பிரச்சனைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. சமூகத்தை இவர் பார்க்கின்ற பார்வையும், கண்ணோட்டமும் மாறுபட்டுக் காணப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. நிசப்தம் – ப. 7
2. இந்தியாவும் விடுதலையும் – ப. 46
3. முதல் மனுசி – ப. 54
4. முதல் மனுசி – ப. 54
5. முதல் மனுசி – ப. 56
6. முதல் மனுசி – ப.57
7. முதல் மனுசி – ப. 94
8. பாரதிதாசன் கவிதைகள் – ப.57
9. திருக்குறள் – 1041
10. மௌனக் கூடு – ப. 15
11. மௌனக்கூடு – ப.15
12. நிசப்தம் – ப.75
13. நிசப்தம் – ப.75
14. நிசப்தம் – ப. 75
15. நிசப்தம் – ப. 70

துணைநூற் பட்டியல்

1. நிசப்தம், இளம்பிறை, பொன்னி பதிப்பகம், 29, கண்ணகி தெரு, மடிப்பாக்கம், சென்னை.
2. முதல் மனுசி, இளம்பிறை, பொன்னி பதிப்பகம், 29, கண்ணகி தெரு, மடிப்பாக்கம், சென்னை.
3. மௌனக் கூடு, இளம்பிறை, பொன்னி பதிப்பகம், 29, கண்ணகி தெரு, மடிப்பாக்கம், சென்னை
4. பாரதிதாசன் கவிதைகள், செண்பகா வெளியீடு, 7.போயஸ் ரோடு, எம்.எம்.கார்டன், தேனாம்பேட்டை, சென்னை. திசம்பர்–1995
5. திரு.வி.கல்யாண சுந்தரனார், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, பூம்புகார் பதிப்பகம், பிராட்வே, சென்னை–600108.
6. திருக்குறள், மாணிக்கவாசகர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு–1998

ஈரோடு தமிழன்பனின் திசை கடக்கும் சிறகுகள் கவிதைகளில் தமிழ்மொழி சூழல்

முனைவர் து. அருண்பாண்டியன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
காஞ்சி ஸ்ரீமகாலட்சுமி மகளிர் கலை & அறிவியல் கல்லூரி
ஆற்பாக்கம், காஞ்சிபுரம்.

ஆய்வுச் சுருக்கம்

ஈரோடு தமிழன்பன் சமுதாயத்தை நன்கு கவனித்துக்கொண்டு வருகிற ஆளுமைக் கவிஞர்களுள் ஒருவர். இவரது கவிதைத் தொகுதியான 'திசை கடக்கும் சிறகுகள்' வாயிலாகத் தமிழ்ப் புத்தாண்டு, தமிழுக்கு ஒருநாடில்லை, புலம்பெயர் தமிழர்கள், தமிழ் எதிர்ப்பாளர்கள், வாய்ப்பிழந்த தமிழ், மொழியும் அறிவும், தமிழ்ப் பெயர்கள், மொழிப்போர் நினைவு ஆகிய தலைப்புகளில் தமிழ் மொழியின் சூழலை விளக்கிக் கவிஞர் தமிழ் மொழி எழுச்சிக்குப் பங்காற்றியது ஆய்வில் விளக்கப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள்

புலம்பெயர் தமிழர் – தாய்நாடு விட்டு இடம் பெயரும் தமிழர்

புத்தாக்கம் – பழமை புதிதாக்கல்

குடி – குலம்

செம்மொழி – தொன்மை, தனிப் பண்பாடு, இலக்கியவளம் உடைய மொழி (தமிழ்)

தண்டம் – அபராதம்

முன்னுரை

பாண்டிய மன்னர்கள் தொடங்கி சேரர்கள், சோழர்கள் மற்றும் குறுநில மன்னர்கள் ஆகிய மன்னர்களின் உயிர் மூச்சாகவும் தமிழ் மக்களின் சுவாசக் காற்றாயும் இருந்து வந்துள்ளது தமிழ்மொழி. தமிழர்கள் மொழிப்பற்றுக் கொண்டது போல் உலக வரலாற்றில் யாரும் கொண்டதில்லை எனலாம். ஆனால் இன்றைய காலத்தில் பிறமொழி மோகத்தாலும் ஆங்கில மயமாக்கலாலும் தமிழர் மொழிப்பற்றின்றி உள்ளனர். தமிழ்மொழி எல்லா வகையிலும் பயன்பாட்டுக்கு உரியதாக தன்னைப் புத்தாக்கம் செய்யும் போதிலும் தமிழர் தமிழினைப் பயன்படுத்துவதில்லை. தமிழனுக்குள் தமிழ் எவ்வாறு விலகிக் கொண்டு வருகிறது என்பதையும் தமிழின் பெருமை கூறித் தமிழ் உணர்வுக்குள் தமிழன் எவ்வாறு சென்றடைய வேண்டும் என்பதையும் ஈரோடு தமிழன்பன் 'திசை கடக்கும் சிறகுகள்' கவிதைத் தொகுதியில் பதிவு செய்துள்ளார்.

தமிழ்ப்புத்தாண்டு

1970-ஆம் ஆண்டுக்கு முன்னர் சித்திரை முதல் நாளே தமிழ்ப்புத்தாண்டு என்று கொண்டாடி வந்தனர். பின்னர் சித்திரைத் திருநாள் தமிழரின் மரபார்ந்த புத்தாண்டு அல்ல என்ற சர்ச்சை தொடங்கியது. இந்நிலையில் 2008-இல் தமிழக அரசு தைமாத முதல் நாள் தமிழ்ப்புத்தாண்டு என்று அரசாணை வெளியிட்டது. பின் 2011-இல் அன்றைய தமிழக அரசு முந்தைய அரசாணையை விலக்கு அளித்தது. சித்திரைத் திருநாளே தமிழ்ப் புத்தாண்டு என அறிவித்தது. இந்நிலையில் தமிழன்பன் தம் கவிதைகளில் தமிழ் மொழியைத் தாயாக உருவகித்து,

'தமிழ்த்தாயே
நீ பிறந்தது தைத்திங்களிலா?
சித்திரை மாதத்திலா?
என்று 'இப்போது சொல்வாயா?'[1]

எனும் கேள்வியைக் கவிதையாக எழுப்புகிறார். இச்சிந்தனை தமிழ்ப் புத்தாண்டு எப்போது என்னும் ஆய்வு அறிவைத் தூண்டுகிறது.

தமிழ் மொழிக்கொரு நாடில்லை

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, வாளோடு முன் தோன்றிய மூத்த குடி' எனும் ஐயனாரிதனார் கூற்றுப்படி தொன்மைக் குடி; தமிழ்க்குடி. இத்தகைய பழமையான தமிழ் மொழிக்கு ஒரு நாடில்லையே என்று தமிழன்பன்,

'தமிழ்த்தாயே!
இப்போது உனக்கென ஒருநாடு
இல்லை
உனக்குத் தெரியுமா?'[2]

இந்தியாவில் மாநில மொழியாகவும் பிற நாடுகளில் பேசப்படும் மொழியாகவும் சிறுசிறு குழுக்களாயும் தமிழர்கள் இருந்தாலும் தமிழுக்கென்று தனி நாடு இல்லையே என்று ஏங்குகிறார்.

புலம்பெயர் தமிழர்கள்

தங்கச்சங்கிலியில் மங்கிய மணிகள் எனும் கவிதை தலைப்பில் எல்லா மொழிகளுக்கும் வழிகாட்டிய வளம் பெரும் தமிழ்மொழி தம்மவராலேயே மறக்கப்படும் நிலையை,

'வையம் முழுதும் போகிறான்
மென்பொருளாய் வன்பொருளாய்
தமிழ்மொழி என்னும்
நன்பொருள் மறந்து'[3]

என்று பாடுகின்றார். மரபுத்தமிழர்கள் தாய்நாடு மறந்து வேறு நாட்டில் புலம் பெயர்கிறார்கள். பிறநாடுகளில் குடியேறுவதால் தம் தமிழ்ச் சந்ததிகள் தம் மொழியையும் பண்பாட்டையும் மறக்கும் நிலை வருகிறது. வசதி வாய்ப்பிற்காகச் செம்மொழித் தமிழைத் தம் வருங்காலச் சந்ததிக்குச் சேராமல் நிற்கும் நிலை உருவாகிறது. இதனைப்,

'பேத்திகளுக்குத்
தொட்டிலாட்டவும் உணவு
ஊட்டவும் வெளிநாடு
போய்ப் போய் மீளும் மூத்தவர்கள்
அங்கெல்லாம் இப்படி இல்லை
என்று
வாய்திறக்கும்போது உன்

மூச்சுக்கள்
முடிச்சுகளின் தேசம்
ஆகிறதோ?'[4]

என்று கூறி வருங்காலத்தில் தமிழ் மறக்கப் படுவதினை ஏக்கத்தோடு தெரிவிக்கிறார்.

தமிழ் எதிர்ப்பாளர்கள்

தமிழ் மொழிவளத்தைப் பிறமொழியின் வளமெனப் பொய்யுரைக்கும் அறிஞர் களைப் பற்றி, 'மொழிபெயர் மண்ணில் முடிவிலாத் துயரங்கள்' எனும் கவிதைத் தலைப்பில்,

'நீங்கள் சொல்கின்ற
காலமே காலம்
நீங்கள் சொல்கிற
கருத்தே கருத்து
என்று தயாரித்து வைத்திருந்த
தாளில் தாங்களே போட்டுக்
கொண்டனர்
இலக்கணக்காரர்கள்
கையெழுத்துக்களை'[5]

என்று கடிந்துரைக்கிறார். 'எமர்மன் தீயகனும் செல்டன் போலிகனும்'[6] *தமிழின் தொன்மையைக் குறைத்தும் தமிழின் தனித்தன்மையை மறுத்தும் கருத்துக்களை வெளியிட்டுவரும் இந்நாளைய மேலைநாட்டுத் தமிழ் அறிஞர்கள்'*[7] *மற்றும் இன்னாரைத் தமிழன்பன்தமிழுக்கு இழுக்கைஏற்படுத்து பவர்கள் என்று கடிந்துரைக்கிறார்.*

வாய்ப்பிழந்த தாய்த் தமிழ்

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளின் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற காலம் சென்று ஆங்கில மொழிக் கலப்பு மக்களிடம் இன்று குடிகொண்டுள்ளது. பேச்சு மொழி, இசை, பாடல், மழலைப்பேச்சு, மனைவியின் ஊடல், உணவுப் பொருள், வங்கி, உணவகம், திரைப்படம், விளம்பரம், விமர்சனம், மருந்து மாத்திரை போன்ற எல்லா இடங்களிலும் தமிழில்லை ஆங்கிலமே குடிகொண்டுள்ளது என்பதை,

'மாரிக்கால மழைத்துளியில்
தமிழ் உண்டா?
இளவேனிற்பருவ மலர்களில்
தமிழ் உண்டா?
தெரியவில்லை'[8]

என்று இயற்கை நிகழ்வில்கூட தமிழ் மறக்கப்பட்டும் மறக்கடிக்கப்பட்டும் வருவதை வருத்தத்துடன் தமிழன்பன் பதிவு செய்கிறார்.

மொழியும் அறிவும்

ஆங்கில மொழி அறிதல் மட்டுமே அறிவு என்ற எண்ணம் பாமரமக்கள் முதல் படித்தவர் வரை நிலவி வருகிறது. ஆங்கிலம் அல்லாத பிற மேலை மொழியினர் தம் தாய்மொழியிலேயே பயில்கின்றனர். ஆனால் தமிழகத்திலோ பிழையாகப் பேசினால்கூடப் பரவா யில்லை என்று ஆங்கிலத்தில் பேசு கின்றனர். ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ் பேசுவதுகூட குற்றம் என்று கூறி அதற்குத் தண்டமும் விதிக்கப்படுகிறது. இந் நிலையைக் குறிப்பிட்டுத் தமிழ்மொழிப் பற்று அனைவரிடமும் வரவேண்டும் என்ற எண்ணத்தில்,

'மழையின் உரையாடலில்
பிழையான ஆங்கில
உச்சரிப்புக்கள் குற்றமில்லை
தமிழ் இல்லாமல் பார்த்துக்
கொள்ளக் கல்விக் கங்காணிகள்
கார்மேகங்களுக்கு உத்தரவு
போட்டுள்ளனர்'[9]

என்று தமிழ் பேச்சுமொழிக்குத் தடை போடும் நிலையைக் கடிந்துரைக்கிறார்.

தமிழ்ப் பெயர்கள்

உலகில் வாழும் பல்வேறு இன மக்களின் பெயரை வைத்து இன்ன மொழி என்று அடையாளப்படுத்தலாம். அவ் வகையில் தாய்மொழி வழியில் பெயர் வைப்பது மொழி அடையாளத்தைக் காட்டும். மேலும் மொழி வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமையும். தற்காலத்தில் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும்போது கூட பிறமொழியில் பெயர் வைக்கும் மோகம் நிலவி வருகிறது. இந்நிலை மாற வேண்டும் என்ற விதத்தில் தமிழன்பன் 'எப்போது பொங்கல் திருநாள்' வரும் எனும் கவிதையில்,

'எப்போது
தமிழனுக்குள் தமிழ்வந்து
நிரம்பும்?
அப்போது வரும் பொங்கல்
திருநாள்?'[10]

என்று தம் கவிதையில் தமிழ் மொழி பற்று எப்போது மக்களிடத்தில் பரவலாக இருக்குமோ அப்போதே தமிழரின் திருவிழா என்று கூறுகிறார்.

மொழிப்போர் நினைவு

அன்றைய இந்திய அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்து ஈ.வே.ரா. பெரியார், நீதிக்கட்சி மற்றும் தாளமுத்து நடராசன் உள்ளிட்ட பலர் தமிழ்மொழிக்காகப் போராடினர். இப்போராட்டத்தில் தாளமுத்து நடராசன் மற்றும் பலர் தமிழுக்காக இன்னுயிரைத் தியாகம் செய்தனர். இத்தகைய மொழிப்போர் தியாகிகளை நினைவு கூறும் விதமாக,

'காலம் கடந்தும்
அவர்கள் எழுத்து விளக்குகள்
தமிழர் வீடுகளில்
கண்மூடாமல் சுடரக்
காப்பாற்றியவர்கள்
நீங்கள் அல்லவா?'[11]

என்று 'மறக்கும் முன் மரணிப்போம்' என்னும் கவிதைத் தலைப்பில் இன்றைய இளைய சமுதாய தமிழர்களிடத்தில் தமிழ்ப் பற்றினை ஊக்குவிக்கிறார்.

நிறைவாக

'இதோ ஒரு பிரபஞ்சக் கவிஞர்'[12] என்று பொன்னீலனால் பாராட்டப்படும் ஈரோடு தமிழன்பன் 2015இல் 'திசை கடக்கும் சிறகுகள்' கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். அக்கவிதைத்தொகுப்பில் தற்காலத் தமிழர்கள், எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற மொழி உணர்வற்று வாழ்கின்றனர். தம் தமிழின அடை யாளத்தை மறக்கின்றனர் என்ற குற்றச் சாட்டைக் குறிப்பிட்டு இந்நிலை மாற வேண்டும் என்று எடுத்துரைக்கிறார். தமிழரிடத்துத் தமிழுணர்வு மூடப்பட்ட

எரிமலைபோல் உறங்கிக்கிடக்கிறது. இதனை நன்குணர்ந்த தமிழன்பன் தம் தமிழ்க் கவிதைகளின் வாயிலாகத் தமிழருக்குத் தமிழுணர்வை மேலோங்கச் செய்கிறார் என்பதில் ஐயமில்லை. 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்று சொன்ன பாவேந்தரின் முழக்கத்திற்கு இணங்க பாவேந்தர் வழியில் தமிழை வளப்படுத்தும் ஈரோடு தமிழன்பன் போன்றோரால் தமிழ் வாழும், தமிழ் வெல்லும் வையம் உள்ளளவும்!.

அடிக்குறிப்புகள்

1. திசை கடக்கும் சிறகுகள், இப்போது சொல்வாயா? ப. 33.
2. மேலது, ப. 34.
3. மேலது, மொழி பெயர் மண்ணில் முடிவிலா துயரங்கள், ப. 42.
4. மேலது, சும்மா நான் சொல்லவில்லை அம்மா, ப. 57.
5. மேலது, மொழி பெயர் மண்ணில் முடிவிலா துயரங்கள், ப. 45.
6. மேலது, ப. 44.
7. மேலது.
8. மேலது, வாய்ப்பிழந்த தமிழ், ப. 54.
9. மேலது, மறக்கும் முன் மரணிப்போம், ப. 57.
10. மேலது, எப்போது பொங்கல் திருநாள் வரும்?, ப. 64.
11. மேலது, மறக்கும் முன் மரணிப்போம், ப. 70.
12. திசை கடக்கும் சிறகுகள், ப. 5.

பயன்பட்ட நூல்கள்

1. திசை கடக்கும் சிறகுகள், முதற்பதிப்பு, 2015.
2. ஈரோடு தமிழன்பன், பூம்புகார் பதிப்பகம், சென்னை – 600 108.

★ சுருக்கெழுத்து - திசை கடக்கும் சிறகுகள் - திசை, பக்கம் - ப.

நேயர் விருப்பம் என்ற கவிதையில் அமைந்துள்ள மண் என்ற இயற்கைச் சிந்தனைகள்

முனைவர் மு. அலிபிநிஷா
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி – 20
அலைபேசி எண் – 8508764215

ஆய்வுச் சுருக்கம்

மனிதர்களின் வாழ்க்கையில் நடக்கின்ற ஒவ்வொரு நிகழ்வுகளையும் ஒட்டுமொத்தமாகத் தொகுத்து இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கும் பெட்டகமாகத் திகழ்ந்து வருகின்றன. அந்தவகையில் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை அப்படியே படம்பிடித்துக் காட்டுவதில் கவிதை இலக்கியம் சிறந்து விளங்குகின்றது. சமுதாயத்தில் பல்வகைக் கூறுகள் கவிதை இலக்கியத்தில் காணப் படுகின்றன. இயற்கையைப் பற்றிப் பாடாத கவிஞர்கள் இருக்கவே முடியாது. கவிக்கோ அப்துல் ரகுமான் தனது கவிதைத் தொகுப்பான நேயர் விருப்பத்தில் இயற்கையின் சாராம்சத்தைப் பாடி யுள்ளார். மண் என்ற தலைப்பில் அமைந்துள்ள கவிதைகள் அனைத்தும் நிலமகளின் நிஜங்களை உள்ளத்துக்குள் நிழலாட வைத்துள்ளார். இதில் அமைந்துள்ள கவிதைகள் வாழ்க்கைப் பயணத்துக்கு இயற்கையின் பயன்பாடு எவ்வளவு முக்கியம் என்பதை வலியுறுத்தும் நோக்கில் அமைந்துள்ளன. ஐந்து நிலங்களையும் ஒவ்வொன்றாகப் பகுத்துப் பெண்களோடு ஒப்பிட்டுத் தனது கற்பனைத் திறத்தையும் பகன்றுள்ளார். பத்து மாதம் சுமக்கும் தாயினைவிட இயற்கை வாழ்நாள் முழுவதும் சுமக்கும் சுமைதாங்கியாகக் காட்சியளிப்பதைக் கவிதையில் பாடியுள்ளார். இதில் ஒரு சில கவிதைகள் இங்கு ஆய்வுக்கு எடுத்தாளப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள்

1. மசக்கை – தாய்மைப்பேறு 2. காலக் குயவன் 3. பரிணாமச் சக்கரம்

முன்னுரை

இயற்கை இன்பமான ஒரு கொடை. ஏனெனில் அது இறைவன் கொடுத்த வரம். அந்த வளமான செல்வத்தை இப்பொழுது நாம் பாதுகாக்கின்றோமா? என்றால் பல்வேறு கேள்விக் கணைகள் தான்உருவாகும். அத்தகைய இயற்கையைப் பற்றி அப்துல் ரகுமான் தனது கவியோட்ட சிந்தனைகளில் எவ்வாறு பல்வேறு கோணங்களில் பதிவு செய்துள்ளார் என்பதை அவருடைய நேயர் விருப்பம் என்ற கவிதைத் தொகுப்பில் காணலாம்.

பஞ்சபூதங்களில் முதலாவதாக இடம் பெறும் நம்மையெல்லாம் நிமிர்ந்து நிற்க வைக்கும் நிலமகளைப் பல்வேறு கருத்தாடல்களில் தனது சொற்கோவை களைக் கொண்டு மண் என்ற தலைப்பில் பாடியுள்ள கவிதையில் இடம்பெற்றுள்ள சிந்தனைச் சிதறல்களைப் பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

"படைகாக்கும் தமிழ்வீரம்
வேண்டுமாயின்
பரணிதனைப் படியுங்கள்
சிறந்த செய்யுள்
நடைகாக்கும் அமைப்புமுறை
வேண்டுமாயின்
நைடதத்தைப் படியுங்கள்
வினாவுக்கேற்ற
விடைகாணும் பேரறிவு
வேண்டுமாயின்
வேதாந்தம் படியுங்கள்
புதுமை தன்னை
அடைகாக்கும் சிந்தனைகள்
வேண்டுமாயின்
அப்து[ல்] ரஹ்மான் நூல்
போதும்"[1]

என்று கூறும் அளவுக்கு அவருடைய சிந்தனைகளில் புத்தாக்கமும், புதுமையும் நிரம்பிக் கிடப்பதை நமக்கு இலக்கிய உலகம் வெளிச்சம் போட்டுக் காட்டு கின்றது.

காலப்பகுப்பு

பொதுவாக மண் என்ற வார்த்தையைப் பல இடங்களில் தாழ்வாகப் பேசுவதற்கு ஏளனமாகப் பயன்படுத்துவோம்.

ஆனால் நம்முடைய நிலமகள் எத்தகைய வரப்பிரசாதம் என்பதை ஒவ்வொரு வார்த்தைகளிலும் கவித்துவச் சிந்தனைகளை நளினமாக குறிப்பிட்டுள்ளார்.

வசந்த காலம், கார்காலம், இலை யுதிர்காலம் ஆகிய மூன்று காலங்களைத் தனித்தனியாகப் பிரித்துக் காட்டும் எண்ணவோட்டம் சார்ந்த கவிதை,

"வசந்தத்தில்
நான் பூப்படைகிறேன்
கார்காலத்தில்
கலவி செய்கிறேன்
இலையுதிர் காலத்தில்
விரதமிருக்கிறேன்"[2]

என்ற வரிகள் பூப்படைதல், கலவி, விரதம் என்ற அடிப்படையில் பிரித்து மூன்று காலத்தையும், அதனுடைய செயல்பாடு களையும் பெண்ணினத்தின் செயல்பாடு களோடு இணைத்து தத்துவார்த்தமாக எடுத்தாளப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

இத்தலைப்பில் அமைந்துள்ள கவிதைகள் அனைத்திலும் மண் கவிதை சொல்லியாகக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. நான் வெறும் மண் மட்டுமல்ல என்னிடம் சாகசங்கள் ஏராளம் கொட்டிக் கிடக்கின்றன. அதனைப் பயன்படுத்தும் முறைதான் மாறுபாடாக இருக்கின்றது. இயற்கையைக் காப்பாற்றுவதில் வலிமையுடையதாகக் காட்சியளிக்கும் தூண். அதாவது பிறப்பு முதல் இறப்பு வரை பூமியைத்தான் நாடி உள்ளோம்

என்ற நிலையை அழகுற நயம்பட தனது கற்பனைத் திறத்தை ஊட்டி கவிதை படைத்துள்ளார்.

"ஒரே நேரத்தில் நான்
உங்களுக்குச் சமாதியாகவும்
விதைகளுக்குக் கருப்பையாகவும்
இருக்கிறேன்"[3]

என்ற சிந்தனைச் சிதறல் வாசிப்போரை ஆழமாகச் சிந்திக்க வைக்கும் கண்ணோட்டத்தில் அமைந்துள்ளன.

நாம் தோன்றிய காலம் தொட்டு நாம் அதற்குப் பாரமாக இருந்தாலும் மண் நமக்குச் சிறந்த வரமாகத்தான் இருக்கின்றது.

இதனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், கடமையும் நம்மிடம் மட்டுமே உள்ளது என்பதையும் வலியுறுத்த வேண்டியது இன்று அவசியமாகிறது.

மண்ணுக்கும், மனிதருக்கும் உள்ள உறவு

மனிதர்கள் பழித்தல், புகழ்தல் என்பதில் எவ்வாறு வேறுபடுகின்றோம் என்பதைப் பற்றி மண் என்ற பெயரில்

"என் மீது
ஆசை வைப்பவரைப்
பழிப்பதும் நீங்கள்தான்
நாடென்ற பெயரில்
ஆசை வைத்தால்
பற்று என்று
பாராட்டுவதும் நீங்கள்தான்"[4]

ஆசை, பற்று என்ற பெயரில் பிரித்து நாம் அதன்மீது வைத்துள்ள விருப்பங்களை வெவ்வேறாக வகைப்படுத்தியுள்ள கவித்துவம், நடக்கின்ற நிகழ்வு ஒன்றாக இருந்தாலும் அதனுடைய செயலும் பார்க்கின்ற பார்வையும் வெவ்வேறாகக் காட்சியளிக்கும் என்பதை வெளிப்படுத்து கின்றது.

பசி என்பதனை நாம் மறந்து ஒருநாளும் வாழ முடியாது. அந்த அடிப்படையில் சோறு போடும் நிலமகளை இன்றைய காலக்கட்டத்தில் எவ்வளவு காயப்படுத்திக் கொண்டு இருக்கின்றோம் என்பதை நினைத்தால் மனதுக்கு வேதனையாகத்தான் உள்ளது. இவற்றைப் பிரித்துக்காட்ட எண்ணிய ஆசிரியர்,

"நீங்கள் என்னைக் கீறுகிறீர்கள்
நான் சோறு தருகிறேன்
என்னைக் காயப்படுத்துகிறார்கள்
நான் பாலூட்டுகிறேன்"[5]

என்ற வரிகள் நம்முடைய நிலையை அழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளன. இதுமட்டுமா? இன்னும் பலவகையான கவிதைகளில் மனிதர்களின் நிலைப்பாடு களைச் சாடியுள்ளார்.

உழைப்பு நம்முடைய மூலதனம் என்பதை ஒரு போதும் உதாசீனப்படுத்தி விடக்கூடாது. உழைக்காமல் இருப்ப வரையும், உழைத்துவிட்டு ஏமாறும் மனிதர்களையும், உற்றுநோக்கிய ஆசிரியர் மண் செய்யும் நிகழ்வைப் பற்றி,

"உழைக்காமல்
இல்லை என்கிறார் சிலர்
அவர்களைக் கண்டு சிரிக்கிறேன்
உழைத்தும்

இல்லை என்கிறார் சிலர்
அவர்களைக் கண்டு
அழுகிறேன்”[6]

என்ற கவித்துவம் நகை, அழுகை நம்மிடம் உள்ள மெய்ப்பாடுகளை உற்றுநோக்கும் பட்சத்தில் பொறுப்பு, ஏமாற்றம் என்ற நிலைப்பாடுகளைப் பகுத்துச் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது. ஆகவே எத்தகைய சூழலிலும் வாழ்க்கையில் தன்னுடைய உழைப்பு என்பது மிகவும் முக்கியம். உழைப்பின்றி ஊதியமில்லை என்ற பொன்மொழியை மனத்தில் அசைபோட வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.

பெண்ணியச் சிந்தனைகள்

“மங்கையராகப் பிறப்பதற்கே –நல்ல
மாதவம் செய்திடவேண்டுமம்மா”[7]

என்ற கவிமணியின் வைர வரிகள் பெண்களை இவ்வுலகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுவதை உணர்த்துகின்றது. அத்தகைய பெண்களைக் காலம்தோறும் போற்றுவதற்குக் காரணமாக இருப்பது அவர்களிடம் இருக்கும் குணங்களில் சிறந்த குணமாக இருக்கும் பொறுமை. அதனால்தான் பொறுமையுள்ள மண்ணுக்குக்கூட பெண்ணின் பெயரினைச் சூட்டி மங்கையைப் பெருமைப்படுத்தியுள்ளனர். பொறுமை என்ற குணத்திற்கு வலு சேர்க்கும் பொருட்டு மண்ணின் பொறுமையை வாழ்வியல் சிந்தனை யோடு பொருத்தி வள்ளுவப் பெருந்தகை,

“அகழ்வாரைத் தாங்கும்
நிலம்போலத் தன்னை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை” [8]

என்ற குறட்பாவை எடுத்தோதி நிலத்தைப் போல் எப்பொழுதும் பொறுமைசாலி களாக வலம் வருதல் அவசியம் என்பதை வலியுறுத்திச் சொல்லியுள்ளதை நன்கு அறிவோம். இன்றைய காலகட்டத்தில் இதனை வாழ்வில் கடைபிடித்து நல்ல எண்ணங் களைப் பிறருடைய உள்ளத்தில் விதைத்து மறுமலர்ச்சி அடைய முயற்சி செய்வோம்.

அவ்வாறு வள்ளுவர் கூறிய பொறுமை குணத்தைப் பற்றி ஆசிரியர்,

“பெண்களுக்குப்
பொறுமை குணம் வந்தது
மசக்கை நேரத்தில்
என்னைத் தின்றதால்தான்”[9]

என்ற கவிதையில் நாம் மண்ணில் விளைவதை மட்டும் உண்ணவில்லை, மண்ணையே சாப்பிட்டு வலிமையாக வலம் வருகின்றோம் என்பதைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

மண் சார்ந்த தத்துவம்

இவ்வுலகில் மண்ணும் மனிதர்களும் ஒன்றுதான் என்பதை நமது உள்ளத்துக்கு உணர்த்தும் நோக்கில்,

“நீங்களும் நானும் வேறல்ல
காலக் குயவன்
என்னைப் பிசைந்து
பரிணாமச் சக்கரத்தில் வனைந்த
பாத்திரங்கள்தாம் நீங்கள்”[10]

என்ற வரிகள் மண் இல்லாமல் மாந்தர்கள்

கிடையாது, அதில் நாம் அனைவரும் பரிணாமச் சக்கரத்தின் பாத்திரங்களே என்பதை உணர வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதனால் நம்மிடம் உள்ள பெருமைகளும், திறமைகளும் ஒருபக்கம் இருந்தாலும் இயற்கையை ஒரு நொடி கூட மறந்துவிட முடியாது என்பதை நமது கருத்தில் கொள்ள வேண்டும்.

"உங்கள் தொட்டில் நான்
ஊட்டும் வட்டில் நான்
கடைசியில் தூங்கும்
கட்டிலும் நானே!"[11]

என்ற வரிகள் தொட்டில், வட்டில், கட்டில் என்ற வார்த்தைகளைப் பயன் படுத்தி அவருடைய சொல்லாக்கத்திற்கு வலு சேர்த்ததோடு மேன்மேலும் மெரு கூட்டியுள்ளார். நம்முடைய வாழ்வியல் சார்ந்த அத்துனை செயல்பாடு களையும் ஒன்றிணைத்து வார்த்தைகளைத் தொடுத்து அழகாக கவிதை மாலையாகக் கலை உலகத்துக்கு வடித்துள்ளார். மண் பெருமைப்படும் இடத்தையும், அவமானப்படும் இடத்தையும் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"நீங்கள் என்னைக்
காலால் மிதிக்கிறபோது
பெருமை அடைகிறேன்
ஆனால் என்னில்
பிச்சைப் பாத்திரம் செய்து
கையில் ஏந்துகிறபோது
நான் அவமானப்படுகிறேன்"[12]

என்ற சொல்சித்திரத்தில் மனிதர்களின் செயல்களை அழகாக வடிவமைத்து நாம் எப்போதும் தலைநிமிர்ந்து நின்றால்தான் நமக்கும் நம்மைச் சார்ந்தோர்க்கும் பெருமையும், புகழும் கிட்டும் என்பதைச் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக இவருடைய இயற்கைச் சிந்தனைகள் இணையதளங்களோடு இரண்டறக் கலந்த பயணத்தில் பயணிக்கின்ற நம் ஒவ்வொருவருக்கும் உறுதுணையாக அமையும். வாசிப்போம்; வளர்வோம்; இயற்கையைப் பாதுகாப் போம். அதாவது இன்றைய அறிவியல் உலகத்தோடு இணைந்த வாழ்க்கையில் இயற்கையை மறந்ததை நினைவு படுத்தும் நினைவலைகளாக உள்ளத்தில் நிழலாட வைக்கின்றன இவருடைய கவிதைகள்.

கவிஞர் மு.மேத்தா தனது கருத்துக் களைக் கோர்வையாக்கி ஒரு கவிதையில்,

"எழுத்து விதைகள்
இதயங்களில்
தூவப்படும் போது
செழித்து
வளர்வது
தனிமனிதன்
அல்ல
ஒரு சமுதாயம்!"[12]

என்று கூறியுள்ளார். கவிதை உள்ளத்தின் உணர்வோட்டம் எப்போதும் ஒரு மனிதனை மட்டும் சார்ந்தது அல்ல. சமுதாயத்தை மையமாகக் கொண்டே இயம்பப்பட்டுள்ளதை நம்மால் உற்று நோக்க முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், ப. 10
2. மேலது, ப. 12
3. மேலது, ப. 13
4. மேலது, ப. 14
5 மேலது, ப. 15
6. மேலது, ப. 14
7. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை கவிதை
8. குறள் எண் 151
9. அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், ப. 15
10. மேலது, ப. 15
11. மேலது, ப. 13
12. மேலது, ப. 15
13. அவர்கள் வருகிறார்கள், மு.மேத்தா, ப. 9

முதன்மை ஆதார நூல்

1. நேயர் விருப்பம், அப்துல் ரகுமான்

துணைமை ஆதாரங்கள்

1. அவர்கள் வருகிறார்கள் – மு.மேத்தா
2. திருக்குறள்
3. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை கவிதை.

மலேசியத் தமிழ் சிறுகதைத் துறையில் பெண் படைப்பாளிகள்

முனைவர் அழகேசன் அம்பிகாபதி
University Tuanku Abdul Rahman, Malaysia
முனைவர் சரசுவதி

ஆய்வுச்சுருக்கம்

மலேசியத் தமிழ்ச் சிறுகதைத் துறையில் பெண் படைப்பாளிகளுள் ந.மகேஸ்வரி, சு. கமலா, வே.இரா ஜேஸ்வரி, பாவை ஆகியோரின் படைப்புகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன. அதன்மூலம் மலேசிய மண்ணின் சிறப்பியல்புகள் தனித்தியல்புகள் ஆராயப் பெற்றுள்ளன.

திறவுச் சொற்கள்

வண்ணையந்தாதி, புலம் பெயர்தல், ஆத்ம திருப்தி, பிழிந்தெடுக்கும், பெண்ணியம், நவரச கதா மஞ்சரி.

முன்னுரை

மலேசியத் தமிழ் இலக்கியம் ஏறக்குறைய 126 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்ததாகும். ஏறத்தாழ 1930ஆம் ஆண்டிலோ அதற்கு முன்னரோ சிறுகதை எழுதப்பட்டிருக் கலாம் என்று துணிந்து கூறச் சான்றுகள் உள்ளன. (ஞாயிறு ஓசை 2001) மலேசியத் தமிழ் இலக்கியத்தின் செவிலித்தாய் களாக விளங்கியவை தமிழ் நாளேடு களாகும். 1930 முதல் 1940வரை 48 ஏடுகளில் பதினைந்திற்கும் குறையாத ஏடுகளைச் சிறுகதைகள் இடம் பிடித்திருந்ததாகப் பாலபாஸ்கரன் குறிப்பிட்டுள்ளார். மலேசியாவில் தோன்றிய முதல் பத்திரிகையாகக் கருதப்படுவது சி.கு. மகுதும் சாயபு அவர்களால் 1875-இல் வெளியிடப்பட்ட "சிங்கை வர்த்தமானி" என்னும் இதழாகும். (மா.இராமையா, 1996) அதனையடுத்து மலேசியாவில், பினாங்கில் 1876இல் "தங்கை நேசன்" என்னும் பத்திரிக்கை வெளிவந்துள்ளது . "உலக நேசன்", "சிங்கை நேசன்", "இந்துநேசன்" ஆகிய பத்திரிகைகள் 1887-இல் வெளிவந்துள்ளன. (இரா.தண்டாயுதம், 1986). சிங்கப்பூரில் 1887-இல் சி.ந.சதா சிவப் பண்டிதரின் "வண்ணையந்தாதி" என்ற நூல் தொடக்கமாக அமைந்தது. (ஏ.ஆர்.எ.சிவகுமாரன்: "சிங்கப்பூர் மரபுக்கவிதைகள்) மலேசியாவின் முதல் தமிழ் இலக்கியப் படைப்பாகக் கருதப் படுவது நாகப்பட்டினம் மரு.வெங்கடா சலம்பிள்ளை அவர்களால் இயற்றப் பெற்ற " ஆறு முகப் புதிகம்" என்ற கவிதை நூலாகும். (இராஜம் இராஜேந்திரன்,

1988) மலேசியத் தமிழ்ப் படைப்பிலக்கிய வகைகளுள் கவிதை இலக்கியமே முதலில் தோன்றியது. அதற்கடுத்த நிலையில் நாவலைக் குறிப்பிடலாம். மலேசியாவின் முதல் நாவல் க.வெங்கடரத்தினம் அவர்களால் 1917-இல் எழுதப் பட்ட "கருணாசாகரன் அல்லது காதலின் மாட்சி. (வே.சபாபதி, 2004). முதல் மலேசியத் தமிழ்ச்சிறுகதை வே.சின்னையா 1930 இல் வெளியிடப்பட்ட "நவரச கதா மஞ்சரி" எனும் தொகுப்பில் அடங்கியுள்ள ஐந்து சிறுகதைகளாகும். (ந.பாஸ்கரன், 1995).

காப்பியனை ஈன்றவளே
காப்பியங்கள் கண்டவளே
கலை வளர்த்த தமிழகத்தின்
தலை நிலத்தில் ஆள்பவளே
தாய்ப்புலமையால் புவியில்
தனிப்பெருமை கொண்டவளே
தமிழரோடு புலம்பெயர்ந்து
தரணியெங்கும் வாழ்பவளே
எங்களெழில் மலைசியத்தில்
சிங்கைதனில் ஈழமண்ணில்
இலக்கியமாய் வழக்கியலாய்
இனக்காவல் தருபவளே
[தேன்கூடு]

என்று மலேசிய நாட்டுக்கென அழகிய தமிழ் வாழ்த்தினை இயற்றியுள்ளார் எங்கள் தமிழ்த் தந்தை இறையருட் கவிஞர் செ. சீனி நைனா முகம்மது அவர்கள். அவரின் கூற்றினை மெய்ப் படுத்துவது போன்று தமிழர் செல்லும் இடமெல்லாம் தானும் புலம்பெயர்ந்து புகழோடும் பெருமையோடும் வாழ்கிறது நம் மொழியும் மொழி சார்ந்த இலக்கியமும்.

தமிழர்களின் புலம்பெயர்தல் எனப்படுவது ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது. வேர்களைத் தேடும் விழுதுகளாகவே மலேசிய இலக்கியம் காலத்திற்குக் காலம் மாற்றம் கண்டும் வளர்ந்தும் வந்துள்ளது. புலம் பெயர்தல் என்பது சில வேளைகளில் வலிமையானதாகவும் காணப்படுகின்றது. இந்தப் புலம் பெயரும் மனிதர்களின் வாழ்க்கை அவர்கள் வாழும் மண்ணைச் சார்ந்ததாக இருப்பதை அவர்கள் படைக்கும் இலக்கியத்தின் வழி நன்கறிய முடிகின்றது. இத்தகைய அடையாளங் களைத் தங்களது படைப்புகள் வழிப் பதிந்து, காலத்திற்கும் அழியாத சுவடுகளாக இன்றும் வாழும் எழுத்தாளர்கள் போற்றுதலுக்குரியவர்கள் என்றால் அது மிகையில்லை.

மலேசியத் திருநாட்டில் தமிழ்ப் படைப்பிலக்கியம் என்பதானது ஏறக் குறைய ஒரு நூற்றாண்டைக் கடந்திருப் பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்நாட்டில் இலக்கியம் பல வடிவங் களில் பல வழிகளில் பயணம் செய் தாலும், சிறுகதை என்ற புனைக்கதை இலக்கியம் மிகவும் பரந்து விரிந்து மிகவும் செழுமை மிக்கதாய் வளர்ந்து வருகின்றது; இனியும் மிகச்சிறப்பாக முன்னேற்றம் காணும் என்பதிலும் ஐயமில்லை.

மலேசியத் தமிழ்ச் சிறுகதைத் துறையில் பெண் படைப்பாளிகள்

1930ஆம் ஆண்டிலேயே சிறுகதை மலைநாட்டில் வேறூன்றத் தொடங்கி னாலும் எழுபதாம் ஆண்டு காலக்

கட்டமே தமிழ்ச் சிறுகதையின் பொற் காலம் என்று போற்றப்படுகிறது. இந்தக் காலகட்டத்தில் பல பெண் எழுத்தாளர்கள் சிறுகதையை நோக்கிப் பயணம் செய்யத் தொடங்கினர். அறுபதாம் ஆண்டுகளில் எழுத்துலகில் அடியெடுத்து வைத்து, எழுபதுகளில் தங்களைச் செதுக்கிக் கொண்டு எண்பதுகளில் படைப்பிலக் கியத்தில் தங்களை நிலை நிறுத்திக் கொண்ட பல பெண் படைப்பாளிகள் இந்த 2000 ஆண்டுகளிலும் வணக்கத்திற்கு உரியவர் களாகின்றனர். பல இளம் படைப்பாளி களுக்கு வழிகாட்டியாகவும் வெற்றி நடைபோடுகின்றனர். இவர்களின் படைப்புகள் யாவும் மண்ணின் வாழ்வை மறைக்காமல் பேசும் எழுத்துகளாகின்றன.

வாழ்க்கையைக் காட்டுவதுதானே இலக்கியத்தின் பணி. அந்தப் பணியை மலேசியப் பெண்படைப்பாளிகள் நிறைவாகவே செய்துள்ளனர். மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெண்களும் தங்களால் இயன்ற அளவுக்கு நிறைவான பங்கினை வழங்கி வந்துள்ளனர் வழங்கியும் வருகின்றனர். இன்று மலேசியப் பெண் படைப்பாளிகளின் சிந்தனைகளில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை இலக்கிய வடிவங்களின் வழியாக அறிய முடிகின்றது. தங்களின் கருத்துகளைத் தயக்கமின்றித் துணிவுடன் வெளிப்படுத்தும் அளவுக்குச் சிந்தனை மாற்றங்களும் முன்னேற்றங்களும் அண்மைய காலங் களில் பரவலாகவே தென்படுகின்றன. சிறுகதை, கட்டுரை, கவிதை, குறுநாவல், நாவல், தொடர்கதைகள், வானொலி நாடகங்கள், சிறுவர் இலக்கியம் புதுக்கவிதை போன்ற இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் தங்களின் கருத்துக்களைப் பெண்கள் தங்களைச் சிறப்பாகவே பதிவு செய்து கொண்டு வந்திருக்கின்றனர்.

கண்கள் நமக்கு உண்டு– நமக்குக்
கருதும் வண்மையுண்டு
மண்ணிடைத் தேசமெல்லாம் –
தினமும்
வாழ்ந்திடும் வாழ்க்கையிலே
எண்ண இயலாத – புதுமை
எதிரிற் காணுகின்றோம்
கண்ணிருந்தென்ன பயந் நமக்குக்
காதிருந்தென்ன பயன் ”

என்று கேள்வி எழுப்புகிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். எல்லாம் இருந்தும் உள்ளத்திலே உணர்ச்சி இல்லாவிட்டால் உயிரற்றதைப் போலவே வாழ்வும் பயனற்றதாகிவிடும். உணர்வுகளோடு போரிட்டு, பிழிந்தெடுக்கும் உணர்வு களை எழுத்து வடிவத்தில் படைத்துக் காட்டியதிலும் காட்டுவதிலும் பெண் படைப்பாளர்களின் உணர்வும் எழுத்தும் துணிச்சல் மிகுந்ததாக இன்றும் நிறம் மாறாத பூக்களாக இருக்கின்றன.

மலைநாட்டில் தமிழ்மொழியிலும் தமிழ் இலக்கியத்திலும் பற்றுக்கொண்டு பல பெண் எழுத்தாளர்கள் சிறுகதை களத்தில் துணிவுடன் இறங்கி வெற்றி நடைபோடுவது பாராட்டுக்குரியது. இலக்கிய வேட்கையின் காரணமாகக் குடும்பத்தில் பங்காற்றிக்கொண்டே படைப்பிலக்கியத்திலும் பெரும்பான்மை

யானப் பெண்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். புனைவிலக்கியங்களில் பூரண நிலவாக ஒளி வீசத்தொடங்கி யுள்ளனர். சுருங்கக் கூறின் மலேசியப் பெண்கள் சிறுகதைத் துறையில் தனியிடத்தைப் பிடித்துள்ளதை யாரும் மறுக்க இயலாது. ஏறக்குறைய 100 பெண்களுக்கு மேல் எழுத்துலகில் வலம் வந்து கொண்டிருக்கின்றனர் என்பது இக்கட்டுரையின் கணிப்பாகும். இன்று இந்த 2022ம் ஆண்டில் இந்த எண்ணிக்கைக் கூடியே இருக்குமேயன்றி குறைந் தோடிருக்காது என்று உறுதியாகக் கூறலாம்.

மலேசிய நாட்டில் தமிழ்மொழியில் இலக்கியம் படைத்து பொருளாதாரத்தை ஈட்டியவர்களோ அல்லது பெருக்கிக் கொண்டவர்களோ எவரும் இல்லை. தத்தம் ஆன்மதிருப்திக்காகவும், மொழி வளர்ச்சிக்காகவும், இலக்கிய இன்பத்தைப் பருகிடவும் மட்டுமே இத்துறையில் பெண்களும் ஆண்களும் விரும்பி ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும் பெண்கள் படைப்பிலக்கியத்தில் ஈடுபடு வதும் வெற்றி பெறுவதும் மிகவும் சவால் மிக்கதாகும். அந்தச் சவால்களைத் துணிவுடன் எதிர்கொண்டு பீடு நடை போட்டு வருகின்றனர் இங்குள்ள பெண்கள். வாழ்க்கை எனும் நீண்ட பயணத்தில் பெண்களின் அனுபவமும், பார்வையும், உணர்தலும் மிகவும் ஆழமானது. இவர்கள் தங்கள் கதைவழி பிரச்சனைகளை அணுகும் விதம் வெகு நுணுக்கமானது. பல சமயங்களில் அவர்களின் சொந்த அனுபவங்களே கதைகளாகப் படைக்கப்படுகின்றன. அவ்வாறான கதைகள் உணர்ச்சியின் தாக்கங்களில் பிறந்தவையாக அமை வதுடன் பெண்களுக்குத் தனி முத்திரையைக் கொடுத்துவிடுகின்றன. எங்கள் பெண் இலக்கியவாதிகள் சிலரின் சிறுகதை களும் சிறுகதை நூல்களும் தமிழ் நாட்டின் கல்லூரிகளில் ஆய்வுக்களமாகவும், பாட நூலாகவும் இணைக்கப்பட்டுள்ளது. இதுவே புலம் பெயர்ந்து இலக்கியத் தோடு வாழும் எங்கள் நாட்டுப் பெண் எழுத்தாளர்களுக்குக் கிடைத்த பெரிய அங்கீகாரம் என்றே நாங்கள் கருதுகிறோம்.

மலேசிய மண்ணின் மணம் கமழும் மங்கையரின் சிறுகதைப் படைப்புகளின் சிறப்பியல்களும் தனித்தன்மையும் பிறரால் அறியப்பட வேண்டும். அவற்றின் நுட்பம் நுகரப்பட வேண்டும் என்பதே இக்கடுரையின் பெரிய எதிர்ப்பார்ப்பு. அதன் பொருட்டே இக்கட்டுரையில் நன்கு அறிமுகமான மலைநாட்டுப் பெண் எழுத்தாளர்கள் சிலரை, அவர்களது கதைவழி இங்கு அறிமுகப்படுத்துகிறோம்.

1) ந. மகேஸ்வரி

மலேசியத்தமிழ் எழுத்துலகின் மூத்த இலக்கியவாதியாவார். ஐம்பத்தைந்து வருடகாலமாகத் தொடர்ந்து பயணித்து வரும் பண்பட்ட மூத்த படைப்பாளி யாவார். இவருடைய கதைகள் கட்டுடையாத கதையாக்கம்கொண்டு படைக்கப்படுவன. இவரது புனை

கதைகள் பல பரிசுகளை வென்றுள்ளன. அவ்வகையில் இவர் எழுதிய "இலையுதிர் காலம்" நல்லதொரு கருவினைத் தாங்கி மலர்ந்துள்ளது.

வெளிநாட்டில் வேலை செய்யும் பிள்ளைகளை நம்பி, சொந்த வீட்டையும் நாட்டையும் விட்டு அவர்களுக்குத் துணையாகச் செல்கின்றனர் பெற்றோர். ஆனால் பிள்ளைகளோ தங்களின் வசதியையும் வாழ்க்கையையும் உயர்த்திக் கொள்ள முனைப்புக் காட்டுகின்றனர். பெற்றோரின் உணர்வுகள் செல்லாக் காசாகிப்போக, மீண்டும் சொந்த நாட்டுக்குத் திரும்ப முடிவு செய்கிறார் தந்தை. தாய் பிள்ளை உறவாக இருந்தாலும், வாயும் வயிறும் வேறுதான் என்பதை அழகாய்ச் சொல்லும் கதையாகும்.

2) சு. கமலா

திருமதி சு.கமலா எண்பதாம் ஆண்டுகளில் எழுத்துலகில் பிரவேசம் செய்தவர். உங்கள் குரல் என்ற மாத இதழில் பல ஆண்டுகள் துணையாசிரி யையாகப் பணியாற்றியவர். எங்கள் நாட்டுத் தேசிய மொழியான மலாய் மொழியிலும் சிறுகதை எழுதக் கூடிய திறமைக் கொண்டவராகத் திகழ்கிறார். இளையோர் கதை, வரலாற்று நாவல், உரைவீச்சு, கட்டுரை, சிறுகதை என இலக்கியத்தின் பன்முகம் கொண்டவ ராவார். மலேசிய வாழ்வைப் பிரதி பலிக்கும் சமகால நிகழ்ச்சிகளையும் நிகழ்வுகளையும் மேல்பூச்சின்றிக் காட்டும் சிறந்த படைப்பாளியாவார். இவரது கைவண்ணத்தில் பிறந்த "கூண்டுகிளி" என்ற சிறுகதை பரிசும் பாராட்டும் பெற்ற சிறப்பானகதையாகும். அமராவதி, தேனீ என்ற புனைப் பெயர்களில் புனைகதைப் படைப்புகளை மலேசியத் தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கியராவார்.

அமராவதி கடிதங்கள் எனும் கடித இலக்கியத்தைத் தொடர் கட்டுரையாக உங்கள் குரலில் எழுதி வந்தது இவருடைய எழுத்தாற்றலுக்கு நல்லதொரு சான்று. 1986ல் இலக்கிய அறவாரியம் நடத்திய சா.ஆ. அன்பனந்தன் இலக்கியப் பரிசுப் போட்டியில் இவரது கைவண்ணத்தில் மலர்ந்த தீமலர் என்ற குறுநாவல் பரிசுக்குத் தேர்வானது. அவ்வகையில் மலேசியத் தமிழ் எழுத்துலகில் வரலாற்று குறுநாவல் எழுதிய முதல் பெண் எழுத்தாளராக சு.கமலா திகழ்கிறார்.

இவர் புற்றீசல் போல் பல நூல்களை வெளியீடு செய்யாவிட்டாலும் எழுத்து உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்த நிறைவான எழுத்தாளர் என்ற சிறப்புக்குரியவராவார். இவரது புதிய வெளியீடாகச் சிறுகதைத் தொகுப்பு ஒன்று அண்மையில் இயங்கலைவழி வெளியீடு கண்டது. சு. கமலம் அவர்களின் சிறுகதைப் பயணத்தில் நட்டு வந்த சிறுகதை கன்றுகள் "ய" எனும் தலைப்பில் ஒரு புதிய சிறுகதைத் தொகுப்பாக வெளியீடு கண்டதில் பெண் எழுத்தாளர் உலகத்திற்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தது எனலாம். எண்பதுகளின் தொடக்கத்திலிருந்து 2003 வரை பரிசுப் பெற்ற சிறுகதைகளையும் பரிசுக்குத்

தேர்வான சில கதைகளையும் உங்கள் குரல் மாத இதழில் வெளிவந்த ஓரிரு சிறுகதைகளையும் சேர்த்து 25 சிறுகதை களாகத் தொகுத்து "ய" என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள அனைத்து சிறுகதைகளும் பெண்களின் பல்வேறு பிரச்சனைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும். முழுக்க முழுக்கப் பெண்களின் சராசரி வாழ்க்கையைப் பேசும் சிறுகதைகளாக இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள் வலம் வருகின்றன. ஆணாதிக்கப் போக்குக் கொண்டவர்களால் பெண்கள் துன்பங் களை அனுபவிப்பது தமிழ்ச் சமூக அமைப்பில் இயல்பாகக் காணப்படுவதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது என்ற கருத்தை இந்த ய சிறுகதைத் தொகுப்பு நூல்வாசகர்களுக்குத் தந்துள்ளது.

மலேசிய நாட்டுப் பெண்கள் சிறப்பாக எழுதக்கூடிய திறமைப் பெற்றவர்கள் என்பதற்கு இதுவே சிறந்த சான்று. மேற்குறிப்பிட்ட மூவருமே 60, 70, 80களில் சிறுகதைவழி பயணம் செய்தவர்கள். அன்று தொடங்கி இன்று வரை படைப்பிலக்கியத்தில் சரித்திரம் படைத்தவராக இவரைக் குறிப்பிடுவதில் பெருமையடைகிறோம்.

3) வே. இராஜேஸ்வரி

வே. இராஜேஸ்வரி 1976ஆம் ஆண்டு முதல் இன்று வரை சிறுகதைத் துறையில் வலம் வந்துகொண்டிருக்கிறார். சிறுகதை மட்டுமின்றிப் புதுக்கவிதை எழுதுவதிலும் திறமையானவர். புதுக்கவிதையில் கவியரங்கம் கண்ட முதல் பெண் படைப்பாளியும் இவர்தான். மலேசியப் புதுக்கவிதை இலக்கியத்தில் முதல் பெண் படைப்பாளியாக ஆய்வுகள் இவரை அடையாளம் காட்டுகின்றன. (வே.இரா ஜேஸ்வரியின் சிறுகதைகள்: 2017) கவிப்பேரரசு வைரமுத்து அவர்களால் புதுக்கவிதைக்கென விருதும் பணமுடிப்பும் பெற்ற பெருமைக்குரிய முதல் பெண் எழுத்தாளர். தனது படைப்புகள் வழி சமூக அவலங்களை, பெண்களின் நிலைப்பாட்டினை, அவர்களின் எதிர்ப்பார்ப்புகளை, பெண்ணினத்தின் நம்பிக்கைகளை, எளிய நடையில் அதே வேளையில் புதுமையாகவும் மாறுபட்ட கோணத்தில் கதைகளை வழங்கு பவராகவும் இருக்கிறார். தன்னிலையில் கதை சொன்னால் காதாபாத்திரத்தின் உணர்வுகளைச் சிறப்பாகக் கூறலாம் என்ற கூற்றினில் நம்பிக்கை கொண்டுள்ளதால் இவருடைய கதைகளில் இவரே ஆணாக, பெண்ணாக, சிறுமியாகக் கதைகளை நகர்த்திடுவார். மலேசியச் சூழலில் வெளிவரும் சிறுகதைகளில் மாறுபட்டு மிக நுட்பமான உணர்வுகளைக் கொண்டிருப்பதாக இவரது கதையைப் படிப்பவர்கள் நிச்சயம் உணர்வர்.

இவரது கதைகளில் என்னை மிகவும் கவர்ந்தது ஆறாவது காப்பியம் என்ற சிறுகதையாகும். அம்மாவுக்கும் பதின்ம வயது மகளுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தைச் சித்தரிக்கும் கதை. "சின்ன வயசில.. பள்ளிக்கூடம் போகாத முன்னே என்னைப் பக்கத்து வீட்டில

விட்டுட்டுப் போவும். சாயங்காலம் அது வீட்டுக்கு வந்ததும் நான் சதோசமா ஓடிப்போய் அதோட காலைக் கட்டிப் பிடிப்பேன்.

"சீ.. சனியனே விடு! உன்னைக் கொஞ்சிக்கிட்டு இருந்தா வீட்டு வேலைய எவடி செய்வா"ன்னு என்னைப் பிடிச்சித் தள்ளும்" என்று மனத்தைச் சிதைக்கும் வரிகளை இந்த ஆறாவது காப்பியத்தில் காணலாம். இதன் சிறப்பைக் கருதியே இக்கதை எங்கள் நாட்டுப் படிவம் ஆறு மாணவர்களுக் கானப் பாட நூலில் இணைக்கப் பட்டுள்ளது. மாணவர்களை அதிகம் தாக்கிய சிறுகதையாகவும் இந்தச் சிறுகதை அமைந்துள்ளது. புதுமைக்கும் பழமைக்கும் இடையில் இவர் தன் சிறுகதைகளோடு பயணம் செய்வது பெண்களுக்கு மகுடம் சூட்டுவது போலாகும்.

4) பாவை

மலேசிய நாட்டின் நாடறிந்த, புகழ்பெற்ற எழுத்தாளர்களில் சிறப்பிடம் பெற்றவர் திருமதி. பாவை அவர்கள். 1965ஆம் ஆண்டு படைப்பிலக்கிய உலகில் காலடி பதித்த மூத்த எழுத்தாளராவார். மலேசிய நாட்டில் வெளியாகும் எல்லா நாளிதழ்களும், சஞ்சிகைகளும், இதழ் களும் அதிகமாக உச்சரித்த பெயர் பாவை என்றால் அது மிகையாகா. இன்று வரையிலும் அதே உத்வேகத்தோடு சலிக்காமல் சளைக்காமல் எழுதிவரும் பெண் படைப்பளியாவார். இதுவரை 200க்கும் மேற்பட்ட சிறுகதைகளும் 6 குறுநாவல்களும் வானொலி நாடகமும் எழுதியுள்ளார். மரபு கவிதை எழுதுவதிலும் தீவிரம் காட்டும் இலக்கிய மனம் கொண்டவர். அண்மையில் இவர் தமிழ் நாட்டிற்கு இலக்கியப் பயணம் மேற்கொண்ட போது, அவருடைய இலக்கிய ஈடுபாட்டிற்காகத் திருவனந்தபுரம் இலக்கியச் சங்கத்தினரால் தமிழ்மணி என்ற விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழும் இலக்கியமும் தனது இறுதிக் காலம் வரை தொடரவேண்டும் என்ற அவாவைத் தன்னுள் கொண்ட பெண்களின் சிகரமாகத் திகழ்பவர் திருமதி பாவை. இவரை மையப்படுத்தி விரைவில் பாவையின் கவிப்பயணம் என்ற நூலும் மரபுக் கவிதையில் இவரே எழுதிய பாவியம் ஒன்றும் வெளியீடு காண உள்ளன என்பது மரபுக் கவிதையில் மலேசிய நாட்டுப் பெண்களின் சாதனையை நன்கு உணர்த்துகிறது.

5. புதிய வெளியீடு

ஒவ்வொரு ஆண்டும் பல புதிய நூல்கள் எழுந்த வண்ணமாகவே இருக்கின்றன. நாடு தழுவிய நிலையில் இந்த வெளியீடுகள் தனி நூலாகவோ அல்லது பலர் இணைந்து உருவாக்கிய தொகுப்பு நூலாகவோ வெளியீடு கண்டு வருகின்றன. 2012 மலேசியப் பெண் எழுத்தாளர்கள் எழுச்சிமிகு சிறுகதை தொகுப்பு -1, 2016 மலேசியப் பெண் எழுத்தாளார்கள் எழுச்சிமிகு சிறுகதை தொகுப்பு -2 என்று பெண்களைக் கொண்டு இரண்டு சிறுகதைத் தொகுப்பு நூலினை ஆதிலட்சுமி என்ற எழுத்தாளர்

வெளியிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து 28 பெண் படைப்பாளிகளைக் கொண்டு "வாராயோ வெண்ணிலாவே" என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுப்பு நூல் ஒன்று 2019ம் ஆண்டு பெண்ணியத்தைப் பேசும் சிறுகதை நூலாக வலம் வந்தது. இந்தச் சிறுகதைத் தொகுப்பே 28 பெண் படைப்பாளர்களின் குறிப்புகளோடு அவர்களின் சிறுகதைகளையும் தாங்கி மலர்ந்த முதல் சிறுகதைத் தொகுப்பு நூலாகும். மலேசிய வானொலித் தமிழ்ப்பிரிவின் பிரபலமான வானொலிப் புகழ் திருமதி சந்திரா சூரியா அவர்களும், அவருக்கு இணையாக சிறுகதை எழுத்தாளர் முனைவர் சரசுவதி அவர்களும் இந்நூலின் தொகுப்பாசிரி யர்களாக முன்னெடுத்து இந்த நற்பணியை மேற்கொண்டனர். மலேசியப் பெண் களாலும் இலக்கியச் சேவை செய்ய முடியும் என்பதற்கு 'வாராயோ வெண்ணி லாவே' என்ற சிறுகதைத் தொகுப்பு முத்திரையைப் பதித்தது.

முடிவுரை

இலக்கியமே பண்பாட்டின் வேர் என்பார் எங்கள் இறையருட் கவிஞர் அமரர் செ. சீனி நைனா முகம்மது அவர்கள். இந்தப் பண்பாட்டின் வேர்களைத் தாங்கிப் பிடித்து இறந்த காலத்தைக் கடந்து, நிகழ்காலத்தில் வாசம் வீசி எதிர்காலத்தை நிர்ணயிக்கும் படைப்பளிகளாகத் தங்கள் இலக்கியத் தேடலைத் தொடர்ந்து செய்து வரும் மலேசியப் பெண்கள் சமுதாயத்தின் சிற்பிகளாவர். குடும்பம், பணி, கடமை என்ற எல்லா கட்டமைப்புகளையும் எதிர்த்து, கடந்து தங்களை இலக்கியத் திற்குள் கரைத்துக் கொள்ளும் மலேசியப் பெண் எழுத்தாளர்களின் சேவை அளப்பரியது. புலம் பெயர்ந்த தமிழர்கள் பல இடங்களில் தங்களின் அடையாளத்தை இழந்தே வாழ்கின்றனர். ஆனால் மலேசிய நாடு அவ்வகையைச் சேர்ந்ததல்ல. இங்குள்ள மக்கள் தங்கள் மொழி, கலை, கலாச்சாரம், இலக்கியம், பண்பாட்டைத் தங்கள் உயிரினும் மேலாகக் கருதி வருகின்றனர். பெண்மை உள்ளவரை இலக்கியக் கடலாக மலேசியா நிலைபெற்று வாழ்ந்திடட்டும்.

அருமை மகளே கவிதைத் தொகுப்பில் விழுமியங்கள்

சி. சு. அன்புக்கொடி பகவதி

பதிவெண்: 21213064022001, தமிழாய்வு மையம்
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
நெய்யூர் – 629 802, கன்னியாகுமரி மாவட்டம்.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

ஆய்வுச்சுருக்கம்

உடல், உயிர் விழுமியங்கள், மனவள விழுமியங்கள், சமூகநல விழுமியங்கள், குடும்ப விழுமியங்கள், தனிமனித விழுமியங்கள் என நாம் பலவகை விழுமியங்களைப் பின்பற்றுகின்றோம். அதற்கிணங்க தற்போதைய நூல்களில் விழுமியங்களைப் பற்றி பல்வேறு விதமான கருத்துக்களைக் கூறுகின்றனர். மனித விழுமியங்களில் அடிப்படையானது அன்பு ஆகும். பலவிதமான விழுமியங்கள் பற்றி ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

திறவுச்சொற்கள்

விழுமியங்கள், குழந்தைப் பேறு, மருத்துவமனை, சகுனம், காதல், அடிமை வாழ்வு.

முன்னுரை

விழுமியங்கள் என்பது தற்போதைய நவீன காலத்திற்கு ஏற்ப மாறுபடுவது இல்லை. தொன்றுதொட்டேவாழ்வியலோடு இணைந்தவை தான் விழுமியங்கள். கன்னியாகுமரி மாவட்டத்தின் சிறந்தப் படைப்பாளரான குமரி ஆதவன் அவர்கள் தனது அனுபவப் பகிர்வுகளான வாழ்வின் விழுமியங்களை "அருமை மகளே" என்னும் கவிதை தொகுப்பில் பெண்ணின் வாழ்வு, சமுதாயம், அரசியல், குடும்பம், பாசம், வறுமை, சினம், விழாக்கள் போன்ற பல விழுமியங்களைப் பற்றி விளக்கி அருமை மகளே கவிதைத் தொகுப்பின் விழுமியங்கள் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட வுள்ளது.

விழுமியங்கள்

விழுமியங்கள் என்பது மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பனவற்றின் உருவாக்கத்தின் அடிப் படையில் அமைந்துள்ளதாகும். விழுமி யங்கள் என்பதை ஆங்கிலத்தில் 'Values' என்ற அழைப்பர். விழுமியம் என்பதற்கு "மதிப்புகள்"[1] என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் "சிறந்த"[2] என்று அ.கி.மூர்த்தியின் தமிழ் அகராதியும் குறிப்பிடுகிறது.

விழுமியங்கள் வரையறை

ஒரு மனிதனின் உயர்ந்த குணங்கள், பண்பு அவன் மேற்கொள்ளும் அறங்கள்

முதலியனவற்றின்ஒட்டுமொத்த தொகுப்பே விழுமியங்கள் என வரையறுக்கப் படுகிறது.“ஒரு பண்பாட்டைச்சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும், செயல்களுக்கும் நடத்தை முறைக்கும் எவை எவை அவசிய மென்று கருதப்படுகிறதோ அவையே அப்பண்பாட்டினரின் விழுமியங்கள் ஆகும்.”[3] வாழ்வியலில் ஒவ்வொரு நிகழ்வுகளுமே விழுமியங்கள் என்று அழைக்கப்படுகிறது. தற்காலத்தில் நவீன மாற்றங்கள் ஏற்பட்டு வந்தாலும் விழுமியங்கள் என்பது மாற்றம் ஏற்படாமல் வாழ்வியலோடு பயணிக்கின்றன.

பெண்ணின் அடிமை வாழ்வு

அடிமை என்பது மனிதன் வாழ்நாளில் ஒருவரின் கீழ் அடிமைப்பட்டுக் கடினமான வேலை செய்வதாகும். அடிமை வாழ்வு வாழ்கின்றவர்களுக்கு எந்தச் சுதந்திரமும் வழங்காமல் தனக்குக் கீழ் ஆதரவற்று அடிமை வேலை திணிப்பதாகும். பெண்கள் வாழ்க என்று கூறினாலும் அது பேச்சு வழக்குமட்டும் தான். நடைமுறையில் காணப்படுவது இல்லை. ஆண்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். “தந்தை வழிச் சமூகமானது ஆண் ஆதிக்கத்தை உள்ளடக்கிக் கொண்டு பெண் இளையோள், குழந்தை அடிமை, குடும்பப் பணிப்பெண் ஆகியோர் மீது ஆட்சி செய்து அவர்களை அடக்குகிறது.”4 பெண்களை ஆண்கள், வேலை செய்வதில் மட்டுமே சுதந்திரம் கொடுத்துள்ளனர். வேறு அனைத்துச் செயல்களிலும் பெண்ணை அடிமை யாகவே வைத்திருக்கின்றனர். இதனை,

“ஆனந்த சுதந்திரமெல்லாம்
அடுக்களையில் மட்டும் தான்
அதிலும்
அதிகம் செலவானால்?
ஒரு விருந்தாளியின்
உற்சாகத்தோடு வந்தோம்
ஏனோ தெரியவில்லை
நாங்களே விருந்தாகிப்
போகிறோம்” [ப.65]

என்ற கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

பெண்களைப் பற்றி சந்தேகம்

இன்றைய காலச் சூழ்நிலையில் பெண்கள் ஆண்களிடம் பேசினாலோ, எங்கு சென்றாலும் தவறானவர்களாகவே சமூகம் பெண்களைக் கருதுகின்றது. பெண்கள் பெண்களிடம் பேசினால் திறமையானவர்கள் என்றும் பெண்கள் ஆண்களிடம் பேசினால் மோசமானவள் என்று சந்தேகத்திற்கு உள்ளாகிறாள். இதனை,

“பெண்களோடு பேசினாள்
‘திறமைசாலி’ எனச்
சந்தோஷப்பட்டனர்
ஆண்களோடும் பேசினாளட
‘சபலக்காரி’ எனச்
சந்தேகப்பட்டனர்” [ப.41]

என்று குமரி ஆதவன் தன் கவிதையில் சிறப்பாக உணர்த்தியுள்ளார்.

சகுனம் பார்த்தல்

சகுனம் பார்ப்பது என்பது தொன்று தொட்டு இன்றைய காலகட்ட அளவிலும் இருந்துக் கொண்டே இருக்கின்றன. பூனை குறுக்கே வந்தால் தீமை விளையும் என்பது தற்காலத்திலும் சகுனமாகக்

கருதப்படுகிறது. "பூனை குறுக்கிட்டால் தீமை விளையும்"[5] செயற்கையாகப் பரிகாரம் செய்வதற்குப் பின்னால் தான் தீங்கு ஏற்படாது என நம்புகின்றனர். இதனை,

"அவசரமாய்
அலுவலகம் கிளம்பிய
அறிவுமணியும் மனைவியும்
அசுரவேகத்தில் வீடு திரும்பினர்
பூனைக்குப் புரிந்து
போயிற்று"[ப.71]

என்ற கவிதை வரிகள் உணர்த்து கின்றன.

விழாக்கள்

விழா என்பது விரும்பி நடத்தும் கொண்டாட்டம் ஆகும். தற்காலத்தில் விழாக்கள் என்றாலே மக்களின் பணங்களை அழிப்பதற்காகவே உருவாகி யவை. ஒரு விழா வருகிறது என்றால் இக்காலகட்ட இளைஞர்கள் மது அருந்தி போதையில் இருக்கின்றனர். இதனை,

"விழாக்கள்
ஏழைகளின்
உண்டியல்களை
உடைப்பதற்கென்றே
உருவெடுத்தவை"

"அரசாங்கம்
அயல்நாட்டு அமிலத்தையும்
அரசியல்வாதிகள்
உள்நாட்டு அமிலத்தையும்
சாவு நிச்சயமென்ற
உத்திரவாதத்தோடு
தருகிறார்கள் !"[ப.42]

என்ற கவிதை வரிகள் எடுத்துரைக்கின்றன.

சமுதாயம்

பல்வேறு வகைகளில் உறவு கொண்டு வாழும் குறிப்பிட்ட இனம், துறை, தொழில் சார்ந்தவர்களின் தொகுதி, கூட்டம் அல்லது திரள் சமுதாயம் ஆகும். சமுதாய மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும். ஆனால் தற்போது சமுதா யத்தில் கொலை, களவு, சாதிப் பிரச்சனை போன்றவற்றினால் பிளவுகள் காணப்படு கின்றன. சமுதாயச் சண்டைகள் வேண்டாம் என்று ஆசிரியர் உணர்த்தியுள்ளார்.

"குல்லா வைத்துக்கொள்
குறையில்லை
சிலுவை அணிந்துகொள்
சிக்கலில்லை
சந்தனம் பூசிக்கொள்
சங்கடமில்லை
ஆயுதம் மட்டும் எடுக்காதே
அழகில்லை" [ப.94]

ஏழைகளின் தவிப்பு

தவிப்பு என்பது "இல்லாமை, இயலாமை முதலியவற்றால் வருந்திக் கலங்கும் நிலை"[6] ஆகும். கடவுளுக்குக்; காணிக்கைகளை அள்ளிக் கொடுக்கின்ற மக்கள் ஏழைகளின் வயிற்றுப் பசியையும் போக்க வேண்டும் என ஏழைகளின் மனம் ஏங்கி தவிக்கின்றது.

"கடவுளுக்குக் கொடுத்த லஞ்சம்
காணிக்கைப் பெட்டிகளில்
நிரம்பி வழிகின்றன
எப்படி இனம் காண்பது
ஏழைகளின்
வியர்வை முத்துக்களை?"[ப.45]

குழந்தைப்பேறு

குழந்தைப் பேறு என்பது அம்மாக்களின் மறுஜென்மப் பிறப்பாகும். மகள் பிறந்த செய்தியினை தந்தை கூறுகிறார். உன் அம்மா வேதனையால் துடிக்கிறாள் உன்னை வெளிக்கொண்டு வருவதற்காக, அம்மாவிற்கு ஆறுதல் கூற ஆசைப் பட்டேன் ஆனால் அவள் துடித்ததைக் கண்டு மருத்துவனைக்கு வெளியே சென்று விட்டேன் இதனை,

"உன் தாய்
வேதனையால் துடித்த போது
தாங்க இயலா
இதயம் என்னை
மருத்துவமனைக்குப்
புறம் தள்ளியது ." [ப.47]

காதல்

காதல் என்பது "இனக் கவர்ச்சி அடிப்படையில் ஆண், பெண் இருவரிடையே ஏற்படும் அன்பு, நேசம்"[7] என்று அகராதி விளக்கம் தருகின்றது. காதலன் தன் காதலியைக் கூறுவது, உன்னைக் காணத்துடிக்கின்றேன், எங்கிருக்கிறாயோ தெரியவில்லை. ஆனால் உன்னுடைய குரல் மட்டும் கேட்கிறது என்று கவிதை வரிகளில் கூறியுள்ளார்.

"உன்முகம் காணத்துடிப்பது
கண்களா, மனமா?
அதுவும் புரியவில்லை
ஒரே சிலுவையில்
நாம் இருபுறமாய்
அறையப் பட்டிருக்கிறோம்
என்னை உனக்கும்
உன்னை எனக்கும்
தெரியவில்லை ." [ப.56]

முடிவுரை

விழுமியங்கள் என்பவை மனித வாழ்வை ஒழுங்கமைப்பதை நோக்கமாகக் கொண்டவை. ஒரு சமுதாயத்தின் விழுமியங்கள் என்பவை பொதுவாகப் பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகிறது. 'அருமை மகளே' கவிதைத் தொகுப்பில் மனித வாழ்வியல் செய்திகள் வரையறை, பெண்கள் அடிமை வாழ்வு, பெண்களைப் பற்றிச் சந்தேகம், சகுனம் பார்ப்பவர்கள், விழாக்கள், சமுதாயம், வறுமை போன்ற வாழ்வியல் விழுமியங்கள் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

அடிக்குறிப்பு

1. ந.முத்துச்சாமி, க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி, ப.1276.
2. அ.கி.மூர்த்தி, தமிழ் அகராதி, ப.596.
3. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.159.
4. இரா. ரெங்கம்மாள், சி.வாசுகி, பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பண்பாடும், ப.16.
5. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றில் சில அடிப்படைகள், ப.250.
6. ந. முத்துச்சாமி, கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.691.
7. மேலது, ப.396.

துணை நூற்பட்டியல்

1. குமரி ஆதவன், அருமை மகளே, நாஞ்சில் பதிப்பகம், 67/1, கோர்ட் ரோடு, நாகர்கோவில் – 1, 2018.
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், 8ஃ7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை–600 108, 1999.
3. ரெங்கம்மாள் இரா, வாசுகி.சி, பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன் பாடும், அறிவுப் பதிப்பகம், 142, ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை – 600 004, 2014.
4. லூர்து.தே, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றிய ஆய்வு மையம், தூய சவேரியார்(தன்னாட்சி) கல்லூரி, பாளையங்கோட்டை, 627 002, 2016.
5. முத்துச்சாமி, க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி, திருவான்மியூர், சென்னை–41, 2008.
6. மூர்த்தி அ.கி, தமிழ் அகராதி, லியோ புக் பப்ளிஷர்ஸ் 50, முதல் நெடுஞ்சாலை, சி.ஐ.டி நகர், சென்னை 600 035, 2008.

காடு நாவலில் குறிஞ்சித் திணை

முனைவர் யோ. நே. ஆட்லின் பியூலா

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி
மார்த்தாண்டம்.

ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வு "காடு நாவலில் குறிஞ்சித் திணை" என்ற தலைப்பை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

ஜெயமோகனின் மகத்தான படைப்புகளில் ஒன்றான காடு நாவலில் கிரிதரன் மலை காட்டுக்குச் சென்றுமாமனாரின் காண்ட்ராக்ட் வேலைகளுக்குஉதவி செய்வதும், அங்கு வேலையாட்களாக உள்ள குட்டப்பன், ரெசாலம், குரிசு மற்றும் நாகராஜையர் போன்ற கதாபாத்திரங்களும் கிரிதரன் காதலிக்கும் மலைவாழ் பெண்ணாகிய நீலியும், இந்நாவலின் அழியாத சித்திரங்களாகப் படைக்கப் பட்டுள்ளனர்.

குறிஞ்சித் திணையில் அமைந்துள்ள இயற்கை சூழல்கள் காடு நாவலிலும் இடம்பெற்றுள்ளன. உரிப்பொருளின் ஒழுக்கமான வாழ்க்கையும், கருப்பொருள் உரிப்பொருள், முதற்பொருள் ஆகிய வற்றைப் பற்றியும் காடு நாவலில் காண முடிகிறது. தொல்காப்பியர் மெய்யுறு புணர்ச்சியில் நடைபெறும் பத்து அவஸ்தைகளும் தலைவிக்கு நிகழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் காடு நாவலில் தலைவனுக்கு இந்நிகழ்வு நடைபெறுவதாகப் பார்க்கமுடிகிறது. மொத்தமாக ஆராய்ந்தால் குறிஞ்சித் திணையின் அனைத்து கூறுகளையும் உள்ளடக்கியே காடு நாவலின் ஆசிரியர் படைத்துள்ளார்.

திறவுச்சொற்கள்

குட்டப்பன், ரெசாலம், குரிசு, நாகராஜா, மலையன், செறுகாடன், மஞ்சணாத்தி, கிரிதரன், நீலி.

முன்னுரை

ஜெயமோகனின் மகத்தான படைப்புகளில் ஒன்றான காடு நாவலில் கிரிதரன் மலைக்காட்டுக்குள் சென்று மாமனாரின் காண்ட்ராக்ட் வேலைக்கு உதவி செய்வதும், அங்கு வேலையாட்களாக உள்ள குட்டப்பன், ரெசாலம், குரிசு மற்றும் நாகராஜா அய்யர் போன்ற கதாபத்திரங்களும் கிரிதரன் காதலிக்கும் மலை வாழ் பெண்ணாகிய நீலியும் இந்நாவலில் அழியாத சித்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

அதிகாலையில் பொன் வெயில் போல வாழ்வில் ஒரு முறை மட்டும் சில கணங்கள் வந்து மறையும் முதற்காதலின் சித்திரம் இந்த நாவலில் சித்தரிக்கப் பட்டுள்ளது. மற்ற நான்கு நிலங்களுக்கும் மேல் பசுமையாகத் தலைதூக்கி நிற்கும் குறிஞ்சி மலை சார்ந்த இடமாகக் காணப்படுகிறது. அதைபோன்று தான் இந்த நாவலில் காணமுடிகிறது. அதை 'விறனுறல் அறியாச் சோலை' என்றார் கவிஞர்.

ஜெயமோகனின் காடு நாவலில் குறிஞ்சித் திணை

அன்பின் ஐந்திணைக்கு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று மூன்று கூறுகள் உள்ளன. அன்பின் ஐந்திணைகளுள் ஒன்றான குறிஞ்சித் திணையில் வரும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவை காடு நாவலிலும் இடம்பெற்றுள்ளன. அவைதாம்

"முதற்பொருள் கருப்பொருள்
உரிப்பொருள் என முறை
மூன்றினும் நுவலப்படும்"1

என்று அகத்திணை நூலில் அறிந்து கொள்ளமுடிகிறது.

முதற்பொருள்

முதற்பொருளாவது நிலமும் பொழுதும் என இரண்டு பிரிவினை உடையது. நிலமும் பொழுதும் இன்றியமை யாததாகக் காணப்படுகிறது. அதனால் அதனை முதற்பொருள் என்று குறிப்பிடு கின்றனர்.

"நிலமும் பொழுதுமென முதலிரு
வகைத்தே "2

குறிஞ்சித் திணையின் நிலம் மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். கார்கூதிர் என்ற பெரும் பொழுதும், யாமம் என்ற சிறு பொழுதையும் குறிஞ்சிக்குரிய பொழுதுகளாகக் குறிப்பிடுவர்

"அவற்றுள்
கூதிர் யாமம் முன்பனியென்றிவை
ஓதிய குறிஞ்சிக் குரியவாகும்"3

நிலம்

குறிஞ்சித் திணையின் நிலமாகிய மலையும் மலை சார்ந்த இடத்தையே காடு நாவலிலும் ஆசிரியர் குறிப்பிடு கின்றார். மலை நீரோடைகளுடன் செழிப்பாக இருப்பதைப் போலவே காடு நாவலில் உள்ள மலை செழிப்பாக உள்ளது. மலையில்" மரங்கள் கொடிகள் பின்னிக் கவ்விய அடிமரங்களுடன் கிளைகளில் புதர் புதராக இலைச் சுமையுடன் ஒன்றோடொன்று இடித்து நெருங்கி நிற்கின்றன"4. "தெள்ளத் தெளிந்த நீர் இருண்ட கண்ணாடி போல தெளிந்தும் முறுகியும் ஓடிக் கொண்டி ருந்தது"5 என்று மலையின் சிறப்பைக் காடு நாவலில் காண முடிகிறது.

களவு வாழ்க்கையில் காதலன் காதலி சந்தித்துக் கொள்ளும் இடமாக மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலத்தில் அமையும். அதுபோல கதைத் தலைவனான கிரிதரனும் கதைத் தலைவியான நீலியும் சந்தித்துப் பேசி மகிழும் இடமாக மலை குறிப்பிடப்பட்டுள்ளது.

பொழுது

காலமாகிய முதற்பொருள் பெரும் பொழுது, சிறுபொழுது என இரு வகைப்படும்.

"பெரும் பொழுதென்றா
சிறுபொழுது தென்றா
இரண்டும் கூற்றத் தியம்பிய
பொழுதே" [6]

பெரும்பொழுதும் சிறுபொழுதுமாகிய பன்னிரண்டுள் கூதிரும் முன்பனியும் யாமமும் குறிஞ்சிக்குரியதாகச் சொல்லப் படுகிறது.

"அவற்றுள், கூதிர் யாமம்
முன்பனியென்றிவை
ஓதிய குறிஞ்சிக்குரிய வாகும்"7

பொழுது என்று கார், கூதிர்,யாமம் என்று குறிஞ்சித் திணைக் குறிப்பிடுவது போலவே காடு நாவலிலும் பார்க்க முடிகிறது .

இரவில் அதிக குளிர் இருக்கும் என்றும், இரவும் குளிரும் நெருங்கி வருவதாகக் காடு நாவலில் குறிப்பிடப் பட்டுள்ளது. திடீரென மழை வந்து பெரிய நீர்த்துளிகளாக உதிர ஆரம்பித்தால் காலை வரை பெய்து கொண்டே இருக்கும் என்றும், அந்த மழையில் தலைவன் தலைவி நனைந்து இன்புறும் காட்சிகள் சங்க இலக்கியக்காட்சிகளை ஒத்திருக்கின்றன.

கருப்பொருள்

கருப்பொருள் என்பன ஒவ்வொரு நிலத்திற்கும் உரியதான தெய்வம், மக்கள், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண், நீர், பூ, யாழ், ஊர், போன்றவற்றைக் கொள்ளலாம். குறிஞ்சித் திணையில் வரும் கருப்பொருள் காடு நாவலில் காணமுடிகிறது.

"விறற் சேய் பொருப்பன்
வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயில் மறப்புலி
குடாவடி கறையடி சீயஞ் சிறுகுடி
யருவி நறுஞ்சுனை வேங்கை
குறிஞ்சி காந்தள்
ஆரந் தேக்கில் அசோகம் நாகம்
வேரல் ஐவனந் தோரை யேனல்
கறங்கிசைத் தொண்டகங்
குறிஞ்சி யாழ் குறிஞ்சி
வெறிகோள் ஐவனம் வித்தல்
செறிகுரந் பைந்திணை காத்தல்
சேந்தேன் அழித்தல்
செழுங்கிழங் ககழ்தல் முழங்குவீ
டிருவியோடு கொழுஞ்சுனை
யாடல் குறிஞ்சிக்
கருப்பொருளே"[8].

தெய்வம்

குறிஞ்சித் திணைக்குத் தெய்வம் முருகன், அது போல காடு நாவலில் மலையன்மார்கள் "செறுகாடனை"[9] வழிபட்டனர் என்றும், அவர்களே அத்தெய்வத்திற்குப் பூசாரி என்றும் மலையே அத் தெய்வத்தின் உடைமை என்றும் காட்டப்படுள்ளது.

மக்கள்

மலையில் "மலையன் குல மக்கள்"[10] வாழ்ந்து வந்தனர் என்று காடு நாவலில் காணமுடிகிறது.

புள்

கிளி, காகம், பருந்து, கொக்கு போன்ற பல பறவைகளை நாவலில் காண முடிகிறது. "புதர் கூட்டங்களிலிருந்து செந்தலைக் கிளிக் கூட்டமொன்று எழுந்து சிறகுகளைக் காற்றில் துழாவிக் கொண்டு கலகலவென்று பேசியபடி காட்டுக்குள் சென்று மறைந்தன"[11] என்று பறவைகள் குறித்த செய்திகள் இந்நாவலில் இடம் பெற்றுள்ளன .

விலங்கு

மிளா, நரி, மான், யானை, கரடி, காட்டெருது, மரநாய், உடும்பு ,முயல், பன்றி, குரங்கு, செந்நாய், சிறுத்தை, போன்ற பல விலங்குகள் நாவலில் இடம் பெற்றுள்ளன. "பனித்திரை போர்த்திய காட்டுக்குள் செந்நாய்க் கூட்டம் புதர்களுக்குள் மறைந்து மெல்ல சென்று கொண்டிருந்தது" மலையன், செறுகாடன், மஞ்சணாத்தி, கிரிதரன், நீலி"[12]. என்று விலங்கினைப் பற்றிய பல செய்திகள் இடம்பெற்றுள்ளன.

நீர்

குறிஞ்சித் திணையிலுள்ளது போல காடு நாவலிலும் அருவி நீரையும், சுனை நீரையும் மக்கள் பயன்படுத்துகின்றனர்.

பூ

கொன்றைப்பூ, மாம்பூ, வாகைப்பூ, புன்னைப்பூ, வேங்கைப்பூ, காந்தள்பூ போன்ற பூக்கள் மலையில் பூத்துக் குலுங்கி கிடக்கின்றன. மலையத்தியர்கள் பூக்களைத் தான் பொன் என்று குறிப்பிடுகின்றனர்.

காடு நாவலிலும் குறிஞ்சிப்பூ பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. "மழை கழிஞ்ச ரெண்டாம் வெயிலில் குறிஞ்சி பூக்கும். பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு முறை தான் பூக்கும்"[13] என்ற செய்தியும் இடம் பெற்றுள்ளது.

மரம்

அயனிமரம், மஞ்சணாத்தி, கோங்கு, காட்டு நெல்லி, வேங்கை, காட்டுக் கொன்றை, பூவரசு, நுணா மரம், வாதா மரம், காட்டு நாரகம், கருவேலமரம், மரவல்லிமரம், வில்லி மரம், பெணம்புளி என்று பல வகையான மரங்கள் நாவலில் இடம் பெற்றுள்ளன.

உணவு

மரச்சீனி கிழங்கு, மரநாய், குளக்கோழி, உடும்பு போன்றவற்றைத் தீயில் சுட்டுத் தின்றனர். மூங்கில் அரிசி, மலை நெல் போன்றவற்றையும் சேர்த்து கஞ்சி காய்த்துக் குடித்தனர்.

தொழில்

தேன்எடுத்தல் "மந்திரவாதம், ஓதிக் கெட்டுயது, அறுப்பு நோம்பு, கலப்பை தொட்டு கெட்டுயது"[14] எனப் பல தொழில்களைச் செய்தனர்.

உரிப்பொருள்

உரிப்பொருள் என்பது ஒழுக்கமாகும். அதாவது அந்தந்த நிலத்துக்கு உரிய மக்களது வாழ்வியல் ஒழுக்கலாறுகளை உரிய பொருள் என்பர் .

குறிஞ்சிக்குரிய உரிப்பொருள்

"புணர்தலும் பிரிதலும்
இருத்தலும் ஊடலும்
இரங்கலும் இவற்றி னிமித்தமு
மெனவாங்
கெய்திய உரிப்பொருள் ஐயிரு
வகைத்தே"

இதில் குறிஞ்சித் திணைக்குப் புணர்தலை உரிப் பொருளாகக் கொள்வர். ஏனெனில் குறிஞ்சித் திணையில் பெரும்பான்மை களவில் புணர்ச்சி ஆகும். மலையும் மலை சார்ந்த இடத்தையும் பண்டையோர் புணர்ச்சிக்குரிய இடமாகத் தேர்ந் தெடுத்தனர். மலையின் இயற்கை வளம் காமத்தை வளர்க்கும் சூழ்நிலையாக அமைந்தது குறிஞ்சி நிலத்திற்குச் சிறந்த கூதிராகிய ஐப்பசி கார்த்திகை திங்களும், இடையாமம் இருள் தங்கித் துளி மிகுவதால் தலைவனுக்குக் களவில் சேர்த்தல் அரிதாகும். எனவே களவுக் கூட்டம் குறிஞ்சி நிலத்திற்கு வைக்கப் பெற்றுப் புணர்ச்சிக்குச் சிறந்த நிலைகளன் குறிஞ்சியாயிற்று.

களவெழுக்கத்தின் நிகழும் புணர்ச்சியை நான்கு வகையாக வகைப் படுத்துகிறார் நாற்கவிராச நம்பி

1. இயற்கைப் புணர்ச்சி
2. இடந்தலைப்பாடு
3. பாங்கற் கூட்டம்
4. பாங்கியர் கூட்டம்

இதில் இயற்கைப் புணர்ச்சி என்பது அன்புடை தலை மக்கள் தம் மனக் குறிப்பு இல்லாமல் ஒருவரை யொருவர் எதிர்பாராத நிலையில் எதிர்ப்பட்டு கூடும் கூட்டம் ஆகும்.

காடு நாவலிலும் கிரிதரன் நீலியை எதிர்பாராத விதமாகச் சந்திக்கின்றான். இயற்கைப் புணர்ச்சியில் தலை மகனுக்குப் பெருமையும், உரனும் நிலைபெற்ற குணங்கள் ஆதலாலும் தலை மகளுக்கு அச்சம், மடம், நாணம் என்பன நிலை பெற்ற குணங்களாதலாலும் உள்ளப் புணர்ச்சி முதலில் நிகழ்கிறது .

உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்த பின் காட்சி, வேட்கை, ஒருதலை உள்ளுதல் மெலிதல் ஆக்கஞ்செப்பல், நாணுவரை இறத்தல் நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு முதலான 10 அவத்தைகளும் ஒருங்கே நிகழ்ந்த பின்னரே மெய்யுறும் புணர்ச்சி நிகழும்.

"காட்சி முதலாச் சாக்கா டீறாக்
காட்டிய பத்துங் கைவரு
மெனினே
மெய்யுறு புணர்ச்சி எய்த்தர்
குறித்தே"[16]

காட்சி

தலைவன் தலைவியைத் தனியிடத்தில் காண்பது காட்சி என்கிறார் நாற்கவிராச நம்பி. காடு நாவலிலும் தலைவனான கிரிதரன் தலைவியான நீலியை நீர் நிலைகளில் பார்க்கிறான். தேவமகளோ, பூலோக மகளோ என்று ஐயம் ஏற்படவே மீண்டும் பார்க்கிறான் .

வேட்கை

வேட்கை என்பது அவளைப் பெற

விரும்பும் உள்ளக் கருத்து நாவலிலும் தலைவியைக் கண்ட தலைவன் அவளைப் பெற விரும்புகிறான் .

ஒருதலை உள்ளுதல்

ஒருதலை உள்ளுதல் இடைவிடாது நினைப்பது ஆகும். கதைத் தலைவனான கிரிதரன் கதைத் தலைவியான நீலியைப் பார்த்த பிறகு அவனால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. மனம் பதறிய படியே இருந்தது. இரவும் பகலும் அவளையே நினைத்துக் கொண்டிருக் கிறான்.

மெலிதல்

கிரிதரன் நீலியை நினைத்து நினைத்து அவனுக்கு நோய் ஏற்பட்டு மெலியும் நிலை வருகிறது.

நாணு வரையிறத்தல்

கதைத் தலைவன் தன் நாணத்தை விட்டுத் தலைவியைத் தேடிச் செல் கின்றான்.

ஆக்கம் செப்பல்

ஆக்கம் செப்பல் என்பது தன் வருத்தத்தைப் பிறருக்கு உரைத்தலாகும். கதைத்தலைவனான கிரிதரனும் தன் நிலையினை அய்யரிடம் கூறுகின்றான்.

நோக்குவ எல்லாம் அவையே போறல்

காட்டில்கதைத்தலைவன்தலைவியைத் தேடிச்செல்லும்பொதுகாணும்பொருட்கள் அனைத்தும் அவள் உறுப்புகள் போல தோன்றியதாக நாவலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மயக்கம்

அவளில்லாமல் நானில்லை என்ற நிலை கிரிகரன் வாழ்வில் ஏற்படுகின்றது.

சாக்காடு

அவள் இல்லை என்ற நிலை வந்தால் தானும் இறந்து விடுவேன் என்று கூறும் நிலையில் கிரிதரன் வாழ்க்கை அமைகிறது.

இடந்தலைப்பாடு

தலைப்படுதல் - எதிர்ப்படுதல், தலைவியை முதல் நாள் சந்தித்த இடத்தில் மீண்டும் போய் தலைவியைச் சந்திப்பதாக கதை அமைகிறது.

முடிவுரை

குறிஞ்சித் திணையில் அமைந்துள்ள இயற்கை சூழல்கள் காடு நாவலிலும் இடம் பெற்றுள்ளன. உரிப்பொருள்களின் ஒழுக்கமான களவு வாழ்க்கையும், கருப்பொருள், உரிப்பொருள், முதற் பொருள் ஆகியவற்றைப் பற்றியும் காடு நாவலில் காண முடிகிறது. மேலும், தொல்காப்பியர் மெய்யூறு புணர்ச்சியால் நடைபெறும் பத்து அவத்தைகளும் தலைவிக்கு நிகழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் காடு நாவலில் தலைவனுக்கு இந்நிகழ்வு நடைபெறுவதைப் பார்க்க முடிகிறது. மொத்தமாக ஆராய்ந்தால் குறிஞ்சித் திணையின் அனைத்து கூறுகளையும் உள்ளடக்கியே காடு நாவலினை ஆசிரியர் படைத்துள்ளார் என்பது புலனாகிறது.

அடிக்குறிப்புகள்

1. நம்பி அகப் பொருள் விளக்கம் – நூற்பா எண் –7
2. நம்பி அகப் பொருள் விளக்கம் – நூற்பா எண் –8
3. நம்பி அகப் பொருள் விளக்கம் – நூற்பா எண் –11
4. காடு நாவல் – பக்கம் – 60
5. காடு நாவல் – பக்கம் – 87
6. நம்பி அகப் பொருள் – நூற்பா எண் – 7
7. நம்பி அகப் பொருள் – நூற்பா எண் – 13
8. நம்பி அகப் பொருள் – நூற்பா எண் – 20
9. காடு நாவல் – பக்கம் – 167
10. காடு நாவல் – பக்கம் – 168
11. காடு நாவல் – பக்கம் – 48
12. காடு நாவல் – பக்கம் – 50
13. காடு நாவல் – பக்கம் – 403
14. காடு நாவல் – பக்கம் – 100
15. நம்பி அகப் பொருள் – நூற்பா எண் – 25
16. நம்பி அகப் பொருள் – நூற்பா எண் – 36

துணை நூற்பட்டியல்

1. அருணாச்சலம் பிள்ளை மு, அகத்திணையியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625021
2. நாற்கவிராசர் நம்பி –அகப்பொருள் விளக்கம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை –18.
3. ஜகந்நாதன் கி. வா – தமிழ் நவாலில் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம், சென்னை –8
4. புலியூர்க் கேசிகன் – தொல்காப்பியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சி.ஐ.டி இரண்டாம் முதன்மைச் சாலை, வளாகம், தரமணி, சென்னை – 600113

தமிழாற்றுப்படையில் தொல்காப்பியர்

முனைவர் ஆ. இரமேஷ்

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)

அரும்பாக்கம், சென்னை – 600 106.

ஆய்வுச்சுருக்கம்

தமிழாற்றுப்படை இருபத்தியோராம் நூற்றாண்டு தமிழர்களைச் சங்க இலக்கிய காலத்தில் இருந்து வரும் முன்னோர் களிடம் ஆற்றுப்படுத்துகிறது. யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கூற்றுக்கு ஏற்பக் கவிஞர் வைரமுத்து அவர்கள் ஆற்றுப்படை இலக்கணத்தில் இருந்து தமிழாற்றுப்படை வேறுபட்டு நிற்கிறது. வள்ளலிடம் பரிசு பெற்று திரும்பும் வாணன் ஒருவன் தன்வழி பாதையில் எதிர்ப்படும் பாணனையோ கூத்தரையோ விரலியையோ அவ் வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படை இலக்கணம். இதிலிருந்து மாறுபட்டு அறிவுச் செல்வத்தைப் பெரும் பொருட்டு இன்றைய தமிழர்களை முன்னோர்களின் அறிவு செல்வத்தோடு ஆற்றுப் படுத்துகிறார். இது சாதாரண குடிமக்கள் முதல் அறிஞர்கள் கல்வி யாளர்கள் ஆய்வாளர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் என அனைவரும் பயனடையும் வகையில் ஆசிரியர் தமிழாற்றுப்படை அளித்துள்ளார். தொல்காப்பியரின் அறிவுச் செல்வத்தைக் காணும் நோக்கில் இக்கட்டுரை அமைக்கப் பெற்றுள்ளது.

திறவுச்சொற்கள்

1. காலவெளி – காலப்போக்கில்
2. கருப்பொருளாக – பாடுபொருளாக
3. திரவியம் – கண்டுபிடிப்பு

முன்னுரை

தொல்காப்பியம் ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறுகிறது. வறுமை உற்ற ஒருவர் வள்ளல் ஒருவரிடம் சென்று தன் வறுமையைப் போக்கும் அளவிற்கும் மேல் செல்வதைப் பெற்றுத் திரும்பி வரும் வழியில் வறுமையோடு எதிர்ப்படும் கூத்தர், பாணர், விறலியர், பொருநர் முதலியோரை அவ்வள்ளலிடம் செல்லுமாறு அறிவுறுத்தி வழிப்படுத்து வதாகும். தமிழாற்றுப்படை என்பது தமிழரின் அறிவுச் செல்வத்தைத் தமிழர்கள் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழர்களை முன்னோர் விட்டுச் சென்றுள்ள அறிவுச் செல்வத்திடம் ஆற்றுப் படுத்துவதாகும். இந்த நோக்கத்தில் வெளிவந்துள்ள தமிழாற்றுப்படை என்ற

நூலில் தொல்காப்பியர் என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள செய்திகளைக் கருப் பொருளாகக் கொண்டு இக்கட்டுரை ஆற்றுப்படைக்கு உரிய கூறுகளை ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

உலக மொழிகளின் வரிசையில் தமிழ் மொழி

மனித இனம் தன் அறிவை வெளிப் படுத்தவும், தன் அறிவை வளர்த்துக் கொள்ளவும் உருவாக்கிய மாபெரும் கலையாகவும், அறிவியலாகவும் விளங்குவது மொழி என்ற ஒன்றே ஆகும். இந்த மொழியானது மக்களை இயக்கு கிறது. மக்களால் மொழியும் இயக்கப் படுகிறது. மொழி தம் தடம் பதித்தும் தடுமாறாமலும் நிலைபேறும் பெறுகிறது. சில மொழிகள் கால திருப்பங்களில் சில மொழிகள் கவிழ்ந்து விடுகின்றன. சில மொழிகள் கால விளைவுகளில் தடம் புரள்கின்றன. சில மொழிகள் விபத்துக் குள்ளாகி விழுகின்றன. வளர்சிதை மாற்றத்திற்கு உள்ளாகாத சில மொழிகள் முழுமையற்று மாறுகின்றன. இவ்வாறு மொழிகளின் வரலாற்றின் இயல்புகளை எடுத்துக் கூறும் நூலாசிரியர் லத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரூ போன்ற மூத்த மொழிகளெல்லாம் மேற்சொன்ன ஏதோ கண்டறியப்படாத ஒரு காரணத்தினாலும் உலக வழக்கு அழிந்து போயின. ஆனால் மேற்கூறிய காரணங்களையும் வெவ்வேறு காலகட்டங்களில் எதிர்கொண்டு இன்னும் உயிரோடு விளங்குவதும் உயிர்ப்போடு துலக்குவதும் தமிழ்மொழி என்ற பேர் உயிரி மட்டும்தான் எனக் குறிப்பிட்டு பேசுகின்றார்[1]. தமிழ் மொழிக்கு எத்தனை தடைகள் வந்தாலும் அத்தனை தடை களையும் உடைத்தெறிந்து இன்றுவரை கன்னித் தமிழாகக் கலை அணிகலன் களோடு அழகு மிளிர மலர்ந்து வளர்ந்து வருகிறது.

தொல்காப்பியம்

ஆரியர் வருகையினால் தமிழருக்கு ஏற்படவிருந்த பின்னடைவை வீழ்த்தி தூக்கி நிறுத்தியது தொல்காப்பியம். தொன்மைகளைக் காத்து நிற்கும் தொல்காப்பியம் தொல் + காப்பு + இயம் தொல் மரபுகளைக் காப்பதற்கே இயற்றப் பெற்ற இலக்கணம் என்று கொள்வது ஒருபோதும் உண்மைக்குப் புறம்பாகாது என்று நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.[2]

தொல்காப்பியம் முதல் நூல்

தொல்காப்பியம் முதல் நூலா வடமொழி சார்பற்ற வழி நூலா என்ற வினாவிற்கு ஆதாரமாக "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி"[3] என்று பனம்பாரனார் பாடியுள்ள பாயிர அடிகளை எடுத்துக் காட்டி ஐந்திரம் என்பது இலக்கண நூல் அல்ல. அது சமயம் சார்ந்த நூலாகும். ஐந்திரம், ஆக்கினேயம், காணாபத்தியம், சைவம், வைணவம், சாக்கியம் ஆகிய அறுவகைச் சமய நூல்களில் ஒன்றாகும்.

"செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முதல் நூல் கண்டு முறைப்பட எண்ணி"[4]

என்று பனம்பாரனார் பாடியுள்ள அடிகளைக் கொண்டு தமிழகத்தின் எல்லைகளுக்கு உட்பட்ட முதல் நூல்களை முதல் நூலாகக் கொண்டது முழு உண்மையாகும் என்றும் தொல் காப்பியமே முதல் நூலாகும் என்று மேலும் விளக்கிச் செல்கிறார்.

ஐந்திரம் ஐந்திறம்

ஐந்திரம் என்பது அறுவகைச் சமயங் களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளதைக் குறிப்பிட்ட ஆசிரியர் ஐந்திறம் என்று குறிப்பிட்டு ஐந்து இலக்கணங்களைக் குறிப்பதாகும் என்று கூறி அறிஞர்களின் கருத்துக்களை எடுத்துக்காட்டுகிறார்[5].

பரிதிமாற்கலைஞர்

எழுத்து, சொல், பொருள் என்ற மூவிலக்கணமாகத் தானே தொல்காப்பியம் விளங்குகிறது என்பாற்குப் பரிதிமாற் கலைஞரின் கருத்தை விளக்கிக் காட்டுகிறார்.

ஐவகை இலக்கணங்கள் ஆவண எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன இவ்வைந்தனுள்ளே தொல் காப்பியத்தில் முதல் மூன்று சில இயல் களில் விரித்துக் கூறுகிறார். செய்யுளியல் என்றதன் கண்ணே யாப்பை விரித்து ஓதியும் உவமவியல் என்றதன் கண்ணே அணியை எடுத்து ஓதியும் ஓராற்றால் ஐவகை இலக்கணமும் கூறலாயினர் என்று பரிதிமாற்கலைஞர் விளக்கியுள்ளார்.[6]

தயிரும் வெண்ணெயும் பாலுக்குள் நிறைந்திருப்பது போல யாப்பும் அணியும் தொல்காப்பியத்துக்குள் தோய்ந் துறைகின்றன. ஆகவே தொல்காப்பியம் முதல் நூல்தான். மூத்த தமிழ்க்குடியின் மூளை சான்றுதான். தமிழினத்தின் ஐயந்திரிபற்ற ஆதி அறிவுதான் தொல் காப்பியம்.

தொல்காப்பியரின் திட்டமிடல்

எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்கள். ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒன்பது இயல்கள் என 27 இயல்கள். இளம்பூரணர் உரையின் வழி 1595 நூற்பாக்கள். நச்சினார்க்கினியர், பேராசிரியர் இவர்களின் உரை வழி 1611 நூற்பாக்கள்.

மொழியும் எழுத்தும்

மொழி ஒலியை அடிப்படையாகக் கொண்டவை என்பதால் எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானவை. ஆனால் எழுத்து மனித இனத்திற்கு மட்டுமே உரியதாகும். எனவே தொல் காப்பியர் எழுத்தை முதலில் வைத்தார். தொல்காப்பியத்தைத் தொடர்ந்து எழுந்த மூவிலக்கணங்களும் ஐந்திலக்கணங்களும் புத்திலக்கணங்களும் எழுத்தையே முதலில் கூறுகின்றன.

மொழி

மொழி பேச்சுமொழி, எழுத்துமொழி என இரண்டு பிரிவுகளாக அமைந்துள்ளன. அவற்றுள் பேச்சுமொழி ஒளிப்பதிவு கண்டறியாத காலம்வரை தன்மை முன்னிலைக்கு உரியதாக விளங்கியது. (நிகழ்காலத்தில் மட்டுமே பயன்படுத்தக் கூடியது). எழுத்துமொழி முக்காலங் களையும் உள்ளடக்கியது. தன்மை,

முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களுக்கும் உரியதாகும். கருத்துக் களைக் காலம் கடந்தும் கொண்டு சேர்ப்பது. மொழி வளர்ச்சிக்கும் மொழி நிலைபெறுவதற்கும் நிலைபேறு அடையச் செய்வதற்கு என்று விளக்கிச் செல்கிறது.

எழுத்துப் பதிவின் மேன்மை

எழுத்து என்பது ஒளியை ஊற்றி வைக்கும் கொள்கலன். அது அறிவின் சேமிப்பு கிடங்கு. தலைமுறைகளுக்கு ஆன ஞானத்தைக் கடத்தி ஏகும் கருவி என்கிறார். இப்படிப் பல்வேறு மேன்மை களை விலக்கிச் செல்கிறார். மேலும் மொழியின் எழுத்துகளை வகுப்பதே ஒரு கணிதம். ஓர் ஒலி விஞ்ஞானம். தொல் காப்பியர் ஓர் ஒலி விஞ்ஞானி என்று தொல்காப்பியருக்குப் பெருமை சேர்க்கிறார்.

எழுத்துக்களின் இலக்கணம்

ஒன்பது இயல்களைக் கொண்டு முப்பத்து மூன்று(33) எழுத்துகளை விளக்கியுள்ளார் தொல்காப்பியர். 'அ' முதல் 'ன்' வரை முப்பது எழுத்துகள் உயிர் எழுத்துகள் 12. மெய் எழுத்துகள் 18 = 30 முதலெழுத்துகள்.

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகும். தனித்து இயங்கவல்லது உயிர். தனித்து இயங்க இயலாதது மெய்.

எழுத்ததிகாரத்தில் சிறப்பு

எழுத்துகளின் பிறப்பு இலக்கணமே அதன் சிறப்பு இலக்கணம். மொழிக்கு முதலாக வரும் எழுத்துகள் மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எவை எவை என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. அதே சட்டம் தான் இன்றுவரை நிலவு கிறது என்று வைரமுத்து பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்7.

தமிழின் நெகிழ்வுத்தன்மை

உச்சரிப்பு வடசொல்லின் ஒலியா கவும் சொற்கள் தமிழ் எழுத்து களாகவும் வரவேண்டும் என்று தொல்காப்பியர் எழுத்தாணையம் நிறுவினார்.

வடசொற் கிளவி வட எழுத்து ஓரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே.[6]

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

இலக்கணச் சட்டம்

பங்கஜம் - பங்கயம் ஆனதும் லக்ஷ்மன் - இலக்குவன் ஆனதும் ஜானகி - சானகி ஆனதும் ராஜராஜன் - இராசராசன் ஆனதும் மகாராஷ்டிரம் - மராட்டியம் ஆனதும் ஹைகோர்ட் - ஐகோர்ட் ஆனதும் என்று எழுதப்படுவதும் ரஷ்யா - உருசியா ஆனதும் தொல்காப்பியர் வகுத்த மொழி மரபின் தொடர்ச்சி ஆகும்.

காலவெளியில் அரசர்களின் எத்தனையோ அதிகாரங்கள் மாண்டு அழிந்து போயின. ஆனால் தொல் காப்பியம் இயற்றிய அதிகாரங்கள் இன்று வரை ஒரு மொழியினை ஆட்சி செய்து வருகின்றன.

2018 இந்திய அரசமைப்புச் சட்டம் (68 வயது) 101 முறை திருத்தப்பட்டு

இருக்கிறது. ஆனால் 3000 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட தொல்காப்பியரின் தமிழ்மொழிச் சட்டம் இன்று வரை உயிரோடு இயங்கி வருகிறது. ஒருமுறை கூட திருத்தப்படவில்லை. இது சட்டம் வகுத்து வைத்த தொல்காப்பியருக்குப் பெருமை. கட்டிக் காத்த தமிழருக்கும் அது பெருமை என்று வைரமுத்து பெருமிதத் தோடு குறிப்பிடுகிறார்.[7]

பொருள், சொல், எழுத்து.

பொருளை மூலமாகக் கொண்டு சொல் பிறந்தது. சொல்லை மூலமாகக் கொண்டு எழுத்துப் பிறந்தது. "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"8 என்று தொல்காப்பியர் அறைந்து சொல்கிறார்.

இன்றும் ஆழ்ந்து பார்த்தால் எந்த ஒலி எழுத்திற்கு அடங்குகிறதோ அதுவே சொல்லாகிறது.

கடலோசை, காற்றோசை, இடி யோசை, மழை ஓசை, பறவை ஓசை, விலங்கோசை, ஆற்றோசை, அருவி யோசை இசைக்கருவிகளின் இன்னோசை, முத்தம், சிரிப்பு, முனகல், தும்மல் இவை யெல்லாம் எழுத்துகளில் அடங்குவதில்லை.

திணை

மனிதர் உயர்திணை, மனிதர் அல்லாதவை எல்லாம் அஃறிணை.

இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பல உயிர் உள்ளன, உயிர் அல்லன என்ற அனைத்தையும் உயர்திணை ஆகவே கொண்டு ஆண், பெண் என்ற இரு பிரிவுக்குள் அடக்கிவிட்டன. சித்திய மொழி குழுவினுள் பல எல்லா வற்றையும் அஃறிணையாகவே கொண்டு ஒன்று பல என்ற இரு பிரிவுகளுக்குள் அடக்கி விட்டன. தமிழ் ஒன்றுதான் பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுத்து அதனை உடைய மக்களை உயர்திணை எனக் கூறியுள்ளது என்று தமது தொல்காப்பிய ஆராய்ச்சியில் அறிஞர் சி. இலக்குவனார் கூறியுள்ளார். சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என்று நான்காகப் பிரித்த போது மொழியின் ஒட்டு மொத்தக் கட்டமைப்பும் ஒரு முடிவுக்கு வந்து விட்டது. பொருளை உணர்த்துவது பெயர்ச் சொல். அப்பொருளின் தொழிலைச் சொல்வது வினைச்சொல். பெயருக்கும் வினைக்கும் இடையே மையமாய் இயங்குவது இடைச் சொற்கள். பொருளின் பண்பு கூறுவது உரிச்சொற்கள் என்ற சிவஞான முனிவரின் உரையை உள்வாங்கி உணரத்தக்கது என்று வைரமுத்து குறிப்பிடுகிறார்.

பால்

ஆண்பால், பெண்பால் , பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனத் தொல் காப்பியர் ஐந்தாகக் குறிப்பிட்டுள்ளார்.

சொற்கள்

பெயர், வினை, இடை, உரி என்று நான்காகப் பகுக்கும்போது ஒரு மொழியின் மொத்தக் கட்டமைப்பும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. பொருளை உணர்த்துவது பெயர்ச்சொல். அப்பொருளின் தொழிலைச் சொல்வது வினைச்சொல். பெயருக்கும்

வினைக்கும் இடையே மையமாக இயங்குவது இடைச்சொல். பொருளின் பண்பு கூறுவது உரிச்சொல். சொல்லதி காரத்தில் ஒன்பது இயல்களில் இந்த உலகப் பொருள்கள் கட்புலப் பொருள் என்றும் கருத்துப் பொருள் என்றும் இரு வகைப்படும். அவற்றை வகைப்படுத்தி முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் என்று தொல்காப்பியர் பகுத்தறிவால் பகுத்துப் பகுத்து வகைப்படுத்துகிறார்.

முதற்பொருள் எதுவென்று முன் மொழிந்தது தொல்காப்பியரின் மூளைப் பழம் பிழிந்த சாராகும். உயிர் தோற்றத்தின் மூலமாகிய இந்த நிலம் என்ற உருவமும் இந்த நிலவியல் வாழ்வை இயக்குகின்ற காலம் என்ற அருவமும் முதற்பொருள் என்பது தொல்காப்பியரின் அசைக்க முடியாத அறிவின் ஆணையாகும்.

முதல் எனப்படுவது நிலம்
பொழுது இரண்டின்
இயல்பு என மொழிப இயல்பு
உணர்ந்தோரே. 9

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 400 ஆண்டுகளாய் ஐரோப்பிய அமெரிக்க அறிவியல் உலகமும் ஐன்ஸ்டின் முதலாக ஸ்டீபன், ஹாக்கிங்ஸ் ஈராக விளங்கிய விஞ்ஞானிகளும் டைம் அண்ட் ஸ்பேஸ் (TIME AND SPACE) என்று தேடிக் கண்டறிந்த திரவியத்தை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிலமும் பொழுதும் முதற்பொருள் என்று முன்மொழிந்த தொல்காப்பியரே முதல் அறிவியலுக்கு வித்திட்டவர் ஆகிறார்.

முதற் பொருள்களில் கரு கொள்வன எல்லாம் கருப்பொருள்கள். அந்தக் கருப்பொருள்களின் ஒழுகலாறுகள் உரிப்பொருள்கள் என்று வகைப்படுத்தி அதில் மொத்த உலகத்தையும் இந்த மூன்று பகுப்புகள் அடக்கி முடிக்கிறார் அறிஞர் பெருமான்.

ஒன்பது இயல்களில் தமிழர்களின் காதலும் வீரமும் நிலமும் பொழுதும் வாழ்வும் தொழிலும் உணவும் உணர்வும் கலையும் கல்வியும் வழக்கமும் ஒழுக்கமும் உறவும் பிரிவும் அறமும் மறமும் மரபும் மாற்றமும் யாப்பும் அணியும் என எல்லாப் பொருள்களையும் இலக்கணப்படுத்தியிருக்கிறார் தொல்காப்பியப் பேராசான்.

தமிழுக்கு என்றே வாழ்க்கையைக் கரைத்துக் கொண்ட முன்னோடிகள் பலரும் தொல்காப்பியத்தை எழுத்து எழுத்தாக இடையிட்டு எழுதி போந்தனர். தொல்காப்பியத்தில் தலை வாசலில் ஒரு கோலம் மட்டுமே வரைகிறது என்று வைரமுத்து தன்னடக்கத்தோடு குறிப்பிட்டு; முன்னோர்கள் தொட்டுக் காட்டாத ஒன்றைத் தொட்டுக் காட்ட விழைகிறேன் என்று உலகத்தின் தோற்றம் பற்றிய மதங்களின் கருத்துகளை எடுத்துக்கூறி அறிவியலுக்கு அவை பொருந்தவில்லை என்பதை எடுத்துக் காட்டி தொல்காப்பியரின்,

"நிலம் தீ நீர் வளி விசும்பொடு
ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்"[10]

என்று வரையறுத்துக் கூறுகிறது. காப்பியத்தின் கருத்து அறிவியலோடு

என்றும் பொருந்தி அமைந்துள்ளது என்று நிறைவு செய்கிறார்.

முடிவுரை

தமிழின் பெருமையும் தமிழரின் பெருமையும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. ஆற்றுப்படை இலக்கணத்திலிருந்து தமிழாற்றுப்படை நிகழ்காலத் தமிழரை முன்னோர் விட்டுச்சென்றுள்ள அறிவுச் செல்வத்தோடு ஆற்றுப் படுத்துகிறது. பல்வேறு காலச்சூழலில், பண்பாட்டுச் சூழலில், அரசு மாற்றங்களில் மொழிகளின் வீழ்ச்சியிலும் தமிழ் தலைநிமிர்ந்து கோலோச்சுகிறது. அதற்குத் தொல்காப்பியரின் பரந்த அறிவு இன்றுவரை காரணமாகிறது. பொருள், ஒலி, சொல், எழுத்து ஆகிய வரிசை முறையில் இந்த உலக மொழிகள் கட்டமைக்கப்படுவதை இந்தக் கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. தொல்காப்பியரின் பரந்துபட்ட அறிவு தொல்காப்பியத்தில் ஆழமாகச் செல்வதையும் இக்கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. உலக மொழிகளின் வரிசையில் தமிழின் தனித்தன்மையை இக்கட்டுரை விளக்குகிறது.

அடிக்குறிப்புகள்

1. வைரமுத்து, தமிழாற்றுப்படை, 2019.
2. மேற்படி.,
3. பனம்பாரனார், தொல்காப்பியப் பாயிரம்.
4. மேற்படி.,
5. வைரமுத்து மேற்படி.,
6. தொல்காப்பியம், நூற்பா எண். 884.
7. வைரமுத்து. மேற்படி.,
8. மேற்படி.,நூற்பா எண். 640.
9. மேற்படி., நூற்பா எண்.950.
10. மேற்படி., நூற்பா எண். 1589.

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர், தொல்காப்பிய உரைகள் எழுத்து, சொல், பொருள்.
2. சேனாவரையர், தொல்காப்பிய உரை சொல்லதிகாரம். முல்லை நிலையம், சென்னை17. பதிப்பாண்டு– 2006.
3. நச்சினார்க்கினியர், தொல்காப்பிய உரை – சொல்லதிகாரம். சாரதா பதிப்பகம் சென்னை –14. பதிப்பு ஆண்டு ஜூன் 2009.
4. வைரமுத்து, தமிழாற்றுப்படை, சூர்யா லிட்ரேச்சர் (பி)லிட், பதிப்பு ஆண்டு ஜூன் – 2019.

அலைவாய்க் கரையில் நாவலில் பெண்ணியக் கோட்பாடுகள்

க. இராமசுதா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
மாநிலக்கல்லூரி (தன்னாட்சி), சென்னை – 600 005.
அலைபேசி – 9952890882

ஆய்வுச் சுருக்கம்

பெண்ணியம் என்பது உலகளாவியது ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிப்பதற்கு ஏற்பட்டது. பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதாக அமைவதே பெண்ணியம் ஆகும். அலைவாய்க் கரையில் என்ற புதினத்தின் ஆசிரியர் இராஜம் கிருஷ்ணன் அவர்கள் பெண்களின் சிக்கலை மையமாகக் கொண்டு எழுதக்கூடியவர். அவரது படைப்புகளில் பெண்ணியச் சிந்தனை வெளிப்படும். அலைவாய்க் கரையில் என்ற நாவலில் வரும் பெண் கதா பாத்திரங்கள் ஒவ்வொன்றும் மாறுபட்ட சிந்தனையையும், குணாதிசயங்களையும் கொண்ட படைப்புகளாக வலம் வருகின்றன. ஆசிரியரின் அணுகுமுறை என்ன ஒவ்வொரு கதாபாத்திரத்தின் வெளிப்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

பெண்ணியம், குணாதிசயங்கள், பிறழ்வு, கன்னியாஸ்திரி, ஆணாதிக்கம்.

முன்னுரை

தமிழ்ப்பெண் எழுத்தாளர்களில் பன்முக ஆற்றலும் நவீனச் சிந்தனையும், சமூகத்தில் நடக்கக்கூடிய அவலங்களை தன்னுடைய புனைகதை மூலம் வெளிப் படுத்தி அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்தவர் இராஜம் கிருஷ்ணன். சமூகவியல் பார்வையுடன் கூடிய மார்க்சிய நெறியை அடிப்படையாகக் கொண்டு இவர்தம் ஆய்வுகள் அமைந் துள்ளன. பெண் எழுத்தாளர்கள் என்றால் குடும்பக் கதை எழுதுபவர்கள் என்ற பிம்பத்தை உடைத்தவர் இராஜம் கிருஷ்ணன். அலைவாய்க் கரையில் நாவாலில் பெண் படைப்புகள் அமைந்த விதம் மற்றும் ஆசிரியரின் மாறுபட்ட பெண்ணியச் சிந்தனைகளை தனது அழுத்தமான கதாபாத்திரங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்

ஏலி என்ற பெண் கதாபாத்திரத்தை மிக நேர்த்தியாகவும் சமுதாயத்தில் சில பெண்களுக்கு நடக்கும் பிரச்சினைக்குத் தீர்வு சொல்லக் கூடியவகையிலும் படைத் துள்ளார். பெண் தான் வறுமைக்கு ஆட்படுவதால் பெரிதும் பாலியல்

பிறழ்வுகளுக்கு உட்படுகிறாள் என்பதை ஏலி கதாபாத்திரத்தின் மூலம் அறியலாம். ஏலி தன் கணவனை இழந்து கன்னியாபுரம் கடற்கரையில் வசிக்கிறாள். "தற்காப்புக்கு எந்த வழியுமில்லாத ஏலி கடற்கரையில் வேட்கையைத் தீர்த்துக்கொள்ள வழி இல்லாத பரதவனுக் கெல்லாம் இரையானாள்". ஒரு நாள் மரியானுக்கு ஆட்பட்ட ஏலி அவனுக்காகவே வாழத் தொடங்குகிறாள். ஒரு ஆண் மகவை பெற்றெடுக்கிறாள். 'உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாது' என்ற பழமொழிக்கு ஏற்ப ஊர்மக்கள் ஏலியைத் தவறாகப் பேசியது.

ஏலி செய்தது தவறில்லை என்பதை உணர்த்தும் வகையில் ஏலி கதாபாத்திரத்தில் ஆசிரியர் தானே வந்து பதில் கூறும்படி சில வரிகள் அமைந்துள்ளன. "கடற் கரையில் வாலிபம் கிளர்ந்து வர ஆணாய்ப் பிறக்கும் அத்தனை மக்களும் தங்கள் உழைப்பின் சூட்டைச் சுமையாக்கிக் கொண்டு ஒரு பெண்ணைத் தேடாமல் இல்லை. கடற்கரையில் கடலின் உப்புநீர் படாமல் பனித்துளி புனிதம் காக்க இயலுமோ? ஏலி வேறு ஆண்களுக்குத் தன்னை உடன்படும்படி செய்திருந்தாலும் அது அவளுடைய ஆதரவின்மையான நிலையால் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள்தாம். காவலில்லாத தோட்டத்தில் கள்ளன் புகுந்து கனியைப் பறித்தால் அது மரத்தின் குற்றமாகுமோ?" என்று ஆசிரியர் நாவலின் இடையில் வந்து பேசுவது நேரிடையாகப் பெண்ணியச் சிந்தனையை வெளிக்காட்டியதோடு மட்டுமல்லாமல் ஏலியின் மீது தவறில்லை என்பதை உறுதிபடுத்தும் விதமாகவும் அமைந்துள்ளது.

அடுத்து வருபவள் இருதயராஜின் மனைவி கத்தின் பழமை மாறாத பெண்ணாக கணவனின் அடி, உதை பேச்சுக்கு ஆளாகி, வீட்டு வேலை, குடும்பம் என்று அடிமைவாழ்க்கையை வாழும் பெண்ணாக ஆசிரியர் படைத்துள்ளார். இது போன்ற பெண்கள் தங்களுக்கென்று எந்த முடிவும் எடுக்கத் தெரியாதவராய், வெளி உலகம் அறியாதவராய் ஒடுக்கப்பட்டுள்ளதை கத்தின் பாத்திரம் வெளிக்காட்டியுள்ளது. ஆசிரியர் இக்கதாபாத்திரத்திற்கு அழுத்தம் கொடுக்கவில்லை. பெண்ணியச் சிந்தனை வெளிப்படவில்லை. மாறாக அடிமையாக வாழும் பெண்களின் அவலத்தைச் சுட்டும் வகையில் இப்பாத்திரம் அமைந்துள்ளது.

லில்லி என்ற கதாபாத்திரத்தை ஆசிரியர் ஒரு தீவிரவாதப் பெண்ணியம் பேசும் பெண்ணாகப் படைத்துள்ளார். ஆண்கள் என்றாலே வெறுப்பான எண்ணம் லில்லிக்கு அடி மனதில் ஓடியது. தனக்குத் திருமணம் வேண்டாம் எனவும் கன்னியாஸ்திரி ஆகிவிடுகிறேன் என்று பெற்றோரிடம் கூறுகிறாள். பெண் தன் உடலை ஆணுக்குக் கொடுப்பது பாவம் என்று நினைப்பவள். மற்ற பெண்களைப் போல் திருமணம் செய்து கொண்டு நித்ய நரகத்தில் விழ விரும்பாதவள். "கல்யாணம் செய்து கொள்வதும், பிள்ளைகளைப் பெறுவதும் குடித்துவிட்டு வரும் கணவனிடம் அடிபடுவதும் ஒரு வாழ்க் கையா?" என்று தூய வாழ்க்கையை வாழ

விருப்புகிறாள் லில்லி. ஒரு பெண், ஆண் வர்க்கத்தை எதிரியாக நினைத்து தனது தூய்மையை இழக்க விரும்பாமல் காத்துக் கொள்வதைத் தீவிரவாதப் பெண்ணியம் அல்லது தூய பெண்ணியம் என ரா.பிரேமா கூறுகிறார். நாவல் ஆசிரியர் இராஜம் கிருஷ்ணன் அவர்கள் கத்தரின் என்ற கதாப்பாத்திரத்திற்கு முரணாக லில்லியைப் படைத்துள்ளார். கத்தரினுக்கு நேரிடையாக எந்தப் பெண்ணியச் சிந்தனையையும் திணிக்காத ஆசிரியர் லில்லி மூலமாக வெளிக் காட்டியுள்ளார்.

அடுத்து வலம்வரும் கதாபாத்திரம் அமலோற்பவம். இவள் தன் கணவனை இழந்து இரண்டு குழந்தைகளோடு தனித்து வாழ்கிறாள். பிறகு காளியப்பன் என்பவனை மறுமணம் செய்து கொள் கிறாள். ஊராரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகிறாள் அமலோற்பவம். ஒரு பெண் தன்னுடைய வாழ்க்கையை நிர்ணயிப்பது அவளாக மட்டும் இருக்க வேண்டும் என்பதை, உணர்த்தும் வகையில் ஆசிரியர் இக்கதாப்பாத்திரத்தைப் பதிவு செய்துள்ளார். பெண்ணியச் சிந்தனையை வெளிப்படுத்துவதாக இப்பாத்திரம் அமைந்துள்ளது.

முத்துப்பாட்டாவின் மனைவி ஸ்டெல்லா மாமி இவளை நாவல் ஆசிரியர் வேசிப் பெண்ணாகப் படைத் திருக்கிறார். ஊர் மக்கள் எல்லாம் இவளை வேசி என்றே கூறுவார்கள். ஸ்டெல்லா மாமி வசதியான வாழ்க்கை வாழ்வதற்கே இது போன்ற செயலில் ஈடுபடுகிறாள். கற்பு என்பது இரு பாலருக்கும் தான் ஒரு பெண்ணை வேசி என்று கூறும் சமூகம் ஒரு ஆணை எந்தப் பெயர் வைத்தும் கூறுவதில்லை. இதில் நாவல் ஆசிரியர் இப்பெண்ணிற்காக எந்தக் குரலும் கொடுக்கவில்லை.

அடுத்து வருபவள் நசரேனின் தங்கை மேரி. மேரிக்கு யேசம்மாளின் மகன் ஜானைத் திருமணம் செய்வதாகப் பேசி முடிக்கின்றனர். பொன்னுக்கு இருபது சவரம் நகை போட்டு பத்து இல்லைன் னாலும் எட்டாயிரம் கொடுத்தால் தான் திருமணம் நடக்கும் என்று மாப்பிள்ளை வீட்டார் கூறு கின்றனர். தன் மகனின் பொருட்டு பெண்ணை சீதனம் கேட்டுப் பெறுவது தான் இன்றைய நடைமுறை ஆகும். இங்கு பெண்ணே பெண்ணுக்கு எதிரியாகக் காட்சியளிக்கிறாள் என்று ஆசிரியர் உணர்ச்சி ததும்பப் பேசுவதாக இக்கதாப் பாத்திரம் அமைந்துள்ளது. இன்று மனிதவாழ்க்கையைவிட வாழ்க்கைச் சாதனங்களுக்குத்தான் மதிப்பு அதிகம். இதனால் ஆணைவிட பெண்ணே மிகவும் பாதிக்கப்படுகிறாள் என்ற கருத்தினை ஆசிரியர் அழுத்தமாகப் பதிவு செய்கிறார்.

அடுத்து வருபவள் ஜெயமணி ஓரளவு படித்தவள், கைத் தொழிலும் தெரிந்தவள். ஓலை நாரினால் பெட்டிகளும், தட்டுகளும் முடைந்து வீட்டிற்கு உதவியாக இருக்கிறாள். திருமணத்திற்குப் பிறகும் அவள் தன் தொழிலை விடவில்லை. யார் வருவாயும் எதிர்பார்த்து அவள் வாழவில்லை. பெண்கள் சுயமாகச்

சம்பாரிக்க வேண்டும் என்ற சிந்தனை யோடு ஆசிரியர் இக்கதாப்பாத்திரத்தைப் படைத்துள்ளார்.

இறுதியாக இந்நாவலில் வலம் வரும் பெண் நசரேனின் மனைவி. இவள் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வருகிறாள். பரதவப் பெண்களில் பி.ஏ. வரை படித்தவள் இவள். செருக்கு ஏதும் இல்லாதவள். நசரேன் படிக்காதவனாக இருந்தாலும் படிப்பின் அவசியத்தை உணருபவன். தன் மனைவியை நினைத்துப் பெருமைப்படுபவன். தன் மனைவி கார் ஓட்டுகிறாள், பிள்ளை களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக் கிறாள் என்று பெரும் மகிழ்ச்சி அடைகிறான். நாவலாசிரியர் நசரேனின் மனைவியை புதுமைப் பெண்ணாகவே வலம்வர செய்திருக்கிறார். நசரேனை ஆணாதிக்கச் சிந்தனை இல்லாதவனாகப் படைத்துள்ளார். நாவலாசிரியரினின் பெண்ணியச் சிந்தனை இப்பாத்திரத்தில் அழுத்தமாகவும் நேர்த்தியாகவும் பதிவாகியுள்ளது.

முடிவுரை

பெண்ணியம் என்பதற்குச் சரியான வரையறையை கொடுக்க இயலாது. காலம் மாறுபாட்டிற்கு ஏற்ப பெண்ணியச் சிந்தனைகளும் வேறுபடுகின்றது. இராஜம் கிருஷ்ணனின் அலைவாய்க் கரையில் என்ற நாவலில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கதாப்பாத்திரங்களிலும் பெண்ணியக் கோட்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் பெண்கள் செய்யும் தவற்றையும் ஆசிரியர் சுட்டிக் காட்ட மறுக்கவில்லை. அதைப்போல் பெண்களை மதிக்கும் ஆண்களையும் சுட்டி காட்டாமல் இல்லை.

அடிக்குறிப்புகள்

1. அலைவாய்க் கரையில், 51, 92, 89, 90, 138, 149, 167.
2. பெண்ணியம், ப.5
3. பெண்ணியம் அணுகுமுறைகள், ப.36
4. காலத்தோறும் பெண், ப.105

துணைநூற் பட்டியல்

1. இராஜம் கிருஷ்ணன், அலைவாய்க்கரையில், தாகம் பதிப்பகம், மூ.ப.2001. சென்னை
2. இராஜம் கிருஷ்ணன், காலந்தோறம் பெண், தாகம் பதிப்பகம், இ.ப. 2000. சென்னை.
3. பிரேமா, இரா, பெண்ணியம் மலர் பதிப்பகம், மு.ப.2000, சென்னை.
4. பிரேமா, இரா, பெண்ணியம் – அணுகு முறைகள், தமிழ்ப் புத்தகாலயம், மு.ப.1998, சென்னை.

மகாகவி பாரதியாரும் சமயமும்

முனைவர் வெ. இராம்ராஜ்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)

அரும்பாக்கம், சென்னை – 600 106.

ஆய்வுச் சுருக்கம்

அன்னைத் தமிழின் ஆற்றல்மிகு மகாகவியாகத் திகழும் பாரதியாரின் கட்டுரைத் தொகுப்பு இங்கு ஆய்வு எல்லையாகக் கொள்ளப்பெறுகிறது. மகாகவி பாரதியாரின் சமயச் சிந்தனைகள் இக்கட்டுரையில் ஆராயப்பெற்றுள்ளன. அவர் ஆழ்ந்த சமய ஞானம், பரந்த சமய அனுபவம், உறுதியான சமய நம்பிக்கை ஆகியவற்றைக் கொண்டவர். இவை சான்றுகளுடன் இக்கட்டுரையில் நிறுவப் பெற்றுள்ளன.

கோயிலின் தேவை, கடவுள் என்னுளே, தீ - கடவுள், தெய்வாம்சம் ஏற்பட, தியானம், பாரதியும் இந்து மதமும், இயேசுநாதர், முகம்மது நபிகள், சித்தர் நூல், மதங்களைப் பற்றிய விமர்சனம், மதமாற்றம், மூடநம்பிக்கைகள், பதிபாஷை, லோககுரு, ஞானம் பெற, வீடுபேறு ஆகிய உட்தலைப்புகளில் மகாகவி பாரதியாரின் சமயப் போக்குகள் அவரது கருத்துகளைத் துணையாகக் கொண்டு தெளிவாக விவரிக்கப் பெற்றுள்ளன.

திறவுச் சொற்கள்

கடவுள், தீ, தெய்வாம்சம், தியானம், இந்துமதம், இயேசுநாதர், முகம்மது நபி, சித்தர், மதமாற்றம், மூடநம்பிக்கைகள், பதிபாஷை, லோககுரு, ஞானம், வீடுபேறு, பாரதியியல், மகாகவிஞன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, கோவலன், கண்ணகி, திருநாவுக்கரசர், நம்மாழ்வார், ஔவையார், விவேகானந்தர், வேதம், குள்ளச்சாமி, விநாயகர், காமதேனு, ஜீவகாருண்யம்.

முன்னுரை

நம் தமிழ்க் கவிஞர் உலக மகாகவிஞராக மிளிரும்போது, அது நமக்கெல்லாம் பெருமை. அந்த வகையில் தமிழகம் இந்த உலகிற்கு அளித்த மாபெரும் கொடை மகாகவி பாரதியார். ஒரு நூற்றாண்டுக்கு முன்பே இன்றைய உலகைத் தொலைநோக்குப் பார்வையால் கண்டவர் அவர். அவரது கவிதைகள் எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதோ, அதைவிடப் பன்மடங்கு தாக்கத்தை ஏற்படுத்தவல்லன அவரது கட்டுரைகள். ஆனால் அவை ஏனோ இன்றுவரை

வெகுசனக் கவனம் பெறாமலேயே இருக்கிறது.

மகாகவி பாரதியாரின் ஐம்பத்தாறு கட்டுரைகள் அடங்கிய 'பாரதியார் கட்டுரைகள்' எனும் தொகுப்பு அவரைப் புரிந்து கொள்ள - கொண்டாட துணை செய்கின்றன. மகாகவி பாரதியாரைப் புதியகோணத்தில் இக்கட்டுரைகள் காட்டுகின்றன. அவர் தம்முடைய கட்டுரைகளில் பல்வேறு புதிய செய்திகளைப் பதிவிட்டுள்ளார். சமயம் சார்ந்த விமர்சனங்களையும் செம்மாந்த வழிகாட்டுதல்களையும் முன்வைத்துள்ளார். அவை நமக்குப் பக்குவத்தைத் தரவல்லன; தெளிவை வழங்கவல்லன; வியப்பை ஏற்படுத்துவன ஆகும். மேலும், அவை நம்முடைய அறிவை முதிர்ச்சியடையச் செய்வன.

மகாகவி பாரதியார் நினைத்ததைத் துணிச்சலோடு சொல்லும் பண்பை இயல்பாகப் பெற்றவர். அந்தத்துணிச்சலை அவரது கவிதைகளைவிட கட்டுரைகளில் மிகுதியாகக் காணமுடிகிறது. மகாகவி பாரதியாரின்கட்டுரைகளின்துணையோடு அவரது சமயக் கருத்துகளைத் தொகுத் தாய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

கோயிலின் தேவை

கோயில் என்பது ஒரு சமூகநலக் கூடம் ஆகும். மக்களை ஒருங்கிணைக்கும் அபூர்வ ஆற்றல் வழிபாட்டுத் தலங்களுக்கு உள்ளது. அவை ஆன்மிக உணர்வை, ஆன்மாவை இறையாற்றலுடன் இலயிக்கச் செய்கிறது; இது ஒரு கலை; இந்தக் கலையை மேம்படுத்துவதில் கோயில்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. மகாகவி பாரதியார், 'கோயில் ஜனங் களுக்குள் ஐக்கியம் ஏற்படுவதற்காக'[1] எனக் குறிப்பிட்டுள்ளதைக் காண்க. மேலும், 'வேத புராணங்களில் சொல்லப்படும் மூர்த்திகள் எல்லாம் ஒரே பரமாத்மாவின் கலைகள்'[2] எனக் கோயில்களில் உள்ள மூர்த்தங்களின் உட்பொருளைப் - பரந்தநிலையை மகாகவி பாரதியார் தெளிவாகப் புலப்படுத்துகிறார். அதன்வழி கோயிலின் தேவையை நிலைநாட்டு கிறார்.

கடவுள் என்னுளே

கடவுள் தன்மையை அறிவதன் முடிந்தமுடிபு 'கடவுள் என்னுளே' எனும் கருத்தாக்கம் மனத்துளே நிலைபெறுதல் ஆகும். கடவுள் என்ற சொல்லாக்கம் 'சென்று சேரும்' இடத்தைக் குறிப்பதன்று. அது உயர்ந்த அறிவின் படிநிலைகளில் ஒன்றாக எண்ணப் பெறுகிறது. சமய அறிஞர்களால் அவர்தம் நூல்களிலும் அதே பொருளில் எடுத்தாளப் பெறுகிறது. சமயச் சிந்தனைகளில் தோய்ந்த மகாகவி பாரதியார், 'என்னுள்ளே கடவுள் நிரம்பி யிருக்கிறான்'[3] 'நான் அமரன்'[4] என்று குறிப்பிடுவதில் இருந்து, சமய அறிஞர் களின் கருத்தாக்கத்திற்குத் தாமும் சான்றாக வாழ்வதை உறுதிப்படுத்தி யுள்ளார்.

தீ - கடவுள்

அக்கினி நம்முடைய பண்பாட்டில் மிக முக்கிய இடத்தைப்பெறுகிறது. சங்க இலக்கியங்களில் பல்யாகசாலை

முதுகுடுமி பெருவழுதி தீ வளர்த்து யாகம் செய்த காட்சிகள் இடம்பெற்றுள்ளன. அதற்கு அடுத்தநிலையில் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் கோவலன் - கண்ணகி திருமணத்தில் தீயை வலம் வருதல் தொடர்பான பதிவுகள் காணக் கிடைக்கின்றன. இப்படி நம்முடைய இலக்கியங்கள் முழுமையும் தீ, வழிபாட்டுக்குரிய அல்லது வழிபாட்டில் இடம்பெறக்கூடிய ஒன்றாக உள்ளது. இருபதாம் நூற்றாண்டிலும் அது தொடர்ந்து வருகிறது என்பதற்கு, 'தீ எனது தலைவன். அவனை முப்போதும் சரணமடைகின்றோம்'5 என்று மகாகவி பாரதியாரும் தம்மை உளப்படுத்திச் சான்று பகர்கிறார். அவர் தீக்கடவுளை முப்போதும் வணங்கிச் சரணடைகிறார்.

தெய்வாம்சம் ஏற்பட

தெய்வ பக்தியினாலே சகல வித்தைகளும் நமக்கு வசப்படும் என்பது சமயச் சான்றோரின் நம்பிக்கை. நம்பிக்கை ஒன்றே தெய்வம் தொடர்பான கருது கோளை உயிர்ப்புடன் வைத்துள்ளது. பயம் தீர்ந்தால் சாவில்லை என்ற சிந்தனை உள்ளத்தில் நிறைந்தால் மட்டுமே தைரியம் அதாவது தெய்வாம்சம் நம்முளே தோன்றும். அந்தத் தைரியமே தெய்வாம்சம் ஆகும். அந்தத் தெய்வாம்சம் நம்மிடம் ஏற்பட வேண்டுமானால் பரந்த மனப்பான்மை நம்முளே மிளிர வேண்டும். அதை விடுத்து, 'பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்பு வோரிடம் தெய்வாம்சம் ஏற்படாது'[6] என மகாகவி பாரதியார் சுட்டிச் சென்றுள்ளார்.

ஒரு சுதந்திரன் அனைவரையும் சுதந்திரனனாக மாற்ற முயற்சிக்கிறான். ஒரு அடிமைதான் பிறரையும் அடிமைப் படுத்த முயற்சிப்பான். இந்த உளவியல் உண்மையை மிக எதார்த்தமாக எளிய தமிழில் எடுத்துரைத்துள்ளார். அறிவுக்கண் கொண்டு இதை அறிந்து தெய்வாம்சம் நம்மில் மிகுவதற்கு - மிளிர்வதற்கு மகாகவி பாரதியார் காட்டியவழியில் முயல வேண்டும்.

தியானம்

கோயிலின் தேவை, இறைவன் நம்முளே இருக்கிறான், தீ - கடவுள், தெய்வாம்சம் ஏற்பட முதலான உட்தலைப்புகளில் சமயத்தின் அடிப்படை கட்டமைப்புகள் விளக்கப் பெற்றன. இவற்றிற்கு அடுத்தநிலையில் சமயத்தின் அடியாழத்தையும் உச்ச நிலையையும் புரிந்துகொள்ள வேண்டும் எனில், தியானம் மிகவும் அவசியமாகும். மகாகவி பாரதியார் தியானம் என்கிற நம் இந்திய மன - உடல் அறிவியல் நெறிமுறையைக் கீழ்க்காணுமாறு வரையறை செய்கிறார்.

> 'எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவர்களா னாலும், ஒரு மார்க்கத்தையும் சேராதவர் களானாலும், நாத்திகர்களா னாலும் அவர்களுக்குத் தியானம் அவசியம்'[7]

> 'மெய்யான செல்வமும் மெய்யான வலிமையும் வேண்டுமானால், ஆத்மாவுக் குள்ளே நோக்கத்தைச் செலுத்த வேண்டும்'[8]

'வலிமைகளிலே மதியை நிறுத்தி ஆழ்ந்த தியானம் செய்தால் யானையின் பலம் முதலியன கைகூடும்'[9]

முதலான அவரது வரையறைகளைக் காண்க. எந்தச் சமய நம்பிக்கையாளரும் தியானம் என்ற ஒன்றை முதன்மையான தாகக் கருதவேண்டும். மனவலிமை, செல்வம், பலம் ஆகியன தியானத்தால் விளைகின்றன. ஏனெனில், அவை எண்ண ஓட்டங்களை ஒழுங்குபடுத்து கின்றன. எனவேதான், மகாகவி பாரதியாரின் இந்த உளவியல் நெறி சமயம் சார்ந்த அவரது சிந்தனைகளில் தனிக்கவனம் பெறுகிறது.

பாரதியும் இந்து சமயமும்

டாக்டர் மில்லர் என்ற பாதிரியார், இந்துசமயத்தைப் பற்றிப் பேசும்போது, 'கடவுளின் அந்தர்யாமித் தன்மையை மற்றெல்லா மதங்களைக் காட்டிலும் ஹிந்து மதத்திலேதான் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள்'[10] என்கிறார். மகாகவி பாரதியாரும், 'இந்து மதம் சந்நியாசத்தை ஆதரிப்பதன்று. இகலோகத்தில் இருந்து தேவ வாழ்க்கை வாழ வேண்டுமென்ற நோக்கமுடையது'[11] என இந்து சமயத்தின் மேன்மையை எடுத்தியம்புகிறார். மேலும் இந்து சமயத்தைப் பற்றிப் பல்வேறு சிந்தனைகளையும் முன்வைத்துள்ளார். அவையாவன,

'ஹிந்துக்கள் யார்? வேதத்தை நம்புவோர்'[12]

'ஹிந்து மதம் ஒன்றுதான் பிரிக்க முடியாதது'[13]

'ஞானசூரியராகிய ஹிந்துக்கள் தமக்குள்ள குறையை விரைவாக நீக்கி வருகிறார்கள்'[14]

'நமது நாகரிகம் அதிக சக்தியுடையது. மற்றெந்த நாகரிகத்தையும் விழுங்கி ஜீரணித்துக் கொள்ளும் திறன் வாய்ந்தது. ஆதலால், ஐரோப்பிய நாகரிகத்தின் கலப்பிலிருந்து ஹிந்து தர்மம் தன் உண்மை இயல்பு மாறாதிருப்பது மட்டுமேயன்றி முன்னைக் காட்டிலும் அதிக சக்தியும் ஒளியும் பெற்று விளங்குகிறது'[15]

என இந்து சமயத்தின் தொன்மையை, சிறப்பை வெளிப்படுத்துகிறார். இருபதாம் நூற்றாண்டில் இந்து சமயம் புத்துணர்ச்சி பெற சுவாமி விவேகானந்தர் தொடக்கப் புள்ளியாக இருந்தார் என்பதை,

'ஹிந்து தர்மத்தின் புதுக்கிளர்ச்சிக்கு விவேகானந்தர் ஆரம்பம் செய்தார்'[16]

எனக் குறிப்பிடுகிறார். இந்து சமயம் பாதுகாக்கப்பெற வேண்டும் என்பதை, 'ஹிந்து தர்மத்தைக் கவனிக்காமல், அசிரத்தையாக இருப்போமானால் நமது கூட்டம் நிச்சயமாக அழிந்துபோகும். அதில் சந்தேகமில்லை'[17] என்கிறார். இந்து சமயம் காப்பாற்றப்பெற '20 கோடி இந்துக்களையும் ஒரே குடும்பம்போல செய்துவிட வேண்டும் என்பது என்னுடைய ஆசை'[18] என்று அதற்கான வழியையும் கூறுகிறார்.

பிற சமயத்தினர், சாதிப் பாகுபாடுகள் இந்துசமயத்தின் பெரிய குறை எனக் கருதி விமர்சிக்கின்றனர். எனவே, இந்துக்கள் சாதிகளைத் துறக்க வேண்டும்; இந்து சமயத்தினர் எனும் குடையின்கீழ் இணைய வேண்டும் என மகாகவி பாரதியார் விரும்பினார். அவரது தொலை நோக்குப் பார்வை இங்கு நோக்கத்தக்கது.

இயேசுநாதர்

மாபெரும் தீர்க்கதரிசியான இயேசு நாதரைப் பற்றி, 'சக்தியை வேண்டினால் சக்தி கிடைக்கும். 'கேட்டது பெறுவாய்' என்று யூத நாட்டு மாரியம்மை பெற்ற 'கிருஸ்து சித்தர்' சொல்லுகிறார்'[19] என்கிறார்.

முகம்மது நபிகள்

மிகப்பெரும் அருளாளரான முகம்மது நபியவர்கள் குறித்து, 'என் காரியம் நிறைவேறும்வரை எனக்கு மரணமில்லை. என்னுடன் இருப்போர் பயப்படாமல் இருந்தால் அவர்களுக்கு மில்லை என்றார் நபிகள். அவர் அந்த ராஜ்யத்துக்கெல்லாம் தாமே ராஜேசுவரனாய்த் தமது தரிசனத்தை என்றும் அழியாமல் நிலைநிறுத்திச் சென்றார்'[20] என்று முகம்மது நபிகளாரின் பெருமையை - உன்னதத்தை மகாகவி பாரதியார் எடுத்துக்காட்டியுள்ளார்.

சித்தர் நூல்

மகாகவி பாரதியார் பழம்பெருமை வாய்ந்த சமய நூல்களை ஆழ்ந்தகன்று படித்த சிறப்புக்கு உரியவர். சித்தர் சிந்தனைகளில் ஊறித் திளைத்த சித்தர் ஆவார். குள்ளச்சாமி உட்பட இந்தியா முழுவதும் (காசியில் இருந்தபோது) உள்ள பல சித்தர் பெருமக்களோடு நெருங்கிய தொடர்பில் இருந்தவர். தமிழகத்தைச் சேர்த்த ஔவையார் எழுதிய 'ஔவைக் குறள்' எனும் ஞானநூலைக் குறித்து அவர் வழங்கியுள்ள கருத்து வருமாறு,

'மகிமை பொருந்திய ஆத்மஞானியாகிய ஔவையார் இயற்றியிருக்கும் 'ஔவைக் குறள்' என்ற ஞானநூல் தமிழ்நாட்டு யோகி களாலும் சித்தர்களாலும் உபநிஷத்து களுக்குச் சமானமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது. யோக சாஸ்திரத்துக்கும், மோக்ஷ சாஸ்திரத்துக்கும் இந்நூல் முக்கிய பாடங்களில் ஒன்றாகக் கருதத் தக்கது'[21] என ஔவைக் குறளின் மையப் பொருளை – மேன்மையை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளார். இதிலிருந்து சித்தர் சிந்தனைகளில் மகாகவி பாரதியார் ஆழங்கால்பட்டவர் என்பதை அறிய முடிகிறது.

மதங்களைப் பற்றிய விமர்சனம்

அக்காலத்தில் எல்லா மதங்களிலும் மத அடிப்படைவாதிகள் நிறைந் திருந்தனர். அத்தகு காலகட்டத்தில் ஒரு மதத்தை விமர்சிப்பது என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்று. மகாகவி பாரதியார் தொலைநோக்குப் பார்வை யோடும் ஆய்வு அணுகுமுறையோடும் சிந்திக்கக் கூடியவர். சாமானியர்கள் நினைத்துப் பார்க்க முடியாததை எல்லாம் சிந்தித்தார். அதோடு, அவற்றைச் செயல் படுத்திக் காட்டினார். அதனால்தான் பாரதியார் இன்றுவரை மகாகவியாக வரலாற்றில் நிலைத்துள்ளார். அவரது சில மதவிமர்சனங்களை இங்கு காண்போம்.

'கிருஸ்தவர்கள் நாமெல்லாம் பாவிகள் என்பதைப் பல்லவி போலே சொல்லிக் கொண்டு காலங் கடத்துகிறார்கள்'[22]

'குல பேதங்கள் குறித்துப் பொய்க் கதைகள் சொல்லி இந்து தர்மத்தை அழிக்க விரும்புகிற கிருஸ்தவப் பாதிரிகள் இராமானுஜர், திருநாராயணபுரத்தில் பறையர் ஒரு சமயம் கோயிலுக்கும் வரலாமென்று சொன்னதை அறியார். ஆழ்வார்களுடைய குலம் நானாவிதம்'[23]

'ஹிந்துக்களிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மூட ஜனங்கள்'[24]

'ஸமயம் விடுதலை போதிக்கிறது. அதே வேளையில் சில குருக்கள் கட்டுப்பாடு, அடிமை நிலையைப் புகழ்ந்து கீர்த்தனம் பாடுகின்றனர்'[25]

'எல்லா மதங்களும் உண்மைதாம். ஒரு மதமும் முழு உண்மையன்று'[26]

எனத் தான் சார்ந்திருக்கும் சமயத்தையும், பிற சமயங்களையும், சமயம் என்கிற ஒட்டுமொத்த அமைப்பையும் நேரடியாக விமர்சித்துள்ளார். ஆற்றலும், தெளிவும், துணிச்சலும், உலக - சமய ஞானமும் நிரம்பியவராக மகாகவி பாரதியார் திகழ்ந்தார் என்பதற்கு இவை அனைத்தும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

மதமாற்றம்

மதமாற்றம் குறித்து மகாகவி பாரதியார் ஒளிவுமறைவின்றி விமர்சனம் செய்துள்ளார். பிறரது விமர்சனங்களையும் எடுத்துக்காட்டியுள்ளார். மதமாற்றங்களால் எதிர்காலத்தில் இந்தியாவில் எம் மாதிரியான விளைவுகள் ஏற்படும் என்பதையும் அவர் புலப்படுத்தத் தயங்க வில்லை. சாதி வேறுபாடுகள்தான் மதமாற்றத்திற்கு வழிவகுக்கின்றன. எனவே, அதைக் களைந்து மதமாற்றங் களைத் தடுக்க வேண்டும் என்ற நோக் கோடு பல்வேறு கருத்துகளை முன்வைத் துள்ளார். அவை வருமாறு,

'பஞ்சமரின் சேரிகளிலே கிறிஸ்துவப் பாதிரிகள் பள்ளிக்கூடங்கள் முதலியன வைப்பதுபோல் நமது குருக்கள் ஏன் செய்யவில்லை? அவர்களுக்கு ஹிந்து மதோபதேசம் செய்யும் கடமை யாரைச் சேர்ந்தது? அதற்கு மேற்படி மடாதிபதிகள் ஏன் ஆளனுப்பவில்லை? பறையரும், புலையரும், பள்ளரும், சக்கிலியரும், நம்மைப்போல ஹிந்துக்களென்பதையும், விபூதி, நாமம் போட்டுக்கொண்டு நமது தெய்வங்களையே வணங்குவோ ரென்பதையும், மடாதிபதி, புரோஹிதர், குருக்கள் முதலியவர்கள் சற்றே மறந்து போய்விட்டதாகத் தோன்றுகிறது'[27]

'அவர்களையெல்லாம் (பறையர்) உடனே ஒன்று சேர்த்து இந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதற விடாதீர்கள். மடாதிபதிகளே நாட்டுக் கோட்டை செட்டியார்களே இந்த விஷயத்தில் பணத்தை வாரி செல விடுங்கள். இது நல்ல பயன் தரக்கூடிய கைங்கர்யம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திர மாகும் கைங்கர்யம். பறையர் எல்லோரும் உண்மையான இந்துக்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. எனக்கும் ஒரு வள்ளுவப் பையனுக்கும் சினேகம். அவனுடைய கோயில் அம்மன் மீது நான்

பாட்டுக்கட்டிக் கொடுத்தேன். அவன் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு. காத்தவராயன் வேதத்தி லேயே சொல்லிய காற்று. வாயு கடவுளை அன்றி வேறில்லை. அந்தப் பாட்டுகளி லேயே தெரிந்து கொண்டேன். முத்துமாரி என்ற பராசக்தி உடைய பிள்ளைதான் காத்தவராயன். பறையர்களும் நம்மைப் போலவே வைதிக தேவர்களைப் பூஜிக்கிறார்கள்'28

'அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சில கிறிஸ்தவப் பாதிரிகள் தங்கள் மத விஷயமான பிரச்சாரத்தை உத்தேசித்து, நம்மைக் குறித்துப் பெரிய பெரிய பொய்களைச் சொல்லி, இப்படித் தாழ்ந்துபோய் மகத்தான அநாகரிக நிலையில் இருக்கும் ஜனங்களைக் கிறிஸ்து மதத்தில் சேர்த்து மேன்மைப் படுத்தும் புண்ணியத்தைச் செய்வதாக சொல்லுகிறார்கள். இந்தக் கிறிஸ்தவப் பாதிரிகளாலே நமக்கு நேர்ந்த அவமானம் அளவில்லை'[29]

'நான் பொதுப்படையாகச் சொல்லு கிறேன் எவ்வித வலிமைக்கும் கூட்டம் தான் ஆதாரம்'[30]

என்று மதமாற்றங்களால் இந்துக்களின் எண்ணிக்கை குறைந்தால் இந்துசமயம் அழிவை நோக்கிச் செல்லும் என்ற சிந்தனையை வலியுறுத்திக் கூறுகிறார். இந்தச் சிக்கல்களுக்குத் தீர்வாக, திருநாவுக்கரசரும் நம்மாழ்வாரும் கூறும் வழியைக் காணலாம்,

'அங்கம் எல்லாம் குறைந்து
அழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்று உழலும்
புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க்கு
அன்பராயின்
அவர் கண்டீர் யாம் வணங்கும்
கடவுளரே'[31]

'ஒக்கத் தொழுகிற்றிர் ஆயின்
கலியுகம் ஒன்றுமில்லை'[32]

எவராயினும் ஆகுக, கங்கைவார் சடையருக்கு அன்பரானால் போதும், நாம் ஒற்றுமையாக இருந்து வழிபட்டால் கலியாகிய தீயது நம்மை நெருங்காது என்று நாயன்மாரும் ஆழ்வாரும் அருளிச் செய்ததை இங்குச் சுட்டிக்காட்டுதல் பொருந்தும்.

மூடநம்பிக்கைகள்

காலஓட்டத்தில் பல்வேறு பழக்கங்கள் தேவையின்றி வழக்கங்களாக மாறிவிடு கின்றன. அவை, சமயம் சார்ந்தும் சமயம் சாராமலும் தம்முடைய இருப்பைத் தொடர்கின்றன. அறிவாளிகள் தோன்றும் போது தேவையின்றி - அர்த்தமின்றி - பயனின்றி வழக்கத்தில் உள்ளவற்றை எதிர்த்துக் குரல் கொடுக்கின்றனர். பின்பு அவை வழக்கொழிகின்றன. 'தற்காலத்தில் சில குப்பைகள் நம்முடைய ஞான ஊற்றாகிய புராணங்கள் முதலியவற்றில் கலந்துவிட்டன. மதத்வேஷங்கள், அனாவசிய மூட பக்திகள் முதலியனவே அந்தக் குப்பைகளாகும்'[33] எனத் தேவையற்ற வழக்கங்களைச் சான்றுகளுடன் விளம்பு கிறார் மகாகவி பாரதியார்.

மூடநம்பிக்கைகள் வலிமையற்றவை. தகுந்த சான்றுகளோடு நல்ல நம்பிக்கைகள் நிறுவப்பெறும் போது, மூடநம்பிக்கைகள் நலிந்து போகின்றன. அது மாறுபடும் தன்மை கொண்டது என்பதை, 'ஆசாரங்களை எல்லாம் அறிவுடன் அனுஷ்டிக்க வேண்டும். ஆனால், ஸமயக் கொள்கைக்கும் ஆசார நடைக்கும் தீராத ஸம்பந்தம் கிடையாது. ஸமயக் கொள்கை எக்காலத்திலும் மாறாதது. ஆசாரங்கள் காலத்துக்குக் காலம் மாறுபடும் இயல்புடையன'[34] எனக் குறிப்பிடுகிறார். எனவே, நாம் மூடநம்பிக்கைகளை இனங்காண வேண்டும். அவற்றைச் சமயச் சடங்குகளில் இருந்து நீக்க வேண்டும். சமயத்தைச் செம்மாந்த தன்மைகளோடு வழிநடத்தும் சமயாசிரியர்களின் சிந்தனைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

பதிபாஷை

சமயப் பாடல்கள் மேலோட்டமாக ஒரு பொருளையும் ஆழ்ந்து நோக்கினால் வேறொரு பொருளையும் தரவல்லன. குருமுகமாக அவ்விளக்கங்களைப் பெற்றுக்கொண்டோர்க்கு உண்மைப் பொருள் தெற்றெனத் தோன்றும். மகாகவி பாரதியாரும் சில முக்கிய பதிபாஷைகளைத் தம்முடைய கட்டுரைகளில் எடுத்தாண்டுள்ளார். அவை வருமாறு,

'விநாயகர் பிரணவ மந்திரத்தின் வடிவம். யானைமுகம் பிரணவ மந்திரத்தைக் காட்டுகிறது. அறிவின் குறி'[35]

'பரமாத்மாவின் ஞானக் கதிரை விழித்து நோக்குதலே விடுதலை. அதுதான் சிதம்பரம்'[36]

'நம்பிக்கையே காமதேனு. அது கேட்ட வரமெல்லாம் கொடுக்கும்'[37]

'துணிவே தாய்'[38]

'சிவாஜி மகாராஜா இளம் பிள்ளையாக இருந்தபோது மகாராஷ்டிரம் என்ன நிலைமையில் இருந்தது? அவர் இறக்கும் போது என்ன நிலைமை? சிவாஜி துணிவினால் ராஜ்ய சம்பத்தை அடைந்தான். நெப்போலியனும் அவ்வாறே. நம்முடைய முயற்சியின் ஆரம்பத்தில் நம்மைப் பிறர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். நம்பிக்கையைக் கைவிடாமல் இருந்தால் காலக்கிரமத்தில் வெளியுதவிகள் தாமே வரும். ஆரம்பத்தில் நமக்கு நாமே துணை. எவ்வளவு பெரிய இடையூறு வந்த போதிலும் எடுத்த காரியத்தை ஒரே உறுதியாக நடத்திக்கொண்டு போவதே ஆரிய லக்ஷணம். அவ்வாறு செய்யக் கூடியவனே மனிதரில் சிறந்தவன்'[39]

'ஒழுக்கமாவது மனோ தைரியம்'[40]

'அச்சம் இருக்கும்வரை நீ அறிவாளியாக மாட்டாய். அச்சமில்லாமையே அறிவு'[41]

என மகாகவி பாரதியார் சமய வடிவங்களின் உட்கருத்தாக்க முறைமையை-பதிபாஷையை நுணுக்கமாகக் கையாண்டிருப்பதைக் காணமுடிகிறது. இதிலிருந்து மகாகவி பாரதியார் சமயத்தை அகக்கண்கொண்டு பார்த்தார் என்பது

விளங்குகிறது. உண்மை சமயத்தின் தன்மைகளை நேர்மையோடு - துணிச்சலோடு உலகிற்கு உரைத்தார் என்பதையும் அறிய முடிகிறது.

லோககுரு

இந்த உலகிற்குத் தலைமை தாங்கும் தகுதி நம் பாரதத் திருநாட்டிற்கு உண்டு என்று மகாகவி பாரதியார் உறுதியாக நம்பினார். 'பாரததேசமே லோககுரு'[42] என முழங்கினார்.

உலகம் நிலைபெற்று மகிழ்ந்திருக்க உலகம் முழுவதையும் ஒரு குடும்பமாகக் காணும் மனோபாவம் மக்களிடம் வளர வேண்டும். நாம் மனிதநேயம் என்பதைத் தாண்டி ஜீவகாருண்யம் என்ற உயர்ந்த நிலையில் நின்று உலகைக் காண்கிறோம். மகாகவி பாரதியார், 'ஜீவகாருண்யமே எல்லா தர்மங்களிலும் மேலானது'[43] எனச் செப்புவதைக் காண்க. மேலும், 'வாருங்கள் உலகத்தீரே, கூட்டங் கூட்டமாக நேர்மை வழியிற் புகுவோம். ஸமத்வ நெறியிலே பாய்ந்து விடுவோம். பழைய கட்டுகளை லக்ஷக்கணக்கான மக்கள் கூடிநின்று தகர்ப்போம்'44 என்று அறைகூவல் விடுக்கவும் செய்கிறார்.

ஒன்றிணைந்து, நேர்மைவழியில் நடந்து, ஜீவகாருண்யம் எனும் மேலான தர்மத்தை இந்த உலகிற்குப் போதித்து, லோககுருவாகும் காலம் இன்று நம் கண்முன் தெரிந்து கொண்டிருக்கிறது. இந்தக் கனவை நூறு ஆண்டுகளுக்கு முன்பே கண்டவர் நம்முடைய மகாகவி பாரதியார். அவரது கட்டுரைகளே அதற்குச் சான்று.

ஞானம் பெற

ஆத்ம ஞானம் பெறுவதற்குக் குறிப்பிட்ட காலம் பயிற்சி செய்ய வேண்டும். எடுத்த எடுப்பிலேயே ஞானம் மலர்வதில்லை. அந்தத் துறைசார்ந்த சிந்தனைகளில் நம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டால் மட்டுமே இது சாத்தியம். எப்படி அன்பில்லாவிடில் இன்பமில்லையோ அப்படியே பயிற்சி இல்லாவிட்டால் பக்குவமாகிய ஞானம் இல்லை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஒரு ஞானி தனக்கு வரும் இன்பங்களையும் துன்பங்களையும் அமைதியுடன் நோக்குகிறார். இந்த வெளிப்பாடே அவரை ஞானியாக உலகிற்குக் காட்டுகிறது.

மகாகவி பாரதியார், 'இருட்டு மூலைக்குள் உட்கார்ந்து கொண்டு 'நம்மை நாமே மஹான்கள்' என்று பாவனை செய்வதில் பயனில்லை'45 என்கிறார். மேலும், 'அனுஷ்டானத்துக்கு வராத ஞானத்தை ஞானமென்று சொல்வதே பிழை. ஹிந்து மதத்தின் ஸார உண்மைகளை நாம் ஒழுக்கத்திலே காண்பிக்க வேண்டும்'[46] என்கிறார். ஒழுக்கமே விழுப்பமாகிய ஞானத்தை மலரச் செய்யவல்லது எனும் பேருண்மையை இதன்மூலம் உலகிற்குச் சொல்லிச் சென்றுள்ளார்.

வீடுபேறு

சமயத்தின் முடிந்த முடிபு வீடுபேறு ஆகும். அது அடையத்தக்க இடமல்ல; மனத்தின் ஓர் உயர்ந்த படிநிலை ஆகும்.

மகாகவி பாரதியாரின் சமயச் சிந்தனைகளில் வீடுபேறு குறித்த அவரது சிந்தனை மணிமுடியாகத் திகழும் பெற்றியது ஆகும். அவர்,

'வீடாவது, பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. வீடு என்ற சொல்லுக்கு விடுதலை என்பது பொருள்'[47]

'வீடுபேறு எனும் நிலைமையை இறந்து போனதன் பின்பு பெற வேண்டும் என்று பெரும்பாலோர் விரும்புகிறார்கள். இவ்வுலக வாழ்க்கையிலேயே இப்போதே அந்நிலையை விரும்புதல் நன்று'[48]

என வீடுபேற்றின் இலக்கணத்தை இயம்புகிறார்; வீடுபேறு எனும் உயர்ந்த மனநிலையை நாம் வாழும் காலத்திலேயே சுகிக்க முடியும் என்பதை அறிவுறுத்துகிறார்.

நிறைவாக

மொத்தத்தில் மகாகவி பாரதியாரின் கட்டுரைகள் அவரது சமயம் சார்ந்த உள்ளக்கிடக்கையை முழுமையாக அறியத் துணைசெய்கின்றன. எனவே, மகாகவி பாரதியாரின் கவிதைகளுக்கு அளித்துள்ள முக்கியத்துவத்தைப் போன்று, அவரது கட்டுரைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பது இக்கட்டுரையின் வாயிலாக வலியுறுத்தப் பெற்றுள்ளது.

கோயிலின் தேவை, கடவுள் என்னுளே, தீ - கடவுள், தெய்வாம்சம் ஏற்பட, தியானம், பாரதியும் இந்து மதமும், இயேசுநாதர், முகம்மது நபிகள், சித்தர் நூல், மதங்களைப் பற்றிய விமர்சனம், மதமாற்றம், மூடநம்பிக்கைகள், பதிபாஷை, லோககுரு, ஞானம் பெற, வீடுபேறு ஆகிய உட்தலைப்புகளில் மகாகவி பாரதியாரின் சமயக் கருத்துகள், விமர்சனங்கள் தொகுத்தாராயப் பெற்றுள்ளன.

மகாகவி பாரதியாரின் கவிதை அவரது ஒருபக்க தரிசனத்தை மட்டுமே காட்டவல்லது. அதுவே போதும் என்று அறிஞருலகம் விட்டுவிட்டது போலும். அந்தப் போக்கை மாற்றி மகாகவி பாரதியாரை முழுமையாக அறிந்து கொள்ள அவரது கட்டுரைகள், கதைகள் முதலான வற்றையும் ஆய்வுலகம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தமிழறிஞர்களும் பாரதியியல் ஆய்வாளர்களும் மகாகவி பாரதியாரின் கட்டுரைகளில் உள்ள சிந்தனைகளை உலகறியச் செய்ய முயல வேண்டும். இந்தக் கட்டுரை மகாகவி பாரதியாரின் கட்டுரைகளை உலகறியச் செய்யும் முயற்சியைத் தொடங்கிவிட்டது என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

அடிக்குறிப்புகள்

1. பாரதியார் கட்டுரைகள், ப.2, 2. ப.1, 3. ப.166, 4. ப.167, 5. ப.162, 6. ப.3, 7. ப.5, 8. ப.61, 9. ப. 207, 10. ப.64, 11. ப.11, 12. ப.272, 13. ப.253, 14. ப.178, 15. ப.123, 16. ப.221, 17. ப.272, 18. ப.297, 19. ப.21, 20. ப.25, 21. ப.129, 22. ப.27, 23. ப.35, 24. ப.95, 25. ப.78, 26. ப.34, 27. ப.271, 28. ப.282, 29. ப. 295, 30. ப. 296, 31. திருநாவுக்கரசர், ஆறாம் திருமுறை, பொது,

பாடல் – 10, 32. திருவாய்மொழி நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் – 3253, 33. பாரதியார் கட்டுரைகள், ப.252, 34. ப.253, 35. ப.12, 36. ப.16, 37. ப.25, 38. ப.37, 39. ப.22, 40. ப.31. 41. ப.37, 42. ப.58, 43. ப.254, 44. ப.28, 45. ப.88, 46. ப.125, 47. ப.164, 48. ப.168.

பயன்கொண்ட நூல்கள்

1. ராஜசேகரன் (தொகுப்பாசிரியர்), பாரதியார் கட்டுரைகள், சீதை பதிப்பகம், 10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005, பதிப்பு 2011.
2. பாரதியார் கவிதைகள், பூம்புகார் பதிப்பகம்,127, பிரகாசம் சாலை, (பிராட்வே) சென்னை – 600 108, பதிப்பு 2018.
3. ஔவைக் குறள் மூலமும் உரையும், தாமரை நூலகம், 7, என்.ஜி.ஓ. காலனி, மூன்றாவது தெரு, வடபழனி, சென்னை – 600 026. பதிப்பு 2000.
4. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், உரையுடன், நான்காம் தொகுதி, கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017, ஏழாம் பதிப்பு 2014.
5. ஆறாம் திருமுறை, மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், ஜி–4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம், ராயப்பேட்டை, சென்னை – 600 014, முதற்பதிப்பு 2018.
6. ய. மணிகண்டன் (ஆய்வும் பதிப்பும்), பாரதியின் இறுதிக் காலம், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், 669, கே.பி. சாலை, நாகர்கோயில் – 609 001, பதிப்பு 2014.

திரையிசைப் பாடல்களில் வேத புராணக் கருத்துகள்

திரு. இராஜகோபாலன் கிருஷ்ணன் சீனிவாசன்

நிதி மற்றும் கணக்காளர்

ஆலந்தூர், சென்னை.

ஆய்வுச்சுருக்கம்

நவீன இலக்கியங்கள் என 20 மற்றும் 21 ஆம் நூற்றாண்டில் எழுந்த இலக்கியங் களைக் கூறலாம். அதிலும் குறிப்பாக திரையிசை இலக்கியங்கள் அதிக அளவில் மக்கள் மத்தியில் அறியப்பட்ட நவீன இலக்கிய வகைகளில் ஒன்றாக உள்ளது. வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகளை அக்கால ஊடகமான வேத, புராண, உபநிடதங்கள் கூறின. இடைக்காலத்தில் அவை உலக மயமாக்களில் மறைக்கப் பட்டன அல்லது மறக்கப்பட்டன. படித்தவர்கள் மட்டும் படித்து இன்புற்ற கருத்துகளைத் திரையிசையில் கண்ணதாசன், மருதகாசி போன்ற கவிஞர்கள் எழுதி வைத்தனர். வேத, புராண, உபநிடதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் திரையிசை மூலம் கொண்டு சேர்த்தனர். அதனை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

திறவுச்சொற்கள்

திரையிசை,வேதம், உபநிடதம், புராணம், ஒலிநாடா, இணையப் புத்தகம்.

முன்னுரை

மாற்றம் ஒன்றே மாறாதது என்ற கூற்றைக் காலம் நமக்கு வெகு எளிதாகப் புரிய வைக்கிறது. மனித வாழ்வில் கடந்த நூறு ஆண்டுகளில் எத்தனைப் பரிணாம வளர்ச்சி வானொலி, ஒலிநாடா ஒலிவாங்கி, குறுந்தகடு, நினைவகம் எனத் தற்போது கடிகாரத்தில், அலைபேசியில் எனும் அளவிற்கு விஞ்ஞானம் முன்னேறி விட்டது. அதே போல பண்டைய இலக்கியங்கள் ஓலைச்சுவடி முதல் இன்று இணையப் புத்தக வடிவில் (PDF) சுருங்கி விட்டது. கைபேசியில் இன்று ஆயிரக்கணக்கான நாவல்கள் இலக்கி யங்கள் என்று படிக்க ஆரம்பித்து விட்டோம். இந்தப் பரிணாம வளர்ச்சியால் பண்டைய காலத்தில் போற்றிப் பாதுகாக்கப்பட்ட காவியங்கள் தற்கால மக்களுக்கு எளிதில் புரியும் வகையில் சினிமா பாடல்கள் என்று அழைக்கப்படும் திரையிசைப் பாடல்கள் மூலம் பரப்பப்பட்டது. திரைப்பாடல் களுக்குப் பாட்டு எழுதி அதை பாமர மக்களுக்குப் புரிய வைத்த பெருமை, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்,

மருதகாசி, முத்தையா எனப்பட்ட கண்ணதாசன், ரங்கராஜன் என்ற வாலி திரைப்பட இயக்குனர் திரு ஏ.பி.நாக ராஜன் மற்றும் அதில் பங்கு பெற்ற கதாபாத்திரங்கள் இவர்கள் அனைவருக்கும் பெரும் பங்கு உண்டு.

வேத உபநிடதமும் திரையிசையும்

வேத உபநிடதத்தில் கூறப்பட்ட மாத்ரு தேவோ பவ1 எனும் பதத்தின் விளக்கத்தை மருதகாசி அவர்கள் திரைப்படப் பாடல் மூலம் அறியலாம்

ஈன்று வளர்த்து இரவு பகல் கண்

விழித்து
எறும்பு மொய்க்காமல் இன்னல்
பல சுமந்து
பாலூட்டித் தாலாட்டிப் பரிவோடு
ஆளாக்கி
வாழவைக்கும் தியாகியாம்
மாதாவே பெரிய கோயில்[2]

என்ற விளக்கமே மாதாவைப் போற்றும் வேதப் பொருளின் விளக்கம். அதற்குப் பிறகு பல்வேறு கவிகள் பலதரப்பட்ட வகையில் தாயின் பெருமையைப் பற்றிப் பாடல்கள் எழுதி அதைத் திரைவாயிலாக அளித்து உள்ளனர்.

ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுதும் எந்தச் சூழ்நிலையிலும் தர்மத்தைக் கடை பிடித்தே ஆக வேண்டும் எனும் கொள்கையைப் பரப்ப வந்த காவியம் இராமாயணம், காவியத் தலைவன் ஸ்ரீராமன் அதனை விளக்கும் விதமாக ஒரு திரைப்பாடல்,

சத்தியமே லட்சியமாய்
கொள்ளடா
தலை நிமிர்ந்து உனை உணர்ந்து
செல்லடா
சத்தியமே லட்சியமாய்
கொள்ளடா
எத்தனையோ மேடு பள்ளம்
வழியிலே உன்னை
இடர வைத்துத் தள்ளப் பார்க்கும்
குழியிலே
எத்தனையோ மேடு பள்ளம்
வழியிலே உன்னை
இடர வைத்துத் தள்ளப் பார்க்கும்
குழியிலே
அத்தனையும் தாண்டி காலை
முன் வையடா
அத்தனையும் தாண்டி காலை
முன் வையடா – நீ
அஞ்சாமல் கடமையிலே கண்
வையடா

என்று கூறி மேலும்,

குள்ளநரிக் கூட்டம் வந்து
குறுக்கிடும்
நல்லவருக்குத் தொல்லை தந்து
மடக்கிடும்”[3]

என்று பட்டாபிஷேக வைபவம் முன்னர் கூனி சொல் கேட்டுக் கொடிய கைகேயி வரம் கேட்ட கதை நமக்குத் தெரியும் அதையும் புன்முறுவலோடு ஏற்றுக் கொண்டு கானகம் சென்றவன் இராமன். அந்த உறுதி மனிதனுக்கு வேண்டும் எனும் காவிய கருத்தை முன்னோடியாகக் கொண்டு பறைசாற்றிய பாடல் உண்டு.

இராமாயணம், மகாபாரதம், தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்ய பிரபந்தம் எனும் சைவ வைணவர்களின் பொக்கிஷங்களைப் பாமர மக்களிடம் எளிமையாகத் திரைப்படங்கள் மூலம் எளிதில் புரியும்படி விளக்கிய பெருமை கவியரசர் கண்ணதாசனுக்கும் இயக்குனர் திரு ஏ.பி. நாகராஜன் அவர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. இறைவன் எல்லா இடங்களிலும் வியாபித்து உள்ளான் என்று வேதம் சொல்கிறது. அதனை ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்கள் மூலம் எளிமையாக விளக்கி உள்ளனர். 'நீர் வானம் மண் எரி காலாய் நின்ற நெடுமால்' என்றும்

"இருநிலம் கால் தீ நீர் விண் பூதம்
ஐந்தாய்
செந்திறத்த தமிழ் ஓசை வட
சொல்லாகி
திசை நான்குமாய் திங்கள்
ஞாயிறு ஆகி"4

அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகா அந்தணனை என்று திருமங்கை ஆழ்வார் தனது திருநெடுந்தாண்டகம் எனும் பதிகத்தில் நான்காவது பாசுரத்தில் இறைவன் எல்லாவற்றிலும்! வியாபித்து இருக்கிறான் என்று அருளி செய்து உள்ளார். வட சொல்லாகிய சமஸ்கிரிதம் அளித்த வேதமும் திராவிட வேதம் எனும் சிறந்த தமிழ் ஓசை கொண்ட வைணவர் களின் வேதமாக கருதப்படும் திவ்ய பிரபந்தமும் இறைவனைப் பற்றிப் பேசுகிறது.

இந்தக் கருத்தைத் திரு.ஏ.பி. நாகராஜன் இயக்கிய திருவருட்செல்வர் எனும் திரைப்படத்தில் ஒரு காட்சியாக அமைத்துள்ளார். மனம் திருந்திய அரசன் தன்னை மேலும் புனிதப்படுத்திக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று மந்திரியிடம் கேட்க, அதற்கு மந்திரி - இதயத்தைத் தூய்மைப்படுத்த இறைவனை நாடுவதே சிறந்தது என்கிறார். அவ்வாறாயின் அந்த இறைவன் எங்கு இருக்கிறான், எந்தத் திசையை நோக்கி உள்ளான், என்ன செய்து கொண்டிருக் கிறான் என்ற கேள்விக்குப் பதிலாக ஒரு சிறுமி பதில் அளிக்கிறாள். இறைவன் எல்லா இடத்திலும் நீக்கமற நிறைத்து இருக்கிறான். பசுவினுள் பால் போல பாலினுள் வெண்ணெய், வெண்ணெயில் நெய் போல" என்கிறாள் நெய், வெண்ணெய் இவற்றைப் பாலினுள் நேராகக் காண முடியாது. மறைந்து உள்ளது ஒவ்வொரு செயலுக்குப் பிறகும் ஒவ்வொன்று வெளிப்படுவது போல இறைவன் உள்ளான் என்ற உணர்வு இருந்து அதற்கான பயிற்சி மேற் கொண்டால் உண்டாகும். ஞானக்கண் கொண்டு இறைவனை காணலாம். சுவையை உணரலாம் காட்ட முடியாது. பொருள் அசைவில் காற்று உள்ளது என்று உணரலாம் காற்றைக் காண முடியாது.

அடுத்த கேள்வியாக அவன் எந்தத் திசையை நோக்கி உள்ளன என்பதற்குப் பதிலாக தீப சுடரை உவமையாக சொல்கிறாள். தீபம் அளிக்கும் சுடருக்குத் திசைகள் இல்லை. தீபத்தை ஏற்றினால் இருள் விலகி எல்லா திசைகளில் உள்ள எல்லாவற்றையும் காணலாம். திசை

நான்குமாய் திங்கள் ஞாயிறாகி எனும் ஆழ்வார் கூற்று நோக்கத்தக்கது.5 தைத்ரீய உபநிஷத்தின் சீக்ஷாவல்லி எனும் அனுவாகத்தில் வருமாறு கூறப்பட்ட கருத்தானது பின் ஆகாயத்தில் இருந்து வாயுவும் (காற்று) வாயுவில் இருந்து அக்னியும்(நெருப்பு) அக்னியில் இருந்து நீரும் உண்டாயிற்று என்று கூறப் பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தோன்றிய கருத்தே மேற்சொன்ன இறைவன் இருக்கும் இடமாக சிறுமி கூறிய பால், வெண்ணெய் எனும் கருத்து. இது ஒரு சிறு விளக்கமே. நம் அன்றாட வாழ்வில் நடைபெறும் அனைத்தும் இதனை உணர்த்துகின்றன. விதை செடியாகி அதிலிருந்து நெல் உருவாகி நெல்லிலிருந்து அரிசி உருவாவி அதிலிருந்து உணவு கிடைக்கிறது. இப்படிப் பல வகை உலகில் உள்ளன.

திரையிசையில் இராமன் புராணமும் கண்ணன் புராணமும்

கண்ணன் மோக வடிவம், இராமன் காதல் வடிவம். 'மோகம் காமத்தால் ஏற்படுவது; காமம் ஆசையின் பரிணாம வளர்ச்சி. நாம் எதையாவது அடைய வேண்டும் என்பது ஆசை. பிறகு வேறொரு சந்தர்ப்பத்தில் அந்தப் பொருளைக் காண நேரும்போது மீண்டும் அதை அடைவதைப் பற்றி நினைப்பது ஆசை. ஆனால் அதை அடையும் வரை வெறித்தனமாக அதை அடைய முயற்சி செய்யும் போது நம் நினைவும் அதில் ஒன்றிவிடும். அதை அடைவதில் குறியாய் இருக்கும் போது நம் செயல்களை மற்றவர்கள் நோக்கும் போது அந்தச் செயல் நகைப்பிற்கு இடமாகக்கூட இருக்கும், அதையும் உணராது நாம் செய்யும் செயல் நம் எண்ணத்தை நிறைவேற்றி விடும். இது ஆசையின் உச்சகட்டமான காமம் கண்ணனிடம் ஏற்படும். இராமனிடம் பக்தி எனும் காதல் ஏற்படும். இதனைக் கண்ணதாசன் ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

"ராதைமடியில் கண்ணன்
இருந்தான்
கண்ணன் வேறு பெண்ணை
நெஞ்சில் எண்ணி இருந்தான்.
சீதை மடியில் ராமன் இருந்தான்
ராமன் வேறு பெண்ணை
நெஞ்சில் காணமறந்தான்"5

"கண்ணன் என்பது மோக வடிவம், ராமன் என்பது காதல் வடிவம்" இந்த வரிகள் முற்றிலும் உண்மை இராமனிடம் மோகம் கொண்ட சூர்ப்பனகை தண்டிக்கப்பட்டாள். இராமனிடம் சபரி சுவைத்துக் கொடுத்த கனியை இராமன் ஏற்றுக் கொண்டான். சபரியின் காதல் இராமன் மேல் உள்ள அன்புடன் கொண்ட பக்தியின் வெளிப்பாடு. சூர்ப்பனகை கொண்ட மோகம் சுயநலம் மிக்க காமத்தின் வெளிப்பாடு. இந்த அடிப்படைப் புரிதலே கண்ணதாசனின் இராமன் கண்ணன் பற்றிய பாடல் வரிகள். கண்ணன் கோபியர்களுடன் இருந்தமையைத் தான் பாடல் ஆசிரியர் விளக்கி உள்ளார்.

அலுவலகம் சென்று தாய் இல்லத்தில்

உள்ள குழந்தையைப் பற்றியே நினைப்பாள். அதுபோல கண்ணன் செயல் உடலை உயிர் சில காலம் இறைவன் ஆணைப்படி நேசித்து ஒன்றி இருப்பது போல் கோபியர்கள் அனைவரையும் கண்ணன் தழுவினான். பார்வையில் அது தவறாகப்படும். அவன் எண்ணம் அவனே அறிவான் அதையும் அறிவோம்.

இராமாயணத்தில் பட்டாபிஷேக நிகழ்வின் போது வசிஷ்டர் சுமந்திரர், வாலி, அங்கதன், விபீஷணன், அனுமன் என எல்லோரும் இராமனைத் தழுவினர். இந்த வைபவம் காணவந்த சுக்ரீவன் படையைச் சேர்ந்த குரங்குகள் நம் சரீரம் அருவருக்கத்தக்கதாக உள்ளதால் நம்மால் இராமனைத் தழுவ முடியவில்லையே என்று என எண்ணியதாம். இதை அறிந்த ராமன் தனது அடுத்த அவதாரத்தில் அவர்களை அழகு மிக்க இடைக் குலத்தைத் சேர்ந்த கோபியர்களாக படைத்து அவர்கள் எண்ணத்தைப் பூர்த்தி செய்தானாம். கண்ணனின் கதையை உற்று நோக்கினால் கோகுலம் தவிர வேறு எங்கும் இந்த நிகழ்வுகளைக் காணமுடியாது. கோபியர்களுக்குக் கண்ணன் மோக வடிவம். கண்ணனிடம் இராசக்கிரீடை செய்த கோபியர்கள் என்ன ஆனார்கள்? என்று யாருக்கும் தெரியாது அவர்கள் கண்ணனிடம் ஐக்கியமாகிவிட்டார்கள் என்று கருத்தும் உண்டு இது ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணையும் தத்துவம். இதுவே வைணவத்தின் முக்கியக் கோட்பாடு இதை தெய்வமான கண்ணன் நிறைவேற்றினான். தெய்வத்தின் செயலை நாம் விமரசிக்க முடியாது. இதனைக் கண்ணதாசன் அழகுற தம் திரையிசையில் காட்டியிருப்பார்.

இறைவனின் காவலாளிகளாக இருந்த ஜெய, விஜயன் என்ற இருவரும் சாபத்தால் இறைவனை விட்டுப் பிரிய நேரும் போது இறைவன் கேட்கிறான் என்னைப் பிரிந்து ஏழு ஜென்மங்கள் வேண்டுமா? என்னை எதிர்த்து மூன்று ஜென்மம் வேண்டுமா? என்று, அவனை விட்டுப் பிரிய மனம் இல்லாத அவர்கள் உன்னை எதிர்த்து மூன்று பிறவி போதும் என்கிறார்கள். வெகு விரைவில் அவனுடன் இணைய வேண்டி அதில் முறையே சகோதரர்களாக ஹிரண்யாக்ஷன், ஹிரண்ய கசிபு என்று இருவராகப் பிறக்க அவர்களை அழிக்க இறைவன் முறையே வராக, நரசிம்மராக தோன்றி ஒரு பிறவியை முடிக்கிறார். அடுத்த பிறவி இராவண கும்பகர்ணனாகப் பிறந்து இராமனால் சாபவிமோசனம் பெறு கிறார்கள். மூன்றாவது கும்பகர்ணன் தந்தவக்ரனாகப் பிறந்து பகவான் கிருஷ்ணனால் பிறவியை முடித்து கொள்கின்றனர். இந்த மூன்று பிறவியிலும் தாங்களே சிறந்தவர்கள் என்றும் இறைவனை ஒரு பகைவ னாகவே கண்டார்கள். தற்கால நாத்திக வாதிகளைவிட கடுமையான நாத்திக் கொள்கை கொண்டவர்களாக இறைவனை அடைய ஜெய, விஜயர்கள் திகழ்ந்தார்கள். இது போன்று விஷ்ணு புராண செய்திகளைத் திருமால் பெருமைகள் என்ற படத்தில் கண்ணதாசன் திருமால்

எடுத்த தசாவதாரத்தையும் தம் பாடல் வரிகளில் எழுதியுள்ளார். பக்தியைத் திரையிசை வாயிலாக மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்துள்ளனர். இறைவனிடம் பக்தி செலுத்தியவர்கள், இறைவனை எதிர்க்கிறார்கள். இந்த விளக்கங்கள் கடவுள் இல்லை என்று நாத்திகம் பேசுவது எவ்வாறு சாத்தியம்? இதில் உண்மை இல்லை என்று வாதம் செய்பவர்களுக்குப் பதிலாக அமையும்.

ஈ. வே. ரா. அவர்கள் ஒரு முறை, "நீருக்குள் கடவுள் சிலையையும், மனிதனையும் மூழ்கச் செய்தால் மனிதன் மேலே வருவான் சிலை வருமா?" என்றார். அதற்கு முத்துராமலிங்க தேவர் அவர்கள் மனிதனுக்கும், சிலைக்கும் சாட்டை அடி கொடுத்தால் ஓலம் இடுவது மனிதனா? சிலையா? என்றார். நம் காலத்திற்கு முன் பல நிகழ்வுகள் ஏற்பட்டது என்ற உணர்வு இல்லை யென்றால் விதண்டாவாதமாக கேள்விகள் வரும். நாம் பிறந்தது முதல் இன்று வரை நடந்த அதே வரிசையில் ஒன்று கூட விடாமல் நம்மால் கூறவோ அல்லது நூலாக வெளியிடவோ முடியுமா? அதனை ஆய்வாளர்கள் சிந்திக்க வேண்டும்.

"காளிதாச மஹாகவி காவியம்
கன்னி சகுந்தலை என்னும்
ஓவியம்"[6]

என்ற பாடல் 'எங்கிருந்தோ வந்தாள்' எனும் திரைப்படத்தில் வருகின்றது. அதில் வரும் சகுந்தலை எவ்வாறு மன்னனிடம் மயங்கினாள் என்பதும் சகுந்தலையின் பிள்ளை பரதன் ஆண்டதால் நம் நாடு பாரத நாடு ஆயிற்று என்பதும் இந்தக் காவியத்தைப் பற்றி பாகவத புராணம்7விளக்குகிறது. இவ்வாறு திரைப்படங்களில் திரையிசை வேத புராண, பாகவதச் செய்திகளை மக்கள் மத்தியில் எடுத்துக்காட்டுகின்றன.

முடிவுரை

இந்த விளக்கங்களைக் கூற முற்பட்டால் நமக்கு நேரம் போதாது பல்லாயிர வருடங்கள் பழமையான வேதம், உபநிடதம், புராணங்கள் காவியங்கள் என்று சிறப்பான மனித வாழ்விற்கு தேவையான கருத்துக்களை கடந்த எழுபத்தைந்தாண்டுகளில் திரைப் படங்கள், திரையிசைப் பாடல்கள் இலக்கியங்கள் வாயிலாக நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவி கொண்டு நுணுக்கமான தத்துவங்களைப் பாமரர்கள் எளிமையாகப் புரிந்து கொண்டு வாழும் வகையில் ஏற்படுத்தி கொடுத்த பெருமை நவீன ஊடகங்களையே சாரும். திரைப்படங்கள், அவற்றில் வரும் கருத்து மிக்க திரைப்பாடல்கள் நவீன இலக்கிய வாதிகளையே சாரும். நம் வாழ்வின் மகிழ்வோ துக்கமோ நம் செயலால் ஏற்படுவது என்ற ஒப்பற்ற தத்துவத்தை விளக்கும் பகவத் கீதையின் கருத்துக்களை நமக்கு எளியமையாகப் புரிய வைத்தது இந்த ஊடகங்களே ஆகும். நவீன இலக்கியமான திரையிசையில் இறை உணர்வுடன் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

அடிக்குறிப்பும் துணை நூல் பட்டியலும்

1. முதல் ஸ்லோகம், தைத்ரீயோபநிஷத், உபநிடதசாரம், உரையாசிரியர் அண்ணா, வெளியீடு இராமகிருஷ்ணா மடம், சென்னை, ஆண்டு 2004
2. படம் – பெரிய கோயில் 1958, பாடல் – மருதகாசி, இசை – கே.வி. மகாதேவன், இயக்கம் – ஏ.கே வேலன்.
3. படம் –நீலமலைத் திருடன் 1957, பாடல் – மருதகாசி, இசை – கே.வி. மகாதேவன்.
4. திருமங்கையாழ்வார், திருநெடுந்தாண்டகம், பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானம், ஸ்ரீகிருஷ்ணசாமி அய்யங்கார், ஸ்வாமி வெளியிடு, ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி
5. தைத்ரீயோபநிஷத், உபநிடதசாரம், உரையாசிரியர் அண்ணு, இராமகிருஷ்ண மடம் வெளியீடு, சென்னை, ஆண்டு 2004.
6. படம் – பூவும் பொட்டும், பாடல் – கண்ணதாசன், இசை – ஆர்.கோவிந்தராஜன், 1968
7. படம் – எங்கிருந்தோ வந்தாள், பாடல் – கண்ணதாசன், இசை – எம்.எஸ் விஸ்வநாதன், 1970
8. ஸ்ரீமத் பாகவதமகாபுராணம், தமிழில் சுப்பிரமணிய சாஸ்திரிகள், கீதா பிரஸ், கோரக்பூர்

திருவரங்கன் உலா நாவலில் அரங்கனும் அஷ்டப்பிரபந்த அரங்கனும்

திரு. இராஜ சீனிவாசன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஆய்வுச் சுருக்கம்

பக்தி என்பது காலம் காலமாகப் பேசப்பட்டு வருகிறது. எந்தக் காலம் என்றாலும பக்தி என்பதை மாற்றி அமைக்க முடியாது. தமிழ் இலக்கியம் வளர்ந்த பரப்புக்கு சைவ, வைணவ இலக்கியங்களும் பெரும் பங்கு கொண்டுள்ளன. சங்க காலம் முதல் இருக்கும் பக்தியில் இடைக்காலத்தில் நடந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நாவலில் காட்டப்பட்ட திருவரங்களை எவ்வாறு அணுகுவது அல்லது பார்ப்பது என்ற கருத்தினை தேட இவ்வாய்வுக் கட்டுரை உதவும். திருவரங்கத்தின் வரலாறு, திருவரங்கன் உலா இயற்றிய வேணுகோபாலன், அஷ்டப்பிரபந்தம் இயற்றிய பிள்ளை பெருமாள் ஐயங்கார் இருவரும் அரங்கனைஅணுகியவிதம்குறித்துஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

மாலிகாபூர், திவ்ய தேசம், விஜயம், சுல்தான், மணவாளன், நம்பெருமாள்.

முன்னுரை

சங்கம் தோன்றிய போதே சமயம் தமிழகத்தில் தோன்றியது எனலாம். அந்த சமயநெறிகளில் வைணவ சமயமும் ஒன்று. வைணவத்தின் முழுமுதற் கடவுள் திருமால் திருமாலுக்கு நின்ற திருக்கோலம், நிடந்த திருக்கோலம், இருந்த திருக் கோலம், கிடந்த திருக்கோலம் என்று நான்கு திருக்கோலங்கள் உண்டு. அதில் ஒன்று சயனத் திருக்கோலம் அதாவது கிடந்த திருக்கோலம். வைணவத்தில் 108 திவ்ய தேசங்களில் பெருமாள் உறைகிறார். அதில் முதல் வைணவத்திருத்தலம் ஸ்ரீரங்கம் தமிழில் திருவரங்கம். இந்த திருஅரங்கனை காலம் தோறும் புகழ்ந்துள்ளனர். நவீன காலத்தில் திரு வேணுகோபாலன் என்பர் மாலிகாபூர் படையெடுபின் போது திருவரங்கன் 48 வருடம் ஸ்ரீரங்கத்தை விட்டு வெளியே சென்று மீண்டு வந்த உண்மை சம்பவத்தை வதை எழுதப்பட்ட நாவல் என்ற புதினம் ஆகும். அந்த அரங்கனைப் பாடியதில் பிள்ளை பெருமாள் ஐயங்காருக்கு மிக்கிய பங்கு உண்டு திருவரங்கன் நாவல் காட்டும் அரங்கனும் பிள்ளை பெருமாள்

ஐயங்கார் காட்டும் அரங்கனும் என்ற நிலையில் இக்கட்டுரை அமைகிறது.

திருவரங்கன் உலா

திருவரங்கன் உலா மாலிக்கபூரியில் இருந்து தில்லி சுல்தான் முகம்மது பின் துக்ளக்கின் படைகளை திருவரங்கனைப் பற்றி அறிந்து கொள்ளையடிக்க வந்த வரலாற்று உண்மை சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு திருவேணு கோபாலன் இயற்றிய நாவலாகும். நாவலின் முதல் பாகம் திருவரங்கன் உலா எனப்பட்டது இரண்டாம் பாகம் மதுரா விஜயம் என்று வெளியிடப்பட்டுள்ளன. திருவரங்கன் உலாவில் ஆசிரியர் திருக்கோயின் வரைபடம் வரலாற்று உண்மைகளில் பெரும் பகுதி கதையாக வந்துள்ளது. மாலிக்காபூர் போர், திருவரங்கத்தில் பல ஆயிரம் பேர் அரங்கனுக்காக உயிர் விட்டது என அனைத்து தகவல்களையும் கூறியுள்ளார்.

அஷ்டப்பிரபந்தம்

அஷ்டம் என்றால் எட்டு என்று பொருள் பிரபந்தம் என்றால் நன்கு கட்டப்பட்டது. பிள்ளை பெருமாள் ஐயங்கார் இந்த எட்டு நூல்களையும் இயற்றியுள்ளார்.

- திருவரங்கக் கலம்பகம்
- திருவரங்கத்து மாலை
- திருவரங்கத்து திருவந்தாதி
- சீரங்கநாயகர் ஊசல்
- திருவேங்கட மாலை
- திருவேங்கடத்தந்தாதி
- அழகர் அந்தாதி
- நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி.

திருவரங்கனும் திருவரங்கமும்

திருவரங்கன் முதலில் திருவரங்கத்தில் இல்லை, முதன் முதலில் பிரம்ம லோகத்தில் தான் இருந்தார் பின்பு இராமன் வம்சாவழியினர் பிரம்மனிடம் கேட்டு பெற்றனர். அயோத்தியில் வைத்து வழிபட்டனர். அயோத்தியில் இராமன் வழிபட்ட அரங்கன் என்பதாலே அரங்கனுக்கு இராமனுடைய திரு நாமங்கள் நிறைய உண்டு. பிற்காலத்தில் ஸ்ரீராமன் இராவணனை வதம் செய்த பிறகு அயோத்தி வந்து பட்டாபிஷேகம் நடத்துகின்றனர். அதன் நினைவாக பலரும் பரிசுப் பொருள் பெற்றுச் செல்கின்றனர். அந்த நேரம் அங்கு வந்த வீபிஷணனுக்கு ஸ்ரீராமர் தங்கள் முன்னோர் வழிபட்ட திருவரங்கன் சிலையை வழங்குகிறார். வழியில் எங்கும் இதனை வைக்கக்கூடாது என்று கூற காவேரிக் கரையில் அனுதினக் கடமையாற்ற இறங்கிய விபிஷணன் சிலையை காவேரிக் கரையில் வைக்க நேர்ந்தது மீண்டும் எடுக்க முயன்ற போது முடியவிலை என அரங்க நாதர் அதே இடத்திலேயே தங்கிவிட்டார் விபிஷணன் மனவருத்தம் அடையக் கூடாது என்று இன்றும் அரங்கர் இலங்கை நோக்கியே இருக்கிறார் இதனை ஆழ்வார்களும் பாடியுள்ளனர்.

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை

அரவணை துயிலுமா கண்டு
உடல்எனக் குருகு மாலோ
என்செய்கேன் உலகத் தீரே
– [திருமாலை]

ஸ்ரீராமனிடம் இருந்த பெற்ற அரங்கன் அதன் பொருட்டே திருவரங்கன் உலாவில் குலசேகரன் - (ஸ்ரீராமருக்கான மற்றோர் பெயர்) என்ற கதை மாந்தர் அரங்கன் உடன் எப்போதும் வருவார்.

அஷ்டப்பிரபந்தம் எட்டு நூல்களில் நான்கு நூல்கள் திருவரங்கனைப் பற்றி பாடப்பட்டுள்ளன. அவற்றோடு திருவரங்கன் உலா நாவலை ஒப்பிட்டுப் பார்க்க இடம் உண்டு.

திருவரங்கன் சங்க காலம் முதல் சமகாலம் வரை

ஆயிரம் விரித்தெழு தலையுடை
அருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெரு
துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த
வண்ணமும்
.....
பங்குனி முயக்கம் கழிந்த
வழிநாள்,
வீ இலை அமன்ற மரம் பயில்
இறும்பில்
தீ இல் அடுப்பின் அரங்கம் போல,

அகநானூறிலும் 137 பாலை பாடலை உறையூர் முதுகூத்தன்னார் பாடியுள்ளார் அதில் திருவரங்கத்தில் நடக்கும் பங்குனி உத்திரம் திருவிழா பற்றிய குறிப்புள்ளது.

ஆழ்வார்கள் 247 பாசுரங்களில் அரங்கனைப் பாடியுள்ளனர். திருவரங்கத்தில் உள்ள பெருமாள் அழகிய மணவாளர் என்று பெயர் அஷ்டப் பிரபந்தத்தில் இவ் அரங்கனை பிள்ளை பெருமாள் ஐயங்கார் சிறப்பாகப் பாடுகிறார். திருவேணு கோபாலன் திருவரங்கன் என்ற புதினத்தில் செய்திகளை சிறப்பாகச் சொல்கிறார்.

மாலிகாபூர் படை எடுப்பின் போது தமிழ்நாட்டில் பல உற்சவ சிலைகளை கொள்ளை அடிக்க முயன்றான் திருவரங்கத்தில் சிலை உள்ளதை அறிந்து அங்கு கொள்ளையடிக்க வரும் போது இந்தச் செய்தி அறிந்த பிள்ளை லோகாச்சாரி அரங்கன் சிலையை எடுத்துக் கொண்டு மூன்று குழுவாக பிரிந்து செல்கிறார். அந்த உற்சவ சிலைக்கு அழகிய மணவாளன் என்று பெயர் அதனை பிள்ளை பெருமாள் ஐயங்கார் அடிதோறும் மணவாளன் வரும் படி பாடியிருப்பார்.

மணவாளர விந்தைமார் நோக்க
விம்மை மறுமையின்மா
மணவ்ளர்தம்பதம்வாய்த்திடுங்
கோயிலில்வந்தவந்த
மணவாளர்பொற்றிருப்பாதாம்
புயங்கட்குமாலையென
மணவாளர்சூடும்யமக
வந்தாதியைவாசிமினே
– திருவரங்கத்து அந்தாதி
சிறப்புப்பாயிரம்

மேலும்

மறைப்பொருளோ வச்சிரப்
பொருளோ மனுவே முதலா
முறைப்பொருளோ விதிகாச
புராணமுதுப் பொருளோ
விறைப்பொருளா நம்
பெருமாளுடைத்
திருவெட்டெழுத் துள்ளுறைப்
பொருளோ மணவாளர்
தமாலையினுட் பொருளே.
– திருவரங்கத்து மாலை சிறப்புப் பாயிரம்

அஷ்டப்பிரபந்தத்தில் பிள்ளை பெருமாள் ஐயங்கார் திருவரங்கத்து மாலையில் திருஎட்டெழுத்து என்பது நம்பெருமாளே என்கிறார். திருவரங்கத்தில் உள்ள உற்சவர் மூர்த்திக்கு நம்பெருமாள் என்ற பெயர் வந்த வரலாற்றை திருவரங்கன் உலா நன்கு பேசுகிறது. திருவரங்கன் உலாவில் மதுர விஜயம் என் பகுதியில் முகமது பின் துக்ளக் ஆட்சி அழிந்த பின் 48 ஆண்டுகள் ஒவ்வொரு இடமாக இருந்து பின்னர் திருவரங்கத்தை வந்து அடைகிறார் அவ்வாறு அடையும் போது உண்மையான அரங்கன் சிலையுடன் பல இடங்களில் இருந்தும் சிங்க வரத்தில் இருந்து வந்த புதிய அரங்கன் சிலையும் அதில் இருந்தது. உண்மையான அரங்கனை கண்டு பிடிக்க வயது முதிர்ந்த 90 வயதான வைஷ்ணவ வண்ணன் ஒருவர் தான் அரங்கனின் திரு அடையை திருமஞ்சனம் செய்து அப்படியே திரு அடையில் இருந்து வரும் தண்ணீரைப் பருகி இவர்தான் நம்பெருமாள் என்று கண்டு கொண்ட வரலாறு திருவரங்கன் உலா மூலம் அறிய முடிகிறது (திருவரங்கன் உலா 306).

திருவரங்கன் ஸ்ரீரங்க வாசிகளைப் பொருத்தவரை அவர்கள் கடவுள் அல்ல அவர்களின் நாயகன், அவர்களில் ஒருவர் அவ்வாறு கருத்துக் கொண்டவர்கள். பிள்ளை பெருமாள் ஐயங்காரும் அரைக் கலை வேலை யரங்கனுக் காட்பட வாதரியே (23 திருவரங்கத்து மாலை) அரங்கனை ஏற்றுக் கொண்டார்.

நிறைவாக

திருவரங்கன் உலா, பற்றி செய்தியும் அஷ்டப்பிரபந்தத்திலும் அரங்கன் பற்றி பதிவு ஒப்புமை கொண்ட பதிவாக உள்ளது. சமய நெறிகளில் கோயில்களில் சொத்துகளை வைத்த தற்கு காரணம் என்ன? ஏன் அரங்கன் சிலைமேல் அதுணை ஈர்ப்பு என மேல் ஆய்வு செய்ய வழி உண்டு. திருவரங்கன் உலா நாவல் அறியலாகும வரலாற்று உண்மைகளை தனித்து ஆய்வு செய்யவேண்டியுள்ளது.

துணை நூற்பட்டியல்

1. திருவரங்கன் உலா, ஸ்ரீவேணுகோபாலன், நான்கு தொகுதிகள் உமா பதிப்பகம், சென்னை ஆண்டு 2004
2. அஷ்டப்பிரபந்தம் தனித் தனி நூலக பாரிநிலையம் சென்னை.ஆண்டு 2011
3. நாலாயிர திவ்யப் பிரபந்தம், பள்ளத்தூர் பழனியப்பன் மூலமும் உரையும் வானாதி பதிப்பகம் சென்னை 2008
4. அகநானூறு புலியூர் கேசிகன் பாரிநிலையம் சென்னை ஆண்டு 2006.

பாண்டியன் பரிசு பறைசாற்றும் பகுத்தறிவும் சமூக விடுதலையும்

வி. இலட்சுமி
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
சேர்க்காடு – வேலூர். தொடர்பு எண் : 9443882975

ஆய்வுச்சுருக்கம்

காவியங்களுள் சிறப்புற்றுத் திகழும் புரட்சிக் காப்பியமான சிலப்பதிகாரத்தைப் போன்ற புரட்சிக்காப்பியமாகப் பாண்டியன் பரிசு எனும் காப்பியத்தைப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் படைத்துள்ளார். பெண்ணின் வீரத்தையும் பொய்மையின் சூழ்ச்சியையும் இக்காப்பியத்துள் மிக விரிவாகப் பாடியுள்ளார். சூழ்ச்சியை வீழ்த்திப் பெண்மை வீரத்துடன் வெற்றி பெறுவதை இக்கட்டுரை எடுத்துக்காட்டு கிறது. பகுத்தறிவுப் பாதை, தலைமைக் காவிய மாந்தர்களின் பண்பு நலன்கள், அன்னத்தின் ஆளுமை, அன்னத்தின் காதல் துயர், ஆத்தாக்கிழவியின் அச்சமற்ற செயல், பூதங்கள் பற்றிய பொய்மை ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரை பாண்டியன் பரிசு பறைசாற்றும் பகுத்தறிவையும் சமூக விடுதலையையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

திறவுச்சொற்கள்

பாண்டியன் பரிசு, அன்னம், ஆத்தாக்கிழவி, கண்ணுக்கினியாள், நீலி, நரிக்கண்ணன், வேலன், கதிர்நாடு, கணக்காயர், விழுமிய பண்புகள், பூதங்கள், மாம்பூ, விடுதலை நாள்.

முன்னுரை

இரண்டாம் நூற்றாண்டில் முடியாட்சி நடைபெற்ற காலத்தில் அரச குடும்பத்தைச் சார்ந்த இளங்கோவடிகள், குடிமக்களின் வாழ்வியலையும் அதில் எழும் பிரச்சனை களையும் அடிப்படையாகக் கொண்டும் ஒரு காவியத்தை எழுதியமையால் 'சிலப்பதிகாரம்' புரட்சிக் காவியமாக போற்றப்பட்டது. பின்னர் இருபதாம் நூற்றாண்டில் எழுந்த 'பாண்டியன் பரிசு' என்னும் சிறுகாவியம் குடியாட்சி நடை பெறும் காலத்தில் அரச குடும்பத்தின் பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டு சாதாரண குடும்பத்தில் பிறந்த பாரதி தாசனால் இயற்றப்பட்டது. மேலும் பாண்டியன் பரிசு ஆட்சி உரிமையைச் சாதாரண குடிமகன் மீட்டுத் தருவதாக அமைந்தமையால் புரட்சிக் காவியமாக சிறப்பிக்கப்படுகிறது. அத்தகு புரட்சிக் காவியத்தின் இயல்புகளில் பகுத்தறி வினையும், சமூக விடுதலையையும் காவியத் தலைவியான அன்னத்தின் வாயிலாக ஆய்வுக்கு உட்படுத்துவதை

இவ்வாய்வுக் கட்டுரை நோக்கமாகக் கொண்டமைந்திருக்கிறது.

காவியமாக எழுந்த பின்னணி

உரைநடையால் எழுதுவதினும் கவிதையால் குறைந்த சொற்களால் ஒன்றைச் சொல்லி விடலாம்.

"பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்"[1]

என்றார் வள்ளுவர். அதன்படி பாரதிதாசன் முதலில் பாண்டியன் பரிசினை உரைநடையாக்கவே எண்ணி, கதையை எழுதி முடித்தார். பின்னர் பெருஞ்சுவடியாக இருக்கக்கூடும் என்ற எண்ணத் தாலும், எளிமையாகப் படித்துக் கருத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற அவாவினாலும் இக்கதையை ஏறக்குறைய நானூறு எண்சீர் விருத்தங்களால் எழுதி முடித்துக் கவிதை வடிவில் காவியமாக்கி யுள்ளார். இதனைப் பாண்டியன் பரிசு நூலின் முன்னுரையில் "எளிய நடை ஒன்றாலேயே தமிழின் மேன்மையைத் தமிழின் பயனைத் தமிழர்களுக்கு ஆக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை"2 என்று பாரதிதாசன் பதிவு செய்துள்ளார். அவ்வாறே, எளிய நடையில் பெண் பாத்திரங்களை முதன்மைப்படுத்தி அறிவார்ந்த பெண் சமூகத்தின் ஆற்றலைக் காவியமாகப் படைத்துள்ளார்.

கதையின் தன்மை

அரசகுடும்பத்தைச்சார்ந்த பெண்ணைக் குடிமகன் ஒருவனை மணக்கச் செய்து, கற்பனைக் கதையில் சமூகம் சார்ந்த சமத்துவத்தை நிலை நாட்டும் வகையிலும்; பெண்களின் அளவற்ற அறிவினையும் ஆற்றலையும் வெளிக் கொணரும் வகையிலும் பாண்டியன் பரிசு காவியத்தைப் பாரதிதாசன் படைத்துள்ளார். அரச குடும்பத்துப் பெண் தன் நிலையி லிருந்து மாறி, இக்கட்டான நிலையில் இருப்பதை,

"பாழடைந்த இருள்வீட்டில்
விளக்கு, வானப்
பணிப்புகையில் எழுந்தகதிர்,
அன்னம் என்பாள்!
வாழஒரு பாண்டியனார் பரிசு
வேண்டி
வாடுகின்றாள் நாள்பலவும்
வறிதே யாக"[3]

என்னும் வேழ மன்னனின் பேச்சாக பாரதிதாசன் வெளிப்படுத்துவார். அன்னம் அரசன் மகளாயினும் அவள் உரிமை, 'பாண்டியன் பரிசான பேழை' கண்டுபிடிக்கப்படுவதைப் பொறுத்தே இருந்ததால், அவள் வாழ்வோ மன்னன் மகளாக இல்லாமல் ஏழையான ஆனால் வீரமான ஆத்தாக் கிழவியின் பாதுகாப்பில் பொதிந்திருந்தது. ஆத்தாக் கிழவியோ தவறினைத் தட்டிக்கேட்கும் தைரியம் கொண்ட பெண்ணாக நாட்டின் விடுதலைக்கும் சமூக விடுதலைக்கும் தன் உயிரினைக் கூட கொடுக்கும் அளவிற்குத் தயார் நிலையில் தன் மகனை வளர்த் தெடுத்த வீரத்தாயாக காட்டப்படுகிறாள்.

பகுத்தறிவுப் பாதை

புரட்சிக்கவிஞரின் பகுத்தறிவுக் கொள்கையை விளக்குவதற்காக 'பூதம் புதையல் காக்கிறது' எனக் கற்பிக்கப்பட்ட பொய்மை, பல நிகழ்வுகளாலும், கதை

மாந்தரின் வாய்மொழியாலும் விளக்கப் பட்டது. முடியாட்சியின் கொடுமை களைச் சாடுகின்ற படைப் பாகவும் சமூக விடுதலையின் முயற்சிக்குத் துணை நிற்கும் வலிமை மிக்க எழுத்தா யுத மாகவும் பாண்டியன் பரிசு விளங்குகிறது.

"..... வைகல்
எண் தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால் .."[4]

போன்று தேர்ந்த தெளிந்த வலிமையான சொற்களைப் பயன்படுத்திப் புரட்சிக் காவியத்தைப் பாரதிதாசன் படைத்துள்ளார்.

தலைமைக் காவிய மாந்தர்களின் பண்பு நலன்கள்

காவிய மாந்தர்களைப் படைப்பதிலும், அவர்களுக்கு முக்கியத்துவம் தருவதிலும் படைப்பாளனுக்கு இருக்கும் ஆற்றலைப் பொறுத்தே காவியம் வெற்றிபெறும். ஒரு காவியத்தின் நிறைவும் பொலிவும் அதில் போற்றப்படும், தலைமைக் காவிய மாந்தர்களின் சிறப்பில்தான் அடங்கி யுள்ளது. பாரதிதாசனின் பாண்டியன் பரிசு தலைமைக் காவிய மாந்தர்களாக பெண்களையே சிறப்பிக்கிறது. அன்னம், ஆத்தாக்கிழவி, கண்ணுக்கினியாள், நீலி ஆகிய பெண் கதைமாந்தர்கள் வீரமும் விவேகமும் நிறைந்தவர்களாக காவியம் நெடுகிலும் காட்டப்படுகின்றனர்.

"அன்னத்தின் ஆவியினை
அகற்ற வேண்டும்;
ஆவிநிகர் பேழையினை
அடைதல் வேண்டும்"[5]

என்னும் நரிக்கண்ணனின் ஆணவத்தினை அழிப்பவர்களாக, நயவஞ்சக எண்ணத்தை நசுக்குபவர்களாக அன்னம் மற்றும் ஆத்தாக்கிழவியின் பாத்திரப் படைப்பு அமைந்திருப்பது பெண் விடுதலைக்குப் பெண்ணினம் எடுத்துவைக்க வேண்டிய முன்னேற்பாடாக விளங்குகிறது.

அன்னத்தின் ஆளுமை

காவியத் தலைவியான அன்னம் நாட்டை இழக்கிறாள்; தாய் தந்தையை இழக்கிறாள். தன் நாட்டை ஆளும் உரிமையை மீண்டும் நிலைநாட்ட பாண்டியன் பரிசான பேழையை மீட்டுத் தருபவரையே, தான் மணப்பதாக மன உறுதி கொள்கிறாள். தனது தாய்மாமனான நரிக்கண்ணனை எதிர்கொண்டு அவன் சூழ்ச்சிகளை முறியடிக்கின்றாள்.

"ஒருத்தன்எனை மணப்பதெனில்
அன்னோன், என்றன்
உயிர்பேழைதனைத்தேடி தருதல்
வேண்டும்"[6]

எனக்கூறும் அன்னத்திடம் பேழையைக் கொண்டு வருபவன் கீழ்ச் சாதியாக இருந்தால் என்ன செய்வாய்? என்ற வினா முன்வைக்கப்படும்போது அவள் "இவ்வுலகில் எல்லோரும் சமமே" என்று பதில் கூறுவது அவளது சமத்துவப் பார்வையை வெளிக்காட்டுகிறது.

அன்னத்தின் காதல் துயர்

புனல்தரு புணர்ச்சி நடைபெறுவதற்கு முன்னர் காவியத் தலைவியான அன்னமும் காவியத் தலைவனான வேலனும் ஒருவரையொருவர் அறியா தவர்கள். ஆத்தாக்கிழவியின் குடிசையில் தான் இருவரும் முதன்முதலாக அறிமுகம்

ஆகின்றனர். இருவரின் அன்பான பேச்சு களுக்குப் பிறகு அன்னம் வேலன் மீது காதல் கொள்கிறாள். வேலனோ "நானோ மெத்த ஏழை" என்னும் எண்ணத்தில் ஒதுங்கப் பார்க்கிறான்.

"தாமுறு காமத் தன்மை
தாங்களே உரைப்ப தென்பது
ஆமெனல் ஆவ தன்றால்
அருங்கல மகளிர்க்கு அம்மா"[7]

என்பதற்கிணங்க அன்னமும் தன் காதலை வெளிப்படுத்தாது, உள்ளத்துள்ளே ஏங்கி மயங்குகிறாள். நாளடைவில் வேலனிற்கும் அன்னத்தின் மீது காதல் ஏற்படத் தொடங்குகிறது. வேலன் அவளைத் தன் இதயத்தில் வைத்துக் கொள்கின்றான். அன்னத்தின் காதலோ உள்ளுக்குள் வளர்ந்து தீவிரமடைகிறது.

'ஏழு நாளில் வழங்கப்படாவிட்டால் கதிர் நாட்டின் ஆட்சி மாழைக்கு வழங்கப் படும்' என்ற வேழ மன்னனின் முரசொலி கேட்டவுடன் ஆத்தாக்கிழவியும் அன்னமும் நெஞ்சம் கலங்குகின்றனர். ஆத்தாளின் மடிமீது தலை சாய்த்துக் கொண்டு அன்னம்,

"வாயோரம் 'உயிர் வாங்கும்
சிரிப்பு' மின்னி
வழிகின்ற வேலவனின் திரு
முகத்தில்
மாயாத என்நெஞ்சம் சென்று
சென்று
வாழ்வதனை இவ்வையம் அறிவ
துண்டோ?"[8]

என்று துயர் கொள்கிறாள்.

ஆத்தாக்கிழவியின் அச்சமற்ற செயல்

கதைத் தலைவன் வேலனின் தாய் ஆத்தாக்கிழவியும் தந்தை வீரப்பனும் பேழை அன்னத்திற்குக் கிடைக்க துணைபுரிகின்றனர். பேழையைத் தேடும் பணியில் மனைவி ஆத்தாவே கணவன் வீரப்பனின் காலைத் துண்டிக்க நேர்கிறது. அப்போது நடக்கும் சண்டையில் அவள் தன் இடது கையையும் இழக்கிறாள். ஆனாலும் எதற்கும் கலங்காத வீரப் பெண்ணாய் ஆத்தாகிழவி கருதப்படு கிறாள். கட்டிய கணவனே ஆனாலும் அவன் களவுத்தொழில் புரிவதால் சாடுகிறாள். "நீயோ திருடுவதை நிறுத்த வேண்டும் அன்றேல், என்னைத் தீண்டுவதை நிறுத்தவேண்டும்" என்று உறுதியாய்ச் சொல்கிறாள். மகன் வேலனை வீரனாகவும் விழுமிய பண்புகள் நிறைந்தவனாகவும் வளர்க்க சீனு என்னும் கணக்காயரிடம் அவனை ஒப்படைக்கிறாள்.

"எனை ஈன்ற தந்தைக்கும்
தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும்
என்னால்
தினை அளவு நலமேனும்
கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள் எனக்குத்
திருநா ளாகும்"[9]

என்று ஆத்தாகிழவி தன் நாட்டு நலனையே தன் நலனாக என்னும் அளவிற்கு வேலனை உருவாக்குகிறாள். அதனால் அன்னத்தின் வாரிசுரிமை அடங்கிய பொற்பேழை வேலன் மூலம் மீட்கப்படுகிறது.

பூதங்கள் பற்றிய பொய்மை

நரிக்கண்ணன் மூலம் பரவிய பூதச்செய்தி ஏமாற்றும் செயல் என்பதை அறிந்து அன்னத்தின் ஆட்கள் துறவியின் யோசனைப்படி செயல்படுகின்றனர். அன்னமும் வேலனும் பம்பரம் போல் சுழன்று பணி செய்கின்றனர். "பிறந்தது விடுதலை நாள்! பிறந்ததின்பம்!" என்று அன்னத்தின் வீரர்கள் ஆர்ப்பரிக்கின்றனர். வேலன் தலைமையில் பூதங்களை எதிர்க்கத் தயார் நிலையில் உள்ளனர். குறிப்பிட்ட நாள் இரவு வேலனும் மற்ற வீரர்களும் பூதங்களைக் கொன்று குவிக்கின்றனர். அன்னம் தன் வாளால் மாம்பூ அணிந்த நரிக்கண்ணன் பூதத்தை வெட்டி வீழ்த்தினாள். பூதங்களின் பிணங்கள் வரிசையாக அடுக்கப்பட்டு மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டன.

> "தொல்லைஇனிக் கதிர்
> நாட்டுக்கில்லை பூதச்
> சூழ்ச்சியோ வேரற்றுப் போன
> தாலே"[10]

என்று பூதத்தின் பொய்மை நிழல் நீக்கப்படுகிறது.

நிறைவுரை

பாரதிதாசனின் காவியங்களில் பகுத்தறிவும் பொதுவுடைமை சிந்தனையும் சமூக எழுச்சிக்கான சாத்தியக்கூறுகளும் முதலிடம் பெறுகின்றன. பாரதிதாசனின் கதைமாந்தர்களில், ஆண்களை விட பெண்கள் அறிவும் தெளிவும் துணிவும் வீரமும் மிக்கவர்களாகச் சித்தரிக்கப் பட்டுள்ளனர். அவ்வாறே பாரதிதாசனின் பாண்டியன் பரிசும் பெண்ணினத்தின் பகுத்தறிவினையும் சமூக விடுதலையையும் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. 'இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!' என்று பாகுபாடு காட்டும் சமூகத்தைச் சாடும் பாரதிதாசன் 'பகுத்தறிவு இல்லை யாயின் விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும்' என்பதனைப் பாண்டியன் பரிசு வழியே தெளிவு படுத்துகிறார்.

அடிக்குறிப்புகள்

1. கோ.பெரியண்ணன் (உ.ஆ)., திருக்குறள். எ.649.,ப..141., வனிதா பதிப்பகம், சென்னை. (நூற்றைந்தாம் பதிப்பு 2021)
2. பாவேந்தர் பாரதிதாசன்., பாண்டியன் பரிசு., (மு.இ)., மணிவாசகர் பதிப்பகம்., சென்னை., (ஆறாம் பதிப்பு 2003)
3. மேலது., இயல்.எ.59., ப.63
4. ஞா.மாணிக்கவாசகன்.(உ.ஆ)., புறநானூறு. (மூ.உ)., பா.எ.87., உமா பதிப்பகம்., சென்னை, (ஏழாம் பதிப்பு 2014)
5. பாவேந்தர் பாரதிதாசன்., பாண்டியன் பரிசு., இயல்.எ.13., ப.16., மணிவாசகர் பதிப்பகம்., சென்னை., (ஆறாம் பதிப்பு 2003)
6. மேலது., இயல்.எ.40., ப.38
7. ந.சுப்புரெட்டியார்., பாண்டியன் பரிசு ஒரு மதிப்பீடு., ப.56., சுரதாபுக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்., சென்னை. (முதற் பதிப்பு 2002) (எ.ஆ.ப)
8. பாவேந்தர் பாரதிதாசன்., பாண்டியன் பரிசு., இயல்.எ.78., ப.84., மணிவாசகர் பதிப்பகம்., சென்னை., (ஆறாம் பதிப்பு 2003)
9. மேலது., இயல்.எ.55., ப.53
10. மேலது., ப.83.

கிடை குறுநாவல் : மேய்ச்சல் தொழில்சார் பண்பாட்டு அடைவு

முனைவர் மு. ஏழுமலை
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)
அரும்பாக்கம், சென்னை.

ஆய்வுச் சுருக்கம்

கி.ரா. எனும் கி. ராஜநாராயணன் அவர்கள் தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். கரிசல் காட்டு மக்களின் வாழ்க்கை முறைகளை அம்மக்களின் மண் மணத்தோடு பண்பாட்டு அசைவுகளாகப் பதிவு செய்தவர். அப்பதிவுகளுக்கான இலக்கிய வடிவங்களாகச் சிறுகதை, நாவல், குறுநாவல், கட்டுரை, சொல்லடைவு எனும் வடிவங்களைக் கையாண்டவர். பல்வேறு இலக்கிய வடிவங்களின் மூலம் கோவில்பட்டி உள்ளிட்ட கரிசல் பகுதிவாழ் மக்களின் இயக்கத்தைப் பேச்சுவழக்கோடு இலக்கிய வழக்காகப் பதிவு செய்த பெருமை கி.ரா. அவர்களுக்குரியது. இந்நிலையில், 'கிடை' என்னும் குறுநாவல் மூலம் மேய்ச்சல் தொழில் சார்ந்த வழக்காறுகளை எவ்வாறு பண்பாட்டு அடைவாக்கியுள்ளார் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

கிடை, பண்பாட்டு வெளி, வரைவியல், கொச்சைக் கிடா, துண்டு, துண்டுக்காரர், கிடை மறிப்பு

தமிழ் இலக்கண, இலக்கியங்களில் ஆயர் பற்றியக் குறிப்புகள்

தமிழ்ச் சமூக வளர்ச்சியைப் பொறுத்த வரையில் நாடோடிச் சமூகம், வேட்டைச் சமூகம், வேளாண்மைச் சமூகம் என்ற தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சி நிலையைக் கொண்ட சமூக அமைப்பைக் கொண்டுள்ளது. இவற்றில், மனிதன் நாடோடி வாழ்க்கையைப் பின்பற்றிய காலத்தையடுத்து விலங்குகளைப் பழக்கி வளர்க்கத் தொடங்கிய காலம் ஆயர் சமூகத் தோற்றக் காலம் எனலாம். இக்காலத் தொன்மையைப் பற்றி பக்தவத்சல பாரதி அவர்கள்,

> "காடும் காடு சார்ந்த இடமும் முல்லை. இங்கு ஆயர் வாழ்வும் வன்புல வேளாண்மையும் முக்கியத் தொழில்கள் ஆகும். உலகளாவிய நிலையில் பார்க்கும் போது ஆயர் வாழ்வு என்பது புதிய

கற்காலத்திலேயே (கி.மு. 3000 – 6000) தோன்றிவிட்டது. பெரும்பாலும் புதிய கற்காலத்திற்குப் பின்னருங்கூட கால்நடை வளர்ப்பு என்பது ஆயர் நாடோடியமாகவே காணப்பட்டது''[1]

என்ற மேற்கோள் மூலம் குறிப்பிடு கிறார். இதன் மூலம் ஆயர் சமூகத்தின் தொன்மையான தொழில் நிலையையும், அத்தொழில் சார்ந்த மக்களின் பண்பையும் அறிந்து கொள்ளலாம்.

ஆயர் சமூகத்தின் தொன்மையை அறிந்துகொள்ளும் நிலையோடு, தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்திலும், சங்ககால இலக்கியங்களிலும் மேய்ப்புத் தொழிலை உடைய ஆயர்கள் குறித்தும், மேய்ப்பு நிலமாகக் கருதும் முல்லை நிலத்தைக் குறித்து விரிவான பதிவுகள் இடம்பெற்றிருப்பதையும் அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. இந்நிலையில், தொல்காப்பியத்தில், 'மாயோன் மேய காடுறை உலகம்' என்று குறிப்பிடுவதிலிருந்து காடும் காடு சார்ந்த முல்லைத் திணை மக்களின் ஒழுக்கத்தின் தொன்மையை அறிந்துகொள்ளலாம். திணை என்னும் சொல்லினுடனான பொருள் விளக்கம் ஓர் இனக்குழுப் பண்பாட்டு வரையியல் ஆகும். ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்யக்கூடிய அதாவது மேய்ப்புத் தொழில் செய்யும் ஆயர்கள் குறித்த பதிவுகளும், பண்பாட்டுச் சொல்லாடல்களும் ஈராயிரம் ஆண்டு காலத்திற்கும் முற்பட்ட தொல்காப்பிய இலக்கணப் பதிவு, தமிழினம் பெற்ற சமூக வளர்ச்சிக்குரிய தொன்மையின் அடையாளமாகும்.

தொல்காப்பிய இலக்கணத்தில் மட்டுமின்றி, சங்க இலக்கியக் காலத்தில் உருவான சங்க இலக்கியங்களிலும் மேய்ப்புத் தொழில்கொண்ட ஆயர் சமூகத்தினரின் வாழ்வியல் குறித்து விரிவானதொரு பதிவு அமைந்துள்ளதை,

> சங்க காலத்திலும், அதற்குப் பின்னரும் கூட ஆயர் வாழ்வைப் பார்க்கும்போது அது உண்மையான நாடோடியமாகத் தெரியவில்லை. ஆயர்கள் நிலையான குடியிருப்புகளில் வாழ்ந்துள்ளனர் (நற்.169; அகம்.284). பருவ காலங்களுக்கு ஏற்ப மேய்ச்சல் நிலங்களைத் தேர்ந்தெடுத்து இடம்பெயர்ந்து கால்நடைகளை வளர்த்து வந்தனர். அரை நாடோடியம் வாழ்க்கை முறையே சங்ககால ஆயர்களிடம் இருந்ததாக அறிய முடிகிறது.[2]

என்ற பக்தவத்சல பாரதியின் மேற்கோள் உணர்த்துகிறது.

சங்க காலத்தைத் தொடர்ந்து இக்காலம் வரை இடையர் உள்ளிட்ட சில சாதியினர் மேய்ப்புத் தொழிலைச் செய்துவருவதைக் காணலாம். இவ்வாறு கால்நடைகளை மேய்க்கும் தொழில்கள் கொண்ட ஆயர்கள் தம் தொழில்சார்ந்த வழக்காற்றின் அடிப்படையில் ஒரு பொதுப் பண்பாட்டைப் பின்பற்றிவரு வதையும் காணலாம்.

இந்நிலையில், ஆயர்கள் என்ற சொல்லை மேய்ப்புத் தொழிலைச் செய்யக்கூடிய இடையர் இனத்தினரோடு

மட்டும் குறுக்கிப் புரிந்துகொள்ளும் புரிதல் சூழலும் தமிழ் மரபில் உண்டு. ஆனால், ஆடு வளர்ப்பவர் அனைவரும் ஆயர்கள்தான். இது ஒரு தொழில்: சாதி அல்ல[3] என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

கிடை நாவலின் கதைக் கரு

கி. ராஜநாராயணன் கிடை என்னும் குறுநாவலில் ஆயர் சமூக வாழ்வியலை அச்சமூகத்தின் ஒரு பண்பாட்டு அடைவைப் போல் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சமூகம் என்பது ஒரு கூட்டு மனநிலையிலான ஒரு பொதுப் பண்பாட்டைக் கொண்டிருப்பது. ஆகவே, ஆயர் சமூக வாழ்வியலை மையமாகக் கொண்டு கதை கூறும் கி.ரா. அவர்கள், நுன்னகொண்ட ஸ்ரீ வேங்கட ராமானுஜுலு நாயக்கர், ஆட்டுக்கார ராமசுப்பா நாயக்கர், கிட்ண கோனார், பச்சைப் போர்வை கோபால் நாயக்கர், கந்தையா, ராக்கம்மாள், திம்மய நாயக்கர், சிவனுக் குடும்பனின் மகள் செவளி, எல்லப்பன், வகுவன கவுண்டர், கலெக்டர் நாயக்கர், ராமக் கோனார் ஆகிய முக்கியக் கதாப்பாத்திரங்களை அமைத்திருப்பதன் மூலம் நாயக்கர், கோனார், கவுண்டர், பள்ளர் ஆகிய இனங்களைச் சார்ந்த ஒரு சமூக அமைப்பைத் தான் கூறும் ஆயர் சமூகக் கதைக்கான சமூக அமைப்பாக இந்நாவலில் அமைத்துக் கொள்கிறார்.

இத்தகைய சமூக அமைப்பில் நடைபெறும் பொதுப் பண்பாட்டுப் பகிர்வைக் கடந்து, நாயக்கர் இன எல்லப்பனும், பள்ளர் இன செவளியும் காதல் கொள்வதும் அக்காதலின் உச்சமாக ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது இருவரும் உறவு கொள்வதும் நிகழ்கிறது. இருவரும் தங்களை மறந்து இருந்த சூழலில் ஆடுகள் ராக்கம்மாள் பருத்திக் காட்டில் மேய்ந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது. மறுநாள் கிடை கலைக்கும்போது, ராக்கம்மாள் கிடை மறிக்கிறாள். ஆட்டுக்கார ராமசுப்பா நாயக்கர் காரணம் கேட்டபோது, தன்னுடைய பருத்திக்காடு ஆட்டுக்காரர் களால் சேதம் ஏற்பட்டிருப் பதைக் கூறுகிறாள். ஊர்க் கூட்டம் கூடுகிறது. பருத்திக் காட்டின் பாதிப்புக்குக் காரண மானவர்களையும், பருத்திக் காட்டின் பாதிப்பின் அளவையும் அளவிடுவதற் காகவும் திம்ம நாயக்கர் உள்ளிட்ட மூன்றுபேரை ராமசுப்பா நாயக்கர் அனுப்புகிறார். திம்ம நாயக்கர் தன்னுடைய தேர்ந்த அறிவுத் திறமையால் பருத்திக் காட்டின் அழிவிற்கு யார் காரணம்? என்பதைத் தெளிவாகக் கண்டு பிடிக்கிறார்.

ஊர்க் கூட்டத்தில் எல்லோரும் யாருடைய ஆடு பருத்திக் காட்டில் மேய்ந்திருக்கும் என்பதைத் திம்ம நாயக்கர் தெளிவாகக் கூறிவிடுவார் என்ற நம்பிக்கையோடும், இந்நிகழ்வு குறித்த பல்வேறு கற்பனைகளுடனான பேச்சு களும், பொன்னுசாமி நாயக்கர் தான் இதைச் செய்திருப்பார் என்ற பெரும் பாலானவர்களின் நம்பிக்கையுமாகப் பொழுது உச்சிக்கு வரும்வரை மக்கள் ஊர்க்கூட்டத்தில் இருக்கிறார்கள்.

திம்ம நாயக்கர் கூட்டத்தை நோக்கி வருகிறார். கீதாரி ஆட்டுக்கார ராமசுப்பா நாயக்கர், திம்ம நாயக்கரிடம், "என்ன செய்ய நாயக்கரே" என்று கேட்டதும், எல்லப்பன் தன் சாதியைச் சேர்ந்தவன் என்பதாலும், செவளி ஒரு பள்ளர் இனப் பெண் என்பதாலும் வழக்கம்போல் உண்மை ஊமையாகிறது. அதனால், "ஊர் என்ன செய்கிறதோ அதுதான் முடிவு" என்ற ஒற்றை வார்த்தைகளால் தன்னுடைய விசாரணையின் முடிவை முன்வைக்கிறார். இதோடு, ஒரு ஆலோசனையாக, தற்போது ராக்கம் மாளுக்கு ஏற்பட்ட நட்டத்தைக் கிடை விட்ட பொதுப் பணத்திலிருந்து செலுத்தி விடலாம். குறி கேட்டு யார் இந்தக் குற்றத்தைச் செய்தார்கள்? என்பதைக் கண்டுபிடித்து, அவர்களிடமிருந்து தண்டணைப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறுகிறார்.

குறி கேட்பதற்காகச் சிலர் செல்கிறார்கள். அவர்களால் இரண்டு இடத்தில் குறி கேட்கப்பட்ட நிலையில், இரண்டு இடங்களிலும் பொன்னுசாமி நாயக்கர் பெயரே கூறப்படுவதாகக் குறிகேட்கச் சென்றவர்களும் கூறுகிறார். பொன்னுசாமி நாயக்கர் ஏற்கனவே அந்த ஊரில் சிறுசிறு திருட்டுச் செயல்களைச் செய்திருப்பதால், பொன்னுசாமி நாயக்கர்தான் இந்தச் செயலையும் செய்திருப்பார் என்று ஊர்மக்களும் சந்தேகமில்லாமல் நம்பிக்கை கொள் கின்றனர். தண்டனைப் பணமும் பொன்னு சாமி நாயக்கரிடமிருந்து பெறப்படுகிறது.

திம்ம நாயக்கரின் துணையோடு எல்லப்பனுக்கு அவனுடைய சாதியில் ஒரு பெண் பார்த்துத் திருமண வைபவம் நடைபெறுகிறது. செவளி நல்ல வெயில் நேரத்தில் காட்டில் பருவமெய்தியதால் காத்துக் கருப்பு பிடித்திருக்கும் என்பதால் கோடாங்கி அரளிக் கம்பினால் அடிக்க, அந்த அடிக்கு ஏற்பத் தன் கதையை ஒப்பாரியாக வைத்துக் கொண்டிருந்தாள் என்பதோடு கதை முடிகிறது.

பண்பாட்டு வெளியின் இன்றியமையாமை

ஒரு சமூக அமைப்பில் சாதியப் பெரும்பான்மையின் செயல்பாடுகளில், தம் சாதியைச் சார்ந்தவரை பாதுகாப்பதும், வேறு வழியில்லாத சூழலில் தம் சாதியினரில் வலிமை குன்றியவரை குற்றவாளியாக்குவதும் ஒன்றாகும். அதேபோன்று சாதியச் சிறுபான்மை யினரின் உடல்சார் உறவில் மதிப்பீடு களைக் களைத்துவிடுவதும், திருமணம் உள்ளிட்ட பண்பாட்டு வெளியில் அவர்களை ஒடுக்குவதும், குற்றவாளிகளாக்குவதும் இயற்றப்படாத சட்டமாகும். இந்தச் சமூக சட்டகத்திற் குள்ளிருந்துதான் கிடை நாவலின் கதைப்போக்கைக் கி.ரா. அவர்களும் அமைத்திருக்கிறார்.

கி.ரா. அவர்களுக்கான தனித்தன்மை என்னவெனில், தம் கதைச் சொல்லுக்கான வலிமையாகத் தம் கரிசல் மண் சார்ந்த பண்பாட்டுக் கருவிகளை முதன்மை யாக்கிக் கொள்வதாகும். அதாவது கதை நடைபெறும் மண் சார்ந்த வாழ்வியலைப் பண்பாட்டு வெளியோடு அடைகாப்பது.

ஒரு வட்டாரம் சார்ந்த மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்யும்பொழுது, அப்பகுதிசார் பண்பாட்டுக் கூறுகளை ஒருங்கிணைத்துக் காண வேண்டியது இன்றியமையாதது. பண்பாட்டுக் கூறுகளைவிடுத்துப் பதிவு செய்வது இயலாததாகும். இத்தன்மையை ஞா. ஸ்டீபன் அவர்கள்,

'பண்பாடு என்பது எண்ணற்ற கூறுகளால் இணைக்கப்பெற்ற ஒழுங்கமைப்பு ஆகும். கற்றுணர்ந்து பகிர்ந்து கொள்ளப்படும் நடத்தை முறைகள் என மானிடவியலாளர்கள் கூறுவர். அது வெறும் நடத்தை முறைகளின் தொகுப்பு மட்டும் அன்று. நடத்தை முறைகள் குறிப்பிட்ட குழு வாழும் நிலவியல் காலச்சூழல், இயற்கை அமைவுகள், சுற்றி அமைந்திருக்கும் வெவ்வேறு குழுக்கள் ஆகியவற்றோடும் தொடர்புடையவை. எனவே நடத்தை முறைகளைத் தனித்தனியே பிரித்துப் பார்ப்பது என்பது அவற்றின் ஒருங்கிணைப்பைக் காணத் தவறுவதாக அமையும்'4

என்று கூறுவதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

ஒரு குறிப்பிட்ட எல்லையைச் சார்ந்த மக்களின் வாழ்வியல் கூறுகளின் தொகுப்பு அம்மக்களின் பண்பாடு என்ற புரிதலோடு, கி.ரா. அவர்கள், ஆயர்களின் தொழிலைச் சார்ந்த வழக்கங்களில் முதன்மையானதாக விளங்குவது தாங்கள் மேய்க்கும் ஆடுகளைக் கொண்டு கிடை இடுதல் ஆகும். கிடை இடுதல் என்பது, ஆயர்கள் மேய்க்கும் ஆடுகளை இரவுப் பொழுதில் ஒருவருக்குச் சொந்தமான நிலத்தில் இரவுப் பொழுதில் தங்க வைத்து, ஆடுகள் இடும் சாணத்தை நிலத்தின் உரமாகச் சேர்த்தல். நில உடைமையாளர் கிடை இடுதலுக்கு ஒவ்வொரு இரவுக்கும் ஒரு குறிப்பிட்டத் தொகையைக் கணக்கிட்டுக் கொடுப்பார். ஆடுகளுக்கு உரிமையானவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் மொத்தத் தொகையைச் சமமாகவோ அல்லது ஆடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவோ பங்கிட்டுக் கொள்வர். இவற்றைப் பக்தவத்சல பாரதி அவர்கள் தன்னுடைய களஆய்வின் மூலம் விளக்கும் பொழுது,

''பெரும்பாலும் அறுவடைக் காலங்களான தை மாதம் முதல் ஆனி மாதம் வரையிலான ஆறு மாதங்களுக்கு இந்தக் கிடை போடும் தொழிலை மேற்கொள் கின்றனர். கிடைபோடும் காலத்தில் கிடைக்கும் பணத்தின் சேமிப்பை அடுத்த ஆறு மாதங்களுக்கு வைத்துக் கொள்கின்றனர். அல்லது தங்களது ஆட்டுப்பட்டிகளிலிருந்து கிடைக்கும் புழுக்களைச் சேமித்து உரமாக ஐநூறு, ஆயிரம் ரூபாய் என கிடைக்கும் விலைக்கு விற்று அதனைச் செலவிற்கு வைத்துக் கொள்கின்றனர்''5

என்று பதிவு செய்திறார்.

கிடை நாவலில் வெளிப்படும் பண்பாட்டு வெளிகள்

ஆயர்கள் தாங்கள் மேய்க்கும் ஆடுகளை முதன்மையாகக் கொண்டு இடும் 'கிடை' என்னும் தொழிலை

மையமாகக் கொண்டு கதை சொல்லும் கி.ரா. அவர்கள் கிடைத் தொழிலை மட்டும் குறிப்பிடாமல், அத்தொழிலோடு தொடர்புடைய ஆயர்களின் வாழ்வியல், அவர்களோடு இயங்கும் இயற்கை, சூழலியல், நம்பிக்கைகள், வழக்காறுகள் முதலானவற்றையும் இணைத்து உரம் சேர்க்கிறார். இவை கி.ரா. அவர்களுக் குரிய தனித்தன்மையாகும். இவற்றை,

> "கி.ரா.வின் எடுத்துரைப்பில் ஒவ்வொரு வரியும் உணர்த்தும் தருணங்கள், நிகழ்வுகள் வெகுமதியானவை. கதவு சிறுகதையில் வரும் ஜப்தி நடவடிக்கை, கிடை நாவலில் ஆடுகள் பயிரை மேய்ந்து விடுவதால் பஞ்சாயத்தாரால் குறிகேட்டுத் தண்டனை வழங்குதல் முதலானவை கி.ரா.வின் வரைவியலில் நுட்பமான சூழல்கள் ஆகும்"6

என்று பக்தவத்சல பாரதி அவர்கள் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

கிடை நாவலில் வெளிப்படும் பண்பாட்டு நிலைகளில்,

1. ஆயர்களின் ஆட்டுவகைகளை வகைப்படுத்தும்போது அரியாடு, செவ்வாடு, செங்காத்து, கருங்காத்து, வெங்காலாடு, மறையாடு, கொப்பாடு, கிடா, மோளைக்கிடா, கொச்சைக்கிடா (பிறவியிலேயே விதையில்லாதது), கருத்தாடு, கோட்டை மறை எனப் பல்வேறு ஆடுகளின் வகைகளைப் பட்டியலிட்டிருப்பது.

2. ஆயர் தொழிலோடு தொடர் புடைய சொற்களான கீதாரி, துண்டு, துண்டத்துக் காரன், துறட்டி கம்பு, முள்வாங்கி, மொய் (21 ஆடுகளைக் கொண்டது) முதலான சொற்களைப் பயன்படுத்தியிருப்பது.

3. வெள்ளாட்டின் பால் வயிற்றுப் போக்குடைய குழந்தைகளுக்கு மருந் தாகவும், கண்களில் நோயுடையவர்கள் வெள்ளாட்டின் மடிப்பாலைச் சூடாகப் பீய்ச்சி விட்டால் நன்றாகும் என்ற மருத்துவத்தையும், ஆவாரஞ் செடியின் மருத்துவக் குணத்தையும் கி.ரா. இந் நாவலில் பதிவு செய்திருப்பது.

4. கிடைக்காரர்களுக்கான குழுமொழியைப் பற்றிக் கூறியிருத்தல்.

5. 'கும்பி காஞ்சா குதிரையும் வைக் கோல் திங்கும்' என்ற பழமொழியையும், விடுகதையைப் பற்றியும் கூறி நாட்டுப்புற வழக்காறுகளைப் பதிவு செய்திருப்பது.

6. குறி கேட்டுத் தண்டனை வழங்குவது, பேய், பிசாசுகளைப் பற்றி நம்பிக்கையால் உடுக்கை அடித்துப் பேய் விரட்டும் நாட்டுப்புற நம்பிக்கைகளைப் பதிவு செய்திருப்பது.

7. எழுத்தில் எழுதிக்காட்ட முடியாத ஒலிகளை வாயினால் உண்டாக்கிக் கொண்டே அவர் (ராமக் கோனாரு) ஆடுகளை மேய்த்துக் கொண்டிருப்பார் என்று கூறுவதன் மூலம் ஆடுகளோடு பேசுவதற்காக உள்ள மொழிகளைப் பற்றிக் கூறியிருப்பது.

முதலானவை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய பண்பாட்டு இயல்புகளைத் தான் கூறும் கதையோடு ஒன்றுபட்டுத் தான் கதை கூறும் முறைக்கும், கருத்தியலுக்கும் இயல்பாக உரம் சேர்ப்பது கி.ரா. தேர்ந்த ஒரு கதை சொல்லி என்பதற்கான அடையாளமாகும்.

முடிவுரை

"கிடை" என்னும் குறுநாவல் சிறந்த கதையாக இருப்பதோடு, ஆயர்களின் மேய்ப்புத் தொழிலையும், அத்தொழிலு டனான பண்பாட்டுக் கருவிகள் அறுபடா இழைபோல் தொடர்ந்து அம்மக்களின் வாழ்வியலில் இணைந்து இயங்கு வதையும் பதிவு செய்துள்ளதும் சிறப்பாகும். இதன் மூலம் 'கிடை' நாவல் கரிசல் நிலப்பகுதி சார்ந்த ஆயர்களின் பண்பாட்டு அடைவு என்பதை உணர்ந்து கொள்ளச் செய்கிறது.

அடிக்குறிப்புகள்

1. பண்டைத் தமிழ்ப் பண்பாடு, ப. 46
2. பண்டைத் தமிழ்ப் பண்பாடு, ப.47
3. எஸ்.எஸ்.சஷி, இந்தியாவின் ஆயர் சமுதாயம், முன்னுரை
4. தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும், ப. 4
5. தமிழகத்தில் நாடோடிகள், ப. 287
6. பண்பாட்டு உரையாடல், ப.131

துணைநின்ற நூல்கள்

1. கி. ராஜநாராயணன், கிடை (குறு நாவல்), காலச்சுவடு, 2018.
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு உரையாடல், மு. ப. 2017.
3. ஞா. ஸ்டீபன், தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ஜூன், 2010.
4. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், அடையாளம், 2013.
5. பக்தவத்சல பாரதி, தமிழகத்தின் நாடோடிகள், வல்லினம் புதுவை, திசம்பர் 2003.

கவிஞர் மு.மேத்தா கவிதைகளில் அரசியல்

முனைவர் சி.கங்காதரன்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
குமார ராணி மீனா முத்தையா கலை (ம) அறிவியல் கல்லூரி
காந்தி நகர், அடையாறு, சென்னை – 600 020
நட்புக்கு: 99412 37611 / 95517 09093

ஆய்வுச் சுருக்கம்

குமுகாயத்தின் உயர்விற்கும், தாழ்விற்கும் அரசியல் முதன்மை கரணியமாகின்றது. மாந்தர்கள் கூட்டத்தையும் அவர்தம் ஒருங்கிணைப்பையும் குமுகாயம் எனக் குறிப்பிடுகிறோம். மாந்தர்கள் குழுவான இக்குமுகாய இயக்கத்திற்கு ஒரு வழிகாட்டுதல் தேவையாக உள்ளது. அத்தகைய வழிகாட்டுதலை முடியாட்சிக் காலத்தில் வழிவழியாக வந்த அரசர்கள் செய்து வந்தனர். இப்பொழுது பரவலாக முடியாட்சி மறைந்துவிட்ட நிலையில் பெரிதும் மக்களாட்சியே நடைபெற்று வருவதைக்காண்கிறோம். மக்களாட்சியில் ஆட்சியைப் பிடிப்பதற்குப் போட்டி போடுகின்ற நிலையில் அரசு தொடர்பாக அரசியல் அமைகின்றது. மாந்தர்களின் வாழ்க்கையுடன் ஒன்றிவிட்ட அரசியல் நிலையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

திறவுச்சொற்கள்

சுதேசி ஆயுதம், முகாந்திரங்கள், இந்திய தேசம், அரசர்கள், கெடிகாரம், குண்டு, நறுமண வாசம், கம்பங்கள்

முன்னுரை

இந்திய தேசத்தில் அரசியல் மாந்தர்களுக்கான அமைப்பாக அமையவில்லை. நீதியையோ, தர்மத்தையோ சாராமல் சாதியையும், சமயத்தையும், வன்முறையையும் சார்ந்ததாகவே இன்றைய அரசியல் போர்க்கு உள்ளது. இத்தகைய அரசியலால் பயனடைவது மாந்தர்கள் அல்ல. மாறாக கலவரத்தில் குளிர்காய நினைக்கும் அரசியல்வாதிகள். இவர்களால் ஒருபோர்த்தும் நிலையான ஆட்சியைத் தரமுடியாது என்ற விரக்தி மனோநிலையை கவிதைகளில் காணமுடிகின்றது. மு.மேத்தாவின் கவிதைகள் குமுகாயத்தைக் காட்சிப்படுத்தும் கண்ணாடிகள். மூன்றாம் கண்ணாக முளைத்த இவருடைய கவிதைகளில் குமுகாய அவலங்கள் பட்டுத் தெறிக்கின்றன. படைப்பு வேறு; படைப்பாளி வேறு என்பதை மாற்றி படைப்பினுள் பாத்திரமாகக் காட்சி தருபவர். கற்பனைகளில் அதிக கவனம் செலுத்தாமல் குமுகாயத்தின் அன்றாடச் சிக்கல்களை, மாந்தர்களின் வாழ்க்கைப் போராட்டங்களை முன்வைத்துக்

கவிதைப் பயணத்தைத் தொடங்கியதால் தான் இவரின் கவிதைகள் எளிதாக மாந்தர்களிடம் சென்றடைந்துள்ளன. அதிகார அரசியலால் எழும் சிக்கல்களை வெளிப்படுத்தி அதற்கான தீர்வுகளையும் முன்வைக்கிறார். அவரின் கவிதைகளில் அரசியல் பற்றிய பதிவுகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

அரசியல் - விளக்கம்

ஒரு குமுகாயம் எவ்விதத் தடையும் இல்லாமல் அமைதியாக வழிநடக்கத் தேவை அரசியல். இந்த அரசியலே குமுகாய மாற்றங்களுக்குக் காரணமாக அமையும் என்பது உறுதி. அரசியல் என்பது மாந்தர்களை வழிநடத்தும் குழு அல்லது அமைப்பு எனலாம். இதில் சுயநலம் இல்லாமல் பொதுநலம் மட்டுமே இருக்க வேண்டும். மாந்தர் களையும், நாட்டையும் பாதுகாத்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதுதான் அரசியல்.

அரசியல் என்ற சொல்லுக்குப் பல அறிஞர்கள் தங்கள் விளக்கங்களை முன்வைக்கின்றனர்.

'அரசியலானது அரசின் இயல்பு, அரசாங்கத்தின் இயல்பு முதலியவற்றின் உண்மையைக் கூறுவதாகும். ஒரு சமுதாயம் நிலைபெறுவது அதன் அரசையும், அரசாங்கத்தையும் பொறுத் திருப்பதால் அரசியலே முதன்மையான அறிவுப் பகுதி' என்று (கலைக்களஞ்சியம், தொகுதி - 1, ப.155) அரிஸ்டாட்டில் பதிவு செய்கிறார்.

'ஒரு குழுவானது சக்தியின் அடிப்படையில் தன்னை வழிநடத்த அமைத்துக் கொள்ளும் முறையை அரசியல் என்று அழைக்கலாம். மனிதக் குழுக்களிடையே உள்ள சக்தி அதனைப் பெறும்விதம், பகிர்ந்து கொள்ளும் விதம் போன்றவற்றை உள்ளடக்கியது அரசியல்' என்று (ச.ராஜ், சக்தி திரண்டால், ப.8) கூறுகிறார்.

'மனிதனுடைய சமூக இயல்பி னாலும், பொதுச் செயலினாலும் வரும் நல்வாழ்க்கைக்கான நன்மைகளைக் கருதியும் ஒரு சிறந்த நிறுவனம் ஏற்படுத்த வேண்டும் என்பதாலும் சமூகத்திலிருந்து அரசு உருவாயிற்று. அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவது என்ற அடிப்படையில் அரசு, சமூகத்தின் ஒரு முக்கிய நிறுவனமாகத் திகழ்கின்றது' என்று (க.இராமச்சந்திரன், மேத்தாவின் கவிதைகளில் சமுதாயப் பார்வை, ப.79) குறிப்பிடுகிறார்.

காந்தியம்

கவிஞர் மு.மேத்தா கல்லூரி நாட்களில் காந்தியத்தின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட நாட்டுப்பற்று உடையவராக இருந்துள்ளார். அதனால் தான் பல இடங்களில் காந்தியடிகளைப் பற்றியும், அவரது கொள்கைகளைப் பற்றியும் வியந்து பாராட்டுகிறார். இன்று நம் நாட்டில் காந்தியடிகள் 'காந்தி ஜெயந்தி' அன்று மட்டுமே நினைவில் கொள்ளப்படுகிறது. அரசியல்வாதி களையும் காந்தியப் போர்வையில் உலாவரும் ஏமாற்று முதலாளி

வர்க்கத்தினரையும் சாடுகின்றதாக இவரது கவிதை அமைந்துள்ளது.

காந்தியடிகள் சுதந்திரம் வாங்கி நம் நாட்டை, நம் கையில் கொடுத்துச் சென்ற பொழுது நம் நாடு மிகுந்த வளத்தோடு தான் இருந்தது. அமுதசுரபியைப்போல் அள்ள அள்ளக் குறையாத வளத்தைக் கொண்ட நாடு இன்று வளமிழந்து உள்ளதை,

நீ கண்டுபிடித்த
சுதேசி ஆயுதமாம்
கைராட்டையைச் சுற்றிய சிலர்
தற்போது
தங்க நூல் நூற்கிறார்களாம்
எங்களுக்கோ
வெள்ளியும் தங்கமும்
விழாக்களின் பெயரில்தான்
வருகின்றன
– கண்ணீர்ப் பூக்கள், ப.34

என்ற வரிகளில் காந்தியின் வாரிசு என்று சொல்லிக்கொள்ளும் அரசியல்வாதிகள் காந்தியின் பெயரைப் பயன்படுத்தி வசதியான வாக்கை வாழ்ந்து வருவதைக் சுட்டிக் காட்டியுள்ளார். இன்றைய அரசியல்வாதிகளுக்குக் காந்தியடிகள் தேவையில்லை. அவர் பெயரைச் சொல்லிக் கொண்டு நேர்மையற்ற அரசியல் நடத்தும் அரசியல்வாதிகளை தம் கவிதைகளில் படம்பிடித்துக் காட்டு கின்றார்.

மார்க்சியம்

சலுகைகளைப் பெறுவதற்காகப் புரட்சியைக் காட்டி அச்சுறுத்துவதும், கிடைத்தால் புரட்சியைச் செய்ய மாட்டோம் என்று பேரம் பேசுவதும் மார்க்சிய நெறிமுறைக்கே பகையான செயல்கள் ஆகும். இதனை,

தேசம்
அவர்களுக்கொரு
வழிகாட்டாவிட்டால்
தேசத்துக்கே
அவர்கள் ஒரு
வழிகாட்டுவார்கள்
எந்தத்
தேசத்திலும்
முன்னறிவிப்புக்
கொடுத்துவிட்டும்
முகாந்திரங்கள்
சொல்லிவிட்டும்
வருவதில்லை
புரட்சி
– அவர்கள் வருகிறார்கள், ப.67

என்ற வரிகளின் வழியாக கவலை இல்லாமல் அவதிப்படும் அந்த இளைஞர்களின் வேண்டுதல்கள் நிறைவேறாவிட்டால் புரட்சி வரும் என்றும் பாடுவதன் வாயிலாக, வேண்டு கோள் நிறைவேறுமானால் புரட்சி வராது என்று பாடியுள்ளார்.

அரசியல்

அரசன் எவ்வழியோ மக்கள் அவ்வழி. ஆட்சி எப்படியோ அப்படியே மாந்தர்கள். மாந்தர்களின் நலன்களைப் பாதுகாக்கத் தேர்ந்தேடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்த அமைப்பு அரசு எனப்படும். குமுகாயத்தில் மாந்தர்கள் அனைத்து நலன்களையும் பெற்றுச் சிறப்பாய்

வாழத்துணை செய்தல் அரசியல்வாதிகளின் கடமையாகும். ஆனால் தம் குமுகாயத்தில் மாந்தர்களுக்குத் தொண்டு செய்யும் பெரும்பொறுப்பை மறந்து, தங்கள் சொந்த நலனுக்காக மட்டுமே உழைப்பவர்களாக அரசியல்வாதிகள் மாறிவருதல் வேதனைக்குரியதாகும்.

மாந்தர்களின் நலன் காப்பதே தம் கடமை என்பதை மறந்து, அரசியல் வாதிகள் தங்கள் கட்சியே தேர்தலில் வெற்றிப்பெற்று ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்னும் நோக்கில் செயல் பட்டு வரும் அவலம் நாடெங்கும் நிலவி வருவதை,

இந்திய தேசம்
ஆதியில்
அரசர்கள் கையில்
இருந்தது அதன்பின்
அந்நியர்கள் கையில்
இருந்தது
தற்போது
அரசியல்வாதிகளின்
கையில் இருக்கிறது.
எப்போது
மக்களின் கைக்கு
வந்து சேருமோ?
– ஆகாயத்துக்கு அடுத்த வீடு, ப.40

என்ற வரிகளில் அரசர்களிடமிருந்து அந்நியர் வசம்போன நம்நாடு, விடுதலைக்குப் பின் அரசியல்வாதி களிடம் சிக்கித் தவிப்பதை வெளிப்படுத்தி யுள்ளார்.

அரசியல்வாதிகள் அரசியல் வாழ்வில் தூய்மையைக் கடைப்பிடிக்காமல், தங்கள் சுயநலத்திற்காகக் கட்சிவிட்டுக் கட்சி தாவும் அவலம் நிகழ்ந்து வரும் நிலையை கடிகாரத்தை உவமையாகக் கொண்டு அழகிய கவிதையாக வடித்திருப்பதை,

இந்திய நாட்டின்
தலைவர்களெல்லாம்
கெடிகாரம் மாதிரி
இருக்கும்
இடங்களுக்கு
ஏற்ற மாதிரி
நேரம் காட்டுகிறார்கள்
– கனவுக் குதிரைகள், ப.73

இவ்வரிகள் சுட்டிக்காட்டுகிறது. அரசியல் வாதிகள் கட்சிமாறும் மோசமான போர்க்கினை எடுத்தியம்புகிறது.

அரசியல் சூழலில் சிக்கித் தவித்து எவ்வித நன்மையும் கிடைப்பபெறாத பொது மாந்தர்களின் நிலையை 'அரசியல்' என்ற கவிதையில்,

ஒன்றின்மேல் ஒன்றை
குறிபார்த்து எறிந்து
குண்டு விளையாடினோம்
கோலி விளையாடினோம்
இன்று
எவரெவரோ வந்து
எறிந்து விளையாட
நாமே
குண்டானோம் – ஊர்வலம், ப.37

எனப் பல்வேறு அரசியல் கட்சிகள் மாறிமாறி ஆட்சி செய்யப் பொது மாந்தர்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் பெறாத நிலையை எடுத்துக் காட்டியுள்ளார். மாந்தர்களின் பிரதிநிதி

களாகச் செயல்பட்ட வந்த தலைவர்கள் மாந்தர்களின் விருப்பங்களை நிறை வேற்றுபவர்களாக இருக்க வேண்டும் என்ற நிலைமாறி, மாந்தர்களைக் காக்க வந்த தலைவர்களாலேயே பந்தாடப் படும் இழிநிலையை வெளிப்படுத்து கிறார். அதுமட்டுமன்றி அரசியல்வாதிகள் இலஞ்சம் வாங்கும் செயல் தேசத்தின் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாய் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மக்களுக்குச் சுமையாகிப்போன அரசியலில் பதவிக்காகச் சண்டைபோடக் கூடிய அரசியல்வாதிகளின் நிலையைப் 'பதவி' என்ற கவிதையில்,

பதவி ஒரு பசை
அதனால்தான் அதன்மீது
அமர்பவர்கள்
கெட்டியாக
ஒட்டிக்கொள்கிறார்கள்
பதவி – சிலருக்கு
நறுமண வாசம்
அற்பர் சிலருக்கோ
அதுவே சுவாசம்
– முகத்துக்கு முகம், ப.23

இவ்வாறு குறிப்பிடுகிறார். பதவிக்காக அரசியல்வாதிகள் போட்டிபோடுவதையும் அது மாந்தர்களைப்படுத்தும் பாட்டையும் விவரித்துள்ளார்.

அரசியல்வாதிகள் தேசத்தில் மாற்றத்தை நிகழ்த்திய மந்திரவாதிகளாகி நாட்டுப் பொருட்களைக் கொள்ளை யிட்டவர்கள். இதனை,

இந்த மேய்ப்பவர்களுக்கு மட்டும்
எப்படியோ இனாம்
கிடைத்து விடுகிறது
– ஊர்வலம், ப.27

என்னும் வரிகளில் அரசியல்வாதிகளுக்கு மட்டும் அவர்களுக்குத் தேவையான வசதிகளும் பணமும் கிடைத்து விடுகின்றது. ஆனால் மக்களுக்குத்தான் அடிப்படை வசதிகள்கூட எதுவுமே கிடைப்பதில்லை என்று எதார்த்தத்தை, நடைமுறை உண்மையை இக்கவிதை உணர்த்துகின்றது.

அரசியல் தலைவர்கள் 'விளம்பர விரும்பிகள்' என்பதை,

அறுபதடி உயரத்தில்
அலங்காரமாய் நிற்கும்
உங்கள்
கட் அவுட்கள்
– ஒற்றைத் தீக்குச்சி, ப.38

இவ்வரிகள் சுட்டுகிறது. அரசியல் தலைவர்கள் கட்அவுட்களுக்காகச் செலவு செய்யும் தொகைகள் அதிகம். ஆனால் மாந்தர்களுக்காக அவர்கள் எந்தச் செலவுகளையும் செய்வதில்லை என்பதை இதனால் அறியமுடிகின்றது.

அரசியல் அவலம்

காலங்காலமாக அரசியல் அவல நிலை மேலோங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அரசியல்வாதிகள்தங்களுடைய பதவி வெறிக்காகவும், பதவி அதிகார ஆணவத்தின் காரணமாகவும் பல கொடுமைகளையும் பல தவறான செயல்களையும் செய்கின்றனர் என்பதை,

கோட்டைகளில் வெற்றிக்
கொடியேற்றுகின்றார்கள்
கால்களின் கீழே குழந்தைகளைப்
புதைத்த குழிகள்
–ஒரு வானம் இரு சிறகு, ப.3

இவ்வரிகள் சுட்டுகிறது. இந்த அவல நிலையை மாற்ற முடியாத அரசியல் எதற்காக? என்ற வினாவை முன் வைக்கிறார்.

நாட்டில் கட்சிக் கொடிகள் அனைத்தும் உயரத்தில் பறக்கின்றன. அதற்காகப் பாடுபடுவோர் ஒரு கூட்டம். அதனால் நமது சகோதர சகோதரிகளின் வாழ்க்கை அவ்வரசியல் கட்சியால் நசுக்கப்படுவதை ஆதங்கத்துடன் சித்தரிப்பதை,

எங்கள் தேசத்தில்
ஒவ்வொரு கட்சிக்கொடியும்
உயரத்தில்தான் பறக்கிறது.
எங்கள் சகோதரர்களின்
தாழ்ந்து குனிந்த
தலைக் கம்பங்கள் மீது
– திருவிழாவில் ஒரு
தெருப்பாடகன், ப.10

இவ்வாறு சுட்டுகிறார். தொண்டர்களும் தங்கள் நிலையை எண்ணிப் பார்க்காமல் குருட்டுத்தனமாகச் செயல்படுவதை விளக்குகிறார்.

முடிவுரை

மக்களை மறந்துவிட்டு தம்மையும் தம் நலத்தையும் மட்டுமே சிந்திக்கின்ற வர்களின் கையில், அரசியல் இன்று சிக்கிச் சீரழிந்துவிட்டது. இந்த நிலை மாறுமா? என்ற ஐயம் கவிஞர்களின் உள்ளத்தில் எழுகிறது. ஆதலால் பிறர் நலம் பேணும் தலைவர்கள் இருந்தது ஒரு பொற்காலம். மாறாகத் தன்னலத்துக்காக எதையும் தயங்காது செய்பவர்கள் நிறைந்திருப்பது இக்கால அரசியல் என்பது கவிஞரின் கருத்தாகும்.

இன்றைய அரசியல் நிலையில் பொதுவாக ஏழைகள் ஏமாந்தவர் களாகவே இருக்கின்றார்கள். உண்ண உணவின்றி வாடுகின்றனர். ஆனால் அதை அரசியல்வாதிகள் உணர்வதில்லை. அவர்கள் மட்டும் நன்றாக இருந்தால் போர்துமென வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். நாட்டில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் மக்களின் தேவைக்காகவும், நாட்டின் உயர்விற் காகவும் செயல்படாமல் சுயநலத்திற் காகவே செயல்படுகின்றன என்ற நடை முறை உண்மைகளை வெளிப்படுத்துகிறார். பாதிக்கப் பட்டவர்களின் நியாயமான போராட்டங்களை அரசியலாக்குவது நல்லதல்ல என்றும், நியாயமான வேண்டுகோள்களை அரசு ஒதுக்கித் தள்ளாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளையும் கவிஞர் மு.மேத்தா முன்வைப்பதை இக்கட்டுரை வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

துணைநூற்பட்டியல்

1. மு.மேத்தா, கண்ணீர்ப் பூக்கள், திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணன் சாலை. சென்னை – 600 017, முதற்பதிப்பு, ஜனவரி 1974.

2. மு.மேத்தா, ஊர்வலம், திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணன் சாலை, சென்னை – 600 017, முதற்பதிப்பு 1977.

3. மு.மேத்தா, அவர்கள் வருகிறார்கள், திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணன் சாலை, சென்னை – 600 017, முதற்பதிப்பு 1980.

4. மு.மேத்தா, முகத்துக்கு முகம், திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணன் சாலை, சென்னை – 17, முதற்பதிப்பு, சூலை 1981.

5. மு.மேத்தா, ஒரு வானம் இரு சிறகு, திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணன் சாலை, சென்னை – 600 017, முதற்பதிப்பு, ஏப்ரல் 1983.

6. மு.மேத்தா, திருவிழாவில் ஒரு தெருப் பாடகன், திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணன் சாலை, சென்னை – 600 017, முதற்பதிப்பு, ஜனவரி 1984.

7. மு.மேத்தா, ஒற்றைத் தீச்குச்சி, கவிதா பப்ளிகேஷன், 8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார், தி.நகர், சென்னை – 600 017, முதற்பதிப்பு, டிசம்பர் 1997.

8. மு.மேத்தா, கனவுக் குதிரைகள், திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணன் சாலை, சென்னை – 17, முதற்பதிப்பு, அக். 1984.

9. மு.மேத்தா, ஆகாகத்துக்கு அடுத்த வீடு, குமரன் பதிப்பகம், 3, முத்துக்கிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை – 600 017, முதற்பதிப்பு, ஆகஸ்ட் 2004.

10. ச.ராஜ், சக்தி திரண்டால், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், 2001.

கவிஞர் மீராவின் ஊசிகள் தொகுப்பில் காணலாகும் சமுதாயச் சிக்கல்கள்

முனைவர் வ. கணபதிராமன்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழியற்புலம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்
பேசி : 9442370980

ஆய்வுச் சுருக்கம்

இலக்கைக் காண்பிப்பதே இலக்கியம் ஆகின்றது. சமுதாயத்தின் செல்நெறியை அறிவிப்பது மனித மனத்தின் ஆழத்தை எடுத்துக்காட்டுவது. மானுடத்தின் மீது படிந்துள்ள தூசுகளைத் துடைப்பது இலக்கியத்தின் பணியாக இருக்கின்றது. காலம் ஓடுகின்ற வேகத்திற்கு ஏற்பப் புதுக்கவிதைகள் மக்களின் மனநிலைக் கேற்ப வடிவங்கொண்டு தகவமைத்துக் கொள்கின்றன. அந்த வகையில் மீ.ராசேந்திரனின் ஊசிகள் சமுதாயத்தின் ஓட்டைகளைத் தைக்க வந்தவை. தவறுகளைக் குத்திக்காட்ட வந்தவை. அவற்றை இக்கட்டுரை ஆராய்ந்து பார்க்கின்றது.

திறவுச்சொற்கள்

லஞ்சம், ஊழல், அரசியல், பரிணாமம், பரிமாணம், பிரம்மாண்டம், ஆலவிருட்சம்

முன்னுரை

இலக்கியமானது காலந்தோறும் வளர்ந்து வருகின்றது. காலத்திற்கேற்ற இலக்கிய வகைமைகள் தமிழ் இலக்கிய வளத்தில் புதுக்கவிதைகளும் சிறப்பிடம் பெற்றன. இலக்கணம், யாப்பு, எதுகை, மோனை போன்ற கட்டுக்களைவிட்டு விலகிப் புதுக்கவிதை பரிணமிக்கத் தொடங்கியது. அத்தகைய புதுக்கவிதைகள் பலராலும் எழுதப்பட்டுத் தங்களின் அடையாளத்தை நிலைநிறுத்திக் கொண்டன. எழுத்துலகில் தனக்கென ஒரு பாணியை ஒவ்வொரு கவிஞர்களும் கொண்டு புதுக்கவிதை படைத்தனர். அவர்களுள் கவிஞர் மீராவின் கவிதைகளில் காணலாகும் சமுதாயச் சிக்கல்களைப் பற்றிப் பேசுவதை இக்கட்டுரைநோக்கமாகக்கொண்டுள்ளது.

கவிதையும் களமும்

கவிதை பிறக்கின்ற களம் தான் கவிதையை மற்றொரு பரிணாமத்திற்குள் கொண்டு செல்கிறது "கவிதை என்பது விதை விதைப்பது போன்றதே. மண்ணைக் கிழிக்காமல் விதைகள் முளைப்பதில்லை. கவிதை இந்த மண்ணைக் கிழித்து, முளைத்து, வளர்ந்து, பிரம்மாண்ட ஆல விருட்சமாய் வளர்ந்து நிற்கிறது. இதில் மண் என்றாலும், தேசம் என்றாலும் மக்கள் தான். எனவே கவிதை என்பது

சமூகத்தைப் புனரமைப்பது, சமூகத்தை மாற்றுவது, அவலங்களை அம்பலப் படுத்துவது என்று புலனாகும்"[1] என்று கவிதையின் குணாம்சத்தை அது சமூகம் என்ற களத்தில் செயலாற்றுகின்ற தன்மையை விளக்குகிறார் எஸ்.ஏ. பெருமாள். மொழியைக் கொண்டு சமுதாயத்தைச் சீர்படுத்தும் பணியைச் செய்கின்றவர்கள் கவிஞர்களாகப் போற்றப்படுகின்றார்கள். கவிஞர் எதைப்பற்றி எழுதுகின்றார் என்பதுதான் அக்கவிஞரைச் சமுதாயத்தின் கண்களுக்கு முன் நிறுத்துகின்றது. சமூகப் பிரச்சினை குறைவதற்காக மக்களின் சிக்கல்களையும் கவிதையின் கருப்பொருளாக முன்வைப் பவர்கள்தான் கவிஞர்களாகக் களம் காண்கின்றார்கள்.

சமுதாயம் - மக்கள் பிரச்சினையும் - கவிதைகளும்

மக்கள் கூடிவாழ்கின்ற அமைப்பு முறையையே சமுதாயம் என்று வழங்கு கின்றோம். இச்சமுதாயம் மக்களது பிரச்சினைகளை உள்ளடக்கியதாகத் திகழ் கின்றது. கல்வி, லஞ்சம், ஊழல், அரசியல், சாதி போன்ற பல்வேறு முக்கியமான களங்களில் மீ.ராஜேந்திரன் தன்னுடைய விமர்சனத்தைத் தொடருகின்றார். கவிதை எனும் ஊசிகள் வழியாகக் குத்திக் காட்டு கின்றார். சாதி பற்றிய கவிதையொன்றில் தமிழ்ப்பற்றுடன் ஒருவர் பேசுவதைப் பின்வருமாறு எழுதுகின்றார்.

தேவ பாஷையில் தேர்ச்சி மிக்க
சாஸ்திரி ஒருவர் சபையில்
சொன்னார்
ஜாதி வேண்டும் ஜாதி வேண்டும்.
உடனே சீறி ஒரு தமிழ் மறவர்
ஓங்கிக் கத்தினார் ஓய் ஓய் இனிநீர்
ஜாதிவேண்டும் என்றால்
பொறுமையாய்
இருக்க முடியாது என்னால்
சரியாய்ச் சாதி வேண்டும் என்றே
சாற்றும். [2]

ஜாதியை ஒழிக்க விவாதிக்காமல் தமிழ்ப் பற்றுடன் திகழ்வதாக அரசியல்வாதிகள் தங்களைக் காட்டிக் கொள்கின்றனர். இதனை நையாண்டி செய்து குத்திக் காட்டுகின்றார் கவிஞர். எனவேதான் அப்துல் ரகுமான் கூட இவரது கவிதையைப் பற்றி விமர்சிக்கும் போது, "குத்தலாக எழுதப்பட்டிருக்கிற இந்தக் கவிதைகளுக்கு ஊசிகள் என்ற பெயர் நயமாகத்தான்படுகிறது"[3] என்று கூறு கிறார். இங்ஙனம் சமுதாயத்தின் பிரச்சினைகளைக் குத்திக் காட்டும் போதுதான் இலக்கியங்கள் மக்களுக்கான தாகப் பேசத் தொடங்குவதை அறிந்து கொள்ள முடிகின்றது. மீராவால் அரசியலையும் நையாண்டி செய்ய முடிகின்றது. வேகம் கவிதையில் ஒரு அரசியல்வாதியை, அவரது போக்கை விமர்சனம் செய்கிறார்.

"எங்கள் ஊர் எம்.எல்.ஏ
ஏழு மாதத்தில்
எட்டுத் தடவை கட்சி மாறினார்
மின்னல் வேகம்
என்ன வேகம்
என்ன தேசம்?
இந்தத் தேசம்"[4]

ஜனநாயக எழுத்துரிமையை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கவிஞர் தனது ஊர் எம்.எல்.ஏ.வை விமர்சனம் செய்கிறார். வார்த்தைகள் எளிமையாக இருந்தாலும் கூட ஆழமான ஊசிகளைப் போல பாய்கின்றன. மின்னல் வேகத்தில் அவரது தாவல் இருப்பதைப் பதிவு செய்கின்றார். இந்தத் தேசம் ஏன் இப்படிக் கேவலமான மனநிலையுடைய வர்களைக் கொண்டு அரசியல் செய்கின்றது? என்ற ஆழமான கேள்வியை முன் வைக்கின்றார்.

முதலாளி வர்க்கத்தின் சமுதாயச் சுரண்டல்

சங்க காலத்தில் இவர் இவருக்குக் கூறியது என்னும் கூற்று முறையை அடிப்படையாகக் கொண்டு மேயர் மகன் தோட்டி மகனுக்குக் கூறியது என்ற கவிதையைப் படைத்துள்ளார். இக் கவிதையில் யாருடைய தந்தை பெரியவர், வணக்கத்திற்குரியவர் என்கின்ற விவாதம் நடைபெறுவதாகப் புனைந்துள்ளார்.

"குப்பா குப்பா
உன்னைப் பெற்ற தந்தைக்கு
உன்னைத் தானே அடிக்கத்
தெரியும்
என்னைப் பெற்ற தந்தைக்கு
இந்த ஊரையே அடிக்கத்
தெரியும்"[5]

ஊரையே அடித்து உலையில் போட்டவன் எனப் பலரைக் கிராமத்தினர் சாடுவது உண்டு. இங்கு கவிஞரும் சொல்லில் விளையாடிப் புதிய அர்த்தம் தருகின்றார். அடித்தல் என்னும் தொழிலானது வேறு வேறு தளங்களில் வேறு வேறு பொருள்களில் கையாளப்படுகின்றது. இப்படிக் குத்திக் காட்டுவதன் வழியாக அரசியலைத் தன் கவிதையால் கிளறிப் பார்க்கின்றார்.

பத்திரிக்கையின் நிலைப்பாடு

இந்தியத் தமிழகத்தின் பத்திரிக்கைச் சுதந்திரம் பற்றியும் கவிஞர் தமது விமர்சனத்தை முன்வைக்கின்றார். உயிருள்ள பத்திரிகை என்னும் தலைப்பில் பின்வருமாறு கூறுகின்றார்.

"லாரி மோதி மாடு சாவு
மாடு முட்டிக் கிழவி மரணம்
இவைதாம் என் தமிழ் இனத்தை
மேலே உயர்த்த வந்த
ஒரே உயிருள்ள பத்திரிகையிலே
பளிச்சிடும் செய்திகள்"[6]

பத்திரிக்கைகள் என்பவை சமுதாயத்தில் நிகழ்கின்ற மாபெரும் செய்திகளை விமர்சனம் செய்து அவற்றைச் சரிப்படுத்தவும், மக்களைத் தலை நிமிரவும் செய்ய வேண்டும். அத்தகைய மாபெரும் பொறுப்பைக் கொண்ட பத்திரிக்கையில் தேவையற்ற சிறு சிறு நிகழ்வுகளே பளிச்சிடும் அளவில் பெரிய எழுத்துக்களில் வெளிவருகின்றன என்று மனம் கசந்து எழுதுகிறார் கவிஞர். பத்திரிக்கை தனது பொறுப்பை உணர்ந்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது என்கிறார்.

கல்வி வியாபாரம் ஆகும் நிலை

கல்வியே சிறந்த செல்வம். அது கேடு தராத விழுமியத் தன்மை கொண்டது. செவிச்செல்வமே உயர்ந்த மேன்மை மிகு

செல்வம். இப்படிப் பலவாறு கல்வியைப் புகழ்ந்து பாடினாலும்கூட சமுதாயத்தில் கல்வியின் நிலை எப்படி இருக்கின்றது என்பதைக் கவிஞர் காண்கின்றார். மேலும் பாரதியார் தமிழ்நாட்டைப் பற்றி மிகவும் பாராட்டிப் பேசுகின்றார். குறிப்பாகக் 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' என்று பாடுகின்றார். கல்வியின் நிலை எத்தனை அவலமான சூழ்நிலையில் இருக்கின்றது என்பதைத் தனது கவிதை வழியாக மீ.ரா. அவர்கள் கூறுகின்றார்.

"பி.யு.சி.யா?
ஒரு நூறு போதும்
பி.எஸ்.சி. பி. எட்
இரு நூறு ஆகும்"7

பி.யு.சி என்னும் கல்வி முறை இருக்கின்ற காலத்திலேயே கல்வி வியாபாரமாக்கப்பட்டு வருகின்றது. நூறு ரூபாய்க்கும் இருநூறு ரூபாய்க்கும் விற்கப்படுகின்ற அவல நிலையைக் கண்முன்னே காட்டுகின்றார். மனம் கொதிக்கின்றார். ஒரு திறனாய் வாளனைப் போல சமுதாயத்தை உற்று நோக்குகின்றார். சமுதாயச் சிக்கல்களை விமர்சனம் செய்கின்றார். பட்டம் பெறுவது எதற்காக? பறக்க விடத்தானா? என்ற கேள்விகளோடு மற்றொரு கவிதையை முன்வைக்கின்றார். 'பறக்க விடலாம்' என்ற தலைப்பில் அக்கவிதையை முன்வைக்கின்றார்.

"கையில் என்ன என்றான் தம்பி
கண்ணில் ஏறிக் கர்வம் நிற்க
வேந்தர் மூவர் வெற்றிக்காகத்
தந்த பட்டம் என்று கூறிப்
பார்த்தேன்
தம்பி பாய்ந்தான் புலியாய்
நூல் வாங்க .... நூல் வாங்க....."8

நூல் வாங்கி நாம் வாங்கிய பட்டத்தைப் பறக்கவிடத்தான் வேணடும். அது எதற்கும் உதவாது.

மதம் பிடித்த மனிதர்கள்

கடவுள் குறித்த விவாதங்களும், விமர்சனங்களும் மக்களுக்குள் காணப் படும் மிகப்பெரிய அரசியல், மதம் சார்ந்த சிக்கலாக இருக்கின்றது. அது தீவிரமான கலவரத்தில்தான் முடிகின்றது. இதனை,

"இருக்கிறார் கடவுள்
இல்லை கடவுள்!
வாதம் பிறந்தது
மோதல் வளர்ந்தது
இருக்கிறார் ஒருவர்
தலைமறைவாக!
போத்தனூர்க் காவலர்
புலனாய்கிறார்"9

எந்த ஒரு வாதமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இங்கு மோதலில் முடிந்து காவல்துறை புலனாய்ந்து தலைமறைவானவர்களைத் தேடும் அளவில் மதத்தின் பெயரால் மோதலாக உருவெடுப்பதைக் கவிஞர் பார்க்கின்றார். பலவீனமான சமுதாயத்தைத் தன்னுடைய ஊசியைக் கொண்டு தைக்கப் பார்க்கின்றார். "எல்லாம் மாறுகின்ற காலமிது. இங்கே ஊசிகளின் கதாநாயகர்கள் ஊழல் பேர்வழிகள். மீராவுக்கு நயமான நகைச்சுவை உணர்வு இருக்கின்றது. சமுதாயத்தைப் பொதுநல

உணர்வோடு கூர்மையாகப் பார்க்கிறார். இவரது மொழிப்புலமையும் அதற்குக் கை கொடுக்கிறது."[10] என்கிறார் பாலசுந்தரம்.

முடிவுரை

இந்தியத் தமிழ்ச் சூழலில் வானம்பாடிக் கவிஞர்களின் பாய்ச்சலான எழுத்துக்கள்தான் மக்கள் பிரச்சினைகளைப் பேசியது. கவிதையின் கருப்பொருளை மாற்றியது. சாதாரண மனிதனின் அன்றாட வாழ்க்கையை நகர்த்த அவனுக்கு நேரும் கொடுமைகளைப் பாடியது. கல்வி, அரசியல், ஊழல், லஞ்சம், மதம், ஜாதி இப்படி அவனைச் சுற்றி நிகழும் நிறுவனங்களின் கொடுமைகளையும் கன்னத்தில் அறைந்து கரைதுடைத்தது. அதற்கு இன்றும் சான்று பகர்வது மீராவின் ஊசிகள் என்று கூறலாம்.

மேற்கோள்

1. எஸ்.ஏ.பெருமாள், ஊசிகள் கவிதைத் தொகுப்பு, அணிந்துரை, ப.10
2. தமிழ்ப்பற்று, ப. 10
3. அப்துல் ரகுமான். ஊசிகள் தொகுப்பு, ப.10
4. வேகம், ப.15
5. மேயர் மகன் தோட்டி மகனுக்குக் கூறியது, ப.19
6. உயிருள்ள பத்திரிக்கை, ப. 20
7. கல்விச் சிறந்த தமிழ்நாடு, ப. 69
8. பறக்க விடலாம், ப. 33
9. கடவுளைத் தேடி, ப. 36
10. பாலசுந்தரம், ஊசிகள் தொகுப்பு விமர்சனம், ப. 11

துணைநூற்பட்டியல்

1. மீ.ராசேந்திரன் – ஊசிகள் – ஏழாம் பதிப்பு 2003 செப்டம்பர் – அன்னம் வெளியீடு, நிர்மலா நகர் தஞ்சாவூர்.

இணைய தளம்

1. கீற்று.காம் – நா.முத்துநிலவன் – பாடிப்பறந்த வானம்பாடிக் கவிஞர் பாலா – கட்டுரை அக்டோபர் 2009

கவிஞர் மு.மேத்தா கவிதைகளில் சமுதாயம்

முனைவர் ப. கல்விராயன்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
விவேகனந்தா கல்லூரி
மயிலாப்பூர், சென்னை – 600 004
நட்புக்கு: 98844 45400

ஆய்வுச்சுருக்கம்

நமது நாடு பல்வேறு சமுதாயங்களால் பின்னப்பட்ட ஓர் அமைப்பாகும். இந்தச் சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதர்களும் அங்கம் வகிக்கின்றனர். மனிதர்களின் வாழ்க்கை நிலை சமுதாயத்தோடு நேரடித் தொடர்பை ஏற்படுத்துகிறது. நாளடைவில் சமுதாயங்களை நோக்கும் போது தனக்கே உரிய இயங்கியலைக் கொண்டிருப்பதை உணரலாம். இத்தகைய நகர்வில் சாதி, மூடநம்பிக்கை, கோவில், மதம், வேலையில்லாத் திண்டாட்டம், ஊழல், பழமை, மடமை, நீதி இல்லாமை, மது அருந்துதல் போன்றவற்றின் பங்கு இருப்பதைக் காணமுடியும்.

திறவுச்சொற்கள்

அமுத சுரபி, பிச்சைப் பாத்திரம், முக்கடல்கள், இந்தியன், கத்திரிக் கோல், சிரசாசனம்.

முன்னுரை

தமிழ்க்கவிதை உலகில் புதுக்கவிதைகள் வழியாக ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியவர். பன்முக ஆளுமை படைத்தவர். தமிழறிஞர், சொற்பொழி வாளர், எழுத்தாளர், கவிஞர், நாவலா சிரியர், திரைப்பட வசனகர்த்தா போன்ற பரிமாணங்களைக் கொண்டவர். இவரது படைப்புகள் பல்கலைக்கழகங்களில் பாடமாகவும், ஆய்வுக் கருவாகவும் உள்ளன. ஆங்கிலம், இந்தி, தெலங்கு. மலையாளம் ஆகிய மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நானூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார். கண்ணீர்ப் பூக்கள் முதல் சோழ நிலா வரை 35 நூல்கள் வெளிவந்துள்ளன. கவிஞர் மு.மேத்தாவின் கவிதைகளில் சமுதாயம் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

சமுதாயம்

சமுதாயம் என்பது தனிமனிதர் பலர் ஒன்று சேர்ந்து வாழும் ஓர் கட்டமைப் பாகும். இவ்வமைப்பில் ஒவ்வொரு தனிமனிதனும் உறுப்பினன் ஆவான்.

'ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம்

எனப்படும்' (வாழ்வியல் களஞ்சியம், தொகுதி - 8, ப.469).

நாகரிகம் அடையாத மனிதன் தொடக்கத்தில் தனித்தனியாக வாழ்ந்து வந்தான். இயற்கையின்பால் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாகச் சிறுசிறு குழுவாக இணையத் தொடங்கினான். குழுவாக இணைந்து இயற்கைப் போராட்டங்களை எதிர்க்கையில் எதிர்பார்த்த வெற்றியினை அடைய முடிந்தது. குழுவாக இருந்த மனிதன் கூட்டமாக வாழத் தொடங்கினான். பல குடும்பங்கள் சேர்ந்து ஒட்டுமொத்த அமைப்பு சமுதாயமாக மாறிற்று. இதனைச் சமுதாயம் என்றும் கூறுவர். தனிமனிதன் தன் தேவைகளை முழுமையாக நிறைவேற்றிக்கொள்ள சமுதாயம் உதவுகிறது. சமூக இயல்பு காரணமாக மட்டுமின்றி தேவையின் காரணமாகவும் மனிதன் சமூகத்தில் கூடிவாழ்கிறான்.

'சமூகம் என்பது மக்களை மிக நெருக்கமாய்ப் பிணைக்கவல்ல கட்டுப்பாடுடைய அரசியல், சமுயம் போன்ற நிறுவனங்களில் தங்களை இரண்டற இணைத்துக் கொண்டு சில விதிமுறைகளுக்குட்பட்டு குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்கள் குழு ஆகும்' (The Universal English Dictionary, P.214) என்று சமூக அமைப்பு பற்றி அனைத்துலக ஆங்கில அகராதி விளக்கம் கூறுகிறது.

'சமுதாய நோக்கோடு பாடப்பட்ட கவிதைகளில் மக்களின் நிலை, அவர்களின் போக்கு, அவர்தம் பொருளாதாரம், அரசியல் போன்ற நாளும் வாழ்வோடு தொடர்புடைய கூறுகளே அதிகம்' (இல.செ.கந்தசாமி, புதுக்கவிதை ஒரு பார்வை, ப.13) என்ற அறிஞரின் சிந்தனை இங்கு ஒப்பு நோக்குதற்குரியதாகும்.

மு.மேத்தாவின் கவிதைகள் பற்றிச் சிலம்பொலி சு.செல்லப்பன் குறிப்பிடுகையில், 'மேத்தாவின் எழுதுகோலில் இருப்பது மனமயக்கம் செய்யும் மது அல்ல; மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்; அந்தக் கண்ணீரால்தான் அவர் எழுத்துப் பூக்களை மக்களின் மனத்தாள்களில் பதிவு செய்கிறார்' (சிலம்பொலி செல்லப்பனார், தோழமை உரை, மு.மேத்தா, கனவுக் குதிரைகள், ப.5) எனக் குறிப்பிட்டுள்ளமை நோக்கத் தக்கதாகும்.

வறுமை நிலை

சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வுகளை உலகுக்கு உணர்த்தும் பணி உன்னதமானது. அதனைச் செய்யாதவன் நல்ல கவிஞனில்லை. வாழ்கின்ற காலத்தில் உண்டாகும் மாற்றங்களை இயற்றும் கவிஞனே காலத்தை வென்ற கவியாகின்றான். நாட்டின் வறுமை நிலை மாறவேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்ட கவிஞன், மகாத்மா பற்றிய பாடலில்,

அமுத சுரபியைத்தான்
நீ
தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கையில் இருப்பதே?
பிச்சைப் பாத்திரம்
– கண்ணீர்ப் பூக்கள், ப. 24

என்று சுதந்திரமடைந்தும் நாட்டின் நிலை மாறாததைச் சுட்டுகின்றார். சுதந்திரம் பெற்றபொழுது அமுத சுரபியாக இருந்த நாடு அரசியலால் பிச்சைப் பாத்திரமாக ஆகிவிட்டது எனக் கூறுகிறார்.

சுதந்திரச் சிந்தனைகள் என்ற தலைப்பில் வறுமை நிலையை,

வானத்தை நரைமுடியால்
வருடுகின்ற இமயமலை
நாணத்தை ஏந்தி
நடைபயிலும் கங்கை நதி
அலைச்சேலை கட்டிக் கொண்டு
ஆடுகின்ற முக்கடல்கள்
என்ன இருந்தென்ன?
என்ன இருந்தென்ன
எங்களது கண்களுக்கு
வயிரே தெரிகிறது – எங்கள்
வாழ்வே எரிகிறது
– ஊர்வலம், ப.10

என்ற கவிதை வழியாக வெளிப்படுத்து கிறார்.

இந்தியத் திருநாட்டில் எந்தக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும் வறுமையை ஒழிக்கும் முயற்சிகளை அவர்கள் மேற் கொள்வதில்லை. இதனால் பெரும் பாலான மக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளைக்கூட நிறை வேற்றிக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள் என்பதை,

கோவணத்தோடு
குந்தியிருக்கிறான் இந்தியன்
அவனுடைய
மானத்தைக் காப்பதற்காக
அவசர அவசரமாய்
வாக்குச்சீட்டுகள்
அச்சாகிக் கொண்டுள்ளன
– கனவுக் குதிரைகள், ப.70

இவ்வரிகள் வழி எடுதக்காட்டியுள்ளமை நோக்கத்தக்கது. இந்தியக் குடிமக்கள் சிக்கல்களைப் பற்றி பல்வேறு கவிதை களில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

சாதி

சாதியினால் ஏற்படும் பின் விளைவுகளைக் கூறவந்த கவிஞர் சாதியைக் கத்தரிக்கோலுடன் ஒப்பிட்டுப் பாடுகிறார். கத்திரிக்கோல் இடையில் படும் எதையும் பிரிக்கும் இயல்புடையது. அதுபோலவே சாதியும் நல்ல நட்பு, அன்பு இவற்றிற்கு இடையே நுழைந்தால் பிரிவினையை ஏற்படுத்திவிடும் என்பதை,

சாதி என்பது
மெலிந்து காட்சி தரும்
ஊசியல்ல
தலையெல்லாம்
கனத்துக் கொழுத்த
கத்திரிக் கோல்
– அவர்கள் வருகிறார்கள், ப.35

இவ்வடிகளின் வழியாக உணர்த்து கின்றார். சாதி என்பது மனிதன் தன் முகத்தில் தானே பூசிக்கொள்ளுகின்ற கரி என்பதை,

சாதி
மனிதன்
தன் முகத்தில்
தானே பூசிக்கொண்ட கரி
– அவர்கள் வருகிறார்கள் ப.36

இவ்வரிகள் வழி சுட்டிக் காட்டுகிறார்.

மதங்களின் பெயரால் மனித குலத்திற்கு நேரும் சீரழிவைச் சுட்டிக் காட்டி, மனிதன் தன் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான இருப்பிடத்தைக் கூட பெறமுடியாத அவலநிலையில் இருந்தும், மதங்களின் பெயரால் கலவரங்களை நிகழ்த்தும் துர்நிலையை,

இந்தியனே! இந்தியனே1
முதலில் நீ இருக்க
ஒரு
இடம் தேடு
ஆண்டவனுக்கு
வேண்டிய
இடத்தை
அவன் தேடிக்கொள்வான்
– கனவுக் குதிரைகள், ப.16

என்ற வரிகளின் வாயிலாக எடுத்துரைத் துள்ளார்.

வேலையில்லாத் திண்டாட்டம்

வேலையில்லாத் திண்டாட்டத்தால் இளைஞர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை,

பதவி என்கிற
சிம்மாசனங்களுக்காக
அவர்கள்
சிரசாசனம் செய்யவில்லை
வேலை என்கிற
ஊன்றுகோல் கேட்டுத்தான்
ஓலமிடுகிறார்கள்
– அவர்கள் வருகிறார்கள், ப.58

என்ற வரிகள் வழியாகப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். வேலை வாய்ப்பைப் பெறத் துடிக்கும் இளைஞர்கள் நிலை பற்றித் தெரியவருகிறது.

சமுதாய பாதிப்பு

இன்றைய சமுதாயம் ஒவ்வொரு தனிமனிதனையும் தனது சொந்தத் தேவைகளுக்கு உபயோகப்படுத்துகிறது. அதனால் ஒவ்வொரு தனிமனிதனும் பாதிக்கப்படுகின்றான். அரசியல் என்ற பெயரிலும், அடிமை என்ற பெயரிலும் அதிகாரவர்க்கக் கும்பல் சமுதாயத்தில் இவரின் மீது ஆதிக்கம் செலுத்திவிடு கிறது. வியர்வை சிந்தி உழைப்பவர்கள் உழைப்பாளிகள். ஆனால் ஊதியத்தைப் பெறுபவர்கள் மற்றவர்கள் என்பதை,

காற்குளம்பு நோவெடுக்கக்
காற்றாக நான்பறக்க
மூச்சிரைக்க நுரைதள்ள
முன்னேறி நான் ஜெயிக்க
என்மீது பந்தயம் கட்டியவர்க்குப்
பணம் கிடைத்தது
– என்னுடைய போதிமரங்கள், 71

இவ்வரிகள் சுட்டுகிறது.

முடிவுரை

பிறருக்குத் தொண்டு செய்வதை விரும்புகின்ற மனித மனத்தில் நேயம் என்னும் விதை விதைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்து வாழ்தலும், எதிர்கால மாற்றங்களுக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளுதலும் ஆகிய ஆக்கப்பூர்வமான செயல்களைச் சமூகத்திற்கு எடுத்துரைப்பதும் ஒவ்வொரு வரின் கடமையாகும்.

ஏழ்மை என்னும் கொடிய நோயினைத் துரத்தியடிப்பதற்கு அனைவரும் ஒன்று பட்டு நிற்கவேண்டும். சாதியை ஒழிக்க வேண்டும். படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைக்க வேண்டும்.

மக்கள் அனைவரும் அமைதியுடனும், ஆதரவுடனும், மகிழ்வுடனும் வாழ்வதற்கு வழிகாட்டவேண்டும். சமுதாய நல்லிணக்கம் தோன்றி அனைவரும் அன்பென்னும் ஒரு குடையின்கீழ் அகமகிழ வேண்டும் என்பதை இக் கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. மு.மேத்தா, கண்ணீர்ப் பூக்கள், திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணன் சாலை, சென்னை – 600 017, முதற்பதிப்பு, ஜனவரி 1974.
2. மு.மேத்தா, ஊர்வலம், திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணன் சாலை, சென்னை – 600 017, முதற்பதிப்பு 1977.
3. மு.மேத்தா, அவர்கள் வருகிறார்கள், திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணன் சாலை, சென்னை – 600 017, முதற்பதிப்பு 1980.
4. மு.மேத்தா, கனவுக் குதிரைகள், திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணன் சாலை, சென்னை – 600 017, முதற்பதிப்பு, அக்டோபர் 1984.
5. மு.மேத்தா, என்னுடைய போர்திமரங்கள், திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணன் சாலை, சென்னை – 600 017, முதற்பதிப்பு, அக்டோபர் 1987.
6. பாலா, புதுக்கவிதை ஒரு பார்வை, அகரம், 15 – பி, சரவணா காம்ப்ளெக்ஸ், வெள்ளப் பண்டாரத் தெரு, கும்பகோணம் – 1, மூன்றாம் பதிப்பு, நவம்பர் 1999.

கவிக்கோ அப்துல்ரகுமான் உணர்த்தும் 'பித்தன்'

முனைவர் மு. கலைமாமணி

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி

திருவண்ணாமலை – 606 603.

ஆய்வுச்சுருக்கம்

மரபுக் கவிதைகளில் உள்ளுறை, இறைச்சி, தொனி என்றறியப்பட்ட உத்திகள் புதுக்கவிதைகளில் குறியீடு, படிமம், முரண் எனும் வகையில் வளர்ச்சியடைந்துள்ளன. புதுக்கவிதை வளர்ச்சிக்கான காலச்சூழலில் 'வானம் பாடி' இயக்கம் பெரும்பங்கு வகிக்கிறது. வானம்பாடி இயக்கத்தைச் சேர்ந்த கவிஞர்கள் பலரும் பல்வேறு வகையில் தங்களின்பங்களிப்புகளைப்புதுக்கவிதையின் வளர்ச்சிக்கும் வடிவநிலையிலான மாற்றத்திற்கும் செய்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க நபராக அறியப்படும் அப்துல்ரகுமான், தன் கவிதைத் தொகுப்பான 'பித்தன்' என்ற நூலை முரண் உத்திக்கென்றே தனித்துவமாகப் படைத்தளித்துள்ளார். அத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளைச் சிறப்புக் கண்ணோட்டத்துடன் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொற்கள்

வானம்பாடி, பித்தன், முரண், சர்ரியலிஸக் கவிதைகள், கஸல், தத்துவாக்கம், ஞானி, நிராகரிப்பு, அழகியல்

முன்னுரை

யாப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள போராடிய கவிதைச் சூழலில், கவிதை தனக்கான புதுமைத் தன்மை களைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டி பல்வேறு உத்தி முறைகளைத் தனக்கான வெளிப்பாட்டுக் கருவிகளாக்கின. அதில் குறிப்பிடத்தக்க உத்தியாக முரண் இடம் பெறுகிறது. இவ்வுத்தி மரபிலிருந்து இன்றளவிலும் பாடுபொருள்களுக்கு ஏற்பப் பரிணாம வளர்ச்சி அடைந்துவரும் உத்தியாகவும் இருந்து வருகிறது.

தற்காலச் சமூகச் சூழலில் வாழ்க்கை முறைமைகளும் அதற்கு அடிப்படை ஆதாரமாக விளங்கக்கூடிய இயற்கையும் மாறி இருக்கின்றன. அதனால் பல அறிவியல் சாதனங்களாலும், நவீன பண்பாடுகளாலும் மனித சமூகமும் மாற்றம் கண்டுள்ளன. அதனடிப்படையில் இன்றளவில் வெளியாகும் படைப்புகள் மாற்றம் சார்ந்தும் புதிய மறுமலர்ச்சி சிந்தனைகளை வெளிப்படுத்துவதாகவும்

அமைந்திருக்கின்றன. குறிப்பாக கதை, கவிதை முதலான இலக்கியத் துறைகளில் புதுப்புது வெளிப்பாட்டு முறைமைகள் (உத்தி) கையாளப்படுகின்றன. அவ்வாறு தற்காலக் கவிதை இலக்கியத்தில் கையாளப்படும் அனைத்து வெளிப்பாடு களுக்கும், பாடுபொருள் தன்மைக்கும் தன்னைத் தயார் செய்து கொண்டு தனக்கென ஒரு தனித்த இடத்தைப் பிடித்தவர் 'கவிக்கோ' அப்துல் ரகுமான் ஆவார். அவர்தம் 'பித்தன்' கவிதைகளின் வெளிப்பாட்டியல் மற்றும் உணர்வு பொருள் ஆகியவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைக்கப் படுகிறது.

'பித்தன்' - தொகுப்பு

கவிஞர் அப்துல் ரகுமான் தனது கவிதைத் தொகுப்புகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான கவிதைப் பண்புகளை வெளிப்படுத்தி கவிதைகளை எழுதும் ஆற்றல் பெற்றவர். உதாரணமாக அவர் எழுதிய 'பால்வீதி' (1974) தொகுப்பு சர்ரியலிஸக் கவிதைகள் நிறைந்தது, 'விதைப்போல் விழுந்தவன்' (1998) தொகுப்பு அண்ணா கவியரங்கக் கவிதைகள் நிறைந்தது. 'முத்தமிழின் முகவரி' (1998) தொகுப்பு கருணா நிதியைப் பாடும் கவிதைகளால் ஆனது. 'மின்மினிகளால் ஒரு கடிதம்' (2004) தொகுப்பு தமிழில் முதல் கஸல் கவிதைகளுக்கானது. 'சித்ரா' (2005) தொகுப்பு 'தாகூரின் மொழிபெயர்ப்பு' கவிதைகளாலானது, 'இறந்ததால் பிறந்தவன்' (2007) தொகுப்புக் கவியரங்கத் திற்காக எழுதிய கவிதைகளால் நிறைந்தது எனும் வரிசையைக் குறிப்பிடலாம். இதில் 1998 இல் வெளியான 'பித்தன்' தொகுப்பு, முழுவதுமாக முரண் உத்தியாலான கவிதைகளைக் கொண்டி ருக்கும் தொகுப்பாக அறியப்படுகிறது.

இத்தொகுப்பில் அப்துல்ரகுமான் உரிய சொற்பிரயோகத்துடன் கூடிய, ஒருவித எதிர்வாதப் புரிதலை, அறிவுசார் உலகிற்கு விளக்கும் வண்ணம் அமைத்துள்ளார். இத்தொகுப்பின் தலைப்பே மனவளர்ச்சி 'குன்றியவன்' என்ற பொருளையும் 'ஞானி' என்ற பொருளையும் தருவதாக முரண் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தலைப்பு வாசகர்களைத் தொடக்கத் திலேயே சிந்திக்கத் தூண்டுவதாகவும் அமைந்திருக்கிறது.

தொகுப்பின் கவிதைகள்

'பித்தன்' தொகுப்பிலுள்ள கவிதைகள் அனைத்தும் முரணடிப்படையில் அமைக்கப்பட்டாலும் அதற்குண்டான அழகியல், அரசியல், வாழ்வியல் யதார்த்தம், உண்மை, தத்துவாக்கம் என்னும் பல்வேறு பாடுபொருள்களைக் கொண்டுள்ளன. சான்றாக,

"நான் அவர்களுடைய /
அந்தரங்கத்தின் கண்ணாடி /
அதனால் தான் என்னை
உடைக்கப் பார்க்கிறார்கள்; /
என்றான்./
அவர்கள் வெளிப்படுவதற்கு /
பயப்படுகிறார்கள்./ அவர்கள் /
வேடங்களில் வசிக்கிறார்கள்.

அது அவர்களுக்கு வசதியாக
இருக்கிறது /
வேடம் கலைந்தால் மேடைப்
போயிவிடும் /
நான் அவர்களுடைய அம்பலம்/
அம்பலம் என் மேடையல்ல /
நடனம்"
[அப்துல் ரகுமான்., பித்தன்., ப.11]

என்று 'பித்தன்' சொல்லுவதாக வரும் கவிதை, இன்றைய சமூகச் சூழலில் இருந்துவரும் மனிதனுக்கான அத்தனை அடையாளங்களையும் கேள்விக் குள்ளாக்குகிறது. அதேபோல்,

"போதிக்க அல்ல / உங்களுக்குப்
போதிக்கப்பட்டதை / அழிக்கவே
வந்திருக்கிறேன் /
ஒளியைத் தர அல்ல /
உங்களுக்கு இருளைத் தரவே /
வந்திருக்கிறேன் /
வழிகாட்ட அல்ல / உங்களை
வழிமறிக்கவே /
வந்திருக்கிறேன்"
– [மேலது.,பக்.22–23]

என்றமைந்திருக்கும் கவிதை, தமிழிலக்கியப் பரப்பில் இருக்கும் அத்தனைத் தொன்மங் களையும் புரட்டிவித்து அதற்குள்ளான கருத்தியலின் அவசியத்தைத் தேடத் தூண்டும் வகையில் முரண் செய்யப் பட்டுள்ளது.

நிராகரிப்பின் மீதான நேசம்

பொதுவாக மனிதனுக்குள் நிராகரிப்பு களை நேசிக்கும் குணம் இருப்பது இயல்பு. குழந்தைப் பருவத் திலிருந்தே, 'இதைத் தொடாதே' என்றால் நாம் அதைத் தொட்டுப் பார்க்க விரும்புபவர் களாகவே இருந்திருக் கிறோம். அப்படித்தான் நிராகரிப்பும் அதன் மீதான நேசமும், ஒருவகையான பொய்க் கோபத்தைத் தோற்றுவிக்கக் கூடியனவா கின்றன. அத்தகைய நிராகரிப்புகளை நேசிக்கும் ஒரு மனிதனாகவே கவிஞர் குறிப்பிடும் 'பித்தன்' இருக்கிறான்.

"உண்மை / கடைத்தெருவில்
அனாதையாக /
அழுதுகொண்டிருந்தது /
அதை யாருமே / அடையாளம்
கண்டுகொள்ளவில்லை../ .. ..
யாருமே அடையாளம்
கண்டுகொள்ளாததிலிருந்து /
அதை நான் /
அடையாளம்
கண்டுகொண்டேன்"
– [மேலது., பக்.25–26]

சாதாரண மனிதர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியாத உண்மையை, 'பித்தன்' கண்டுகொள்கிறான். பித்தனை யாரும் அன்போடு அணுகுவதில்லை, அடையாளம் கண்டுகொள்வதில்லை. அதனால் அடையாளம் கண்டுகொள்ளப் படாதவைகளை அவன் எளிதில் அடையாளம் கண்டுகொள்கிறான் எனும் சாதிய ஒடுக்குமுறைக்கான குறியீட்டைக் கவிஞர் இக்கவிதையில் முரணாகக் கையாண்டுள்ளார்.

இலக்கியப் புலப்பாடுகளில் 'முரண்' அழகியல் நிறைந்த உத்தியாகிறது. அதனை அழகியலாகவும், அர்த்தப்படும்

வகையிலான தத்துவ ஆக்கங்களாகவும் அப்துல்ரகுமான் கையாண்டுள்ளார்.

"நீ பித்தனா? என்று கேட்டேன் /
நீ கள்ளனா? என்றான் /
நான் காயப்படேன்"
– [மேலது., ப.09]

"பித்தன் பின்பக்கமாக நடந்து
கொண்டிருந்தான் /
நீ என்ன செய்கிறாய்? என்றேன்
/ திருப்புகிறேன் என்றான் /
வெளியே புறப்படுதல் அல்ல /
வெளியிலிருந்து புறப்படுதல்
தான் பயணம் என்றான் /
உங்களிலிருந்து புறப்படுதல்
அல்ல /
உங்களை நோக்கிப்
புறப்படுங்கள் அதுதான் பயணம்"
– [மேலது., ப.43]

"நீ ஏன் இறங்கிக்
கொண்டிருக்கிறாய்? என்று
கேட்டேன் /
மேலே செல்வதற்காக என்றான்"
– [மேலது., ப.47]

இக்கவிதைகள் கேள்வியாகவும், விடையாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். இதன்வழி கவிஞர் உணர்த்தும் தத்துவ விசாரனைகள் 'சிந்தனை தேவையற்றது' என்ற சூழலையும் உருவாக்குகிறது. 'கீழே விழும் விதைத்தான் மேலே எழும்' என்னும் இயற்கையும் இயல்பும் இதற்குள்ளாக இழையோடுவதையும் வாசகர்கள் உணரவேண்டிய தேவை இருப்பதைக் கவிஞர் அழுத்தமாகப் பதிவுசெய்கிறார். அதனால்தான் அவர்,

"மேலே என்பது / மேலே
இருக்கிறது என்பது /
உங்கள் பெரிய மூடநம்பிக்கை"
– [மேலது., ப.49]

என்று விளக்கம் தருகிறார்.

"கதவு என்பது / திறப்பதற்கா? /
மூடுவதற்கா?"
– [மேலது., ப.58]

என்பதான விசாரணைகள், சிந்தனைகள் அவசியமற்றவை என்பதை விவரிக்கிறார்.

"முரண்கள் எதிர்கள் இல்லை /
இணைகள் /
ஒட்டிப்பிறந்த இரட்டைப்
பிறவிகள் / கள்ளக் காதலர்கள்"
– [மேலது., ப.101]

என்றவாறு முரண்பாடுகளைப் பிரிவினை வாதமாகக் கொள்ளத் தேவையில்லை எனும் சிந்தனையைக் கவிஞர் பயன்படுத்தும் முரண் உத்தியின் மூலமாகவே முன்வைக்கிறார்.

முடிவுரை

'சுருங்கச் சொல்லி விளக்க வைக்கும்' கவிதையின் பொதுப் பண்பைப் புதுக் கவிதைகளின் கருத்தியலுடன் யதார்த்த வாதம், தர்க்கவியல், முதலான புது பொருண்மைகளில் கையாண்டவர் கவிஞர் அப்துல்ரகுமான். அவ்வகையில் 'பித்தன்' தொகுப்பினூடாக இவர் கையாண்டிருக்கும் முரண் உத்தி - ஒலியமைப்புகளாக மட்டுமின்றி கருத்து வெளிப்பாட்டுக்கும், கவிஞரின் எண்ணப் புலப்பாட்டிற்கும் வலு சேர்த்திருக்கிறது.

மரபு நிலையில் நேர் / நிறை அசைகள், குறில் / நெடில் சார்ந்த ஒலிப்புச் சொற்களுக்கானதாக இருந்த தன்மையை முற்றிலும் மாற்றியமைத்து எதிர்நிலை முரண் உத்தியை அமைக்கும் புதுவிதத் தன்மை அழுத்தமான சிந்தனைகளோடு கவிஞர் 'பித்தன்' தொகுப்பு முழுவதும் கையாண்டு கருத்து சேர்த்துள்ளார்.

துணை நூற்பட்டியல்

1. அப்துல் ரகுமான்., பித்தன்., நேஷனல் பப்ளிஷர்ஸ்., சென்னை–17., (4ஆம் பதிப்பு 2004)
2. அரங்கராசு.சு., தமிழ்ப்புதுக்கவிதை திறனாய்வு., மூன்றாம் உலகப் பதிப்பகம்., கோவை–2 (1989)
3. சந்திரசேகரன்.இரா.,(ப.ஆ.)., தமிழ்ப் புத்திலக்கியம் கருத்தியல் வளம்., பாரதியார் நூலரங்கம்., கோவை–46 (2003)
4. சிற்பி பாலசுப்பிரமணியம்., இருபதாம் நூற்றாண்டு தமிழ்க்கவிதை., கவிதா பப்ளிகேஷன்ஸ்., சென்னை–17., (2004)

சமகாலப் புதினங்களில் இளைஞர்களின் வாழ்வியல்

த. கவிதா

முனைவர் பட்ட ஆய்வாளர்

தமிழியல் பண்பாட்டு புலம்

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை – 15

ஆய்வுச்சுருக்கம்

இரண்டாயிரம் ஆண்டுகளில் தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ள இளைஞர்கள் குறித்த பதிவுகளையும் தற்கால மாற்றங்களையும் அவர்கள் சந்திக்கும் வாழ்வியல் சவால்களையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

முன்னுரை

ஆண்களுடைய பருவங்கள் என பாலகன், மீளி, மறவோன், திறவோன், விடலை, காளை, முதுமகன் என்ற ஏழு பருவங்களைத் தமிழ் இலக்கியம் வகைப்படுத்துகிறது. இதில் காலை என்ற பருவம் இளைஞர்களைக் குறிக்கிறது.

ஒளிறுவாள் அருஞ்சமம்
முருக்கிக் களிறு எறிந்து
பெயர்தல் காளைக்குக் கடனே [1]

என்று போரில் வெற்றிபெற வேண்டிய மிகப்பெரிய பொறுப்பை இளைஞர் களுக்கு உரியதாக கூறுகிறது புறநானூறு.

பிரிவு

களவு வாழ்விலும் சரி கற்பு வாழ்விலும் சரி இளைஞர்கள் பல்வகை பிரிவுகளுக்கு ஆட்படுதலை தொல்காப்பியம் முதலான நூல்கள் பதிவு செய்துள்ளன. ஓதற்பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு துணைவயின் பிரிவு, பொருள்வயின் பிரிவு என அன்றைய காலத்தில் இளமைப் பருவத்தில் பிரிவு என்பதும் கடமை யாகவே கட்டமைக்கப்பட்டு இருந்தது. காதல் வாழ்வு என்ற போதும் அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டையும் சமநிலை யுடன் பேண வேண்டிய கட்டாயம் இளைஞர்களுக்கு இருந்தது.

திருமணம்

வீரத்தை முன்னிறுத்தியே இளைஞர் களின் மொத்த வாழ்வும் சங்ககாலத்தில் கட்டமைக்கப்பட்ட இருந்தது.

கொல்லேற்றுக்
கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆயமகள்[2]

அதாவது காளையின் கொம்புக்கு அச்சம் கொள்பவனை ஆயமகள் அடுத்த பிறவியில் கூட கணவனாக ஏற்க மாட்டாள் என்கிறது கலித்தொகை.

சமகால பதிவுகள்

பின்நவீனத்துவத்தின் அறிமுகத்திற்கு பின் தமிழ் இலக்கியத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அதில் மிக முக்கியமான ஒன்றாக விளிம்பு நிலை மக்கள் குறித்த இலக்கியங்கள் பதிவு செய்ய தொடங்கியதைகுறிப்பிடலாம். இதன் மூலம் இதுவரை பேசப்படாத பல பிரச்சனைகள் பன்முக நோக்கில் பதிவு செய்யப்பட்டன. அதில் குறிப்பாக இளைஞர்களின் பிரச்சனை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஏனெனில் வருங்கால தலைமுறையின் போக்கும் நோக்கும் சென்ற தலைமுறையில் இருந்து வேறுபட்டதாக இருக்கும். இந்த தலைமுறை இடைவெளி பல்வேறு மாற்றங்களை உட் கொண்டதாகவும் இருக்கும். அவற்றின் மூலம் சமுதாயத் திலும் கொள்கைகளிலும் விழுமியங் களும் வாழ்வியலிலும் ஏற்படும் மாற்றங்களையும் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் பதிவு செய்ய இயலும்.

கணினி மயப்பட்ட இக்காலத்தில் இளைஞர்கள் பல்வேறு பிரச்சினை களையும் சவால்களையும் எதிர்கொள் கின்றனர். அவற்றில் சமுதாயத்தில் தாக்கத்தை உண்டு பண்ணும் வருங் காலத்தை கட்டமைக்கும் அல்லது மாற்றி யமைக்கும் வல்லமை வாய்ந்த பிரச்சனை களை இக்கட்டுரை வழி ஆராயலாம்.

வறுமை

உலக நாடுகள் அனைத்திலும் காணப்படும் மிக முக்கியமான ஒரு பிரச்சனையாக வறுமை உள்ளது. இந்திய இளைஞர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இளமைப்பருவ வறுமை என்பது வாழ்வில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. எனவேதான்

கொடிது கொடிது வறுமை
கொடிது அதனினும் கொடிது
இளமையில் வறுமை [3]

என்றார் அவ்வையார்.

கிராமத்திலிருந்து நகரத்திற்கு வந்து வறுமையால் கேட்டரிங் சர்வீஸ் எனப்படும் திருமண பந்தி பரிமாறும் வேலைக்குப் போகும் நிலையை வீர பாண்டியனின் பருக்கை என்ற புதினம் பதிவு செய்து உள்ளது.

"ஏன் சாப்பாட்டுக்கு வழியில்லாத இப்படி ஒரு நிலைமை சென்னைக்கு எதுக்கு படிக்க வரணும். பேசாம ஊரிலே இருந்திருந்தாலும் எப்படியோ கிடந்து இருக்கலாம் என்று ஏதேதோ மன அலைகள் மாயக் குரலாக ஒலித்துக் கொண்டிருந்தன. அந்த நேரத்தில் யாரைப் பார்த்தாலும் கோபமாய் வந்தது. நமக்கு சோறு போடாத இந்த உலகத்தையே அழிச்சுடணும். எவனாயிருந்தாலும் கொலை பண்ணிடனும்... ஆத்திரம் பொங்கியது"4

இதன் வாயிலாக படிப்பைத் தொடர் வதில் உள்ள சிரமங்களையும் தொழில் இடத்தில் ஏற்படும் அவமானத்தையும் வறுமை காரணமாக இளைஞர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் விரிவாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன.

லக்ஷ்மி சரவணகுமாரின் கொமோரா என்ற நாவலும் இளைஞனின் வாழ்வில் ஏற்படும் அங்கீகாரத்திற்கான போராட்டம் உள்ளிட்டவற்றை பேசும்போது வறுமை யையும் மிக முக்கியமான ஒரு காரணியாக பதிவு செய்துள்ளது. மலர்வதி, தூப்புக்காரி மற்றும் காட்டுக்குட்டி ஆகிய புதினங் களில் வறுமை காரணமாக பெண்கள் சமூகப் படிநிலையில் கீழாக கருதும் தொழில்களை செய்யும் நிலைக்கு ஆளாகிறார்கள் என்பதை பதிவு செய்து உள்ளார். காட்டுக்குட்டி புதினத்தில் வரும் ரமணி, வறுமை காரணமாக பாலியல் தொழிலில் ஈடுபடுகிறார். வறுமையின் விளைவாக சாதி கூட பின்னுக்குத் தள்ளப்படுகிறது என்பதையும் அறிய முடிகிறது.

"ஒரு ஆளு இருக்கிறத பொறுத்துதான் சம்பந்தம் வரும். நம்ம சாதில வேறயா இருந்தாலும் அவன் செய்ய சோலியத் தானே செய்றோம்"[5]

தீண்டாமை

"வாழ்க்கையைப் பற்றி ஆராய்ந்து அதன் இழந்த பண்புகளை கூறுவது இலக்கியம் எனப்படும்"6

என்கிறார் அ.ச. ஞானசம்பந்தன். சட்டத்தின் மூலமாக தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டாலும் சமூகத்தின் பல அடுக்குகளிலும் பல வடிவங்களில் தீண்டாமை நிலைத்திருப்பதை இக்கால புதினங்கள் பதிவு செய்துள்ளன. மலர்வதியின் தூப்புக்காரி புதினத்திலும் அவருடைய மற்றொரு புதினமான காட்டுக்குட்டியிலும் இதனைக் காணலாம். கனகம் என்ற கதாபாத்திரம் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேராத போதும் அவர் செய்யும் துப்புரவு தொழிலின் காரணமாக தன் சமூகத்தைச் சேர்ந்த பிறரால் இழிவாக நடத்தப்படுகிறார். "நாடாத்திக்கி உள்ள தொழிலையா அவா செய்யியா? அவள கூட்டத்தில் சேக்கவே அருவருப்பான இருக்கம்ப மொவளையும் விட்ருக்கா"[7] என்பதன் வாயிலாக அறிய முடிகிறது. காட்டுக்குட்டிப் புதினத்தில் வரும் ரமணி தான் செய்யும் தொழில் காரணமாக தீண்டத்தகாதவர் ஆக புறக்கணிப்புக்கு ஆளாக்கப்படுகிறார். "தள்ளி நில்லு நீ ...இப்படி ஒட்டிட்டு வந்து நிக்கிய? நாலு பேரு பார்த்தா என்னை இல்லியா தப்பாச் செல்லுவுனம்" 8

சாதி அடக்குமுறை

சாதி அடக்குமுறை இன்றளவும் சமூகத்தில் நிலவி வருகிறது. இது இளைஞர்களுக்கு மிகப்பெரும் சவாலாக இருக்கிறது. சரியான பின்புலமும் கல்வியும் சாதியின் காரணமாக இளவயதில் மறுக்கப்படும் இவர்கள் உயர் சாதியினரால் சுமத்தப்படும் அடக்கு முறைகளை விரும்பாவிட்டாலும் எதிர்த்து நிற்க சமூகச் சூழல் ஒத்துழைப்ப தில்லை. இந்தப் பின்புலத்தில் இமயத்தின் கோவேறு கழுதைகள் புதினம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இப்புதினத்தில் முந்தைய தலை முறையைச் சேர்ந்த ஆரோக்கியம் உயர் குடியினர் அடக்குமுறைகளைச் சகித்துக் கொண்டு போகிறார். ஆனால் அவருடைய

மகனும் மருமகளும் அதனை விரும்பாத காரணத்தினால் ஊரை விட்டு வெளியேறி நகரத்தில் தொழில் செய்கிறார்கள். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு வாக்குவாதம் ஏற்படும் போது கூட அவர்களுடைய செயல் தவறானது என்ற பொதுச் சிந்தனை சாதிய அடக்கு முறையினால் கட்டமைக்கப்படுகிறது. தூப்புக்காரி புதினத்தில் "மாரி நீ வேஸ்ட் வாரியிட்டு போனதுக்கு அப்புறம் எதுக்கு மனோ கூட சண்டை போடுற?"[9] என்ற கூற்றின் வழி அறியமுடிகிறது.

உடல் குறைபாடு

உடல் குறைபாடு கொண்ட மாற்றுத் திறனாளி இளைஞர்கள் பற்றிய பதிவுகளும் காணக்கிடைக்கின்றன. காதுகள் புதினத்தில் மகாலிங்கம் தன் காது கேளாமையால் அவதிப்படுவது பதிவு செய்யப்பட்டுள்ளது. அபிலாஷின் கால்கள் புதினம் மது என்ற மாற்றுத் திறனாளியின் வாழ்வியலை விரிவாக பதிவு செய்கிறது."காலிப்பர் கிட்டத்தட்ட 5 கிலோ கனம் கொண்டது. அது அவளது காலில் உராய்வுகளை தொடர்ந்து ஏற்படுத்தி புண்களை உருவாக்கியது."[10]

போதைப்பழக்கம்

லக்ஷ்மி சரவணக்குமாரின் உப்பு நாய்கள் புதினம் போதை மருந்து உபயோகித்தல், மது அருந்துதல் போன்ற பிரச்சினைகளை பதிவு செய்துள்ளது. இதுவே வறுமையில் உள்ள இளைஞர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட வழி வகுக்கிறது. கொமோரா என்ற புதினத்தில் வரும் கதிர் கதாபாத்திரம் இத்தொழிலையே செய்கிறது.

"ஏத்தா இவன் சேர்க்க எதும் எனக்கு சுத்தமா பிடிக்கல. நாளப்பின்ன ஒரு கல்யாணம் காட்சி பண்ணனும். ஆனா என்ன தொழில் பண்றான்னு கேளு, பொட்டலம் விக்கிறான். வம்பாடுபட்டு உழைக்க சொல்லி கொடுத்தா அவங்க அப்பனாட்டம் ரெண்டாம் நம்பர் வேலையாத்தான் செய்றான்".[11]

பாலியல் பிரச்சினைகள்

இருபத்தோராம் நூற்றாண்டு பல கொள்கைகளினால் தாக்கம் கொண்டது. அவை இலக்கியத்திலும் பிரதிபலிக்கிறது. மேற்கத்திய தாக்கம் மற்றும் பல சித்தாந்தங்களினால் பாலியல் பிரச்சினைகள் இன்றைய புதினங்களில் பரவலாக பதிவு செய்யப்பட்டு வருகிறது. எஸ். ராமகிருஷ்ணனின் உறுபசி என்ற புதினத்தில் சம்பத் என்ற கதாபாத்திரம் அதீத பாலியல் இச்சையால் துன்புறுவதைப் பதிவு செய்திருக்கிறார். திருமணத்திற்குப் பிறகான உடலுறவு ஒருவனுக்கு ஒருத்தி போன்ற கட்டுப் பாடுகள் தகர்ந்து வருவதையும் புதினங்கள் வழி அறியமுடிகிறது. பதின்ம வயது முதல் இக்கால இளைஞர்கள் இப்பிரச்சனையை எதிர்கொள்கிறார்கள்.

"சம்பத் மிக வேதனையுடன் பொம்பளை பிள்ளைகளை வயதுக்கு வந்ததும் கட்டி கொடுத்து விடுவது போல நம்மையும் நடத்தினால் நன்றாக இருக்கு மில்லையா, இப்படி காமம் ஒரு கரையானைப் போல

மெல்ல அரித்துத் தின்பதிலிருந்து தப்பி விடலாமே என்று கேட்டான்.[12]

முடிவுரை

இளமைப்பருவம் என்பது மீத மிருக்கும் மொத்த வாழ்வுக்குமான அடிப்படை என்பதால் அப்பருவத்தில் ஒருவர் ஏற்படுத்திக் கொள்ளும் அடை யாளமே அவருடைய மொத்த வாழ்வுக்கு மான அடையாளமாக விளங்கவல்லது. எனவே எத்தகைய பிரச்சனைகளில் இளைஞர்கள் சிக்குண்டு இருக்கிறார்கள் என்பதை அறிவதன் மூலம் அதிலிருந்து விடுபடுவதற்கான வழியையும் நாம் கண்டு கொள்ளலாம். வறுமை தீண்டாமை, சாதிய ஒடுக்குமுறை, பாலியல் பிரச்சனைகள் போன்ற அனைத்திற்கும் கல்வி மிகப்பெரிய ஒரு விடுதலையைத் தரவல்லது. பிரச்சனை களில் சிக்குண்டு கிடக்கும் இளைஞர்கள் அனைவருமே கல்வியில் சிறந்து விளங்கியவர்கள் அல்ல என்பதையும் இப்புத்தினங்கள் வாயிலாக அறிய முடிகிறது. விளிம்புநிலை நோக்கி பயணப்பட்ட இலக்கியம் சமூகத்தின் ஒரு பகுதியை மட்டுமே தன்னுள் பதிவு செய்கிறது. நகர வாழ்வு, நடுத்தர வர்க்க இளைஞர்களின் வாழ்வியல் பிரச்சினைகள் குறிப்பாக காதல், குடும்பம் போன்றவற்றில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றை இக்கால புதினங்கள்மிக மிக குறைவான அளவே பதிவு செய்துள்ளன என்பதையும் காண முடிகிறது. இன்றளவும் பெண்களைப் பொறுத்தவரை அவர்களது திருமணமும் குடும்ப வாழ்வுமே அவர்களுடைய பிரச்சினைகளுக்கான காரணிகளாகவும் அவர்கள் அடைய வேண்டிய இலக்கு களாகவும் இருப்பது சமூகத்தின் பிற்போக்குத் தனத்தை வெளிப்படுத்து கிறது. முதியவர்கள் சமூகத்தில் பாரமாக கருதப்படும் நிலையையும் சில புதினங்கள் பதிவு செய்துள்ளன. முதுமையை விரும்பத் தகாத ஒரு நிலையாக மாறி உள்ளதையும் பல புதினங்களை ஆராய்வதன் மூலம் கண்டுகொள்ள முடிகிறது. இளமைப் பருவம் சரியாக அமையாதவர்களுக்கே முதுமையிலும் இந்நிலை நீடிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பெண்கள் பொருளாதாரப் பங்களிப்பு செய்ய ஆரம்பித்த பிறகு குடும்பங்களில் ஏற்படும் மாற்றங்கள் இன்னும் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளது என்பதையும் காண முடிகிறது.

குறிப்புகள்

1. புற நானூறு, 312,
2. கலித்தொகை103, 63–64
3. ஔவையார்,தனிப்பாடல், 54
4. பருக்கை, ப.14
5. தூப்புக்காரி, ப.37
6. இலக்கியக்கலை,ப.10
7. தூப்புக்காரி, ப.44
8. காட்டுக்குட்டி, ப.44
9. தூப்புக்காரி, ப.114
10. கால்கள்,ப40
11. கொமோரா,ப.197
12. உறுபசி, ப.15

துணை நூற் பட்டியல்

1. மாணிக்க வாசகன் ஞா. புறநானூறு, உமா பதிப்பகம்1988

2. ந. சி.கந்தையாபிள்ளை, கலித்தொகை,2021

கௌரா புத்தகமையம்,

3. மலர்வதி, தூப்புக்காரி 2012, மதி புக்ஸ் வெளியீடு.

4. மலர்வதி, காட்டுக்குட்டி, 2017, கிழக்குப் பதிப்பகம், சென்னை.

5. வீரபாண்டியன், பருக்கை, 2012, பரிசல் பதிப்பகம், சென்னை.

6. அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

7. லஷ்மி சரவணகுமார், கொமோரா

8. லஷ்மி சரவணகுமார், உப்புநாய்கள், கிண்டில் பதிப்பு.

9.. இமையம், கோவேறு கழுதைகள்

10. ஆர்.அபிலாஷ், கால்கள், உயிர்மை பதிப்பகம், சென்னை

11. எஸ்.ராமகிருஷ்ணன், உறுபசி, 2019, தேசாந்திரி பதிப்பகம், சென்னை.

‘காக்கைச் சிறகினிலே’ இதழ் கூறும் தலையங்கச் செய்திகள்

ப.கார்த்திக்
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
மாநிலக் கல்லூரி, சென்னை – 600 005.

ஆய்வுச்சுருக்கம்

தனிமனிதனின் விருப்பமும் சமுதாயத் தேவைகளும் அதிகரிக்கும் போது செய்திகளை அறியும் ஆர்வத்தில் மனிதர்கள் சில செய்தி வாயில்களைப் படைத்துக் கொண்டனர். அச்சுக் கலையை அறிவதற்குமுன்பு மனிதன் புறாக்களின் கால்களில் செய்தி ஓலைகளைக் கட்டி அனுப்பியும் கூவியழைத்தும் சீழ்க்கை ஒலியாலும் பறை மற்றும் மணி அடித்தும் செய்திகளைப் பிறருக்குத் தெரிவித்தான். சில இடங்களில் தீயம்புகளை வானத்தில் செலுத்தியும் செய்திகள் அறியப்பட்டன. சேரன் செங்குட்டுவனின் படையெடுப்பைச் சேரர் தலைநகர் வஞ்சியில் பறையறிவித்து அண்டை நாடுகளுக்குப் பரப்பியதும் உண்டு என்பதைச் சிலப்பதிகாரத்தின் காட்சிகாண் காதை (173 - 177) தெரிவிக்கிறது. இந்தியாவில் தகவல் தொடர்பு சாதனங்களின் சிந்தனை என்பது அசோகர் காலத்தில் ஏற்பட்டதாகும். அரசுக் கட்டளைகள், அறம் மற்றும் புத்தமதக் கொள்கைகள் போன்றவை தூண்களிலும் பாறைகளிலும் செதுக்கி மக்களுக்குத் தெரிவித்துள்ளனர். இதைப் போல் படிப்படியாக முன்னேற்றம் பெற்று இதழியல் ஒரு துறையாக வளர்ச்சிப் பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

இலக்கணம், இலக்கியம், கல்வெட்டு ஆராய்ச்சி எனப் பல இலக்கியச் செய்திகளை அக்கால இலக்கிய இதழ்கள் தமிழ் உலகிற்கு எடுத்துக் கூறியுள்ளன. மறைமலையடி களின் ‘அறிவுக்கடல்’ (1902), மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ‘செந்தமிழ்’ (1902), சைவசிந்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் ‘செந்தமிழ்ச் செல்வி’ (1923), கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ‘தமிழ்ப் பொழில்’ (1925) ஆகிய இலக்கிய இதழ்கள் தமிழ் மற்றும் சமய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளன என்பதை அவ்விதழ்களின் செய்திகள் வழி அறியலாம். இத்தகைய இலக்கிய இதழ்களில் இன்றைய நாளின் தேவைக்கேற்ப இலக்கியச் செய்தி களோடு அறிவியல், அரசியல், இயற்கை, திரைச் செய்திகள், சமூகம் எனப் பல செய்திகளைத் தாங்கி மாதம் ஒரு முறை வெளியாகும் ‘காக்கைச் சிறகினிலே’ இதழின் தலையங்கச் செய்திகளைக் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை

அமைகிறது. இதழ்களில் பல்வேறு செய்திகள் இடம் பெற்றாலும் இதழாசிரியர் வாசகர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் இடமாகத் தலையங்கம் அமைந்திருக்கிறது. மற்றவர் பற்றிய செய்திகளை வெளியிடுவதை விடத் தங்கள் சொந்தக் கருத்துக்களை எழுத்தாளர்கள் ஆர்வத்தோடு வெளியிடு கிறார்கள். எனவே, இதழாசிரியர்களின் எழுத்துப் பசிக்கு உணவு படைக்குமிடங் களாக தலையங்கங்கள் அமைகின்றன. இதழின் இதயப்பகுதி தலையங்கமாகும். தலையங்கம் பொது மக்களுக்கு வழி காட்டியாகவும் அவர்கள் கருத்தை எதிரொலிப்பதாகவும் அமைய வேண்டும். இதனைத் 'தலையங்கம் இடம்பெறா இதழ்கள் முதுகெலும்பும் நாடும் இல்லா மனிதனையும், மறைத்திரை இல்லா வீட்டினையும் அழகுபடுத்தாத கிறிஸ்துமஸ் மரத்தினையும் ஒக்கும்'(1) என்று கோதண்டபாணி குறிப்பிட்டுள்ளார். சமுதாயத்தில் நடைபெற்ற அல்லது நடைபெறப் போகும் நிகழ்வுகள், நிகழ்ச்சிகள் பற்றியோ இதழின் ஆசிரிய ரோ அல்லது துணையாசிரியரோ அல்லது சிறப்பாசிரியரோ எழுதுவதே தலையங்க மாகும். செய்தித்தாளில் மிகவும் புறக் கணிக்கப்படுவதும் குறைவாக மதிப்பிடப் படுவதும் ஆன பகுதி தலையங்கமாகும். தலையங்கத்தின் தலையான நோக்கம் என்பது மக்களின் கருத்தை வெளிப் படுத்துவதேயாகும். இத்தகைய தலையங்கச் செய்திகளைக் காக்கைச் சிறகினிலே இதழின் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச் சொற்கள்

காக்கைச் சிறகினிலே, தலையங்கம், ஜல்லிக்கட்டு, வாடிவாசல், காவிரி டெல்டா, கல்வித்துறை, மார்க்ஸிஸ்ட்டு, கம்யூனிஸ்டு, கந்துவட்டி.

முன்னுரை

நாளும் புதிய புதிய துறைகள் தமிழ் இலக்கிய உலகில் வளர்ந்துள்ளன. அவற்றுள் இதழியலும் ஒன்றாகும். மாறி வரும் உலகில் மக்கள் வாழ்வில் இதழ்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்றிருக் கின்றன. நடுத்தர மக்களின் தவிர்க்க முடியாத ஒரு பொழுதுபோக்குச் சாதனமாகவும் இதழ்கள் செயல்படு கின்றன. இத்தகைய இதழ்களில் இலக்கிய இதழ்கள் சிறப்பிடம் பெறு கின்றன. 'காக்கைச் சிறகினிலே' இலக்கிய இதழ் தமிழ் உலகில் எல்லாவித அறிவையும் பெறும் நிலையில் அனைத்துச் செய்தி களையும் வாசகர் களுக்கு அளிக்கின்றது. இவ்விதழின் தலையங்கச் செய்திகள் இன்றைய உலகில் நிகழும் உண்மைச் செய்திகளை வாசகர்களுக்குக் காட்சிப் படுத்துவதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

தலையங்கம்

தலையங்கங்கள் இன்று பல துறைகளை மையமிட்டு எழுதப்படு கின்றன. இதழாசிரியருக்கு ஒரு துறை சார்ந்த அறிவு என்னும் நிலை மாறி பல்துறை அறிவும் அவசியமாகின்றது. எனினும் ஒரு துறையினைப் பற்றி வெளியிடப்படும் போது அத்துறை

வல்லுநரைக் கொண்டே செய்திகள் அமைய வேண்டும். இல்லையெனில் வாசகர்களின் எதிர்பார்ப்பு என்பது நிறைவேறாததாகிவிடும். இலக்கியம், அறிவியல், தொழில் நுட்பம், சுய முன்னேற்றம் எனப் பல துறைகளில் மக்களின் ஆர்வம் பரவியுள்ளது. எனவே, அன்றைய தேவையினை மற்றும் அன்றைய செய்திகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து தலையங்கம் அமைய வேண்டும். எனவே, இதில் முழுகவனம் செலுத்துவது ஆசிரியரின் கடமையாகிறது. இதற்காக ஆசிரியர் தலையங்கத்துக்கென ஒரு குழுவினை அமைத்து அதன் மேற் பார்வையாளராக மட்டுமின்றி முழு பொறுப்பாளராகவும் திகழ்வதைக் காணலாம். "தலையங்கங்கள் பெயர் போட்டு எழுதப்படுவதில்லை என்றாலும் கூட அவை ஆசிரியர் ஒப்புதலுடன் வெளி வந்ததாகவே கருதப்படும்"(2) என்று தனசேகரன் தலையங்கம் குறித்துக் குறிப்பிடுவதைக் காணலாம்.

சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தி அவற்றின் தீர்வுகளுக்கு வழிகாட்டும் நோக்கில் தலையங்கம் அமைய வேண்டும். தலையங்கத்தில் இன்ன செய்திதான் எழுத வேண்டும் என்ற வரையறை கிடையாது. தலையங்கம் என்பது ஆசிரியர் தம் கருத்தைக் கூறுவதற்குரிய வாயிலாகத் திகழ்கிறது. இத்தகைய தலையங்கங்கள் வழி அரசின் கொள்கைகளைப் பாராட்டவும் குறை கூறவும் இயலுகின்றது. அரசு சில நேரங்களில் மக்கள் நிலை அறிந்தும் பயனில்லாத கொள்கைகளைக் கூறும் போது எள்ளி நகையாடும் நிலையும் உருவாகிறது. இந்நிலையினை - குணங்கள், குற்றங்கள், எள்ளல் என்னும் தலைப்புகளில் எடுத்துக்காட்டப் பெறுகிறது. இதன் வழி வாசகர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முறையில் ஆசிரியர் எழுதியுள்ளதை அறியலாம். இவ்வகையில் 'காக்கைச் சிறகினிலே' இதழில் இடம்பெறும் தலையங்கம் என்பது,

- அரசியல்
- சமூகச் சிக்கல்கள்
- விழாக்கள்
- போராட்டக் களங்கள்
- தொன்மச் செய்திகள்
- அன்றைய சமூக நிகழ்வுகள்

எனப் பல மக்கள் அறியாத செய்திகளை இலக்கிய இதழான 'காக்கை சிறகினிலே' தருவதைக் காண முடிகிறது.

தலையங்கம் என்று பதிவு செய்யாமல் முதல் பக்கத்தின் நேர்கோட்டுப் பிரிவாக பாதியும் அல்லது செய்திகளின் விரிவைப் பொறுத்து மறுபக்கத்தில் தொடர்ந்து பாதியும் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது. தலையங்கம் அனைத்தும் முற்றிலும் இதழின் ஆசிரியர் அவரைச் சார்ந்த குழுவால் மட்டுமே கலந்து ஆலோசிக்கப் பட்டு எழுதப்படுகிறது.

2017 - இல் வெளியான இதழின் வழி தலையங்கச் செய்திகள் ஆராயும் பொருட்டு அவைகள் முறையே,

♦ புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் செய்திகள்

♦ அரசைப் பணிய வைத்த அறப் போராட்டம்

♦ சமூகச் சிக்கல்கள்

♦ எழுச்சிப் பெறும் மக்கள்

♦ கல்வித்துறை மாற்றங்கள் குறித்துப் பாராட்டுதல்

♦ மொழிச் சிந்தனைகள்

♦ தமிழ்நாட்டு மக்களின் வாழ்வியல் இடர்ப்பாடுகள்

♦ கந்துவட்டிக் கொடுமை

போன்ற தலையங்கச் செய்திகள் குறித்துக் 'காக்கைச் சிறகினிலே' இதழ் எவ்வித ஒளிவுமறைவும் இன்றி உள்ளதை உள்ளபடி பேசியுள்ளதைக் காணலாம்.

புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாள் செய்திகள்

2017 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வெளிவந்த ஜனவரி மாத இதழின் தலையங்கச் செய்தியில், வாசகர்களுக்குப் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துத் தலையங்கம் தொடங்கப்பட்டுள்ளது. காக்கைச் சிறகினிலே இதழ் தொடங்கி ஆறு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் திரு.இரா.எட்வின், திரு.முகிலன் ஆகியோர் இணைந்துள்ள ஆசிரியர் குழு தங்களது நட்பையே மூலதனமாக வைத்து வெற்றிகரமான தனது பயணத்தைத் தொடங்கியதாகவும் மேலும் வாசகர்கள், இளம் படைப்பாளர்களின் துணையோடும் இவ்விதழ் தடையின்றி வெளிவரு வதாகவும் பெருமையுடன் பதிவு செய்துள்ளனர். இச்சிற்றிதழ் தொடங்கிய அன்றே ஐந்தாண்டு சந்தா தொகைகளை அள்ளிக் கொடுத்து ஊக்கமளித்த நண்பர்களுக்கும் தொடர்ந்து சந்தாக்களைத் தவறாமல் தரும் வாசகர்களுக்கும் நன்றி தெரிவித்து எழுதியுள்ளதைக் காண முடிகிறது.

அரசைப் பணிய வைத்த அறப் போராட்டம்

இத்தலைப்பின் கீழ், தமிழ்நாடு மட்டுமல்லாமல் உலகத் தமிழர்கள் அனைவரும் இணைந்து நடத்திய அறப்போராட்டமான 'ஜல்லிக்கட்டு' போராட்டத்தின் சிறப்புகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. 'வாடிவாசல் திறக்கும் வரை வீடு வாசல் போக மாட்டோம்' என்ற முழக்கங்களோடு தைப்பொங்கலில் தொடங்கிய ஜல்லிக் கட்டுப் போராட்டம், அலங்கா நல்லூரில் பிறந்து மெரினாவில் வளர்ந்து அரியலூரில் புகுந்தது குறித்துப் பேசப்பட்டுள்ளன. ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமிகள் என அனைவரும் போராடும் களத்தில் உடுத்திய உடைக்கு மாற்று உடையின்றி, உணவு, குடிக்க நீர், விரித்துப்படுக்க துணியின்றி, பனிப்பொழிவு, உடலைக் குளிர்க்கும் கடல்காற்று, சுடும் வெயில் என எதையும் பொருட்படுத்தாமல் இரவும் பகலும் நிகழ்ந்த போராட்டக் காட்சிகளைப் பதிவு செய்துள்ளார் ஆசிரியர்.

24 மணிநேரத்தில் 7 இலட்சம் இளைஞர்கள் கண்ட மெரினா 48 மணி நேரத்தில் 15 இலட்சம் பேர் கொண்ட மக்கள் திரளைத் தாங்க முடியாமல் திணறியது. இப்போராட்டம் பண்பாட்டை மீட்க மட்டுமின்றி பறிக்கப்பட்ட அல்லது பறிபோன உரிமையையும் மீட்கத்தான் என்பதை உலகிற்கு உணர்த்தியது. இது சமூகத்தின் போராட்டக்களத்தைக் காட்சிப் படுத்தியது. இப்போராட்டத்தைக் கண்டு கலங்கிய அரசு ஐந்தாண்டுகளில் முடியாத தீர்ப்பை ஐந்தே நாளில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக இருந்தது. இதன் மறுபலனாக அதிகாரத்தை மதிக்காத போராட்டக் காரர்களை அடக்க காவல்துறையைத் தூண்டி கடும்தாக்குதல்களையும் செய்ய தவறவில்லை அரசு. இத்தகைய உண்மையான சமூக நிகழ்வுகளைப் பதிவு செய்வதில் காக்கைச் சிறகினிலே இதழ் சிறந்ததொரு பணியினைச் செய்து வருவதைக் காண முடிகிறது.

சமூகச் சிக்கல்கள்

காவிரிப் பிரச்சினை, இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு கிடைக்காத நிலை, நூறு நாள் வேலையை விவசாயத்திற்குப் பயன் படுத்துவதாகக் கூறி பிற வேலைகளுக்கு மக்களைப் பயன்படுத்தும் அவலம், அதையும் மீறி விவசாயம் செய்தால் விளைந்த பொருள்களுக்குப் போதுமான விலை கிடைக்காத நிலை, விவசாயம் செய்வதா? அல்லது வேறு வேலை செய்வதா? என்ற மனக்குழப்பத்தில் காவிரி டெல்டா விவசாயிகள் இருப்பதை மிகக் கவனமாகப் பதிவு செய்துள்ளதைக் காண முடிகிறது.

காவிரி மேலாண்மையை உடனே அமைக்க வேண்டும் என்ற உச்சநீதி மன்ற கோரிக்கையை வலியுறுத்தி அரைக் கோவணத்துடன் தலைநகரில் அய்யாக் கண்ணுவின் தலைமையில் விவசாயிகள் போராடும் நிலை, எத்தகைய போராட்டங்களை விவசாயிகள் செய்தாலும் அதை மத்திய மாநில அரசுகள் கண்டு கொள்ளாத மோசமான நிலையால் பல எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் செயல்களைச் சந்திக்க இயலும் எனக் கருதப்படுகிறது. ஜல்லிக் கட்டுப் போராட்டத்தினால் உலகத் தமிழர்கள் இணைந்து போராடி பெற்ற உரிமையைப் போல், விவசாயிக்கு, விவசாயத்திற்கு என அனைவரும் இணைந்து போராடும் நிலை வெகுதூர மில்லை என்பதை மிகுந்த அழுத்தத் தோடு கூறி அரசுக்குச் சவால் விடும் நிலையில் தலையங்கம் அமைந்துள்ளது.

எழுச்சி பெறும் மக்கள்

இத்தலைப்பில அமைந்த தலை யங்கத்தில் கட்சிகளின் செயல்களைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். பனைமரம் பட்டுப்போதல், கால் நடைகள் தீவினம் இல்லாமல் சந்தை களில் விவசாய மாடுகள் விற்பனைக்காக குவிந்துள்ளமை குடிக்கக்கூடத் தண்ணீர் கிடைக்காமல் மக்கள் முதல் பயிர்கள் வரை கருகிக் கொண்டிருக்கும் சூழலில்,

♦ நான்கு ஆண்டு கால அதிகாரத்தில் முடிந்த அளவு சுருட்ட யோசித்துக் கொண்டிருக்கும் - அதிமுக.

♦ எதுவாக இருந்தாலும் மந்திரம் சொல்லி செயல்பட தயாராகியுள்ள - இடதுசாரிகள் கட்சி.

♦ எதுவானாலும் சரி ஏதாவது திராவிடக் கட்சியோடு கூட்டணி அமைக்கத் தயாராக உள்ள - காங்கிரஸ்

♦ லஞ்சம் ஊழல் வரி கட்டாமல் ஏமாற்றுதல் என்ற பெயரில் குறுக்கு வழி தேடும் - பா.ஜ.க.

♦ எதை எப்படிச் செய்வது என அறியாமல் தேர்தல் நேரப் பிரச்சாரம் தவிர தனது அரசியல் செயல்பாட்டைக் குறைத்த - தேமுதிக.

♦ வீரப் பேச்சுகளைத் தனது அரசியல் பாணியாக கொண்டு வீழ்த்த - மதிமுக.

மேலும், செயலற்றுக் கிடக்கும் சிறிய உதிரிக்கட்சிகள் என இக்கட்சிகளின் செயல்பாட்டைக் கண்டு இவர்களை நம்பி ஒன்றும் நடக்கப்போவதில்லை என மக்கள் நேரிடையாக களமிறங்கும் நிலையையும், வைகை அணையின் நீர் ஆவியாவதைத் தடுக்க தெர்மாகோல் மூடிபோட்டு பூட்ட வேண்டும் என்று ஊடகத்திற்கு புகைப்படம் எடுக்கச் சென்ற பேரறிவு ஞானம் பெற்ற கூட்டுறவு அமைச்சர் போன்றவர்களையும், காவிரியின் தடுப்பணை கட்ட மணலை அள்ளித் தருபவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப் போராடும் அப்பாவியான விவசாயிகளின் நிலையையும் குறித்துப் பேசப்பட்டுள்ளன.

இவ்வாறு காக்கைச் சிறகினிலே இதழ், அரசியல் குறித்த செயல்பாடுகள் அனைத்தையும் தெளிவாக எவ்விதச் சார்பின்மையும் இன்றி வெளியிட்டுள் ளதைக் காண முடிகிறது.

கல்வித்துறை மாற்றங்கள் குறித்துப் பாராட்டுதல்

புத்தகக்கல்வி, அடிப்படைக் கல்வி, அனுபவக்கல்வி, வாழ்வியல் கல்வி என்பதைக் கண்டறியும் வாய்ப்பையும், அதைத் தேர்வு செய்து அதில் ஈடுபட்டு வளரும் உரிமைகளையும் இந்தக் கல்வி முறை எதிர்காலத் தலைமுறைக்கு தருவதற்கு ஏதுவாக அதிமுக ஆட்சியாளர் களில் கல்வித்துறை அமைச்சரான திரு.செங்கோட்டையன், எதிர்காலத் தலைமுறை மீது அக்கறை கொண்டு, கல்வித்துறையில் அரியமாற்றத்தைக் கொண்டு வருவதில் அதிக அக்கறையும் பொறுப்பும் எடுத்துக் கொண்டுள்ளார். இதைப் பாராட்டி அமைச்சரோடு செயல்படும் கல்வித்துறை அலுவலர்கள் அனைவரையும் பராரட்டி மகிழ்வதாக காக்கைச் சிறகினிலே தலையங்கச் செய்தி அமைந்துள்ளது.

மொழிச் சிந்தனைகள்

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கமும், இந்திய மாணவர் சங்கமும் இணைந்து சென்னையில் ஏற்பாடு செய்த 'தமிழர் உரிமை மாநாடு' அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதாக

குறிப்பிட்டு, இக்கூட்டத்திற்கான காரணம், "நீ எந்த மொழி வேண்டுமானாலும் கற்றுக்கொள், எத்தனை மொழி வேண்டுமானாலும் கற்றுக் கொள், அது உன் விருப்பம். ஆனால் தாய்மொழிப் பாடம் படிக்காமல் பட்டம் பெறவே முடியாது என்கிற ஆணையை மார்க்ஸிஸ்ட்டுகளின் அரசியல் எதிரி மம்தா பானர்ஜி மேற்குவங்கத்தில் பிரயோகித்த பிறகு தான் கம்யூனிஸ்டு களுக்கு வேகம் வந்திருக்கிறது"[3] என்று குறிப்பிட்டு, இக்கூட்டத்தில் கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சீதாராம், யெச்சூரியின் உரை குறித்து குறிப்பிடுகையில், தமிழ் மொழியின் தொன்மையையும், அகழ்வாராய்ச்சியின் முக்கியத்துவத்தையும் நகர நாகரிகத்தைத் தமிழர் அறிந்த முறையையும் தெளிவாக விளக்கியதோடு மட்டுமில்லாமல் தமிழின் அருமையை எளிய முறையில் எடுத்துச் சென்ற சிங்காரவேலர், ஜீவா, பட்டுக்கோட்டை, தமிழ் ஒளி போன்றோர் கம்னியூஸ்டுகள் தான் என்பதையும் உணரவைத்தார். அது வரை மொழி உரிமையைப் பேசவும் எழுதவும் செய்யாத கம்னியூஸ்டுகளின் இச்செயல் பாராட்டுக்குரியது என்று பதிவு செய் துள்ளார் காக்கைச் சிறகினிலே இதழின் ஆசிரியர். 'வருக தோழர்களே வருக!' என்று அழைப்பது போல தலைப்பிட்டு எழுதியுள்ளதைக் காணலாம்.

தமிழ் நாட்டு மக்களின் வாழ்வியலில் இடர்ப்பாடுகள்

தமிழ்நாட்டில், விவசாயிகள் போராட்டம், நீட் தேர்வினால் மாணவர்கள் அடையும் உளவியல் பிரச்சினைகள், அரசால் திறக்கப்படும் மதுபானக் கடைகளால் பெண்கள் மேற்கொள்ளும் போராட்டங்கள், தமிழரின் தொன்மையையும் கலாச் சாரத்தையும் தெரிவிக்கும் கீழடி ஆய்வை மண்ணோடு புதைக்கத்தூண்டும் வட நாட்டினர், நெடுவாசல், கதிரா மங்கலம் போன்ற கிராமங்களில் உணவையும் உறக்கத்தையும் மறந்து போராடும் மக்கள் கூட்டம் என இத்தகைய பிரச்சினைகள் எதையும் கண்டுகொள்ளாமல் அச்சு ஊடகங்களும், காட்சி ஊடகங்களும் "ஒவ்வொரு நாள் அரசியல் போக்கையும் அந்த ஊடகங்களே தீர்மானிக்கின்றன. போதாக் குறைக்குச் சுதந்திர இந்தியாவில் கார்ப்பரேட்டுகளைக் காப்பாற்றுவதற்கும் கைதூக்கி விடுவதற்கு மட்டுமே மக்கள் அதிகாரம் அளித்துள்ளதைப் போல செயல்படும் இந்தியப் பிரதமர் மோடி. இந்த மாயவலைக்குள் சிக்கிக் கொண்டு ஓட்டம் காட்டித் திரிகிற வெள்ளை எலிகளையும் பூனைகளையும் நினைத் தால் பரிதாபமாயிருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் தான் பாவம்"[4] இவ்வாறு சமூகச் சூழலையும் அரசியல் செயல்பாடு களையும் துணிவோடு பதிவு செய்வதில் காக்கைச் சிறகு தயங்கவில்லை என்பதை அறியலாம்.

கந்துவட்டிக் கொடுமை

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒரு குடும்பம் தீ வைத்துக் கொண்டு உயிரிழந்த சம்பவம் தமிழ்நாட்டையே உலுக்கியது. இதற்குக்

காரணம் கந்துவட்டியாகும் என்பது அனைவரும் அறிந்ததே. காவல் நிலையங்கள், ஆட்சியர் அலுவலகங்கள், நீதி மன்றங்கள் என எங்கும் மக்கள் நீதி கேட்டுச் சென்றாலும் அவர்களுக்கான தீர்வு கிடைப்பதில்லை. வறுமையில் வாடும் மக்கள் பற்றி இவர்களுக்குத் தெரிவதில்லை. அதனால்தான் இது நடக்கிறது. ஏனெனில் கந்துவட்டித் தொழிலில் இருப்பவர்கள் சிலர். அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாகத் தான் இருக்கின்றனர். இதனால், அனைத்துத் துறைகளிலும் உள்ளோரையும் பணம் கொடுத்துச் சரி செய்து விடுகின்றனர். எத்தனை குடும்பங்கள் அழிந்தாலும் கந்துவட்டிக்காரனும் காவல்துறையினரும் மற்றும் அரசு நிறுவனங்களும் கவலைப்படாது.

முடிவுரை

தரமான உண்மைச் செய்திகளோடு இலக்கியச் செய்திகளையும் இன்றைய சமூக நிகழ்வுகளையும் தாங்கி மாதம் ஒருமுறை வெளியாகும் 'காக்கைச் சிறகினிலே' தமிழ் கற்ற ஆன்றோர் களுக்கும் தமிழ் கற்கும் மாணவர் களுக்கும் தொன்மம் மற்றும் மரபார்ந்த செய்திகளை ஆராய விரும்புவோர்க்கும் சிறந்த ஒரு கருவூலமாக அமைகிறது. இவ்விதழில் இடம்பெறும் செய்திகள் அனைத்தும் அந்தந்தத் துறை சார்ந்த ஆசிரியர்களால் எழுதப்படுகிறது. இவ்விதழின் தலையங்கச் செய்திகளை வாசிக்கும் போது அன்றைய சமூக நிகழ்வை வாசகர்களுக்குக் காட்சிப் படுத்துவதைக் காணலாம். இத்தகைய அனைத்துச் செய்திகளைத் தாங்கி வரும் 'காக்கைச் சிறகினிலே' இதழை வாசித்துப் பயன்பெறுவோமாக.

அடிக்குறிப்புகள்

1. கோதண்டபாணி,இரா.இதழியல், கற்பகம் வெளியீடு, மதுரை, 1987.
2. தனசேகரன். பொன், ஏ.என்.சிவராமனின் பத்திரிக்கை உலகம், ப.41.
3. காக்கைச் சிறகினிலே, ஜூலை, 2017, ப. 3.
4. காக்கைச் சிறகினிலே, செப்டம்பர் இதழ் ப. 3.

துணைநூற்பட்டியல்

1. காக்கைச் சிறகினிலே, இதழ், 2017 ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை வெளியான 12 இதழ் முழுவதும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.
2. கோதண்டபாணி. இரா., இதழியல், கற்பகம் வெளியீடு, மதுரை, 1987.
3. வேலம்மாள். நா., தமிழ் இதழ்களின் கட்டமைப்புக் கூறுகள், தாமரை பப்ளிகேஷன்ஸ்(பி) லிட், சென்னை, 2008.

விதைத்தவனும் விதைகளும் புதினத்தில் பெயர்ச் சூட்டுதல்

முனைவர் க. கிரிவாசன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுழற்சி II)
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக்கல்லூரி (தன்னாட்சி)
அரும்பாக்கம், சென்னை – 600 106.

ஆய்வுச் சுருக்கம்

மனித குலத்தில் ஒருவரை அடையாளம் காணப் பெயர் என்பது மிக முக்கியமான ஒன்று. ஒரு குழந்தை பிறந்தவுடன் பெயர் சூட்டல் விழாவாகவே கொண்டாடப்படுகிறது. கதை சொல்லும் மரபில் ஊருக்கு அடுத்தபடி பெயர் மிக முக்கியமானது. புதின இலக்கிய வகையில் கதை நினைவில் நிற்கக் கதை மாந்தர்களின் பெயர்கள் நினைவில் நிற்கும்படி நிலை பெறச் செய்ய வேண்டியது ஆசிரியரின் மிக முக்கியக் கடமை. விதைத்தவனும் விதைகளும் புதினத்தில் பெயர் சூட்டல் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆய்வதாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.

திறவுச்சொல்

நாமம், பேர், இடுகுறி, நாம நல்லுரை, பெயர் சூட்டுதல், ஆணைமுத்து

முன்னுரை

முனைவர் ப.முருகன் அவர்கள் விதைத்தவனும் விதைகளும் என்ற இப்புதினத்தை இயற்றியுள்ளார். ஆன்மிகத் தலங்களில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் திருவண்ணாமலை மாவட்டத்தில் இக்கதை கருக் கொண்டதால் இயல்பாக அந்த மாவட்ட மக்களின் மன நிலை பக்தியை நோக்கிச் செல்கிறது. சைவ, வைணவ சமயங்கள் மட்டுமின்றி கிறித்துவம், இஸ்லாமியம் என அனைத்து மதங்களையும் இப்புதினம் படம் பிடித்துக் காட்டுகிறது. எனவே பெயர்களும் அவ்வாறே அமைகின்றன. பெயர்களின் வழி அறியலாகும் கதாப்பாத்திரங்கள், குணநலன்கள், அவற்றின் அடிப்படையில் அமைந்த செய்திகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளும் வகையில் இக்கட்டுரை அமையும்.

பெயர்

மனித இனத்தின் மிக முக்கிய அடையாளம் பெயர். இதனைப் பேர், இடுகுறி, பெய்தல் என அகராதி விளக்கம் தருகிறது.

நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின்
பெயரே

வினைப்பெயர் உடைப்பெயர்
பண்புகொள் பெயரே
பல்லோர் குறித்த முறைநிலைப்
பெயரே
பல்லோர் குறித்த சினைநிலைப்
பெயரே
பல்லோர் குறித்த திணைநிலைப்
பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியல்
பெயரே
இன்றிவர் என்னும் எண்ணியல்
பெயரொடு
அன்றி அனைத்தும் அவற்றியல்
பினவே" [1]

நிலப்பெயர், குடிப்பெயர், குழுவின் பெயர் எனப் பல்வேறு நிலைகளில் பெயர் வைக்கப்படுவதைத் தொல்காப்பியப் பெயரியல் கூறுகிறது. தொல்காப்பியமும் பெயர் என்று பயன்படுத்துவதை இங்கு நோக்க வேண்டியது முக்கியமான ஒன்று. புறநானூற்றில் பெயர், பேர் என்ற பொருண்மையில் பயன்படுத்தப் பட்டுள்ளது. "தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்"[2] பெயர் என்ற சொல் நாமம் என்ற வடமொழிச் சொல்லில் அதிகம் ஆளப்படுவதைக் காணமுடிகிறது. சான்றாக

'காமம் வெகுளி மயக்கம்
இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்"[3]

என்ற திருக்குறளில் நாமம் என்னும் சொல் பயன்பாட்டில் இருப்பதைக் காணலாம். தமிழ் இலக்கிய உலகில் அதற்கு முந்தைய சங்க காலக் கட்டத்தில் நடுநல்லில் பீடும் பெயரும் இருப்பதை புறப்பாடல்கள் வழி அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில் பெயர், பேர் என்ற சொற்கள் சங்கம் மருவிய கால கட்டத்தில் நாமம் என்ற வடமொழிச் சொல்லைப் பெரும்பாலான காப்பியங்கள் கதைத் தலைவர்களுக்குப் பெயர் சூட்டுதலையும், பெயர் என்ற இடத்தில் நாமம் என்றே பயன்படுத்தி யதையும் அதிகம் காண முடிகிறது. சான்றாக சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற பழந்தமிழ்க் காப்பியங்களில் குழந்தைக்குப் பெயர் சூட்டும் மரபு தமிழகத்தில் பன்னெடுங்காலத்தில் இருந்தே வந்துள்ளது.

தமிழ்க்காப்பியங்களில் பெயர் சூட்டல்

சிலப்பதிகாரத்தில் மணிமேகலைக்குப் பெயர் சூட்டுவிழா நடத்தப்பட்டது. நாம கரணம், நாம நல்லுரை போன்ற சொற்கள் சிலப்பதிகாரக் காலக்கட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

"மாமுது கணிகையர் மாதவி
மகட்கு
நாம நல்லுரை நாட்டுது மென்று"[4]

என்று மாதவி மகள் மணிமேகலைக்குப் பெயர் சூட்டல் விழா கொண்டாடப் படுகிறது.

இவ்வாறான சூழலில் நவீன கால இலக்கியமான 'விதைத்தவனும் விதைகளும்' என்னும் புதினம் நாமம் என்ற வடசொல் ஏற்காமல் பெயர், பேர் என்ற தூயத் தமிழ்ச்சொல்லையே பயன்படுத்துகிறது. புதின ஆசிரியர் பேர் என்று சங்க காலத்தில் பயன்படுத்தியதைப்

போன்றே தம் புதினத்திலும் பயன் படுத்துகிறார். ஐந்து தலைமுறைகள், ஜமிந்தார் கால கட்டம் என அனைத்து இடங்களிலும் பெயர் சூட்டல் என்றே பயன்படுத்துகிறார். குழந்தைகளுக்குத் தமிழில் பெயர் சூட்டுவது இருக்கட்டும்; பெயர் என்ற தமிழ்ச்சொல் நாமகரணம் என்று பழந்தமிழ் இலக்கியங்களிலேயே கையாளப்பட்ட நிலையில் புதின ஆசிரியரின் புரட்சிகரமான சிந்தனை இதன் மூலம் வெளிப்படுகிறது.

கதாப்பாத்திரங்களுக்குப் பெயர் சூட்டுதல்

படைப்பாளர்கள் கதாபாத்திரங்களை உருவாக்கிய உடன் அதற்குப் பெயர் சூட்டும் முறையில் இரண்டு முறைகளைக் கையாளுகின்றனர். பண்பு நலன்களை அடிப்படையாகக் கொண்டு அல்லது தனக்குப் பிடித்த சமயம், இனம், நாடு கலாச்சாரம் இன்ன பிற அடிப்படையில் பெயரிடுவர்.

கல்கியின் புதினங்கள் வரலாற்று புதினங்களாகப் பெரும்பான்மை அமைந்த தால் கதைமாந்தர்கள் வந்தியத் தேவன், அருள்மொழிவர்மன், குந்தவை, பழுவேட்டரையர் போன்ற வரலாற்று அரசர் சார்புடைய பெயர்களாக இருக்கும்.[5]

சுஜாதவின் புதினங்கள் பெரும் பான்மை அறிவியல் சார்ந்தவை. எனவே கதைமாந்தர்கள் நிலா, ஜீனோ, சிபி, ரோபோ போன்ற பெயர்கள் வைக்கப் படுவதைக் காண முடிகிறது.[6]

கரிசல் மண்ணைப் பெருமைப்படுத்தும் கி.ரா.வின் புதினங்களில் குறிப்பிட்ட சமூகத்தை வைத்து எழுதப்பட்டதால் துயாரம் நாயக்கர், அச்சிந்தலு, வெங்கடபதி, ரேணம்மா போன்ற பெயர்கள் சூட்டப் பட்டதைக் காண முடிகிறது.[7]

இவ்வாறு படைப்புக்குப் படைப்பு படைப்பாளர்கள் கதை சொல்லும் மரபில் பெயர் வைத்தல் என்பது மிக முக்கியமான ஒன்று. கதை ஒருவர் இன்ன சமயத்தைச் சார்ந்தவர், இந்த இனத்தைச் சார்ந்தவர், இந்த நாட்டைச் சார்ந்தவர் என்பதை மிக விரைவாகத் தெரிந்து கொள்ள பெயர் பயன்படுகிறது. (விதிவிலக்கான பெயர்களும் உண்டு) கதை என்றால் பெயர் கண்டிப்பாக அமையும். தமிழ் இலக்கியத்தில் புற இலக்கியங்களில் பெயர் சூட்டுவது மிக முக்கியமான ஒன்று. விதைத்தவனும் விதைகளும் என்ற புதினம் முழுமையும் அண்ணாமலை, அருணாச்சலம், ஆணைமுத்து, சிவன் பிள்ளை, வெற்றிவேல், விஷ்ணுசித்தர், கிருஷ்ணவேணி, வடிவாம்பாள், அறிவாம்பாள், யமுனா, ஆண்டாள், ஆண்டான்பட்டு ஜமீன் திருமலைப் பிள்ளை, அடிஅண்ணாமலை பாண்டு ரங்க நாயக்கர் என இப்படியாகப் பல பெயர்கள் சமயம் சார்ந்தே அமைந்துள்ளன. புதினத்தில் பெயர் வைக்கும் போது மு.வரதராசனார் நல்ல பண்பு கொண்ட பாத்திரங்களுக்கு அறவாழி, நல்லாள் போன்ற பெயர்களை வைப்பார்; தீயகுணம் கொண்ட பாத்திரங்களுக்கு ஆணவன், அகோரர் போன்ற பெயர்களை வைப்பார்.

விதைத்தவனும் விதைகளும் என்ற புதினத்தில் நேர்மறைக் கதாபாத்திரங்களே அதிகம். எதிர்மறை எண்ணங்கள் கொண்ட பாத்திரங்கள் மிகக் குறைவுதான். தீயக் குணம் கொண்ட பாத்திரத்தை வாசகன் படித்தே உணர வேண்டும் என்ற எண்ணம் கொண்ட நவீன கால எழுத்தாளராக விதைத்தவனும் விதைகளும் ஆசிரியர் விளங்குகிறார். அதனால் அறிவாம்பாள் - ஆணைமுத்து பெத்தது ஆறில் சுப்புராயன் சற்றே மாறுபட்டவன்; தான் வாழ்ந்தால் போதும் என்ற மனநிலையுடையவன்; என்று ஆசிரியர் சுப்புராயனுக்கு விளக்கம் தருகிறார். சுப்பு என்றால் மேன்மை மிக்கவன் ராயன் என்றால் தலைவன் என்று பொருள் மேன்மைமிக்கத் தலைவன் என்று பொருள். ஆனால் அவன் அப்படி வாழவில்லை. புதின ஆசிரியர் இந்தக் கதைமாந்தருக்கு ஏன் இவ்வாறு பெயர் சூட்டினார் என்பதை ஒற்றை வரியில் இதே புதின ஆசிரியர் விளக்கம் தருகிறார். சுப்புராயன் மூன்று ஆண் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் போது "அறிவாம்பாள் பிள்ளைகளில் மூத்தவனை விட இல்லற வாழ்வில் மூத்தவனாகிப் போனான்."8 என்ற வரிகளை வைத்துதான் ஆசிரியர் புதினத்தின் பாத்திரங்களுக்குப் பெயர் சூட்டியிருப்பார் என எண்ணத் தோன்றுகிறது.

இந்த எதிர்மறைக் கதாபாத்திரமும் இறுதியில் 'தன் அண்ணன் பசங்க புத்திசாலிங்க' என்று வெற்றி பெற்றவர் களுடன் கைகோர்ப்பதாய் காட்சி அமைத்திருப்பார்.

ஊர்ப் பெயர்களைத் தங்கள் பெயரோடு சேர்த்துக் கொண்டு சொல்லும் வழக்கம் தமிழகத்தில் முற்காலத்தில் இருந்துள்ளது. ஊர்களைப் பெயருக்கு முன் சேர்க்கும் மரபு சங்க காலத்தில் இருந்தே வந்துள்ளது. கோவூர் கிழார், நல்லூர் நத்தத்தனார் போன்று பெயருக்கு முன்னால் ஊரைச் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் தமிழ் நாட்டில் இன்றும் இருந்து வருகிறது. புதினத்தில் ஊர்ப்பெயர்களைத் தன் பெயரோடு சேர்த்துக் கூறும் வழக்கம் சில படைப் பாளர்களிடம் உண்டு.

நல்லவன்பாளையம் ஜமீன் சத்திய மூர்த்தி உடையார், வாழவச்சனூர் ஜமீன் கோட்டீஸ்வர முதலியார், ஆண்டான் பட்டு ஜமீன் திருமலைப் பிள்ளை, அடிஅண்ணாமலை பாண்டுரங்க நாயக்கர் என்று கதைக்களத்தையே பெயரோடு அடையாக அமைத்து ஆசிரியர் காட்டு கிறார். கால மாற்றத்திற்கு ஏற்ப இந்த ஊர்ப் பெயரும் புதினத்தின் பின் பகுதியில் வரும் பெயர்களில் இடம் பெறாமல் எந்த அடையும் இல்லாமல் காட்டுவது புதின ஆசிரியரின் உத்தி முறைகளில் ஒன்று.

பெயர் சூட்டுதல்

புதினத்தின் முன்னோடியான காப்பியத்தின் இலக்கணவிதிப்படி மக்கட் பெறுதலும் மக்கட் பெற்றால் பெயர் சூட்டலும் உண்டு. இதனைத் 'தேன் பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்'[9] எனத் தண்டி கூறுகிறது. இவ் வகையில் 'விதைத்தவனும் விதைகளும்' என்ற புதினத்தில் ஐந்து தலைமுறைகளின்

ஆணைமுத்து, சிவன்பிள்ளை, வெற்றி வேல் என முதன்மைக் கதைமாந்தர்களின் பிறப்பு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பெயர்நிலை பெறீஇய பெற்றி
நாடி
. . . . . .
நரவாண தத்தன் என்றுபெயர்
போக்கி[10]

பெருங்கதையில் உதயணன் மகன் நரவாண தத்தன் பிறத்தலும் பெயர் வைத்தலும் குறிப்பிடப்படுகிறது. நரவாண தத்தனுக்கு அரண்மனைக் கணிகையர் மாந்தர் குழுவை வைத்து பெயர் வைக்கிறான். நரவாணதத்தன் பிறந்து பெயர் வைப்பது போலவே அமைச்சர் மூன்று பேருக்கும் பிறந்த மூன்று ஆண்குழந்தைகளுக்கும் பெயர் சூட்டப்படுகிறது.

உறுவிறற் றானை யுருமண்
ணுவாவும்
அறிநரை வழிபட் டன்றே
பெயர்தலின்
. . . . . .
பொருவின் மாக்கள் பூதியென்
றுரைநீ
ஒழிந்த மூவ ருருவார் குமரருட்[11]

உறுமண்ணுவா, வயந்தகன், இடவகன் என்ற மூன்று அமைச்சர்களுக்கும் மூன்று குழந்தைகள் பிறக்கின்றன. அக்குழந்தை களுக்கு முறையே அரிசிகன், தவந்தகன், கோமுகன் எனப் பெயர் சூட்டும் நிகழ்வைப் பெருங்கதை கூறுகிறது.

ஒரு கதையில் முதன்மைக் கதை மாந்தர் பிறந்தவுடன் பெயர் வைப்பது போல துணைக் கதைமாந்தர்கள் பிறப்பைக் கூறுதலும் அவர்களுக்குப் பெயர் சூட்டுதலும் விதைத்தவனும் விதைகளும் நாவலில் தலைமுறை ஓட்டத்திற்கு ஏற்ப நிகழ்ந்துள்ளது. சான்றாக துணை கதைமாந்தர் தன் குழந்தைக்குப் பெயர் சூட்டும் நிகழ்வும் இவ்வாறு பதிவு செய்யப்படுகிறது.

சுப்புராயன் கால ஓட்டத்தில் மூன்று ஆண் குழந்தைகளுக்குத் தந்தையாகி இருந்தான். அவன் முருக பக்தனாகிய தால் முறையே கந்தன், குமரன், வேலன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தான்.[12]

பெருங்கதையில் சமண சமயத்தை அடியொற்றி மூன்று பெயர்கள் வைக்கப் பட்டதைப் போல விதைத்தவனும் விதைகளும் எனும் புதினத்தில் சுப்புராயன் சைவ சமயம் - குறிப்பாக கொளமார நெறியைப் பின்பற்றி மூன்று பெயர்கள் வைத்திருப்பது ஒரு புதினம் காப்பியத்தோடு ஒப்பு நோக்கத்தக்கது என்பதை உணர்த்துகிறது.

"பிறப்பித்த பொறுப்புதான் எனக்கு; பெயரிட்ட பழியையும் என்மேல் போடு கிறீரே, இது நியாயமா? நான் என்னத்தைக் கண்டேன்? உம்மை உண்டாக்கினேன்; உமக்குக் கந்தசாமிப் பிள்ளையென்று உங்க அப்பா பெயர் இட்டார்; அதற்கும் நான் தான் பழியா?" என்று வாயை மடக்கினார் கடவுள்.[13]

தலைவர்கள் பெயரைச் சூட்டுவது

குழந்தைகளுக்கு தலைவர்கள் பெயர்

சூட்டுதல் தமிழ் மரப்பில் காலந் தோறும் இருந்து வந்துள்ளது. சான்றாக ,

அண்ணலைக் கையில் ஏந்தற்கு
அருமையால் உரிமைப் பேரும்
திண்ணன் என்றியம்பும் என்னத்
திண்சிலை வேடர் ஆர்த்தார்
புண்ணியப் பொருளாய் உள்ள
பொருவில் சீர் உருவினானைக்
கண்ணினுக்கு அணியாத் தங்கள்
கலன்பல அணிந்தார் அன்றே[14]

என்ற பெரியபுராணத்தில் கண்ணப்பருக்குப் பெயர் சூட்டல் அருமையாக நடக்கிறது. கண்ணப்பருக்குத் திண்ணன் என்ற பெயரை வேடர் குலத்தலைவன் வைக்கிறார்.

விதைத்தவனும் விதைகளும் என்னும் புதினத்தில் ஆணைமுத்து கட்சித் தலைவரை வைத்துத் தன் பிள்ளைக்குப் பெயர் சூட்டுகிறார்.

"அய்யா என் புள்ளைக்கு நீங்க ஒரு பேர் வையுங்கள்" என்று சொல்ல 'நடன காசிநாதன்' என்னும் பெயர் சூட்டினார்.

ஒரு பெரிய இயக்கத்தின் தலைவன் தன் பிள்ளைக்கு பெயர் வைத்ததைப் பெருமையாக "அடியே அறிவாம்பாள் நம்ம சின்னவன் பெரிய ஆளா வருவான்டீ என்று சொல்கிறார்.[15]

முதன்மைக் கதை மாந்தருக்குப் பெயர் சூட்டுதல்

'விதைத்தவனும் விதைகளும்' என்ற புதினம் பொம்பளப் புள்ளையா பொறந்தா மகாலட்சுமி என்று பெயர் வைப்போம், ஆம்பளப்புளையா பொறந்தா ஆறுமுகச் சாமி என்று பெயர் வைப்போம். என்று பெயர் சூட்டலில் தொடங்குகிறது.[16]

வேத ஆகம அடிப்படையிலும் இறைவன் பெயரைத் தம் மக்களுக்குச் சூட்டி இறை நம்பிக்கையை வெளிப் படுத்துதல் என்பது எல்லா சமயங்களிலும் உண்டு. வடமொழியில் நாமகரணம் என்று சொல்லப்படும் பெயர் சூட்டும் மரபு முக்கியமான ஒன்று.

நாமகரணத்தின்போது, குறிப்பாக வைணவ சமயத்தில் ஆண் குழந்தை பிறந்தால் திருமால் பெரையும் பெண் குழந்தை பிறந்தால் பிராட்டி பெயரை வைப்பதும் ஆகமத்திலேயே உள்ளது. பஞ்ச சமஸ்காரம் எனப்படும் வழிபாட்டு முறையில் ஒன்று இறைவன் பெயரைத் தன் பெயராக்கிக் கொள்வது. இறைவனே மனித உருவம் எடுத்துவந்தாலும் இது பொருந்தும் இதற்குத் தன் திரு நாமத்தை தானும் சாத்தியே -[17] என்றும் கம்பராமா யணப்பாடல் சான்று காட்ட இடம் உண்டு. அடியேன் ராமானுசஜ தாஸன் என்று பெயர் வைத்தலும் மரபு. இறைவன் பெயர்கள் மட்டுமின்றி, முன்னோர்கள் தன் சமயப் பெரியவர்கள், எனப் பெயர் சூட்டும் மரபும் உண்டு.

உள எலாம் அரசின் நாமம்
சாற்றும் அவ்வொழுகல்
ஆற்றார்.[18]

என்ற வரிகளின் வழி அப்பூதியடிகள் தன் இடம் இருந்த அனைத்துப் பொருட்

களுக்கும் தன் மகன்கள் உட்பட எல்லா வற்றிற்கும் திருநாவுக்கரசர் பெயர் வைத்தமையை அறிய முடிகிறது. இதனை அடியொற்றியே சமயப் பெயர்கள் விதைதவனும் விதைகளும் என்னும் புதினத்தில்

நம்ம ஊர்ல இருந்து ஐந்து மைல் தூரத்தில் இருக்கும் சோணகிரி மலை வாசன் அனுகிரகத்தால் தான் எங்கள் வீட்டில் வழிவழியாக ஆண்பிள்ளை பிறப்பதாகவும் அந்த ஆண்டவன் திருப்பெயர்களைச் சூட்டுவதாகவும் எங்க அப்பா சொல்லுவார்" நம்ம பெரியவங்க தெய்வத்தின் பெயரை நமக்குச் சூட்டி மகிழ்ந்தார்கள் என்று பெயர்களை முன்னெடுத்துத் தொடங்கப்படுகிறது.[19] கிறித்துவர்கள் விவிலியத்தில் இருந்து அல்லது மேல்நாட்டு கிறித்துவப் பெயர்களை வைப்பார்கள். ஞானஸ் தானம் நடக்கும் போது கிறித்துவப் பெயர் வைப்பது உண்டு. அதன் படி விதைத்தவனும் விதைகளும் எனும் புதினத்தில் வரும் மருத்துவர் பெயர் விவிலியத்தின் முறைப்படி (புனித அந்தோணியார் போன்று) அந்தோனி வீரன் என்ற பெயருடன் வருகிறது. இதுபோல மேல் நாட்டு கிறித்துவப் பெயரான ரோஸ்மேரி என்ற பெயருடன் வரும் செவிலியர் கதாப்பாத்திரப் பெயர் புதினத்தில் நிலைத்து நிற்கிறது.

இஸ்லாமியத்தில் பெயர் சூட்டும் போது அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்ப மானது அப்துல்லாஹ் (அல்லாஹ்வின் அடிமை) மற்றும் அப்துர்ரஹ்மான் (அருளாளனின் அடிமை) (ஆதாரம் முஸ்லிம் 4320) போன்ற பெயர்கள் வைக்கலாம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஆணைமுத்து அத்தர் என்ற வாசனைத் திரவியத்தை ஜஹங்கீர் பாஷா என்ற இஸ்லாமி யரிடத்தில் வாங்கு கிறார். இவ்வாறாக அனைத்துச் சமயங் களையும் அரவணைத்துப் புதின ஆசிரியர் பெயர் வைத்திருக்கிறார். மற்றோர் இடத்தில் சர்வ சமயக் கோட்பாடு தெளிவாகவே புலப்படுகிறது.

வெற்றிவேல் சமயங்களைக் கடந்து தன் அறிவை விரிவாக்கிக் கொள்கிறார். இராகவ அய்யங்கார். மூ.மூ இஸ்மாயில், எச்.ஏ கிருஷ்ணப்பிள்ளை இவர்கள் மொத்தமாக உன் உருவத்தில் போல.[20] என்ற கருத்தும், இயேசுவையும், அல்லா வையும் திருக்குறளையும் மேற்கோள் காட்டி[21] சமயப் பொறையைக் கொண்ட பாத்திரமாக வெற்றிவேல் காட்டப்படுகிறார்.

பெயர் வைப்பதில் தொடங்கி சமயப் பொறையுடன் புதினம் அமைந்துள்ளதைத் தெளிவாகக் காண முடிகிறது. புதினத்தின் முதன்மைக் கதாபாத்திரத்தின் பெயர் சூட்டு விழாவில் வள்ளுவனை வைத்துப் பெயர் அறிவிக்கும் மரபு இருந்துள்ளது. முற்காலத்தில் அரசர்கள் தங்கள் செய்திகளை வள்ளுவர் மூலம் மக்களுக்குச் சொன்னதை 'வள்ளுவார் முரசமூதூரறைகென வருளினானே"[22] . என்று சீவக சிந்தாமணி கூறுவதை காணமுடிகிறது. இராமன் பிறந்ததை வள்ளுவன் யானை மீது பறை அறைந்து கூறியதைக் கம்பராமாயணத்தில்

என்புழி வள்ளுவர் யானை
மீமிசை

நன்பறை அறைந்தனர்[23]

இவ்வாறு கம்பர் கூறுவதையும் அறிய முடிகிறது. பின்னர் சித்திரபுத்திரன் கதைப்பாடல் ஒன்றில்,

"வாராய்நீ வள்ளுவனே
மண்டலமெங்கு மறிய
சீரான நற்பசுவின் வயிற்றில்
சிறப்பாக
பாலன் பிறக்குதென்று
பறைசாத்தி வாவெனவே"[24]

என்று வள்ளுவன் குழந்தைப் பிறப்பைப் பறைசாற்றியதைக் கூறுகிறது. இந்த நோக்கில் புதினத்தை நோக்குங்கால் அரசர் காலத்தில் முரசரைந்த வள்ளுவன் ஜமீந்தாரி கால காட்டத்தில் முரசு இல்லாமல் வாய் வார்த்தையாக

"என்னாலே அருணாச்சலம், வள்ளுவன் என்ன சொன்னான்?"

"ஆணைமுத்து ன்னு சொன்னான்"[25]

என்று சொல்வதும் குறிப்பித்தக்கது. இங்கு ஆனைமுத்து என்று பெயர் வைக்காமல் ஆணைமுத்து என்று ஆணையிட்ட பரம்பரை (Domination character) தன் விரும்பியபடி வாழ்தல் என்ற அடிப்படையில் புதின ஆசிரியர் இவ்வாறு பெயர் வைத்துள்ளார். ஒரு பரம்பரை தாண்டி சிவன்பிள்ளை காலத்தில் அந்த வள்ளுவன் மகன் சோதிடம் பார்க்கும் போது வள்ளுவன் மதிவதனன் என்று அடைமொழி இல்லாமல் அதே சமயம் வள்ளுவன் ஆவுடையப்பன் மகன் மதிவதன் என்று ஆசிரியர் குறிப்பிடுவது மரபு மாறாமலும் காலம் மாறியதையும் சரியாகப் படம் பிடித்திருக்கிறார்.

"ஏ வடிவு பண்டிதப்பட்டு ஜமீன்ல ஒரு வாரிசா எம்புள்ள பொறந்திருக்கான் ஆணையிட்ட பரம்பரை யாச்சே ஆணைமுத்துன்னுபேரு வெச்சா என்ன?"

காலம் கடக்கிறது ; தொட்டில் போடும் நாள் வந்தது; வள்ளுவன் நாள் குறித்து சின்ன ஜமீன்தார்களுக்கு எல்லாம் சேதி சொல்லியாகிவிட்டது. பண்டிதப் பட்டு சுற்றியுள்ள எல்லோரும் மாடு பூட்டிய வில்வண்டியில் வருவதும் சுத்தி கொம்பு நாட்டியுள்ள சாதாரண மாட்டு வண்டியிலும், குதிரை வண்டியிலும் சாரைசாரையாக வந்து இறங்கு கிறார்கள். ஒரே மங்கலவாத்தியம், மங்கல ஒலி முழங்க தொட்டில்ல போடுற, பெயர் வைக்கிற, விழா கோலாகலம். முக்கியமாக நல்லவன்பாளையம் ஜமீன் சத்தியமூர்த்தி உடையார், வாழவச்சனூர் ஜமீன் கோட்டீஸ்வர முதலியார், ஆண்டான்பட்டு ஜமீன் திருமலைப் பிள்ளை, அடிஅண்ணாமலை பாண்டு ரங்கநாயக்கர் இன்னும் பிற உறவுகளை விரும்பும் உறவுகள் புடைசூழ மங்கல ஒலி முழங்க குழந்தையைத் தொட்டிலில் இட்டார்கள்.[26] நாவலின் முதன்மைக் கதை மாந்தர்களில் ஒருவரான வெற்றி வேல் தன் தம்பிக்கு சந்திரபோஸ் எனப் பெயர் வைக்கிறார். நாவலின் தொடக்கம் முதல் வைக்கப்பட்ட பெயர்களைக் காட்டிலும் நிறைவாக வரும் பெயர்கள் வேறுபடுகின்றன. ஆசிரியர் நல்ல கால வேறுபாட்டைக் காட்ட ஜமீந்தாரி காலத்திற்கு ஏற்ப சற்று சமய உணர்வு

டனும் பிந்தைய கால காட்டத்தில் தேச உணர்வு மிகுந்து சுபாஷ் சந்திரபோஸின் பெயரும் வைத்திருத்தலை அறிய முடிகிறது. "ஆமா எங்க அண்ணன் தான் எனக்கு பெயர் வைத்தார்"[27] கால மாற்றத்திற்கு ஏற்ப சமயப் பெயர்களில் தொடங்கிய புதினம் நாட்டுப்பற்றில் நிறைவு செய்கிறது.

நிறைவாக

குல தெய்வத்தின் பெயர் சூட்டுவது, வள்ளுவனை அழைத்து பெயர் சூட்டுவது, அரசியல் தலைவர் பெயர் சூட்டுவது, அண்ணனே தம்பிக்குப் பெயர் சூட்டுவது என எல்லா நிலைகளிலும் இந்தப் புதினத்தில் பெயர் சூட்டலை ஆசிரியர் செய்திருகிறார். கதாப்பாத்திரங் களுக்கு இறைவன் திருப்பெயர் சூட்டுதல் என்ற இறை நம்பிக்கையில் புதினம் தொடங்குகிறது. ஆறுமுகச்சாமி, அண்ணாமலை, அருணாச்சலம், சிவன்பிள்ளை, வெற்றிவேல், பார்வதி, சைவ, கிருஷ்ணவேணி, யமுனா, ஆண்டாள். ஜகாங்கீர் பாஷய வின் அத்தர் என்ற இடத்தில் இஸ்லாமியமும், கிறித்துவ மிஷனரி சார்ந்த மருத்துவ மனையில் மருத்துவம் பார்க்கும் ரோஸ்மேரி என்ற கிறித்துவப் பெயரையும் அமைத்திருப்பது மத நல்லிணக்கத்திற்கும் அதே நேரம் இறைவன் திருப்பெயரை சூட்டுதல் என்ற இறைவழிபாட்டின் முக்கிய நோக்கத்தையும் புதின ஆசிரியர் கையாண்டுள்ளார். புதினத்தின் நிறைவாக வெற்றிவேல் என்ற முதன்மைக் கதை மாந்தர் தன் பண்பு நலனுக்கு ஏற்றபடி சமயப் பொறையுடனும், சமூகப் பொறுப்புடனும், நாட்டு நலன் கருதியும் இருக்கும் பண்பைத் தன் தம்பிக்கு சந்திரபோஸ் எனப் பெயர் சூட்டுவதில் இருநது வெளிப்படுகிறது. புதினத்தில் நாமம் என்ற வடமொழிச் சொல் கையாளப்படாமல் தொல்காப்பியம், சங்க இலக்கியம் கையாண்ட தூய தமிழ்ச் சொல்லில் பெயர், பேர் என்று பெயர்ச் சூட்டலுக்குப் பயன்படுத்துவது நவீன கால தமிழ்ப்புதினத்தின் வெற்றி.

அடிக்குறிப்பு

1. தொல்.சொல்.பெயரியல்.11
2. புறம். 216:8–9
3. குறள் –360
4. சிலம்பு 15 (25–26)
5. பொன்னியின் செல்வன், கல்கி
6. என் இனிய இந்திரா, சுஜாதா
7. கோபல்லபுரத்து மக்கள் கி.ரா
8. பக் 171 விதைத்தவனும் விதைகளும்
9. நூற்பா 8தண்டியலங்காரம்
10. 110 பெருங்கதை, நரவாணபிறப்பு
11. மேலது 115
12. பக் 171 விதைத்தவனும் விதைகளும்
13. புதுமைப்பித்தன் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்,ஜெயகாந்தன்
14. பெரியபுராணம் – கண்ணப்ப நாயனார் புராணம் – 666
15. பக் 153 விதைத்தவனும் விதைகளும்
16. பக் 33 விதைத்தவனும் விதைகளும்

17. கம்பராமாயணம், பால–:23 4/4

18. பெரியபுராணம் அப்பூதியடிகள் புராணம் 2

19. பக் 37 விதைத்தவனும் விதைகளும்

20. பக்231 , விதைத்தவனும் விதைகளும்

21. பக்232 விதைத்தவனும் விதைகளும்

22. 2149 சீவக சிந்தாமணி

23. கம்பராமாயணம் திருஅவதாரப் படலம் 292

24. சித்திரபுத்திரன் கதைப்பாடல்104

25. பக் 37 விதைத்தவனும் விதைகளும்

26. பக்37,38 விதைத்வனும் விதைகளும்

27. பக் 214 விதைத்தவனும் விதைகளும்

முதன்மை நூல் பட்டியல்

1. விதைத்தவனும் விதைகளும், முனைவர் ப.முருகன், நெய்தல் பதிப்பகம், ஆண்டு 2021

துணை நூல் பட்டியல்

1. என் இனிய இந்திரா, சுஜதா கிழக்குப் பதிப்பகம், சென்னை ஆண்டு–2011.

2. கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், புதுமைப் பித்தன், பகுப்பு சி.மோகன், அன்னம் அகரம் பதிப்பகம், ஆண்டு 2016.

3. கம்பராமாயணம், வை.மு. கோ உமா பதிப்பகம் சென்னை. ஆண்டு 2010

4. கொங்குவேளிர் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டு). பெருங்கதை (4 –தொகுதிகள்). சென்னை: உ. வே. சாமிநாதையர் பதிப்பு, ஆறாம் பதிப்பு 2000, முதல் பதிப்பு 1934,

5. கோபல்லபுரத்து மக்கள் கி.ராஜநாராயணன், அன்னம் அகரம் பதிப்பகம்,ஆண்டு 2010.

6. சங்கஇலக்கியம் மூலமும் உரையும் கு.வே.பாலசுப்பிரமணியன், நியூ சென்சுரி புக்ஹவுஸ், சென்னை, ஆண்டு

7. சித்திரபுத்திரன் நாயனார் கதை, ஆறுமுகம் கந்தையா, அஷ்டலெட்சுமி பதிப்பகம், கொழும்பு, இலங்கை.

8. சிலப்பதிகாரம் புலியூர் கேசிகன், பாரிநிலையம், சென்னை. ஆண்டு 2004

9. சீவக சிந்தாமணி,உ.வே.சா, உ.வே.சா நூல் நிலையம் சென்னை. ஆண்டு 2008

10. தண்டியலங்காரம், புலியூர் கேசிகன், செண்பகா பதிப்பகம், சென்னை.

11. திருக்குறள் முலமும் உரையும் மு.வரதராசனார் பாரி நிலையம், சென்னை. ஆண்டு 2004

12. தொல்காப்பியம், தொல்காப்பியர்,கணேச ஐயர் பதிப்பு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ஆண்டு –2008.

13. பெரியபுராணம், அ.மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. ஆண்டு 1999.

14. பொன்னியின் செல்வன், கல்கி, கிழக்குப் பதிப்பகம், சென்னை ஆண்டு–2011.

வண்ணநிலவனின் கடல்புரத்தில் மீனவ மக்களின் பொருளாதாரப் போராட்டங்கள்

முனைவர் உ. கிருஷ்ணன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுழற்சி – 2)
குருநானக்கல்லூரி (தன்னாட்சி)
வேளச்சேரி, சென்னை – 600 042.

ஆய்வுச்சுருக்கம்

பொருளாதாரத்தில் விளிம்பு நிலையில் வாழ்பவர்களாக மீனவ மக்கள் காணப்படுகின்றனர். "தரைமேல் பிறக்க வைத்தான்; எங்களைக் கண்ணீரில் பிழைக்க வைத்தான்" என்று மீனவ சமுதாய மக்களின் வாழ்வியலைக் கவிஞர் வாலி பாடியுள்ளதைப் போன்று தண்ணீரிலும் கண்ணீரிலும் மீனவ மக்கள் வாழ்கின்ற நிலையை வண்ணநிலவனின் 'கடல்புரம்' எனும் நாவல் எடுத்துக் காட்டுகிறது. மீனவர்கள் வல்லம், லாஞ்சி, நாட்டுப்படகு ஆகியவற்றின் மூலம் மீன் பிடித்துத் தங்கள் வாழ்வை நடத்து வதையும் பொருளாதாரச் சிக்கலில் அவர்கள் அகப்பட்டுத் திணறுவதையும் பணம் படைத்த முதலாளிகளும் கந்து வட்டிக்காரர்களும் மீனவ மக்களின் ஏழ்மையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதையும் வண்ண நிலவனின் கடல்புரம் நாவல் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்

வல்லம் (கையால் இயக்கப்படும் படகு), லாஞ்சி (மோட்டார் பொருத்தப்பட்ட படகு), நாட்டுப் படகு, கடல்புரம், கடல் அம்மை, பூமாதேவி, இடைத்தரகர்கள், நைச்சியம்.

முன்னுரை

அருளில்லார்க்கு அவ்வுலகம்
இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு
– குறள் 247

பணம் இல்லாதவர்க்கு இவ்வுலகில் இன்பம் ஏதும் இல்லை என்பது வள்ளுவரின் வாக்கு. மனித வாழ்க் கைக்குப் பொருளே பணமே ஆதிபரம். பணம் பத்தும் செய்யும், பணம் பாதாளம் வரைக்கும் பாயும், பணம் என்றால் பிணம் கூட வாயைப் பிளக்கும், பணம் இல்லை எனில் மனிதன் பிணம் என்ற சொற்களால் பணத்தின் முக்கியத்துவத்தை நம்மால் உணர முடிகிறது. மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியனவற்றைப்

பெறுவதற்குப் பணம் தேவை. வண்ண நிலவனின் படைப்பான 'கடல்புரத்தில்' என்ற நாவல்வழி தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு என்ற கடற்கரை கிராமத்தில் வசிக்கும் மீனவ மக்களின் பொருளாதாரப் போராட்டங்களை ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இந்நாவல் முழுக்க மீனவ மக்களிடையே காணப்படும் பொருளா தார ஏற்றத்தாழ்வு அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வல்லம் (கையால் இயக்கப்படும் படகு) லாஞ்சி (மோட்டார் பொருத்தப்பட்ட படகு) மீனவர்களிடையே ஏற்படும் தொழில் போட்டியே அவர்களின் வாழ்க்கை முறை மாற்றம் செய்ய முடியாத தடைக்கற்களாக இருப்பதாக வண்ணநிலவன் பதிவு செய்கிறார்.

இறை நம்பிக்கை

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் இறைவழிபாடு செய்வது தமிழரின் பண்பாடு. கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர் தனக்கு விருப்பமான தெய்வத்தை வழிபட்டுச் செல்வர். கடல் அம்மை பூமாதேவியைப் போல ரொம்ப பொறுமைக்காரி. கடலில் அலைகளே இல்லாதிருக்க வேண்டும். காற்றின் உக்கிரம் தணிந்து மீன் பிடிக்க ஏதுவாய் இருக்க வேண்டும். வல்லம் பாறைகளில் மோதிவிடக்கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுடைய வாழ்வு செழிக்க வலையில் நிறைய மீன்கள் வந்து விழ வேண்டும். அந்த கடல்புரத்தில் எந்தக் குழந்தைப் பிறந்தாலும் எவ்வளவு பெரிய வீட்டில் பிறந்தாலும் அது முதலில் தன் அம்மையினுடைய முலையைச் சப்புவது கிடையாது. பூமியில் வீழ்ந்ததும் அதனுடைய வாயில் உவர்ப்பான கடல் தண்ணீரைத்தான் ஊற்றுகிறார்கள். அந்த உவர்ப்பான தண்ணீரானது ஆண் பிள்ளை யானால் அவனுக்கு வலிய காற்றோடும், அலைகளோடும் போராட உரமளிக்கிறது. பெண் பிள்ளைகளுக்கு வாழ்க்கையில் எதிர்ப்படுகின்ற ஏமாற்றங்களையும், துக்கங்களையும் தாங்குவதற் கான மன தைரியத்தைக் கொடுக்கிறது. மீனவர் களுடைய வாழ்க்கைக் கடலோடு பின்னிப்பிணைந்திருக்கிறது. கடல் அம்மையை மீனவர்கள் தங்களது தெய்வமாக நினைக்கிறார்கள். பதிலுக்கு அவள் தன்னுடைய பெரிய மடியிலிருந்து மீன்களை வாரி வாரி அவர்களுக்கு வழங்குகிறாள். பிறந்த குழந்தைக்குக் கடல்நீரைச் சீம்பாலாக (குழந்தை பிறந்தவுடன் கொடுக்கப்படும் சத்து நிறைந்த பால்) கொடுப்பதன் மூலம் ஆண்குழந்தைகளுக்கு உடல் வலிமை யையும், பெண்குழந்தைகளுக்கு மன வலிமையையும் கடல் அம்மை தருவதாக மீனவ மக்கள் நம்புகிறார்கள்.

வல்லமும், லாஞ்சியும்

நமது கையில் உள்ள விரல்கள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அதுபோல கடலில் சென்று மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் தங்களின் பொருளாதார வசதிற்கேற்ப இருக்கின்ற படகில் சென்று மீன் பிடிப்பர். அன்றைக்குப் பௌர்ணமிக்கு முந்தின நாள் என்பதால் கடலில் அலைகள் அதிகமாக இருந்தன.

வல்லத்தில் சென்று மீன் பிடிப்பவருக்கும், நாட்டுப்படகில் சென்று மீன் பிடிப்ப வருக்கும் வழக்கத்தைவிட மிகவும் மீன்கள் குறைவாகவே கிடைத்தன. ஆனால் லாஞ்சிக்காரர்களுக்கு என்றைக்கும் போல மீன்களுக்குக் குறைவில்லை. சிலுவைப் பாறைக்குப் பக்கத்தில் அலைகள் அதிகமாக இருந்ததால் வல்லங் களும், நாட்டுப் படகுகளும் அங்கு செல்ல முடிய வில்லை. நடுக்கடலில் கடல், குளம் மாதிரி ஆரவாரமின்றி அமைதியாக இருக்கும். அந்தப்பகுதிதான் கடல் அம்மையுடைய பொக்கிஷம் அலைகளுள்ள நாட்களில் அங்கே இழுத்துச் சுருட்டிக் கொள்ளும். லாஞ்சிகள் எந்தக்காற்றையும், அலை களையும் சமாளித்துச் சென்றுவிடு கின்றன. அன்றைக்கும் லாஞ்சிகள் சிலுவைப் பாறையைத் தாண்டிப் போய் மீன் பிடித்து வந்தன. ஆனால் வல்லங்கள் இந்தப் பக்கத்தில் நின்றிருந்தன. எல்லோராலும் லாஞ்சி வாங்க கதியில்லை. எனவே அவர்களுள்ளேயே லாஞ்சிகள் தொழிலுக்குப் போட்டியாக வந்துவிட்டன.

நட்பு பகையாக மாறுதல்

உறுபசியும் ஓவாப் பிணியும்
செறுபகையும்
சேராது இயல்வது நாடு
– குறள் [734]

ஒரு நல்ல நாட்டில் பொல்லாப்பசி, கொடிய நோய், தீராப்பகை இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அது நாடு அல்ல என்கிறார் வள்ளுவர். அதைப் போலவே ஓர் இனத்தில் (மீனவ சமுதாயம்) இந்த மூன்றும் இருந்தால் அவர்களின் வாழ்வு போராட்டம் நிறைந்ததாக மாறிவிடும். லாஞ்சிகள் வந்த நாள் முதலே கடலில் கடலுடைய ஆர்ப்பரிப்பையும் மீறி வல்லங்களுக்கும், லாஞ்சிகளுக்கும் சண்டையே நடக் கின்றன. இதனால் ஊருக்குள் எப்போது எது நடக்குமோ எனத் தெரியாமல் பரபரப்பான சூழல் நிலவுகிறது. ஒரு காலத்தில் தத்தம் போக்கில் அமைதியாக சென்று கொண்டிருந்த அவர்களுடைய வாழ்வில் ஒரு மரு (பகை) தோன்றி விட்டது. வலிமைமிக்க லாஞ்சிகளோடு, வல்லங்களும், நாட்டுப்படகுகளும் போட்டியிட முடியவில்லை. அந்த ஆரவாரமிக்க கடலில் ஒன்றாகப் பாடி ஒற்றுமையுடன் போய் வந்ததெல்லாம் பழைய கதையாகி விட்டது. இப்போது வந்த வல்லத்துக்காரானை. லாஞ்சிக் காரன் ஒருத்தனை நடு ஊருக்குள்ளே குத்திச் சாய்த்தாலும் ஆச்சரியமே இல்லை. அந்தளவுக்குக் குரோதம் முளைவிட்டிருந்தது. ஒரு காலத்தில் ஒருதாய் மக்களாக ஒன்றாய் வாழ்ந்து ஒரே தட்டில் உணவு உண்டு சகோதரத்துடன் நட்புடன் பழகி வந்தவர்கள் இன்று எதிரிகளாக மாறிவிட்டனர். இதற்குக் காரணம் தங்களுக்குள் ஏற்பட்ட தொழில் போட்டியே என்று பதிவு செய்கிறார் வண்ணநிலவன். இதன் மூலம் பணம் நட்பையும் பகைவராக மாற்றும் வல்லமை கொண்டது என அறிய முடிகிறது.

கடன் சுமை

'கடன்பட்டார் நெஞ்சினைப்போல் கலங்கினார் இலங்கை வேந்தன்' என்பதைக் கம்பரின் வாக்காகச் சொல்வர். ஒருவரிடம் கடன் பெற்றுவிட்டு அந்தக் கடனை அடைக்க முடியாமல் தவிக்கும் தவிப்புப் பெரும் திண்டாட்டம்தான். தொழிலில் நசிவுற்ற வல்லத்துக்கார் களும், நாட்டுப்படகுகார்களும் குலசேகரப் பட்டினத்துச் சாயபு மார்களிடம் நிறைய கடன் பட்டிருந்தனர். அந்தக் கடன்களை அவர்கள் ஒரு போதும் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. மீண்டும் மீண்டும் கடன் வாங்கி, வாங்கி கடனாளியாக இருக்கிறார்கள். கடலில் காற்றும் மழையும் அதிகமாகிக் கடலுக்குப் போகமுடியாத காலங்களில் சாயபு மார்கள் வெற்றுத்தாள்களில் ஸ்டாம்பு ஒட்டிக் கையெழுத்து வாங்கிக் கொண்டு கடன் கொடுத்தார்கள். கடனுக்கு ஈடாகப் பணத்துக்குப் பதிலாக தினந்தோறும் கடற்கரைக்குச் சென்று வந்து மீன்களைக் கிரையம் போட்டுக் கொண்டு எடுத்துச் சென்றுவிடுவார்கள். மீன் குத்தகைக்காரர் களைவிட மிகக் குறைந்த விலைக்கே சாயபுமார்கள் கிரையம் போட்டு மீன்களை எடுத்துக் கொண்டு போனார்கள். இதையெல்லாம் யாரும் கேட்டது கிடையாது. கேட்டால் அடுத்த தவணைக்குப் பணம் கிடைக்காது என்பது அவர்களுக்குத் தெரிந்த விடயம். எனவே கடன் அன்பை மட்டும் முறிப்பதில்லை. முதுகெலும்பையே முறித்துவிடும் என்கிறார் வண்ணநிலவன்.

இடைத்தரகர்கள்

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை - என்பது கிராமத்துப் பழமொழி. தான் உற்பத்தி செய்த ஒரு பொருளை விலை நிர்ணயம் செய்ய முடியாத சூழல் நிலவுகிறது. இதற்குக் காரணம் இடைத்தரகர்கள். மீனவர்கள் தாங்கள் பிடித்த மீனிற்குத் தாங்களே விலை நிர்ணயம் செய்ய முடியவில்லை எனக் குமுறுகிறார்கள். ஒரு பொருளை உற்பத்தி செய்பவர்கள் முதலாளி எனவும், அதை வாங்குபவர்கள் நுகர்வோர் (பொதுமக்கள்) எனவும் அழைக்கப்படு கிறார்கள். இதற்கிடையில் ஒரு பொருளின் விலையை நிர்ணயம் செபய்பவர்கள் இடைத்தரகர்களாக விளங்குகின்றனர். இங்கு மீனவர்கள் கடலில் பிடித்த மீன்களின் விலையை முடிவு செய்பவர்கள் இடைத்தரகர்கள் தான். மீன்களை அதிக விலைக்கு விற்று அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள். மீனவர்கள் தங்களுடைய பொருளுக்கு உரிய விலை கிடைக்காமல் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். தரகனிடம் பேசி மீள முடியாது. தான் பிடித்த மீனுக்குப் பெரிய விலைக்காக வாதாடி கடைசியில் அவர் கேட்ட விலைக்குத்தான் கொடுக்க வேண்டிய சூழல்வரும். இதற்குக் காரணமில்லாமல் இல்லை. தரகர்கள் மீனவர்களின் அவசரத் தேவைக்காக நிறைய பணம் கொடுத்திருக் கிறார்கள். எனவே தரகனை மீறி மீன்களுக்கு விலை நிர்ணயம் செய்ய முடிவதிலை. "லே மக்கா தரகனார் என்றால் அம்புட்டு நைச்சியமா

சொல்லுதா நீயும் ஒரு பொழுதில் லாஞ்சி வாங்கிப் போட மாட்டிய என்ன, ஒன்னோட அப்பச்சி போன வல்லத்து மேலே எத்தனை நாளைக்குத்தான் கடலுக்குப் போவா. உன்னால முடியாமப் போனாலும் ஓம் பேரன் லாஞ்சியில்தான் கடலுக்குப் போவான். என்னோட பேரன் அவனுக்குத் தரகனாக இரிப்பான்''. காலங்கள் மாறிகிட்டே இரிக்கி. ஒரு நாளில் ஊர்க் கூட்டம் போட்டுப் பேசினார்கள். ஆனால் ஒருத்தொருக்கொருத்தர் விட்டுக் கொடுத்த பாடில்லை வல்லத்துக்கார் களுக்கு வர வர மீன்கள் குறைந்து கொண்டே போயின. தரகர் மார்களிடம் பட்ட கடன்களுக்கு ஈடாக மீன் கூட கொடுக்க முடியாமல் போனது. எனவே மீனவர்களின் வாழ்வு முன்னே றாமல் இருப்பதற்கு இடைத்தரகர்கள் முட்டுக் கட்டையாக இருப்பதாக வண்ணநிலவன் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

'பணம் மட்டுமே உலகை ஆள்கின்ற மூலாதாரம்' என்று இலத்தின் பழமொழி கூறுகிறது. இவ்வுலகில் பணம் இல்லை யெனில் எந்த ஒரு செயலும் நடைபெறாது. எனவேதான் நமது முன்னோர்கள் மனித வாழ்விற்குப் பொருளே ஆதாரம் என்றனர். வழக்கம்போல வல்லங்களோடு, நாட்டுப் படகுகளும் லாஞ்சிகளும் கடலுக்குப் போகின்றன. வல்லங்கள் போக முடியாத தூரங்களிலும், மீன்கள் அதிகமாகக் கிடைக்கக்கூடிய இடங்களிலும் லாஞ்சிகளுக்கும், வல்லத்துக்கார்களுக்கும் கடலில் மிக மோசமான வெறியூட்டுப் போட்டி நடைபெறுகிறது. இதனால் தீராப்பகை ஏற்பட்டுக் கொலை செய்யவும் தூண்டப்படுவதாகவும், கடலோடும், இடைத்தரகர்களோடும், போராடித் தங்களது வாழ்க்கையை நடத்துவதாகவும் வண்ணநிலவன் குறிப்பிடுகிறார். இதன் மூலம் மீனவர் களின் வாழ்வும் கடல் அலையைப் போல அடித்துக் கொண்டே இருக்கிறது.

துணை நூற்பட்டியல்

1. கடல்புரத்தில், வண்ணநிலவன், நற்றிணைப் பதிப்பகம், சென்னை – 2012
2. திருக்குறள், எளிய உரை மு.வரதராசானார், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் – 2004
3. உலகப் பழமொழிகள், லட்சுமி நாராயணன், கங்கை புத்தகம் நிலையம், சென்னை –1994

சோலை சுந்தர பொருமாளின் செந்நெல் புதினத்தில் சாதிய ஒடுக்குமுறை

முனைவர் ப. கீதா
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கோவை

ஆய்வுச் சுருக்கம்

எந்தவொரு புதினமும் அது தோன்று கின்ற சமூகம் சார்ந்த அல்லது குறிப்பிட்ட வட்டாரம் சார்ந்த மக்களுடைய வாழ்வின் வரலாறுகளை நிகழ்வுகளைப் போராட்டங் களைப் படம் படித்துக் காட்டுகின்றன. சோலை சுந்தர பெருமாள் படைத்த செந்நெல் என்னும் புதினம் வர்க்கப் போராட்டத்தையும் பாலியல் கொடுமை களையும் வேளாண் மக்களின் வறுமை களையும் எங்ஙனம் சமூகக் கண் கொண்டு பார்க்கிறது என்று ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது

திறவுச்சொற்கள்

செந்நெல், விளிம்புநிலை, புனைகதை, கற்பனை, சமூகம், படைப்புகள், பாலியல்

முன்னுரை

அறிவியல் பெருக்கமும் உரிமை வேட்கையும் இக்காலப் படைபுகளின் கருவாக அமைகின்ற சூழலில் கவிதை களைவிடக் புனைகதைகள் முன்னிடம் வகிக்கின்றது. கற்பனை வளமும் இன்ப நலமும் தரும் படைப்புகள் அறிவையும் உண்மையையும் ஆக்கங்களையும் உருவாக்கி வருகின்றன. இவ்வாறு படைக்கப்படும் படைப்புகள் மூலம் மொழியானது வளர்ச்சி யும் வாழ்வும் அடைகிறது. மொழியினை வளர்ச்சி அடையச் செய்த படைப்புகள் மக்களி டையே விழிப்புணர்வையும் ஏற்படுத்து கிறது என்பதும் மறுக்க இயலாத ஒன்றாகும். சமூகம் சில நெறிமுறை களைக் கொண்டு அமைந்திருப்பது. அவற்றில் இருந்து எந்த ஒரு மனிதனும் தனித்து வாழ முடியாது. தனிமனிதன் எந்தவொரு செயலையும் கடமையையும் செயல் படுத்த வேண்டுமெனில் அவன் தன்னைச் சார்ந்துள்ள குடும்பம், அரசு போன்றவற்றுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ள சூழ்நிலையில் இருக் கிறான். இந்நிலையில் அவன் சந்திக்கும் பிரச்சனைகள் பலவாகும்.

விளிம்புநிலை மக்கள் இலக்கியத்தின் போக்கு

இந்தியாவின் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை மிகவும் அவலமான நிலையில் உள்ளது. சாதிக்கு அடிப்படை யாக அமைத்த வருணாசிரமம் இவற்றின்

ஆதிக்கம் காரணமாக விளிம்பு நிலை சமூதாயம் தமது உரிமைகளை இழந்து ஒடுக்கப்பட்டு தேக்க நிலையில் உள்ளது. நமது அரசு தீண்டாமை ஒழிப்புச் சட்டம், மனித உரிமை மீறல் போன்ற கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தாலும் இந்தியக் கலாச்சார வாழவிலே தீண்டத்தகாதவர்களாகத் விளிம்பு நிலை மக்கள் கருதப்பட்டு சமூகப் பொருளாதார அரசியல் சமய வாழவிலே நசுக்கப்பட்டு மனிதம் சிதைக்கப்பட்டவர் களாகப் பல பிரச்சனை களை முன் வைத்து அவர்களின் விடு தலைக்காக எழுதப்படும் இலக்கியமே விளிம்பு நிலை மக்கள் இலக்கியம் ஆகும்

தமிழில் விளிம்புநிலை மக்களின் வளர்ச்சி

தொண்ணூறுகளில் தமிழ் நாவல் இலக்கியத்தில் பெரிதும் பேசப்படும் இலக்கியம். விளிம்பு நிலை மக்கள் இலக்கியம் ஐம்பதுகளில் மராத்திய இலக்கியத்தில் பெரும் புயலாக உருவெடுத்துக் கன்னட இலக்கியத்திற்குள் புகுந்து தற்போது தமிழ் இலக்கியத் திற்குள் தடம் பதிக்கிறது. தமிழ் இலக்கி யத்தைப் பொறுத்த மட்டில் விளிம்பு நிலைமக்கள் இலக்கியம் மிகவும் தாமத மாகவே வந்துள்ளதைக் காண முடிகிறது.

விளிம்புநிலை மக்கள் போராட்ட புதினங்கள்

பொருளாதார ஏற்றத்தாழ்வுவைச் சுட்டிக்காட்டி சுரண்டும் வர்க்கத்தையும் சுரண்டப்படும் வர்க்கத்தையும் அடை யாளங்காட்டித் தொழிலாளர் வர்க்க மேம்பாட்டிற்காக ஒன்றுபட்ட நிலையில் செயல்பட்டு விடிவு காண வேண்டும் என்ற போக்கிலேயே தமிழில் பெரும் பாலான மார்க்சிய கண்ணோட்ட புதினங்கள் வெளிவந்துள்ளன. தமிழில் வர்க்கப்போராட்ட புதினங்களை அறிமுகப்படுத்திய பங்கு புனைகதைக்கு உண்டு. தொழிலாளர் பிரச்சனைகளைப் பொருளாதார அடிப்படையில் காரண காரியங்களுடன் எடுத்துரைக்கும் வகை யிலான புதினங்களை அறிமுகப்படுத்திய வர்கள் மார்க்சிய வாதிகளே எனலாம்.

சோலை சுந்தர பெருமாளின் செந்நெல் புதினமானது தாழ்த்தப்பட்ட விவசாயக் குடிமக்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான கூலிக்காக போராடும் அவலநிலை யையும் அதனால் அவர்கள் படும் துயரமும் உயர்சாதி மக்களின் சாதி வெறிச் செயலால் படுகொலை செய்யப்படு வதையும் பதிவு செய்கிறது.

செந்நெல் புதினத்தின் கதைக்களம்

புதினம் நடைபெறுகின்ற இடம், சமுதாயம், சூழல், சுற்றுபுறம் என்ற நான்கின் அடிப்படையில் அமைவது கதைக்களம் ஆகும்.

நாகை மாட்டத்திலிருந்து 25 கி.மீ தொலைவில் உள்ள கீழ் வெண்மணி கிராமம் வண்டல் மண் சார்ந்த வளமான பகுதியாகும் உலப்புகழ் பெற்ற வேளாங் கண்ணி திருத்தலத்திலிருந்து 15 கி.மீ மேற்கில் அமைத்துள்ள கீழ் வெண் மணியில் வேளாண் உற்பத்தியைப்

பெரிதும் நம்பிருக்கும் விவசாயிகள் அதிகம் வாழும் பகுதி. கூலி விவசாயிகளின் பெரும் பகுதியினர் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள். கூலிகள் அரைப்படி நெல் கூலி உயர்வு கேட்டதற்காக 44 பேரை நில உடைமையாளர்கள் உயிரோடு எரித்த சம்பவத்தையே கதையின் கருவாக்கி யிருக்கிறார் ஆசிரியர்.

கீழ்வெண்மணியைச் சுற்றியிருக்கும் கிராமங்களான தேவூர், இரிஞ்சூர், இருக்கை, பெருந்தலக்குடி, கடலாகுடி, கிள்ளுக்குடி, அய்யடி மங்கலம், ஆய்மழை, சிக்கல், மணலி போன்ற பகுதிகளை கதைக்களமாக் கொண்டுள்ளது.

ஆண்டான் அடிமை போக்கு

நில உடைமையாளர்களிடம்தான் அதிக நிலமும் பணமும் உள்ளது. பண்ணையார்களிடம் வேலை செய்து தங்கள் வாழ்க்கையை நடத்தும் விவசாயக் கூலித் தொழிலாளர்களைப் பண்ணை யாளர் தங்கள் அடிமைகளாகவே கருதினர். ஐயா, ஆண்டை என்று தான் அழைக்க வேண்டும். குறைந்த கூலி அதுவும் அணாவாக கிடையாது. ஒரு படி நெல்லும் கேப்பையும் தான்.

கல்வி மறுப்பு

விவசாயத் தொழிலாளர்கள் தங்களின் குறைந்த கூலிக்கு அடிமைத்தொழில் புரியவே நில உடைமையாளர்கள் விரும்பும் போக்கினைப் பெரியான் மகனுக்கு கல்வி கற்க மறுப்பதிலிருந்து அறிய முடிகிறது.

பெரியான் ஒன்னோட சின்ன மவன் பள்ளிக் கூடம் போய் பெரிசா படிச்சிட்டு வராட்டாலும் இப்ப வெதாரணையா இருக்கான்டா என்று புதினத்தின் படி ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி மறுக்கப்படுவதை பள்ளிக்குச் செல்ல விருப்பம் இருந்தும் செல்ல முடியாமல் சில உடமையாளர்களுக்கு பயப்படும் போக்கினை காண முடிகிறது.

வர்க்கப் போராட்டம்

வர்க்கப் போராட்டம் இன்று மிகவும் கூர்மையாக ஆனால் நுணுக்கமான முறையில் நடந்து வருகிறது. நேரடியாக பகைமை வர்க்கங்கள் மோதுவதை நாம் காண முடிந்தாலும் அது பல இடங்களில் நேரடியான மோதலாக இடம் பெறுவ தில்லை. இன்றைய தொழிற்சங்க போராட்டங்களில் அது சாதிய போராட்டமாகவும் மத போராட்ட மாகவும் இடம் பெற்றிருப்பதை நம் வரலாற்றில் காணமுடிகிறது. நில உடைமையாளர்கள் விவசாய தொழிலா ளர்கள் என்றென்றும் தனக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிற மனப்போக்கை மாற்ற துடிக்கும் இளைஞனாக விளிம்புநிலை மக்களின் ஒருவனாக இருக்கக்கூடிய கண்ணுசாமி.

இதுநாள் வரைக்கும் நம்ம மேல ஏறி சவாரி செஞ்சுகிட்டு இருக்குறவங்கள கேள்வி கேட்குற தெம்பு நமக்கு வந்திடுங்கிற பயம்தான். அத வெளில காட்டிக்காம மெரட்டி பாக்குறாங்க. இப்ப நாமும் கொஞ்சம் நெஞ்ச நிம்மதிய பேச ஆரம்பிச்சுட்டோம்னா...

என்று கூறும்பொழுது நில உடைமை யாளர்கள் தங்களை ஆண்டாண்டு காலமாய் அடக்கி வருவதையும் அதை எதிர்த்து வரும் குரலாக வர்க்கப் போராட்டத்தின் ஆரம்ப கொண்டு புதினம் தொடங்குகிறது.

செந்நெல் ஆசிரியரும் தன் தான் வாழ்ந்த காலத்தில் உள்ள கம்யூனிசத்தைத் தன் ஆயுதமாகக் கொண்டு சிகப்பு குடிகாரர்கள் விவசாயிகளுக்கும் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் தங்கள் உரிமையை நிலைநாட்ட போராட்டமே சிறந்தது என்று வலியுறுத்தி சிந்தனையை தன் புதினத்தில் வடித்திருக்கிறார்.

நெல் உற்பத்தியாளர் சங்கத்தால் விவசாயிகள் படும் பாட்டை அம் மக்களின் வாழ்க்கையை தன் உரிமையைப் பெற உணவின்றி வாழும் வறுமையை கதை நெடுகிலும் சொல்லிச் செல்கிறார். இப்புதினம் தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுக்கு தற்காலிக நிம்மதியை மட்டுமே தரமுடியும். இப்புதினத்தில் ரங்கபாஷ்யம் நாயுடுவின் கூற்றாக...

அவனுங்க கொல்லைல நின்னுட்டு தானே வாங்கிட்டு போறானுங்க அவனுங்க கெட்ட சாதிக்காரனுங்களாவே பொறந்தவங்க. அந்தப் பள்ளி பறையன வைக்க வேண்டிய இடத்தில் வைக்காமல் சுதந்திரம் வாங்கினதும் எல்லா சாதியும் ஒன்று சேர்க்க போரா இடம் கொடுத்தாச்சு அது போதாதென்று ஈரோட்டு ராமசாமி நாயக்கன் மூத்திரச் சட்டி வச்சுக்கிட்டுச் சாமியும் இல்லை பூதமும் இல்லைன்னு சொல்லி அந்த பயலுகளுக்கு துணிச்சலை கொடுத்து விட்டான் மனுஷன்...

விளிம்புநிலை மக்களின் போராட்டத் திற்கு உதவிய பெரியாரையும் சமூகத்தில் சம அந்தஸ்து பெற போராடும் பொதுவுடமை வாதிகளையும் உயர்மட்ட சாதி வெறி கொண்ட மக்கள் எவ்வாறு வருகின்றனர் என்பதனையும் இப்புதினம் பதிவு செய்கிறது. பெரியார் கூறும் பொழுது விவசாயக் கூலித் தொழிலாளர் களின் ஒற்றுமையையும் கம்யூனிச வாதிகள் தங்களுக்காகப் பாடு படுவார்கள் என்ற அவர்களின் நம்பிக்கையையும் அறிய முடிகிறது.

மனித உரிமை மீறல்

மனிதனை மனிதனாக மதிப்பதே மனித உரிமை ஆகும். இங்கு விவசாய கூலித் தொழிலாளர்கள் அடிமை நிலையில் நடத்தப்படுவது அவர்களின் மனித உரிமையை மீறும் செயலாகும்.

இந்திய அரசியலமைப்புச்சட்டத்தால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் பிரிவு 4 இல் எவரையும் அடிமையாக வைத்துக்கொள்ளக்கூடாது அடிமை முறையும் அடிமை வியாபாரமும் அவற்றின் அனைத்து வடிவங்களிலும் தடை செய்யப்பட வேண்டும் (மனித உரிமைச்சட்டம் 72) என்று குறிப்பிடுகிறது.

மனித உரிமை மீறல் என்பது செந்நெல் புதினத்தில் சர்வசாதாரணமாக இருப்பதை. விவசாயிகளின் நியாயமான கூலி மறுக்கப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுப்பவர் தண்டிக்கப்படுவதன் வழி

அறியமுடிகிறது. மேலும் தொழிலாளர்கள் கூடுதலாகக் கேட்கும் அரைப்படி நெல்லைத் தருவதற்கு மனமில்லை; உழைப்புக்கு ஏற்ற கூலி கொடுக்காமல் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவுற்றது. கீழ்வெண்மணியைச் சேர்ந்த கண்ணுசாமி, வடிவேலு இருவரைக் கட்டிவைத்து அடித்தனர். இதை எதிர்த்துத் தொழிலாளர்கள் மோதலில் ஈடுபட்டனர். இதனால் கீழ்வெண்மணியில் கலவரம் மூண்டது.

தனக்கு அடிமையாக இருந்தவர்கள் தன்னை எதிர்ப்பதா என்று ஆத்திரம் கொண்ட பண்ணையார் கோபால கிருஷ்ணன் என்பவர் தனது அடியாட்களுடன் பெட்ரோல் கேன்கள், நாட்டுத் துப்பாக்கி சகிதம் இறக்கினார். அவர்களுக்குப் போலீசாரும் துணை நின்றனர். அவர்கள் முன்னிலையில் அந்த கொடிய சம்பவத்தை அரங்கேற்றினர் காட்டில் மிருகம் வேட்டையாடப்படுவது போல் கண்ணுக்கு கிடைப்பவர்கள் எல்லாம் சுடப்பட்டனர். இப்படிப்பட்டவர்கள் கிட்டத்தட்ட 10 பேருக்கு மேல் இருப்பார்கள். இதனைக் கண்டு பயந்து நாலா மூளைக்கும் சிதறி ஓடி வாய்க்கால் வரப்புகளில் ஓடி ஒளிந்து கொண்டனர். தொழிலாளர்களின் அனைத்து குடிசைகளும் எரிக்கப்பட்டன. நிராயுத பாணியாக நிற்கும் அப்பாவிப் பெண்கள், வயதானவர்கள், குழந்தைகள் உயிரைக் காத்துக் கொள்ள தெரு மூலையில் உள்ள ராமையா என்பவரின் சிறிய கூரை வீட்டில் ஓடி ஒளிந்தனர். வெறிபிடித்து அலைந்த அவர்கள் அந்த வீட்டைக் கண்டுபிடித்து வீட்டைப் பூட்டிவிட்டுப் பெட்ரோல் ஊற்றி எரித்துக் கொலை செய்த சம்பவம் பதிவு செய்யப்படுகிறது.

பாலியல் கொடுமை

சாதியில் தாழ்த்தப்பட்டவர்கள் வீட்டுக்குள் வரக்கூடாது; தொடக்கூடாது; அவர்கள் உண்ட பாத்திரத்தைத் தீண்டக் கூடாது என்ற எண்ணம் கொண்ட உயர் சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்யும் செயல் வேதனைக்குரியது; வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தன்னுடைய இச்சைக்கு கட்டுப்படாத பெண்களை நிர்வாணமாக்கி மரத்தில் கட்டி வைத்து அடிப்பது, திருட்டுப் பழி சுமத்துவது; நெருப்பில் மிளகாய்ப் போட்டு அதில் வரும் புகையில் துன்பம் அடையச் செய்வது போன்ற கொடுமையான மனிதத்தன்மையற்ற செயல்களைச் செய்யக் கூடிய உயர்சாதியினரின் இயல்பையும் இப்புதினம் பேசுகிறது. செல்வி என்ற பெண்ணைக் கடத்த முற்பட்ட அதனால் தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கும் உயர் சாதிகளுக்கும் இடையே ஏற்படும் மோதல் உச்சநிலை அடைந்து அதன் காரணமாக நில உடமையாளர்கள் கொதித்தெழுந்து தன்னையொத்த மனிதன் என்று பாராது அவர்களைக் கொளுத்திய காட்டு மிராண்டித்தனமான செயலை அறிய முடிகிறது.

முடிவுரை

சாதிய பிரச்சனைக்கு அடிப்படைக் காரணம் பெரும்பான்மையான மக்கள் சிறுபான்மையினரைக் கண்டு தேவையில் லாமல் அஞ்சுவதே ஆகும். இந்த அச்சத்தின் காரணமாக சிறுபான்மை யினரைஅவர்கள்அடக்கியாளமுற்படுவதும் அதை எதிர்த்துப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குச் சிறுபான்மையினர் ஆளாகின்றனர்.

ஒடுங்கிக் கிடந்த மக்கள் ஒரு கட்டத்தில் நில உரிமையாளர்களுக்கும் உயர் சாதியினருக்கும் எதிராக பொது வுடைமை இயக்கத்தில் இணைத்துக் கொண்ட ஒரே காரணத்திற்காக ஒன்றும் அறியாத அப்பாவி விவசாயக் கூலி மக்களை எரித்த கொடுமை தமிழக வரலாற்றில் மட்டுமல்லாமல் இந்திய வரலாற்றிலும் நீங்காத கரும்புள்ளியாக வடுவாக உள்ளதை அறிய முடிகிறது. கீழ்வெண்மணிப் படுகொலையைக் குண ரீதியாக மேற்கொண்டவர்கள் இம் மண்ணின் ஆதிக்குடிகளாக நடத்தப் பட்டு இருப்பதை மன்னிக்கவே முடியாத கொடுஞ்செயல் ஆக முன்னிறுத்தி இருப்பதையும் அறிய முடிகிறது.

துணைநூல் பட்டியல்

1. செந்நெல், சோலை சுந்தர பெருமாள், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, ஆண்டு 2008
2. தமிழ் இலக்கிய வரலாறு, டாக்டர் மு.அருணாச்சலம், முனைவர் இராஜா வரதராஜன், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, ஆண்டு 2021.
3. விளிம்பு நிலை மக்கள் வழக்காறு, ஆ.தனஞ்செயன், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, ஆண்டு 2015.
4. இலக்கிய ஆராய்ச்சி, மு.வரதராசனார், பாரி நிலையம், சென்னை. ஆண்டு 2010

முற்போக்குச் சிந்தனை மரபும் பாரதியாரும்

முனைவர் த. குணாநிதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
இந்துக் கல்லூரி
பட்டாபிராம்

23

23

முன்னுரை

பாரதியார் தமிழ்ச் சமூகத்தால் என்றென்றும் கொண்டாடப்பட வேண்டியவர். பார்ப்பனர் என்ற துவேஷப் பார்வையை அவர் வைத்தாலும் அவர் எதிர்கொண்ட சவால்கள், துன்பங்கள் கடுமையான நிலைகள் அனைத்தும் வேறெவரும் அனுபவித்திராதவை. தன்காலத்திற் கேற்ப அனைத்தையும் புதுவடிவத்தில் நோக்கியுள்ளார். பழமையானவைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. 'பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே' என்று பட்டினத் தாரை நினைந்தே ஆட்பட்டார். தனது அறிவுக்கு ஒத்தவைகளை ஏற்றுக் கொண்டும் தேவையில்லாததை நீக்கவும் எள்ளளவும் தயங்கியதில்லை. 'பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன், கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்' என்பதற்கொப்ப வாழ்ந்தவர்.

இந்து சமயத்தில் காலம் காலமாக நிலவிவருகின்ற தீண்டாமை, உயர்வு தாழ்வு, சாதிய உணர்வு, மூட நம்பிக்கை, பெண்ணடிமைத்தனம், நால்வருணப் பாகுபாடு ஆகியவற்றைக் கேள்விக் குள்ளாக்கி அதனைச் சதி என்று கருதி நீக்கினார். தன் காலத்திற்கும் தனி மனிதனுக்கும் ஒத்துவராததை அறவே நீக்கினார். எல்லாக் காலத்திற்கும் தேவையான சாத்திர, ஒழுக்க நூல்கள் இல்லை என்று அவரே பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"காலத்திற்கேற்ற வகைகள் –
அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும்
நூலும்
ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் –
எந்த
நாளும் நிலைத்திடும்
நூலொன்றும் இல்லை"[1]

ஆனால், மனித சமூகத்தைச் சாதிகளும் மனுதர்ம சாத்திரங்களும்தான் இயக்குகின்றன. இந்து சமயத்தின் சட்டநூலாகத் திகழ்கின்ற மனுஸ்மிருதி கட்டமைத்த பாகுபாடுகளைத் தகர்த்து சமூகத்திற்குத் தடைகல்லாக விளங்குகின்ற சதிகளைத் தொலைநோக்குப் பார்வையால் அணுகி முற்போக்குச் சிந்தனையாளராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். இந்த

மாதிரியான முற்போக்குச் சிந்தனை பார்ப்பன சமூகத்தில் பிறந்தவருக்குத் தோன்றியது ஆச்சரியமும் அசாத்தியமும் தான். 'சூத்திரனுக்கோர் நீதி, தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு ஓர் நீதி' என்று தன்சமூகத்தையே கேள்விக்குள்ளாக்கியவர். குறிப்பிட்ட இந்தக் காலத்தில் இப்படியான சிந்தனையில் தன்னை இணைத்துக் கொண்டதையும் அதற்கானத் தேவைகளை விளக்குவதையும் முதற்பொருளாகக் கொண்டமைகிறது இக்கட்டுரை.

பாரதியார் 1882-1921 இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த இவர் 1915க்குப் பிறகே பட்டொளி வீசுகின்ற கவிதைகளை எழுதினார். இக்கவிஞரின் காலகட்டமானது இந்து சமய மரபில் மறுமலர்ச்சி நிகழ்கின்ற காலமாகவும் சீர்த்திருத்தத் தேவையை உள்வாங்குகின்ற காலமாகவும் அமைந்தது. பாரதிக்கு முன்பாகவே இந்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களாக அரவிந்தர், ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, விவேகானந்தர், வள்ளலார் ஆகியோரைக் குறிப்பிடலாம். தனிமனித ஆளுமைகளோடு சமூகத்தின் உயிர்நாடியாக விளங்கக்கூடிய பத்திரிகைகளும் பெரும் பங்காற்றின.

மறுமலர்ச்சியின் தேவை

இந்தியாவில் ஐரோப்பியர்களின் காலனியாதிக்கம், அரசியல், சமூகம், தொழில் ஆகியவற்றில் தேசிய, இன எழுச்சியை ஏற்படுத்தியது. ஆட்சி அதிகாரம் மட்டுமல்லாமல் மதம், மொழி, பண்பாடு ஆகியவற்றிலும் அடக்குமுறையோடே இருந்தனர். இப்படியான நிலைமைகள் அடித்தட்டு மக்களுக்கு எந்தவிதமான உந்துதல் களையும் ஏற்படுத்தவில்லை. ஓரளவு படித்தவர் களுக்குப் பாதிப்புகள் அதிகமாகவே இருந்தன. இதனைப் பின்வரும் குறிப்புகள் தெளிவுபடுத்துகின்றன.

> "பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் ஐரோப்பியர் வருகையும் ஆட்சியும் கிறிஸ்தவ மிஷனரிகளின் தீவிரச் செயல்பாடும் சைவ சமயத்தின், சனாதனத்தின் சில அடிப்படைகளைச் சந்திக்கு இழுத்தன. குறிப்பாக ஐரோப்பிய மிஷனரிகளின் சமயச் செயல்பாட்டுக்கு எதிர்வினையாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவெங்கும் இந்துக் களிடமிருந்தும் எதிர்வினைகள் பலவகை களில் தோன்றின. வடக்கே பிரம்மசமாஜமும் ஆரிய சமாஜமும் இராமகிருஷ்ண மிஷனும் தெற்கே இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்கத்தின் சங்கம், சபை, சாலை ஆகியவையும் ஆங்கிலக் கல்வி கற்ற உத்தியோக வர்த்தக வர்க்கத்தாரின் சீர்த்திருத்த சபைகளும் சங்கங்களும் பத்திரிகைகளும் இவ்வாறு தோன்றிய எதிர்வினைகளில் முக்கியமானவை யாகும்"[2].

தமிழகத்தில் இம்மாதிரியான நிலை களுக்கு எதிராகச் செயல்பட்டதின் அவசியத்தைப் பின்வரும் நிலைகளில் அணுகலாம்.

பகுதி அ

முதலாவது வாணிகத்தைப் பரப்பும் நோக்கில் வந்த ஐரோப்பியர்களின் கிறித்தவ சமயம் இந்தியாவிற்குள்ளும் தமிழகத்திற்குள்ளும் எல்லா இடங்

களிலும் (கல்வி, தொழில், வியாபாரம், வழிபாடு, சாதித் தளர்வு) தனது ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பித்தன. சமயத்தையும் அதனுடைய போதனை யையும் பரப்ப பள்ளிகளைத் திறம்பட பயன்படுத்திக் கொண்டார்கள். கிறித்தவர் களாலும் மிஷனரிகளாலும் நிறுவப்பட்ட பள்ளிகளில் இந்து சமயத்தைப் பற்றியும் கடவுளைக் குறித்தும் மோசமாகப் பேசி வந்ததோடு மதமாற்றப் பணியிலும் ஈடுபட்டனர். ஆரம்ப காலத்தில் ஐரோப்பியக் கல்வி மூட நம்பிக்கைகளை விலக்கும் என்றும் அவர்களின் இந்தக் கல்விமுறையானது வளர்ந்துவரும் அறிவியல் உலகிற்கும் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் பயன்படுகிறது என்றும் நினைத்த அளவில் இரண்டாவது மட்டுமே நடந்தது. இந்தக் கல்வியால் பலருக்குக் கிழக்கிந்திய கம்பெனியில் வேலையும் கிடைத்து, புதிய நாகரிக உலகிற்கு வந்துவிட்டது போன்ற நினைப்பை இந்தக் கல்வி ஏற்படுத்தியது.

திண்ணைப் பள்ளி, குருகுலக் கல்வி முறையில் இணையாதவர்களுக்குக் கிறித்தவர்கள் ஏற்படுத்திய பள்ளி அனைவருக்கும் சமுதாயத்தில் புது மாற்றத்தை ஏற்படுத்திய அதேவேளையில் அங்கு நடைபெற்ற கிறித்தவப் பாடங்கள், மத மாற்றங்கள், பெண்கள் பாலியல் தொடர்பான பல பிரச்சினைகள் இந்துக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தின. இதனால் நம்மவர்களான சுதேசிகளிடையே கல்வி நிறுவனங்களை நிறுவும் அளவிற்கு மாற்றங்கள் நிகழ்ந்தன. பெரும் தனவேந்தர்களாக, செல்வந்தர்களாக விளங்கியவர்களால் இந்து மக்கள் படிப்பதற்கென்றே தமிழகத்தின் பல இடங்களில் பள்ளிகள், கல்லூரிகள் நிறுவப்பட்டன (உ.ம். பச்சையப்பன் கல்லூரி). இதனை விளங்கிக்கொள்வதற்கு பின்வரும் குறிப்புகள் பலமாக உள்ளன.

"சாதியால் மதத்தால் ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களிடையே கிறித்துவப் பாதிரிகளின் பிரச்சாரம் உள்ளொளியை ஏற்படுத்தியது. பாதிரிகள் வெறும் மதப்பிரச்சாரத்தோடு நின்றுவிடாமல், தாழ்த்தப்பட்டுக் கிடந்த இந்து மக்களை அணுகி, அவர்கள்பால் அன்புகாட்டி, ஆக்க வழியிலும் தொண்டு புரிந்தனர். கல்வி, சுகாதாரம், குடியிருப்பு ஆகியவற்றில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவிபுரிந்தனர். இதனால் சேரிகளிலும் குடிசைப் பிரதேசங்களிலும் பல நூற்றாண்டு களாகச் சிறை வைக்கப்பட்டிருந்த இந்துக்களுள் பலர் கிறித்துவ மதத்தில் சேரலாயினர். அவர்கள் எண்ணிக்கை கொஞ்சநஞ்சமன்று, சுமார் ஒரு கோடியாகும். இந்தியாவில் ஏற்பட்ட இந்த மாறுதல் இந்து மதத்திலுள்ள படித்தவர் சிலரிடையே அதிர்ச்சியை உண்டாக்கியது. இந்து மதத்தைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது. இந்துக்களிடையே உள்ள தத்துவப் பேதங்கள், மத பேதங்கள், சாதி பேதங்கள் காரணமாக, இந்திய சமுதாயம் ஒற்றுமையின்றிச் சுக்கு நூறாக

உடைபட்டுக் கிடப்பதை உணர்ந்தனர். 1757 முதல் 1857 வரையுள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்திலேயே மத மாற்றம் அதிகரித்தது. அதன் விளைவாக, படித்த இந்துக் களிடையே மனமாற்றம் ஏற்படலானது. கிறித்து மதத்தின் வளர்ச்சியால் இந்து மதம் நலிவது பற்றியோ, அந்த மதத்தின் துணை கொண்டு காலூன்றிய பிரிட்டிஷ் ஆதிக்கம் இழைக்கும் இன்னல்கள் பற்றியோ சமுதாயத்தின் அடித்தளத் திலிருந்த சாதாரண மக்கள் அதிகமாகக் கவலைப்படவில்லை. உயர்தர – நடுத்தர மக்களுள் சிலரிடையே தோன்றியிருந்த இந்தப் புத்துணர்ச்சி மகத்தானதொரு சமயப் புரட்சி நடத்தும் தலைவர்கள் தோன்றுவதற்கான சூழ்நிலையைத் தோற்றுவித்தது''[3].

மேலும் இங்கு கிறித்தவப் பாதிரிமார்கள், கிழக்கிந்திய கம்பெனியார் வெளியிட்ட கருத்துகளும் கவனிக்க வேண்டியவையாக உள்ளன.

''பரந்த இந்துஸ்தான் சாம்ராஜ்யத்தைக் கடவுளே நம்மிடம் ஒப்புவித்துள்ளனர். இந்தியாவின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைவரையில் கிறித்துவக் கொடி பறக்க வேண்டும் என்பதே அவரது கட்டளை. அது நிறைவேற ஒவ்வொரு ஆங்கிலேயனும் தன் முழுச் சக்தியையும் உபயோகிக்க வேண்டும். இந்தியாவை ஒரு கிறித்துவ நாடாகச் செய்யும் விஷயத்தில் அணு அளவும் தயக்கமோ தாமதமோ கூடாது. நமக்கு எவ்வித கஷ்டம் நேர்ந்தாலும் எவ்வித துரதிருஷ்டம் நேர்ந்தாலும் இந்தியாவில் நமது சாம்ராஜ்யம் இருந்து வரும் வரையில் அங்கு நமது முக்கியமான கடமை கிறித்துவ மதத்தைப் பரப்புவது தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கன்னியாகுமரியி லிருந்து இமாசலப் பிரதேசம் வரையில் இந்துஸ்தானம் முழுவதும் இந்து – இஸ்லாம் மதங்களைக் கண்டித்து, எல்லோரும் கிறித்துவ மதத்தைத் தழுவச் செய்ய வேண்டும். இந்தியா கீழ்த்திசை யிலேயே கிறித்துவ மதத்தின் ஒரு பிரம்மாண்டமான கோட்டையாகி விட வேண்டும். அதுவரையில் நமது முயற்சி சிறிதும் தளரக்கூடாது''[4].

இந்தியாவை ஒட்டுமொத்தமாக கிறித்தவ நாடாக மாற்றுவதில் முனைப்புடன் செயல்பட்டதை இந்தக் குறிப்புகள் காட்டுகின்றன.

நவீன காலக் கல்வி முறையை வடிவமைத்த மெக்காலே தன் கல்விக் கொள்கையால்,

''நமது கல்வித் திட்டமானது வழுவின்றிப் பின்பற்றப்படும் பட்சத்தில் இன்னும் முப்பதாண்டு காலத்துக்குள் வங்காளத்தில் ஓர் இந்துவோ அல்லது முஸ்லிமோ இருக்க மாட்டான் என்பதுஎன் உறுதியான நம்பிக்கை''[5].

என்று குறிப்பிடுவது படித்த சுதேசி வர்க்கத்தாரிடையே கொந்தளிப்பையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தியது.

பகுதி ஆ

இரண்டாவது கிறித்தவ சமயப் பரப்பலில் அச்சுப்பொறி என்ற அரிய சாதனம் முக்கியப் பங்கு வகித்தன. அச்சுப்பொறியின் விளைவாகத் தங்கள் சமயம் சார்ந்த கருத்துக்களைத் துண்டுப் பிரசுரங்கள், உரைநடைப் புத்தகங்கள் வாயிலாக எல்லோரிடமும் கொண்டு சேர்த்தனர். சுதேசிகள் அச்சியந்திரத்தைப் பயன்படுத்தாதிருக்க 1834 வரை தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தனர். 1835களுக்குப் பிறகே சுதேசிகள் பயன்படுத்த உரிமை வழங்கப்பட்டது. கிறித்தவத்தைப் பரப்ப அமைப்புகளையும் ஏற்படுத்தினர். 1835 இல் உரிமை வழங்கிய பிறகு கிறித்தவர்கள் கையாண்ட அதேமுறையில் துண்டுப் பிரசுரங்கள், உரைநடை ஆக்கங்கள் கொண்டு இந்து சமயத்தினரும் தங்களை மதக்காப்பாளர் களாக உருவாக்கிக் கொண்டார்கள்.

"19ஆம் நூற்றாண்டில் மதப்பரப்பலுக்கு கிறித்தவ டிராக் சொசைடிகள் பல இருந்தன. இதுபோன்று இந்து சமயத்தினைப் பரப்புரை செய்யவும் பல சொசைடிகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு ஏற்படுத்தப்பட்டதுதான் 'இந்து ரிலிஜியஸ் டிராக் ஸொசைட்டி' யாகும். இந்த டிராக் சொசைட்டியின் கொள் கையைப் பரப்புரை செய்யும் இதழாக ப்ரம்மவித்தியா பத்திரிகை இருந்தது. 1886ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30முதல் இப்பத்திரிகை வெளிவந்தது. கிறித்துவர் களைக் கடுமையாக விமர்சித்து வெளி வந்த இப்பத்திரிகை, அவர்கள் கற்பிக்கும் கல்வியையும் பெண்கள் கல்வி கற்பதையும் மேலும் கிறித்துவர்களின் சமய வணக்கத் தையும் கடுமையாகச் சாடியது. பாதிரிமார் களின் பள்ளிகளில் இந்துக் குழந்தைகள் படிக்கக் கூடாது என்று இவ்விதழ் எழுதியது. அது மட்டுமல்லாமல் ஒடுக்கப் பட்டோர் பலர் கிறித்துவ மதத்திற்கு மாறுவதையும் கடுமையாகச் சாடியது"[6].

மேற்கண்ட குறிப்புகள் பத்தொன் பதாம் நூற்றாண்டில் கிறித்தவர்களுக்குப் பதிலடியாக இந்துக்களின் எதிர் வினையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

பகுதி இ

மூன்றாவது கிறித்தவர்களின் ஆதிக்கம் தொடர்ச்சியாகச் செயல்பட்டு வந்த காரணத்தினால் இங்கிருக்கிற மக்கள் சாதி சடங்காசாரங்களை நீக்கி ஒன்றுபடுதல் வேண்டும். இந்து சமயத்தைத் தக்க வைத்துக் கொள்வதானால் முற்போக்குச் சிந்தனை பேசவேண்டும், சடங்காசாரங் களை நீக்கி விதிகளைத் தளர்த்திக் கொள்வதின் மூலம்தான் பெரும்பான்மை மக்களின் சமயமாக விளங்க முடியும் என்ற அவசியத் தேவை அதற்கு ஏற்பட்டது.

டேராடூனிலிருந்து இந்து சபையின் தலைவர் சொல்வதாகப் பின்வரும் கருத்தைப் பாரதி எடுத்துக்காட்டுகிறார்.

"இந்த மாதம் முதல் தேதி, சென்னைத் தலைமைப் பாதிரி எல்லூரில் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக ஏறக்குறைய முந்நூறு பேரைக் கிறிஸ்துவ மதத்தில் சேர்த்துக்கொண்டார் என்று தெரிகிறது.

இந்த விஷயம் நமது நாட்டில் பல இடங்களில் அடிக்கடி நடந்து வருகிறது. இது ஹிந்து மதத்தில் அபிமானமுடையவர் களுக்கெல்லாம் மிகுந்த வருத்தத்தை விளைவிக்கத் தக்கது. ஹிந்துக்களுடைய ஜனத்தொகை நாளுக்கு நாள் குறைவு பட்டு வருகிறது. பறையர்களுடைய தீண்டாமையை உடனே நீக்கிவிட வேண்டும். காசி, நவத்வீபம், பிருந்தாவனம் என்ற ஸ்தலங்களிலுள்ள பண்டிதர்களும் சங்கரமடத்தார்களும் மற்றுமுள்ள மடாதிபதிகள் முதலியவர்களும் இவ் விஷயமாக உடனே உத்தரவு கொடுக்க வேண்டும். பறையரும், புலையரும், பள்ளரும், சக்கிலியரும் நம்மைப் போல ஹிந்துக்களென்பதையும், விபூதி நாமம் போட்டுக்கொண்டு நமது தெய்வங் களையே வணங்குவோரென் பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்''[7].

''வீரப்ப முதலியார் பேசத் தொடங்கினார். பூணூலை எடுத்துப் போடுங்கள், இந்தியா முழுவதும் ஒரே ஜாதி, ஒரே உடுப்பு, ஒரே ஆசாரம் என்று செய்துவிட வேண்டும். அதுவரை பிராம்மண சபை, அப்ராம்மண சபை, ரெட்டி சபை, வன்னியர் சபை, முதலியார் சபை இந்த இழவெல்லாம் தீராது. ஒரே கூட்டம் என்று பேசு. பூணூலென்ன கீணூலென்ன, வீண் கதை. என்றார் .. ஐரோப்பியர்களைப் போலே நடப்போம். ஜப்பானிலே அப்படித்தான். ஜாதி வித்யாசத்தை முதலாவது நீக்கிவிட்டுத் தான் மறுவேலை பார்க்கத் தொடங்கி னார்கள். ஜப்பானியரைப் போலே இருப்போம்''[8]

என்ற தகவல்கள் வலு சேர்க்கின்றன. மேலும் அவரது கட்டுரைகளில் மூட பக்தி, தர்மம், ஹிந்துக்களின் கூட்டம், ஆசாரத்திருத்த மஹாசபை, நாற்குலம், ஜாதிக் குழப்பம், ஜாதிபேத விநோதங்கள் உள்ளிட்ட பல இடங்களில் மனித வாழ்வுக்குக் சிக்கலானவைகளைப் பேசியுள்ளார்.

சுதேசமித்திரன், இந்தியா, பால பாரதா உள்ளிட்ட இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியதால் பரந்து பட்ட உலகியல் பார்வை அவரிடையே காணப்பட்டது. தனக்கு முன்னர் உருவான சமூக சீர்த்திருத்தவாதிகளையும் அவர் களுடைய நூல்களையும் படித்துள்ளார். தமிழ் மரபில் முற்போக்குச் சிந்தனைகள் பேசிய நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள், வள்ளலார் உள்ளிட்டோரின் கருத்தை முழுமையாக உள்வாங்கி யுள்ளார். அதனைப் பல இடங்களில் மேற்கோளாகவும் (பாரதியார்கட்டுரைகள்) காட்டியுள்ளார். மேலும், விவேகானந்தரின் பெண்சீடர் நிவேதிதா தேவியின் தொடர்பு பெண்ணடிமைத் தனத்தை ஒழித்து முற்போக்குப் பாதையில் பாரதியாரைப் பயணிக்க வைத்தது. பாரதியின் கவிதைகளில் பல இடங்களில் இயல்பாக வந்துவிடுகிறது.

"நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் – இந்த
நாட்டினில் இல்லை, குணம்
நல்ல தாயின்
எந்தக் குலத்தின ரேனும் – உணர்
வின்பம் அடைதல் எளிதெனக்
கண்டோம்.

நன்று புராணங்கள் செய்தார் –
அதில்
நல்ல கவிதை பலபல தந்தார்
கவிதை மிகநல்ல தேனும் – அக்
கதைகள்பொய் யென்று
தெளிவுறக் கண்டோம்
புவிதனில் வாழ்நெறி காட்டி –
நன்மை
போதிக்கும் கட்டுக் கதைகள்
அவைதாம்.
பின்னும் ஸ்மிருதிகள் செய்தார் –
அவை
பேணும் மனிதர் உலகினில்
இல்லை
மன்னும் இயல்பின வல்ல –
இவை
மாறிப் பயிலும் இயல்பின ஆகும்
சூத்திர னுக்கொரு நீதி – தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு
வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் –
அது
சாத்திரம் அன்று சதியென்று
கண்டோம்”[9]

என்று பழைய சாத்திரப் புராணங்களைக் கடிந்து ஒதுக்கியுள்ளார். இதுபோலவே சுதந்திரப் பள்ளுவில்,

“பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே –
வெள்ளைப்
ஏற்பாரைப் பணிகின்ற காலமும்
போச்சே – நம்மை
ஏய்ப்போருக்கு ஏவல் செய்யும்
காலமும் போச்சே”[10].

என்று பாடிச் செல்கிறார்.

பள்ளர் களியாட்டம் எழுதியவைகள் பொதுவுடைமைச் சமுதாயத்தை நிலை நிறுத்துகிறது.

“பறைய ருக்கு மிங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை
.....
ஏழை யென்றும் அடிமை
யென்றும் எவனுமில்லை
ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்ப
திந்தி யாவில் இல்லையே”[11].
–[விடுதலை]

“நாலு குலங்கள் அமைத்தான்
ஈசன் அதனை நாசமுற
பணிந்தனர் மூடர்”12

பாரதிக்கு முன்பாகக் கிறித்தவ மதம் பரவி வருவதைக் கண்டு ஆறுமுகநாவலர் சைவ மதத்தை வளர்க்க அச்சகம், பாடசாலை நிறுவுகிறார். கிறித்தவர்கள் கையாண்ட முறையான துண்டுப்பிரசுரங்கள், வழிபாட்டிடங்கள் ஆகியவைகளை உருவாக்கியுள்ளார்.

கிறித்தவ மதப்பரப்பலை எதிர் கொள்ள வள்ளலாரும் தன் பங்கைச் செலுத்தியுள்ளார். வள்ளலார் குறித்து ம.பொ.சிவஞானம் எழுதிய வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு நூலில் அதற்கான தரவுகளைத் தருகிறார். அவருடைய பாடல்களில் பல இடங்களில்,

“சாதியிலே மதங்களிலே சமய
நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே

கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து
அலைகின்ற உலகீர்
அலைந்து அலைந்து வீணே நீர்
அழிதல் அழகலவே”[13].

முடிவுரை

பாரதியாரின்சிந்தனைகளைஅவருடைய கட்டுரைகள், கவிதைகள், வாழ்க்கை வரலாறு, நண்பர்கள் எழுதிய குறிப்புகள் ஆகியவற்றின் வாயிலாக அறியமுடிகிறது. இவை யாவற்றிலும் முற்போக்குச் சிந்தனை பேசிய மனிதராகவே காணப் படுகிறார். வாழ்க்கை வரலாற்றில் நிறைய குறிப்புகள்காணப்படுவதால்கட்டுரையின் எல்லை கருதி தவிர்க்கப்படுகிறது.

ஐரோப்பிய காலனிய ஆதிக்கத்தின் விளைவாகவே பாரதியிடம்பல மாற்றங்கள் காணமுடிந்தது என்றே துணியலாம். சமூகம்தான் மனிதனை உருவாக்குகிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்

1. பாரதியார் கவிதைகள், உயிர்பெற்ற தமிழர் பாட்டு
2. ராஜ்கௌதமன், கண்மூடி வழக்கம் எலாம் மண்மூடிப்போக, 2012: ப. 13
3. சிவஞானம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 2011: பக். 20 – 21
4. மேலது, பக். 16 –17
5. மேலது, ப. 17
6. இளங்கோ, மநுதர்மத்திற்கு எதிரான முற்போக்குத் தமிழ் மரபு, 2016, ப. 48
7. பாரதியார் கட்டுரைகள்: 1977: பக். 321 – 322
8. பாரதியார் கட்டுரைகள்: 1977: ப. 326
9. பாரதியார் கவிதைகள், உயிர்பெற்ற தமிழர் பாட்டு
10. பாரதியார் கவிதைகள்
11. மேலது
12. மேலது
13. திருவருட்பா 6.108. உறுதி கூறல் –1

துணைநூற்பட்டியல்

1. இளங்கோ சி. 2016. மநுதர்மத்திற்கு எதிரான முற்போக்குத் தமிழ் மரபு, சென்னை: அலைகள் வெளியீட்டகம்.
2. கைலாசபதி, 2009. ஒப்பியல் இலக்கியம், சென்னை: குமரன் புத்தக இல்லம்.
3. சிவஞானம், ம.பொ. 2011. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, சென்னை: பூம்புகார் பிரசுரம்.
4. மனுதர்ம சாஸ்திரம் 2014. திருலோக சீத்தாராம் – தமிழில், சென்னை: அலைகள் வெளியீட்டகம்.
5. பரமசிவன் தொ. 2017. பண்பாட்டு அசைவுகள், நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
6. பாரதியார் கவிதைகள், 2001. சென்னை: தென்றல் நிலையம்.
7. பாரதியார் கட்டுரைகள், 1977. சென்னை: பூம்புகார் பிரசுரம்.
8. ரகுநாதன் தொ.மு.சி. 2008. பாரதி காலமும் கருத்தும், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
9. ராஜ்கௌதமன், 2012. கண்மூடி வழக்கம் எலாம் மண்மூடிப்போக, சென்னை: தமிழினி.

சிற்றிதழ்கள் வழி அறியலாகும் சீரிய இலக்கியம் : கி.ரா.வின் 'கதவு' சிறுகதை

இரா. குமரகுருபரன்

முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்) – முழுநேரம்,
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை – 600015.

ஆய்வுச் சுருக்கம்

கரிசல் நில மக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுவதில் வல்லவரான கி.ராஜ நாராயணன் அவர்கள் தாமரை எனும் சிற்றிதழில் எழுதிய 'கதவு' எனும் சிறுகதையைக் குறித்த ஆய்வாக இக்கட்டுரை அமைந்துள்ளது. இக் கட்டுரையின்கண் அடித்தளத்தட்டு மக்களின் வாழ்க்கையில் நிகழும் அன்றாடப் போராட்டம், சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், வறுமை நிலையில் அவர்கள் இழக்கும் உடைமைகள், மான அவமானங்கள், இயற்கையின் தாக்குதலுக்கு உட்படும் நிலை ஆகியன குறித்து இதில் ஆராயப்பட்டுள்ளன. மேலும் சிறுகதை இலக்கிய உலகில் கி.ரா.அவர்களின் இடம் குறித்தும் விளக்கப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள்

தாமரை, சிற்றிதழ், பஞ்சாயத்து, தீர்வை, லேபிள், டிக்கெட், மணிமுத்தாறு, சடைச்சி, தலையாரி

முன்னுரை

வணிக இதழ்களின் வலிமை சிற்றிதழ் களுக்கு இல்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. இருப்பினும், சிற்றிதழ்கள் நவீனத் தமிழ் இலக்கியங் களையும் கோட்பாடுகளையும் நடுத்தர மக்களுக்கு எடுத்துச் சென்றன. தமிழ்ச் சிற்றிதழ்கள் ஆற்றிக்கொண்டு வரும் பணி மகத்தானது. ஒவ்வொரு இலக்கியக் காலகட்டத்திலும் பேரலையாக எழுந்து அடங்கியது, மீண்டும் தொடர்கிறது.

எழுத்தாளர் கி.ராஜநாராயணன் எழுதி தாமரை சிற்றிதழில் (ஜனவரி 1959) வெளிவந்த 'கதவு' சிறுகதையைப் புதுமைப்பித்தன் கூறும் சிறுகதை இலக்கணத்திற்கேற்ப ஆராய்கிறது.

இலக்கியமும் திரைப்படக் கலையும்

கணினியுகத்தில் வாசிப்புப் பழக்கம் குறைந்ததென்னவோ உண்மைதான். காட்சிப்புல அனுபவத்திற்குச் சம காலத்தில் ஏற்படும் ஈர்ப்பு காரணமாக இளைஞர்கள் கவனம் திருப்பப்படு வதால் மரபுவழியான திரைப்பட வளாகங்களிலிருந்து விலகி, வீட்டில்

அமர்ந்தவாறே நுகரும் 'ஓடிடி' தளத்தில் திரைப்படங்கள் வெளியாகிவருவது நல்லதும் கெட்டதுமான விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது.

இருப்பினும், சிறந்த கதைகளை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப் படும் திரைப்படங்கள் கலைநுணுக்கத்துடன் இணையும்போது பரவசத்தை ஏற்படுத்தத் தவறுவதில்லை.

தமிழிலக்கியத்தின் சிறந்த கதை சொல்லிகளைத் திரையுலகும் கொண் டாடத் தவறியதில்லை. இயக்குநர் மகேந்திரன் புதுமைப் பித்தனின் 'சிற்றன்னை' கதையைத் திரைக்கதை இலக்கியமாக உருப் பெருக்கிக் காட்டினார்.

கரிசல் எழுத்தாளர் கி.ராஜ நாரா யணனை இயக்குநர் தங்கர் பச்சான், மூத்த திரைக் கலைஞர் சிவகுமார் முதலானோர் கொண்டாடினர்.

'சரஸ்வதி' சிற்றிதழ் வளர்த்த எழுத்தாளர்கள் தொ.மு.சி.ரகுநாதன், கு. சின்னப்ப பாரதி, வல்லிக்கண்ணன், டி.செல்வராஜ், ஜெயகாந்தன், க.நா. சுப்பிரமணியன், சுந்தர ராமசாமி ஆகியோரில் ஜெயகாந்தன் ஆனந்த விகடனால் வெகுவாக ஆதரிக்கப்பட்டு உயர்ந்தார்.

கரிசல் கிராமமான மேலாண்மறை நாட்டிலிருந்து தமது மளிகைக் கடைவெளி வழியாக வெகுசன மக்களின் வாழ்க்கைப் பாடுகளை உணர்ந்து "செம்மலர்" மாத இதழுக்குக் கதைகளாக வடித்த மேலாண்மை பொன்னு சாமியைச் செம்மலர் மாத இதழ் ஆசிரியர் குழுவில் இணைத்தவர் 'தாமரை', 'சரஸ்வதி' சிற்றிதழ்களின் ஆசிரியர் குழுவிலிருந்த கே.முத்தையா என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். 'கல்கி' மாத இதழில் மேலாண்மை பொன்னு சாமியின் சிறுகதையான 'சப் -எடிட்டர்' விருது பெற்றது. 'ஆனந்த விகடனில்' முத்திரைக் கதைகளைப் பதித்தார்.

தொன்மம் - குலசாமி குறித்து விவாதங்களில் ஈடுபட்டார். அவரிட மிருந்து மாறுபட்ட வேறு இலக்கியப் பாணியைக் கைக்கொண்டிருந்த எழுத்தாளர் சிவசங்கரி முதலானோர் மேலாண்மை பொன்னுசாமியின் படைப் புலகக் கருத்தரங்கத்தில் அமர்ந்து உரையாற்றினர். மேலாண்மை பொன்னுசாமியின் மறை விற்குச் சிறிது காலம் முன்னர் இந்நிகழ்ச்சி சென்னை ஆழ்வார் பேட்டையில் நடைபெற்றது.

பெருஞ்சிறப்பு மிக்க படைப்பாளிகள் கி.ரா., ஜெயகாந்தன், எஸ்.ராமகிருஷ்ணன் முதலானோர் எழுதத் தொடங்கியது சிற்றிதழ்களில்தான் என்பதையும், வணிக இதழ்களின் ஆசிரியர் குழுவிலிருந்த சீரிய இலக்கியவாதிகளின் முன்னெடுப்பினால் இவர்கள் மேன்மேலும் வளர்த்தெடுக்கப் பட்டனர் என்பதையும் மறக்கலாகாது.

சிற்றிதழ்களிலும் கலை கலைக்காக, கலை மக்களுக்காக என்று இரு முகாம்கள் பிரிந்து மோதிக் கொண்டன.

க. நா.சுப்பிரமணியன், வெங்கட் சாமிநாதன், ஞானக்கூத்தன் முதலானோர்

முதல் பிரிவினர்; தொ.மு.சி. ரகுநாதன், விஜயபாஸ்கரன், டி.செல்வராஜ், சின்னப்ப பாரதி முதலானோர் பிந்தைய பிரிவில் இடம் பெற்றனர்.

கரிசல் எழுத்தாளர் கி.ராஜநாராயணன் எழுதிய சிறுகதைகளைச் சரஸ்வதி, தாமரை, சாந்தி, தீபம், கண்ணதாசன், ஞானரதம், கசடதபற, கணையாழி, மன ஓசை, கதைசொல்லி ஆகிய சிற்றிதழ்கள் முதலில் வெளியிட்டன. ஆனந்த விகடன், கல்கி, குமுதம், தினமணி கதிர், இந்தியா டுடே முதலான வணிக இதழ்களும் பின்னர் அவரது படைப்புக்களை விரும்பி வாங்கி வெளியிட்டனர்.

கதவு - சிறாரையும் பெரியோரையும் ஈர்த்த கதை:

'கதவு' (தாமரை, ஜனவரி 1959) சிறுகதையானது, 'குழந்தைகளை வேகமாக ஆடி மகிழ்வித்த' பாரமான பெரிய கதவு குறித்தது. முன்பு வசதி உள்ளவர்களாக இருந்து நொடித்துப் போன குடும்பம் பற்றிய கதை. வீட்டுத் தலைவர் பஞ்சம் பிழைக்க, கூலிவேலை செய்ய, மணிமுத்தாறு போய் விட்டார். அம்மா காட்டுவேலை செய்துவிட்டு வரும் வரையிலும் எட்டு வயதுச் சிறுமி லட்சுமியும் அவள் தம்பி சீனிவாசனும் கடைக்குட்டிக் கைக்குழந்தையைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்துக்குத் தீர்வை கட்ட இயலாது போனதால் தலையாரி ரங்கம்மாளின் வீட்டுக் கதவைப் பெயர்த் தெடுத்துச் செல்கிறார்.

தீப்பெட்டிப் படங்களைக் கதவில் கம்பங்கஞ்சியால் ஒட்டி, அவற்றைக் கண்டு மகிழ்ந்த குழந்தைகளின் கதை இது. கற்பனைப் பேருந்தாய் திருநெல்வேலிக்கு ஏற்றிச் சென்று மகிழ்வித்த பெருங்கதவின் கதை. சாவடியில் கறையான் அரிக்க அநாதரவாக நிற்கும் நிலையில் கதவு என்ற அஃறிணைப் பாத்திரமும் குழந்தைகள் கொஞ்சி மகிழும் நிலையிலான தருணத்தைப் படம் பிடிக்கிறது 'கதவு' கதை.

பஞ்சம் பிழைக்க குடும்பத் தலைவர் மணிமுத்தாறு கூலிவேலைக்குச் செல் கிறார். காட்டில் சுள்ளி பொறுக்கும் போது தேள் கொட்டியதைக் கூட பொருட்படுத்தாது வீட்டில் தனியே விடப்பட்ட குழந்தைகளைப் பார்க்க வீடு அடையும் குடும்பத் தலைவி ரங்கம்மாளுக்கு ஒரே அதிர்ச்சி. வீட்டில் கதவு பிடுங்கப்பட்டு வீடே நிர்வாணமாக நிற்கிறது. கார்த்திகை மாச வாடைக்காற்று தாங்காமல் கதவு அற்ற வீட்டுக் கைக் குழந்தை இறந்து விடுகிறது.

குழந்தைமைக் களிப்புகள்

வீட்டுப் பெருங்கதவு குழந்தைகள் பேருந்தாக அமைந்து விளையாட்டுக்கு உதவுகிறது. குழந்தைகள் கற்பனை யாகவே டிக்கெட்டைக் கிழித்துக் கொடுக் கின்றனர். வீதி நாடகக் கூறுகள் இதில் இடம்பெறுகின்றன. பின்னாளில் கி.ரா.வின் சொந்த ஊரான இடை செவலில் வீதிநாடகங்களை நிகழ்த்தச் சென்ற கோவில்பட்டி சிருஷ்டி நாடகக் குழுவினர், அதிகம் படிக்காத பாமர மக்கள்

தங்களின் வீதி நாடகங்களைப் பாமர மக்கள் உணரமுடியுமா என்ற கேள்வி யுடனே சென்றபோது, அபிநயங்கள் மூலமாக கலைஞர்கள் பாவனையாக உணர்த்தியதை முழுமையாக இரசித்தனர் என்று கூறியதை இங்கு நினைவுகூரலாம். அந்த அளவிற்குக் கி.ரா. கரிசல் இலக்கியத்தின் 'முன்னத்தி ஏர்' என்ற பெருமையைப் பெற்றார்.

தங்களுக்குப் பிரியமான கதவு தலையாரி மற்றும் நால்வர் சகிதம் பெயர்த்தெடுக்கப்பட்டுத் தலையில் வைத்துக் கொண்டு செல்வதை, ஊர்வலம் என்று நினைத்து ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பவனைப்போல கைகளை வைத்துக் கொண்டு "பீப்பீ.. நீ நீ என்று சத்தம் காட்டி விரல்களை நீட்டிக் கொண்டு, உடலைப் பின்வளைத்துத் துடைகளின்மேல் ஓங்கி அடிப்பதாக பாவனை செய்து திடும் 'திடும் தடிக்குண தடிக்குண' என்று தவில் வாசிப்பவனைப் போல் முழங்கினான்.(1) என்பதாக கி.ரா. எழுதுகிறார்.

தீப்பெட்டி படச் சேகரிப்பு

தீப்பெட்டிப் படங்கள் சேர்த்தல் என்பது, அஞ்சல் தலை சேகரிப்பு போன்ற கரிசல் பகுதி சிறார்களின் பொழுது போக்குகளில் ஒன்று ஆகும்.

தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் தீக்குச்சி அடுக்குதல், தீப்பெட்டிக்குள் மருந்து தோய்த்து உலர்ந்த தீக்குச்சிகளை நிரப்புதல், தீப்பெட்டிக்குப் பசை ஒட்டுதல், அதன் மேல் லேபிள் ஒட்டுதல் என்பதாகப் பலவகைப்படும்.

'லேபிள்' என்பதுதான் எந்தத் தொழிற்சாலையின் தீப்பெட்டி என்பதை அறிவிக்கும். எடுத்துக்காட்டாக, வெட்டும் புலி, தங்க யானை, ரோஜா, இரட்டைக் குயில் முதலானவற்றைக் குறிப்பிடலாம். இந்த 'லேபிள்' தான் தீப்பெட்டிப் படம் என்று கதையில் இடம் பெறுகிறது.

தீர்வை பாக்கி எச்சரிக்கை

குடும்பத்தலைவர் வெளியூருக்குப் பிழைப்புக்காகச் சென்ற சமயம் தீர்வை எச்சரிக்கை தெரிவிக்கப் படுகின்றது.

மறுநாள் தலையாரி, லட்சுமியின் அம்மா இருக்கும்போதே வந்து தீர்வைப் பாக்கியைக் கேட்டான்.

"ஐயா, 'அவரு ஊரிலே இல்லை. மணிமுத்தாறு போயி அஞ்சி மாசமாச்சி. ஒரு தகவலையும் காணோம். மூணு வருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்தை வச்சு உங்களுக்கு தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய் கூலிவேலை செய்து இந்த கொளந்தைகளைக் காப்பாத் தறதே பெரிய காரியம்; உங்களுக்குத் தெரியாததா?' என்றாள்.

இந்த வார்த்தைகள் தலையாரியின் மனசைத் தொடவில்லை; இந்த மாதிரி யான வசனங்களைப் பலர் சொல்லக் கேட்டவன் அவன்.

"நாங்கள் என்ன செய்ய முடியும்மா இதுக்கு; இந்த வருசம் எப்படியாவது கண்டிப்பா தீர்வை போட்டறணும். அப்புறம் எங்க மேலே சடைச்சிப் புண்ணியம் இல்லை' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்" (2)

என்று வருமிடம் உணர்ச்சிபூர்வமான உரையாடல் நிகழுமிடம். இவ்விடத்தில், கி.ரா.வின் கரிசல் பிரதேச எழுத்தாளர் கோணங்கி தனது கூட்டுறவுத்துறை அரசுப் பணியைத் துறந்ததற்குக் காரணம் தீர்வை கட்ட முடியாது ஜப்தியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளின் அவலம் உணர்ந்து தான் என்பதை சிருஷ்டி நாடகக் குழு வினரில் இடம்பெற்ற சககலைஞரும் எழுத்தாளருமான இரா. நாறும்பூநாதன் நினைவு கூர்ந்துள்ளார்.

உலகமயமாக்கலும் விழுமியங்களும்

உழைப்புச்சுரண்டலின் முன்னோட்டம் இருபதாம் நூற்றாண்டின் ஐம்பது களிலேயே தொடங்கிவிட்டதைக் கதவு உணர்த்துகிறது. கொத்தடிமைகளாக்கப் பட்டுக் கண்காணாத தேசங்களில் அவலப் பிழைப்பு நடத்துவது அன்றைய நிலை

உலகமயமாக்கல் காலகட்டத்தில் தனியார் வங்கிகளும் தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளும் மனிதாபிமானமற்ற கூலிப்படை ஏஜன்சிகள் வழியாக மேற்கொள்ளும் வன்முறைக்காட்சிகள், அவமானம் தாங்காத விவசாயிகளின் தற்கொலை செய்து கொள்கின்றனர். கோடிக்கணக்கில் வங்கியில் வாங்கிய கடனைச் செலுத்தாமல் ஏப்பமிட்ட பண முதலைகள் வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை நடத்துகின்றனர் என்பதும் கண்கூடு.

புதுமைப்பித்தனின் சிறுகதை இலக்கணம்

"மணிக்கொடி" (27.10.1935) இதழில் புதுமைப்பித்தன் சிறுகதை இலக்கணம் குறித்து எழுதுகிறார்:

"சிறுகதையின் ஜீவநாடி ஒன்று. அதில் எடுத்தாளப்படும் சம்பவம் அல்லது நிகழ்ச்சி தனிப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும்.

சிறுகதையின் ரூபம் கதை எழுது பவனின் மனோதர்மத்தைப் பொறுத்தது.

சிறுகதை என்றால் அளவில் சிறியதாக இருப்பது என்பதல்ல. எடுத்தாளப்படும் சம்பவம் தனி நிகழ்ச்சியாக இருக்க வேண்டும்.

முழுமையான நாவலைப் போலன்றி, சிறுகதை வாழ்க்கையின் ஒரு பகுதியை மற்றவற்றின் கலப்பை மறந்து, விட்டு விட்டுக் கவனிக்கிறது.

சிறுகதை வாழ்க்கையின் சாளரம்.

கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல். கதை முடியும் பொழுது அதைப் பற்றிய சிந்தனை முடிவடைந்து விடாது. இப்படிப்பட்ட கதைகள் முடிந்த பிறகுதான் ஆரம்பமா கின்றன." (3)

குழந்தைகள் பாசத்துடன் விளையாண்ட வீட்டுக்கதவு தீர்வை கட்டாததால் பெயர்த்தெடுத்துச் செல்லப்படுகிறது. இக்கதையின் ஜீவநாடி குழந்தைப் பருவ ஏக்கம்.

கி.ரா.வின் உருவக் கோட்பாடு உள்ளடக்கத்துடன் கச்சிதமாகப் பொருந்திப் போகிறது. கதவு பெயர்க்கப் படுவது தனி நிகழ்ச்சியாக அமைகிறது.

ரங்கம்மாளின் கணவன் மணிமுத்தாறு கூலிவேலைக்குச் சென்று ஐந்து மாதங்களாகியும் ஒரு தகவலும் இல்லை என்பதாக தலையாரியுடனான உரையாடலில் செய்தி கிடைக்கிறது. 'மூணு வருசமா மழை தண்ணி இல்லை' என்பதிலிருந்து பஞ்சகால நிலை குறித்து நாவலில் விரிவாக எழுத இயலும். ஆனாலும் அதைச் சுருக்கிவிட்டு, குழந்தைமைக்கு மட்டுமே சிறப்பு அளிக்கும் வகையில் சிறுகதையைச் செதுக்குகிறார் கி.ரா.

சிறுகதைச் சாளரத்திலிருந்து கிராமப் புற வாழ்வியலை உற்று நோக்குகிறார்.

வாழ்ந்துகெட்ட குடும்பத்தின் மிச்ச சொச்சங்களின் குறியீடுதான் 'கதவு'! 'இழப்பதற்கு இன்னும் ஏதுமில்லை; மாறாகப் பொன்னுலகம்' என்ற மார்க்சிய சித்தாந்தத்தின் வழி பயணப் பட்ட கி.ரா. யதார்த்தவாதப் படைப் பாகவே இச்சிறுகதையை எழுதியிருக்கிறார். சோஷலிச எதார்த்தவாதத்திற்கு இன்னும் இட்டுச்செல்லவில்லை. ஆனால் அதை நோக்கிப் பயணப்படத் தூண்டுதலாக, கதை அமைகிறது.

பஞ்சம் பிழைக்க மணிமுத்தாறு போன ரங்கம்மாளின் கணவன் கதி என்ன? கூலிவேலை வாழ்க்கையின் ஐந்து மாதச் சம்பாதிப்பு எங்கே சென்றது? இடைத் தரகர்களுக்குப் போயிருக்கலாம். சாவடியில் சாத்திவைக்கப்பட்டதைக் கண்ட குழந்தைகள் புளகாங்கிதத்தில் கதை முடிந்தாலும் கதவு திரும்பக் கிடைக்குமா? என்று கேள்விகள் எழுகின்றன.

கதவு கரையான் அடித்துப் பாழாய்ப் போனாலும் பரவாயில்லை; தீர்வைக்குப் பழிவாங்கியதாகவே போகட்டும் என்பதாக ஊராட்சி அதிகார மையம் விளங்குகிறது.

தாது வருடப் பஞ்சத்திலான இடப் பெயர்வு குறித்து வரலாற்றறிஞர் கே.கே. பிள்ளை விளக்குகிறார்:

பஞ்சத்தினாலும் ஏழ்மையினாலும் வாடிய தமிழர் ஆயிரக்கணக்கில் தென் னாப்பிரிக்க நாடுகளுக்கும் இலங்கை பிஜி முதலான கிழக்கிந்திய தீவுகளுக்கும் தொழில் செய்து பிழைக்கச் சென்றார்கள்.

அந்நாடுகளில் தேயிலை காப்பி இரப்பர் தோட்டங்களிலும் சுரங்கங் களிலும் இவர்கள் கூலிகளாகச் சேர்ந்தனர்.

கூலிகளாகச் சேர்ந்த தமிழருக்கு பொன்னும் பொருளும் பூமியும் கிடைக்குமென்றும், அவர்கள் குறுகிய காலத்தில் பெரிய செல்வந்தர்களாகி விடலாம் என்றும் தரகர்கள் இச்சை காட்டி அவர்களை ஏமாற்றினார்கள். *(பக்.505, 506)*[4]

இதுவே, ரங்கம்மாளின் கணவனுக்கும் நிகழ்ந்திருக்குமா என்றும் நம்மை யோசிக்க வைக்கிறது.

> திரும்பத் திரும்ப வரும் பிம்பங்களை அல்லது படிமங்களைக் கவனியுங்கள். கதையில் ஆசிரியர் அறிமுகப்படுத்தும் திரும்பத் திரும்ப வரும் படிமப் பாணிகள் கதை வளர்ச்சிக்கோ, கதையின் அர்த்தத் திற்கோ, கதாபாத்திரத்தின் வளர்ச்சிக்கோ பயன்படுவதாக இருக்கக்கூடும். (ப.157)[5]

என்று தமது 'கதையியல்' நூலில் க.பூரணச்சந்திரன் கதையின் அணிசார் அம்சங்கள் பகுதியில் கூறுவது 'கதவுக்கும்' பொருந்தும். ஏனென்றால் கதையின் தொடக்கத்தில் கதவும் 'பொங்கிப் பூரித்துப் போய் இருக்கும் அக்குழந்தை களை வேகமாக ஆடி மகிழ்வித்தது' என்பதில் குறியீடாக வருகிறது.

முடிவுரை

கரிசல் இலக்கியப் பிதாமகர் கி.ராஜநாராயணன் எழுதி தாமரை சிற்றிதழில் (ஜனவரி 1959) வெளியாகிய 'கதவு' சிறுகதையானது எவ்வாறு புதுமைப்பித்தன் கூறிய சிறுகதை இலக்கணத்தில் பொருந்திப் போகிறது என்பதையும், இக்கதை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம் குறித்தும், கி.ரா.வின் கச்சிதமான நடை, குறியீடு உத்தி, யதார்த்த பாணி எழுத்து ஆகியன குறித்து அறிந்து கொள்ளப்பட்டது.

அடிக்குறிப்புகள்

(1) கி.ராஜநாராயணன் கதைகள், ப.18,

(2) மேலது, பக். 17 – 18.

(3) புதுமைப்பித்தன் கட்டுரைகள், பதிப்பா சிரியர், ஆ. இரா.வேங்கடாசலபதி, ப. 143,

(4) தமிழக வரலாறு: மக்களும் பண்பாடும், டாக்டர் கே.கே.பிள்ளை, பக். 505 – 506.

(5) கதையியல், க.பூர்ணச்சந்திரன், ப.157.

துணை நூற்பட்டியல்

1) கி.ராஜநாராயணன் கதைகள், அன்னம், தஞ்சாவூர் – 613 007.

2) கே.கே.பிள்ளை, 2016, தமிழக வரலாறு: மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை–600113.

3) புதுமைப்பித்தன் கட்டுரைகள், 2002, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்

4) பூரணச்சந்திரன். க, கதையியல், 2019, அடையாளம், புத்தாநத்தம் – 621310.

தாராபாரதி கவிதைகளில் பெண் சிந்தனை

முனைவர் த. கெஜலட்சுமி

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
துவாரகதாஸ் கோவர்த்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)
அரும்பாக்கம், சென்னை – 600 106.

ஆய்வுச்சுருக்கம்

கவிஞாயிறு தாராபாரதி கவிதைகளில் இடம்பெற்றுள்ள பெண்கள் குறித்த சிந்தனைகள் தொகுத்தும் வகுத்தும் ஆராயப்பட்டுள்ளன. தாராபாரதியின் கவிதைகளில் கூறப்பட்டுள்ள பெண் கல்வியின் தேவை, பெண்களின் தாய்மை உணர்வு நிலை, பெண்களின் திருமண நிகழ்வு, வாழ்வு போன்றவற்றில் உண்டாகும் நடைமுறை சிக்கல்கள், சமுகத்தால் ஒதுக்கப்படும் முதிர்கண்ணிகள், விதவை இவர்களின் மன உணர்வு, அவற்றிற்கு தீர்வு காணும் போக்கு ஆகியன கவிஞாயிறு கவிதை வாயிலாக விளக்கப்படுகிறது. நவீனகாலப் பெண் களின் மாண்பும், அவர்களின் தெளிந்த அறிவும் இங்கு ஆராயப் படுகிறது. சமூகத்தில் பெண்களின் நிலைமாற வேண்டும் என்ற கவிஞாயிறு தாரா பாரதியின் சிந்தனையை வெளிக் கொணர முயற்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

திறவுச்சொற்கள்

தாராபாரதி கவிதைகள், எண்ணிறிவில், சாதத்தைப் பதம்பார்த்து, ஏந்திழையார், ஈன்றெடுக்க வெண் புறாக்கள், கண்மணிகள், கணிச்சீர், தரகர், புறப்படு தோழனே, தண்ணீர் மீனின் தாய் வீடு.

முன்னுரை

தற்காத்துத் தற்கொண்டாள்
பேதைத் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்”

எனத் தெய்வப்புலவர் பெண்ணின் இலக்கணத்தைத் தம் தெய்வக் குறளில் பதித்துள்ளார். ஒரு குடும்பத்தின் ஆணி வேராகத் திகழ்வதும், அக் குடும்பத்தின் நலனைப் போற்றிக் காப்பதும் பெண்களே ஆகும். இந்திய விடுதலை போராட்டத் திற்குப் பாடுபட்ட மகாத்மா பாரதி, பாரதிதாசன், பெரியார், காமராஜ், அண்ணா போன்றோர் பெண் கல்விக்கும் பெண்ணுரிமைக்கும் பாடுபட்டு சமுதா யத்தில் அவர்களுக்கு ஒரு உயர்ந்த நிலையை உருவாக்கிக் கொடுத்தனர்.

கு.ப.ரா. புதுமைப்பித்தன், தி.ஜானகி ராமன், ஜெயகாந்தன், தாராபாரதி போன்றோர் பெண்ணியத்தின் சிக்கல் களை, கவலைகளைக் கருவாகக் கொண்டு நாவல், சிறுகதை, புதுக்கவிதை, எழுதிப் பெண்ணியம் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர் இதனால் பெண்ணியச் சிந்தனைகள் வளர்ச்சிப்பெற்றன. இச் சிந்தனையின் தாக்கத்தால் இன்று பெண் கல்வி வளர்ச்சி பெற்று அனைத்துத் துறை களிலும் பெண்கள் சிறந்து விளங்கு வதுடன் உயர்பதவிகளில் ஆணுக்கு நிகராகச் சமநிலையில் இருக்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆணும் பெண்ணும் இயற்கையின் படைப்பில் சமஉரிமை உடையவர்கள் என்ற உயரிய சிந்தனையோடு பெண் மையைப் போற்றும் கவிஞர் தாராபாரதி கவிதைகளில் பெண்ணியம் பற்றிய புதிய கருத்துக்களை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்கல்வி

இறைவனின் படைப்பில் அரியது ஒன்று உண்டென்றால் அது பெண்தான் என்பார் அண்ணல் காந்தியடிகள் "ஓர் ஆணுக்குக் கல்வி அளிப்பது குடும்பத்தில் ஒருவருக்குக் கல்வி அளிப்பதாகும். ஆனால், ஒரு பெண்ணுக்குக் கல்வி அளிப்பது அந்தக் குடும்பத்திற்கே கல்வி அளிப்பது போலாகும்"(1) என்பது பண்டித நேரு அவர்களின் கூற்றாகும். "பெண் கல்வி கற்ற நாடே ஒரு முன்னேற்றம் அடைந்த நல்ல நாடாகும்" என்பார் டாக்டர் மு.வரதராசனார். பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி பேணி வளர்த்திடும் ஈசன் என்ற பாரதியின் வைர வரிகளை அடியொற்றி தாராபாரதியும்,

"எண்ணறிவில், எழுத்தறிவில் முன்வரிசை பெண்வரிசை

நுண்ணறிவில் நூலறிவில் ஆண்களுக்கு நிகர்வரிசை (2)

என்கிறார், பெண்கள் கல்வி அறிவிலும் ஆண்களுக்குச் சரி நிகரானவர்கள். முன் வரிசையில் உணர வேண்டும் என்கிறார். மேலும்,

"மூலை சுவரில் மூக்கைச் சிந்தி
முடங்கிக் கிடந்தது போதும் உனது
மூளைப் புலத்தில் புதிதாய்ச்
சிந்தி"[3]

என்று பெண்களைப் பார்த்து நீ மூலையில் முடங்கிக்கிடக்காமல் கல்வியைக் கற்றுச் சிந்தனையை வளர்த்து மூடநம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து புதிய எழுச்சி மிக்கச் சிந்தனையுடன் உலகமே உன்னை நோக்குமாறு கல்வியில் முன்னேறு என்று பெண்களைத் தட்டி எழுப்புகிறார்.

உயர்ந்தோருக்கு மட்டுமே உரியது என்றும், பெண்கள் சொன்னாலே பாவம் என்றும் தடைப்படுத்தி அச்சுறுத்தி வைத்திருத்த வேதங்களால் பெண்களும் ஓதலாம் என்ற சிந்தனையைத் தாராபாரதி தன் கவிதைகளில் வடித்துக் காட்டுகிறார்.

"சாதத்தைப்பதம் பார்த்து
சமைகின்ற கைவிரல்கள்
வேதத்தைப் பதம்பிரித்து
விரிவுரைகள் எழுதவரும்" [4]

இச்சிந்தனையைப் பாரதியின் முழுமையான தாக்கம் என்பதினை,

'வேதம் படைக்கவும் நீதிகள்
செய்யவும்
வேண்டி வந்தோ மென்று
கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோம்
– தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்' [5]

இக்கவிதை வரி வாயிலாக உணர முடிகிறது. இவரின் சிந்தனை ஓட்டத்தால் இன்றைய காலகட்டத்தில் சிவ ஆலயங்களில் பெண் ஓதுவார்களை நியமனம் செய்து ஆண்டவன் திருப்பணி செய்வதை நம் கண்களால் காணுகிறேன். தாராபாரதி சிந்தனை மெய்ப்பிக்கப்பட்டு விட்டது எனலாம். தாராபாரதி சிந்தனை மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது எனலாம்.

ஒரு குடும்பத்தின் அமைதி, மகிழ்ச்சி, நல்ல வாழ்வு போன்றவற்றிற்கு ஒரு பெண் மிகவும் பொறுப்பானவள். தாயாக இருந்து தான் பெற்ற மக்களை நன்கு பேணி வளர்ப்பதில் முதல் கடமையாற்று கிறாள். வருங்காலச் சந்ததியை உருவாக்கும் அவள் கல்வியைக் கற்று உய்ய வேண்டும் என்பதினை,

'அரிச்சு வழக்கும் பெண்கள், அரிச் சுவடிக்குக் கண்கள்' என்ற கவிதை உணர்த்துகிறது குடும்பம் மட்டுமின்றி உலகத்தையே வழிநடத்தும் திறனும். ஆன்மிக வழிபாட்டில் மட்டுமின்றி அறிவியலிலும் சாதனைப் படைப்பவளாக வளம் வரவேண்டும். இதனை "அரிசி உலை இறக்குக் கை, அணு உலையைத் திறக்கும் கை" என்கிறார்.[6]

பெண்களின் சிறப்பியல்புகள்

பெண்கள் பிறருக்கு உதவும் மனமுடையவர்கள் தாய்மை குணம் கொண்டவர்கள்,

"குங்குமம் நெற்றிலேந்தி,
கொண்டவனைக் – கழுத்தேந்தி
தந்த மழலைகளைத்
தாழ்மையுடன் – வயிறேந்தி
கொண்டு தந்த குடும்ப
விளக்கைக் கையிலேந்தி
தொண்டுகளைத் தோளேந்தித்
தூய அன்னை
நெஞ்சேந்தி இத்தனையும்
ஏந்தியதால்
ஏந்திழையார் பெயரேந்தி
அத்தனைக்கும்
புகழேந்தி வாழுகிற
அரிவையினம்" [7]

என்னும் கவிதைமூலம் பெண்களின் தியாக உள்ளத்தை, அன்பின் நிலைப் பாட்டை இவ்வுலகிற்கு உணர்த்துகிறார் கவிஞாயிறு.

பெண்கள் மிகவும் உயர்வானவர்கள் என்பதினை,

'இரையெடுக்க ஆண் வயிறு
ஈன்றெடுக்கப் பெண் வயிறு
தரையெடுத்த வாழ்க்கையிலே
தாய் வயிறு பொன் வயிறு' [8]

என்பதில் விளக்குகிறார். பெண்கள் மென்மையானவர்; மென்மைத் தன்மையானாலும் சமூகச் சீர்கேடுகளைக் களைவதில் முதன்மையவர் என்கிறார்.

"மையலுக்கு மட்டுமல்ல சமுதாய
கிழிசல்களில்
தையல்கள் போடுகிற
'தையல்கள்' பெண்மணிகள்"

இப்படிப்பட்ட பெண்கள் மனித நேயத்தின் சமாதனத்தின் அடிச்சுவடு களாக உள்ளனர்.

"பூசல்களை நீக்கிப்
போர்க்குரலுக்கோய்வு தந்து
நேசமனங்களையே நெசவு
செய்யும் வெண் புறாக்கள்"[9]

என்றும் வீரம், அன்பு, நேசம் இவற்றின் பிறப்பிடமாக திகழ்க்கிறார்கள் பெண்கள் என்று தம் கவிதைகளில் ஆணித் தரமாக குறிப்பிடுகிறார் கவிஞாயிறு. மேலும் கவிஞர் பெண்களே "கண்ணை இமை காப்பது போல" நம்மைக் காக்கும் கண்மணிகள் என்கிறார்.

"பால்கொடுத்துப் பறவைகள்
நாம்பறக்கக் கற்பித்துக்
கால்கொடுத்துச் சிறகளித்துக்
காத்து வரும்"[10] **– கண்மணிகள்**

என்பதில் பறவைகள் தம் சிறகில் குஞ்சுகளை அணைத்துக் காத்து வருவது போல நம்மை காத்துவரும் கண்மணிகள் பெண்கள் என்கிறார். வேதாத்திரி மகரிஷி அவர்களும்,

"பெண் வயிற்றிலுருவாகிப் பெண் பாலுண்டே வளர்ந்தோம்.

பெண் துணையால்
வாழ்கின்றாய்"[11]
பெண்ணின் பெருமையுணர்
– (ஞா.ச.புசே)

என்று பெண்ணினத்தின் பெருமையை விளக்கியுள்ளார்.

இக்கருத்தினை மாறிவரும் சமுதா யத்தில் மகளிர் என்ற கவிதையில் பூங்கோதை அவர்கள்,

"பெண்ணின் உருவமாய்
திகழ்வாய், பெண்ணின் ஆன்மா"

என்ற வரிகளால் விளக்கியுள்ளார்.

பெண்களும் சமூகப் பார்வைகளும்

சமூக நிலையில் பெண்களுக்கு உடல் ரிதியாகவும் மனரீதியாகவும் அவமானங்கள் இழையோடிய நிலையிலுள்ளது. இதில் பெரும்பாலும் பெண்களின் திருமண நிலைப்பாட்டைக் சார்ந்தாக உள்ளது.

வரதட்சணை பெண்களுக்கு ஏற்படு கின்ற வன்கொடுமைகளில் இதுவும் ஒன்று. ஆண்களின் பேராசை பெண் மைக்கு இழைக்கும் கொடுமையின் விளைவு. இந்த வரதட்சணை இந்த சமுதாய கேடினால் பல பெண்களின் வாழ்வு கேள்வி குறியாக. முதிர்க் கன்னி யாக, வாழாவெட்டிகளாக இருப்பதைக் காண முடிகிறது. இந்நிலை இன்றும் சமூகத்தில் நிழலாடுவதை தாராபாரதி தம் படைப்புகளில் பதிய வைக்க மறக்க வில்லை.

"கனிச்சீர் ஆவதெந்நாள்"(12) என்ற தலைப்பில், தங்கைக் கொடிமரத்தில், தாலிக் கொடியேற, கங்கணம் வரதட் சணைக் கயிறும் தர வேண்டுமாம் என்று வரதட்சணை வாங்குவதை வெளிப் படையாக மொழிகிறார்.

"தரகர் ஒருவர் தான் பெண்
பார்க்கிறார் – பிறர்
தாம்பூலத் தட்டில் தான் கண்
வைக்கிறார்" [13]

என்ற வரிகளில் தன் வீட்டிற்கு வாழ வரும் பெண்களை பற்றி எண்ணாமல் அவள் கொண்டு வரும் பணத்தையே குறியாக கொள்ளும் சமூக நிலையை கூறுகிறார்.

இன்றைய திருமணச் சந்தையில் மணமகனுக்குப் பொன்மாலையும் தங்கமும் வைரச் சுரங்கங்களும் வெள்ளித் தட்டுகளில் தர வேண்டும்[14] என்று புனிதமான திருமணம் வணிகநிலைக்குத் தள்ளப்பட்ட நிலையினைப் பறை சாற்றுகிறார்.

வரதட்சணையின் கொடூரம்
உச்சத்தைத் தொடுகின்ற
நிலையில்
தந்தை சொத்தை விற்றுத்தான்
தாலி பெற முடிகிறது?
சந்தைத் தரகில் தானே சாந்தியே
நடக்கிறது. [15]

மேலும் "தாய்வீட்டை விற்றுத்தான் தாயாக முடிகிறது"[16] என்ற கவிதை வரிகளில் பெற்றோரின் நிலையையும் பெண்கள்களின் அவலமும் வரதட்சனை பெறுபவர் அவலகேடும் பேசப்படுகிறது.

"சக்கர வர்த்திகள்
மாப்பிள்ளைகள் வெறும்
சிற்றரசர் பெண்ணைப்
பெற்றவர்கள்"

என்ற வரி நேரடியாக பெற்றோர் நிலை விளக்கப்படுகிறது. பெண்ணைப் பெற்றோர் சிற்றரசர் போல மாப்பிள்ளை வீட்டாருக்கு "கப்பம்"[17] கட்டும் நிலையை விளக்குகிறார். இத்தகைய மாப்பிள்ளை வீட்டாரின் செருக்குச் சமுதாய சிக்கல்களையும் பெண்ணின் வாழ்வையும் மிகவும் சீர்குலையும் என்று மேத்தா மு. அவர்கள் சாடுகிறார்.

விதவை அவலநிலை

இளம் விதவைக்கு மறுமணம் தேவை அவர்களின் மனநிலையை இச்சமூகம் புரிந்துக் கொள்ளாமல் இருக்கிறது. "காலையிலே பூத்தமலர் மாலையிலே உதிர்ந்திங்கு காம்போடு வாடிக் கிடக்குது. ஒருகை சேரத் தேடித் துடித்து[18] என்றும், வழுவமைதி என்ற தலைப்பில் விதவைகளுக்கு இழைக்கப்படும் கொடுமையிலிருந்து விடுதலை அளிக்கப்பட வேண்டும் என்பதனை வண்ண ஆடைகள் அணிந்துக் கொள்ள உரிமை. பூக்கள் சூடிக்கொள்ள அனுமதி, புதிய வாழ்வை தேடிக் கொள்ள உரிமையும் கொடுக்கப்பட வேண்டும் என்கிறார்.

இயற்கையின் நியதிகளால் வாழ்வு இழந்து தவிக்கும் பெண்களுக்கு வாழ்வு தர வேண்டும் என்பதை சங்க இலக்கிய கடை ஏழு வள்ளல் பாலி செயல் வழி விளக்குகிறார். அதாவது, "தேன் முல்லைக் கொடிகளுக்குத் தேவையிங்கு "தேர்களால் தான் படரப் "பார்கள் தாம் தாங்குவதற்கு வரவேண்டும்"[19] என்று அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்கிறார்.

இளம் விதவைகளின் வாழ்வு மலர இளைஞர் தோழனைக் கூவி அழைக்கிறார் தாராபாரதி,

விதவை வாழ்வுமலர
விதை – வை
புதிய வழி செய்
புறப்படு தோழனே [20]

என்று கணவனை இழந்து வாழ்வில் துன்பப்படும் பெண்களுக்குத் தீர்வு கூறுகிறார்.

முதிர்கன்னி நிலை

வரதட்சணை கொடுக்க முடியாத பெண்கள் திருமணம் என்னும் வைபோகத்தைக் காணாமலே தன் வாழ்நாளைக் கழிக்கின்றனர். அவர் களுக்குச் சமூகம் "முதிர்கன்னி" என்ற பட்டத்தை வைத்து அவமானப்படுத்துகிறது. அவர்களின் மனக்குமுறல்கள் பற்றியும் கவிஞர் பேசுகிறார். திருமணமாகாத ஒரு முதிர்கன்னியின் ஏக்கங்கள், துக்கங்கள் எவ்வாறு இருக்கும் என்பதை

"தண்ணீர் மீனின் தாய்வீடு–அது
தரைமீன் எனக்குச் சுடுகாடு"

என்றும்,

"பூசையும் பொறுத்துப் போயாச்சு –
என் புலன்கள் மரத்து நாளாச்சு[21]

என்றும் இளமையை நானே தின்னாச்சு என்ற தலைப்பில் பதித்திருக்கிறார்.

அவர்களின் வாழ்வில் வசந்தமில்லை சிரிப்பில்லை, பருவக் கனவுகள் முடிந்த நிலை அழகு புலன்கள் மரத்த நிலை, தந்தை வீட்டோடு வாழும் சோகம், அழகு தேய்ந்து போனது. சீதனம் கொடுக்க முடியாததால் கற்பும் அழகும் நிறைந்திருந்தாலும் திருமணமாகாமல் இருக்கும் அவலநிலை என்ற முதிர்கன்னிகளின் ஒட்டுமொத்த அவலங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறார் தாராபாரதி.

சீதனம் சுமக்கிற வாகனங்கள்
என்ற தலைப்பில்
"தேன் கூடு கட்டாத
பூங்கொடியை ஸ்ரீ இந்தத்
தேசத்தில் முடவனும்
ஏற்பதில்லை" [22] [பாடல் 161]

"தனி மரங்களாயிருப்போர், கனி மரங்களாவ தெந்நாள்"[23] என்ற கவிதையில் கவிஞர் முதிர்கன்னி தேன்கூடு கட்டாத பூங்கொடிகள் என்றும், ஆண் முடவனாக இருந்தாலும் பணமில்லாமல் வாழ்க்கை தரத் தயாராக இல்லாத சமூகச் சீர்கேட்டையும் விளக்குகிறார். பெண் களின் துன்பம் நீங்கி அவர்களுக்கு நல்ல வாழ்வு வருவது எப்போது என்று தன் ஏக்கத்தைப் பதிவு செய்கிறார்.

திருமணம் ஆகாத முதிர்கன்னிகளின் நிலை இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளன. "அல்லிப்பூ தாமரைப்பூ ஆயிரம் பூ பூத்தாலும் கல்யாணப் பூவெனக்குக் காலமெல்லாம் பூக்கலையே"[24] என்ற வைரமுத்தின் வைரவரிகளும் இந் நிலையைச் சாடுகிறது.

திருமணமானப் பெண்ணின் நிலை

புதிய வாழ்வு வாழ பல கனவுகளுடன் புகுந்த வீட்டிற்குச் செல்லும் பல பெண்களின் கனவு நனவாவதில்லை. அவர்கள் கண்ட கனவு கனவுகளாகவே உள்ளன என்பதனையும் கவிஞாயிறு தம் கவிதைகளில் கூறியுள்ளார். புகுந்த

வீட்டார் இவர்களை "சீதனம் சுமக்கிற வாகனங்கள்" என்றும் தென்றல் தொடாத அரும்புகள்- சிறு தீக்குச்சிக்கு விருந்துகள்" என்றும் பெண்களின் மரண நிலையையும் சாடுகிறார்.

"தாலி கயிற்றில் தண்டனை ஒரு
தூக்குக் கயிற்றில் விடுதலை"[25]

என்பதில் கணவன் இல்லத்தில் வாழ முடியாத பெண்கள் தங்களை மாய்த்துக் கொள்ளும் அவலநிலையைச் சுட்டிக் காட்டுகிறார்.

வரதட்சணைகள்கொட்டிக்கொடுத்தும் பெண்கள் கூண்டுக் கிளியாக வாழ்வதும் சிறைக் கைதியாய் இருப்பதும் இன்றைய சமூகத்தில் இன்றும் நிலைபெற்று வருவதை உணர வைக்கிறார்.

முடிவுரை

தாராபாரதியின் கவிதைகளில் பெண் சிந்தனை என்னும் இந்த கட்டுரையில் பெண் கல்வியின் அவசியம் பற்றியும் ஆணுக்கு நிகராக பெண்கள் வலம் வர பெண்களின் வாழ்வு வளம் பெற, சமூகம் சீர்திருத்தம் உண்டாக குடும்பம் ஒரு பல்கலைக்கழமாகத் திகழ பெண் கல்வி அவசியம் என்பதும் பேசப்பட்டது. பெண்களின் நல்ல குண நலன்கள் பற்றிய சிந்தனையும், அதனால் பெறப்படும் பயன்பாடும் விளக்கப்பட்டது. பெண்களுக்கு ஏற்ற சமுதாயச் சிக்கல்கள் வரதட்சணை கொடுமை, முதிர்கன்னிகளின் கவலைநிலை, விதவைகளின் மறுவாழ்வு குறித்த சிந்தனை, பெண்களின் மனஉணர்வு, போன்ற பல்வேறு கருத்துகள் எழுதப்பட்டது. ஆணும் பெண்ணும் சமம் என்பர். அப்பெண்கள் இல்லற வாழ்க் கைக்கு முன்பும் இல்லற வாழ்க்கையிலும் சமூகத்தில் எதிர்கொள்ள வேண்டிய நடைமுறைச் சூழல்களைப் பற்றிய செய்திகள் ஆராயப்பட்டன.

அடிக்குறிப்புகள்

1. டாக்டர் மு. வரதராசனார்
2. தாராபாரதி, இது எங்கள் கிழக்கு பாடல் 27
3. தாராபாரதி, தாராபாரதி கவிதை பாடல் 55
4. மேலது, பாடல் 58
5. மேலது, பாடல் 60
6. மேலது, பாடல் 62
7. தாராபாரதி, பூமியைத்திற்கும் பொன்சாவி, பாடல் 50
8. மேலது, பாடல் 52
9. தாராபாரதி, தாராபாரதி கவிதை பாடல் 160
10. மேலது, பாடல் 162
11. வேத மகரிஷி, ஞானக்கோவை பாடல் 467
12. தாராபாரதி, தாராபாரதி கவிதைகள் பாடல் ப. 161
13. இரா. பிரேமா, பெண்ணியம் பாடல் 8
14. தாராபாரதி, பூமியைத் திறக்கும் பொன் சாவி, பாடல் 68
15. தாராபாரதி, தாராபாரதி கவிதை பாடல் 172
16. மேலது, பாடல் 173
17. மேலது, பாடல் 175
18. மேலது, பாடல் 162
19. தாராபாரதி, இன்னொரு சிகரம், பாடல் 81

20. காந்தியடிகள், பெண்களுக்காக, பாடல் 140

21. தாராபாரதி, இது எங்கள் கிழக்கு, பாடல் 122

22. மேலது, பாடல் 125

23. தாராபாரதி, தாராபாரதி கவிதை பாடல் 172

24. கவிஞர் வைரமுத்து

25. தாராபாரதி, விரல்நுனி வெளிச்சங்கள், பாடல் 48

துணைநூற்பட்டியல்

1. திருவள்ளுவர், திருக்குறள் மு.வ., உரை

2. பாரதியார், பாரதியார் கவிதைகள்

3. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள்

4. மேத்தா மு, கண்ணீர்ப் பூக்கள்

5. பூங்கோதை கோ, மாறிவரும் சமுதாயத்தில் மகளிர்.

தனிமனிதன் சிறுகதையின் மூலம் அறியலாகும் மொழி, போர், காதல் தோற்றுவாய்கள்

மா. கோமதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சங்ககிரி.

ஆய்வுச்சுருக்கம்

முதன் முதலாகத் தோன்றிய மனித இனம் காட்டில் விலங்கொடு விலங்காக வாழ்ந்தது. விலங்குகளைப் போலவே ஆடையின்றி நிர்வாணமாக வாழ்ந்தான். பேசுவதற்கு மொழி தெரியாது. விலங்குகளைப் போலவே கத்தினான்; கூச்சலிட்டான். காட்டில் கிடைக்கும் காய், கனி, விலங்குகளை அடித்து உண்ணத் தொடங்கினான். விலங்குகளை வேட்டையாடுவதில் இரு கூட்டத்தினருக்கு இடையே சண்டை ஏற்பட்டது. சண்டையின் முடிவில் பாதிக்கப்பட்ட வரைக் காப்பாற்றும் போது மனிதாபிமானம் வெளிப்பட்டது. ஒரு பெண்ணின் இரக்கம், ஒரு ஆணின் மீது என்றால் அது காதலாக மாறுகிறது. காதலையும் மறந்து தன் இனத்தைக் கண்டவுடன் அவர்களுடன் இணையத் துடிக்கும் தலைவன் தாய்மை யடைந்த தன் மனைவியைக் கொன்று விடுகின்றான்.

திறவுச் சொற்கள்

தனிமனிதன், ஜெயகாந்தன், மொழி, காதல், போர், மனிதாபிமானம்.

முன்னுரை

ஆதிகாலத்தில் தோன்றிய மனிதன் தனது தேவைகளை எவ்வாறு பூர்த்திச் செய்து கொண்டான். மொழியை எவ்வாறு தோற்றுவித்தான். இரு கூட்டத்தினருக்கு இடையில் எதற்காக போர்மூண்டது. போரின் தோற்றுவாய்க்குக் காரணம், மேலும் காதல் உணர்வு எவ்வாறு தோன்றியது. இறுதியில் தலைவன் தலைவியை விட்டு பிரிந்தமைக்குக் கொன்றமைக்கு என்ன காரணம் என்று பல வினாக்களுக்கு விடைத்தரும் விதமாக இக்கட்டுரை அமைகிறது. தனிமனிதன் சிறுகதையின் மூலம் ஜெயகாந்தன் மொழி, போர், காதல் இவற்றின் தோற்றுவாய்களை விளக்க முற்படுவதைக் காணலாம்.

மொழியின் தோற்றுவாய்

தன் கருத்தை மற்றவர்களிடம் தெரியப் படுத்த, தனது இன்ப துன்பங்களைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ள ஆதி மனிதனுக்கு பாஷை கிடையாது. விலங்குகள் போன்று வெற்றொலிகள் மட்டுமே அவனுடைய வெளிப்பாடாக

இருந்தது. இதனையே ஜெயகாந்தன் தனது தனிமனிதன் சிறுகதைகளில் கூறியுள்ளார். "மாமிசப் பிசுபிசுப்புடைய வல்லெயிறுகள் வெளித்தெரிய அட்டகாசமாகக் கூவிச் சிரிக்கின்றனர் அம்மனிதர்கள்! அந்தக் கூச்சலைக் கொண்டே அவர்கள் தங்கள் உணர்ச்சிகளை ஒருவருக்கொருவர் உணர்த்திக் கொள்கின்றனர். வளமற்ற, லயமற்ற குளறல் - அதுதான் அன்றைய மொழி, அந்த மொழியில் தான் அவர்கள் காதல் புரிந்தனர். வீரம் பேசினர்." ஆனால் மனிதன் என்று பேசத்தொடங்கினானோ அன்று முதலே மொழிக்கான பயிற்சியும் ஆராய்ச்சியும் தொடங்கின என்றார் பொன் கோதண்டராமன். "மனிதனுக்கு பேசத் தெரிந்த காலத்திலிருந்தே மொழிவழி ஆய்வுகளின் கூறுகள் தோன்றின. சொற்களை ஒலிக்கும்போதும், தொடர்களை அமைக்கும்போதும், இது தவறு என்ற எண்ணம் தோன்றிய காலத்திலிருந்தே அவனுக்கு மொழிவழி ஆய்வுகள் தோன்றிவிட்டன. ஆகவே மொழியைப் பொறுத்தவரையில் ஆராய்ச்சியும் பயிற்சியும் இணைந்தே நடந்திருக்கின்றன என்று கொள்ளலாம் என்கிறார். (தமிழியல் ஆய்வு மேம்பாடு, மொழிவழி ஆய்வுகள், பொன். கோதண்ட ராமன், ப.01)

முதலில் சைகை, கீச்சொலிகள் மூலமாகத் தனது பேச்சை வெளிப்படுத்திய மனிதன், பரிணாம வளர்ச்சியின் மூலம் பேசக் கற்றுக் கொண்டான். தற்பொழுது மொழி வழி ஆய்வுகள் வரை வளர்ந்திருப்பது மொழியின் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

போரின் தோற்றுவாய்

உணவின் தேடலே போருக்கான தோற்றுவாயாக இருந்துள்ளது என்று ஜெயகாந்தன் கூறுகிறார். உணவுக்காக ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டதே போருக்குக் காரணமாக அமைந்தது. "தேவை ஏற்படும் போது போட்டி ஏற்படுகிறது. திடீரென்று கானகத்தின் நடுவே மான்கூட்டம் ஒன்று தறிகெட்டு ஓடிக்கொண்டிருந்ததை அவ்விடத்தில் உள்ள சமூகம் கண்டது, தங்களை நோக்கி வரும் மான்களை வில்லும் அம்பும் தாங்கி, எதிர்கொண்டு தாக்கியதில் மான்கள் இறந்து விழுந்தன. அதே சமயத்தில் அவற்றைத் துரத்தி வந்த இன்னொரு சமூகம் அங்கு வந்து நின்றது. கொல்லப்பட்ட மான்களுக்கு இரு சமூகங்களும் ஒன்றை ஒன்று தாக்கிக் கொண்டன. அது தான் போரின் தோற்றுவாய்க்கு காரணம் என்கிறார்." (ஜெயகாந்தன், தனிமனிதன், ப.176) புறப்பொருள் வெண்பாமாலையும் போரின் தோற்றுவாய் குறித்து கூற முற்படுகிறது. உணவுக்காகவும், செல்வத்திற்காகவும் ஆநிரைகள் கவரப்பட்டன. "வெட்சிப்பூவினைச் சூடி மாற்றாரின் ஆக்களைக் (பசுக்களைக்) கைப்பற்றக் கருதுவது வெட்சித் திணை ஆகும்" என்கிறார் (புறப்பொருள் வெண்பாமாலை, ச.திருஞானசம்பந்தம், ப.14)

"கரந்தைப் பூவினைச் சூடி மாற்றார் கவர்ந்து சென்ற ஆக்களை மீட்கச் செல்வது கரந்தைத் திணை" ஆகும். (புறப்பொருள் வெண்பாமாலை, ச.திருஞானசம்பந்தம், ப.34)

ஆரம்பத்தில் உணவுக்காக விலங்குகள் வேட்டையாடப்பட்டன. ஆனால் அவைகள் கானகத்தில் தானாக தோன்றி வளர்ந்தது பின்னாளில் விலங்குகள் சில சமூகத்தாரால் வளர்க்கப்பட்டன. அதனை வேட்டையாடும் போது போர் தோன்றியதாக இலக்கியங்கள் கூறுகின்றன.

காதல் தோற்றுவாய்

இயற்கையிலேயே இரக்க குணம் கொண்டவர்கள் பெண்கள். அறிமுகமே இல்லாத ஓர் ஆண் உயிருக்குப் போராடுவதைக் காண்கிறாள். அவன் மீது இரக்கம் கொண்டு அவனைக் காப்பாற்றுகிறாள். அதுவே காதலாக மாறுகிறது. இதனையே, ஜெயகாந்தன், "இரு கூட்டங்களுக்கு இடையே நடைபெற்ற உணவு போரில் காயப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட ஒருவனை எதேச்சையாகக் கண்ட புதுக்கூட்டத்துப் பெண் ஒருத்தி, அவனுக்கு உதவி செய்து அவனைப் பழையபடி வீரனாக்குகின்றாள்.

அவள் வெண்மை நிறமுடையவள், உயரமானவள் அவன் கருப்பன், அவளைவிடக் குட்டையானவன். இதைத் தவிர வேற எந்தப் பேதங்களும் அவர்களுக் கிடையே குறுக்கிட முடியாது. அவளுக்கு அவன், அவனுக்கு அவள் மனித வர்க்கத்தின் பொச்சரிப்பிலிருந்தும், கடமை என்ற தூக்குக் கயிற்றிலிருந்தும், கட்டுப்பாடு என்ற விலங்கிலிருந்தும் விடுபட்ட 'தனிமனிதர்கள்' அவர்கள் அவர்களுக்கிடையே காதல் இருந்தது. ஒருவரையொருவர் மகிழ்விக்கும் இன்பம் இருந்தது. அந்த இன்ப வெள்ளத்திலே தலை கிறங்கிக் கிடக்கும் போதை இருந்தது. வேறு மனித வர்க்கத்தின் எந்தவிதமான சின்னத்தனமும் அவர்களிடம் அண்டிக்கூட நிற்கவில்லை". *(ஜெயகாந்தன், தனிமனிதன், ப.172)* என்று மனிதர்களின் தொடக்கக்கால காதல் உணர்வு பற்றிக் கூறுகிறார்.

அன்று யாரும் இன்றி உயிர் போகும் தருவாயில் இருந்த ஓர் ஆண் மகனைக் காப்பாற்றுகிறாள். பின்பு அவனைக் காதலிக்கின்றாள். அதன் விளைவாக தாய்மை அடைகின்றாள். தன் இனத்தை விட்டு அவனுடனே, அவனுக்காவே வாழ்கின்றாள். ஆனால் அவனோ மீண்டும் அவ்விடம் நோக்கித் தன் இனம் வருவதைக் காணுகின்றான். தன் இனத்துடன் செல்ல விரும்புகின்றான். அதற்கு அவள் தடையாக இருப்பாளே இன்று கருவுற்றவள் என்று பாராமல், தன்னைக் காப்பாற்றியவள் என்றும் எண்ணாமல் அவளைக் கொன்று விட்டுத் தன் இனத்துடன் சென்றுவிடுகின்றான்.

முடிவுரை

மனிதன் பிறந்தவுடன் விலங்குகளையே காணுகிறான். அதனோடு வாழ்கிறான். ஆகவே அதைப் போலவே பேசத்தொடங்குகிறான். அவன் பார்த்துக் கற்றுக் கொள்வதற்கு வேறு எந்த மனித இனமும் இல்லை. விலங்குகள் உணவுக்காக சண்டையிடுவது போல், மனிதனும் அவனுக்குப் பின்னால் தோன்றிய மனித கூட்டத்துடன் உணவுக்காகச் சண்டையிட்டான். இதுவே போருக்குத் தோற்று

வாயாக அமைவதைக் காணமுடிகிறது. போரில் பிரிக்கப்பட்டுத் தனித்து விடப்பட்ட ஆணை வேறு கூட்டத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி காப்பாற்ற முயல்கிறாள். ஆணும் பெண்ணும் தனித்து விடப்பட்ட போது அவர்களுக்குள் காதல் தோன்றுவதைக் காணமுடிகிறது. இன்றுள்ளதைப் போல் அன்றும் ஆண்களால் பெண்கள் ஏமாற்றப் படுவதைக் காணமுடிகிறது. போரும், காதலும் மனிதன் தோன்றிய காலத்தே தோன்றிய உணர்வின் வெளிப்பாடு ஆகும்.

துணைநூற்பட்டியல்

1. ஜெயகாந்தன் – தனிமனிதன் இக்கால இலக்கியம், பதிப்புத்துரை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி. 2019.
2. சுந்தரமூர்த்தி – இ (ப.ஆ) – தமிழியல் ஆய்வு மேம்பாடு, சென்னைப் பல்கலைக்கழகம், 2001.
3. திருஞானசம்பந்தம். ச (உ.ஆ) – புறப் பொருள் வெண்பாமாலை, கதிர் பதிப்பகம் திருவையாறு 2006.

‘வீடும் விழுதுகளும்’ சிறுகதைத் தொகுப்பில் சமூகவியல் பார்வை

கௌசல்யா லட்சுமி ஜெய்சங்கர்
இளநிலை ஆய்வாளர்
சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.

ஆய்வுச் சுருக்கம்

இந்த ஆய்வானது ‘வீடும் விழுதுகளும்’ சிறுகதைத் தொகுப்பில் காணப்பட்ட சிறுகதைகளைச் சமூகவியல் கோட்பாட்டிற்குக் கீழ் ஆராயும் வகையில் அமைந்துள்ளது. இவ்வாய்வின் நோக்கமானது வீடும் விழுதுகளும்’ சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் சமூகவியல் அடிப்படையிலான சிக்கல்களை அடையாளம் காணுதலும், அச்சிக்கலுக்கான காரணத்தை ஆராய்வதேயாகும். மா.சண்முகசிவா எழுதிய ‘வீடும் விழுதுகளும்’ எனும் சிறுகதைத் தொகுப்பினில் இடம்பெற்றுள்ள 13 சிறுகதைகளுள் 10 சிறுகதைகளை வைத்து இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டது. இந்த ஆய்வை மேற்கொள்வதற்கான தரவுகள் யாவும் ‘வீடும் விழுதுகளும்’ சிறுகதைத் தொகுப்பில் இருந்து திரட்டப் பட்டுள்ளன. விளக்கியல் முறையின் வாயிலாகத் தரவுப் பகுப்பாய்வில் விவரிக்கப்பட்டுள்ளது. ‘வீடும் விழுதுகளும்’ எனும் சிறுகதைத் தொகுப்பினில் காணப்பட்ட சமூகவியல் ரீதியான சிக்கல்களும் அதற்கான காரணங்களும் பெரும்பாலும் முதலாளித் துவம், அந்நீதி சார்ந்து காணப்பட்டது. சமூகவியல் கோட்பாட்டின் உட்கூறு களைச் சுலபமாக விளங்கிக் கொள் வதற்கும், சமூகவியல் அடிப்படையிலான சிக்கல் களையும் அதற்கான காரணங் களையும் சீர்தூக்கிப் பார்ப்பதுமே இவ்வாய்வின் நன்மைகளாகும்.

திறவுச்சொற்கள்

வீடும் விழுதுகளும், சிறுகதைத் தொகுப்பு, சமூகவியல் கோட்பாடு, சிக்கல், காரணம்

முன்னுரை

மலேசியாவில் சிறுகதை இலக்கியமானது, எழுத்தாளர்கள், நாளிதழ், இலக்கிய இயக்கங்களின் ஓயாத தொடர் முயற்சிகளின் வழியாகவே வேரூன்றியுள்ளது. மலேசிய வாழ்வின் பல்வேறு கூறுகளைக் கற்பனை வழியில் சிறுகதைகளாகப் பதிந்துவைக்கும் பணி 1990-ஆம் ஆண்டுகளிலும் சிறப்பாகத் தொடர்ந்தது. மலேசியாவின் பல முக்கிய எழுத்தாளர்கள் தங்கள் சிறுகதைத் தொகுப்புக்களைப்

பதிப்பித்தார்கள். அவ்வகையில், 'வீடும் விழுதுகளும்' சிறுகதைத் தொகுப்பானது மலேசியத் தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவரான மா.சண்முகசிவா என்பவரால் பதிப்பிக்கப்பட்ட ஒரு சிறுகதைத் தொகுப்பாகும்.

1998-ஆம் ஆண்டில் மா.சண்முகசிவா எழுதிய 'தரிசனம்', 'நடப்பு', 'கலகக்காரன்', 'சுருதிபேதம்', 'மையம்', 'திரை கடலோடி', 'கிழிசல்', 'தோழமை', 'திரிபு', 'உயிப்பு', 'வீடும் விழுதுகளும்', 'முறிவு', 'ஒரு கூத்தனின் வருகை' ஆகிய13 சிறுகதைகள் உள்ளடக்கிய சிறுகதைத் தொகுப்பு 'செம்பருத்தி' பதிப்பகத்தினால் வெளியீடு கண்டது. இச்சிறுகதைத் தொகுப்பின் பெரும்பாலான கதைகள், மலேசியத் தமிழ் மக்கள் மையப்படுத்திய அரசியலையும், அதன் வழியே அவர்களின் சிக்குண்ட வாழ்க்கையும் விவரித்துள்ளது. இச்சிறுகதைத் தொகுப்பினைக் கதைக்களமாகக் கொண்டுதான் சமூகவியல் கோட்பாடு ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

202 பக்கங்களில் வெளியீடு கண்டிருக்கும் 'வீடும் விழுதுகளும்' சிறுகதைத் தொகுப்பின் எழுத்தாசிரியரான மா.சண்முகசிவா, எழுத்துலகில் 'பத்தாங்கட்டை பத்து மலை' எனும் புணைப்பெயரால் பலராலும் அறியப்படுவார். இவர் பொது மருத்துவராகவும், சருமநோய் நிபுணராகவும் கடமையாற்றி யுள்ளார். மேலும், இவர் 'அகம்' எனும் இலக்கிய அமைப்பை நிறுவியவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1970-ஆம் ஆண்டு தொடக்கம் மலேசியத் தமிழ் இலக்கியத்துறையில் அதிகம் ஈடுபாடு காட்டி வரும் இவரொரு முன்னணிச் சிறுகதையாசிரியரும், புத்திலக்கிய விமர்சகரும், புதுக்கவிதையாசிரியருமாவார். இவரின் ஆக்கங்கள் மலேசியத் தேசிய பத்திரிகைகளிலும், இதழ்களிலும் வெளிவந்துள்ளன. தமிழ்நாட்டின் 'சலங்கை' இதழிலும் இடம் பெற்றுள்ளது. அதேவேளை, இலண்டன் பி.பி.சி. தமிழோசையில் மலேசியத் தமிழர் குறித்துக் கருத்துரைகளையும் ஆற்றியுள்ளார்.

தரவு பகுப்பாய்வு

I. தரிசனம்

இச்சிறுகதையில் இடம்பெற்றுள்ள கோயிலின் கமிட்டித் தலைவர், அவ்வூரில் பலரால் மதிக்கப்படும் ஒரு நபராகவும் பணியமர்த்தப்படாத 'ஊர்த்தலைவராகவும்' சித்தரிக்கப் பட்டுள்ளார். மக்களின் மத்தியில் செல்வாக்கோடு இருக்கும் 'ஊர்த்தலைவர்', கோயிலின் கணக்கில் சுய செலவுகளைச் செய்வது, ஊர் மக்களின் கண்களுக்கு, தாம் ஒரு சிறந்த கோயில் நிர்வாகி என்பதை பரிட்சியப்படுத்து வதற்கு, உள்ளூர் அர்ச்சகரை வேலை நீக்கம் செய்து, இந்தியாவிலிருந்து வேறொரு அர்ச்சகரை அழைத்து வருவது போன்ற தேவையற்ற செலவுகளைச் செய்கிறார். ஆனால், கோயிலில் துப்புரவு வேலை செய்யும் 'பத்துமலை' எனும் ஊனமுற்ற ஏழை இளைஞனுக்குச் சம்பளம் தராமல், தனது முதலாளித்துவ ஆதிக்கத்தை வெளிப் படுத்துகிறார். இச்சிக்கல் எழுவதற்கான காரணம், சமுதாயத்தில் உயர்படி நிலைகளில் உள்ளவர்கள் எவ்விதச்

செல்வாக்குமில்லாத எளிய மக்களின் உழைப்பினை மதிக்காமல், அவர்களை உளவியல் ரீதியாக ஏமாற்றி சம்பாதிக்கும் மனப்பான்மையுமே ஆகும்.

தொடர்ந்து, கோயிலில் துப்புறவு வேலை செய்யும் பத்துமலை எனும் இளைஞனின் உடல் ரீதியான குறைப் பாட்டினைச் சுட்டி 'ஊமையன்' என அழைக்கும் சூழ்நிலைகளையும் இச்சிறு கதையினில் காண முடிந்தது. இம்மாதிரி யான, உடல் குறைபாடுகள் உள்ளோரை, அவர்களின் குறையைச் சுட்டி அழைக்கும் வழக்கம், சமூக வரிசைமுறையினில் (Social hierarchy) கீழ்நிலையிலுள்ள மக்களுக்கு நிகழ்கிறதே ஒழிய, உயர்நிலையிலுள்ள செல்வாக்கு நிறைந்தோர்களுக்கு நிகழ் வதில்லை. இச்சிக்கலுக்கான காரணம் யாதெனில், சக மனிதர்களுக்கிடையே மரியாதை செலுத்தும் பழக்கம் இல்லா மையே ஆகும்.

II. கலகக்காரன்

இச்சிறுகதையினில், சமுதாயத்தில் முறையான அல்லது சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, மக்கள் உரிமைக்காகப் போராடி, அவர்களுக்கு அவ்வுரிமையைப் பெற்றுத் தருவதில் நம்பிக்கையற்ற இளைஞனான சூர்யா அடித்தளத்தில் இறங்கி, சட்டத்திற்கு எதிரான காரியங் களில் ஈடுபடுகின்றான். மேலும், சூர்யா சிறுவயதில், தன் தந்தையாலும் பிறராலும் பல்முறை வெறுமனே தங்களின் பலத்தைக் காட்டும் பொருட்டு அடி வாங்கியதால், நாளடைவில் தானும் முரட்டுத்தனம் மிகுந்த ஒரு மனிதனாகவே மாறிவிட்டான். நியூட்டனின் மூன்றாவது சட்டம் கூறுகிறது, "ஒவ்வொரு செயலுக்கும் சமமான மற்றும் எதிர் எதிர்வினை உள்ளது." இந்தக் கோட்பாடு முக்கியமாக இயற்பியலுக்குப் பயன் படுத்தப் பட்டாலும், இதனைச் சமூக வியல் அம்சங்களைச் சார்ந்த வரலாற்றிலும் பயன்படுத்தப்படலாம். இதனைச் சமூகவியல் நிகழ்வு (Sociological Phenomena) எனலாம். சூர்யாவைப் பொருத்த வரையிலும், சிறுவயதில் தனக்கு நிகழ்ந்த அநீதிகரமான கொடுமைகள் யாவும், பின்னாளில் நல்ல நோக்கில் செயல் பட்டாலும், அதனை முரட்டுத்தனமான வழியில் சென்று நிகழ்த்தக்கூடிய மனப்பான்மை உண்டானது தெரிய வருகிறது. இச்சிக்கலுக்கு முக்கியக் காரணம் யாதெனில், முறையான சமூகச் சங்கிலி(Social chain) இல்லாததே ஆகும்.

III. சுருதி பேதம்

இச்சிறுகதையினில் இடம் பெற்றுள்ள திரு.கனகசபாபதி எனும் தலைமையா சிரியர் தனது பள்ளிக் கால நினைவுகளில், தான் பக்குவமில்லாத வயதில் செய்த தவறுக்குக் கிடைத்த அதிகப்படியான தண்டனையும் அதனால் தன் வாழ்வில் கிடைக்கப்பெற்ற நீண்ட கால விளைவைப் பற்றியும் எண்ணுகிறார். பருவ வயதில் இயல்பாக எழும் பாலியல் உணர்வுக்கு ஈர்க்கப்பட்டு, தன்னோடு பயிலும் சக மாணவியை முத்தமிட்ட மாணவனுக்குப், பள்ளி நிர்வாகம் கூடுதலான தண்டனை விதிக்கின்றது. அப்படிச் செய்யாவிட்டால், பள்ளியின்

பெயரைக் கெடுக்கும்படி அம் மாணவியின் தந்தை ஏதேனும் செய்து விடக்கூடும் எனும் பயமே அதற்குக் காரணமாகிறது. பள்ளிகளில் மாணவர்களுக்குக் கொடுக்கப் படும் தண்டனைகள், மாணவரின் நன் நடத்தைக்கு வழி வகுக்க வேண்டும் (Mayer,*1968)* என்பதற்காகவே இருத்தல் வேண்டும் எனும் அறம் தவறிப்போ வதால், அம்மாணவன் உளவியல் ரீதியாகப் பாதிப்புக்குள்ளா கிறான். இச்சிக்கலின் காரணமாவது, பள்ளியின் விதிமுறைகள் முறையற்று, ஒரு சாராருக்கு மட்டும் இயங்குவதனாலே ஆகும்.

IV. மையம்

தீர விசாரிக்காமல் வெளிநாட்டில் (மலேசியா) இருக்கும் ஒருவர்க்குத் திருமணம் செய்து வைக்கப்படும் ஒரு பெண், பின்னாளில் தன் கணவனுக்குத் திருமணத்திற்கு முன்பிருந்தே வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதை அறிகிறாள். தன்னோடு திருமணம் ஆனப்பிறகும் தன் கணவனுக்கும் அப்பெண்ணுக்கும் இடை யிலான தொடர்பு தொடர்வதை அக்கம் பக்கத்தார் வழி அறிய வந்த பின், அச்செவி வழி செய்தி உண்மையா பொய்யா எனத் தெளிவுப்படுத்த முற்படுகிறாள். அம் முயற்சியில், தன் கணவனுக்கு வேறொரு பெண்ணோடு தொடர்பு இருப்பது உறுதியாகுவதோடு, அதனைத் தெரிந்து கொள்ள முயற்சித்ததால், தன் கணவனா லேயே வன்கொடுமைகளுக்கு ஆளா கிறாள். ஆயினும், சமுதாயத்தில் பிறர் மத்தியில் தன் மானத்தையும் கௌரவத் தையும் காப்பாற்றிக் கொள்வதற்காக, ஒரு மனைவியாய்த் தனது உரிமைக்காகக் குரல் எழுப்பாமல், தனக்கு நிகழும் அநீதி களைப் பொறுத்துக் கொள்கிறாள். இச் சிக்கலுக்குக் காரணம் யாதெனில், குடும்பத் தலைவனுக்குள் காணப்படும் ஆண் ஆதிக்க மனோபாவமே. சமூக வாழ்க்கையின் அடிப்படையில், பெரும் பாலான களங்களில் ஆண்களே பெண் களைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகளைக் காணலாம். உதாரணமாக, இந்தச் சமூகங்களில் 75 சதவிகிதத்தில், மணமகள் தனது சொந்தக் குடும்பத்திலிருந்து தனது கணவரின் குடும்பத்திற்குச் செல்ல வேண்டும். அதே நேரத்தில் எதிர்முறை 10 சதவீதத் திருமணங்களில் மட்டுமே நிலவுகிறது. இம்மாதிரியான ஆதிக்கங்கள் பெரும் பாலான சமுதாயத்தில், 'கலாச்சாரம்' எனும் பரவலாகக் காணப்படுகிறது (Marvin Harris, 1977).

V. திரைகடலோடி

இந்தியாவிலிருந்து மலேசியாவுக்குப் பிழைப்பைத் தேடி வந்த அயல்நாட்டுக் காரர்களுக்கு, உள்ளூரில் உள்ள முதலாளிகளும் தரகர்களும் இழைக்கும் அநீதிகரமான செயல்களை ஒட்டியே இச்சிறுகதை அமைந்துள்ளது. கட்டுமான வேலைக்கு வந்த அயல்நாட்டுப் பணியாளரான மணியரசு எனப்படும் ஒருவருக்குச், சுமார் ஏழு மாதமாகச் சம்பளம் கொடுக்காமலும், அவரது கடவுச்சீட்டினை (passport) அபகரித்துக்

கொண்டு வைத்து, மணியரசுவை மீண்டும் இந்தியாவிற்குச் செல்ல விடாமல், வலுக்கட்டாயமாக வேலை செய்ய பணித்தும் தனது முதலாளித்துவத்தினை மகாலிங்கம் எனும் கதாப்பாத்திரம் ஆழமாகப் பிரதிபலிக்கிறது. இந்தியாவில் கர்ப்பம் தரித்திருக்கும் மனைவிக்குப் பணம் அனுப்ப முடியாதனாலும், இறந்த தன் தாயாருக்கு இறுதி அஞ்சலி செலுத்த தன்னால் சுய ஊருக்குக் கிளம்பிப் போக முடியாதனாலும் மணியரசு பெரும் மனச்சோர்வுக்கு ஆளாகிறார். அதுமட்டு மின்றி, பணிவான தொனியில் கெஞ்சிக் கேட்டும், தனக்குக் கிடைக்க வேண்டிய சம்பளத்தையும் கடவுச்சீட்டையும் தராத தன் முதலாளியை நோக்கிச் சற்றுச் சீற்றம் காட்டியதற்கு, மகாலிங்கம் தனது அடியாட்களைக் கொண்டு மணியரசு வைத் தாக்கியதோடு அவரைப் பழித்தும் பேசுகிறார். முதலாளிகளால் அடிமைப் படுத்தப்படும் இச்சிக்கலுக்கான காரணம், முதலாளிகள் தங்களுக்குக் கொடுக்கப் பட்ட அதிகாரத்தைத் தவறாகப் பயன் படுத்துவதும், மனிதநேயம் இன்றிச் சுயநலமாகச் செயல்படுவதுமே ஆகும்.

VI. கிழிசல்

சமூகத்தில் தன்னை எவரும் தாழ்த்திப் பேசவிடகூடாது எனும் எண்ணம் உடையவராய் இச்சிறுகதையில் வலம் வரும் திருமதி ரெட்டினம், தன் பால் உண்மையாகவே அன்பும், பரிவும் நிறைந்த தன் வீட்டுப் பணிப்பெண்ணான அம்மணியைச் சமுதாயநிலைக் கருதி துச்சமாக எண்ணுகிறார். பதிமூன்றே வயது நிரம்பிய சிறுமியைப் பணிப் பெண்ணாகச் சேர்த்து குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் (வேலைவாய்ப்பு) சட்டம் 1966 (சட்டம் 350க்கு) [Children and Young Persons (Employment) Act 1966 (Act 350)] எதிராகச் செயல்பட்டது மட்டுமல்லாமல், அப்பெண்ணைத் தினமும் அடித்துத் துன்புறுத்துவது, 'மூதேவி'. 'சனியன்' போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி அவமானப்படுத்துவது போன்ற காரியங் களையும் செய்கிறார். இச்சிக்கலுக்குக் காரணமாவது, வீட்டில் வேலை செய்யும் பணிப்பெண்களைப் பிறர்முன் மிரட்டி வைப்பதே தன்னை ஆற்றல்மிக்க முதலாளி யாகவும் தைரியமுள்ள பெண்மணி யாகவும் அடையாளப் படுத்தும் எனும் தவறான கண்ணோட்டமும் சக மனிதர் களுக்கிடையே மரியாதை கொடுத்துப் பழக வேண்டும் எனும் நெறிமுறைக்கு உட்பட்டு நடக்காதிருத்தலே ஆகும்.

VII. தோழமை

இச்சிறுகதையினில் ரங்கா எனும் கதைப்பாத்திரமாவது, அடிதடியில் ஈடு பட்டுக்கொண்டிருக்கும் ஒரு முரடனாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. வாழ்வில் முன்னேறுவதற்கும், சமுதாயத்தில் பிறரின் மதிப்பையும் மரியாதையையும் பெறுவதற்கு வன்முறையும் முரட்டுத் தனமும் மட்டுமே சிறந்த வழி என்பதைப் பள்ளி மாணவர்களான செல்வம், லாரன்ஸ், அன்வார் போன்றோருக்கு அறிவுரையாகக் கூறுகிறான். ரங்காவின் அறிவுரைக்கு இயைந்து, அவன் போக்கிலே மது, போதை, திருட்டு

போன்ற தீய வழிகளில் சிக்கும் மாணவர்களின் நிலை இறுதியில் மரணத்தில் முடிவடைகிறது. ஒருவரின் அநீதிக்கரமான பயணமாவது, அவர்களோடு சேர்ந்து பயணிக்கும் பிறருக்கும் பாதிப்பளிக்கும் என்பதைச் இச்சிறுகதை சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளது. சமுதாயத்தில் பிறரால் மதிக்கப்படுவதற்குப் பணமும், பயமுமே முக்கியம் எனும் தவறான ஒரு கருத்தினை நம்பி, கல்வியையும் நற்பண்புகளையும் இழந்து, அறமற்ற வழியில் முன்னேற முடியும் என நம்புவதே இச்சிக்கலுக்கான முக்கியக் காரணம்.

VIII. திரிபு

இச்சிறுகதையில், திரிபுரசுந்தரி எனப்படும் ஒரு சங்கீத ஆசிரியை தன்னையும் தன்னைச் சார்ந்து வாழும் தனது குடும்ப உறுப்பினர்களான தன் பாட்டியையும் தாத்தாவையும் காப்பாற்றும் நோக்கில் வேலைக்குச் செல்லும் வெவ்வேறு இடங்களிலும் தனக்குப் பிற ஆண்களால் நிகழும் பாலியல் தொல்லைகளையும், திருமண மென்மொழி தலையும் தகர்த்து, வாழ்வில் ஏற்படும் பிற சிக்கலையும் களைந்து வாழ்க்கையை நடத்தி வருபவராகச் சித்தரிக்கப் பட்டுள்ளார். சிவராம கிருஷ்ணன் எனும் ஒரு சக ஆசிரியர் திரிபுரசுந்தரி தன்னை மணந்து கொள்ள ஒத்துக்கொள்ளாததால், சுய அத்தைப் பெண் என்றும் பாராமல், திரிபுவின் மீது பாலியல் தொழிலாளி எனும் பட்டத்தைத் திணிக்கிறார். இக் கதையில் இடம்பெற்ற சிக்கலுக்கான காரணமாவது சில ஆண்கள், தனித்துக் குடும்ப நலனுக்காகப் போராடும் பெண்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதும், அவ்வாறான அவர்களின் இச்சைக்கு அப்பெண்கள் பிடிகொடுக்காமல் போனால், அவர்களை இழித்துப் பேசும் பண்பற்ற மனப்பான்மையாகும்.

IX. வீடும் விழுதுகளும்

கணவனை இழந்த செல்லம்மாள், தோட்டத் துண்டாடல் காரணமாக, சிறுவயதிலிருந்து வாழ்ந்து வந்த குடியிருப்புப் பகுதியிலிருந்து கோலாலும்பூர் நகரத்துக்குத் தன் இரு பிள்ளைகளோடு குடிபெயருகிறார். பல காலமாக உழைத்து, சேமித்த மூவாயிரத்து ஐநூறு ரிங்கட்டை எடுத்துக்கொண்டு கோலாலும்பூரிலுள்ள தனது சிறுவயது தோழியான கோவிந்தம்மாளின் ஆதரவைத் தேடிச் சென்ற செல்லம்மாள், தனது தோழி ஒரு பாலியல் தொழிலாளர் எனும் உண்மையை அறிந்த பின், தன் தோழியின் உதவியோடு வேறொரு வீட்டில் குடியேற முயல்கிறாள். அச்சூழ்நிலையில், கையிலிருந்த பணத்தைச் செலவழித்து, அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்தில் முறையற்ற குடியிருப்புப் பகுதியில் உள்ள வீடு ஒன்றை வாங்கி, பின் ஏமாறுகிறாள். போலிஸ் பண்டாராயா கட்சிக்கு இலஞ்சம் கொடுத்து, அந்நிலத்திலுள்ள வீடுகளை ஏழை மக்களுக்கு அநியாய விலையில் விற்ற 'தலைவர்' அவ்வூரிலிருந்து மாயமாகிறார். இச்சிக்கலுக்கு முக்கியக் காரணம் யாதெனில்,

அதிகாரத்தைத் தவறான வழியில் பயன்படுத்துவதும், பணத்தின் மீதான ஆசையில் அநீதிகரமாக நடந்து கொள்வதுமே ஆகும்.

X. முறிவு

இச்சிறுகதையில், கட்டாயத்தின் பெயரில் சுந்தரன் என்பவர் தனது முதலாளியின் மகளைத் திருமணம் செய்துகொள்கிறார். இந்தியாவில் சாதாரணச் சமூகத்தைச் சார்ந்த பெண்ணை விரும்பிய சுந்தரம், மலேசியாவில் உயர்ந்த சமூகநிலையில் இருந்த தன் முதலாளியின் மகளைத் திருமணம் செய்வதன் வழி சமுதாயத்தில் தானும் ஒரு நல்ல நிலையை அடையலாம் எனும் ஆசையில் ஜூலி எனும் வேற்று மதப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதோடு அதனைத் தன் பெற்றோர் களிடமிருந்து மறைக்கிறார். சமூதாயத்தில் உயர்நிலையை அடைய வேண்டும் எனும் சுந்தரத்தின் ஆசை, நாளடைவில் குன்றுவதால் தனது திருமண வாழ்வில் நிம்மதியும் மகிழ்ச்சியும் இன்றிக் காணப்படுகிறார். பின்பு, தன் மனைவியிடம் தனது முடிவைக்கூற தைரியமின்றி, இந்தியாவிற்குப் - புறப்பட்டுச் செல்கிறார். இச் சிக்கலுக் கான காரணமாவது, சமூக வரிசை முறையினுள் தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும் எனும் சுயநலவாதமும் ஒரு பெண்ணை வாழ்வில் அடுத்த நிலைக்குச் செல்வதற்கான ஒரு வாய்ப்பாக அணுகும் அறமற்ற எண்ணமேயாகும்.

முடிவுரை

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் சமுதாயம் மிகப்பெரிய பங்காற்றுகிறது. அதன்வழி, சமூகத்தைச் சார்ந்து எழுந்துள்ள சமூகவியல் கோட்பாடும் மக்களின் வாழ்வில் ஏதேனும் ஒரு பகுதியிலோ சூழ்நிலையிலோ நிலவுகிறது. சமூகம் என்பது ஒரு கூட்டு வாழ்க்கை. இக்கூட்டு வாழ்க்கையே மனிதர்களைப் பண்படுத்துகிறது. எந்தவொரு மனித வாழ்வும் இக்கூட்டு வாழ்க்கையோடு இயந்து அமைதல் அவசியம். தனிமையில் வாழ இயலாது, எப்போதும் கூட்டத்தில், பிறரைச் சார்ந்து வாழும் இயல்பு கொண்டுள்ள காரணத்தாலே மனித இனம் 'சமூக விலங்கு' என அறியப் படுகிறது. ஒவ்வொரு மனிதனும் தனது சுயத்தேவைக்காகவும், பாதுகாப்புக் காகவும், நலத்துக்காகவும், முன்னேற்றத் திற்காகவும் ஏனைய மனிதர்களோடு சேர்ந்து வாழவேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. அவ்வகையில், சமூகம் தனிமனிதனை எப்படிப் பாதிக்கின்றது என்பதையும், தனிமனிதன் சமூகத்தை எப்படிப் பாதிக்கின்றான் என்பதையும் கவனித்து அதற்கேற்றவாறு செயல்படுதன் வழிச் சமூகவியல் கோட்பாட்டினை வாழ்வில் தொடர்ந்து அமல்படுத்த முடிகிறது.

துணைநூற்பட்டியல்

Bourdeau, Michel, "Auguste Comte", The Stanford Encyclopedia of Philosophy (Spring 2021 Edition), Edward N. Zalta (ed.). https://plato.stanford.edu/archives/spr2021/entries/comte/

Jayanthimala Ramasamy, 2017. *'மு.அன்புச்செல்வன் சிறுகதைகளில் காணப்பெறும் சமுதாயச் சீர்கேடுகள்'*. file:///C:/Users/User/Downloads/8-Article%20Text-13-2-10-20200116.pdf

Malaysia Tamilwriters Network Management, 2006. kh.r©Kfáth.http://www.tamilwriters.net/sanmuugasiva ma.html

Marvin Harris, 1977. WHY MEN DOMINATE WOMEN. https://www.nytimes. com/1977/11/13/archives/why-men-dominate-women-startling-new-evidence-of-female-infanticide.html

Mayer, G. R., Sulzer, B., & Cody, J. J. (1968). The Use of Punishment in Modifying Student Behavior. The Journal of Special Education, 2(3), 323–328. https://doi.org/10.1177/002246696800200311

Shanmugasiva, M. (1999). Veedum Vilithugalum. Sembaruthi Publications. https://mail.google.com/mail/u/1/#inbox/FMfcgxwLtZprTXch dLcfkcLBGlWB JsNq?projector=1&m essagePartId=0.1

Vickneshwaran Parthiban, Kaviarasi Ramespran, 2020. *'வீடும் விழுதுகளும் எனும் சிறுகதையில் தொகுப்பில் காணப்படும் சமூகவியல் கோட்பாடு : ஓர் ஆய்வு'* file:///C:/Users/User/Downloads/Vicky%20Anna.pdf

Wong L. (2008). Data analysis in qualitative research: a brief guide to using nvivo. Malaysian family physician : the official journal of the Academy of Family Physicians of Malaysia, 3(1), 14–20. https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC4267019/

ஜெயமோகன், 2018. இலக்கியம் என்பது என்ன? -மீண்டும். https://www.jeyamohan.in/106655/

வாலியின் திரையிசைப் பாடல்களில் அணிநலன்

முனைவர் க. சங்கர்

உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ்த்துறை, தொன் போஸ்கோ கல்லூரி
தருமபுரி – 9790230035

முன்னுரை

தமிழ்த் திரைப்படத்துறையில் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாகத் திகழ்ந்தவர் கவிஞர் வாலி. அவரது பாடல்கள் கேட்பவரின் நெஞ்சத்தில் நீங்கா இடம் பிடித்தவை. இசையமைப்பாளர்களின் இசையின் மெட்டுகளுக்கு ஏற்றாற்போல தம் கவித்திறத்தால் பல பாடல்களை வாலி படைத்துக் கொடுத்திருப்பினும், அவர் தமிழ் இலக்கிய உலகிலும் தடம் பதித்தவர். கவிஞர், பாடலாசிரியர் என்று இல்லாமல் எழுத்தாளராகவும். ஓர் இலக்கியவாதியாகவும் வாலி விளங்கினார். மரபுக் கவிபாடும் கவிஞர்களில் ஒருவராக இருந்த வாலி, புதுக்கவிதை என்னும் புது அத்தியாயத்தை எடுத்துக் கொண்டு திரைப்பட உலகினில் ஒரு சகாப்த மானார். அவரது திரைப்பட பாடல்களின் எழுத்து நடை மிக எளிமையானது. படித்தவர்களிடம் மட்டும் நில்லாமல், பாமரர்களிடமும் சென்று சேர்ந்தது. அனுபவமிக்க வரிகளை அழகாக எடுத்துச் சொல்லும் ஆற்றல் வாலிக்குரியது. எளிய சொற்களால் இனிய நடையை உருவாக்கி இசையாக வடித்தவர் வாலியென்றால் அது மிகையன்று. அவரது திரையிசைப் பாடல்களில் காணலாகும் அணிநலன் களை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

அணி

அணி என்பதற்கு அழகு என்பது பொருள் சொல்லாலும் எழுத்தாலும் பொருளாலும் யாப்பினாலும் அமையும் ஒரு செய்யுளை அழகுற அமைப்பதை அணியிலக்கணம் என்று கூறுவர். "அணியலங்காரம் என்பது கவிதையின் பொதுத் தன்மையும் நுட்பமும் எடுத்துக்காடுவதாகும்" என்று அணி இலக்கணத்தின் சிறப்பினை வ.த.இராம சுப்பிரமணியம் விளக்குகிறார். மேலும் "செய்யுளில் அமையும் அழகை மொழியின் அழகை விளக்குவது அணி இலக்கணமாகும். புலவன் தன்னுடைய கருத்தினைத் தெளிவாகவும் உறுதி யாகவும் எடுத்துரைப்பதற்கு இலக்கி யத்தில் அணிகள் பலவும் உதவுகின்றன" (மு. தமிழரசன், கண்ணதாசன் படைப்பு களில் சங்க இலக்கியக் கூறுகள், ப - 240) என்று மு. தமிழரசன் அணியின் பயனை எடுத்துரைக்கின்றார்.

அணியின் வகைகள்

"தன்மை உவமை
உருவகம் தீவகம்
பின்வரு நிலையே
முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பே
வேற்றுமை விபாவனை
ஒட்டே அதிசயம்
தற்குறிப்பேற்றம் ஏது நுட்பம்
இலேசம் நிரல்நிறை
ஆர்வ மொழி சுவை தம்மேம்
பாட்டுரை பரியா யம்மே
சமாயிதம் உதாத்தம்
அரிதுணர் அவநுதி சிலேடை
விசேடம் ஒப்புமைக் கூட்டம்
மெய்ப்படு விரோதம்
மாறுபடு புகழ்நிலை புகழாப்
புகழ்ச்சி நிதரிசனம் புணர்நிலை
பரிவருத்தனையே வாழ்த்தொடு
சங்கீரணம் பாவிகம் இவை
ஏற்ற செய்யுட்கு அணி ஏழ்
ஐந்தே" – [ச.திருஞானசம்பந்தம்,
தண்டியலங்காரம், நூற்பா – 26, ப
– 38]

என தண்டியலங்காரம் முப்பத்தைந்து வகையான பொருளணிகளைக் குறிப்பிடு கின்றன.

வாலியின் திரையிசைப் பாடல்களில் அணி நயங்கள்

அணி நயங்களே ஒரு கவிதையை அழகாக எடுத்துக் காட்டுகின்றன. கவிஞனின் கற்பனைத் திறத்திற்கு ஏற்றாற் போலவும், கவிஞனின் மொழிப் புலமைக்கு ஏற்றாற்போலவும் ஒரு கவிதை ரசனை மிகுந்ததாய் அமைகிறது. அவ்வகையில், வாலியின் திரையிசைப் பாடல்களில் அணிநயங்கள் மிகுந்திருப் பதைக் காணமுடிகிறது.

தன்மையணி

ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடியே எடுத்துக் கூறுவது தன்மை யணியாகும். இதனை,

"எவ்வகைப் பொருளும்
மெய்வகை விளக்கும்
சொன்முறை தொடுப்பது தன்மை
ஆகும்" – [ச. திருஞான
சம்பந்தம், தண்டியலங்காரம்,
நூற்பா – 27, ப–9]

என்று தண்டியலங்காரம் குறிப்பிடும்.

சர்வர் சுந்தரம் என்னும் திரைப் படத்தில் காணலாகும்,

"அவளுக்கென்ன அழகிய முகம்
அவனுக்கென்ன இளகிய மனம்
நிலவுக்கென்ன இரவினில்
வரும்" [வாலி 1000, திரையிசைப்
பாடல்கள், தொகுதி – 1, ப – 19]

என்னும் இப்பாடலில் அழகிய முகம், இளகிய மனம், நிலவு இரவில் வரும் என அவற்றின் இயல்புகள் அப்படியே உணர்த்தப்பட்டமையால் இதனுள் தன்மையணி அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

உவமையணி

ஒரு பொருளை அதனோடு தொடர் புடைய வேறொரு பொருளோடு

ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமையணி ஆகும். இதனை,

"பண்பும் தொழிலும் பயனும்
என்று இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு
பொருள்புணர்த்து
ஒப்புமை தோன்றச் செப்புவது
உவமை" – [ச. திருஞான சம்பந்தம், தண்டியலங்காரம், நூற்பா – 29, ப – 43]

என தண்டியலங்காரம் குறிப்பிடும். நான்கு வகையில் உவமை தோன்று மென்பதை,

"வினை பயன் மெய் உரு என்ற
நான்கே
வகைபெற வந்த உவமத்
தோற்றம்" [ச. பாலசுந்தரனார். தொல். பொருள். பகுதி – 2, நூற்பா – 277, ப – 303]

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

மௌனராகம் என்னும் திரைப் படத்தில்,

"தாமரை மேலே நீர்த்துளி போல்
தலைவனும் தலைவியும்
வாழ்வதென்ன? நண்பர்கள்
போலே வாழ்வதற்கு
மாலையும் மேளமும் தேவை
யென்ன" [வாலி 1000, திரையிசைப் பாடல்கள், தொகுதி – 2, ப – 18]

என்னும் பாடலில் கணவன், மனைவி உறவுநிலை உவமைகளால் விளக்கப் பட்டுள்ளது.

உருவகவணி

உவமையின் தன்மையைப் பொருள் மேல் ஏற்றிக் கூறுதல் உருவகமாகும். உவமானம், உவமேயம் ஆகிய இரண்டையும் வேறுபடுத்தாது இரண்டும் ஒன்றே எனக் கூறுவது உருவகவணி ஆகும். இதனை,

"உவமையும் பொருளும்
வேற்றுமை ஒழிவித்து
ஒன்று என மாட்டின் அஃது
உருவகம் ஆகும்"
– [ச.திருஞான சம்பந்தம், தண்டியலங்காரம், நூற்பா – 34, ப – 68]

என்று தண்டியலங்காரம் விளக்கும்.

மௌனராகம் என்னும் திரைப் படத்தில்,

"காவேரியா கானல் நீரா –
பெண்மை என்ன உண்மை
முள் வேலியா முல்லைப் பூவா –
சொல்லு
கொஞ்சம் நில்லு" – [வாலி 1000, திரையிசைப்பாடல்கள், தொகுதி – 2, ப – 17]

என்னும் பாடலில் காவேரியே கானல், கானலே காவேரி முல்லையே முள், முள்ளே முல்லை என உவமையே பொருளாக வந்துள்ளமையால் இதனுள், உருவகவணி உள்ளதை அறியலாம்.

தீவக அணி

தீவகம் என்னும் சொல்லுக்கு விளக்கு என்பது பொருள். ஓரிடத்தில் உள்ள

விளக்குப் பல இடங்களிலும் உள்ள பொருளை விளங்கக் காட்டுவது போல, ஓரிடத்தில் நின்ற சொல் பல இடங்களிலும் சென்று பொருளை விளக்குவது தீவகவணி ஆகும். இதனை,

"ஒருவயின் நின்றும் பலவயின்
பொருள்தரின்
தீவகம் செய்யுள் மூவிடத்து
இயலும்" [ச. திருஞான
சம்பந்தன், தண்டியலங்காரம்,
நூற்பா – 38, ப – 86]

என தண்டியலங்காரம் குறிப்பிடும்.

அதே கண்கள் என்னும் திரைப்படத்தில்,

"கண்ணுக்குத் தெரியாதா
பெண்ணுக்குப் புரியாதா
ஒருவித மயக்கத்தில்
இருவரும் இருக்கையில்
காதலன் யாரென்று" [வாலி 1000,
திரையிசைப் பாடல்கள், தொகுதி
– 1, ப – 427]

என்னும் பாடல் வரிகளில் தீவக அணியைக் காணலாம். இப்பாடலின் இறுதிச் சொற்களை முதலிரண்டு வரிகளொடு பொருத்திப் பொருள் விளக்கலாம்.

காதலன் யாரென்று கண்ணுக்குத்
தெரியாதா
காதலன் யாரென்று
பெண்ணுக்குப் புரியாதா

என ஒரு சொல் பல இடங்களில் நின்று பொருளை விளக்குவதால் இது, தீவக அணியைச் சார்ந்தது எனலாம்.

பின்வருநிலையணி

முன்னர் வந்த சொல்லும் பொருளும் பல முறை பின்னரும் வருவது பின்வரு நிலையணி ஆகும். இதனை,

"முன்வரும் சொல்லும்
பொருளும் பலவயின்
பின்வரும் என்னில் பின்வரு
நிலையே" [ச. திருஞான
சம்பந்தம், தண்டியலங்காரம்,
நூற்பா – 40, ப – 95]

என்று தண்டியலங்காரம் விளக்கும்.

காதலர் தினம் திரைப்படத்தில் காணலாகும், பாடலொன்றில்

"உண்மை உண்மை
உண்மை உண்மை – அன்பே
உன்மேல் உண்மை
உன்வசம் எந்தன் பெண்மை"
[வாலி 1000, திரையிசைப்
பாடல்கள், தொகுதி – 2, ப–307]

என்னும் வரிகளில் ஒரே சொல் திரும்ப திரும்ப வந்துள்ளதைக் காணமுடிகிறது.

வேற்றுமை அணி

இரு பொருள்களுக்கான ஒப்புமையை முதலில் கூறி பின்பு ஏதேனும் காரணம் கருதி, அவற்றை வேறுபடுத்திக்காட்டுவது வேற்றுமை அணி ஆகும். இதனை,

"கூற்றினும் குறிப்பினும்
ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின்
வேற்றுமை இதுவே"
[ச.திருஞானசம்பந்தம்,

தண்டியலங்காரம், நூற்பா – 47, ப – 115]

எனத் தண்டியலங்காரம் குறிப்பிடும்.

பிரம்மா என்னும் திரைப்படத்தில் காணலாகும்,

"பாலைப் போல கள்ளும் கூட
வெண்மையானது
பருகிடாது விளங்கிடாது
உண்மையானது
நீயும் காணக்கூடும் இங்கு ஓர்
தினம் இந்தப் பால் மணம்" [வாலி 1000, திரையிசைப் பாடல்கள், தொகுதி – 2, ப – 217]

என்னும் பாடல் வரிகளில் வேற்றுமை அணியைக் காணலாம். பாலும் கள்ளும் வெண்மையான நிறமென்னும் ஒப்புமையை முதலில் கூறும் கவிஞர், பின்னர் பருகினால் இரண்டும் வெவ் வேறானவை என்பது புலப்படும் என்று வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.

முடிவுரை

அணி என்பது சொல்லாலும் பொருளாலும் கட்டமைக்கப்படும் கவிதையின் அலங்கார அமைவு. யாப்பிலமைத்த கவிதைகளில் மட்டுமல்ல புதுக்கவிதைகளிலும் அணியென்னும் அலங்காரத்தைக் காணவியலும். அணிநயங்கள் சற்று நுட்பமானவை, படைப்பாளன், படிப்பாளன் ஆகியோரது புலமையைச் சோதிக்கும் களமாக அணிநயங்கள் அமைகின்றன. வாலியின் திரையிசைப்பாடல்களில் காணக்கிடைக் கின்றன. இவ்வணி நயங்கள் கவிஞர் வாலியின் மொழிப்புலமைக்கும் இலக்கிய இலக்கண அறிவிற்கும் சான்றாக அமைவதனை அறிய முடிகிறது.

கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதமும் இன்ப வாழ்வும்

D. சங்கீதா

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி, நான்காம் தமிழ்ச் சங்கம்,
தமிழ் உயராய்வு மையம், மதுரை.

முன்னுரை

'மனிதன் சமூக வாழ்க்கையை மேற்கொண்டு விட்ட ஒரு மிருகம்' என்றார் ஓர் ஆங்கில அறிஞர்.

இன்றுதனிமனிதர்கள் சமூகமாகி விட்டார்கள். தனிமனிதனுக்கான நியதிகளோடு சமுதாயத்திற்காகச் சில சம்பிரதாயங்களும் உருவாயின.

கணவன் மனைவி உறவு, தாய்-தந்தை பிள்ளைகள் உறவு. தாயாதிகள்- பங்காளிகள் உறவு, ஊர்பொது நிலத்துக் கான கூட்டுறவு முதலியவைகள் தோன்றின. 'சகோதரன்' 'என்ற வார்த்தையை' சகஉதிரன், ஒரே வயிற்றில் பிறந்தவன் என்பதைக் குறிக்கும்.

சம்பிரதாயங்களாகித் தோன்றிய உறவுகள் மரபுகளாகி, அந்த மரபுகள் எழுதாத சட்டங்களாகிவிட்டன.

"பிறப்பால் தொடரும் உறவுகளல் லாமல், பிணைப்பில் தொடரும் உறவுகளே உன்னதமானவை" என்பது இந்துமதத் தத்துவம்.

பிறப்பின் உறவுகள் பேதலிக்கின்றன.

பெற்ற தந்தையைப் பிச்சைக்கு அலையவிடும் மகன் இருக்கின்றான். கட்டிய தாரத்தையும் பட்டினி போடும் கணவன் இருக்கிறான்.

தாயைத் தவிக்கவிட்டுத் தாரத்தின் பிடியில் லயித்துக்கிடக்கும் பிள்ளை இருக்கிறான். கூடப்பிறந்தவனே கோர்ட்டுப் படிக்கட்டுகளில் ஏறி எதிராக நிற்கிறான்.

சமூக மரபுகள் இவற்றை ஒழுக்கக் கேடாக கருதவில்லை ஆயிரம் வாசல் இதயம்! யாரோ வருகிறார்கள் யாரோ போகிறார்கள்!

வாழ்ந்தால் சிரிக்கிறார்கள், வறண்டால் ஒதுங்குகிறார்கள் செத்தபின் ஒப்புக்காக அழுகிறார்கள்.

கண்ணீரைத் துடைக்கின்ற கைகள், காயத்துக்குக் கட்டுப் போடும் கைகள், வறுமையில் பங்கு கொள்ளும் உள்ளம், சோதனையில் கூடவே வரும் நட்பு உறவு பூர்த்தியாகி விடுகிறது.

ஆசை எந்தக் கட்டத்தில் நின்று விடுகிறதோ, அந்தக் கட்டத்தில் சுய தரிசனம் ஆரம்பமாகிறது.

சுயதரிசனம் பூர்த்தியானவுடன், ஆண்டவன்தரிசனம்கண்ணுக்குத்தெரியாது.

ஆனால் எல்லோராலும் அது முடிகிறதா? இல்லை, இந்து மதம், மனிதனின் ஆசை, மதத்துவம், பெண் களுக்கு இளைஞர்களுக்கு. தெய்வம் பாவ புண்ணியம், தத்துவம் கடவுள் தேரையின் உரை, என மனிதர்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தும் கூறும் மதம் நமது இந்துமதம் தான்.

திறவுச்சொற்கள்

இந்து மதம், தர்மம், ஆசை, தெய்வம்

பொருளுரை

நமது அர்த்தமுள்ள இந்து மதம், இவ்வளவுதான் வாழ்க்கை என்று ஒரு பட்டியலைப் போட்டு யாரும் முடித்து விட முடியாது என்கிறது. இந்து மதத்தில், தொட்ட இடமெங்கும் நவமணிகள் தட்டுப்படுகின்றன. தத்துவங்கள், அனுபவங்களுக்கு ஒத்து வருவதில் அரசியலில் குறைவு. ஆனால் ஆன்மீகத்தில் அதிகம் யார் எவ்வளவு அழிந்தார்கள் என்பது பற்றியோ உயர்ந்தார்கள் என்பது பற்றியோ நான் ஏன் கவலைப்பட வேண்டும் 'தர்மத்தைச் செய் பலனை என்னிடம் ஒப்படைத்து விடு' என்பது இங்கேதான் சொல்லப்படுகிறது. "தேள் ஒன்று கங்கையில் மிதந்து சென்றது அதனை எடுத்து வெளியே விட்டார். மீண்டும் நீரில் சென்றது மீண்டும் மீண்டும் எடுத்தால் கொட்டியது' மீண்டும் நீரில் சென்றது இதனைப் பார்த்த ஒருவர் கேட்டார் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கடைசி வரை அது அதன் சுபாவம் விடவில்லை, நான் ஏன் என்னுடைய தர்மத்தை விட வேண்டும் என்று, உண்மையில் நன்மை செய்வது என்று தீர்மானித்து விட்டால் நன்றி கெட்ட வனுக்குக் கூட அதைச் செய்வதுதான் தர்மம்.

உன்னுடைய கர்மம் நன்மை செய்வதானால் அதை யாருக்கு வேண்டு மானலும் செய், அதுவே தர்மம் என்கிறது. சலனங்களுக்கும் சபலங்களும் வரு கின்றன. அதற்கு ஆட்பட்டு விடாதே, மனிதன் செய்யும் கர்மம் அவன் மரணத்தினால் தான் முடிய வேண்டும். உன்னால் முடிந்ததைச் செய், தாய் தாரம், குடும்பத்தை நேசி, 'நெல் என்ற ஒன்றை அவன் படைக்க விரும்பாமல் இருந்திருந் தால் சோறு என்ற ஒன்றை நாம் கண்டிருக்க மாட்டோம்'. கொடுக்கின்ற இடத்திலே தான் இறைவன் அருள் சுரக்கும், தேங்காதீர் தேங்கியே கிடந்து விட்டால் நோய்களுக்கு அது காரணமாகும்.

இல்லாமை கொடுமையல்ல; இயலாமை குற்றமல்ல விரும்பாமையே பாவமாகும் பிள்ளையே இல்லாத கோடீஸ்வரர் எல்லையே இல்லாத வீடு கட்டியுள்ளார். மனக்கதவு அடைத்துக் கொண்டு அதனால் வாசற் கதவும் அடைக்கப்பட்டது. இத்தகைய மூடர் களுக்காகவே இந்துமதம் நிலையாண் மையை போதித்தது. ஸ்ரீகாஞ்சிப் பெரியவர்கள் (பிஞ்சுப் பருவத்திலேயே) தன்னை ஒழுங்கு சேவைக்கு ஒப்படைத்துக் கொண்டவர். கொடிய நாத்திகன் கூட நாக்கிலே பல்லைப் போட்டு அவரை

பேசிவிட முடியாது. மறந்து கூட செல்வத்தை நினைத்து அறியாதவர் எந்தக் காரியத்துக்கும் பிறரை அண்டி அறியாதவர்.

மனிதனின் ஆசை

லட்சத்தில் ஒருவருக்கே ஆசையை அடக்கும் அல்லது ஒழிக்கும் மனப் பக்குவம் இருக்கிறது.

என் ஆசை எப்படி வளர்ந்ததென்று எனக்கே நன்றாகத் தெரிகிறது. வேலை யின்றி அழைந்தபோது "மாதம் இருபது ரூபாயாவது கிடைக்கக் கூடிய வேலை கிடைக்காதா" என்று ஏங்கினேன், கொஞ்ச நாளில் கிடைத்தது.

மாதம் 25 ரூபாயில் பத்திரிக்கையில் வேலை கிடைத்தது. ஆறுமாதம் தான் அந்த நிம்மதி.

மாதம் ஐம்பது ரூபாய் கிடைக்காதா? என்று மனம் ஏங்கிற்று அதுவும் கிடைத்தது, பிறகு மாதம் 100, 500, 1000, 2000 ஆசை பெருகிற்று யாவும் கிடைத்தன. இப்பொழுது நோட்டடிக்கும் உரிமையை மனது கேட்கும் போலிருக்கிறது?.

எந்தக் கட்டத்திலும் ஆசை பூர்த்தியா வதில்லை. எவ்வளவு கிடைத்தாலும் மனது அடுத்த கட்டத்திற்கு தாண்டுகிறதே அதுதான் இறைவன் லீலை!

ஆசைகள் அற்ற இடத்தில் குற்றங்கள் அற்றுப் போகின்றன. குற்றங்கள், பாவங்கள் இல்லையென்றால் நன்மை தீமைகளையும் கண்டு பிடிக்க முடியாது.

தவறுகளின் மூலமே மனிதன் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இறைவன் ஆசையைத் தூண்டி விடுகிறான்.

இந்து மதம் ஆசையை மூன்று விதமாகப் பிரிக்கிறது.

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசையால் கொலை விழுகிறது. பொன்னாசையால் களவு நடக்கிறது. பெண்ணாசை வளர்ந்து விட்டால், பாவம் நிகழ்கிறது. இந்த மூன்றில் ஒரு ஆசையும் இல்லாத மனிதர்கள் மிகவும் குறைவு, ஆகவேதான் பற்றற்ற வாழக்கையை இந்து மதம் போதித்தது.

இருப்பது போதும், வருவது வரட்டும், போவது போகட்டும், மிஞ்சுவது மிஞ்சட்டும் என்று சலனங்களுக்கு ஆட்படாமல் இருப்பதே பற்றற்ற வாழ்க்கையாகும்.

இந்து மதத்தத்துவம்

ஆசை, தீமைக்கு அடிப்படையாக இல்லாதவரை, அந்த ஆசை வாழ்வில் இருக்கலாம் என்கிறது இந்து மதம்.

நான் சிறைச்சாலையில் இருந்தபோது கவனித்தேன் அங்கே இருந்து கொண்டு அவன் "முருகா முருகா" என்று கதறுகிறான். ஆம், அவன் அனுபவம் அவனுக்கு உண்மையை உணர்த்துகிறது.

அதனால்தான் "பரம்பொருள் மீது பற்று வை" நிலையற்ற பொருள்களின் மீது ஆசை வராது என்கிறது இந்து மதம்.

'தாமரை இலைத் தண்ணீர் போல்' என்று போதித்தது இந்து மதம், நேரிய

வழியில் ஆசை வளரலாம், ஆனால் அதில் லாபமும் குறைவு, பாவமும் குறைவு,

"எதிர்பார்ப்பதைக் குறைத்துக் கொள்" "வருவது மனதை நிறைய வைக்கிறது" என்பதே இந்துக்கள் தத்துவம்.

எவ்வளவு அழகான மனைவியைப் பெற்றவனும் இன்னொரு பெண்ணை ஆசையோடு பார்க்கிறானே, ஏன்? லட்சக்கணக்கான ரூபாய் சொத்துக்கள் இருந்தும் ஓர் ஆயிரம் ரூபாய் கிடைக்கறதென்றால் ஓடுகிறானே ஏன்? அது ஆசை போட்ட சாலை,

'பொறாமை, கோபம்' எல்லாமே ஆசை பெற்றெடுத்த குழந்தைகள் தான், அனுபவங்கள் இல்லாமல் அறிவின் மூலமே தெய்வத்தைக் கண்டு கொள்ளும் படி போதிப்பது தான் இந்துமதத் தத்துவம்.

இந்துமதம் என்றும் சந்நியாசிகளின் பாத்திரமல்ல வாழ விரும்புகிறவர்கள், வாழ வேண்டியவர்களுக்கு வழிகாட்டி,

நமது உள்ளம் நிர்மூலமாக, வெண்மை யாக, தூய்மையாக இருக்கிறது என்பதற்கு அடையாளமாகவே அது 'திருநீறு' பூசச் சொல்லுகிறது.

உன் உடம்பு, நோய் நொடியின்று ரத்தம் சுத்தமாக இருக்கிறது என்பதற் காகவே குங்குமம் வைக்கச் சொல்கிறது.

இந்து பெண்கள்

'இவன் திருமணமானவள்' என்று கண்டுகொண்டு அவளை ஆசையோடு பார்க்காமலிருக்கப் பெண்ணுக்கு அது 'மாங்கல்யம்' சூட்டுகிறது.

தன் கண்களால் ஆடவனுடைய ஆசையை ஒரு பெண் கிளறி விடக் கூடாது என்பதற்காகவே, அவளைத் 'தலை குணிந்து' நடக்கச் சொல்கிறது.

"பொம்பளை சிரிச்சா போச்சு" "புகையிலை விரிச்சாப் போச்சு" இந்துக்கள் பழமொழி.

கூடுமானவரை மனிதனைக் குற்றங் களிலிருந்து மீட்பதற்கு தார்மீக வேலி போட்டு வளர்க்கிறது இந்து மதம்.

இன்றைய இளைஞர்களுக்கு

இன்றைய இளைஞனுக்கு ஷேக்ஸ்பி யரைத் தெரியும்; ஷெல்லியைத் தெரியும்; ஜேம்ஸ்பாண்ட் தெரியும், கெட்டுப் போன பின்புதான் அவனுக்குப் பட்டினத்தாரைப் புரியும்,

நியாயமான நிம்மதியான வாழ்க் கையை நீ மேற்கொள்ள, உன் தாய் வடிவில் துணை வருவது இந்துமதம்.

"அவிழ்த்து விடப்பட்ட யானை, மரங்களையும் செடி கொடிகளையும் வேரோடு பிடுங்கிப் போடுகிறது. ஆனால் அதன் பாகன் அங்குசத்தால் அதன் தலையில் குத்தியதும், அது சாந்தமாகி விடுகிறது,"

'அதுபோல், அடக்கியாளாத மனம் வீண் எண்ணங்களில் ஓடுகிறது' அடக்கி யாள்வதன் பெயரே வைராக்கியம்,

நீ சுத்த வைராக்கியனாக இரு, ஆசை வளராது, உன்னைக் குற்றவாளியாக்காது, உன் நிம்மதியைக் கெடுக்காது.

வாழ்வின் நிலை

முதற்கட்டம் வரவு என்றால், அடுத்த கட்டம் செலவு, முதற் கட்டம் வறுமை என்றால், அடுத்த கட்டம் செல்வம் முதற்கட்டம் இன்பமென்றால், அடுத்த கட்டம் துன்பம், எல்லாச் செல்வங் களையும் நிரந்தரமாக எவனுக்கும் இறைவன் வழங்கியதில்லை, அந்த நாளில் எனக்கு நல்ல பசியெடுத்தது; உணவு கிடைக்கவில்லை, பின் பசியிருந்தது உணவும் கிடைத்தது, இப்போது உணவு கிடைக்கிறது, பசியில்லை அடுக்கடுக்காக பணம் சேர்கிறது அடுத்த நாளே "அரிசி சாப்பிடக் கூடாது" சர்க்கரை வியாதி என்று சொல்லி விட்டார் டாக்டர்.

ஏற்றம் என்பது இறைவன் வழங்கும் பரிசு, இறக்கம் என்பது அவன் செய்யும் சோதனை.

மேடும் பள்ளமுமாக வாழ்க்கை மாறி மாறி வந்தால் உனக்குப் பெரிய வீழ்ச்சி யில்லை. ஒரேயடியாக உச்சிக்கு நீ போய் விட்டால் அடுத்து பயங்கரமான சரிவு காத்திருக்கிறது. வீழ்ச்சியில் கலக்கமோ எழுச்சியில் மயக்கமோ கொள்ளாதே!

"எல்லாம் தெய்வத்தின் செயல்" என்றார்கள் நம் முன்னோர்கள். முக் காலமும் உணர்ந்த கௌதமனுக்கே, பொய்க் கோழி ஏது, உண்மைக் கோழி எது என்று தெரியவில்லையே!

அதனால் தானே அகலிகை கெடுக்கப் பட்டதும், சாபம் பெற்றதும். இந்தக் கதைகளை நமது இந்துமத ஞானிகள் எழுதி வைத்தார்கள்.

தர்மம்

தர்மம் என்றும், சத்தியம் என்றும், நேர்மை என்றும், நியாயம் என்றும் சொல்லி வைத்த நமது மூதாதையர்கள் முட்டாள்களல்ல, கஷ்டத்திலும் நேர்மை யாக இரு, நீ ஏமாற்றப்பட்டாலும் பிறரை ஏமாற்றாதே, உன் வாழ்நாளிலேயே அதன் பலனைக் காண்பாய், தெய்வ நம்பிக்கை உன்னைக் கைவிடாது.

தெய்வம்

மிகவும் உத்தமர்கள் என்று சொல்லத் தக்க உயர்ந்தோரில் ஒருவர், முப்பது முப்பந்தைந்து வயதுவரை, வாழ்க்கை கடுமையான வறுமை, ஏழ்மையும் கழிந்தது. குஸ்தி கோதா, சிறிய பால் பண்ணை, ஜூபிடர் பிக்சர்ஸ் படங்களில் ஸ்டண்ட் நடிகராக அவரது வரலாறு உழைத்து முன்னேற விரும்புவர்களுக்கு ஒரு பாடமாகும். வெற்றிலை பாக்கு கடையில் ஆறு ரூபாய் கடன் கழுத்தில் துண்டைப் போட்டு முறுக்கினான். அவர் அடிக்கடி கோவைக்கு பத்து மயில் அப்பால் இருக்கும் மருதமலைக்குப் போய் "முருகா! முருகா!" என்று அழுவார். "முருகா! காப்பாற்று" என்று வேண்டிக் கொண்டார். நள்ளிரவில் காடுகள் நிறைந்த மலையை விட்டு இறங்கினார். வழியில் ஒரு சிகரெட் பாக்கெட் கிடந்தது. அதைக் காலால் உதைத்துக் கொண்டு நகர்ந்தார். அந்த சிகரெட் பாக்கெட்டை கொஞ்ச தூரம் சென்றபின் திரும்பி வந்து எடுத்தார். உள்ளே இரண்டு சிகரெட்டுகளும் பத்து

ரூபாய் நோட்டும் இருந்தன. "நல்லவனாக வாழ்ந்தோம் தெய்வத்தை நம்பினோம்" தெய்வம் கைவிடவிலை "என்று தானே எண்ணியிருக்கும்!

அந்த முருகன் அவரை வாழ வைத்தான். ஒவ்வொரு நாளும் "முருகா! முருகா!" என்று உருகுகிறார்.

"தனக்கு நஷ்டம் வந்தாலும் பிறருக்கும் நஷ்டம் வரக்கூடாது" என்று தொழில் புரிகிறார். அவர் நாளும் செழித்தோங்குகிறார் அவர்தான் சின்னப்பதேவர் சிறு வயதில் இருந்தே தெய்வ நம்பிக்கை கொண்டவர்.

நீயும் நல்லவனாக இரு, தெய்வத்தை நம்பு, உனக்கு வருகிற துன்பமெல்லாம், பனிபோலப் பறந்து ஓடாவிட்டால் நீ இந்து மதத்தையே நம்ப வேண்டாம்.

பாவ புண்ணியம்

"பாவமாம், புண்ணியமாம்; எந்த மடையன் சொன்னான்?" சொர்க்கமாம், நரகமாம், எங்கே இருக்கின்றன அவை?" பாவமும் புண்ணியமும் பரலோகத்தில் தானே? பார்த்துக் கொள்வோம் பின்னாலே?" இவையெல்லாம் பகுத்தறிவு உதிர்க்கும் பொன் மொழிகள்.

நீ செய்யும் நன்மை தீமைகள், அதே அளவில் அதே நிலையில் உன் ஆயுட் காலத்திலேயே உன்னிடம் திரும்பிவிடு கின்றன, "செய்தவினை, அதே வடிவத்தில் திரும்பவரும்" என்று முதன் முதலில் போதித்தது இந்துமதம் தான்

"பாவம் என்பது நீ செய்யும் தீமை"

"புண்ணியம் என்பது நீ செய்யும் நன்மை"

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

"அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்," "விநாச காலே விபரீத புத்தி," இவையெல்லாம் இந்துக்களின் பழமொழிகள். பிறர் சொத்தைத் திருடிக்கொண்டு, அதை நிம்மதியாக அனுபவித்து, அமைதியாகச் செத்தவன் எவனாவது உண்டா?

இந்து மதத்தைப் பற்றி ராம கிருஷ்ணரும், விவேகானந்தரும், காஞ்சி ஆசாரிய சுவாமிகளும் விரிவுரை நிகழ்த்தும் வாரியாரும் பிறரும் சொல்லாத விஷயங்களை எதையும் நான் புதியதாக சொல்லப் போவதில்லை.

"ஒவ்வொரு ஒலிக்கும் எதிரொலி இருக்கிறது" என்பது அவர்கள் வாதம், மங்கல வழக்கு, அமங்கல வழக்கு எனப் பிறந்தது இந்துக்களிடம்தான்.

நன்கு பாடக்கூடிய ஒருவர் ஓகோ என்று ஒரு காலத்தில் வாழ்ந்தார் பின்னாளில் மிகுந்த வறுமை அவரின் மனைவி மஞ்சளை மஞ்சல் நூலில் கோர்த்து அணிந்திருந்தார். அடகுவைத்த கடையில் நான் சென்று பணம் தந்து கேட்டேன் வட்டிக்கே சரியானதாக கூறி இல்லை இன்னும் பணம் தேவை என்று அனுப்பிவிட்டார். பிறகு புதியதாக தாலி வாங்கி, தன் மனைவியின் கழுத்தில் கட்டினார். பிறகு மிகுந்த செல்வந்தர் ஆனார் பாடகர். பிறகு அந்தத்தாலி அவரது

குடும்பத்தின் நிம்மதியையே அழித்து விட்டது. இந்துக்களின் மங்கல சூத்திரம் தன் சக்தியைக் காட்டிவிட்டது.

பாவத்தின் நிலை, அவரது வாழ் நாளிலேயே கிடைத்து விட்டது. அந்த அடகு கடைக்காரர் இழுத்து கிடந்ததும், மாண்டதும் விவரிக்க முடியாத பெருங்கதை.

"தாயைப் பணிந்தவன் கோவிலுக்குப் போக வேண்டாம்" என்பார்கள், தாய் தந்தையரை மனமாற நேசிக்கும் எவனுக்கும் எதிர்காலம் உண்டு.

தாய்ப்பாசம்

கண்ணதாசன் அவர்களின் சமூகத்தைச் சார்ந்தவர் விதவைத்தாய் தன் வயிற்றைக் கட்டிவைத்து மகனுக்குச் சோறூட்டுவாள். பிள்ளைகள் இல்லாத பணக்காரர்கள் குழந்தைகளை 'சுவிகாரம்' எடுக்கும் பழக்கம் பரவலாக உண்டு. தன் பிள்ளை யாவது நன்றாக வளரட்டும் என அத்தாய் தந்து விட்டாள். லட்சாதிபதியாக வளர்ந்த மகன் வசதியான வீட்டுப் பெண்ணை திருமணம் செய்கிறான் அவனால் தாயை மறக்க முடிந்தது. அவளால் அது முடிய வில்லை.

ஆசையாக ஒரு கூடையில் பணி யாரமும், உழுந்து வடை கொண்டு வந்து, துணியில் அதை மூடி வைத்திருக் கிறார்கள் மகனுக்கு தன் கையில் ஊட்டி விடுவதற்காக,

உள்ளே யாரும் விடாததால் திண்ணையில் அமர்ந்திருந்தார். கண்ண தாசன் அவர்கள் கேட்க என் மகன் உள்ளே உள்ளான் பார்க்க முடியவில்லை என்று கண்ணீரோடு கூறுகிறாள். அவர் சென்று அந்த மகனிடம் கூற "இந்தா ஆத்தா வந்திருக்களாம், இதே வேலையாய்ப் போச்சு, வராதே வராதேன்னா எதுக்காக வர்ராக?" என்று கூறிவிட்டு, கணக்குப் பிள்ளையை அழைத்து, "இந்தா ஆத்தா விடம் ஒரு இருநூறு ரூபாய் கொடுத்து, இனிமே இந்தப்பக்கம் வரவேண்டாம்" என்று சொல்லு என்றார்.

"அதை நீயே கூப்பிட்டுச் சொல்லேன்" என்றேன் நான் அவர் மறுத்துவிட்டார், மனைவிக்குப் பயந்து.

தம்பி! ஐயா! ஒருதரமாவது பார்த்து விட்டுப் போயிடுவேன்?" என்று சத்தம் போட்டார்கள். அந்தக் குரல் அந்தப் பாவியின் காதில் விழவில்லை. விளைவு என்ன தெரியுமா? தாயின் குரலைக் கேட்காத அந்தக் காதுகள், வேறு எந்தக் குரலையும் கேட்க முடியாதபடி, டமாரச் செவிடாகிவிட்டான்.

தாய் தகப்பனுக்குச் செய்யும் பாவம் உன் தலையைச் சுற்றி அடிக்கும், ஆயிரம் மனைவிமார்களை விலைக்கு வாங்கலாம். அன்னையும் பிதாவும் மறுபடி வர முடியாது.

இந்துக்கள் சொன்ன தத்துவம் வேடிக்கைக் கதையல்ல, 'யாருக்கு நீ பாவம் செய்தாலும் அதற்குத் தண்டனை உண்டு' என்பது அழிக்க முடியாத உண்மை.

'பாவத்தின் அளவு எவ்வளவோ அவ்வளவே தண்டனை' என்பது எவ்வளவு உண்மை! இறைவன் தீர்ப்புகள் எப்படி

இருக்கும் என்பதை இந்துக்கள் சொன்னது போல் வேறுயார் சொன்னார்கள்?

கடவுள் நம்பிக்கை

"வந்த வினையும் வருகின்ற வல்வினையும்,

கந்தனென்று சொல்லக் கலங்கும்"

ஆனால் செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையமாட்டா,

கொலை, களவு, சூது அனைத்தையும் செய்துவிட்டு, "குமரா! முருகா!" என்று கூறினால் குமரன் நீ வரும் கோயிலுக்குக் கூட வரமாட்டான்.

பக்தி செய்யும் எல்லோருக்கும் பரமனருள் கிடைப்பதில்லை, அது பாவம் செய்யாதவர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. 'உண்மையே தெய்வம்', 'அன்பே தெய்வம்' என்று இந்துமதம் சொன்னது அதனால் தான்.

'நம்பினோர் கெடுவதில்லை', நான்கு மறைத் தீர்ப்பு உண்மை தான், 'கெட்டவன்' நம்பினால் அவனருள் கிட்டுவதில்லை.

தேரையின் உரை

ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி ஒருமுறை கங்கைக்குக் குளிக்கச் சென்றார். அவரது அம்பறாத் துணியில் ஒரே ஒரு அம்பு மட்டுமே இருந்தது. அம்பை, படுக்கை வசமாக வைக்க கூடாதென்ற மரபுப்படி அதைப் பூமியை குத்தி வைத்தார்.

"ஒற்றை அம்பை ஊன்றி வை" என்பது வழக்கு ஊன்றி வைத்தபின்பு கங்கையில் குளித்து விட்டுக்கரையேறினார். ஊன்றிய அம்பை எடுத்தார்.

அதிலொரு தேரைக் குஞ்சு குத்தப் பட்டிருந்தது பூமியில் இருந்த தேரைக் குஞ்சை அவர் அறியாமல் குத்திவிட்டார். தேரைக் குஞ்சு சாகும் தருவாயிலிருந்தது.

இராமபிரான் கண்கள் கலங்கி விட்டன.

"ஐயோ தேரையே! நான் குத்தும் போது நீ கத்தியிருந்தால் காப்பாற்றி இருப்பேனே, ஏன் கத்தவில்லை?" என்றார். அதற்குத் தேரை சொன்னது;

"பெருமானே! யாராவது எனக்குத் துன்பம் செய்யும் போதெல்லாம் நான் "ராமா ராமா" என்றுதான் சத்தமிடுவேன் அந்த ராமனே என்னைக் குத்துகிறார் என்னும்போது, யார் பெயரைச் சொல்லி ஓலமிடுவேன்?"

ராமபிரான் கண்ணீரோடு தேரையே, என்னை மன்னித்துவிடு இதுநான் அறியாமல் செய்த பிழை,

தேரை சொன்னது,

"பெருமானே! அறியாமல் செய்கின்ற பிளைகள் அப்பொழுதே மன்னிக்கப் படுகின்றன. என்று சொன்னது உன் வாக்குத் தானே!"

கண்ணதாசன் கூறுகிறார், என்னுடைய ஊழியர்களில் என்னை ஏமாற்றாதவர்கள் குறைவு, ஏமாற்றிய வர்களில் நன்றாக வாழ்கின்றவர்கள் குறைவு, என்னைப் போல் எழுத்தில் சம்பாதித்தவர்கள் குறைவு, சம்பாதித்ததை அள்ளி

இறைத்ததில் என்னைப்போல் அள்ளி இறைத்தவர்கள் குறைவு, இவற்றிற்கு இடையே ஏதோ ஒரு சுடரொளி என்னைக் காப்பாற்றுகிறது. என் தாய் - தகப்பன் செய்த தருமங்களை நினைக் கிறேன். தர்மம் 'தலைகாக்கும்' என்ற இந்துக்களின் பழமொழி எனக்கு நினைவுக்கு வருகின்றது. இந்து மதத்தின் ஒவ்வொரு அணுவையும் நான் உணர்வதற்கு எதையும் நான் படிக்க வில்லை. சாதாரண பழமொழிகள் அனுபவத்தில் அவற்றில் நான் கண்ட எதிரொலிகள், இந்துமதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையை எனக்கு உண்டாக்கி யிருக்கின்றன.

இன்றைய இளைஞனுக்கு

'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே' - ஆரம்பத்திலிருந்து வாழ்வை வகுத்துக் கொள்ள அவர்களால் முடிவதில்லை.

இராமலிங்கவள்ளலாரைப்போலவோ, ராமகிருஷ்ண பரம ஹம்சரைப் போலவோ, சுவாமி விவேகானந்தரைப் போலவோ, இளம் பருவத்திலே ஞான ஒளியைப்பெற அவர்களால் முடியவில்லை.

சாட்டை இல்லாப் பம்பரம் போல் ஆட்டி வைக்கிறான் கண்ணன். 'உண்டு உண்டு' என்று ஓடி பிறகு 'இல்லை இல்லை' என்று ஏமாந்து 'எங்கே எங்கே' என்று தேடி 'இதோ இதோ; இங்கே இங்கே' என்று கண்மயங்கி வெட்ட வெளிப் பொட்டலிலே விட்டெறிந்த பந்திணைப்போல் 'ஆடி ஓடி அமர்ந்தேன் பராபரமே! என்று அமர்ந்து விடுகிறார்கள். அனுபவங்களுக்குப் பிறகு தான் உண்மை அவர்களுக்குத் தெரிகிறது. இந்த உண்மைகளை இளைஞனுக்குச் சொல்ல வேண்டிய பாடம், குத்திய பின்பே முள்ளென்று அறியாமல் 'இது முள்' என்று பார்வையிலேயே அவன் தெரிந்து கொள்ள வேண்டும்.

"வீட்டு ஈ முதலில் அழுகிய புண்ணிலும், மறுசமயம் நிவேதனத்துக்கு வைத்த பொருளிலும் அமறும் அவ்வாறு இன்று தாமரையிலுள்ள தேனை அருந்தும் வண்டு, அதைத் தவிர வேறொன்னையும் மதியாது. நீ வீட்டு ஈயாக இன்றி தேன் வண்டைப் போலிரு, நல்லதைத் தேடிப் பெற படிப்பை தேன் வண்டு போல தேடிப் தேடிப் படிக்க வேண்டும்".

வாழ்க்கைக்கு தேவையில்லாத நூல்கள் படித்து காலத்தை வீணாக்கக் கூடாது. பயனற்ற நூல்களில் காலம் விரையம் பண்பாடற்ற நண்பர்களால் மனம் பாழாகிறது. அலட்சிய மனப்பான் மையில் அறிவு மங்குகிறது. வெறும் ஆரவாரங்களில் போலி வாழ்க்கையே கிட்டுகிறது. அஞ்சியஞ்சிச் சாவதால் ஆன்மா அடிமையாகி விடுகிறது.

இந்து மதத்தின் உபதேசங்களை இன்றைய இளைஞன் ஒதுக்கிவிடாமல் படிக்க வேண்டும். நோய்கள் மருந்துகள் பற்றியும் கூட இந்துமதம் முழு அளவில் சொல்லி வைத்திருக்கறது. இளைஞர்கள் வேத நூல்களைப் படித்தாலே வாழ்க் கையில் சகல பகுதிகளுக்கும் வழி கிடைத்துவிடும்.

முடிவுரை

காலையில் வீசும் காற்றைப் போல சுயேச்சையாகவும் அன்றலர்ந்த பூவைப் போல புதியதாகவும், அழகிய பனித் துளியைப் போல பரிசுத்தமாகவும், "ஆயுள் உள்ளளவும் பாலனாகவே இருப்பவன் எவனோ அவன்தான் பாக்கியவான்" இது பகவான் இராம கிருஷ்ணரின் அருள் வாக்கு துன்பங்களை விலக்கிக் கொண்டு வருவது எப்படி என்பதை 'அர்த்தமுள்ள இந்துமதம்' நன்றாக நமக்குச் சொல்கிறது. தாலாட்டுப் பாடினால் தூக்கம் வருகிறது சோக கீதத்திற்கு அழுகை வருகிறது. கடவுள் பக்திப் பாடலில் நெஞ்சம் நெகிழ்கிறது. நமது கடவுள் வடிவங்கள் அனைத் துக்குமே, 'இசை' ஆதாரமாக உள்ளது. உலக வாழ்க்கையில் உள்ளவனின், நிம்மதிக்கு வேறு வகையான வழி களையும் அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். சேவை செய்யும் போது பலனை எதிர்பார்க்காதே, உயர்ந்த இடம் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு சேவை செய்யாதே. தண்ணீரில் வாழும் மீன் அதைவிட உயர்ந்த பாலிலே வாழும்படி கெஞ்சினாலும் வாழாது, வாழமுடியாது.

மிக முக்கயமான சேவை தாய்க்கு மகன் செய்யும் சேவையாகும். சேவை தாயிடம் தொடங்கி, தாய்நாடு என்று வளர்ந்து, தெய்வ சேவையில் முடிகிறது. தாயைப் பாதுகாப்பவன் தர்மம் தவறிப் போகமாட்டான். இறுதியில் தெய்வத் தோடு ஐக்கியமடைவான். உத்தமர்கள் வரவு, தலைமாட்டிலே காவலிருக்கும் வயதுகள் கூடலாம், குறையலாம், ஆனால் ஓடுகிற தருனங்கள் உருப்படி யானதாக இருக்க வேண்டும் பயனற்ற காரியங்களில் பொழுதைச் செலவழிப் போர் பயனற்ற பிறவிகளே!

காலத்தைச் சரியாகப் பிடித்துக் கொண்டால் தெரு பிச்சைக்காரியும் மகாராணியாகலாம் முருகனை நேசித்த சின்னப்பத்தேவர் முருகனுக்கு உகந்த சஷ்டி நாளிலே காலமானார். அவர் கொண்ட உண்மையான பக்தி.

அடுத்தவனைக் கெடுப்பது, துரோகம் செய்வது, பிறன்மனை இச்சிப்பது போன்றவையே பாவங்கள் என்று இந்துப் புராணம் கூறுகின்றன. வாழ்நாளிலேயே இறைவனை அடைய விரும்பினால் இறைவனும் நம் மீது கருணை கொள் வான். 'எந்த மனிதனிடம் பக்தி இருக்கிறதோ அந்த மனிதனிடம் தான் சோதனைகளை அதிகமாக ஏற்படுத்திப் பார்ப்பான்' இந்தப் பக்தி உண்மையானதா என்று கண்டு கொள்ள விரும்புவான்.

நமது இந்து மதத்திற்கு ஒருநாளும் முடிவு ஏற்படாது. குறைவு அவ்வப்போது தோன்றும், ஆனால் ஞானிகளாலும் இளைஞர்களாலும் நிறைவு பெற்று விடும். இந்து தர்மத்தைக் கடைபிடித்து எல்லோரும் சுகமாக வாழவேண்டும்.

துணை நூற்பட்டியல்

1. கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதம். கண்ணதாசன் பதிப்பகம், முதற் பதிப்பு, 2009, 12 ஆம் பதிப்பு 2015.

விதைத்தவனும் விதைகளும் புதினத்தில் அறக்கருத்துக்கள்

அ. சதாசிவம்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)
அரும்பாக்கம், சென்னை – 600 106.

ஆய்வுச்சுருக்கம்

நவீனத் திறனாய்வுகள் புதிய அறிதல்களையும் புரிதல்களையும் கொடுக்கும் தன்மையன. ஆய்வுகள் பெரும்பாலும் அறிவியல் முறைசார்ந்து இயங்க வேண்டும். நவீன இலக்கியங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் வாழ்க்கைக்குத் தேவையான நன்முடிவுகளைப் பெற்றுத் தரும் வண்ணம் அமைகின்றன. நவீன இலக்கிய வகைகளுள் ஒன்றான புதினத்தில் எழுதப் பெற்றிருக்கும் **"விதைத்தவனும் விதைகளும்"** என்னும் நூல் வாழ்க்கைக்குத் தேவையானப் பல அறக்கருத்துக்களைப் போதிப்பதாய் அமைந்திருக்கிறது. இப்புதினத்தில் கதையினூடாக மேற்கோளாகக் காட்டப் பட்டிருக்கும் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற அறநூல்களில் உள்ள அறக்கருத்துகளையும் புதினத்தின் சூழலுக்கு அவை பொருந்தியிருக்கும் தன்மையையும் ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

திறவுச்சொற்கள்

வாழ்வியல், அனாயசம், படிச்சாத்தான், மனப்பாடம், அறம், சினம், தெய்வம், திருமணம், எப்பொருள், வாத்தியார்

முன்னுரை

புதினம் அல்லது நாவல் என்பது மக்களால் பரவலாக விரும்பப்படும் ஓர் இலக்கிய வடிவம் ஆகும். இதில் வாழ்க்கையும், நிகழ்வுகளும் கற்பனையாக உரைநடையில் எழுதப்படுகின்றது. தற்காலப் பயன்பாட்டில் புதினம், நீளமாக இருத்தல், புனைகதையாக அமைதல், உரைநடையில் எழுதப்படல் போன்ற இயல்புகளால் ஏனைய இலக்கிய வடிவங்களிலிருந்து வேறு படுத்தப்படுகின்றது. இது பொதுவாக நூல் வடிவில் வெளியிடப்படுகின்றது. எனினும் புதினங்கள் வார, மாத சஞ்சிகைகளில் தொடராக வெளி வருவதும் உண்டு. நாவல் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் இலக்கிய வடிவம் உரைநடையில் அமைந்த நீள்கதை. இது புத்திலக்கிய வகையாக ஐரோப்பாவில் பதினெட்டாம்

நூற்றாண்டில் உருவானது. நாவல் என்பது தமிழில் திசைச்சொல்லாக அப்படியே கையாளப்படுகிறது. புதினம் என்றும் சொல்லப்படுகிறது. அதனடிப்படையில் விதைத்தவனும் விதைகளும் எனும் புதினம் திருவண்ணாமலை சுற்றுப்பகுதியின் நூறாண்டு வரலாற்றை உள்ளடக்கிய சமூக வரலாற்று நாவலாக வெளிவந்துள்ளது. இப்புதினத்தை எழுதியவர் முனைவர் ப.முருகன் ஆவார். புதினாசிரியர், தமிழ்ப்பேராசிரியர் என்ற காரணத்தால் திருக்குறள், கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, திருவாசகம், திருப்பாவை, நளவெண்பா முதலானத் தமிழ் இலக்கியக் கருத்துக்களைப் புதினம் முழுவதிலும் கையாண்டுள்ளார். இந்தக் கட்டுரை மூலமாகத் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய நூல்களின் அறக்கருத்துகள் புதினக் கதைப்போக்கிற்கு எவ்வாறு துணை செய்கிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறக்கருத்து

மக்கள் நல்ல முறையில் வாழவே புலவர்கள் அறநெறிகளை வழங்கினார்கள். அறம் என்பதற்குத் தருமம், புண்ணியம், அறச்சாலை, தர்மதேவதை, எமன், தகுதியானது, சமயம், ஞானம், நோன்பு, இதம், இன்பம் என்னும் பொருள்களைத் தமிழ் - தமிழ் அகர முதலி தருகிறது. (ப 60 தமிழ் - தமிழ் அகரமுதலி, தொகுப்பாசிரியர் மு. சண்முகம்பிள்ளை, தமிழ்நாடு பாடநூல் கழகம்) அறம் என்பது ஒழுக்க நெறியாகும். பிற உயிர்களுக்கு உதவுவதும், துன்பம் செய்யாமையுமே அறம் ஆகும். மேலும் அறம் என்னும் சொல்லிற்கு ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம் என்ற பொருள்கள் பெருவழக்காக வழங்கப்பட்டு வருகின்றன.

திருக்குறள் - அறம் வலியுறுத்தல்

திருக்குறள் வாழ்க்கை மற்றும் அறத்தையே அடிப்படையாகக் கொண்டது.

"அறத்துப்பாலுக்கு அடிப்படை அறமே"

"பொருட்பாலுக்கு அடிப்படை அறமே"

"இன்பத்துப்பாலுக்கு அடிப்படை அறமே"

சுருங்கக் கூறினால் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் அறத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

"சிறந்தது பயிற்றல் இறந்ததன்
பயனே – [தொல். கற்பு –51]

இவற்றில் சிறந்தது என்பதற்கு 'அறம், பொருள், இன்பத்திற்குச் சிறந்தது வீட்டின்பம் என்று நச்சினார்க்கினியர் எடுத்துரைக்கின்றார். தமிழர் மெய்யியலில் அன்பு, அறம், இன்பம், வீடு ஆகிய அடிப்படை நோக்கங்களில் இன்பம் நோக்கப்படுகிறது. அன்புதான் இல்வாழ்க்கையின் பண்பு, அறம்தான் அதன் பயன், இவையே இல்வாழ்க்கையின் பண்பும், பயனும் ஆகும். இவ்வாறான கருத்துக்களை எல்லாம் முதன்மையாகக்

கொண்டு அன்பு பொருந்திய குடும்ப அமைப்புகளையும், சூழல்களையும் எழுத்தாளர் முனைவர் ரெ. கார்த்திகேசு அவர்கள் தன்னுடைய தேடியிருக்கும் தருணங்கள்", "வானத்தினால் அல்ல" "அந்திம காலம்", "இன்னொரு தடவை" போன்ற படைப்புகளில் அறக்கருத்துகளை முன்னிலைப்படுத்துகின்றார். (திருக்குறளின் தாக்கம் முனைவர் ரெ.கார்த்திகேசு), இது போலவே நமது புதினாசிரியரும், தனது கதை மாந்தர்கள் மூலம் அறச்சிந்தனைகளை மக்கள் மனதில் பதிய வைக்கிறார்.

"நாளது தேதியில் இருவீட்டார் உறவுகளும், ஒரு சேரகாத்தனூரில் மங்கல வாத்தியம் முழங்க ஆன்றோர். அட்சதை தூவ 'சிவனோடு சிவகாமி ஆடுவதைப் போல' சிவன்பிள்ளை பார்வதி திருமணம் ஆணைமுத்து அறிவாம்பாள் துணையிருக்கப் பெரியவர் பெருமாள் லெட்சுமி நடத்தி முடித்தார்கள்.

அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது [குறள் –45]

என்ற வள்ளுவரின் வாய் மொழிக்கேற்ப அன்பானவன் அறமுடையவன் இவ்விரு வருக்கும் வாழ்க்கை சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றது" என்னும் பகுதியில் திருக்குறளைப் புதின ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

கல்விச்சிறப்பு

உழைக்கின்ற மக்களை மட்டுமின்றி, எந்த ஒன்றையும் அதன் இருப்பில், நடப்பில் போக்கில் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் நல்ல கல்வி வேண்டும். எண்ணும் எழுத்தும் தான் உயிர் வாழுகின்றவருக்குக் கண் என்று சொல்லுகிறார் வள்ளுவர். ஒருவர் கல்வி கற்பதன் மூலம், தனக்கு மட்டுமின்றி தன்னைச் சார்ந்துள்ள அனைவருக்கும் பயன்பட வேண்டும். இக்காலம் மட்டுமின்றி எக்காலத்திலும் பயன்பட வேண்டும். செல்வத்தைக் காட்டிலும் கல்வியே துணையாக இருக்கும்.

இலக்கியத்தை எடுத்துக்காட்டாகக் கூறவும் தங்கள் வாழ்வில் இலக்கியங் களைப் பயன்படுத்தவும் இடங்களைத் தேட வேண்டிய இக்காலகட்டத்தில் விதைத்தவனும் விதைகளும் புதினத்தின் கதை மாந்தர்கள் அனாயசமாக இலக்கியங்களைச் சொல்லிச் செல்கிற காட்சி சிறப்பிடம் பெறுகிறது. உதாரணமாக, சிவன் பிள்ளை "படிச்சாதான் கண்ணு தெரியும்; நாமதான் மேல் படிக்க குடும்பச் சூழல் தோதாயில்லை சின்னவனுங்க படிக்கட்டுமே,

"எண்ணென்ப ஏனையெழுத்தென்ப
இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"
[குறள் – 392]

என்ற திருக்குறளை மனப்பாடமாகச் சொல்லி நம்மவன்ல ரெண்டு பேரு கண்ணு தெரிஞ்சவனா இருக்கட்டுமே என்று தம்பிகளைப் படிக்க வைக்க அண்ணன் சிவன் பிள்ளை பேசும் காட்சியில் திருக்குறள் வாழ்வியலோடு ஒன்றிப் போவதையும் கல்வியின்

சிறப்பையும் புதின ஆசிரியர் தனது கதாப்பாத்திரத்தின் வழியாக எடுத்துக் காட்டுகிறார்.

புதல்வரைப் பெறுதல்

"என்ன பெருத்த யோசனை?" என்றவாறு தோளைப் பிடித்து உலுப்பினாள் அன்னபூரணி. "ஒன்றுமில்லை, திருநாவுக்கரசு சொன்னதில் எந்தத் தவறும் இல்லை. நான் கொடுத்து வைத்தவன். நல்ல அருமையான மனைவி. அவள் மூலம் அருமையான புத்திரச் செல்வங்கள் ஐந்தைப் பெற்றிருக்கிறேன். அறிய வேண்டிய வற்றை அறியக் கூடிய மக்களைப் பெறுவது தான் மிக உயர்ந்த செல்வம். எனது ஐந்து குணவான்களான பிள்ளை களும் அறிவாளிகள். பண்புள்ள பெரும் பிள்ளைகளைப் பெற்றுத் தந்திருக்கிறாய். எனக்கு ஏழேழு பிறவியிலும் துன்பமே வராது. பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கடமை செய்தல் வேண்டும். பிள்ளைகள் அதற்குக் கைம்மாறு செய்தல் வேண்டும். நாம் எமது கடமையைச் சரிவரச் செய்தோம். பிள்ளைகள் கைம்மாறு செய்து விட்டார்கள். இப்போது ஊரில் அவர்களைப் பற்றித்தானே பேசு கிறார்கள். இத்தகைய பிள்ளைகளைப் பெற நாம் தவம் செய்திருக்க வேண்டும் என்கிறார்கள். கடமை தவறாது வாழ்தல்தான் தவம். நான் அதைத் தான் செய்தேன்" என்று உணர்ச்சி வசப்பட்டார் கதிரேசன். அவரது கண்களுக்கு மனைவி தெரியவில்லை. (திருக்குறள் உரை கதை கே.வி.குணசேகரம்) திரு கே.வி.குணசேகரம் என்பவர் திருக்குறளைப் புதின வடிவில் கையாண்டதைப் போல விதைத்தவனும் விதைகளும் ஆசிரியரும் கையாண்டுள்ளார்.

இப்புதினத்தில் சிவன்பிள்ளை, "டே பெரியவனே தம்பி கழனிக்குப் போய்ப் பார்த்து வா. நாற்றங்கால்ல தண்ணிய வடிச்சி விடு. நடவு பயிருக்குப் பார்த்துத் தண்ணிய விட்டு நிரப்பு வாழை இலை வகிர்ந்து வா, ரெண்டு இளநீர் பறிச்சி வா. என்னால எழ முடியல. ஒண்ணும் புரியல யமுனா. அதான் உங்க அம்மா கனவுல என்கிட்ட பேசற மாதிரி இருக்கு". பெரியவன் வெற்றிவேல் கழனிக்குச் சென்று தன் தந்தை இட்ட பணியை முடித்து வெற்றிகரமாக வந்து "அப்பா இந்தா இளநீரைக்குடி உடம்பு சூடு தனியும்" என்று கொடுத்தான்.

மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி
இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும்
சொல் [குறள் – 70]

என்ற தெய்வப்புலவரின் பொய்யா மொழியைப் போல் நம் புதினத்தில் வருகின்ற வெற்றிவேல் தன் தந்தைக்குப் செய்ய வேண்டிய கடமையைச் சரிவர நிறைவேற்றினான் என்னும் இடத்தில் புதல்வனைப் பெற்ற சிறப்பினைப் பதிவு செய்துள்ளார்.

அறிவு உடைமை

திருநாவுக்கரசு தனது இளைய மகனான திருமாறனைக் கொடூரமாகத் தண்டித்துவிட்டு உணவு கொடுக்காமல் மரத்தில் கட்டி வைத்திருந்தார். அதை

அறிந்த கதிரேசன் அங்கு சென்றார். திருமாறன் விக்கி விக்கி அழுதபடியிருந்தான். அவனது உடலெங்கும் தழும்புகள் இருந்தன. அதைக் கண்டு பதறிப்போனார் கதிரேசன். "திருநாவுக்கரசு, இதென்ன முரட்டுத் தனமான வேலை. அறிவு இல்லையா உனக்கு? பச்சைப் பாலனைக் கொடூரமாகத் தண்டித்திருக்கிறாய். அறிவு என்பது அழிவு வராமல் காக்கும் கருவி. பகைவர்களால் அழிக்க முடியாத கோட்டை. மனதை அது போன போக்கில் விடாமல் சிந்தித்து நல்ல செயல்களைச் செய்வது தான் அறிவு. யார் எதைச் சொன்னாலும், அதை அப்படியே ஏற்காமல் உண்மை நிலையை ஆராய்ந்து அறிந்து கொள்வதுதான் அறிவு" என்று திருக்குறள் உரை கதை நூலில் திருக்குறள் கருத்துக்களை எடுத்துக்காட்டி கே.வி.குணசேகரம் குறிப்பிடுகின்றார். இதைப் போன்று விதைத்தவனும் விதையும் புதினத்தில் இடம்பெறும் வெற்றிவேல் தன்னுடைய மதி நுட்பத்தால், மிகச்சிறிய வயதில் அனுபவத்தில் பெரிதாக உணர்ந்தவன் வெற்றிவேல், படிப்பறிவைக் காட்டிலும் அவனுக்கு அனுபவ அறிவு அதிகம் போலும். எனவே தான் வயதுக்கு மீறிய நற்பண்புகளை இயல்பிலே கொண்ட காரணத்தால் பொறுப்புகளை இயற்கையானது பொறுப்பாக அவனிடம் ஒப்படைத்தது. அதனைப் புரிந்து கொண்டதின் விளைவாகவே பிறர் அறிவுரை கேட்டு நடக்குமளவிற்கு அவர் இருந்ததில்லை.

"எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" –
[குறள் – 423]

என்னும் குறளுக்கு ஏற்ப வெற்றிவேல் வாழ்ந்து வருகிறார் என்று புதின ஆசிரியர் உரைப்பதில் இருந்து அறிவுடைமையின் சிறப்பை அறியலாம்.

ஆத்திசூடி மற்றும் கொன்றை வேந்தன்

'அறம் செய விரும்பு' எனக் கரும் பலகையில் எழுதிய ஆசிரியர், ஒரு மாணவனைப் பார்த்துக் "கணேசா" என்றழைத்து, "இதற்கு அர்த்தம் சொல்" என்றார். கணேசன் பலகையில் உள்ள எழுத்தை மனதிற்குள் வாசித்துப் பார்த்துக் கூட்டிப் பின் உரத்த குரலில் "அறம் செய விரும்பு" என்று படித்துவிட்டுப் பின்னர் "தர்மம் செய்ய விரும்ப வேண்டும் சார்" எனச் சொல்லி விட்டுத் தன் இடத்தில் அமர்ந்து கொண்டான். (சிறுவர் கதை - ஞானம் பிரகாசம்) இச்சிறுவனைப் போல் விதைத்தவனும் விதைகளும் புதினத்தில் இடம்பெறும் முதன்மைக் கதாப்பாத்திரமான ஆணைமுத்து,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" (கொன்றை வேந்தன் -1) என்றார் வாத்தியார். பையன் "அத்தையும் மாமனும் முன்னறி தெய்வம்" என்றான். குழந்தை ஐந்து அல்லது ஆறு வயதே நிரம்பிய குழந்தைதான். வாத்தியாருக்கு அடிக்க மனசு இல்லை. காரணம் அவருக்கே தெரியும்.

அறம் செய்ய விரும்பு [ஆத்திசூடி –1]

அறம் செய்ய விரும்பு அப்படியே சொல்கிறான்.

ஆறுவது சினம் [ஆத்திசூடி – 2]

ஆறுவது சினம் அப்படியே சொல்கிறான்.

மெத்த மகிழ்ச்சி வாத்தியாருக்கு"

என்று இவ்வாறு எழுதுகிறார். இந்தக் காட்சியில் குழந்தை நன்றி உணர்ச்சி காரணமாக அன்னையும் பிதாவும் என்பதற்குப் பதிலாக அத்தையும் மாமாவும் என்று மாற்றிச் சொல்கிறது என்று ஆசிரியர் அமைத்தவிதம் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற அற நூல்களின் செய்திகளைக் கதாப் பாத்திரத்தின் வழியே சமூகத்திற்கு உணர்த்துகிறார்.

முடிவுரை

பொழுதுபோக்கிற்கும் ஏதோ கடமைக்கும் இலக்கியப்புரிதல் இல்லாமல் புதினம் எழுதுகிற இக்கால கட்டத்தில் இலக்கியத்தரவுகளை முதன்மை யாகக் கொண்டு 'விதைத்தவனும் விதைகளும்' ஆசிரியர் புதினத்தை எழுதியிருக்கிறார். இப் புதினத்தில் கதை மாந்தர்களின் வழி இலக்கியக் கருத்துகளும் இலக்கியச் சிந்தனை களையும் வெளிப்படுத்தியிருப்பது சிறப்பிற்குரியது எனலாம்.

திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் எனத் தமிழ் இலக்கியங்கள் பன்மொழிப் படிப்புத் திறன்களை அளித்துள்ளார். இவ்வாறு புதினத்தில் அறம் வலியுறுத்தல், புதல்வரைப் பெறுதல், அறிவு உடைமை போன்ற அறக்கருத்துகளை எங்கெங்கெல்லாம் சேர்க்க முடியுமோ அங்கெல்லாம் மிகப்பொருத்தமாகவும், புதிய புதிய சொற்களைக் கொண்டும் ஆசிரியர் சேர்த்தும் கோர்த்தும் கொடுத்திருப்பது சிந்திக்கத்தக்கது.

துணைநின்ற நூல்கள்

1. விதைத்தவனும் விதைகளும் – முனைவர் ப.முருகன், நெய்தல் பதிப்பகம், சென்னை.
2. திருக்குறள் – பொருள் விளக்கம் – சாமி சிதம்பரனார், சாரதா பதிப்பகம்.
3. நீதிநூல் தெளிவுரை – ச.மெய்யப்பன் – மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
4. திருக்குறள் உரை கதை, கே. வி. குணசேகரம்.
5. திருக்குறளின் தாக்கம், முனைவர் ரெ.கார்த்திகேசு
6. தொல்காப்பியம் மூலமும் விளக்க உரையும் – ஞா.மாணிக்கவாசகன், உமா பதிப்பகம், சென்னை.
7. தமிழ் – தமிழ் அகரமுதலி – தொகுப்பாசிரியர் சண்முகம் பிள்ளை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

சஞ்சாரம் நாவலில் கரிசல்நிலப் பண்பாட்டுச் சூழல்

முனைவர் சி. சதானந்தன்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)

அரும்பாக்கம், சென்னை – 600 106.

ஆய்வுச் சுருக்கம்

தமிழிலக்கியம் காலந்தோறும் பல்வேறு மாற்றங்களைத் தம்முள் கொண்டு திகழ்கிறது. அவ்வகையில் இருபதாம் நூற்றாண்டிற்குப்பின் சிறுகதை, நாவல், புதுக்கவிதை எனப் பல புதிய பரிணாமங்களைக் கொண்டு திகழ்கிறது. நாவலாசிரியர்களுள் குறிப்பிடத்தகுந்த புகழ் பெற்றுள்ள எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாவலாகத் திகழும் 'சஞ்சாரம்' எனும் நாவல் கரிசல் நில மக்களின் பண்பாட்டையும் நாதஸ்வரக் கலைஞர் களின் வாழ்வியலையும் மிகத்தெளிவாகப் பதிவு செய்துள்ளது. இக்கட்டுரையில் சஞ்சாரம் நாவல் வழியாக கரிசல் நில மக்களின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள் எங்ஙனம் அமைந்துள்ளன என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. திருவிழாக்களின் போது மக்களின் மன உணர்வுகள், அவர்கள் நடந்து கொள்ளும் பாங்கு ஆகியன எடுத்துக்காட்டப் பட்டுள்ளன. தன்னுடைய வயிற்றுப் பசிக்காகத் திருடுபவர்களைக் கரிசல் நில மக்கள் உளவியல் அடிப்படையில் எவ்வாறு கையாண்டுள்ளனர் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. மேலும் கரிசல் நில மக்கள் கால்நடைகளின் மீது கொண்டிருந்த அன்பும் மிகக்கடுமையான மற்றும் கொடுமையான நோய்களுக்கு அவர்கள் கையாண்ட மருத்துவ முறைகளும் குறித்து இக்கட்டுரையின்கண் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்

புனைகதை, புனைவு, கரிசல் நில மக்கள், பீறிடும் ஜொலிப்பு, ஏழு வீட்டுச் சோறு, சமத்துவம், பனவிடலி, பெருமாநாயக்கர், சீலைக்காரி கோவில், பொம்மக்காபுரம், குஷ்டம், வேப்பெண்ணை, கணைய எண்ணை, கறுப்பு அரிசி.

முன்னுரை

தமிழிலக்கியப் பரப்பில் இருபதாம் நூற்றாண்டு வளர்ச்சியில் உருவான 'புனைகதை' அல்லது 'புனைவு' எனும் மரபு உண்மையல்லாத கதைகளைக் குறிப்பதாகச் சுட்டப்பெறினும், புனை கதைகள் முழுமையுமாகக் கற்பனையால் உருவாக்கப்பட்டவை என்று கூற

இயலாது. புனைகதைகளில் அறியப்படும் மனிதர்கள் (கதாப்பாத்திரங்கள்), இடங்கள், நிகழ்வுகள் ஆகியன பெரும்பான்மையும் உண்மையானவை. அதனால் புனைகதையானது சிறுகதை, நாவல் வடிவங்களுக்கான கலை வடிவமாகவே அமைந்திருக் கிறது. இக்கலை வடிவத்தைப் பயன்படுத்தி, இருபதாம் நூற்றாண்டுக்குப் பின் பலரும் பல்வேறு உருவாக்கங்களைத் தமிழிலக்கிய உலகிற்கு தந்துள்ளனர். அவர்களுள் நகரமயச் சூழலையும், கரிசல் வட்டாரச் சூழலையும் தம் படைப்புகளின் வழியே படைத்தளித்துக் கொண்டு வருபவர் எஸ்.ராமகிருஷ்ணன்.

பொதுவாகப் புனைகதை மரபில் பழமைக்கும் புதுமைக்கும் இடையிலான மொழியைக் கையாளுதல், நவீனப் பொருண்மைகளில் கதைக்களனை அமைத்தல், பழமையான மொழி வெளிப் பாட்டில் புதிய பொருண்மைகளை வெளிப்படுத்துதல் அல்லது வட்டார வழக்கு மொழியில் கதையை அமைத்தல் எனும் வகைமைகள் இயல்பாகின்றன. இவற்றில் எஸ்.ராமகிருஷ்ணனின் படைப்புகள் பெரும்பான்மையும் நகரமயச் சூழலை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அவற்றில் சில புனைகதையாடல்கள் வட்டார வழக்குப் படைப்புகளாக இல்லாமல், வட்டாரப் பதிவை உள்ளடக்கியனவாக உள்ளன. அவ்வாறு கரிசல் மண்சார்ந்த அடையாளங்களுடன், தஞ்சைப் பகுதியில் வாழ்ந்த நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்வியல் போராட்டத்தைப் பதிவு செய்யும் நாவலாக 'சஞ்சாரம்' அமைந்துள்ளது. அதிலிடம்பெறும் கரிசல்நில மக்களின் பண்பாட்டுச் சூழலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பண்பாடு

'பண்பு' படுதல் பண்பாடாகும். பண்பாடு என்பது குறித்து ஆங்கிலத்தில், "CULTURE என்ற சொல் பயன்படுத்தப் படுகிறது. இதன் பொருள் : There State of being cultivated' என்று 'கேம்பிரிட்ஜ்' அகராதி குறிப்பிடுகிறது. இச்சொல் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது"[1]. எனவே, ஒரு சமுதாயத்தில் மக்கள் வாழ்க்கை நடத்தும்முறை பற்றிய சூழலைப் பண்பாடு என்று கொள்ளலாம். இது சமூகத்தின் மிகப்பெரும் செல்வ மாகப் போற்றப்படுகிறது. அத்தகைய பண்பாட்டுப் பதிவுகளைத் தமிழிலக்கியங்களில் காலந்தோறும் தொடர்ந்து பார்க்க முடியும். அவ்வகையில் இருபதாம் நூற்றாண்டுக்குப் பின்னர் எழுந்த புதிய கண்ணோட்டமும் நவீன சிந்தனை மரபும் புதிய கருத்தியல்களையும் பழக்க வழக்கங் களையும் மக்களிடம் ஏற்படுத்தியதைப் பல்வேறு படைப்புகள் வெளிப்படுத்தி யுள்ளன. அவ்வரிசையில் எஸ்.ராம கிருஷ்ணனின் 'சஞ்சாரம்' நாதஸ்வர இசைக் கலைஞர் களின் வாழ்க்கைச் சூழலை மையமிட்ட கதைக்களனில், கரிசல்நில மக்கள் பண் பாட்டைப் பேசும் நாவலாக அமைந்திருக்கிறது. இந் நாவலில் இடம் பெறும் சில அடையாளங்களைக் கொண்டு இவற்றை விளங்கிக் கொள்ள முடிகிறது.

விழாக்கோலம்

ஊர்தோறும் விழாக்கள் மக்கள் அடையாளத்தையும் பண்பாட்டையும் காட்சிப்படுத்துவதன் வழியே, பண்பாடு மற்றும் பண்பாட்டு மாற்றங்களை விவரிக்கின்றன. அவ்வகையில் விழாக்கள் பெரும்பாலான மனிதர்களின் இயல்பை மாற்றியமைக்கும் தன்மை கொண்ட வைகளாக இருப்பதை 'சஞ்சாரம்' நாவல் விளக்குகிறது.

"அடக்க ஒடுக்கமாக இருந்த மனிதன் கூட கூட்டத்தைக் கண்டால், ஆள் உருமாறி விடுகிறான். சந்தர்ப்பத்திற்காக காத்துக் கொண்டு இருந்தவனைப் போல கூச்சலிடு கிறான். இடித்துத் தள்ளுகிறான். வேஷ்டி தரையில் புரள குடித்துவிட்டு ஆடுகிறான். ஆண்களைத் திருவிழா மூர்க்கமாக்கி விடுவதைப் போல, பெண்களைப் பேரழகிகளாக ஆக்கிவிடுகின்றன. திருவிழாக் கூட்டத்தில் எல்லாப் பெண் களுக்கும் தனியழகு வந்துவிடுகிறது. கைநிறைய வளையல்களும் கூந்தல் நிறைய பூவும், வெட்கம் கலந்த சிரிப்பும், குழைந்த நடையும், தழையத் தழைய கட்டிய புடவையுமாக பெண்களே திருவிழாவிற்கு வண்ணமளிக்கிறார்கள். அதிலும் புதிதாத மணமாகி வந்த பெண் திருவிழாவிற்கு வரும்போது அவளிடம் பீறிடும் ஜொலிப்பு நிகரில்லாதது"[2]

என்று திருவிழாக்களின் போது மக்களின் நடவடிக்கைகளைப் பதிவு செய்கிறார். திருவிழாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த காலம் மாறி, திருவிழாவிற்குச் செல்லும் மக்கள் மனங்களுக்குள் எழும் எண்ணங்களும், அலங்காரங்களும் முக்கியத்துவம் பெறு வதற்கான சூழல் உருப்பெற்றிருப்பதை எஸ்.ரா.வின் இப்பதிவு விளக்குகிறது.

மரபுசார் வாழ்வியல்

கரிசல்நில மக்கள் பழம்பண்பாட்டு அடையாளங்களைக் கொண்டவர்களாக வாழ்ந்தவர்கள் என்பதை விளக்கும் வகையில், வயதில் முதிர்ந்த பாட்டி சொல்லுவதாக அமையும் ஒரு உரையாடலின் வழியாக கரிசல்நில மக்களின் மனநிலையை எஸ்.ராம கிருஷ்ணன் பதிவுசெய்கிறார்.

"இவனை அடிச்சி கையைக் காலை உடைச்சிவிட்டா, திரும்பி வரத்தான் செய்வான். 'அதுக்குப் பதிலா எங்க காலத்துல செய்தது போல ஏழு வீட்டுச் சோறு போட்டு அனுப்பி வைக்கலாம்' என்றாள் கிழவி.

அது என்ன ஏழு வீட்டுச் சோறு என யாருக்கும் தெரியவில்லை. கிழவியே சொன்னாள். எங்க காலத்துல யாராவது திருடன் பிடிபட்டா அவனுக்கு ஏழு வீட்ல இருந்து ஒருவாரம் மூணு வேளையும், சோறு போடுவோம். அவன் ஏழு வீட்டுச் சோற்றையும் மூணு வேளையும் திங்கணும். முத ரெண்டு நாளைக்கு ஆசையா தின்பான். அப்புறம் சோற்றைப் பார்த்தாலே வயிற்றைப் புரட்டும். ஒருவாரம் இப்படி சாப்பிட்டா அவன் மனசு தானா மாறிடும்.

அதுக்கு அப்புறம் நம்ம ஊருக்குத் திரும்பத் திருட வரவே மாட்டான்''[3]

என்பதாக வரும் இவ்வுரையாடல், கரிசல்நில மக்கள், தாமிருக்கும் இடத்திற்குத் திருட வருபவர்களை உளவியல் தன்மையில் எவ்வாறு அணுகியிருக்கிறார்கள் என்பதை விளக்குவதாக அமைந்திருக்கிறது. மேலும் இறுதியில் அப்பாட்டி அத்திருடனிடம்,

''இந்தப் பூமி மாதா உன்னைக் காப்பாற்றுவா. இனிமேல் திருட்டுக்குப் போகாதே. பசியா இருந்தா பெண்டாட்டி, பிள்ளைகளைக் கூட்டிகிட்டு இந்த ஊருக்கே வந்துரு. நாங்க வச்சி காப்பாத்துறோம்''[4]

என்று கூறுகிறாள். இதன் மூலம் கரிசல்நில மக்களின் நல்லுள்ளத்தையும் சகோதர மனப்பான்மையையும் பண் பாட்டையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் அவர்கள் அடிப்படையில் சமத்துவ மனநிலையிலான வாழ்வியலை மேற்கொண்டனர் என்பதை விளக்கும் வகையிலான பதிவுகளையும் 'சஞ்சாரம்' நாவலில் காணமுடிகிறது. சான்றாக,

''கரிசலில் ஆணும் பெண்ணும் சமமே. அரசாங்கம் சட்டம் கொண்டு வருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னே கரிசலில் அந்த சமத்துவம் நிலைபெற்றிருந்தது. அது எழுதப்படாத ஒரு விதி. விவசாய வேலையைப் பகிர்ந்து கொண்டு செய்வதும், வீட்டை நிர்வாகம் செய்வதும், ஆடு மாடு களைக் கவனித்துக் கொள்வதும் இணைந்தே செய்தார்கள்''[5]

என்னும் உரையாடல் பகுதியைக் குறிப்பிடலாம். இதில் விவசாயத் தொழிலை மூலாதாரமாகக் கொண்டு செயல்பட்ட கரிசல்நில மக்களின் வாழ்வியலில் சமத்துவச் சிந்தனை மேலோங்கி இருந்ததை உணரலாம்.

அன்புள்ளம்

கரிசல்நிலத்தில் வாழ்ந்த மக்கள் ஆடு, மாடுகள், நாய், கோழி முதலான கால்நடைகளை வளர்த்தனர். அவைகளின் உதவியைக் கொண்டு விவசாயத் தொழிலைச் செல்வச் செழிப்பாக அவர்கள் மேற்கொண்டுள்ளனர். காலப் போக்கில் உணவுப் பஞ்சமும், நீராதார மின்மையும் ஏற்படுத்திய பஞ்சத்தில் அவர்கள் தங்களிடமிருந்த விவசாய நிலங்களை விற்பனை செய்கின்றனர். நிலங்கள் விற்கப்பட்ட பின்னரும் அவர்கள் வளர்த்த ஆடுமாடுகளை விற்பதில் விருப்பமின்றி, வளர்த்து வருகின்றனர். காலம் கடந்த சூழலில் வேறுவழி தெரியாமலே அவைகளை விற்கவேண்டிய அவல நிலைக்கு ஆளாகின்றனர். அவ்வாறு 'சஞ்சாரம்' நாவலில் வரும் 'பெருமாநாயக்கர்' தன் மாடுகளை விற்றச் சூழலையும், அம்மாடுகள் மீது அவருக்கிருந்த அளவு கடந்த அன்பையும் வெளிப்படுத்தும் வகையில்,

''மாட்டை விற்க மனசேயில்லை. தரகன் பணத்தை எண்ணி கொடுத்தான். வாங்கிக் கொண்டார். பிறகு மாடுகளின் முகத்தைத் தடவிவிட்டு, அதன் திமிலைத் தொட்டுத் தடவி, மாட்டின் கண்ணீர்க் கறையைத் துடைத்துவிட்டுச் சொன்னார்.

'மாட்டை ஊருக்குள்ளே கூட்டிக் கொண்டுகிட்டுப் போக வேணாம். பனவிடலி வழியா போயிரு' தரகன் தலையாட்டிக் கொண்டான்.

மாட்டை ஓட்டிக்கொண்டு தரகன் கிளம்பும்போது திடீரென்று பெருமா நாயக்கர் தன் கையிலிருந்த பணத்தை அவனிடம் கொடுத்துச் சொன்னார். 'போற வழியில் சீலைக்காரி கோவில் இருக்குல்லே. அது உண்டியல்ல போட்டுட்டுப் போயிரு. எனக்கு இந்த காசு வேணாம்பா' தரகன் வாங்கிக் கொண்டான்.

பெருமாநாயக்கர் மாடு போவதையே பார்த்துக் கொண்டிருந்தார். அவரை அறியாமல் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டேயிருந்தது"[6]

இவ்வரிகள், கரிசல்நில மக்களின் வளர்ப்புப் பிராணிகளுடனான பண் பாட்டை அடையாளம் காட்டுகிறது. மேலும் அவர்கள் கால்நடைகள் மீது கொண்டிருந்த அளவில்லாத அன்பையும் வெளிப்படுத்துகின்றன. அதேபோல கரிசல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் மனசாட்சிக்கும் கடவுள் நம்பிக்கைக்கும் வித்திட்டவர்களாக இருந்துள்ளனர். இதனை,

"நம்மளை ஏமாற்றினான் இல்லை. கடவுளா பாத்துத் தண்டனை குடுத்துட்டாரு பாத்தீங்களா..? மனுசனை ஏமாற்றலாம். ஆனா கடவுளை ஏமாற்ற முடியாது"

"நாம ரெண்டு பேரும் காளியம்மன் கோவில்ல போயி காசு வெட்டி போட்டுட்டு வந்துருவோம். அவங்க விளங்காம போகட்டும்"[7]

என்ற உரையால் மூலம் அறியலாம். தன்னால் தண்டிக்க முடியாத மேட்டிமைச் சமூகத்தினரையும் அவர்தம் தவறுகளையும் தாம் வணங்கும் கடவுள் நிச்சயம் தண்டிப்பார் என்ற நம்பிக்கை உடையவர் களாக அம்மக்கள் வாழ்ந்துள்ளனர். வழிபாட்டின் மீதான நம்பிக்கையும், தங்களின் பொருளாதாரநிலை குறித்த எண்ண ஓட்டமும் இப்பதிவின் வழியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவ முறை

ஒவ்வொரு சமூகமும் தனக்கென ஒரு மருத்துவ முறையைக் கொண்டுள்ளது. அதனைச் சமூக நிறுவனம் என்றே கூறலாம். நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பிரிக்க முடியாத ஒன்றாகும். அவ்வகையில் மணலூர்த்து மக்கள் இடுப்புவலி, மூச்சடைப்பு, வாய்வுபிடிப்பு போன்ற வியாதிகளுக்குக் கோவையிலை பசையையும், உப்புக்கல்லையும் பயன் படுத்திய முறையைப் பூமணி 'பிறகு' நாவலில்,

"இவனுக்கு இடுப்புல நோவெடுக்கு தாம். இன்னக்கி குளிக்கப் போக முடியல கோவ எலைய அரச்சுப் போடணும்னு சக்கணன் கோவைக் கொடியிலிருந்து இலைகளை ஆய்ந்து கொண்டிருந்தான். கல்லை வாங்கி சரக்கென்று இழுத்தரைத்து இலை நசுக்கலை விரலால் கருப்பன் வழித்தான். அதைப் புழிஞ்சு உப்புல ஒரு செரங்கா குடிச்சா தேவல "8

என்று குறிப்பிடுகிறார். அதேபோல எஸ்.ராமகிருஷ்ணனும். 'சஞ்சாரம்' நாவலில் பொம்மக்காபுரம் பகுதியில் பாம்புக்கடிக்கு வைத்தியம் செய்வதில் பேர் பெற்ற இரண்டு குடும்பங்கள் இருந்ததைக் குறிப்பிடுகிறார். அவர்கள் பாம்பு கடித்தவர்களைத் தூக்கிக்கொண்டு வந்தால், உடனே பச்சை மிளகாயையோ சிவப்பு வத்தலையோ சாப்பிடச் சொல்லுவார்களாம். அதை அடுத்து வேப்பிலையை மெல்ல வேண்டுமாம். விஷப்பாம்பு கடிச்சிருந்தால் மிளகாய் காரம் தெரியாது. வேப்பிலையும் கசக்காது, இதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் மருத்துவம் மேற்கொள்வார்கள் என்பதை,

"வேப்பெண்ணை, கணைய எண்ணை, மூலிகை சாறு எல்லாம் இரும்புச் சட்டியில கொதிக்க வச்சு. அதுகூட சாரைப் பாம்பைக் கொன்னு எண்ணைக்குள்ள போட்டுக் காய்ச்சி 'சாரைப்பாம்பு தைலம்' செய்வார்கள். அது வாதம், நீர்க்கட்டு ரத்தக் கட்டுக்கெல்லாம் மருந்தாகப் பயன்படும்.

இதுபோலவே கடுமையான விஷம் இருக்குற கருநாகத்தையும் கொன்று ஆழக்குழி தோண்டி பானைக்குள் நெல்லைப் போட்டு வைத்துப் புதைத்துவிடு வார்கள். நாற்பத்தி அஞ்சாவது நாளில் பானையை வெளியில் எடுத்து பார்த்தால் அதன் உள்ளே, பாம்பின் எலும்புக்கூடு மட்டுமேயிருக்கும். நெல் நிறமாறியிருக்கும். அந்த நெல்லைக் காயவைத்துக் குத்தி அரிசியாக்கினால் கறுப்பு அரிசியாக இருக்கும். அது குஷ்டம் வந்தவர்களுக்கு மருந்தாக தரப்படும்"9

என்றவாறு, பாம்புக்கடிக்கும் 'குஷ்டம்' என்றழைக்கப்படும் முடக்கு வாதங் களுக்கும் பொம்மக்காபுரத்தில் மருத்துவ சிகிச்சை முறையைக் கரிசல்நில மக்கள் மேற்கொண்டதாக எஸ்.ராமகிருஷ்ணன் குறிப்பிடுகிறார். இது கரிசல்நில மக்களுக்குள் இருந்த நாட்டார் மருத்துவ முறையை விளக்கும் தனிப்பண்பாடாகக் காட்சியளிக்கிறது.

முடிவுரை

அடிப்படையில் நாவல் இலக்கியம் மனித உறவுகளின் எண்ணத்தையும் செயலையும் விளக்கியுரைக்க உதவும் உரைநடையிலமைந்த நீண்ட கதை ஊடகங்களாகின்றன.

'சஞ்சாரம்' நாவலின் கதைக்களனில் சொல்லப்படும் கரிசல்நில மக்களின் அடையாளங்களும் வாழ்வியலும், கதாப்பாத்திர உரையாடலின் வழியே அவர்களின் உணர்வுகளை அடிப்படை யாகக் கொண்டமைந்துள்ளன. அதற் கேற்ற நடையியல் மற்றும் மொழிப் புலப்பாட்டு வருணனைகளை எஸ். ராம கிருஷ்ணன் கையாண்டுள்ளார்.

கரிசல்நில மக்களின் பண்பாட்டைப் பதிவுசெய்யும் வகையில் விழாக்கால நிகழ்வுகள், மருத்துவமுறை, மரபுசார்ந்த வாழ்வியல் பழக்கவழக்கங்கள், விவசாயக் குடிகளுக்குள் நிலவும் அன்புணர்வுப் பதிவுகள் ஆகியனவற்றை எஸ். ராம கிருஷ்ணன் நாவலில் கொண்டு வந்துள்ளார்.

அடிக்குறிப்புகள்

1. Public Research University, University of Cambridge, The old Schools, Trinity Ln, Cambridge CB2 1TN, United Kingdom. 5th Ed. 2011.
2. எஸ்.ராமகிருஷ்ணன்., சஞ்சாரம்., ப.10.,
3. மேலது., பக்.60–61
4. மேலது., பக்.62–63
5. மேலது., ப.59
6. மேலது., ப.264
7. மேலது., ப.349
8. பூமணி., பிறகு., ப.160,
9. எஸ்.ராமகிருஷ்ணன்., சஞ்சாரம்., ப.254.,

துணைநின்ற நூல்கள்

1. எஸ். ராமகிருஷ்ணன்., சஞ்சாரம்., தேசாந்திரி பதிப்பகம், கங்கை அப்பார்ட் மெண்ட், சாலிகிராமம், சென்னை – 93 (இரண்டாம் பதிப்பு 2018)
2. பூமணி., பிறகு., அன்னம் வெளியீடு., சிவகங்கை. (முதல் பதிப்பு 1979)

நவீன இலக்கியத்தில் நாகஸ்வர கலைஞர்களின் நிலை

பொ. சம்பூர்ணம்

பதிவு என் : P 3063, குரலிசை விரிவுரையாளர் (தெரிவுநிலை),
தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, பசுமலை, மதுரை – 625 004
அலைபேசி என் : +91 93447 79902

முன்னுரை

புகழ்பெற்ற எழுத்தாளரும் நாவலா சிரியருமான திரு.கொத்தமங்கலம் சுப்பு அவர்களால் எழுதப்பட்ட 'தில்லானா மோகனாம்பாள்' என்னும் காவியத்தில் காணப்படும் நாகஸ்வர கலைஞர்களின் உயர்ந்த மாண்பையும், மதிப்பையும், இதற்கு மாறாக சாதிய பாகுபாட்டால் ஒரு நாகஸ்வர கலைஞனுக்கு ஏற்படும் இன்னல்களை பற்றி திரு. எஸ். ராமகிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்ட காவியமான 'சஞ்சாரம்' என்னும் நாவல். இவ்விரு நூல்களில் சொல்லப்பட்ட நாகஸ்வர கலைஞர்களை பற்றி இவ்வாய்வில் காண்போம்.

நவீன இலக்கியத்தில் நாகஸ்வர கலைஞர்களைப் பற்றிய சித்தரிப்பு

ஒப்பற்ற இலக்கியமான தில்லானா மோகனாம்பாள் என்ற நாவலில் அக்காலத்து மக்களின் வாழ்க்கை நடை முறையோடு நாகஸ்வரம் நீங்கா இடம்பெற்றது என்பதை நம்மால் அறியமுடிகிறது. நாகஸ்வர இசையின் பால் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடு, மக்களின் வாழ்வியலோடு இணைந்த அதன் பங்கு, ஜனங்கள் வித்வான்களை மதிக்கும் விதம், வித்தையை போற்றும் விதம் போன்றவையும், நிகழ்ச்சி நடை பெறும் போது பல்லாயிரக் கணக்கானோர் ரசித்த விதமும் இதில் குறிப்பிடப் பட்டுள்ளது. இதற்கு நேர்மாறாக சஞ்சாரம் என்னும் நாவலில் நாகஸ்வர இசையை மேன்மையை சொல்ல முற்படவில்லை. அதற்கு பதிலாக நாகஸ்வரம் வாசிப்பவரின் வாழ்க்கை துயரத்தை, அலைக்கழிப்பை, மானுட அவலத்தை அடையாளம் காட்டவே இந்நூல் முற்படுகிறது.

கதை நாயகர்களின் தோற்ற வர்ணனை

தில்லானா மோகனாம்பாள் கதை நாயகனாகிய நாகஸ்வர வித்வான் 'சண்முக சுந்தரம்' அவர்களின் கம்பீர தோற்றத்தை விளக்குகிறது இந்நாவல். சிவந்த மேனி, ஐவ்வாது பொட்டு, வைர கடுக்கண், வீரச்சங்கிலி, நாகஸ்வரத்தில் கட்டி தொங்கிய தங்க மெடல்கள் என, ஒரு சிறந்த நாகஸ்வர கலைஞனின் தோற்றம் சித்தரிக்கப்பட்டுள்ளது.[1]

அவர் இசைக்கும் மல்லாரி எனும் உருப்படியை வாசிக்க ஆரம்பித்த உடனேயே அதிலிருந்து வெளிப்பட்ட பாணியும், குழையும், கமகமும் எல்லோரையும் வசப்படுத்தின. சண்முக சுந்தரமும் தன்னை மறந்த நிலையில் வாசித்த சீவாளியை எடுக்காமல் சுநாதத்தோடு மல்லாரியை லயத்துடன் நாகஸ்வரத்தில் இருந்து குமிழியிட்டு இசையருவி வெள்ளம் போல் பாய்ந்தது என குறிப்பிட்டுள்ளார்.(2)

சஞ்சாரம் நாவலில் இசைக் கருவி களில் உயர்ந்தது நாகஸ்வரம் என்றும் ஆனால் அதனைக் கையாளும் வித்வான் களின் நிலை ஒரு சில பகுதிகளில் தாழ்வாகக் காணப்படுவதாக கூறப் பட்டுள்ளது. மேல்தட்டு மக்களின் அதிகாரத்திற்குள் அடங்கி நிற்கும் கலைஞர்களின் இழிநிலையை பற்றி இந்நாவலில் ஆசிரியர் எடுத்து கூறியுள்ளார். சஞ்சாரத்தின் நாயகனாகிய பக்கிரியின் மூன்றாவது கையாக நாகஸ்வரம் சித்தரிக்கப்பட்டுள்ளது. பரமசிவனுக்கு முக்கண் இருப்பதுபோல நாகஸ்வரம் என்னும் இந்த கை விசித்திரமானது மர்மமானது. ஒரு மாய்ச்சாவியை போல அவன் மனதை திறந்து அதனுள் புதைந்து போன கண்ணீரை, வலிகளை, மறக்க முடியாத சந்தோஷத்தை அவனுக்கே அடையாளம் காட்டிவிடுகிறது.(3)

நாகஸ்வர கலைஞர்களின் மதிப்பும் மரியாதையும்

ஆலயங்களில் நடைபெறும் திரு விழாவின் போது, இரு நாகஸ்வர கலைஞர்கள் குழுவினரோடு பங்கேற்று, அவர்களிடையே இசைப்போட்டியும் கச்சேரி மூலமாக நிகழும் என்பதனை தில்லானா மோகனாம்பாள் எடுத்துக் காட்டுகிறது. மேலும், கலைஞர்களுக்கு செய்யப்படும் மாலை, மெடல், மரியாதையையும், அக்கால மக்களின் இசைப்புலமையை பற்றியும், இசை தவறுகள் ஏதேனும் இருப்பின் அதை தட்டிக்கேட்க தயங்காதவர்களாகவும் இருந்தனர் என்பதும் தெரியவந்துள்ளது.(4)

அதேசமயம், சஞ்சாரம் நாவலில் தஞ்சை மண்டலத்தை சேர்ந்த நாகஸ்வர கலைஞர்களைப் பற்றி பேசப்படும் அளவிற்கு, விருதுநகர், ராமநாதபுரம் போன்ற கரிசல் பகுதியை சேர்ந்த நாகஸ்வர கலைஞர்களை பேசப்படு வதில்லை என்கிறார் ஆசிரியர். பக்கிரி, ரத்தினம் என்னும் கதாபாத்திரம் மூலம் கரிசல் நில நாகஸ்வர கலைஞர்களின் இன்றைய நிலையை அடிப்படையாக கொண்டு கதை நகர்கிறது.(5)

கலைக்கு மரியாதை

தில்லானா மோகனாம்பாள் திருவாரூர் கோவிலுக்கு தஞ்சை அரசர்கள் ஆயிரம் வேலி நிலத்தை மானியமாக அளித்து அதிலிருந்து நாகஸ்வர கலைஞர் களுக்கு மானியம் வழங்கப்பட்டதாக கூறுகிறது.(6)

சஞ்சாரத்தில் பரோடா சமஸ்தானத் திற்குத் தெற்கிலிருந்து நாகஸ்வரம் வாசிக்க சென்ற முதல் நபர் கண்ணுசாமி என்னும் கதாபாத்திரம். அவருடைய

வாசிப்பை கேட்டு மயங்கி , சாயாஜி மன்னர் உத்தரவின் பேரில் வருடத்திற்கு ஒருமுறை அந்த சமஸ்தானத்தில் கச்சேரி நிகழ்த்தி வருவார். மேலும் பல சன்மானங்கள் அவருக்கு அளிக்கப் பட்டுள்ளது.(7)

கதையும் முடிவும்

தில்லானா மோகனாம்பாளில் நாகஸ்வரகலைஞனின் இசைவாழ்க்கை, அதனால் பெற்ற மரியாதை, இசையால் கிடைக்கப்பெற்ற வாழ்க்கை துணை, அதனை பெற அவன் மேற்கொள்ளும் சிரமங்கள், ஆகியன இருந்தபோதிலும் முடிவில் சுபமே.

சஞ்சாரத்தில் நாகஸ்வர இசைக் கலைஞர்களின் வாழ்க்கையில் சந்திக்கும் சாதிய அவமானங்களையும், அவனுக்கு ஏற்படும் இன்னல்களை பொறுத்துக் கொள்ள முடியாமல் அவன் செய்யும் நேர்மறையான செயல்களுக்கு அவன் பெரும் தண்டனையை எதிர்கொள் கிறான். இக்கதை நிறைவில் துயரத்தி லேயே முடிகிறது.

முடிவுரை

மனிதர்களுடைய தனித்துவம் என்பது எந்த ஒரு தொழிலாக இருந்தாலும் அதனை தெய்வமாக ஏற்றுக்கொண்டால், அது எல்லா விதத்திலும் சிறப்புடைய தாகச் செய்துவிடும். நாகஸ்வரத்தையே முதன்மை பொருளாக சித்தரித்த இவ்விரு இலக்கியங்களில், இசை கலைஞர்கள் வாழ்வில் சந்திக்கும் இன்ப துன்பங்களை மட்டும் எடுத்து காட்டாமல், இசையால் ஆட்பட்டவர்கள் எழுச்சி பெறுவதும் வீழ்வதும் அவரவருடைய தனித்துவத்தை சார்ந்தே இருக்கிறது என்பதை உணர்த்து கிறது. இறுதியில், இசையே வெல்லும் என்பதே இவ்வாய்வின் முடிவாகும்.

துணைநூற் பட்டியல்

1. தில்லானா மோகனாம்பாள் – முதல் பாகம் – பக்கம் 28
2. தில்லானா மோகனாம்பாள் – முதல் பாகம் – பக்கம் 48
3. சஞ்சாரம் – பக்கம் 20
4. தில்லானா மோகனாம்பாள் – முதல் பாகம் – பக்கம் 690
5. சஞ்சாரம் – பக்கம் 6
6. தில்லானா மோகனாம்பாள் – முதல் பாகம் – பக்கம் 350
7. சஞ்சாரம் – பக்கம் 71

‘கவித்தூறல்’ மலேசியத் தமிழ்க்கவிதைத் தொகுப்பில் இயற்கைக் காதல்

சரண் சுக்லாம் ஆத்மலிங்கம்
இளங்கலைப்பட்டப் படிப்பு மாணவர் &
Asso. Prof. Manonmani Devi M.A.R Annamalai
UPSI, Malaysia

ஆய்வுச்சுருக்கம்

இவ்வாய்வு ‘கவித்தூறல்’ எனும் மலேசியத் தமிழ்க்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 136 கவிஞர்களின் கவிதைகளுள் இயற்கை சார்ந்த பதிவுகளைக் கண்டறிவதும் கவிஞரது இயற்கையைப் பாடுபொருளாகக் கொண்ட கவிதைகளில் காணப்படும் இயற்கைக் காதலையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்நூலில் இடம்பெற்ற அனைத்துக் கவிதைகளும் ஆய்விற்குப் பயன்படுத்தப் பட்டது. இயற்கை சார்ந்த பாடு பொருளில் பாடப்பட்ட கவிதைகளில் காணப்படும் இயற்கைக் காதலை இயற்கையின் தன்மை, மனிதனின் பார்வையில் இயற்கை, இயற்கையின் இன்றைய நிலை, இயற்கையின் சீற்றம், இயற்கையைக் காக்கும் வழிகள் போன்ற துணைத் தலைப்புகளில் பகுப்பாய்வு செய்து ஆய்வுக் கண்டு பிடிப்புகள் ஆராயப்பட்டன. இயற்கையின் தன்மையும் மனிதனின் பார்வையில் இயற்கையும் ஆகிய கருத்துகள் அதிகமாக இந்நூலில் பேசப்பட்டுள்ளன. இயற்கையின் இன்றைய நிலையும் இயற்கையைக் காக்கும் வழிகளும் அளவாக இந்நூலில் பேசப்பட்டுள்ளன. மலேசியத் தமிழ்க் கவிதைகளில் சூழலியல் சிந்தனை இடம் பெற்றுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள்

கவித்தூறல், மலேசிய இலக்கியம், தமிழ்க்கவிதை, இயற்கை, இயற்கைக் காதல்

முன்னுரை

இயற்கையையும் தமிழரையும் ஆதி காலந்தொட்டே பிரிக்கவியலாத நிலையை நமது இலக்கியங்களின் வழி காணலாம். நமது தமிழ்மொழிக்கு முதல் நூலாக இன்றளவும் திகழ்ந்து வரும் தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூலில் பொருளதிகாரப் பகுதியில் காணப்படும் அகத்திணையியல் நூற்பாக்களில் இயற்கையை மையமிட்ட நிலங்களை அகத்திணையில் காணப்படும் உயர் ஒழுக்கமாகக் குறிப்பிட்டுள்ள மரபினைக் காண இயலுகிறது.

முதலெனைப்படுவது நிலம்பொழு
திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்
தோரே – [தொல். பொருள்.
அகத். நூற்பா 4]

இந்நூற்பாவில் இவ்வுலகத்தின் இயக்கத்திற்கான அடிப்படை முதற் பொருளாக நிலத்தையும் பொழுதையும் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர் (புலியூர்க் கேசிகன், 2012). ஐவகை ஒழுக்கத்தை அக இலக்கியங்களில் வரையறுக்கும் வேளையில் அவ்வொழுக்கங்களை நிலங்களுக்கான தன்மையோடு ஒத்திருக்கும் முறையில் அமைத்திருக் கின்றனர் நம் முன்னோர் (மனோன்மணி தேவி, அ., 2019). நிலத்தின் தன்மையோடு அக ஒழுக்கங்களை வரையறுத்த நம் தமிழர் அதற்கான பெயரை முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் போன்ற தமிழ் மலர்களின் பெயர்களில் தொடங்குவதும் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர் வாழ்வைக் குறிப்பிடுகிறது.

அதோடு மட்டுமில்லாமல், நமது தமிழர் இயற்கையின் மீது கொண்டுள்ள அன்பினைக் குறிஞ்சிப் பெரும்புலவர் கபிலரின் வாழ்க்கையெனும் அரும் பொருளை இயற்கையென்னும் பெரும் பொருளோடு இயைந்து வாழ்ந்து வந்த முறையிலும் அவரது பாடல்களில் போற்றப்பட்ட இயற்கையின் அழகும் பொருளும் தமிழர் இயற்கை மீது கொண்ட தீராத காதலிலும் காண முடிகின்றது.

சிறுகுடியீரே! சிறுகுடியீரே!
வள்ளி கீழ் வீழா; வரைமிசைத்
தேன் தொடா;
கொல்லை குரல் வாங்கி ஈனா
மலை வாழ்நர்
அல்ல புரிந்து ஒழுகலான்
–[கலித்தொகை, பா. 39]

இப்பாடலில் அறம் பிறழும் சிறு குடியில் பிறந்தோராக உள்ளோர் அறம் மீறி செயல்கள் செய்யும் நோக்கில் கற்புடைய பெண்களைப் பற்றி புறம் பேசி தீமை வளர்க்க இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாவர் என்றும் பாடியுள்ளார் (வைரமுத்து, 2019). இதன்வழி தமிழரது வாழ்வியல் இயற்கையோடு எப்படி இயைந்துள்ளது எனத் தெரியவருகிறது.

இதனைத் தொடர்ந்து, கவித்துறல் எனும் மலேசியத் தமிழ்க்கவிதைத் தொகுப்பு 1997ஆம் ஆண்டில் வெளியிடப் பட்ட மலேசியத் தமிழ்க்கவிதைக் களஞ்சியத்திற்குப் பிறகு வெளியிடும் மலேசியத் தமிழ்க்கவிதைத் தொகுப் பாகும். 136 மலேசியத் தமிழ்க்கவிஞர் படைப்புகளோடு முனைவர் மனோன் மணி தேவி அண்ணாமலை, முனைவர் சரசுவதி உலகன் முயற்சியில் இந்நூல் வெளிவந்துள்ளது. மூத்த கவிஞர், இளங்கவிஞர், மறைந்த கவிஞரென அனைவரது கவிப்புலமைக்கும் உரிய இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது இந்நூல் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு பாடுபொருள்களில் பா, பாவின, பா வகைகளில் கவிதைகளைக் கவிஞர் இயற்றியுள்ளனர். இத்தொகுப்பில் மலேசியத் தமிழ்க்கவிஞரது இயற்கைக் காதலை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தரவு பகுப்பாய்வும் ஆய்வுக் கண்டுபிடிப்பும்

'கவித்தூறல்' மலேசியத் தமிழ்க் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகளில் இயற்கையைச் சார்ந்த கவிதைகள் பல உள்ளன. இதன்வழி 'கவித்தூறல்' நூலில் இடம்பெற்ற மரபு கவிஞரது இயற்கைக் காதலை அறிய முடிகின்றது.

இயற்கையின் தன்மை

கவிஞரது கவிதைகளில் இயற்கையின் தன்மைகள் மிகச் சிறப்பாக எடுத்தியம்பு கின்றன. இயற்கையின் பண்புகளும் சிறப்புகளும் கவிஞர் க. பத்மநாதன் இயற்றிய 'தேனும் பாலும்' கவிதையில் தோன்றுகிறது.

இயற்கையால் உலகம்
இனிமையுறும் – மனம்
இன்பத்தில் நிறைவாய்
அமைதியுறும்!
[கவித்தூறல், தேனும் பாலும், பக். 206]

இதில், இயற்கை என்னும் பொருளால் மட்டுமே உலகமானது இன்பமுறும் எனப் பாடப்பட்டுள்ளது. இயற்கை யென்பதே உலகமாக விளங்குவதால் இவ்வடிகள் உலக மக்களை உலகம் என அழைத்துப் பாடியுள்ளதைக் காண முடிகிறது. இயற்கையின் வரவாலே ஓர் இடமும் மனித மனமும் இன்பமும் அமைதியும் பெறும் என்பது இயற்கைக் கான உயரிய தன்மையாகக் காணலாம். அதோடு மட்டுமில்லாமல், இயற்கை யோடு இணைந்து வாழும் மனிதரைக் கவிஞர் பழ. எ. அன்பழகன்

இயற்கையுடன் உலகினோ[டு]
ஒட்டி வாழும்
இயல்பான மாந்தருக்கும் பாருக்
குள்ளே இயந்திரமாய் உலவுகிற
மனித ருக்கும்
[கவித்தூறல், வாழ்க! வெல்க!, பக். 67]

எனப் பாடுகிறார். அதாவது, உலகில் இயற்கையோடு ஒன்றி வாழும் மனித வாழ்க்கை இயல்பானதாகவும் உலகில் இயந்திரமாக வாழ்க்கையை நடத்தும் மற்றவரது வாழ்வையும் பிரித்துக் காட்டுவது இயற்கையே என்னும் உயரிய கருத்தைக் கவிஞர் சொல்ல வந்துள்ளார். எனவே, இயற்கையின் தன்மையானது மனித வாழ்வின் மேன்மைக்கும் நலத்திற்கும் ஏற்றம் புரிவதாகப் பாடப் பட்டுள்ளது.

மனிதனின் பார்வையில் இயற்கை

இயற்கையின் தன்மைகளைப் போற்றிப்பாடும் கவிஞருக்கு மத்தியில் இயற்கைக்கு மனிதன் எப்படி தீங்கு செய்கிறான் என்பதைச் சில கவிஞர் விளக்க முற்பட்டுள்ளனர். மனிதச் சமுதா யத்திற்காகவே உலகமும் இயற்கைப் பொருள்களும் படைக்கப் பட்டுள்ளன எனும் போக்கு கி.மு 5ஆம் நூற்றாண்டி லேயே மனிதனை முதன்மைப்படுத்திய கிரேக்கத் தத்துவ ஞானிகளின் கருத்தாக்கத் தால் இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகிறது (பஞ்சாங்கம், க., 2014). இதனால், மனிதனின் பார்வையில்

இயற்கையானது எப்படிச் சித்தரிக்கப் படுகின்றது என சில கவிஞர்கள் பாடியுள்ளனர். இதில் முதன்மையாக, கவிஞர் அருள் ஆறுமுகத்தின் கவிதையில்,

மண்காணும் நிலத்திணைகள்
விலங்கினத்தின் கூட்டம்
மக்களுக்காய்ப் பயன்செய்யும்
பல்லுயிரின் ஆக்கம்...
[கவித்தூறல், துள்ளும் நாள்
எந்நாள்?, பக். 58]

எனக் கூறுகிறார். அதாவது, மண்ணில் காணப்படும் நிலங்களும் விலங்குகளும் மனித இனத்திற்காகப் பயனாகும் ஆக்கங்களாக மனிதன் எண்ணுகிறான் எனக் கவிஞர் விளக்குகிறார். மனிதனை மையமிட்ட கருத்தாக்கம் கொண்ட பலர் வாழும் உலகில் அவனைச் சுற்றியுள்ள இயற்கை அவனது பயனிற்காகப் படைக்கப்பட்டவையாகக் காண்கிறான் என்பது இதன் சாரம். அதனைத் தொடர்ந்து, கவிஞர் மா. இராமகிருஷ்ணன் தனது கவிதையில்,

பொன்விளையும் பூமிதனில்
பிறந்த நானும்
பூரித்து மகிழ்கின்றேன்; ஆனால்
இங்குத்
தன்பூமி என்றுசிலர் சொல்லும்
போது
தவிக்கின்றது என்நெஞ்சம்;
இணைந்து வாழ...
– [கவித்தூறல், ஆதங்கம், பக். 99]

எனப் பாடுகிறார். அதாவது, மனிதனைச் சுற்றிய இயற்கையில் நிலங்கள் என்பது அதிமுக்கியமானவை. அப்படிப் போற்றப் படும் நிலங்களை ஒவ்வொருவரும் வாங்கிச் சேர்க்கவும் சொந்தமாக்க எண்ணுவதும் பெரும் பிழையாகும் என்கிறார் அவர். இதைப்போன்று, கவிஞர் குமரன் வேலுவும் தனது கவிதையில்,

கடலும் வானும் பொதுச்சொத்தே!
காற்றும் நீரும் அருஞ்சொத்தே!
–[கவித்தூறல், உலகம், பக். 317]

எனக் குறிப்பிடுகிறார். அதாவது, மனிதனைச் சுற்றியுள்ள கடலும் வானும் யாரும் சொந்தமாக்கவியலாத பொதுச் சொத்தாகும். உலக மக்களின் சிறந்த பாதுக்காப்பின் வழி வளர்க்கப்பட வேண்டிய இயற்கையின் இப்பிரிவுகள் இன்று அவரவர் சொத்தாக உருமாறி அழிக்கப்படுகிறது என்னும் பொதுநலச் சிந்தனையோடு மனிதன் இயற்கையின் மீது கொண்ட பார்வைகளைக் கண்டிக் கின்றனர் கவிஞர்.

இயற்கையின் இன்றைய நிலை

அதனைத் தொடர்ந்து, கவிஞரது கவிதைகளில் மனிதச் செயல்களினால் இயற்கை இன்று எதிர்நோக்கியுள்ள நிலையைப் பதிவு செய்துள்ளனர். மனிதனின் தன்னலப் போக்கினாலும் அதீத நகர்ப்புற வளர்ச்சிகளினாலும் இக் காலத்தில் இயற்கை மாசுடனும் முறையான பராமரிப்பின்மையுடனும் இருப்பதை இத்தொகுப்பில் பதிவு செய்துள்ளனர். கூடுதலாக, பனிமலை கரைந்துவரும் நிகழ்வையும் இக்கவிதையில் புலவர் வே. விவேகானந்தன் 'அச்சுறுத்தும் அலைகள்' என்ற கவிதையில் குறிப்பிடுகிறார்.

மனிதக் கூட்டு வாழும்
முறையால்
பனிமலைத் தொடரும் பாகாய்க்
கரைந்தே
ஆழிப் பேரலை அதிரத் தாக்கி
ஊழிக் காலமாய் உலகின்
நாடுகள்
மூழ்கிப் போகும் எனப்பல ஆய்வர்
– [கவித்தூறல், அச்சுறுத்தும்
அலைகள், பக். 277]

இவ்வடிகள் மனிதன் செய்யும் தவறுகளால் பனிமலைகள் இன்று தொடர்ந்து கரைந்து கடல் நீர் மட்டத்தை அதிகரிக்கச் செய்வதால் பின்நாளில் இது மனிதச் சமூகத்திற்கே தீங்காக அமையும். மனிதனது போக்கினால் தொடர்ந்து பாதிக்கப்படும் இயற்கையின் இந் நிலையைக் கண்டு கவிஞர் இக் கவிதையைப் புனைந்துள்ளார்.

இயற்கையின் சீற்றம்

இயற்கையின் அழகையும் அதனை மனிதன் எப்படி கையாள்கிறான் என்றும் காணப்பட்ட இந்நூலில் மனிதனது தீய செயல்களினால் இயற்கை அடையும் சீற்றமும் பேசப்பட்டுள்ளது.

குலமகள் போலும்
ஒளிர்விடுவேன்;
குவலயம் அழித்திட
வும்துணிவேன்!
[கவித்தூறல், இயற்கையின்
இதய ஓசை, பக். 171]

என்று கடல் மனிதனை நோக்கி, அவன் செய்யும் தீங்கினால் அவன் வாழும் உலகையே அழிக்க வல்ல ஆழிப் பேரலையை உண்டாக்கும் திறம்பெற்றது என்று கவிஞர் திருமாமணி பாடுகிறார். அதனைத் தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட பனிமலை கரைந்து வரும் நிகழ்வின் விளைவாக 'இயற்கையின் சீற்றம்' என்னும் கவிஞர் உத்திராபதி அவர்களின் கவிதையில்,

உருகிவரும் பனிக்கட்டி
உலகையே வாட்டிடுமே!
உயிர்க்காக்கும் இயற்கையும்
சீற்றம்கொண்[டு] அழிக்கும்மே!
[கவித்தூறல், இயற்கையின்
சீற்றம், பக். 307]

என்று பாடியுள்ளார். மனிதன் தன்னிலை அறியாது செய்யும் அனைத்துத் தீங்கும் நாளடைவில் அவனுக்கே தீங்காகவும் சிக்கலாகவும் அமையுமென்றும் இயற்கை யானது தகுந்த தண்டனையை வழங்கும் என்றும் கருத்தாக்கங்கள் இந்நூலில் காணப்படுகின்றன.

இயற்கையைக் காக்கும் வழிகள்

இத்தொகுப்பில்காணப்படும்இயற்கை சார்ந்த கவிதைகளில் ஆங்காங்கே இயற் கையைக் காக்கும் வழிகளைக் கவிஞர் வழங்கியுள்ளனர். அதில் முக்கியமான தாகக் கருதப்படுவது, மரம் நடும் பழக்கைத்தை மேம்படுத்து வதாகும். இயற்கை எதிர்கொள்ளும் சிக்கல்களில் உலக வெப்பநிலை அதிகரிப்பும், வறட்சியும், காடுவாழ் உயிர்கள் பெருக்கத்தில் எதிர்நோக்கும் சிக்கல் களுக்கும் மரங்களின் தேவை அளப்பரியது. அதிகமான மரங்களை நாம்

நடுவதனால் இயற்கை சந்திக்கும் சில சிக்கல்களைக் களைய வழி பிறக்கிறது. இதனைக் கவிஞர் ந. கு. முல்லைச் செல்வன்,

மரமென்னும் உயிர்வளத்தை
மதித்தே வாழும்
மனப்போக்கை மாந்தரிடை
விதைத்தே காப்போம்!
[கவித்தூறல், மரத்தைக்
காப்போம், பக். 255]

மனிதன் எப்போது மரங்களை மதித்து அதனைப் பயிரிடுகின்றானோ அப்போதே அவனது வருங்காலச் சந்ததிகள் சிறப்புடன் வாழும் எனக் கூறுகிறார். எனவே, நாம் மரம் நடும் பழக்கத்தை மேற்கொண்டு இயற்கையைக் காக்க வேண்டும்.

முடிவுரை

சுருங்கக் கூறின், 'கவித்தூறல்' மலேசியத் தமிழ்க்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் இயற்கைக் காதலானது அதிகமாக வெளிப்பட்டுள்ளது. இயற்கையின் அழகை வருணிக்கத் தொடங்கிய கவிஞர் கம் அவ்வியற்கை மனிதனால் சந்திக்கும் சிக்கல் தொடங்கி அதனைக் களையும் வழிகளுடன் எழுத முனைந்துள்ளனர். மலேசியத் தமிழ்க்கவிதைச் சூழலில் சூழலியல் நோக்கோடு பல கவிதைகள் மலேசியாவில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

துணைநூற்பட்டியல்

1. செல்வகுமார், கை. (2017) திருக்குறளும் சுற்றுச்சூழல் போக்குகளும். பன்னாட்டுப் பரப்பில் தமிழிலக்கியப் போக்குகள். தொகுதி 1. சென்னை: செம்மூதாய் பதிப்பகம்.
2. சோதிநாதன், ஆ. (2017). உமா நற்றமிழ் பேரகராதி. கோலாலம்பூர்: உமா பதிப்பகம்.
3. பஞ்சாங்கம், க. (2014). சூழலியல் திறனாய்வு நோக்கில் சிலப்பதிகாரம். நவீன இலக்கியக் கோட்பாட்டு நோக்கில் செவ்வியல் இலக்கியங்கள். ஈரோடு: தமிழ்த்துறை, சிக்கய்ய நாயக்கர் கல்லூரி.
4. புலியூர்க் கேசிகன். (2012). தொல்காப்பியம். சென்னை: சாரதா பதிப்பகம்.
5. மனோன்மணி தேவி, அ. (2017). இலக்கிய ஆய்வில் ஒரு துமி!. Kajang: My Story Enterprise.
6. மனோன்மணி தேவி, அ. (2019). தொல்காப்பியத் தேன் துமிகள். கோலாலம்பூர்: உமா பதிப்பகம்.
7. மனோன்மணி தேவி, அ. & சரசுவதி, உ. (2020). கவித்தூறல். கோலாலம்பூர்: உமா பதிப்பகம்.
8. வைரமுத்து. (2019). தமிழாற்றுப்படை. சென்னை: சூர்யா லிட்ரெச்சர் (பி) லிட்.

அம்பையின் காட்டில் ஒரு மான் கதையில் பெண்

தே. சாமுவேல்

தமிழ்த்துறை (தன்நிதிப் பிரிவு)

சென்னை கிறித்துவக் கல்லூரி, சென்னை–59

9962128301

ஆய்வுச் சுருக்கம்

படைப்பாளர்கள் தம்முள் உருவாகும் கருத்தை, தமக்கு வளமாக வரும் படைப்பு வடிவத்தின் வழியே வெளிப்படுத்து கின்றனர். அப்படைப்புக்கள் படைப் பாளரின் மன வெளிப்பாடக அமை கின்றது. படைப்பு படைப்புக்கானது என்போர் இருப்பது போலவே படைப்பு மக்கள் விடுதலையை முன்வைக்க வேண்டும் என்பாரும் உளர். இவ் வகையில் எழுத்தாளர் அம்பை மக்கள் நலனை முன்வைத்து எழுதி வருபவர். அவ்வகையில் 'காட்டில் ஒரு மான் ' என்ற நூல் வாயிலாக அம்மை முன்வைக்கும் பெண்ணியக் கருத்துகளை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை

உலக இலக்கிய வடிவங்களில் தனித்த அடையாளத்தை சிறுகதைபெற்றுள்ளது. அமெரிக்காவில் எட்கார் ஆலன்போ பல கதைகளை எழுதியளித்த பிறகே உலக அறிஞர்கள் சிறுகதையைத் தனியொரு இலக்கியமாகப் போற்றத் தொடங்கினர். இவ்வகையான சிறுகதைகள் பத்தொன் பதாம் நூற்றாண்டில் தொடங்கி இருப்பினும் அவை இன்றளவும் நவீன உலகில் நடைபெறுகின்ற சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. குறிப்பாக மக்களிடையே ஏற்படுகின்ற ஏற்ற தாழ்வு, சாதி, மதம், இன வேறுபாடுகள். குறிப்பாகப் பெண் ணடிமைத்தனத்தைப் பற்றிப் பேசிக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையில் அம்பையின் சிறுகதைகள் வளர்ந்த சமூகத்தில் பெண்களின் அடிமைத்தனமானது புராணங்களில் மூலமாக அடையாளப்படுத்தும் முயற்சி மேற்கொண்டு வருகின்றது.மேலும் இவர் புராணங்களில் வருகின்ற கதைகளை நிகழ்கால சமூகத்தோடு தொடர்புபடுத்தி பெண் அடிமைத்தனத்தை ஒப்பிட்டுக் காட்டுவதாக கதைகள் அமைத்துள்ளார்.

புராணங்கள் மக்கள் வாழ்வு வாழ்க்கையில் உயர்ந்த நிலைபெற்று இருந்தன. புராணத்தில் இறைவன் செய்யும் விளையாட்டை மக்கள் போற்றி மகிழ்ந்தனர். ஆனால் அதை "காட்டில் ஒரு மான்" என்ற கதையின் ஆசிரியர் எவ்வாறு இறைவனின் திருவிளையாட்டின்

மூலமாக பெண்களை அடிமைப்படுத்தும் நிலையும் அதன் மூலமாக ஆணாதிக்க சிந்தனைகள் எப்படி வெளிப்படுகின்றன என்பதை கூறுகின்றார். புராணங்களில் வாயிலாக பெண்ணடிமைத்தனத்தை எவ்வாறு தன்னுடைய சிறுகதையில் எடுத்து இயம்பு கின்றார் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் பெண் எழுத்தாளர்களின் பங்கு தொடக்கம் முதல் இருந்து வந்துள்ளது. இதில் பெண் எழுத்தாளர்களில் ஒருவரான அம்பை அவர்கள் 1960களின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கியவர். இவரின் சிறுகதை படைப்புகளில் பெண் நிலைகளை வெளிப்படுத்தும் வகைமையிலானதமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடி. பல பெண் படைப்பாளிகள் தொடச் சிரமப்படும் விஷயங்களைச் சர்வசாதாரணமாய்த் தொட்டுச் சென்றவர். உறவு, காதல், திருமணம், அரசியல், இசை என்று பல்வேறு பரிமாணங்களைத் தொட்டவர். பெண்களின் வாழ்க்கையை அதுவும் சுயசிந்தனை கொண்ட படித்த பெண்களை மிக இயல்பாய் படைத்தவர். தமிழகத்தின் எல்லை கடந்த நிலப் பகுதிகளையும் களனாகக் கொண்ட இவரது கதைகளில் "பெண்களின் உறவுச் சிக்கல்கள், பிரச்சனைகள், குழப்பங்கள், கோபதாபங்கள், சமரசங்கள்"[1] யாவும் கிண்டலான தொனியில் கலாபூர்வமாக வெளிப்படுகின்றன.

எழுத்தாளர் அம்பை

அம்பையின் இயற்பெயர் சீ. எஸ். லெட்சுமி, இவர் கோயம்புத்தூரில் 1944 ஆம் ஆண்டு பிறந்தார். தமிழைத்தானாகவே படித்துத் தேர்ந்து கோயம்புத்தூர் பாட்டியிடமிருந்தும், பிரபல பத்திரிக்கைகளை விடாமல் படித்து, தமிழ்ப் பாடங்களை அனுபவித்துப் பாடிய அம்மாவிடம், தமிழ் ஆசை வந்தது. பெங்களூரில் பள்ளி இறுதி ஆண்டுகளில் பிரபலமான பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்தவர். எம்.ஏ., முடித்த பிறகு பண்ருட்டியில் ஒரு பள்ளியில் ஆசிரியர் வேலை பார்த்தார். அதன் பிறகு சென்னை வண்ணாரப் பேட்டை கல்லூரி ஒன்றில் ஆங்கில ஆசிரியர் பணிச் செய்தார். அப்பொழுது எழுதிய கதை 'சிறகுகள் முறியும்' என்பதாகும்.

அம்பை வரலாற்றில் எம்.ஏ பட்டமும், அமெரிக்கன் ஸ்டடிஸில் முனைவர் பட்டமும் பெற்றவர்."தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர்"[2]. Dr.C.S. Lakshmi என்று தன்னுடைய இயற்பெயரில் The Economic and Political Weekly, The Timed of India, Free Press Bulletin,The Hindu போன்ற இதழ்களில் கட்டுரைகளும், நூல் விமர்சனங்களும் எழுதி வருகிறார்.

இவர்"பெண்கள் பற்றிய ஆய்வுக்கான ஆவண மையம் SPARROW (Sound and Picture Archives for Research on Women) என்ற அமைப்பை நிறுவி அதன் இயக்குனராக பணியாற்றி வருகிறார்"[3]. மேலும் இவர் 'தங்கராஜ் எங்கே' என்ற சிறுவர்

திரைப்படத்திற்கு வசனம் எழுதியுள்ளார். 'முதல் அத்தியாயம்' என்ற சிறுகதைத் திரைப்பட மாகத் தயாரித்துள்ளார்.

அம்பையின் படைப்புகளாக அம்பை சிறுகதைகள் தொகுப்பு, வற்றும் ஏரியின் மீன்கள், சக்கர நாற்காலி, தண்ணியடிக்க, பெண் இசைக் கலைஞர்கள் மற்றும் நடனக் கலைஞர்கள் பற்றிய நூல்கள் 1.Singer and the song 2.Mirrors and Gestures ஆகிய இரண்டு நூல்களை எழுதியுள்ளார். மேலும் இவருடைய சிறுகதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு A Purple Sea. இவரின் படைப்புகளில் சில சிறுகதைத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அவை சிறகுகள் முறியும் (1976), வீட்டின் மூலையில் ஒரு சமையல் அறை (1988), காட்டில் ஒரு மான் 2000), நாவலாக, அந்திமாலை என்பதும், நாடகங்கள் ஆற்றைக் கடத்தல், முடிவில்லா உரையாடல், பயங்கள் போன்றவை யாகும்.

மேலும் இவர் 'சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சை பறவை' என்ற சிறுகதைக்கு நூலுக்கு 2021ம் ஆண்டுக்கான சாகித்ய அகடமி விருதை பெற்றவர். விருதுடன் சேர்த்து ரூபாய் ஒரு லட்சம் காசோலையும் பெற்றது சிறப்புக்குரியது.

புராணங்களின் மூலம் பெண் அடிமைத்தனம்

"புராணம் என்ற வடசொல் புராதனம் என்னும் வடசொல்லின் திரிபாகும். அனு புரா-ற என்ற இரு வேர்களிலிருந்து பிறந்தது. புரா-உற இரண்டும் சேர்ந்து புராணம் என்றாயிற்று. நிலைமொழி யிலுள்ள ஏகரத்திற்கேற்றவாறு வருமொழி யிலுள்ள நகரம் னகரமாக மாறிவிடும்"[4]. எந்த ஒரு நிகழ்ச்சியை, கதையோ, செயலோ தொன்றுதொட்டு இன்றுவரை வழங்கி வருகிறதோ அதுவே புராணம். புராணம் என்ற சொல்லுக்கு பழமை என்பது பொருள். "தத்துவ நுட்பங்களை எது மக்கள் மனதில் எளிதில் உணர்த்துமாறு கதை வடிவமாக எழுதப் பட்டவையே புராணங்கள் என்று கூறுகின்றார்"[5]. திரு.வி.க. "பழமையான எந்த ஒரு கதையோ, வரலாறு, மரபுவழித் தொடர்ந்து வந்து உலகமாந்தரிடையே கர்ண பரம்பரையாகக் கூறப்படுகின்றவை யாவும் புராணங்கள் ஆகும்"6 என்கிறார் ப.கோபாலன்.

'காட்டில் ஒரு மான்' என்ற சிறுகதையின் தொகுப்பில் அம்பை சில கதைகளின் ஊடே புராணச் செய்திகளைக் குறிப்பிடுகின்றார். இப்புராணத்தில் மூலம் பெண் அடிமைத்தனம் என்பது பண்டைக் காலம் தொட்டு நிகழ்காலம் வரையும் பெண்களை அடிமைப்படுத்து கின்றனர் என்பதையும், ஆணாதிக்க சிந்தனையை எவ்வாறெல்லாம் புராணங்களில் வெளிப்படுத்துகின்றது என்பதைத் தன்னுடைய வாழ்க்கையில் கண்ட அனுபவத்தையும் கதையின் வாயிலாக இச் சமூகத்திற்கு கூறுவதாக அமைகின்றது.

லஷ்மியும் ஆதிசேஷனும்

'தீக்கு' என்ற கதையில் ஒரு பெண்ணுக்குச் சிறுவயதில் ராமன் மேல் அதிகப்பற்று கொண்டு இருந்தார். இவள்

வளரவளர ராமனை சில விஷயங்களில் பிடிக்காமல் போயிற்று. ஆனால் சிவனைப் பிடிக்கும். மூலமான விஷ்ணு உருவத்தில் ஆதிசேஷன் மேல் படுத்துக் கொண்டு லட்சுமியைப் பாதத்தருகே வைத்திருப்பது"[7] கோபத்தை உண்டாக்கியது. இங்கு திருமாலின் உண்மையான ரூபம் வெளிப்படுகின்றது. இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு கதை எழுதினால் அவள். 'லட்சுமிக்கு ஒரு ஆதிசேஷன்' என்ற தலைப்பில் கதையில் இறுதியில் லஷ்மி தன்னுடைய அடிமை நிலையை ஆதியிடம் கூறுகின்றார். ஆதியின் மனம் உருகி இன்னொரு பாம்பு படுக்கையை உண்டாக்கினான். விஷ்ணு கண்விழித்த போது பக்கத்தில் இன்னொரு பாம்பு படுக்கையில் லட்சுமி உடலை ஒடுக்காமல் தாராளமாகப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள் என்று கதை முடிகின்றது. கல்லூரி பத்திரிக்கையில் பொறுப்பாசிரியர் கதையை ஏற்கவில்லை.

இங்கு திருமாலின் ஆண் ஆதிக்க சிந்தனையை எதிர்த்து இவள் கதை எழுதும் போது அதை ஏற்றுக்கொள்ளும் கொள்ள முடியாத மனம் கொண்ட ஆணாக கல்லூரி பத்திரிக்கை ஆசிரியர் இருக்கிறார். இவர் கருத்துப்படி பெண்கள் ஆணுக்கு அடிமையாக தான் இருக்க வேண்டும். அவள் எப்போதும் ஆணுக்கு சமமாக இருக்க முடியாது. பெண் என்பவள் ஆணுக்கு எப்போதும் அடிமையாக இருந்து அவனுக்கு பணிவிடை செய்ய வேண்டும். அவள் எப்பொழுதும் ஆணுக்கு சமமாக இருக்க முடியாது. பெண் என்பவள் ஆணுக்கு எப்பொழுதும் அடிமையாக இருந்து அவனுக்கு பணிவிடைகள் செய்ய வேண்டும். அவள் தன்னை ஆணுக்கு சமமானவள் என்று அவள் நினைத்துப் பார்க்கக் கூடாது என்று கூறுவதைப் போல் உள்ளது. இப்புராணத்தில் மூலமாக அம்பை அவர்கள் பெண்கள் எவ்வாறெல்லாம் ஆணாதிக்கச் சமூகத்திற்கு அடிமைப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றான் என்பதை கூறுவதாக அமைகின்றது.

ஞானப் பாலும் பெண்குழந்தையும்

"ஆரம்பக் கால கவிதைகள்" என்ற கதையில் ஒரு பெண் ஞானத்தைப் பெற எல்லா முயற்சிகளையும் அவள் மேற்கொண்டாள். "மூன்று நாட்கள் தொடர்ந்து அழுதால் கடவுளை காணலாம். அதன் மூலமாக ஞானத்தைப் பெறலாம் என்று ராமகிருஷ்ண பரம குரு சொல்லியிருந்தார்"[8]. ஆறு நாட்கள் அழுதும் எந்தக் கடவுளும் தரிசனம் தரவில்லை. இந்தச் சூழ்நிலையில் அவள் தந்தை பெண்களுக்குக் கணக்கும், விஞ்ஞானமும் படிக்க வராது என்று கூறுகின்றார். அதைப் போல இவளுக்கும் கணக்கு விஞ்ஞானம் படிக்க வரவில்லை. சிறிய கணக்குகளுக்கு விடைகள் கிடைக்கும் சிறு அற்புதம் கூடவா செய்யக் கூடாது? என்று அவள் ஞானத்திற்காக ஏங்கும் நிலையில் புராணக் கதை நினைவுக்கு வந்தது. "கீழே விடப்பட்ட குழந்தைப் பாலுக்கு அழுகிறது என்று ஞானப் பாலூட்டினாள் பார்வதி"[9]. அதன்பிறகு அந்த குழந்தை அற்புதமாக பாடல்களை இறைவனைப் புகழ்ந்து பாடியது.

"சுதந்திரம் அடைந்த ஒரு நாட்டில் கோயம்புத்தூர் என்ற ஊரின் கொசுக்கடி பிடுங்கும் ஆஸ்பத்திரி ஒன்றில் பிறந்ததற்காக இவளுக்கும் ஞானப்பால் மறுக்கப்பட வேண்டுமா"[10] இங்கு அவள் மன உணர்வு வெளிப்படுகின்றது. நான் ஆறு நாள் தொடர்ந்து அழுதும் எந்த கடவுளும் எனக்கு ஞானப் பாலை கொடுக்க வரவில்லை. ஆனால் ஒரு ஆண் குழந்தை அழுத உடனே அதுவும் பசிக்கு அழுத குழந்தைக்கு ஞானப்பால் கொடுக்கப்பட்டது. அவன் ஒரு ஆண் குழந்தை என்றதால் அவன் கேட்காமல் அவனுக்கு ஞானப்பால் கிடைத்தது. ஆனால் இவள் பலமுறை அழுதும் இவளுக்கு ஞானப் கிடைக்கவில்லை. அதுவே அங்கு ஆண் குழந்தைக்கு பதிலாக பெண் குழந்தை இருந்தால் அவள் கேட்காமல் ஞானப்பால் கிடைத் திருக்குமா என்று நான் ஒரு பெண் என்பதால் எனக்கு ஞானம் கிடைக்க வில்லையா? இதுபோன்ற கேள்விகள் இவள் மனதில் எழுந்தது.

சினிமாவும் பாதுகாப்பும்

தன்னுடைய தோழிகளுடன் 'பாசமலர்' படம் பார்க்க போவதற்கு தன் பெற்றோரிடம் அனுமதி கேட்டாள். அதற்கு அவர்கள் காலம் கெட்டுக் கிடக்கிறது. என்றும் இப்படி இவள் போவதில் தனக்கு உடன்பாடு இல்லை என்றும் அம்மா கடிந்து கொண்டு அந்த பக்தர்களை எல்லா கட்டங்களிலும் இறைவன் துணையாக இருக்கின்றான் என்றாள். உடனே இவள் மனதில் "நரியைப் பரியாக்கி, பரியை நரியாக்கி"11 திருட்டுத்தனம் செய்த பல செய்தார் "பிட்டுக்கு மண் சுமந்து"[12] வேலை செய்யாமல் திருட்டுதனம் செய்த இறைவன் எப்படி எனக்கு பாதுகாப்பு கொடுக்க முடியும்.

இவளைப் பொறுத்த வரையில் இறைவன் அநியாயமாக நடந்து கொள்கிறான். இவளுக்குள் பல கேள்விகள் எழுந்தது. எனக்கு இவன் மூலமாக அறிவு கிடைக்கவில்லை. வெளியில் என் தோழிகளுடன் சுதந்திரமாக சுற்றி வரும் எனக்கு அனுமதி கிடைக்கவில்லை. கடவுளின் பெயர் சொல்லி அவனை நம்புவதால் என்ன பயன்? அவன் என்னை ஏன் பாதுகாக்க வேண்டும். அவனே ஒழுங்காக இல்லாமல் திருட்டு வேலையில் செய்து வருகிறான் என்று இறைவன் மேல் தன்னுடைய வெறுப்பை தெரிவிக்கின்ற வகையில் இக்கதையானது அமைகின்றது.

இறைவனிடம் விண்ணப்பம் செய்தும் எனக்கு ஞானம் கிடைக்க வில்லை. மேலும் தன் தோழிகளுடன் வெளியே சுற்றி வருவதற்கும் அவளுக்கு அனுமதி கிடைக்கவில்லை. இந்த நிலையில் இறைவன் பெயரால் தன்னை அடிமைப்படுத்துவது எண்ணி இவள் மனதளவில் பாதிப்பு அடைகின்றாள்.

தெய்வங்களும் வாகனங்களும்

'வாகனம்' என்ற கதையில் பாக்கியம் என்ற சிறு பெண் தன்னுடைய அடிமை வாழ்வை புராணங்களும் ஒப்பிட்டு பார்ப்பதாக உள்ளது. இங்கு தேவர் களுக்கிடையே ஆண் பெண் என்ற

வேறுபாடு இல்லை. என்றாலும் அவர்களின் வாகனம் அவர்களின் தகுதியின் அடிப்படையில் அமைகின்றது. ஆனால் மனிதர்களிடையே ஆண் பெண் வேறுபாடு இருப்பதாக இக்கதை விளக்குகின்றது. எல்லோருக்கும் அவரவர் தேவைக்கு ஏற்ப ஒரு வாகனம் இருக்கின்றது. அது அவரவர் தகுதி ஒட்டி அமைந்த வாகனம்.

"சிவனுக்கு நந்தி, முருகனுக்கு மயில், விஷ்னு கருடன், சனீஸ்வரனுக்கு காகம், எமனுக்கு எருமை, அத்தனை பெரிய உடம்பு உடைய விநாயகருக்கும் கூட அதிகம் பயணம் செய்யாமல் அரச மரத்தடியில் அமர்ந்து இருந்தால் போதும் என்றாலும் வாகனக் குறை இருக்கக் கூடாது என்று ஒரு மூஞ்சூறு வாகனம் துணைக்கு உள்ளது"[13]. இதைப் போன்று பெண் தெய்வத்திற்கும் வாகனம் உள்ளது. "மகேஸ்வரிக்கு அன்னம் வாகனம், பத்மாசனிக்கு நாக வாகனம், மகேஸ்வரிக்கு ரிஷப வாகனம், மீனாட்சிக்கு குதிரை வாகனம், இதைத்தவிர சிவப்பு தாமரை, வெள்ளை தாமரை என்று மிதந்த படியாக பெண் தெய்வங்கள் உள்ளனர்"[14]. இங்கு ஆண் தெய்வத்திற்கும் பெண் தெய்வத்திற்கும் வேறுபாடு இன்றி வாகனங்கள் அமைகின்றன. ஆனால் பாக்கியம் தன்னுடைய சிறுவயது புகைப்படங்களைப் பார்க்கும் பொழுது ஆண் குழந்தை களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் உள்ள வேறுபாட்டினை உணர்கின்றாள்.

ஆண் குழந்தைகள் மூன்று சக்கர சைக்கிள் உடனே அல்லது சின்ன மோட்டார் வண்டியில் அமர்ந்தபடி புகைப்படங்கள் உள்ளது. ஆனால் பெண்கள் புகைப் படத்தில் அவரது பொம்மையை கையில் பிடித்தபடியே அல்லது அழகிய வேலைப் பாடு செய்த பொருள்களைக் கையில் பிடித்தபடி அல்லது அலங்கார நாற்காலி துணையுடன் புகைப்படங்கள் எடுக்கப் பட்டது. இங்கு ஆண் பெண்கள் சரி சமம் இல்லை. பெண்கள் ஆண்களைப் போல வண்டி ஓட்டுவது கடினம். அதனால் அவர்கள் வீட்டு வேலை சமையல் போன்ற வேலைகளைச் செய்யலாம் என்று ஆணையும் பெண்ணையும் சிறுவயதிலே அவர்களின் தகுதிநிலையை அறியாமலே அவர்களைப் பிரித்தது என்ற நிலையைக் காணலாம்.

பெண்ணும் மோட்டாரும்

பாக்கியத்தின் சித்தி சித்தப்பாவின் மோட்டர் பைக்கில் அமர்ந்தாள். அதற்கு அவர்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அவள் ஒரு பெரிய குற்றம் செய்தது போல பார்த்தனர்.பல விமர்சனங்கள் எழுந்தது. "சித்தியை தூய்மைப்படுத்த மோட்டார் பைக்கை சாணத்தால் கழுவுவதா அல்லது சித்தியை சாணத்தால் குளிப்பாட்டுவதா போன்ற விமர்சனங்கள் நடந்தது. இறுதியில் புரோகிதரின் யோசனைப்படி பசுவின் மூத்திரம் ஒரு துளி கலந்த எதையோ விழுங்கி சித்தி தன்னை சுத்தப்படுத்திக் கொண்டாள்"[15]. தெய்வங்களின் தகுதி அடிப்படையில் ஆண் பெண் தெய்வங்களுக்கு வாகனம்

கொடுத்தாலும் இங்கு பெண்களுக்கு ஒரு வாகனத்தில் மேல் அமர்ந்து கொள்ள உரிமை இல்லாத நிலை உள்ளது. பாக்கியத்துக்கு ஒரு வாதத்திற்காக ஆசை பட இத்தனை புராண சரித்திரம் வியப்பின் புலம் இருந்து. இருந்தும் வாகனயோகம் அவளுக்கு இருக்கவில்லை. நமது பள்ளி பாட புத்தகத்திலும் குடும்பம் என்று சித்தரிக்கப்படும் போகுது அங்கு உள்ள புகைப்படத்தில் அப்பா சேரில் அமர்ந்து செய்தித்தாள் வாசிப்பார். அம்மா சமையலறையில் வீட்டு வேலைகளை செய்வாள்.

ஆண் குழந்தை சைக்கிள் ஓட்டுவது போலவும் பெண்பிள்ளை சின்ன சிறிய வீட்டு வேலைச் செய்கின்ற பொம்மைகளைக் கொண்டு விளை யாடுவது போல காட்சிப்படுத்தப்பட்டு இருக்கும். இப்படங்கள் நம்மளை அறியாமலேயே பெண்களை இதற்கு தான் தகுதியானவர்கள் என்று அவர்களை அடிமைப்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. பல சூழ்நிலைகளில் நாம் அறியாமலே பெண்களை அடிமை படுத்துகின்றன நிலையைக் காண முடிகின்றது.

வானமும் மானமும்

'அன்னங்களும் பட்சிகளும் நெய்யப் பட்ட ஒரு ரோஜா வண்ணப் புடவை' என்ற கதையில் கண்ணனைப் போன்று வேடம் கொண்டு நடித்த சிறுமி கண்ணனைப் பிடிக்கவில்லை என்று கூறுகின்றாள். அவளுக்கு ஏன் கண்ணனைப் பிடிக்கவில்லை என்று ஆசிரியர் புராணச் செய்திகளைக் கொண்டு விளக்குகின்றார். "சிறுமி சிறுவர் பட்டாளம் கூடி முத்துகிருஷ்ணன், மோகன் மோசம் செய்தாண்டீ என்று பாடிக்கொண்டே ஆடுவார்கள். குளிக்கும் போது திருட்டுத் தனமாய்ப் புடவையைத் திருடி மரத்திலே கட்டி அவன் மறைத்திருந் தாண்டி என்ற வரிக்கெல்லாம் மரத்தைக் காட்டி, ஒளியும் பாவனைகளெல்லாம் செய்தவர்களுக்கு ஆடையைத் தந்தான் அவன் மானத்தைக் காத்தான்"[16] என்ற வரியில் மட்டும் பலத்த சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது.

மானம் என்றால் என்ன என்பது பற்றிய பெரிய சர்ச்சை. மானம் என்றால் என்ன? அது ஒரு பெண்ணுக்கு மானம் என்றால் என்ன? பெண்கள் குளிக்கும் இடத்திற்குச் சென்று அவர்கள் புடவையைத் திருடிய கண்ணன் எப்படி பெண்கள் மானத்தைக் காப்பாற்றி இருப்பார் என்ற சந்தேகம் அந்த சிறுமிக்கு ஏற்பட்டது. மானம் என்ற சொல் வானம் என்ற சொல்லின் திரிபு. அதனால் தான் மானத்தை காக்க கண்ணனை வானம் நோக்கி கைகளைக் கூப்பி வணங்கினார்கள். கண்ணன் கடவுள் இல்லையா? கடவுளர்கள் வானத்தில் இருப்பவர்கள் தானே? அதனால் அவன் வானத்தைக் காப்பது சரிதானே? ஆனால் இங்கு இறைவனின் செயல்பாடு என்பது இறைவனுக்கு இறைவனாக இருக்க தகுதி உள்ளதாக என்ற கேள்வியை எழுப்புகின்றது. ஏனென்றால் சாதாரண பெண்களிடம் இப்படி நடக்கும் இறைவன் எப்படி இந்த வான் உலகைப்

பாதுகாக்க முடியும் என்ற சந்தேகம் அந்த சிறுமிக்குத் தோன்றியது போல ஆசிரியர் குறிப்பிடுகின்றார். புராணங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரியங்கள் இன்றைய சூழலில் நோக்கும்போது அவை பெண்மீதான பாலியல் வன் கொடுமை போன்று அமையும் சூழல் உள்ளது. மேலும் புராணங்களில் காணப் படுகின்ற பெண்ணடிமைத் தனத்தையும் பெண்களில் இழிவுபடுத்தும் செயல்களை இச் சிறுமியின் மூலம் நிகழ்காலத்து நிகழ்வாகவும் அதை எதிர்ப்பது போல தன்னுடைய கதையில் அமைத்துள்ளார்.

'அடவி' என்ற கதையில் செந்திரு என்ற பெண் தன்னுடைய கணவரின் வியாபாரத்திற்கு அதிகமாக உழைத்தால். அதன் காரணமாக அவள் கணவன் அவளை தன்னுடைய வியாபாரத்தில் கூட்டாளி யாகச் சேர்த்துக் கொள்ள நினைத்து இருந்தான். இச்சூழ்நிலையில் அவனை சார்ந்தவர்கள் அவளை ஏற்றுக் கொள்ள வில்லை என்று அறிந்த, செந்திருவின் கணவன் அவளை தன்னுடைய வியாபாரத்தில் கூட்டாளியாக சேர்க்க வில்லை. இதனால் மனம் உடைந்த செந்திரு தன்னுடைய வாழ்க்கையை சீதையுடன் ஒப்பிடுவது போல கதையானது அமைகின்றது.

சீதையும் செந்திருவும்

இராமன் இராவணனைப் போரில் வென்று சீதையை மீட்டு வருகின்றார். அப்போது ஊர் மக்கள் ராவணனுக்கு சீதைக்கும் தொடர்புபடுத்திப் பேசு கின்றனர். அப்போது அவர்கள் சந்தேகம் தீர இராமன் சீதையைத் தீக்குளிக்கச் செய்து அவள் தூய்மையானவள் என்று நிரூபித்தான். அதன் பிறகு இந்திரகாமினி என்பவள் இலட்சுமணனை அடைய வேண்டும் என்றுவிரும்பினார். ஆனால் இலட்சுமணன் அதற்கு இணங்கவில்லை. அதனால் அவன் மீது கோபம் கொண்ட அவள் அவனின் படுக்கையில் வளையல் துண்டுகளையும் காதணிகளையும் சந்தேகம் தோன்றும் வகையில் வைத்தாள்.

மறுநாள் காலையில் அறையைத் தூய்மைச் செய்ய வந்த சீதை இதைப் பார்த்து இராமனிடம் கூறுகின்றாள். அவன் உடனே இலட்சுமணன் மேல் சந்தேகம் கொள்கின்றான். உடனே ஊரில் உள்ள அனைத்துப் பெண்களையும் அழைத்து வளையல் காதணிகள் பொருத்தம் பார்த்த பொழுது பொருந்தவில்லை. இன்னும் சோதனையில் பங்கேற்காத பெண்கள் உண்டா? என்று இராமன் வினவ இருக்கும் ஒரே பெண் சீதைதான். உடனே சீதை சோதனை செய்ய வளையல் காதணி இரண்டும் சீதைக்கு பொருந்தியது. இராமன் சீதையின் மேல் சந்தேகம் கொண்டு அவளைக் காட்டிற்கு அனுப்புகிறான். அவ்வாறு போவதற்கு முன் "லக்ஷ்மணன் சற்று மேடிட்டு இருக்கும் அவள் வயிற்றைப் பார்க்க வேண்டும். அவள் அண்ணனிடம் கூறவேண்டும். அவள் கர்ப்பவதி என்று, இல்லாவிட்டால் இன்னொரு அக்னிப் பரிட்சைக்கு ஆயத்தங்கள் தொடங்கி விடும்."[17] இங்கு இராமனின் சுயரூபம் வெளிப்படுகின்றது.

ஒருமுறை சீதை தீக்குளித்துத் தான் தூய்மையானவள் என்று நிரூபித்து இருந்தும் அவன் சீதையின் மேல் சந்தேகம் கொண்டான். இது போன்று தான் இன்று சமூகத்தில் பல இடங்களில் நடக்கின்றது. ஒரு சின்ன காரியமாக இருந்தாலும் கணவன் மனைவி மேல் சந்தேகம் படுகின்ற நிலை உள்ளது. ராமன் தெய்வ அவதாரம் எடுத்து இந்த உலகத்தில் என்ன நடக்கின்றது என்று எல்லாம் அறிந்த இறைவன் ஆக இருந்தாலும் அவன் தன்னுடைய மனைவியை பற்றி அறியாத நிலையே இங்கு காணப்படுகிறது. இங்கு ஆண்களின் ஆணாதிக்க வெளிப்படு கின்றது. பெண்களை எப்போதும் சந்தேக பார்வையுடன் அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் குற்றம் கண்டுபிடித்து அவர்களை அடக்கி ஒடுக்கும் ஆண்களைக் காணலாம். இதே போன்றுதான் செந்திரு என்ற பெண் தன்னுடைய கணவன் வியாபாரத்தில் அதிகமாக உழைத்தால் ஆனால் கணவன் மற்றவர்கள் பேச்சைக் கேட்டு தன் மனைவியை வியாபாரத்தில் கூட்டாளி யாகச் சேர்த்துக் கொள்ள வில்லை.

இங்கு பெண் தன்னுடைய கணவனாலும் சமூகத்தாலும் ஒடுக்கப்படு கின்றாள். ஆண்கள் பெண்களை சரிசமமாக நினைப்பதில்லை. செந்திரு தன் பெற்ற ஏமாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளாள். ராமன் எப்படியாக மற்றவர்கள் பேச்சைக் கேட்டு சந்தேகம் கொண்டு சீதையைத் தீக்குளிக்க வைத்தது போன்று இன்றும் சமூகத்தில் அதிகமான ஆண்கள் பெண்களைக் குற்றங்களைச் சுட்டிக்காட்டி அவர்களை பரிசோதனை செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.

1976 இல் விஷ்ணு என்பவரை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்குப் பின்னர் கணவருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி குழந்தை பெற்றுக் கொள்வதில்லை என முடிவு செய்தார். பொருளாதார காரணங்கள் மட்டுமன்றி படைப்பு மற்றும் தான் தேர்ந்தெடுத்த சமூகப் பணிகளுக்கு குழந்தைகளை உள்ளடக்கிய குடும்ப அமைப்பு தடையாக இருக்கும் என்பது அம்பையில் கருத்தாக இருந்தது. இதற்குக் காரணம் பெண் என்பவள் இந்தச் சமூகத்தில் ஒரு குடும்பத்தின் வாரிசைப் பெற்றுத் தருகின்ற ஒரு கருவி போன்றும், அவளை மோகப் பொருளாகவும், ஆண்களின் விருப்பங்களை நிறைவேற்று பவளாகவும், ஆணாதிக்க சமூகத்திற்கு அடிமையாகவும் எனப்படுகின்ற நிலையை உணர்ந்து தனது வாழ்க்கையே ஒரு முன்னுதாரணமாகக் கொண்டு பெண்களின் அடிமைத்தனத்தைப் போக்க தன்னுடைய கதைகளில் புராணச் செய்திகளையும் இணைத்து பெண்ணடிமைத்தனம் என்பது சங்க காலம் தொட்டு இருக்கின்றது. அதை கொண்டு தற்காலத்திலும் பெண்களை அடிமைப்படுத்தும் என்ற நிலையை எடுத்துக் கூறி பெண்களை அடிமை வாழ்விலிருந்து மீட்டெடுக்க தன்னுடைய எழுத்துக்களின் மூலம் விழிப்புணர்வு தருகின்ற வகையில் அம்பையின் 'காட்டில் ஒரு மான்' சிறுகதை தொகுப்புகள் அமைகின்றது.

அடிக்குறிப்புகள்

1. அம்பை சிறுகதைகள். ப.1.
2. மேலது. ப.1.
3. மேலது ப.1.
4. வைணவ அந்தாதி காட்டும்
   சமயநெறி.ப.130.
5. முருகன் அல்லது அழகு.ப.59.
6. பரஞ்சோதி திருவிளையாடற் புராணம்
   இலக்கிய மதிப்பீடு.ப. 39.
7. அம்பையின் காட்டில் ஒரு மான், ப.37
8. மேலது.ப.46.
9. மேலது.ப.48.
10. மேலது.ப 48.
11. மேலது.ப.49.
12. மேலது.ப.49.
13. மேலது.ப.60.
14. மேலது.ப.60.
15. மேலது.ப.61.
16. மேலது.ப.91.
17. மேலது.ப.140

நறுமுகையின் 'நந்தவனம்' நாவல் : பெண் மைய நோக்குநிலை

ரா. சிலம்பரசன்
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636 011.

ஆய்வுச் சுருக்கம்

நவீனத் தமிழிலக்கிய வளர்ச்சியில் புனைவு இலக்கியம் தனித்த இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாகப் பெண் மைய நோக்குடைய புனைவுகள் பல்கிப் பெருகி வருகின்றன. பெண்ணியக் கோட்பாட்டு வளர்ச்சியின் தாக்கம் இலக்கியத்திலும் ஊடுறுவியதன் விளைவாகப் பெண் மைய நோக்குடைய படைப்புகள் வெளிவரவும் வளரவும் தொடங்கின. பெண்மொழி, பெண்ணியக் கருத்தாடல்கள், ஆண் ஆதிக்கத்திற்கு எதிரான குரல்கள், பெண் மாற்றுச் சிந்தனை மரபு எனப் பல தளங்களிலும் பெண் குறித்த புனைவுகள் வெளிவந்து கொண்டிருக்கின்ற இன்றைய இலக்கியச் சூழலில் நறுமுகையின் 'நந்தவனம்' நாவல் சமூகத்தில் தனித்த அடையாளத்தையும், வாசிப்பாளர்களின் மத்தியில் கவனத்தையும் பெற்றுள்ளது. பெண்ணைத் தலைமைப் பாத்திரமாகக் கொண்டு புனையப்பட்ட இந்நாவல் சமூக விழுமியங்களையும், பெண் குறித்த பழைய மரபுகளையும் கேள்விக் குள்ளாக்குவதாக எழுதப்பட்டுள்ளது. குடும்பப் பின்னணியைக் கதைக்களமாகக் கொண்டு பின்னப்பட்ட இந்நாவலின் கதைப்போக்குப் பெண்ணின் தாய்மை உணர்வைப் பிரதிபலிப்பதாக அமைந் துள்ளது.

திறவுச்சொற்கள்

நந்தவனம் – புனைவு – பெண்மொழி – புது எழுத்து – கதாபாத்திரம் – தலைமைப் பாத்திரம் – எதிர்நிலைப் பாத்திரம் – பெண் மைய நோக்கு – மாற்றுவெளி – அத்தியாயம் – குழந்தை உளவியல் – குடும்பம் – சமூகம் – கற்பிதங்கள்.

முன்னுரை

வளர்ந்துவரும் நவீனப் புனைவிலக்கிய இளம் பெண் எழுத்தாளர்களுள் நறுமுகை குறிப்பிடத்தக்கவர். கதைச் சொல்லலிலும், கேட்டலிலும் மிகுந்த ஆர்வம் கொண்ட இவரது முதல் நாவல் 'நந்தவனம்'. நாவலில் பேசு பொருளாகவுள்ள பொருண்மைக்கும் இவரது அகவைக்கும் எந்தவித தொடர்புமில்லை என்றே கூறலாம். ஏனெனில், தற்போது முப்பது அகவையைக் கடந்திருக்கும் இவரது

எழுத்துகள் அத்துனை காத்திரமானவை. பெண்ணைத் தலைமைப் பாத்திரமாகக் கொண்டு புனையப்பட்ட இந்நாவலில் உள்ளடக்கமென்பது இதுவரையிலான பழம் மரபுகளையும், சமூக விழுமியங் களையும் கட்டுடைப்பதாக, மாற்றுச் சிந்தனைகளுக்கு வழிவகுப்பதாக, பெண்ணை முதன்மைப்படுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வாறு நந்தவனம் நாவல் பெண்ணியச் சிந்தனைகளை உள்ளடக்கமாகக் கொண்டும், பெண்ணை மையமிட்ட கதைப்பின்னலை நோக்க மாகக் கொண்டும் எழுதப்பட்டுள்ள மையால் இந்நாவலைப் பெண் மைய நோக்கு நிலையில் அணுகுவதற்கான இடனுண்டாகிறது.

நந்தவனம் : பெண்மொழியின் புது எழுத்து

நறுமுகை என்னும் புனைப்பெயரால் எழுதிவரும் மதிவதனி 1990ஆம் ஆண்டு சேலம் மாவட்டம் கொளத்தூரில் பிறந்தார். தற்போது அவர் அமெரிக் காவின் ஓஹாயோ மாகாண கொலம்பஸில் வசித்து வருபவராயினும், தொடர்ந்து தமிழிலக்கிய வாசிப்பிலும், தமிழியல் சார்ந்த செயல்பாடுகளிலும், எழுத்துத் துறையிலும் மிகுந்த ஆர்வம்காட்டி வருகின்றார். நறுமுகையின் நந்தவனம் நாவலைப் புதுச்சேரி ஃபிரெஞ்சு பதிப்பகம் 2022 ஆம் ஆண்டு முதற் பதிப்பாக வெளியிட்டுள்ளது.

பெண்மொழி என்பதற்குப் பெண்ணைப் பற்றிய பெண் படைப்பாளர் மொழிதல் என்னும் கருத்தாடலை நாம் பார்ப்போமானால், "பெண்களால் உருவாக்கப்படுகிற இவ்விலக்கியங்களின் மொழிக்கூறுகள், அனுபவங்கள், சிந்தனைகள், வாழ்வியல், மதிப்பீடுகள், பார்வைகள் முதலியன ஆண்நோக்கு நிலையிலிருந்து வேறுபட்டு அமைந்திருப் பதனால் இவ்விலக்கியப் படைப்புகள் பெண்மொழி / பெண் எழுத்து / பெண் பேச்சுத் தன்மை கொண்டவை என்றழைக்கப்படுகின்றன" (பெண்மொழி இயங்கியல், பக்.79-80) என்னும் கருத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அதேசமயம், பெண்மொழி என்பது பெண் எழுத்தாளரால் மட்டும் எழுதப்படுவ தன்று, மாறாகப் பெண் பற்றிய எழுத்து என்பதே அதன் பொருளாகும் என்ற கருத்தாடலும் வழக்கிலுண்டு. ஏனெனில் படைப்புவெளியில் பெண், ஆண் எனப் படைப்பாளர்களை வேறுபடுத்துவது ஆரோக்கியமானதன்று. "படைப்புத் தளம் எல்லோருக்கும் பொதுவானதாய் அமைந்திருப்பதைப் போலவே, படைப்புகளும் பொதுத்தன்மை கொண்ட பாங்கைப் பெற்றிருக்கும். ஆகையினால் பெண் படைப்பு, ஆண் படைப்பு எனத் தனியே பிரித்திடாமல் அப்படைப்பு களினூடே காணலாகும் வெவ்வேறு பார்வைகளைப் போலவே, பெண் படைப்புகளையும் ஆண் படைப்பு களையும் சேர்த்த எல்லாப் படைப்பு களையும் பெண் பார்வையில் அணுகலாம்" (மேலது., ப.85) என்ற கருத்தை இங்கு எண்ணுவோமானால் படைப்புச் சார்ந்த ஆய்வுகளில் எழுத்தாளர்களின் பாலினப் பாகுபாடு

எத்தகைய பிற்போக்குத்தனம் என்பது புலனாகும். இந்நிலையில், "பெண் எழுத்தாளர்களைப் பெண்கள் மட்டுமே ஆராய வேண்டும் என்ற நிலைப்பாடு தமிழ்ச் சூழலில் இன்னும் முன் வைக்கப் படவில்லை"(இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப.236) என்று க.பஞ்சாங்கம் குறிப்பிடுவதை ஒப்பு நோக்க வேண்டும். மேலும் அவர், "ஆண்களால் உருவாக்கப்பட்ட இலக்கிய மாதிரிகளிடமிருந்து விலகிப் புதிய இலக்கிய மாதிரிகளை உருவாக்கும் முயற்சிகளும் சிறப்பாக மேற்கொள்ளப் படவில்லை" (மேலது.,ப.236) எனவும் குறைபட்டுக்கொள்கிறார். எனவே, பெண்மொழி என்பதனை வரையறுக்க வேண்டுமெனில்'பெண் பற்றியதே' என்று வரையறுப்பது பொருத்தமுடையதாகும். அஃது, ஆண் படைப்பாளராலோ அல்லது பெண் படைப்பாளராலோ எழுதப்பட்டதாக இருக்கலாம். இருப்பினும் ஓர் ஆண், பெண் குறித்து எழுதுவதற்கும், ஒரு பெண் பெண்ணைக் குறித்து எழுதுவதற்கும் இடையே ஒரு சரிவிகித சமநிலையை எதிர்பார்க்க இயலாது. அது மேட்டுமைக்கும் பள்ளத் திற்குமான இழுபறியாகக்கூட அமைந்து விடலாம். ஆனால், இத்தகைய முரண்களை யெல்லாம் சரிகட்டும் விதமாகத்தான் ஓர் ஆய்வு அமையப்பெறுதல் வேண்டும்.

நறுமுகையின் 'நந்தவனம்' நாவல் சமூகக் கட்டமைப்பான குடும்ப அமைப்பை மிக மூர்க்கமாகத் தாக்கவோ அல்லது அதனை உடைக்கவோ செய்ய வில்லை. மாறாகச் சமூகக் கற்பித்தல் களையும், சமூகம் உயர்வு எனக் கருதும் பிற்போக்குகளையும் கட்டுடைக் கிறது. மேலும் ஆய்வோமானால் பெண் என்பவளைக் குடும்பம் பேணுபவளாகப் பிரதிபலிக்கிறது. குடும்ப உறுப்பினர் களின் எதிர்ப்பையும்கூட பொறுமையாக எதிர்கொண்டு அவர்களைத் தன்வழிக்குக் கொணரும் அன்புடைப் பாத்திரமாகப் பெண் காட்டப்படுகின்றாள். ஆணைச் சார்ந்திருத்தல் அல்லது ஆணிலிருந்து விடுபடல் போன்ற பெண்மைய நோக்கு நிலையுடைய பிற புனைவுகளிலிருந்து வேறுபடும் இந்நாவல் ஆணைத் துணை யாக்கிக் கொள்ளுதல், ஆணுக்கொரு துன்பமெனில் புத்திக்கூர்மையுடன் அத்துன்பங்களைக் களைதல் என்னும் மாற்றுவெளியில் பயணிக்கின்றது. எனவே, 'நந்தவனம்' நாவலைப் பெண் மொழியின் புது எழுத்து எனக் குறிப்பிடலாம்.

பாத்திரப் படைப்பில் தலைமையும் எதிர்நிலையும்

நந்தவனம் நாவலில் நந்தனா என்னும் பெண் கதாபாத்திரத்தைத் தலைமைப் பாத்திரமாகக் காட்டியுள்ளார் எழுத்தாளர். 'தன்னிகரில்லாத் தலைவன்' என்னும் காப்பியத் தலைமைப் பாத்திர வரையறையைப் போல நந்தனாவின் குணங்களை நாவலில் காணலாம். தொடக்கத்தில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் பாத்திரமாகக் காட்டப்படும் நந்தனா, நாவலின் இறுதி வரையிலும் தன் இயக்கம் குறையாமல் இயங்கியிருத்தல் நாவலின் கூடுதல் சிறப்பாகும். தனது

மேலதிகாரியான அர்ஜூனிடம் சாவல் விடுவதாகக் காட்டப்படும் நந்தனாவின் பெண் பாத்திரத்தை நான்காவது அத்தியாயத்திலேயே வெற்றியடையச் செய்துள்ளார் எழுத்தாளர் (நந்தவனம், ப.16). தொடர்ந்து அர்ஜூனைத் திருமணம் செய்துகொள்வதற்குத் தன் வீட்டாரிடம் அனுமதி வாங்குவதில் தொடங்கி (நந்தவனம், பக். 92-101), நாவலின் இறுதியில் அர்ஜூனையும் கதிரையும் ராகேஷ்-துர்காவிடமிருந்து காப்பாற்றுவது வரை (நந்தவனம், பக். 176-179) அனைத்து இடங்களிலும் நந்தனாவை வெற்றியடைய வைத்துள்ளார் எழுத்தாளர்.

எதிர்நிலைப் பாத்திரமாக துர்கா என்னும் பெண் பாத்திரத்தை அமைக்கும் எழுத்தாளர் அப்பாத்திரத்தைச் சுயநல வாதியாகக் காட்டியுள்ளார். துர்கா என்னும் எதிர்நிலைப் பாத்திரம் நந்தனா-அர்ஜூன் ஆகிய இருவருக்கும் பொது எதிரியாக மாறிப்போகின்ற கதை யமைப்பைக் கொண்டுள்ள இந்நாவல், 'பகைவனுக்குப் பகைவன் நண்பன்' என்பது போல துர்காவுடன் ராகேஷ் என்னும் ஆண் எதிர்நிலைப் பாத்திரம் கைக்கோர்ப்பது போன்ற கதைப் பின்னலைக் கொண்டுள்ளது. துர்காவின் பாத்திரம் தலைமைப் பாத்திரத்திற்கு அப்படியே எதிர்மறையாகவும், மூர்க்க குணம் உடையதாகவும் (நந்தவனம், பக்.79-84) காட்டப்பட்டுள்ளது. இறுதியில் தாம் செய்த தவறுகளுக்குத் தண்டனை அனுபவிக்கும் பாத்திரமாக எதிர்நிலைப் பாத்திரத்தை அமைந்துள்ள எழுத்தாளர், அறம் என்பதனைத் தன் கதையின் வழியாக எடுத்துரைப்பதைத் தவறவில்லை.

குழந்தை உளவியல் - தாய்மைப் புரிதல்

யாழினி என்னும் பெண் குழந்தையின் பாத்திரமே இந்நாவலின் அச்சாணி என்று மதிப்பிடலாம். ஏனெனில், தலைமை, துணைமை, எதிர்நிலைப் பாத்திரங்கள் என அனைத்தும் அந்தப் பெண் குழந்தையை மையமிட்டே சுழல்கின்றன. இந்நாவலில் எழுத்தாளரின் மற்றுமொரு வெற்றியைக் குறிப்பிட வேண்டு மென்றால், அஃது அப்பெண்குழந்தைப் பாத்திரமே ஆகும். அப்பாத்திரத்தை ஆண்குழந்தையாகக்கூட எழுத்தாளரால் படைத்திருக்கக் கூடும். ஆனால், பெண் பாத்திரமாகப் படைத்ததன் வாயிலாகக் கதைக்கு அழுத்தத்தையும், தாம்கொண்ட கொள்கைக்கு ஆழத்தையும் கொடுக்க எழுத்தாளர் முயன்றுள்ளார். தாயின்றி அந்தப் பெண்குழந்தை அடையும் துன்பத்தை உளவியல் கண்கொண்டே காணவேண்டும் (நந்தவனம், பக்.38-42). தொடக்கத்தில் அர்ஜூன் மீதான காதல் ஆர்வத்தை வளர்த்துக்கொள்ளும் நந்தனா, அர்ஜூனின் மகள்தான் யாழினி என்று அறிந்தபின் அந்தக் காதல் ஆர்வம் குழந்தையின் மீதான தாய்மையுணர்வாக மாறிவிடுகிறது. ஒரு மாற்றுத்தாய்போல அல்லாமல், ஈன்ற தாய்போல் நந்தனாவை இயங்க வைத்திருப்பது மனதை நெகிழச்செய்கிறது.

குடும்ப, சமூகக் கற்பிதங்களைக் கேள்விப்படுத்துதல்

பொதுவாக ஒரு மனிதனின் நடத்தையைக் குடும்பமும் சமூகமும்தான்

தீர்மானிக்கின்றன. அதுவும் ஆண், பெண் எனும் பாலினப் பாகுபாடு இந் நடத்தையைத் தீர்மானிப்பதில் முந்தி நிற்கிறது. ஆணுக்கென்றும் பெண்ணுக் கென்றும் தனித்தனி நடத்தைகளே வழக்கிலுள்ளன. இஃது ஆணாதிக்கப் போக்கின் அடையாளமெனச் சுட்டலாம். நந்தவனம் நாவலும் தமிழ்ச் சூழலியல் சார்ந்த நாவல் என்பதால் அப்போக்கினை நாவலில் காணமுடிகிறது. இவ்வாறான போக்கினைக் கேள்விக்குள்ளாக்குவதாக எழுத்தாளர் அமைத்துள்ளார். மனைவியை இழந்த அர்ஜூனை அவனது குணத்திற் காகவும், அவனது மகள் யாழினிக்காகவும் மணக்க விரும்பும் நந்தனாவின் ஆசையைத் தொடக்கத்தில் அவளது குடும்ப உறுப்பினர்கள் மறுத்தாலும் பின்னர் முற்போக்குச் சிந்தனைக்கு உடன்படுகின்றனர். "சமூகம் பேசுறது முக்கியமில்லை. நீங்க அவள எப்படி பாத்துக்குறீங்கன்னுதான் முக்கியம்" (நந்தவனம், ப.66) எனக்கூறும் நந்தனாவின் அண்ணன் விக்ரமின் வார்த்தைகள் சமூகக் கற்பிதங்களை உடைப்பதாகவுள்ளன.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே யான நட்பு குறித்த உயர்வான பிம்பத்தைக் கட்டமைக்கிறார் எழுத்தாளர். இன்றைய சூழலில் திருமணத்திற்குப் பிறகான பெண்களின் நட்பு என்பது முற்றிலும் இல்லாமல் போவதைக் காணலாம். அதுவும் ஓர் ஆண் உடனான நட்பு என்பது சமூகப் பழிச்சொல்லுக்கு அஞ்சுவதாக உள்ளது. ஆனால் நந்தனாவிற்கும் கதிருக்கும் இடையே காட்டப்படும் நட்பு அத்தகைய சமூகக் கற்பிதங்களைக் கட்டுடைக்கின்றது. நந்தனாவின் திரு மணத்திற்குப் பிறகும்கூட தொடரும் அவர்களது நட்பை நந்தனாவின் கணவன் அர்ஜூன் ஏற்றுக்கொள்வதோடு மட்டு மல்லாமல், தனக்கு இதுபோல் நட்பில்லையென வருத்தப்படுவது போலவும் நட்பின் மேன்மை உணர்த்தப் பட்டுள்ளது.

முடிவுரை

பெண்சார்ந்த நவீனப் புனைவிலக்கியப் படைப்புகளில் நறுமுகையின் நந்தவனம் நாவல் கவனம்பெறத்தக்கதாகும். பெண் மைய நோக்குடைய இந்நாவல் பெண் குறித்த பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. பெண் குறித்துப் பெண் படைப்பாளரால் புனையப்பட்ட புனை வென்பதும் இந்நாவலுக்கான கூடுதல் சிறப்பாகும். பெண் பற்றிய ஆணின் நிலைப்பாடு குறித்தும், பெண் பற்றிய பெண்ணின் நிலைப்பாடு குறித்தும் இந்நாவல் எடுத்தியம்புவதோடு, குடும்பம் மற்றும் சமூகப் பிற்போக்குக் கருத்தாடல்களையும் மிக காத்திரமாகப் பதிவுசெய்துள்ளது.

துணைநின்ற நூல்கள்

1. நறுமுகை ஈஸ்வர், நந்தவனம் (நாவல்), ஃபிரெஞ்சு பதிப்பகம், புதுச்சேரி –03, 2022.
2. பஞ்சாங்கம்,க., இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர் – 613 007, 2016.
3. மகாராசன், பெண்மொழி இயங்கியல், தோழமை வெளியீடு, சென்னை – 78, 2010.

இந்திராவின் 'ஒற்றை வாசனை' சிறுகதைத் தொகுப்பில் சமூகப்பிரச்சனைகள்

முனைவர் கு. சிவகாமி
உதவிப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
கொ.கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி, அண்ணாநகர்
சென்னை – 102. அலைபேசி: 9600044100

முன்னுரை

சிறுகதை ஒன்றைப் படிக்க ஆரம்பித்தால் ஒரே மூச்சில் படித்து முடிப்பதுதான் சிறுகதை இலக்கணம். ஆனால், இந்திராவின் சிறுகதைத் தொகுப்பையே ஒரே மூச்சில் படித்து முடிப்பதுபோல் உள்ளது. இச்சிறுகதைத் தொகுப்பில் சமூகத்தில் நடைபெறும் வறுமை, பெண்களின் அவலநிலை, நதிகளைக்காப்பது, அன்பு, இயற்கையின் மேல் உள்ள ஈர்ப்பு மக்களின் அறியாமை போன்ற பல நிகழ்வுகள் நம் கண்முன்னே நடப்பது போன்றும் நெஞ்சை தைப்பது போன்றும் ஆணித்தரமாக பதிய வைத்திருக்கிறார் ஆசிரியர் இந்திரா.

திறவுச் சொற்கள்

ஒற்றை வாசனை, அன்பு, மரணம், அவலநிலை, அறியாமை, காக்கைச் சோறு, இயற்கை.

வறுமை

"கொடியது கேட்பின்
நெடியவெல் வேலோய்
கொடிது கொடிது
வறுமை கொடிது
அதனினும் கொடிது
இளமையில் வறுமை"
– [தனிப்பாடல் திரட்டு]

என்று வறுமையின் கொடுமையை ஔவையார் அன்றே பாடியிருக்கிறார். அதுபோல இங்கு 'நாற்றங்கால்' என்ற சிறுகதையில் விவசாயி ராமசாமி விதை விதைக்கும் ஆர்வத்தையும் அறுவடையின் போது மழைவெள்ளமோ, வறட்சியோ ஏற்பட்டால் விளைச்சல் குறைந்து சாப்பாட்டிற்கே துன்பம் ஏற்படுவதை நினைத்து வருந்துவதையும் சிறுகதை விளக்குகிறது. மேலும், விவசாயிகள் வாழைத்தார் விற்கும்போது குறைவான விலைக்கு வாங்கி மக்களிடம் அதிக விலைக்கு விற்பதை நினைத்து வேதனைப் படுகிறார். அதை,

"அவந்தலை அப்புடி
எழுதினசாமி நம்ம
தலையில் இப்படி
எழுதிப்போடுச்சு"

என்ற இந்த வரிகள் மூலம் அறிய முடிகிறது.

பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பதை,

"மானம் குலம்கல்வி வண்மை
அறிவுடைமை
தானம் தவம்உயர்ச்சி
தாளாண்மை – தேனின்
கசிவந்த சொல்லியர்மேல்
காமுறுதல் பத்தும்
பதிவந்த திடப்பறந்து போம்"
[நல்வழி –26]

என்ற ஔவையார் பாடல்மூலம் மானம், குலம், கல்வி முதலிய பத்தும் பசிவந்தால் பறந்துபோகும் என்பதை அறிகிறோம். ஆனால் இங்கு அன்னதானம் என்ற சிறுகதையில் ஐந்தாவது படிக்கும் சரவணன் அப்பாவின் பொறுப்பற்ற தன்மையால் தானும் தன் அம்மாவும் பசியால் வாடுவதை தாங்கமுடியாமல் தான் பள்ளிக்குச் செல்லாமல் வேலைக்குச் செல்வதாகக் கூறுவதன்மூலம் பசியின் கொடுமை நமக்குப் புலப்படுகிறது.

மேலும், சரவணன் பள்ளிக்குச் சென்று திரும்பும் வழியில் அன்னதானத்தை நண்பர்களுடன் சேர்த்து உண்கிறான். பின்னர் தயங்கித் தயங்கி நிற்கிறான் "ஏம்ப்பா இங்க நிக்கிறீங்க" என்றார் ஒரு பெரியவர். அவரிடம்,

"நாங்க சாப்பிட்டாசுங்க அம்மா பசியோடு இருப்பாங்க கொஞ்சம் சாப்பாடு வேணும்" என்கிறான் சரவணன். இந்த வரிகளில் வறுமை, அன்பு, பாசம், பொறுப்பு, எளிமை என அனைத்தையும் வெளிக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

பெண்களின் அவலநிலை

பெண்கள் இன்றும் சில ஆண்டு களால் துன்பத்திற்கு ஆட்படுகின்றனர் என்பதை தாம்பத்தியம் என்ற இச் சிறுகதை விளக்குகிறது. சுமதி திருமணம் முடிந்ததில் இருந்து 100 முறையாவது அம்மா வீட்டிற்கு வந்திருப்பாள். காரணம் பணம், நகை வாங்கிவா என்று அடித்து அனுப்புவர். வாங்கிக்கொண்டு பலமுறை திரும்பியிருக்கிறாள். ஆனால், ஒரு கைக்குழந்தையுடன் நடு இரவில் வந்தாள். நான் மாப்பிள்ளையை பார்த்து வருகிறேன் என்ற அப்பாவிடம், "வேண்டாம்பா நல்ல வக்கீலா பாருங்க" என்கிட்ட கொடுக்க நகையும், உங்ககிட்ட கொடுக்க பணமும் இல்லை என்று அவர்களுக்கு நன்கு தெரியும், இனிமேல் கூப்பிட யாரும் வரமாட்டார்கள் என்கிறாள். இதன்மூலம் ஆணின் வன்முறையும் பேராசையும், பெண்களை இழிவு படுத்தும் தன்மையும் வெளிப்படுகிறது.

நீச்சல் என்ற சிறுகதையில் பெண்கள் தொகுதியாக அறிவித்த பகுதியில் கணவன்மார்கள் தங்கள் மனைவியை நிற்கவைப்பர். இப்போதும் இது நடைமுறையில் இருக்கிறது. இங்கு மீனாட்சி தேர்தலில் நிற்கமாட்டேன் என்று கூறவும் முடியவில்லை. வெற்றி பெற்ற பிறகு மக்களுக்கு நல்லது செய்யவும் முடியவில்லை. இறுதியாகத் தன் நகைகளை அடகுக்கடையில் வைத்து துன்பப்படும் அவலநிலை வெட்ட வெளிச்சமாக்கப்பட்டுள்ளது.

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டும்"
– [கவிமணி]

என்று கவிமணி தேசிக விநாயம் பிள்ளை அவர்கள் கூறிய நம்நாட்டிலேயே இக்கொடுமை இன்றும் நடக்கின்றன.

நதிகளைப் பாதுகாப்போம்

மரணம் என்ற சிறுகதையில் காவிரி நதியை நண்பர்கள் இருவர் நேசிப்பதைத் தத்ரூபமாக விளக்கியுள்ளார். நண்பன் ரவியைப் பிரிந்து சென்னைக்கு வேலைக்குச் செல்வதற்கு முன்,

"இசையின் ஸ்வரங்களை எப்போதும் நெய்தபடியே இருப்பாள் அவள். குளுமையான நீரின் சலசப்பு மயிர்க்கால்களில் ஊடுருவி உயிர்க்கால்களில் பரவும் பரவசத்தை, அனுபவித்தவர்கள் மட்டுமே உணர முடியும்" என்றும்,

"ஒரே நேரத்தில் இரண்டு உயிர் நண்பர்களை இழக்கிற வேதனையை தாங்க முடியாமல் தவித்தேன்" என்றும் கூறுவதன்மூலம் நதியை ஒரு உயிராக, நண்பனாக மக்கள் நினைப்பதை ஆசிரியர் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

இக்கதையின் இறுதியில் காவிரியில் மணலை அள்ளிச் செல்பவர்களைத் தடுக்கப்போய் ரவி உயிரிழந்த சம்பவத்தைக்கூறி இனிமேலாவது நதியையும், நண்பர்களையும் பாதுகாப்போம் என்று கூறி வாசகர்களையும் எழுச்சியுறச் செய்துள்ளார்.

அன்பு பாராட்டல்

"இல்லானுக் கன்பிங்
கிடம்பொன் ஏவல்மற்
றெல்லாம் இருந்தும்
அவற்கென்செய்யும் – நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல்
தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு"
– [நன்னெறி – 15]

மொழியறிவு இல்லாதவனுக்கு பழம் பெரும் நூலினால் பயனில்லை. கண் இல்லாதவனுக்கு விளக்கினால் பயனில்லை. அதுபோல அன்பு இல்லாதவனுக்கு எல்லா வசதிகளும் இருந்தும் பயனில்லை என்கிறது நீதிநூல்.

இயற்கையிடம் அன்பு செலுத்துதல்

தூண்டில் என்ற சிறுகதையில் சிதம்பரம் தெய்வானை என்ற தம்பதியர் கஷ்டப்பட்டு ஒரு மாந்தோப்பை உருவாக்கி இருந்தனர். அதை மகன்கள் விற்க வேண்டும் என்றபோது அந்த அம்மா அப்பாவின் மனதில் ஏற்படும் வேதனை, பரிதவிப்பு, உயிரையே விட்டுச் செல்வதுபோன்ற உணர்வு என வாசகர்களை உணர்வெழப்பச் செய்கிறது இச்சிறுகதை.

பெரியசாமி ராசாத்தி என்ற தம்பதியர் தாங்கள் பிறந்து, வளர்ந்த, வாழ்ந்த ஊரைவிட்டு மகன்கள் இருக்கும் ஊருக்கு இடம் பெயர்கின்றனர். பெரியசாமிக்கோ தான் வளர்ந்த ஊர் மக்கள், வயல்வெளி, தண்ணீர், குளம் கோயில் ஆற்றுமணல் இவற்றையெல்லாம் பிரிய மனம்

இல்லை. துக்கத்தோடு ஊரைவிட்டுச் சென்றபோது,

"அவர் தனது உயிரைக் கூட்டுக்குள் ஒடுக்கி, மனத்தை அறுக்கும் உணர்வு களைக் கண்களில் தேக்கி நெஞ்சு வெடிக்கக் கிளம்பினார்" என்கிறார் ஆசிரியர். அதைவிடக் கொடுமை என்ன வென்றால் அன்று இரவே பெரியசாமி இறந்து போனார் என்று கூறி வாசகர்களை அதிர்ச்சிக்கு உட்படுத்தி விட்டார் இந்திரா.

பறவைகளிடம் அன்பு செலுத்துதல்

'காக்கைச்சோறு' என்ற சிறுகதையில் வயதான அப்பத்தா 60 வருடமாக காக்கைக்குச் சோறு போட்டு வாழ்ந்து வருகிறார். கடைசிக் காலத்தில் மகன், "ஹீம் இங்கு மனுசனுக்கே சோத்தக் காணோம் காக்காய்க் கெல்லாம் வடிச்சுக் கொட்டணும்னா எங்க போறது?"

இவ்வாறு கூறியதும் அப்பத்தா தான் உணவு உட்கொள்ளாமல் காக்கைக்கு வைக்கிறார். இரவில் பசியால் தண்ணீரை மட்டுமே குடித்து, மனம் உடைந்து அன்று இரவே இறந்தும் போனார் என்று கதை முடிகிறது.

அன்பு மிக்க மனிதர்கள் காக்கையின் மீது கொண்டுள்ள அன்பையும், பந்தத் தினையும் இக்கதை வெளிக்காட்டுகிறது.

குழந்தைகள் பெற்றோரிடம் அன்பை எதிர்பார்த்தல்

குழந்தைகளுக்கு அம்மா, அப்பா என்ற இருவரின் அன்பும் இன்றியமை யாதது. இருவரில் ஒருவரின் அன்பு கிடைக்கவில்லை என்றாலும் குழந்தைகள் உடைந்து போகும். வாழ்க்கையில் செல்வம் இல்லாமல் கூட வாழலாம். ஆனால், அன்பில்லா வாழ்க்கை எல்லாம் இருந்தும் சூனியமாகவே தெரியும். இங்கு 'அப்பா' என்ற சிறுகதையில் சிறுவயதில் இருந்தே அப்பாவின் அன்பு கிடைக்காத பெண்,

"வயது வந்த பெண்ணின் மனதுக்கு தாயின் அன்பு மட்டும் போதுமானதா யில்லை. அது, தந்தையின் பாதுகாப்பான அரவணைப்புக்கும் ஏங்குகிறது என்பதை உணர்கிறேன். ஒரு சுமை என் நெஞ்சை அழுத்துகிறது" என்பதிலிருந்து எந்த வயதினருக்கும் அம்மா அப்பாவின் அன்பு ஒவ்வொரு நொடியும் தேவை என்பதை மிக ஆழமாகப் பதியவைத்துள்ளார்.

மக்களின் அறியாமை

மினிபஸ் என்ற சிறுகதை முதலாளிகள் மக்களை எப்படி ஏமாற்று கிறார்கள் என்பதை ஆசிரியர் வெளிக் காட்டியுள்ளார். அரசுப் பேருந்து திடீரென நின்று போனதும், அதற்குக் காரணம் மினிபஸ் உரிமையாளர் என்பது தெரிந்தும், "இரண்டுக்குமே யாரும் கவலைப்படவில்லை" என்கிறார். இதிலிருந்து மினிபஸ் உரிமையாளர் மட்டுமல்ல அனைத்து முதலாளிகளும் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி மக்களையே ஏமாற்றுகிறார்கள் என்பதைக் கூறி வாசகர் மனதில் வலியை ஏற்படுத்திச் செல்கிறார் ஆசிரியர்.

முடிவுரை

இந்திரா எழுதிய ஒற்றைவாசனை என்ற சிறுகதைத் தொகுப்பின்மூலம் உறவினர்களின் மீது அன்பு செலுத்துதல், பிற உயிர்களிடம் அன்பு செலுத்தும் தன்மை போன்றவற்றை மனதில் பதியவைத்துள்ளார். மேலும், வறுமையின் கொடுமையினையும் நதிகளின் பாதுகாப்பின்மையினையும் மக்களின் அறியாமையினையும் பெண்களின் அவல நிலையினையும் எடுத்துக்கூறிச் சமுதாயச் சீர்கேடுகளைக் களைவதற்காகச் சமுதாய அக்கறையோடு ஆசிரியர் முழு முயற்சியுடன் ஈடுபட்டுள்ளார் எனில் அது மிகையாகாது.

பார்வை நூல்கள்

1. இந்திரா., – ஒற்றை வாசனை சிறுகதைத் தொகுப்பு.
2. ஔவையார்., – தனிப்பாடல் திரட்டு
3. கவிஞர் பத்மதேவன்., – இனிய நீதி நூல்கள்.
4. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை., – கவிமணிப் பாடல்கள்.

எரியும் பனிக்காடு

முனைவர் ஜ. சிவகுமார்

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை (சுழற்சி – 2)

துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி

அரும்பாக்கம், சென்னை – 600 106.

ஆய்வுச்சுருக்கம்

நவீனத் தமிழ் இலக்கியச் சூழலில் உருவான விளிம்புநிலை மக்கள் குறித்த உரையாடல்கள், தலித் இலக்கியங்களும் பெண்ணிய இலக்கியங்களும் தமிழ் இலக்கியப் போக்கில் உருவாக்கிய மாற்றங்கள், பின் காலனியம் முன்வைத்த அடையாள மீட்பு, அலைவு உழல்வியல் குறித்த கதையாடல்கள் போன்றவற்றால் நவீனதமிழ் இலக்கியச் சூழலில் அதுவரை குறிப்பிடத்தக்க கவனம் பெறாமல் இருந்த ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலுக்கு, வலிகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இந்தப் பின்னணியில்தான் இரா. முருகவேள் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 'எரியும் பனிக்காடு' முக்கியத்துவம் பெறுகிறது. 1920களில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ வழி செய்வதாகக் கூறி கங்காணிகள் தேயிலை, காபி, இரப்பர் தோட்டங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள் அனுபவித்த பல்வகை இன்னல்கள் குறித்து வால்பாறை காரமலை எஸ்டேட்டில் தலைமை மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றி, அங்கு மனிதத்தன்மையற்ற சூழல் நிலவியதைக் கண்டு, அதை எதிர்த்துக் குரல் தந்ததோடு தென்னிந்திய தோட்ட உத்தியோகிஸ்தர்கள் சங்கம் என்ற அமைப்பையும் நிறுவித் தொழிலாளர் களின் பிரச்சனைகளுக்காக துணை நின்றிருக்கிறார் டேனியல். இவர் அம் மக்களின் குரலும் அவர்கள் அனுபவித்த கொடுமைகளும் வெளியுலகத்திற்குத் தெரியவேண்டும் என்பதற்காக 'Red Tea' என்னும் நாவலை எழுதி 1969இல் வெளியிட்டார். இந்நூலை இரா. முருகவேள் அவர்கள் 'எரியும் பனிக்காடு' என்னும் பெயரில் தமிழில் மொழி பெயர்த்து 2007ஆம் ஆண்டு விடியல் பதிப்பகம் மூலம் வெளியிட்டார். இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு நாவலை அடிப்படையாகக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொற்கள்

தேயிலை, தொழிலாளர்கள், ஆங்கிலேயர், கங்காணி, மேஸ்திரி, காங்கிரஸ்

முன்னுரை

ஆனைமலைக் காடுகளில்
தழைத்திருக்கும்
ஆங்கிலேயர்களின் தேயிலைத்
தோட்டங்களில் அடியுரமாய்
இடப்பட்டவை எமது உயிர்கள்
நீங்கள் கதகதப்பாய் உறிஞ்சிக்
குடிக்கும் ஒவ்வொரு துளி
தேநீரிலும் கலந்திருக்கிறது
எமது உதிரம் [ஆதவன்
தீட்சண்யா] [பி.எச். டேனியல்,
2014; 3]

ஆங்கிலேயர் தேயிலைத் தோட்டங்களில் உள்ள ஒவ்வொரு தேயிலையிலும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் குருதி கலந்துள்ளது என்பதைக் குறிக்கவே 'Red Tea' எனும் பெயரை பால் ஹாரிஸ் டேனியல் தனது நாவலுக்குச் சூட்டினார். இதனைத் தமிழில் மொழி பெயர்த்த இரா. முருகவேள் பனிபடர்ந்த தேயிலைக் காடுகளுக்குள் கொடுமை தாங்க முடியாமல் தொழிலாளர்களின் மனமும் வயிறும் பற்றி எரிவதனை உணர்த்தும் விதமாக 'எரியும் பனிக்காடு' எனும் முரண் தொடைப் பெயரினைச் சூட்டியுள்ளார். டேனியல் அவர்கள் 'இந்நூலில் தேயிலைத் தோட்டங்களைப் பற்றி மட்டும்தான் எழுதியுள்ளேன். ஆனால் இது காபி மற்றும் ரப்பர் தோட்டங்களுக்கும் பொருந்தும்' (பி.எச். டேனியல், 2014; 7) என்று கூறியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் அவலங்கள் குறித்துப் பாரதியார் 'கரும்புத் தோட்டத்திலே' எனும் பாடலில் பதிவு செய்திருப்பார்.

'நாட்டை நினைப்பாரோ? – எந்த
நாளினிப் போயதைக்
காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ? – அவர்
விம்மி விம்மி விம்மி விம்மியழுங்
குரல்
கேட்டிருப்பாய் காற்றே! துன்பக்
கேணியிலே எங்கள் பெண்கள்
அழுதசொல்
மீட்டும் உரையாயோ? – அவர்
விம்மி யழவுந் திறங்கெட்டும்
போயினர்' (https://ta.wikisource.org/wiki/**பாரதியாரின் தேசிய கீதங்கள்/53. கரும்புத் தோட்டத்திலே**]

மேற்கண்ட பாரதியார் பாடலில் இடம்பெறும் 'துன்பக்கேணி' எனும் சொல்லையே தலைப்பாகக் கொண்டு இலங்கைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் பல்வகை இன்னல் களைத் 'துன்பக்கேணி' எனும் சிறு கதையைப் புதுமைப்பித்தன் படைத் துள்ளார் (வீ. அரசு (ப.ஆ.), 2010; 189-228). சயாம் ரயில் பாதையை அமைக்கப் பயன்படுத்தப்பட்ட தொழிலாளர்களின் கண்ணீர்க் கதையை சண்முகம் அவர்கள் 'சயாம் மரண ரயில்' எனும் நாவலாகப் படைத்துள்ளார். எனினும் தோட்டத் தொழிலாளர்களின் கொத்தடிமை வாழ்க்கையை 'எரியும் பனிக்காடு' நாவலைப் போல வேறு எந்தப் படைப்பும் நுட்பமாகப் பதிவு செய்ய வில்லை. வால்பாறையின் தேயிலைத் தோட்டங்களின் பசுமையான அழகுக்குப் பின்னால் இருக்கும் இரத்தம் தோய்ந்த

வரலாற்றை இந்நாவல் மிக அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது.

கதைக்கரு

1925ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் ஓர் இரவில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குக்கிராமமான மயிலோடையில் கதை தொடங்குகிறது. வறட்சிக் காலத்தில் வேலை எதுவும் கிடைக்காமல் அடுத்த வேளை சாப்பாட்டிற்கே வழி இல்லாமல் வேலை தேடிக் கயத்தாற்றுச் சந்தையில் தவிக்கிறான் கருப்பன். அங்கே உணவகங்களில் தலித் மக்களுக்கு தனிக்குவளை தரப்படுவது, அவர்கள் தரையில் உட்கார்ந்து தனியே சாப்பிட வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுவது, உணவை அவர்களுக்குப் பரிமாறாமல் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போய் விடும் பழக்கம் என யாவும் விவரிக்கப் படுகிறது. அந்த அவலங்களுக்கு நடுவே வேலை கேட்டு யாசிக்கிறான் கருப்பன். அப்பொழுது தேயிலைத் தோட்டத்தில் கங்காணி வேலை பார்க்கும் சங்கர பாண்டியைச் சந்திக்க நேரிடுகிறது. கருப்பனது வறுமை நிலையைப் பயன் படுத்திக்கொள்ள நினைத்த சங்கரபாண்டி, 'அங்க எவ்வளவு வேணும்னாலும் வேலை கெடைக்கும்போது இங்கே கெடந்து ஏண்டே கஷ்டப்படுதே? மனசுல மட்டும் தைரியமிருந்தா பை நிறைய பணம் பார்க்கலாம்டே. எதுக்கு இங்கன கஞ்சிக்கில்லாம பட்டினி கெடக்கே' (பி.எச். டேனியல், 2014; 20) என்று தேயிலைத் தோட்டவேலை மீது ஆசையை உண்டாக்குகிறான். 'எல்லாரும் நம்ம ஜாதிக்காரங்கதான்' (பி.எச். டேனியல், 2014; 28) என்று நம்பிக்கை ஊட்டி நாற்பது ரூபாய் முன்பணமும் வாங்கித் தருகிறான். உன் பொண்டாட்டியையும் கூட்டிக்கொண்டு வா என்று அவனுக்கு உதவுவது போல் பேசுகிறான்.

சொந்த ஊரில் இருந்து பட்டினி கிடப்பதைவிட தோட்டத் தொழிலுக்குச் சென்று உழைத்துப் பிழைக்கலாம் என்று தன் மனைவியைச் சமாதானப்படுத்தி நீண்ட பேருந்து, இரயில் பயணத்தின் மூலமாக வால்பாறைத் தேயிலைத் தோட்டத்துக்கு வருகிறார்கள். ஆனால் கங்காணி சொன்னதற்கும் நேரில் காண்பதற்கும் இடையே பாரதூரமான வேறுபாடுகளைத் தோட்டத்தை அடைந்த நாள் முதலே உணரத் தொடங்குகின்றனர்.

கங்காணியின் சூழ்ச்சி

பிறரது வறுமையைப் பயன்படுத்தி, நானும் உன் சாதிதான் என்ற நம்பிக் கையை ஏற்படுத்தி முன்பணம் மூலமாக அவர்களை நிரந்தரக் கொத்தடிமைகளாக மாற்றி, அதன் மூலம் கமிஷன் பணம் பெறக்கூடிய சூழ்ச்சிக்காரன்தான் கங்காணி. கூலிக்காரர்களாக வருவோருக்கு உணவு தர ஆங்கிலேய நிர்வாகம் கொடுக்கும் காசில் கூட ஊழல் செய்து, அவர்களுக்குச் சோற்றுக்குப் பதிலாக புட்டைக் கொடுத்து 'கடிதம் வராததால் சோறு தயாரிக்க முடியவில்லை' (பி.எச். டேனியல், 2014; 45) என்ற பச்சைப் பொய்யைத் தொழிலாளர்களிடம் கூற வைக்கிறான். இந்த நயவஞ்சக மேஸ்திரிக்கு உதவியாட்களாக

இவனுக்கு ஏற்ற மாதிரியே வெள்ளையன், திருமலை என்கிற இரண்டு கோல் மேஸ்திரிகள் நேரத்துக்கு ஏற்ற மாதிரி பொய் பேசுகிற வஞ்சகமும் குரூர மனப்பான்மையுடன் கூடிய சுயநலமும் கொண்டவர்களாக உள்ளனர். ஆங்கிலேய துரைகளின் 'கருணை' உள்ளத்தைப் பற்றிக் கதையளப்பது (பி.எச். டேனியல், 2014; 46), குழந்தைகளின் தாகத்துக்குத் தண்ணீர் கொண்டு வர இரயிலில் இருந்து தொழிலாளர்கள் இறங்க அனுமதி மறுப்பது (பி.எச். டேனியல், 2014; 49), உடல்நிலை சரியில்லாத நிலையிலும், தன் மகள் இறந்த நிலையிலும் கூட தொழிலாளர்களை வேலைக்குப் போகச் சொல்லித் துன்புறுத்துவது (பி.எச். டேனியல், 2014; 78), வேலை வாங்கித் தருவதாகக் கூறி கருப்பனை அழைத்து, வாங்காத கடனுக்கு கருங்குண்டுக்கு தொழிலாளியாகக் கொண்டு செல்ல முயல்வது (பி.எச். டேனியல், 2014; 247) எனப் பற்பல வஞ்சகங்களைத் தங்களின் சுய நலத்துக்காகச் செய்பவர்களாக கங்காணிகள் உள்ளனர். இந்தக் கங்காணிகளுக்கு ஆசை வார்த்தைகளும் தேனொழுகும் பேச்சும் பிரித்தாளும் சூழ்ச்சியும் தொழிலாளர் முதல் முதலாளி வரை ஏமாற்றக் கிடைத்த கருவி. அது இன்றைய நவீன கங்காணிகள் வரை எப்படிப் பழுதில்லாமல் செயல்படுகிறது என்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம். கருங்குண்டுக்குப் போகவில்லை என்பதும் யூசுப் மாதிரியான மிக மோசமான கங்காணியிடம் மாட்டிக் கொள்ள வில்லை என்பதும்தான் குமரி மலைத் தோட்டத் தொழிலாளர்களின் ஒரே ஆறுதல் (பி.எச். டேனியல், 2014; 192).

தேயிலைத் தோட்ட வாழ்க்கை

நாவலாசிரியர் பி.எச். டானியல் அவர்களின் பாத்திர வார்ப்பாக இடம்பெறுபவர் டாக்டர் ஆபிரகாம். இவர் 'ஆட்கள் இடித்து நெரித்துக் கொண்டுதான் இந்த இடத்தில் வாழ்கிறார்கள். ஒவ்வொரு அறையிலும் இரண்டு மூன்று குடும்பங்கள் இருக்கின்றன. அறையில் இருக்கிற அத்தனை பேரும் செத்துப் போனால் அவர்களைப் புதைப்பதற்கு அவர்கள் குடியிருக்கும் இடத்தைவிட அதிக இடம் தேவைப்படும். கொட்டும் மழையிலிருந்து உடம்பெல்லாம் சேரடித்து, அட்டைக் கடிகளிலிருந்து இரத்தம் ஒழுக அவர்கள் நேராக அறைக்குள் நுழைகிறார்கள். ஈரத்தைப் போக்கிக்கொள்ள அவர்களுக்கு இடமே இல்லை. கம்பளிகளையும் துணிகளையும் உலரவைக்க எங்கே இடமிருக்கிறது? அந்தப் பாவப்பட்ட மனிதர்களுக்கு மாற்றுக் கம்பளியும் கிடையாது. முழுவதும் நனைந்து போன கம்பளியை உலரவைத்து இரவு அதைப் போர்த்திக் கொள்ள வேண்டும். கம்பளிகளிலிருந்து வழிந்தோடி வரும் தண்ணீரினாலும் ஒழுகிக் கொண்டிருக்கும் கூரையினாலும் சிறுசிறு குளங்கள் போல் தண்ணீர் வீட்டுக் குள்ளேயே தேங்கி நிற்கிறது. மண் தரைகளில் அவர்கள் உறங்க வேண்டி இருக்கிறது. அவர்கள் எப்படி ஆரோக்கிய

மாக இருக்க முடியும். எப்படித் தூய்மையாக இருக்க முடியும்? இந்த நிலைமையில் இத்தனை பேர் உயிரோடு இருப்பதே ஒரு ஆச்சரியமான விஷயம்தான்' (பி.எச். டேனியல், 2014; 295) என்று சொல்லும் கூற்றே தொழிலாளர்களின் வாழ்விடம் எவ்வாறு வாழ்வதற்குத் தகுதியற்றதாக உள்ளது என்பதை உணர்த்துகிறது. கடுங்குளிர், மோசமான உணவு, உடை, உறையுள், மலேரியா போன்ற விஷக் காய்ச்சல்கள், அட்டைகள், பூச்சிகள், ஓய்வெடுக்க நேரமின்றி உழைத்தல், கங்காணிகள் தரும் மன உளைச்சல்கள் என எப்பொழுதும் ஒரு விரக்தி மனநிலையிலேயே அத் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்கின்றனர்.

சுரண்டல்கள்

அடித்தட்டு மக்களை அழைத்துவந்து அவர்களின் உழைப்பையும் பணத்தையும் சுரண்டுவதோடு சின்னஞ்சிறு குழந்தைகளையும் வற்புறுத்தி, கொடுமைப்படுத்தி அவர்களின் குழந்தைமையைச் சுரண்டுகிறான் கங்காணி. கடன், ரேஷன் கொடுப்பதாகக் கூறி அவர்களின் பணத்தையும் சொந்த ஊர் போகவேண்டும் என்கிற அவர்களின் கனவையும் சுரண்டுகிறான் காளிச்செட்டியார். அப்பாவி மக்களின் இறை நம்பிக்கையைப் பயன்படுத்தி மந்திரம், தாயம் என்று சொல்லி அம்மக்களிடம் உள்ள கடைசிக் காசையும் சுரண்டுகிறான் பூசாரி முத்துக்கருப்பன். நோய் முற்றிய நிலையில் மருத்துவ மனைக்கு வரும் கூலிகளிடம் இருந்து இலஞ்சம் பெற்றுக்கொண்டு பேருக்கு வைத்தியம் பார்க்கிறான் மெடிக்கல் கூலி. பெண்களைப் பாலியல்ரீதியாக சுரண்ட முயல்கிறார்கள் வெள்ளை அதிகாரிகளான வொயிட்டும் மாத்யூசும். அதிகாரிகளின் ஆசைக்கு இணங்காத பெண்கள் விரல் வலிக்கக் கிள்ளிய கொழுந்துகளை அதிகாரிகள் தங்கள் ஆசைக்கு இணங்கும் பெண்களின் பெயரில் பதிவு செய்கின்றனர். அலுவலர்கள் வெள்ளைக்காரர்களுக்குத் தங்கள் மனைவிகளையும் தொழிலாளப் பெண்களையும் அனுப்பிவைத்து தொழிலாளர்களின் மனநிலையைச் சுரண்டுகின்றனர். இதனால் பலர் பாலியல் பிறழ்வை இயல்பானதாகக் கருதுகின்றனர். இதனுடைய உச்சம்தான் பூசாத்தாளுக்கும் லட்சுமிக்கும் இடையே வொயிட் துரையை முன்வைத்து நடக்கும் அடிதடி சண்டை. இத்தனைச் சுரண்டல்களால்தான் வாங்கிய முன்பணம் தீராக் கடனாகி, தொழிலாளர்களின் உயிரையும் உடலையும் கனவையும் அந்தத் தோட்டத்திலேயே புதைத்துவிடுகிறது. அதே தோட்டத்தில் ஆங்கிலேய அதிகாரிகள் மதுவிருந்தில் திளைக்கிறார்கள். இவ்வளவு சுரண்டல்களையும் புறந்தள்ளிவிட்டு ஆங்கிலேய அரசாங்கம் தனக்குத்தானே வரலாற்றில் பதக்கம் குத்திக் கொள்கிறது.

சர் பெர்சிவல் கிரிபித் என்பவர் எழுதிய 'இந்தியத் தேயிலைத் தொழிலின் வரலாறு' (The History of Indian Tea Industry) என்னும் பெரிய நூலில் ஓர் இடத்தில் கூட 'இந்தியாவில் தேயிலைத் தொழிலை வேரூன்றச் செய்வதற்கு இந்தியத்

தொழிலாளர்களும், எழுத்துப் பணியாளர் களும் புரிந்த தியாகங்களை அங்கீகரிக்கும் ஒரு சிறு குறிப்பு கூட இல்லை. அந்த ஆசிரியரைப் பொறுத்தவரை, தேயிலைத் தோட்ட நிர்வாகங்கள், இந்திய நிலப் பிரபுக்களிடம் கொத்தடிமைகளாக இருந்த இந்தியத் தொழிலாளர்களை விடுவித்து, அவர்களுக்குத் தோட்டங்களில் வேலை அளிக்கும் பணியையும் மேற்கொண்டன. ஆனால் அற்பத்தனமான இந்தியர்கள், அவ்வளவு நல்லெண்ணத்துடன் தேயிலைத் தோட்டங்களில் தங்களுக்கு அளிக்கப்பட்ட வேலையைச் செய்யாமல் அங்கிருந்து ஓடி விடுகின்றனர். அங்கு வேலை செய்வதைவிட தங்கள் கிராமங்களில் பட்டினி கிடப்பதையே விரும்புகின்றனர்' (பி.எச். டேனியல், 2014; 6) என்று பதிவு செய்கிறார். ஆங்கிலேயர் பார்வையிலான தோட்ட வரலாற்றை இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் பார்வையிலிருந்து தோலுரித்துக் காட்டுவதாக எரியும் பனிக்காடு அமைந்துள்ளது.

ஆங்கிலேயர்களின் சாதிவெறி

இந்தியாவில் புரையோடிப்போன சாதியத்தை அகற்றுவதில் ஆங்கிலேயர் மிக முக்கியப் பங்காற்றினார் என்று இதுவரையிலான பல வரலாறுகள் பதிவு செய்துள்ளன. ஆனால் தன் நாட்டில் கருப்பின மக்களை நிறவெறித் தாக்குதலுக்கு உட்படுத்திக் கொண்டே இந்தியாவில் சமத்துவத்துக்காக ஆங்கிலேயர் பாடுபட்டனர் என்பது முரண்நகை. இந்நாவலில் உயர்சாதி யினரை எதிராக நிறுத்தி ஆங்கிலேயர்கள் தங்கமானவர்கள் என்று சொல்லி கருப்பனைக் கூலி வேலைக்கு அழைத்து வருகிறான் சங்கரபாண்டியன் (பி.எச். டேனியல், 2014; 20). நாவலின் இறுதிக் கட்டத்தில் 'இந்த எஸ்டேட்டில் இருக்கும் வெள்ளைக்காரத் துரைகளைவிட நாயக்கர்கள் எவ்வளவோ நல்லவர்கள் தான். அன்பானவர்கள்தான். இந்தப் பிச்சக்காரப் பயல் சங்கரபாண்டியன் தன்னை எப்படி ஏமாற்றிவிட்டான்!' (பி.எச். டேனியல், 2014; 242) என்று கருப்பன் வருந்துகிறான். ஆங்கிலேயர் சித்திரித்த இந்தியாவுக்கும் உண்மையான இந்தியாவுக்குமான இடைவெளியை இது உணர்த்தும்.

ஆங்கிலேயரிடம் உள்ள நிறவெறியை எரியும் பனிக்காடு அம்பலப்படுத்தி யுள்ளது. புதிதாகத் தோட்டத்திற்கு வந்த தொழிலாளர்களின் பெயர்களை பதிவு செய்யும்போது வள்ளியிடம் வார்த்தை மூலமாகப் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட வொயிட் துரையிடம் கருப்பன் இவள் எனது மனைவி என்று சொன்னதற்காக, அவர்களைக் கூலியாகப் பிடித்து வந்த கங்காணி சங்கரபாண்டியனை, 'இந்த மாதிரி அதிகப்பிரசங்கித்தனமான பிச்சைக் கார நாய்களா எவ்வளவு தைரியமிருந்தா அந்தக் கீழ்சாதிநாய் என்னோட எஸ்டேட்டுக்குள்ள கொண்டு வந்திருக்கும்' (பி.எச். டேனியல், 2014; 73) என்று துரை சாதியரீதியாக இழிவு படுத்துகிறான்.

தோட்ட நிர்வாக வேலைக்கு வந்த ஓர்

இளைஞன் நல்ல கோர்ட்டும் வேட்டியும் செருப்பும் போட்டுக்கொண்டு தனக்கு வணக்கம் செய்ததை அவமரியாதையாகக் கருதி அந்த இளைஞனைத் தோட்டத்தை விட்டு வெளியேற்றுகிறான் வொயிட் துரை. வெள்ளைக்காரத் துரைகளிடம் எவ்வாறு நடக்க வேண்டும் என்று அருள்தாஸ் என்பவர் ராஜ் என்பவருக்கு அறிவுரை கூறுகிறார். 'முதலில் எஜமான் முன்னாடி தொப்பியோ செருப்போ போட்டுட்டு நிக்கக்கூடாது. மழை பெஞ்சாலும் குடையை விரிச்சுட்டு நிக்கக்கூடாது. மேனேஜரப் பார்த்தா வணக்கம் போடணும். எப்பவும் மாஸ்டர் (எஜமான்)ன்னுதான் சொல்லணும். இதுதான் இங்க மரியாதையான வார்த்தை. மூணாவதா இங்க நல்ல துணிமணி போடக்கூடாது. எப்பவுமே கிழிஞ்ச ஒட்டுப்போட்ட சட்டையும் கால் சட்டையும்தான் போடணும். செருப்பு கிழிஞ்சு தெச்சதாத்தான் இருக்கணும். சாக்ஸ்ல எவ்வளவு ஓட்டை இருக்கோ அவ்வளவு நல்லது. நாலாவது ரெண்டும் மூணும் ஆறுன்னு எஜமான் சொன்னால் மறுக்கவே கூடாது. ஆமாங்க எஜமாங்கணும். இப்படியெல்லாம் இருந்தா இங்க இருக்கிற எஜமான் களுக்கு உங்கள ரொம்ப புடிச்சிப் போயிரும். அவங்க கிட்டயிருந்து எந்தத் தொந்தரவும் வராது' (பி.எச். டேனியல், 2014; 209) என்னும் அறிவுரை வெள்ளைத் துரைகளின் ஆணவத்தைப் பறைசாற்றும்.

வெள்ளைத்துரைகளின் ஆணவத்தை எதிர்க்கும் முதல் தன்மானக் குரலாக டாக்டர் ஆபிரகாம் வருகிறார். 'யாரையும் எஜமான்னு கூப்பிடறதுக்கோ, மேனேஜர் பின்னாடி குடையை மடக்குறதுக்கோ நான் தயாரில்ல' (பி.எச். டேனியல், 2014; 236) என்று தன்மானத்துடன் கூறும் டாக்டர் ஆபிரகாம்தான் தனக்கான பணியை முழுக் கவனத்துடனும் அக்கறை யுடனும் செய்கிறார். 'மலேரியா ஒழிப்புக்கும், மருத்துவத்துக்கும் ஏராள மான தொகையைச் செலவழிப்பதை விட இந்த நாத்தம் பிடித்த பிச்சைக்காரப் பயல்கள் செத்துத் தொலைந்து போவதே நல்லது. கொஞ்சம் ஆட்கள் குறைந்து போவது இந்த நாட்டுக்கு மிகவும் நல்லது பொருளாதார அடிப்படையில்' (பி.எச். டேனியல், 2014; 261) என்ற ஒயிட் துரையின் தடையையும் மீறி மருத்துவ மனையைச் சீர்செய்து முறையான வைத்தியம் அளிக்கிறார் ஆபிரகாம். கூழைக் கும்பிடு போடும் பிறர் தனது பணியையும் ஒழுங்காகச் செய்யாமல் அடுத்தவரையும் கஜானாவையும் சுரண்டு வதையே வாடிக்கையாகக் கொண் டுள்ளனர். தன்மானத்துடன் செயல் படுபவர்களால் நிர்வாகம் சீர்படுவதையும் தனது சுயநலத்துக்காகத் தன்மானத்தை விற்பவர்களால் நிர்வாகம் சீர்கெட்டுப் போவதையும் இந்நாவல் பதிவு செய்கிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் பங்கு

தோட்டத் தொழிலாளர்களுக்குத் தங்கள் அடிமைத் தளையை விடுவிக்கவே இயலாதபோது நாட்டின் அடிமைத் தளையை அகற்றுவதைப் பற்றிச் சிந்தித்து

இருப்பார்களா? சயாம் மரண ரயில் நாவலில் வரும் பலர் நேதாஜியையும் விடுதலைப் போராட்டத்தைப் பற்றியும் அறிந்துள்ளனர் (சண்முகம், 2004, 49). ஆனால் எரியும் பனிக்காடு நாவலில் உள்ள தொழிலாளர்கள் இந்திய விடுதலைப் போராட்டம் பற்றி அறிந்திருக்கவில்லை. ஆனால் இந்திய விடுதலைப் போராட்டம் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையிலும் ஒரு சிறு மாற்றத்தையாவது நிகழ்த்தத் துணையாக இருந்துள்ளது என்பதனை இந்நாவல் பதிவு செய்கிறது.

தேயிலைத் தோட்டங்களில் நிலவும் சூழ்நிலை காரணமாக அங்கு திடீரென்று மலேரியா போன்ற விஷக்காய்ச்சல் பரவுகிறது. மக்கள் கடும்பாதிப்புக்கு உள்ளாகி நடுங்குகின்றனர். ஆனால் அவர்களுக்கு வைத்தியம் பார்க்க முறையான வைத்தியர் கிடையாது. கம்பவுண்டராக இருந்த ஒருவர் மருத்துவர் வேலையைச் செய்கிறார். அவராலும் அத்தனை நோயாளிகளையும் கவனிக்க முடியவில்லை. இந்த நேரத்தில் வார்டு பாயையே மருத்துவராக வைத்துக் காலம் தள்ளலாம் என்றால் காங்கிரஸ்காரர்கள் இதனைப் பார்க்க வந்துவிட்டால் சங்கடமாகிவிடும் என்ற காரணத்துக் காகவே மருத்துவரை நியமிக்க முனை கின்றனர் (பி.எச். டேனியல், 2014; 238). தேயிலைத் தோட்டங்களில் வேலை பார்க்கும் இந்திய அலுவலர்கள் கூட காங்கிரஸ் வளர்ச்சியை வரவேற்கின்றனர் (பி.எச். டேனியல், 2014; 302).

கருப்பன் - வள்ளி

கருப்பன் - வள்ளி பாத்திரங்களின் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் பல்வேறு இன்னல்களைப் பதிவு செய்கிறார். பி.எச். டேனியல். துன்பத்திலும் கணவன் மனைவியாக ஒழுக்கத்துடனும் ஒற்றுமையுடன் வாழும் தம்பதிகளாக இவர்கள் உள்ளனர். கருப்பன் அனைவரையும் எளிதில் நம்பும் தன்மையுள்ளவன். கங்காணியை நம்பி தேயிலைத் தோட்டத்துக்குப் போகலாம் என்று வள்ளியை அழைக்கிறான் கருப்பன். வள்ளி புத்திசாலித்தனமாக, 'எதுக்கு காசு குடுத்து மலைக்குக் கூட்டிட்டுப் போவனும், அப்புறம் நமக்குப் புடிக்கலைனா ஏன் அவங்க காசுலேயே திருப்பி அனுப்பனும்? ஒண்ணும் புரியலயே?' (பி.எச். டேனியல், 2014; 27) என்று கேட்கிறாள். இதற்கு நேரடியாகப் பதில் சொல்ல முடியாத கருப்பன் தன் அம்மாவைத் தனது வாதத் துணைக்கு அழைக்கிறான். அதன்பிறகு சகுனங்களையும் பெரியவர் களையும் நம்பி தேயிலைத் தோட்டத்துக்குப் போக முடிவு செய்கின்றனர் இந்தத் தம்பதியினர். தோட்டத்துக்குப் போனதும் கங்காணி தங்களை ஏமாற்றிவிட்டான் என்பதை உணர்ந்துகொண்டனர். கருப்பனும் வள்ளியும் முத்தையா குடும்பத்துடன் ஒரே வீட்டில் தங்க அனுமதிக்கப்பட்டனர்.

தன்மானம் உள்ளவர்கள் கூட கோபத்தை வெளிப்படுத்த முடியாமல் கூண்டில் அடைக்கப்பட்ட சிறகொடிந்த

பறவையாய் வாழ்வைக் கடத்துகிறார்கள் என்பதை முத்தையா என்ற கதாபாத்திரம் வழி உணர்ந்துகொள்ள முடிகிறது. வீட்டை எவ்வாறு பிரித்து உருவாக்கிக் கொள்வது, தேயிலையை எப்படி பறிப்பது, குளிருக்கும் மழைக்கும் கம்பளியை எப்படி உடலில் சுற்றிக் கொள்வது, வொய்ட் துரையின் பாலியல் சில்மிசங்களை எப்படி எளிதாக எடுத்துக் கொள்வது, தப்பிப் போக நினைத்தவர் களுக்கு ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் யாவை என ஏராளமான விவரங்களை உயிரோட்டமாக விவரிக்கிறார் முத்தையா. கருப்பனுக்கும் வள்ளிக்கும் அந்தத் தேயிலைத் தோட்டத்தில் பற்றி கொள்ளக் கிடைத்த கொம்பு போன்றவர் முத்தையா.

பெயர் பதிவு செய்யப் போகும்போது வார்த்தை வழியே பாலியல் சீண்டலுக்கு ஆளாகிறாள் வள்ளி. இங்கெல்லாம் இது இயல்பு; பொறுத்துக்கொள் என்று கருப்பனை அங்கிருந்த மற்ற கூலிகள் அமைதிபடுத்துகின்றனர். தேயிலை பறிக்கும் போது செல்லம்மாவைப் போல வள்ளியையும் கருதி அவளது தாடையைப் பிடிக்கும்போது கருப்பன் குரல் கொடுக்கிறான்; அதற்காகவே கங்காணி யிடம் அடிபடுகிறான். வள்ளி துரையின் ஆசைக்கு இணங்க மறுத்ததால் பல இடங்களில் அவமானப்படுத்தப் படுகிறாள். சீனியம்மாள் போன்றோர் அவளுக்கு நல்ல வாழ்க்கை உண்டு என்று ஆசையைத் தூண்டுகின்றனர். வள்ளி அதனையெல்லாம் கடந்து வாழ்கிறாள். பூசாத்தாளின் வருகையோடு வள்ளியின் மீதான மோகம் மறைந்ததால் அவள் நிம்மதியடைகிறாள். ஆனால் வள்ளி பூசாத்தாள் போன்ற யாரையும் அவர்களின் பாலியல் பிறழ்வுக்காகக் குற்றம் சுமத்தவில்லை. இந்த இடம் அப்படி என்றே கடந்து செல்கிறாள். தனது கணவனுக்கு மலேரியா காய்ச்சல் வந்தபோதும் வள்ளி கங்காணியால் தோட்ட வேலைக்குத் துரத்தியடிக்கப் படுகிறாள். நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும்போதும் தோட்டவேலைக்கு வலுக்கட்டாயமாக அனுப்பப்படுகிறாள். காய்ச்சலால் இவளுக்கு ஏற்பட்ட உக்கிரமான வலிப்புகளினால் வள்ளிக்குக் கருச்சிதைவும் ஏற்படுகிறது. இவளது உடல்நிலை மோசமாகி தோட்ட வேலைக்குப் போகமுடியாதபோது இவளுக்கான ரேஷன் கூட நிறுத்தப் படுகிறது. பக்கத்து எஸ்டேட் கங்காணி கோவிந்தனை நம்பி எந்த முடிவும் எடுக்கவேண்டாம் என்று கூறித் தனது கணவனைக் காப்பாற்றுகிறாள். மீண்டும் கருதரித்துப் பிரசவத்துக்காக வள்ளி காத்திருக்கிறாள். இதற்கிடையே டேனியல் அவர்களின் குறியீடான இரக்க மனது கொண்ட மருத்துவராக ஆபிரகாம் அறிமுகமாகிறார். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் ஆரோக்கியம் குறித்து முதலாளிகளுடன் போராடுகிறார். தொழிலாளர்களைப் பரிவோடு கவனிக்கிறார். வள்ளி, கருப்பன் இருவருமே இவரது வருகைக்குப் பிறகு ஆறுதல் அடையத் துவங்குகின்றனர். நோய்வாய்பட்ட வள்ளி மீண்டும் தனக்கு ஒரு புதுவாழ்வு பிறக்க போகிறது என்று

நம்பிக்கை கொள்கிறாள். ஆனால் அவளது வயிற்றில் இருந்த கட்டிகளின் காரணமாக அவள் கருவைத் தாங்கும் சக்தியை இழந்திருந்தாள். இறுதியில் அவள் கருப்பனின் மனத்திலும் வாசகர் நினைவிலும் இறந்தும் இருந்தாள். கருப்பன் தனித்து அந்த நரகத்தில் விடப்படுகிறான்.

முடிவுரை

'எரியும் பனிக்காடு' எனும் இந்த நாவலை எழுதிய பால் ஹாரிஸ் டேனியல் 1941 முதல் 1965 வரை பல தேயிலைத் தோட்டங்களில் தலைமை மருத்துவராகவும் தொழிற்சங்க ஒருங் கிணைப்பாளராகவும் பணியாற்றியவர். அப்போது பல தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை நேரில் கண்டு அவர்களது அனுபவங்களைப் பதிவு செய்தார். அதன் காரணமாக 'சுநன கூநய' என்னும் ஆங்கில நாவலை எழுதி வெளியிட்டார். இவர் கருப்பன், வள்ளி போன்ற கற்பனைப் பாத்திரங்களின் மீது பல உண்மையான தோட்டத் தொழி லாளர்களின் அனுபவங்களைப் பதிவு செய்துள்ளார். தேயிலைத் தோட்டங் களின் பசுமைக்குப் பின்னால் அதை உருவாக்கிய மனிதர்களின் எலும்புகள் புதையுண்டு கிடப்பதையும் பிழைக்க வந்து அங்கேயே மடிந்து போன நூற்றுக்கணக்கான மக்களின் வலி நிரம்பிய குரல்களையும் இந்நாவல் வரலாற்றுப் புனைவாகப் பதிவு செய்துள்ளது. தாங்கள் தொழிலாளர்களாக வாழும்போது கொடுக்கமுடியாத குரலை இந்நாவல் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். கருணை மனம் கொண்டதாகக் கூறப்பட்ட ஆங்கிலேய நிர்வாகம் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை எந்த அளவுக்கு வதைத்துள்ளது என்பதை இந்நாவலைப் படிப்போர் உணர முடியும்.

'எரியும் பனிக்காடு' நாவலை வாசிப் போருக்கு இது மொழிபெயர்ப்பு நாவல் என்கிற உணர்வு தோன்றாத வண்ணம் நேரடித் தமிழ் நாவல் போலவே இரா.முருகவேள் அவர்கள் மொழி பெயர்த்துள்ளார். 38 ஆண்டுகள் கழித்து இவர் மொழிபெயர்ப்பு செய்துள்ள இந்நாவல் இவர் கூறியுள்ளது போலவே 'இலக்கியத் தளத்தில் தலித் இலக்கி யத்திற்கும் பாட்டாளி இலக்கியத்திற்கு மான கற்பனையான லக்ஷ்மண் ரேகைகள் மறைந்து, இரண்டும் ஒன்றிணையும் புள்ளியாகவும் இருக்கிறது' (பி.எச். டேனியல், 2014; 3). தன்னைப் போன்ற சக மனிதர்களை அடிமைப்படுத்தி, அவர் களுடைய உழைப்பையும் காலத்தையும் பணத்தையும் வாழ்வையும் கனவையும் உணர்வையும் சுரண்டி அவர்களை மனசாட்சியே இல்லாமல் இரணப் படுத்திக் கொண்டே இருக்கும் கொடிய மனித மிருகங்களை இது போன்ற நூல்கள் எத்தனை முறை தோலுரித்துக் காட்டினாலும் அவமானமே படாமல் அதுவே தங்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய பெருமை என்று ஆணவத்துடனும் வஞ்சகத்துடனும் சொல்லித்திரியும் மனித மிருகங்களுக்கு மேலும் ஒரு சவுக்கடி இந்நூல்.

நாவலில் ஒவ்வொரு அத்தியாயம் தொடங்கும் போதும் அந்த அத்தியாயத்துக்குப் பொருத்தமான மேற்கோள் ஒன்றை பி.எச்.டானியல் தருகிறார். அவரது இலக்கியப் பயிற்சியையும் தத்துவத் தேடலையும் இது நிரூபிக்கிறது. அப்படிப்பட்ட மேற்கோளில் இருந்து இந்த நாவலின் சாராம்சத்தைக் கூறக்கூடிய மேற்கோள் ஒன்றுடன் இக்கட்டுரையை நிறைவு செய்வது பொருத்தமாக இருக்கும்.

'உயிரியல் ரீதியாகப் பார்த்தால் விலங்குகளிலேயே வேட்டையாடுவதில் மிகவும் திறமை வாய்ந்தவன் மனிதன் தான். திட்டமிட்டு தனது சொந்த இனத்தையே வேட்டையாடும் ஒரே விலங்கும் மனிதன் தான்' மெமரீஸ் அண்ட் ஸ்டடீஸ், வில்லியம் ஜேம்ஸ் *(பி.எச். டேனியல், 2014; 103)*

துணைநூற்பட்டியல்

1. அரசு, வீ., புதுமைப்பித்தன் கதைகள், அடையாளம், திருச்சி, முதல்பதிப்பு 2010.
2. டேனியல் பி.எச். (தமிழில் : இரா. முருகவேள்), எரியும் பனிக்காடு, பொன்னுலகம் பதிப்பகம், திருப்பூர், ஆறாம் பதிப்பு, மே 2014.
3. சண்முகம், சயாம் மரண ரயில், தமிழோசை பதிப்பகம், கோவை, முதல்பதிப்பு 2007.

புதுத்தடம் கவிதைத் தொகுப்பில் உழைக்கும் மக்கள்

முனைவர் த. சிவலிங்கம்

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி
அரும்பாக்கம், சென்னை – 600 106.

ஆய்வுச் சுருக்கம்

உலகம் இயங்குவதில் பெரும் பங்கு கொண்டவர்கள் உழைக்கும் மக்கள் எனில் அது மிகையில்லை. உழைக்கும் மக்களை இலக்கியங்கள் பலவும் பலவாறு பதிவு செய்துள்ளன. உழைக்கும் கரங்கள் உருவாக்கும் கரங்கள் என்ற உண்மை விளங்கிட நவீன இலக்கிய ஆய்வுகளே பெரிதும் உதவும்.

நவீன இலக்கியத்தில் குறிப்பாக கவிதைகளில் உழைக்கும் மக்கள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்ற கருதுகோலை முன்வைத்து இக்கட்டுரை ஆய்வு செய்யப்படுகிறது. உழைக்கும் மக்களின் அடையாளம், வலி, வன்மை, மென்மை என அனைத்தையும் புதுத்தடம் என்ற கவிதைத் தொகுப்பில் எவ்வாறு கவித்துவப்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆய்வு செய்வதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொற்கள்

புதுத்தடம், துண்டு, நெனப்பு, வெள்ளைப்பாட்டு, வியர்வைக் காரர்கள்.

முன்னுரை

உழைப்பில் உடல் உழைப்பு மூளை உழைப்பு என்று காரல் மார்ஸ் இரண்டு விதமாக உழைப்பைக் கூறுவார். உழைக்கும் மக்களைப் பற்றி சிந்தனை பேர் அறிஞர்கள் முதல் கவிஞர்கள் வரை அனைவருக்கும் உண்டு. அதனை நவீன கால கவிஞர்கள் எவ்வாறு அடையாளப் படுத்துகின்றனர் என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்க மாகும். நவீன காலத்தில் பல கவிஞர்கள் இருப்பினும் சிறந்த நாட்டுப்புறக் கலைஞராகவும், நாடகப் பேராசிரிய ராகவும் அறியப்பட்ட முனைவர் கே.ஏ.குணசேகரன் அவர்களின் புதுத்தடம் என்ற கவிதை நூல்லில் உழைக்கும் மக்கள் பற்றிய சிந்தனையைப் பதிவு செய்வதே இக்கட்டுரையின் ஆய்வு எல்லையாகும்.

உழைக்கும் மக்களின் அடையாளம்

கவிஞர் மீரா உழைக்கும் மக்களின் சங்கத் தலைமையில் இருந்தவர். கவிஞர் மீராவுக்குப் புதுத்தடம் என்ற கவிதை நூலை கவிஞர் கே.ஏ குணசேகரன் காணிக்கை யாக்கியுள்ளார். உழைக்கும்

மக்களின் முதல் அடையாளம் அவர்களின் ஆடை தான் அதில் துண்டு முக்கிய இடம் பெறுகிறது. இதனைக் கவிஞர் இவ்வாறு அடையாளப்படுத்துகிறார்.

வேட்டியிலிருந்து துண்டானது
துண்டு
தலைவரானவர் எனத்
தலைப்பாகைத் துண்டு
சொன்னது. . .
மதிப்பானவர் எனத்
தோள் துண்டு உரைத்தது
சாமிக்கானவர்
சனங்களுக்கானவர்
இடுப்பில் கட்டிய
துண்டு இயம்பியது
வியர்வை துடைத்து
உழைப்பை உணர்த்தியது
கருத்த மேனியின்
மானம் காத்தது
உழைப்பவர்
கோவணம்
அமைதிகாத்தது[1]

துண்டு தலையில் இருந்தால் தலைவன் என்பதையும், தோளில் இருந்தால் மதிப்பானவர் என்பதையும், இடுப்பில் இருந்தால் பணிவானவர் என்பதையும் காட்டுவது அதையும் தாண்டி கோவணமாக சேற்றில் இறங்கி வேலை செய்யும் உழைக்கும் மக்களின் வறுமையையும் உன்னதத்தையும் காட்டுகிறார். துண்டு- கோவணம் இரண்டும் ஒரே அளவுதான் ஆனால் பயன்படும் விதம் வேறுபடுகிறது இவ்வாறு துண்டு தன்னைப் பெருமையாக நினைத்துப் பேசுவதையும் கோவணம் அனைத்து வேலைகளையும் செய்துவிட்டு அமைதியாக இருப்பதை முறையே முதலிகள் தொழிலாளிகளுக்கு ஒப்புமைப் படுத்தி இருப்பது இங்கு எண்ணத்தக்கது.

உழைக்கும் போதுதான் மனிதன்

சுடும் வரை நெருப்பு, சுற்றும் வரை பூமி போராடும் வரை மனிதன் என்று கவிஞர் வைரமுத்து மனிதனுக்கு போராடும் குணம் வேண்டும் என்பதைக் காட்டுகிறார்[2]. மனிதன் என்பவன் தெய்வமாகலாம், வாரி வாரி வழங்கும் போது வள்ளலாகலாம், வாழை போல தன்னைத் தந்து தியாகியாகலம்,3 என்று கவியரசு கண்ணதாசன் சுமைதாங்கி படத்தில் மனிதனின் தன்மை காட்டுவார் ஆனால் இங்கோ கவிஞர் கே.ஏ குணசேகரன்,

காடு கரைகளிலே
வயல் வாய்க்காலிலே
வியர்வை சிந்தி ஓழைக்கையிலே
மனுச மக்களாகும் நெனப்பு 4

என்று வியர்வை சிந்தி உழைக்கையில் தான் மனிதன் மக்களாக நினைவு கொள்ள முடியும் என்ற கருத்தைக் கவிஞர் அழுத்தப் படுத்துவதைக் காணமுடிகிறது. வைரமுத்து வுடனும், கண்ணதாசனுடனும் இக் கருதைப் பொருத்திப்பார்ப்பது சாலச் சிறந்தது.

உழைக்கும் மக்கள் கலைகள்

ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது, என்பதைப் போல உழைக்கும் மக்களிடம் இருக்கும் கலை அழகையும் கவிஞர் எடுத்துக்காட்டு

கிறார். கவிதை நூலின் தொடக்கத்தி லேயே பாணர்களின் பயணத்தை நெடும் பயணம் எனக் காட்டும் கவிஞர் உழைக்கும் உழவு மக்களின் கலை நிகழ்வு களையும் அடையாளப்படுத்து கிறார்.

உலக்கை ஆட்டம்
மெட்டோடு பாட்டுவரும்
செய்யும் கடுந்தொழில் யாவும்
சீராக முடிந்து விடும்
நங்கு– நங்கு
நங்கு – நங்கு
நெல்லு உமி தனியாச்சு
கைக்குத்தல் நின்னாச்சு
அம்மாவின் பாட்டு நிக்க
அரிசிப்பதம் கண்டாச்சு5

உழவன் பாட்டு, உழத்திப்பாட்டு, என்ற வரிசையில் நெல்லு குத்தும் போது தம் வறுமை நிலையையும் அடையாளப் படுத்தும் விதமாக வெள்ளைப்பாட்டு பாடியதை எடுத்துகாட்டுகிறார். கே.ஏ குணசேரன் தன் நாட்டுப்புற மக்களின் கலை நிகழ்த்தும் நிகழ்வு தொழிலோடு ஒன்றுபடுவதை காட்டுகிறார்.

கூலி

உழைக்கும் மக்களிடம் என்றும் தீராது இருப்பது கூலிதான், அதனை மிக அழகாக தன் கவிதைகளில் காட்டி யிருக்கிறார் கவிஞர்.

நூறுரூபாய் சலவை நோட்டை
கண்ணால காணாம
கல்லறைக்குப் போய்ச் சேர்ந்த
கருத்தமக்கள் எத்தனை பேர்6

இங்கு கருத்த மக்கள் என்பது உழைக்கும் மக்களை அடையாளப்படுத்துகிறார். உழைக்கும் மக்களின் வேர்வை காய்வதற்குள் அவர்களுக்கான கூலியை கொடுத்துவிடு என்கிறார் நபிகள் நாயம் அதனை இன்னும் அழுத்தப்படுத்தில் சலவை நோட்டுகளைக் கண்ணால் காணாமல் உழைக்கும் மக்கள் பலர் இருக்கிறன்றனர் என்ற கருத்தை கவிஞர் இங்கு விதைக்கிறார்.

வியர்வைக் கார்களுக்கு மட்டும்
உழைக்கும் பொழுதுகள்
ஊர்ந்து நடக்கின்றன. . .
. . . .
உறங்கி ஓய்வெடுக்கும்
இரவுப் பொழுது மட்டும்
ஓட்டமெடுத்து விடிகின்றது. . .7

உழைக்கும் மக்களை வியர்வைக்கார்கள் என்று அடைமொழியோடு காட்டுகிறார். அவர்களின் பொழுதுகள் உழைக்கும் போது நடப்பதாகவும், உறக்கும் போது ஓடுவதாகவும் சித்தரிக்கிறார். உழைக்கும் நேரம் அதிகமாக இருப்பதாகவும் ஓய்வு எடுக்கும் நேரம் குறைவாக இருப்ப தாகவும் காட்சிப்படுத்துகிறார்.

வன்மையும் மென்மையும்

உழைக்கும் மக்கள் வலிமையையும், மென்மையையும் ஒரு சேரப் பெற்றவர்கள் என்பதைக் கவிஞர் அடையாளப்படுத்துகிறார்.

வன்மையும் மென்மையும்
கைவாகும் மனவாகும
பக்குவம் தெரிந்த

பாட்டாளிகளுக்குத் தெரியும் . . .
உதிரம் சிந்திச்சிந்தி
உக்கிரம் காட்டிக்காட்டி
உறைப்பு காட்டும்
உழைப்பாளிகள்
மண்குடிசைகளில் புழங்கும்
மண் சட்டிமுட்டிகளுடன்
உறவாட மென்மை காட்டுவர்[8]

உழைக்கும் மக்கள் பாறைகளை உடைக்க கடுமையாக பளு கொண்டு தன் கைகளை வலிமையாகப் பயன்படுத்துவர் அதே சமயத்தில் ஏழ்மையில் இருக்கும் மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் மண் சட்டி போன்று எளிதில் உடையக் கூடியவை வயலில், மலையில் வலிமைகாட்டும் மக்கள் தங்கள் பயன்படுத்தும் மண் பாண்டங்களைக் கையாள்வதில் பக்குவமாக மென்மை காட்டுவதை கவிஞர் நன்கு அடையாளப்படுத்துகிறார்.

உரத்த கரங்கள்
உறவாடும் போது
ஒருபோதும்
உடைபடுவதில்லை
சேமித்த வன்மங்கள்[9]

உழைக்கும்போது வன்மையாகவும், உறவாடும்போது மென்மையாகவும் இருப்பார்கள் உழைக்கும் மக்கள் என்பதைப் புலப்படுத்தும் கவிஞர் உழைக்கும் மக்களிடம் வன்மங்கள் கூட உடைக்கப்படுவதில்லை என்பதை அழகான உவமானமாகக் காட்டுகிறார்.

வடுக்களும், வரிகளும்

உழைக்கும் மக்களின் உண்ணத் பரிசு வடுக்களும், வரிகளும் தான் அதனைப் புலப்படுத்தும் விதாமாக பின் வரும் கவிதைகளில் இவ்வாறு சுட்டுகிறார்.

இருகை வடுக்களும்
என்னை நினைவுபடுத்தும்
கதிர் அறுப்புக் காலத்திலே
கதிர் அரிவாள் சுற்றியகை
காய்த்துப புடைத்த சதை
காயமாகி சுரணை இழந்த
இருகை வடுக்களும்
என்னை நினைவுபடுத்தும்[10]

இரு கைகளின் வடுகள் தான் கதிர் அறுத்து அரிவாள் பிடித்து உழைத்த நினைவை தனக்கு நினைவுபடுத்தியதாக உழைக்கும் மக்களின் வடுக்களைக் கவிஞர் காட்டு கிறார். வடுக்களை விட வரிகள் இன்னும் ஆழமாவை என்பதை மற்றோர் கவிதையில் பின்வருமாறு காட்டுகிறார்.

எங்கள் பாட்டியின்
எலும்பு போர்த்திய தோல்
வரிக் கோடுகளால் . . ..
ஆண்டைவீட்டிடு நிலங்களில்
ஆயுள்பூராம் உழைத்த உடம்பு
அது
அதனால்தான்
அச்சுவார்த்த து போல்
வறண்ட நிலங்களில்
அடையாளம் காணலாம்
வரிக் கோடுகளால்

உடம்பில் உள்ள தோல்களில் வரி வரியாக உழைத்த சின்னங்கள் இருப்பதைக் காட்டுகிறார். இதில் எலும்பு போர்த்திய தோல் என்னும் வரிகள் எம்புதோல் போர்த்திய உடம்பு என்ற வள்ளுவத்தை நினைவூட்டுகிறது. ஆயினும் வள்ளுவத்தில் இருந்து சற்றே வேறுபட்ட கோணத்தில்

சிந்திக்க வைக்கிறது. நிலமும் தனக்கச் சொந்தமில்லை அண்டை நிலம், அதில் ஆயுள் பூராவும் உழைத்த உழைப்பை வரிகள் காட்கிறது. அதற்கு வறண்ட நிலங்களை உவமையாகிய விதம் இங்கு எண்ணத் தக்கது. நிறைவாக பாட்டாளி மக்களின் பசி தீர, உழைக்கும் மக்களின் போராட்டங்களுக்கு தீர்வு தரும் விதமாக இவ்வாறு கூறுகிறார்.

அறிவுத் தீ அனைவருக்கும்
பரவ வழி செய்ய வேண்டும்[11]

உழைக்கும் மக்கள் அறிவு நிலை அடைந்தால் மட்டுமே அவர்கள் வலி தீரும் என்ற கருத்தை அறிவுத் தீ பரவ என்ற கவிதையில் எடுத்தியம்புகிறார்.

முடிவுரை

விளிம்பு நிலைமக்களின் உழைக்கும் தன்மையும், அந்த உழைக்கும் வலியும் கவிஞர் பதிவு செய்துள்ள பாங்கு வெளிப் பட்டுள்ளது. முளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இருக்கும் வேறுபாடு புதுத்தடத்தில் இருந்து நன்கு வெளிப் படுகிறது. உழைக்கும் மக்களின் கூலி, அவர்கள் உடலில் உள்ள வடுக்களும், வரிகளும் என அனைத்தையும் கவிஞர் எடுத்துக்காட்டியுள்ளார். நவீன இலக்கியங்கள் உழைக்கும் மக்களை பார்க்கும் பார்வை வேறுபட்டு நிற்கிறது என்பதற்கு இக்கவிதை சான்றாக உள்ளது. உழைக்கும் மக்களின் உலவியலை அணுகுவற்கான மேலாய்வையும் செய்ய இக்கவிதைத் தொகுப்பு உதவும். தனி மனித வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி, நாடு வளர அதனை வளர்க்கும் உழைக்கும் மக்கள் பாதையில் புதுத்தடம் அமையும் .

அடிக்குறிப்புகள்

1. துண்டு, புதுத்தடம்
2. வைரமுத்து கவிதைகள்
3. சுமைதாங்கி திரைப்படம், கண்ணதாசன்.
4. நெனப்பு, புதுத்தடம்
5. வெள்ளைப்பாட்டு, புதுத்தடம்
6. வள்ளைப் பாட்டு, புதுத்தடம்
7. ஓட்டமும் நடையும், புதுத்தடம்
8. வன்மையும் மென்மையும், புதுத்தடம்
9. கைவாகு, புதுத்தடம்
10. வடுக்கள் , புதுத்தடம்
11. அறிவுத்தீ பரவ, புதுத்தடம்

முதன்மை ஆதார நூல்

1. கே.ஏ.குணசேகரன், புதுத்தடம், தன்னானே பதிப்பகம், புதுச்சேரி, ஆண்டு 2011

துணைமை நூற்பட்டியல்

1. சுமைதாங்கி திரைப்படம், கண்ணதாசன் திரையிசைப்பாடல், இயக்கம் ஸ்ரீதர் தயாரிப்பு கோவை செழியன். ஆண்டு–1962.
2. புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும் வல்லிக்கண்ணன், சீதைபதிப்பகம், சென்னை. ஆண்டு 2014
3. புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும், நா.வானமாமலை சீதை பதிப்பகம் சென்னை. ஆண்டு 2016.
4. மார்க்சிய தத்துவம் ஓர் அறிமுகம், எஸ்,ஏ. பெருமாள் பாரதி புத்தகாலயம் சென்னை ஆண்டு 2010.
5. வைரமுத்து கவிதைகள், சூர்யா வெளியீடு, திருமகள் நிலையம், சென்னை – 2010.

அம்பையின் 'மல்லுக்கட்டு' கதை – பெண்ணியப் பார்வை

முனைவர் இரா. சீதா

தமிழ்த்துறை

புனித பிலோமினாள் கல்லூரி, மைசூரு.

முன்னுரை

அம்பையைப் பற்றி அறியாதவர் இருக்க முடியாது. அவர் எழுதிய பல சிறுகதைகளில் ஒன்று - மல்லுக்கட்டு என்பது. இது கணவனுக்கும் மனைவிக்கு மிடையே, எப்படி, எதனால் சிறு சிறு கருத்து மோதல்கள் ஏற்படுகின்றன; அவற்றை எப்படி அவர்கள் எதிர்கொள்கிறார்கள் என்பது பற்றி மிகப் பிரமாதமாக காட்டியுள்ளார். ஒரு சிறு விஷயம் இங்கே மற்றவர் மனதை புண்படுத்தும் வாய் வார்த்தைகள் இல்லை. அவற்றை அவர்களுடைய மென்மையான செய்கைகளே உணர்த்தி விடுகின்றன

திறவுச்சொற்கள்

பிளாஸ்க், நிரவல் (ராகம் பற்றிய கலைச்சொற்கள் அதிகம்) சரக்கு, தேங்கா மூடிக் கச்சேரி, உருப்படி, (இங்கே புதுப்பாடல் என்ற பொருள்) ஜபர்தஸ்து, இத்யாதி. சிஷ்யன்

கதாபாத்திரங்கள்

செண்பகம், செண்பகத்தின் அம்மா, ஷண்முகம், கதிர்வேல் பிள்ளை, இவரின் மனைவி நாகவல்லி, பல சிஷ்யர்கள்- அவர்களில் ஒருவன் சோமு,

இச்சிறுகதையின் உள்ளடகத்தை பின்வரும் தலைப்புகளின் ஆராய்கிறேன்:

ஷண்முகம் - செண்பகம் - பாட்டு

கதை நிகழ் காலத்திலிருந்து ஆரம்பிக் கிறது. ஷண்முகம் மேடையேறி பாட்டுப் பாடுவான். அவனுக்கு தொண்டை கமறும்போதோ அல்லது தாகம் எடுக்கும் போதோ அவன் பக்கத்தில் தம்பூராவை வாசித்துக் கொண்டிருக்கும் அவன் மனைவி செண்பகம் சூடான, கல்கண்டும், மிளகும் போட்ட பாலை அவனுக்கு கொடுப்பாள். இது ஒவ்வொரு முறையும் நடக்கும். *(பக். 391)*

இறுமாப்பின், ஆணவத்தின் இருப்பிடம்

இந்த தலைப்பில் நான் இக்கதையில் இடம் பெறும் ஷண்முகத்தைத்தான் குறிப்பிட ஆசைபடுகிறேன்: அதற்குக் காரணம் ஆசிரியர் அவனது செயல்களைக் குறித்துத் தரும் செய்திகள்தான்:

அவன் பாட்டு பாடி முடித்ததும் கரவொலி கேட்கும். பிறகு ஷண்முகம் 'தலையை மெல்ல அவள் பக்கம் திருப்புவார்'. அப்படி தலையை திருப்புவது அவள் மனதில் உறைந்து போயிருந்தது. தாடையின் சதை மடிப்புகள் தொங்கிய பருத்த கழுத்து. அதில் மெல்லிய ஒரு சங்கிலி. .. தலையைத் திருப்பிப் புருவத்தைச் சற்றே உயர்த்துவார். இவள் உடனே தம்பூராவை சிஷ்யன் கையில் தந்துவிட்டு, வெள்ளி டம்ளரில் பாலை ஊற்றுவாள்..' பாடல் 'பிரமாதமா இருந்துதுங்க' என்பாள் மெல்ல.. 'உம்' என்பார். (பக்.391)

எப்போது பாலைக் கொடுத்தாலும் அதில் ஒரு குறை சொல்லிகொண்டே இருப்பார்.., கல்கண்டை கொறைச்சிருக்கலாம்ல. மொளகை இப்பிடியா அள்ளிப் போடுவ, சூடு கம்மி.... போன்றவை அடிக்கடி பேசப்படுபவை. (பக் 391)

மதிப்பீடும் அதன் தாக்கமும்.

கச்சேரி முடிந்து வீட்டுக்கு வரும் போது அவர் செண்பகத்திடம் கேட்கும் கேள்வி 'கச்சேரி எப்படி இருந்தது' என்பதுதான். வெறுமே 'ம்' என்று சொல்லக்கூடாது. விவரிக்க வேண்டும் அவர் மனம் குளிர, குளிர வருணிக்க வேண்டும்.

சில இடங்களில் சரியாக அமையவில்லை என்றால் அவர் முகம் தொங்கிப் போகும். ஆமாமாம், ஒனக்குத் தெரியாமப் போகுமா? அய்யாவோட அருமை சிஷ்யப் பெண் ணாச்சே நீ? என்று புறுபுறுப்பார். (பக்.392) வீட்டிற்கு வந்து தன் குழந்தைகளுடன் விளையாடி, பிறகு பூண்டு ரசம் குடித்து.. பின் தம்பூராவை எடுத்து வைத்துக் கொண்டு, தப்பு செய்த கச்சேரியின் இடத்தை அவளை மீண்டும் பாடிக் காட்டச் சொல்லுவார். இவள் பாடிக்காட்ட, 'அம்மா, அம்மா' என்று அரற்றுதலோ, தம்பூராவில் தலையை இடித்துக் கொள்வதோ, கொல்லாதடி பாவி! என்று அவளை நோக்கி கத்துதலோ, இல்லையென்றால் 'அய்யா, அய்யா' என்று தன் தந்தையைக் கூவி அழைப்பதோ நடக்கும். தாங்க முடியாத போது வராந்தாவில் இரவு முழுக்க நடத்தல் என்பது இருக்கும். (பக்.392)

ஷண்முகமும் செண்பகமும்

செண்பகத்தின் அம்மா கணவன் இறந்ததால், சில வீடுகளில் சமையல் செய்து பிழைத்துக் கொண்டிருந்தாள். செண்பகத்திற்குப் பாடப் பிடிக்கும்.. பல நேரங்களில் பாடியவாறே இருப்பாள். அந்த ஊரில் கதிர்வேல் பிள்ளை என்பவர் மிகப் பிரமாதமாக பாடி புகழ் பெற்றவர். அம்மா செண்பகத்தை அவரிடம் அழைத்துக் கொண்டுபோய் 'அவளுக்கு சங்கீதம்கற்றுக்கொடுக்கும்படி' கேட்கிறாள். அவளுடைய பாட்டுத் திறமையைத் தேர்வு செய்து மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு அவளுக்கு. முறையாக சங்கீதம் கற்றுத் தருகிறார். மேலும் அவளுக்கு வீணை கற்றுக் கொடுக்கிறார். வீட்டு வேலைகள் செய்ய விட மாட்டார். விரல்கள் தேய்ந்து விடும் என்பார். (ப.392-397)

ஷண்முகம் கதிர்வேல் அய்யாவின் மகன். செண்பகத்தை விட நான்கு வயது பெரியவன். எல்லோரும் மிக சிரத்தை யாகப் பாடிக் கொண்டிருக்க இவன் மட்டும் 'என் அய்யாவின் பாட்டு எனக்கில்லாமல் வேறு யாருக்கு வரும்? என்பது போல அலட்சியமாகக் கற்றுக் கொள்வான்'. சொல்லப்போனால், ஷண்முகத்தைக் காட்டிலும் செண்பகத் திற்குப் பாட்டு ஒரு கை வந்த கலையாகி விட்டது எனலாம் (பக். 392 - 397)) பல நேரங்களில் தன் மகனைத்தான் வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்வார். செண்பகத்தை அல்ல. அது அவனுக்கு எரிச்சலைத் தரும்.

போட்டியும் காதலும்

கதையில் சற்றுத் திருப்பம் ஏற்படும் பகுதி இது. ஷண்முகத்திடம் சற்று ஆணவம் இருந்ததால் அவன் பாட்டை ஆர்வமுடன் கற்றுக்கொள்ள துணிய வில்லை. ஒருமுறை கதிர்வேல் பிள்ளை கச்சேரி செய்ய தன்னுடன் செண்பகத் தையும் அழைத்துக் கொண்டு போகிறார். தன்னுடன் பாட வைத்து, பிறகு அவளைத் தனியாகவும் பாட வைக்கின்றார். அரங்கேற்றம் செய்து வைக்கிறார். அது மிகச் சிறப்பாக அமைந்து விடுகிறது. ஷண்முகமும் அங்கு இருந்தாலும் அவனுக்குக் கதிர்வேல் பிள்ளை வாய்ப்பு கொடுக்க வில்லை. கச்சேரி முடிந்து திரும்பி வருகையில், பிள்ளை தன் மகனிடம் கூறுவது இது:

செண்பகம் உங்க எல்லாரையும் தாண்டி ரொம்ப தூரம் போயிட்டா. அவ உழைச்ச உழைப்பு அப்பிடி'

இந்த நிகழ்ச்சி ஷண்முகத்திடம் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அசுர வேகத்தில் சாதகம் செய்கிறான். அவளுக்கு போட்டியாக அவனும் மேடையேறி கச்சேரி செய்கின்றான்.

அவளுடைய கல்யாணத்திற்காக மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக் கையில், ஷண்முகம் நேரே செண்பகத் திடம் போய்

''நீ எப்படி வேற மாப்பிள்ளை பார்க்கலாம்? நீ என்னைத்தான் கல்யாணம் கட்டணும்'' (பக்.400)

இதைக் கேட்டவுடன் அவள் 'வேகமாக நடந்து போய், அவனை இறுக அணைத்துக் கொண்டாள் (பக்.401).

இதைப் பற்றி ஆசிரியர் கூறும் போது' எந்தத் தருணம் அவர்களுக்குள் பிணைப்பு ஏற்பட்டுப் போயிற்று என்று தெரிய வில்லை' என்கிறார்.

கதிர்வேல் பிள்ளைக்கு விஷயம் தெரிய வருகிறது. சற்று ஏமாற்றத்துடன் பிறகு ஒத்துக் கொள்கிறார்.

இதை பார்க்கும் போது, கலித் தொகையில் கபிலர் இயற்றிய குறிஞ்சிப் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

'ஒரு தலைவி தன் தோழியிடம் பின் வருமாறு கூறுகிறாள்:

தெருவில் நாம் ஆடும் மணற்
சிற்றில் காலிற் சிதையா,
அடைச்சிய கோதை பரிந்து,
வரிப்பந்து கொண்டோடி நோதக்க
செய்யும் சிறு பட்டி..

இல்லீரே உண்ணுநீர் வேட்டேன்
என வந்தாற்கு...
யானும் தன்னையறியாது
சென்றேன்,
மற்றென்னை வளைமுன்கை
பற்றி நலிய..
உண்ணுநீர் விக்கினான்
என்றேனா..
நகைக்கூட்டம் செய்தான்
அக்கள்வன் மகன்

இப்பாடலில் தலைவிக்கும் தலைவனுக்கும் சண்டை நடக்கிறது. பின்னாளில் அதுவே காதலாக மாறுகிறது.

இங்கும் அப்படிபட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

செண்பகத்தை வேலை வாங்கக் கூடாது என்பது கட்டளை. அது ஷண்முகத்திற்கு கோபத்தைத் தரும். அவர் பார்க்காத போது, இவள் தலையில் ஒரு தட்டு தட்டுவான். இவள் பாடும்போது பின்னலை இழுத்து கவனத்தைச் சிதற வைப்பான்.. இவள் முகம் அழுகையில் கோணுவதைப் பார்ப்பது அவனுக்கு ஒரு விளையாட்டு.. ஆனால் வீட்டிற்குத் தெரியாமல் மரம் ஏறி மாங்காய் பறிப்பது, வெள்ளரிப் பிஞ்சு தருவது, சமையல் அறையில் இருந்து தேங்காயும் வெல்லம் திருடி வந்து அவளுக்கு தருவது என்று பலப்பல செய்கிறான். (ப.397)

அப்படியென்றால் போட்டி அல்லது பொறாமை / அவனுக்கு ஆற்றாமை எங்கே வருகிறது?

இவர்களுக்கு திருமணம் செய்யலாம் என்று நிச்சயம் செய்த பின்னர், வெளியூர்க் கச்சேரிக்கு செண்பகத்தை அழைத்துக் கொண்டு போவது என்று பிள்ளை திட்டமிட்ட போது ஷண்முகம் பின்வருமாறு பேசுகிறான்" (பக் 400)

செண்பகம் கச்சேரி செய்யப் போவுதா?

ஏன், கச்சேரி செய்யாம சமையலா செய்வா? என்றார் அய்யா?

இல்லய்யா. அவ எதுக்கு ஓடணும், அங்க இங்க? வீட்டுல பாடட்டுமே, எவ்வளவு வேணுமின்னாலும்! கச்சேரின்னா அவ களைச்சுப் போயிடுவா. ஓட்டமெல்லாம் எனக்கே இருக்கட்டும். அவ ஓய்வா இரிக்கட்டும்.

இதைக் கேட்ட பிள்ளைக்குக் கோபம் வருகிறது. அவளிடம்' போ, போ, குடித்தனம் பண்ணு, புள்ள பெத்துக்க.

இதை கேட்டு அவள் அழுகிறாள். ஏன் அழுகிறாய் என்று அவர் கேட்க, எனக்கு புது உருப்படி சொல்லித் தருவீங்களா? என்கிறாள். நாளைக்கு ஆரம்பிக்கலாம் போ' என்று கூறி அவர் இறக்கும் வரை அவளுக்கு சங்கீதம் கற்றுத் தருகிறார். (பக். 401) இதில் ஆச்சரியம் என்னவென்றால் பிள்ளை அவர்கள் மிகவும் முற்போக்கான எண்ணங்களைக் கொண்டவராக இருக்க, இளைய தலைமுறையைச் சார்ந்த ஷண்முகம் அவளை வீட்டுடனே அடக்கப் பார்க்கிறான். ராஜம் கிருஷ்னன் கூறுகிறார்:

"ஆணாத்திக்க சமுதாயம் பெண்ணை உடலுக்கப்பால் ஒன்றுமில்லை என்ற முடிவை நிலைநிறுத்தித் தன் செங்கோலை செலுத்திக் கொண்டிருக்கிறது". (பக்.139)

ஆனால் இதற்கு விலக்காக இருப்பவர் கதிர்வேல்பிள்ளைதான்.

சில கேள்விகள் தேவை

ஷண்முகம் உண்மையிலேயே செண்பகத்தின் மீது காதல் கொண்டவனா? அப்படியென்றால் ஏன் அவளை திருமணத்திற்குப் பிறகு பாடக் கூடாது என்கிறான்?

ஷண்முகத்திற்கு அவளைத் திருமணம் செய்துக்கொள்ள வேண்டும் என்ற துடிப்பு இருந்தாலும், ஆழ்ந்து யோசித்துப் பார்க்கும் போது அவளுடைய குரலை தனக்கு அடிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற பரபரப்புதான் அதிகம் என்று தோன்றுகிறது. எந்த குரல் கொண்டு அவள் பெருமை அடைகிறாளோ, அதை தன் கட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். அவளுடைய புகழ் அவனுக்கு தன் சுயமுனைப்பை, ஈகோவை துன்புறுத்துகிறது. மேலும் அய்யா வேறு அவளை பல இடங்களுக்கு அழைத்துச் செல்கிறார். அவள் புகழ் இன்னும் பரவுகிறது. அந்த புகழ் தனக்கு வேண்டும். அதற்கு ஒரே வழி. அவள் குரலை தன் சொந்தமாக்கிக் கொள்வதுதான். அவளைத் திருமணம் செய்துக் கொண்டு 'வீட்டிலேயே தங்கும்படி செய்து விட்டால், இனி கச்சேரி எல்லாம் அவன்தான் செய்வான். பாராட்டு, புகழ் போன்றவைகளுக்கு அவன் சொந்தக் காரனாகி விடுவான். இதுதான் அவனுடைய திட்டம். இது செண்பகத்திற்குத் தெரிய வாய்ப்பில்லை. பின்னாளில் தெரிய வரும்போது அவள் வேதனைப்படுகிறாள். மாற்று வழி உண்டா? பார்க்கலாம்.

அதனால்தான், அவள் அவனுடைய பாடலில் தவற்றை சுட்டிக் காட்டும் போது, அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை'. 'அய்யாவோட அருமை சிஷ்யப் பொண்ணாச்சே நீ' என்று குத்திக் காட்டுகிறான். (பக்.392).

ஓர் இடத்தில், பிள்ளை கூட அவனிடம் கேட்கிறார்.

'அவகூட உனக்கு என்னடா போட்டி" (பக்.397)

இதைப் பார்க்கும் போது, அவனுக்கு அவளை எப்படியாவது மிஞ்ச வேண்டும், மேலும் அவள் அவனைக் காட்டிலும் புகழ் பெற்று விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான் என்றுதான் தோன்றுகிறது.

செண்பகத்தின் நிலை

இக்கதையைப் படிப்போர்க்கு, செண்பகத்திடம் எந்த வித மாற்றமும் தெரியவில்லையே, கதை முழுவதும் அமைதியாகவே தென்படுகிறாள், அவளின் தன்மை என்ன? என்று வினவலாம். அமைதியாகவே இருந்து, ஆர்ப்பாட்டமின்றி, தன் நிலையை எல்லோருக்கும் குறிப்பாக ஷண்முகத்திற்கு உணர்த்தியது தான் அவளுடைய மிகப் பெரிய வெற்றி.

கதை போகிற போக்கில் மிக மென்மையாக அவளுடைய எண்ணத்தை மனவோட்டத்தை வெளிப்படுத்துகிறார் ஆசிரியர் :

> பாடல் எப்படி இருந்தது என்று கேட்கும் போது அவள் அவனை புகழ்ந்துதான் பேச வேண்டும். சரியில்லை என்று சொன்னால் அவனுக்குக் கோபம் வரும். அந்த நேரங்களில், அவள் மவுனம் சாதிப்பாள், காரின் வெளியே பார்ப்பாள், வீதியை, வீடுகளை, தெருவில் நடப்பவர்களை வெறிப்பாள். (பக்.392). இது அவளுடைய மன வேதனையைக் குறிக்கலாம். தான் பெற்ற பரிசாகிய இனிய குரலுடன் கூடிய பாட்டை மற்றவர்கள் இரசிக்கும்படி செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் இருக்கலாம். மேலும், அவள் இது பற்றி அவனுடன் தர்க்கித்தால் அனாவசியமான வார்த்தைகளால் மன உளைச்சல் ஏற்படும் என்ற எண்ணமும் இருக்கலாம்.
>
> திருமணமான பிறகு, வீட்டில் இவர்கள் இருவரும் சேர்ந்து பாடிய தினங்கள் மெல்ல மறைந்தன. (பக்.402)
>
> செண்பகம் அவனுடன் வாழ்ந்தாள், அவனை ஒட்டி நின்றாள், பின்னாலி லிருந்து பாலை நீட்டினாள். ஆனால் கண்ணுக்குப் புலப்படாத ஓர் இடத்தில் அவர்கள் இன்னமும் பொருதும் மல்லர் களாகவே இருந்தனர். (பக்.402)

எப்படிப்பட்ட கருத்து விளக்கம் ! இதுதான் இன்றைய பெண்களின் நிலையாக இருக்கிறது. ஒப்புக்குச் சிரித்துக் கொண்டு உள்ளுக்குள்ளே அவர்கள் வேதனைப் படுவது என்பது தெரிந்த இரகசியம்.

இன்னொன்றும் காண வேண்டும். செண்பகத்திற்கு தன் திறமை தெரியும். இருந்தாலும் அவனுக்கு அடங்குவது மேல் என்று நினைத்தாளோ தெரியாது. அதற்கு காரணமும் இருக்கிறது. கணவனும் மனைவியும் வாழ்க்கையை "ஓர் ஒட்டப்பந்தயம்" என்று நினைத்தால் வெற்றியை நோக்கி ஓடும் வெறிதான் ஏற்படும். வாழ்வு குலைந்துப் போகும். தன் வாழ்க்கையை அவள் சிதறும்படி செய்யவில்லை. மேலும், ஷண்முகத்தின் சில செயல்கள் அவளுக்கு அவன் மீது வெறுப்பு ஏற்படுத்தவில்லை என்று தெரிகிறது. படுக்கையறையிலும் சரி மற்றும் பல நேரங்களில் வீட்டில் இருவரும் தனியாக இருக்கும் போதும் ஷண்முகம் அவளுடைய மகிழ்ச்சி மிகவும் முக்கியம் என்பதைப் பார்த்துக் கொண்டார். இது அவளுக்குப் பெரியதாகப் படுகிறது எனலாம் (பக்.392).

சோமுவின் தாக்கம்

கதையில் கதிர்வேல் பிள்ளை மிகச் சிறந்த யதார்த்தவாதி என்றால் சோமு என்ற கதாபாத்திரமும் ஷண்முகத்திற்கு எதிர்வினையாகப் படைக்கப்பட்டதோ என்ற சந்தேகம் எழுகிறது. சோமு ஒருமுறை செண்பகத்திடம் பாட்டுக் கற்றுக் கொள்கிறான். அப்போது ஷண்முகம் ஊரில் இல்லை. ஒரு சிறு நிகழ்ச்சியில் அவன் அந்த பாட்டைப் பாடி அவள் பெயரையும் குறிப்பிடு

கின்றான். இதைக் கேட்ட ஒரு பிரபல வித்வான் 'பொம்மனாட்டி கிட்டப் பாடம் கத்துக்க ஆரம்பிச்சாச்சா? ஒரு காரியம் பண்ணு. ரெண்டு வளையலை மாட்டிண்டுடு' என்று கூற, இவனும் சளைக்க்காமல் இரண்டு வெள்ளி வளையல்களை வாங்கிப் போட்டுக் கொண்டான். ஷண்முகம் அவன் செயலைக் கண்டிக்க, அவன் கடைசி வரை வளையலைக் கழற்றவேயில்லை. (பக்.402). இது ஷண்முகத்திற்கு ஓர் எச்சரிக்கையை தந்திருக்க வேண்டும். யார் சிறந்த வித்வான் என்பதை சோமு உணர்ந்து கொண்டு விட்டானோ என்ற அவலம் அவனுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

மேடையில் அவனை பாடும்படி அவனுக்காக இரண்டு முறை (சான்ஸ்) இடைவெளி விடுகையில் சோமு வேண்டுமென்றே எங்கோ பார்த்தபடி இருந்தான். அவனுக்கு தெரிந்திருக்கும், உண்மையான திறமைசாலி யார் என்று. அதனால்தான் சந்தர்ப்பம் கொடுத்த பிறகும் அவன் அதை பயன்படுத்த வில்லை. ஆனால் மேடையில் தம்பூரா வாசித்துக் கொண்டிருந்த செண்பகம்தான் அந்த இடைவெளியில் பாடுகின்றாள். இது சோமு வேண்டுமென்றே செய்கிறான் என்று கருத வேண்டியிருக்கிறது. (பக்.403)

சொல்லப்போனால், சோமுவின் இந்த செய்கை ஷண்முகத்திற்கு யார் திறம் படைத்தவர் என்ற உண்மையை உணர்த்தியிருக்கிறது.

சிவப்பு பட்டு சால்வை - இயற்கை வென்றதா? - அல்லது திறமையிடம் சரணாகதியா?

இந்தக் கதையில் மிக முக்கிய இடம் பெறுவது எது என்று பார்த்தால் சிவப்பு பட்டு சால்வைதான். ஷண்முகம் எங்கு பாடச் சென்றாலும் அவன் தோளில் கம்பீரமாக இருப்பது சால்வைதான். அது கிருபானந்த வாரியார் அவர்கள் போர்த்தியது. (பக்.391) எத்தனையோ பட்டங்கள், பொன்னாடைகள் பெற்றும், பாடலின் நடுவே இடைவெளி விட்டு தன் சிஷ்யன் சோமுவை பாடுமாறு பணிக்க அவன் எங்கேயோ பார்த்தபடி இருந்தான். இரண்டாம் முறையும் அவ்வாறே நடக்க, செண்பகம் தான் அவனுடன் இணந்து பாடுகிறாள். அவையினர் பாராட்ட....ஷண்முகம் அவள் கையிலிருந்த தம்பூராவை வாங்கிக் கொண்டு மைக்கை அவள் பக்கம் நகர்த்துகின்றான். அடுத்த அடியை செண்பகமே எடுத்தாள். (பக்.403)

ஆசிரியர் கூறுவது இது..

'அந்த ஏ.ஸி அறையிலும் அவருக்கு வியர்த்ததா என்று தெரியவில்லை. தோள்களைச் சுற்றி இருந்த சரிகைச் சால்வையைக் கழற்றிக் கீழே வைத்து விட்டுப் பாட ஆரம்பித்தார் செண்பகத்துடன். சரணாகதிக்கு இதைக் காட்டிலும் மென்மையாக அடையாளம் தந்து விடமுடியாது. (பக்.403)

பாட ஆரம்பித்தார் செண்பகத்துடன் என்பது மிக மிக ஆழமான சொற்கள். மிகப் பிரமாதமாக வடிக்கப்பட்ட சொற்கள்.. செண்பகம் தன் திறமையை, உரிமையை மிக மென்மையாக காட்டி

விட்டாள் என்றே கருத வேண்டும். மவுனமான போராட்டம்தான். பெண்ணாக இருந்ததாலோ என்னவோ வெற்றி பெறும் வரை சற்றுப் பொறுமை யுடன் இருக்க வேண்டிய நிர்பந்தம்தான் என்று தெரிகிறது..

மல்லுக்கட்டு கதைக்கு முடிவுரை

ஆசிரியரே முடிவும் கொடுக்கின்றார்: "இது ஒரு விளையாட்டு போல நடந்தது. நடுவர் இல்லாத ஆட்டம், விதிமுறைகள் இல்லாத, ஆடுபவர்களே உணராத ஆட்டம். வெற்றி தோல்விகளை வரையறுக்க முடியாத ஆட்டம். வென்றவர்களைத் தோற்றவர்களாகவும், தோற்றவர்களை வென்றவர்களாகவும் மாற்றிவிடும் ஆட்டம்" *(393)*

பயன்பட்ட நூல்கள்:

1. மல்லுக்கட்டு, அம்பை சிறுகதைகள், காலச்சுவடு பதிப்பகம், சென்னை 2007.
2. பெண்ணியம், – தமிழ் இலக்கியங்களில், ராஜம் கிருஷ்ணன் கட்டுரைகள், 2013.
3. கபிலர், கலித்தொகை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை–1999

சிறிய கதையாம் சிறுகதையில் பல செய்திகள்

முனைவர் சீதாலட்சுமி

இணைப்பேராசிரியர், துணைத்தலைவர்
ஆசியமொழிகள் மற்றும் பண்பாடுகள் (தமிழ்)
தேசியக் கல்விக்கழகம்
நன்யாங் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்

முன்னுரை

மனித வாழ்வில் வாய்மொழியும் செவிவழிக் கேட்கும் மரபும் கூடிப்பேசிக் களிக்கும் வழக்கங்களும் பொருள் பொதிந்தவை. இத்தகு இடைவினை யாடல்கள்தாம் நிலாவில் பாட்டி வடை சுட்டு விற்கிறார் என்பதையும் நிலா தோசைபோல் வட்டமாக இருக்கிறது என்பதையும் வானில் கொக்குகள் போன்ற பறவைகள் பறக்கும்போது கை நகங்களை ஒன்றுடன் ஒன்று உரசி, "கொக்குக் கொக்குப் பாலாடை கோழிக்குஞ்சு பாலாடை" என்று வானத்தைப் பார்த்துப் பாடிப் பின் கைவிரல் நகங்களில் வெள்ளைக்கோடு வந்திருக்கிறதா என்று பார்த்து மகிழும் பாங்கும் சிறுவயதிலேயே ஒவ்வொரு தமிழ்க்குழந்தைக்குள்ளும் அடுக்கடுக்காய் வலுவான அடித்தளமாய்ப் பதிகின்றன. இது மட்டுமின்றிக் கையில் ஒரு சிறிய குச்சியை வைத்துக்கொண்டு அதை நீண்ட மணல் ரயிலில் புதைத்துவிட்டுக் குச்சி எங்கே இருக்கிறது என்பதை நேரடியாகக் கேட்காமல், "கிச்சுக் கிச்சத் தாம்பாளம் கீயா கீயா தாம்பாளம்" என்று பாடும் பாடலும், உணவு சமைக்காமலே உணவு சமைத்ததுபோல் சமைத்து, உறவுகளுக்குப் பகிர்ந்து பின் "நண்டூருது நரியூருது" என்று பாடியபடி கையின் விரல் பகுதியிலிருந்து முழங்கையின் பின்பகுதி வழியே சென்று குழந்தைக்குக் கிச்சுகிச்சு மூட்டுவதும் எனக் கதைப்பாடல்களைப் பாடி மகிழ்ந்திடும் காலம் நம்மை விட்டு வெகுதொலைவில் இல்லை என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியே.

இத்தகு கதைப்பாடல்கள் உரை நடையின் ஆதிக்கம் வரத்தொடங்கியபின் கதைகளாக மாறி நம்மைப் பரவசப் படுத்தும் தன்மையைப் பெற்றன. இங்கே பரவசம் என்றால் அது வெறும் மகிழ்ச்சி மட்டுமல்ல. பல்வேறு மனிதர்களை நாம் படைப்புகளின் வழியே பார்த்து மகிழும் அல்லது பார்த்து அறியும் பரவசத்தை இங்கே சொல்கிறேன். இந்நிலையில் சிறுகதை என்பது சிறிய அளவிலான கதை என்பதுடன் ஒருமை அழுத்தத்தைக் கொண்ட கதையாக நம்மிடையே உலா வருகிறது. மனப்பாடம் வழியே பாடங் களைக் கற்ற காலம் போய் இன்று கணினி வழியாகவும் இணையம் வழியாகவும்

படிக்கும் நிலை இடம்பெற்றுள்ளது. இயந்திரம் என்பது வாழ்வில் மிகவும் அவசியமானது எனினும் அதை உருவாக்க முனைந்த மனிதனுடன் மனிதன் வழியே பாடம் கற்பதற்கு ஈடாக ஏதுமில்லை என்பதை இங்கு கட்டாயமாகப் பதிய வேண்டிய நிலையில் நாம் உள்ளோம் எனில் மிகையில்லை

பொதுவாகச் சிறுகதைகள் மனித வாழ்வை நமது நீண்டகால நினைவுப் பெட்டகத்தில் பதிய வைக்கும் தன்மையன. அவை நாம் வாசித்த படைப்பு, எப்போது எந்த இடத்தில் வாசிக்கப்பட்டது, அதில் வரும் பாத்திரங்களின் நடை, உடை, பாவனை ஆகியன எப்போது எவ்வாறு இருந்தன என்பதை நம் கண்முன் அப்படியே கொண்டுவந்து காட்டும் தன்மையன. இதற்குக் காரணம் அக்கதைகளின் வார்ப்பு முறையும் கதாசிரியரின் உணர்வு வெளிப்பாடும் உயிரோட்டமிக்க கதைக் கருவும்தாம் எனில் மிகையில்லை.

இன்றைய கல்வி உலகில் மட்டுமின்றித் தொழில்துறையிலும் கதை கூறுதல் திறம்பட்ட ஒரு முறையாகும். கதை கூறும்போது அதில் வாழ்க்கை, மொழி, பண்பாடு, வரலாறு, அழகியல், உணர்வியல், உளவியல், கனவியல், நனவியல், மனிதத்துவம் போன்ற பல துறைகள் இடம்பெற்றிருப்பதால் கதை கூறும்போது கரு மட்டுமின்றி இங்கு கூறப்பட்ட பல கூறுகளும் கதைக்கு உயிர் தருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் கதையைக் கூறுவதன் முழுமையான நோக்கம் நிறைவேறுகிறது.

தமிழ்ப்பண்பாட்டில் குழந்தை பிறக்கும் முன்பும் பிறந்த பின்பும் கதை கூறுவது ஒரு மரபாகவும் பண்பாடாகவும் இருந்து வருகிறது. குழந்தைக்குப் பாலூட்டும்போதும் தாலாட்டும்போதும் சோறூட்டும்போதும் கதை கூறுவது இடம்பெற்று வருகிறது. அவ்வகையில் கதைகள் மனிதவாழ்வில் முக்கிய இடம்பெறுகின்றன. மனித வாழ்வில் நாம் பார்த்திராத அல்லது பார்க்க விழையும் பாத்திரங்களையும் சூழல்களையும் இடங்களையும் கதைகள் வழியே பார்க்க முடிவதால் சிறுகதையும் ஓர் எழுத்து வடிவத் திரைப்படம் என்றால் மிகையில்லை.

சிங்கப்பூரில் வெளிவந்த சிறுகதை கடகம்

சிங்கப்பூரில் வாழும் எழுத்தாளர் ஒருவரின் சிறுகதையைப் பற்றிப் பேசும் நிலை இடம் பெறுகிறது. இந்தக் கதை பிரேமா மகாலிங்கம் என்பவர் எழுதிய கடகம் என்ற கதை. இந்தக்கதை நீர்த்திவலைகள் என்ற அவரது சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இது 2017ஆம் ஆண்டு சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் நடத்திய முத்தமிழ் விழாவுடன் தொடர்புடைய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

கடகம் சிறுகதை ஒரு தாய் தனது இரண்டு மகள்களில் ஒரு மகளை எதிர்பாராவகையில் நோய்க்குப் பலி கொடுத்த நிலையில் மற்றொரு பெண் அது சார்ந்த நினைவுகளைத் தன் தாயின்

தினசரி வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பேசும் வகையில் அமைகிறது. நனவோடைக்காட்சிகளுடன் கூடிய கதையாக இருப்பினும் வாசிப்பவர் களுக்கு ஒரு கட்டத்தில் கதை புரியக்கூடிய நிலை உள்ளது.

கதையில் பாத்திரமே கதையைச் சொல்வதுபோல் இருப்பதால் தன்னோடு சேர்த்து மூன்று பெண்களையும் இரண்டு ஆண்களையும் சில மைனாக்களையும் முக்கியப்பாத்திரங்களாகக் கொண்டு அமைந்திருப்பினும் வாசிப்பவருக்குச் சில சமயங்களில் யார் யாரைக் குறிப்பிடுகிறார் என்று பிடிபடுவதில் சிரமம் தென்படுகிறது.

திருமணமாகி குழந்தை இல்லாத நாற்பது வயதிலிருக்கும் மகளைக் கணையத்தில் கட்டி, பிறகு மருத்துவம் பார்த்த நிலையில் இன்சுலின் சரிவரச்சுரக்காத நிலை என்ற தொடர்ந்த உடல்நலக்குறைவினால் அந்த உறவைத் திடீரென, இழக்கும்நிலை, மரணத்தை அருகிலிருந்து பார்க்கும் நிலை போன்றன ஓர் உயிரின் சிறப்பையும் வதையையும் அதன் இழப்பையும் சுரம் பிரித்துக் காட்டும் தன்மையன. அவற்றை இக்கதையில் பார்க்க முடிகிறது. வாசிப்பவர் தம் சொந்த வாழ்வில் தாம் இழந்த இழப்புகளையும் உறவுகளையும் உயிர்களையும் சிந்தித்துப் பார்க்க இக்கதையில் வரும் இறப்பெனும் நிகழ்வு வழி செய்கிறது.

கதை வாசிப்பதற்கும் உள்ளே வரும் பாத்திரங்களைப்பற்றிப் புரிந்து கொள் வதற்கும் சிறு தொய்வை அல்லது தடங்கலைத் தருவதுபோல் தோன்று கிறது. ஏனெனில் முன்னும் பின்னும் முறை மாற்றிப் பயணிக்கும் கதையின் முக்கியப்பாத்திரம் வாசகர் களையும் சில இடங்களில் தொங்கலில் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டுத் தவிக்கவிடுவதுபோல் தெரிகிறது.

இங்கு இக்கதையில் கடகம் என்பது நண்டு என்ற பொருளிலும் ஒரு ராசி என்ற பொருளிலும் எழுத்தாளரால் கையாளப் படுகிறது என்று எண்ணத் தோன்றுகிறது. நண்டு என்ற நோக்கில் பார்த்தால் கதையில் பலவகை நண்டுச் சமையல் பற்றிக் குறிப்பிடுகிறார். காண்டா நண்டுக்குழம்பை வைப்பது குறித்து அவர் பேசுகிறார். இறந்து போகப்போகும் தன் மகளுக்கு நண்டுச்சமையல் பற்றிச் சொல்லவும் தன் கையால் சாப்பிடுமாறும் தாய் வேண்டும் போதும் கடகத்தின் சிறப்பு நன்றாகப் பளிச்சிடுகிறது. அது மட்டுமன்றி இறப்பு என்பது நண்டின் இரண்டு கொடுக்குகள் போல் கழுத்தை இறுக்கிப் பிடிப்பதுபோல் எண்ணத் தோன்றுகிறது.

கதையைக்கூறிச் செல்லும் சகோதரி, அவரது சகோதரி திலகா, திலகாவின் கணவர் ராம், கதை கூறிச்செல்லும் சகோதரியின் கணவர் சேகர், அம்மா, மைனாக்கள், மருத்துவமனை வார்டு, அங்கு பணிபுரியும் மருத்துவ ஊழியர்கள் எனக் கதை பலரையும் உள்ளடக்கி யிருந்தது. கட்டுரையின் ஆசிரியர் அறிந்தவரை கதை கூறும் சகோதரியின்

பெயர் குறிப்பிடப்படவில்லை. அதனால் யார் யாரிடம் பேசுகிறார் என்பதில் சிறிது குழப்பம் தென்படுகிறது. கதையில் அம்மா திலகாவின் வீட்டிலிருந்து கதை கூறும் சகோதரியின் வீட்டில் வந்து தங்கியதிலிருந்து மைனாவைப் பார்த்து அதைப் பிள்ளையாகப் பாவித்து உணவு போடுவதிலிருந்து ஒரு கூட்டத்துக்கே உணவு தருவது வரை பார்க்கும்போது மறைந்துவிட்ட மகளை மைனா வழியே பார்க்கிறாரா என்று எண்ணத் தோன்றுகிறது. இது இறந்தவர்களைக் காகத்தின் வடிவில் பார்க்கும் பண்பும் தினமும் காகத்திற்கு உணவுபோடும் பழக்கமும் சிங்கப்பூரில் பூனைகளை அவ்வாறு பார்க்கும் பாரம்பரியம் ஒரு சாராரிடம் இருப்பதும் பட்டாம் பூச்சியை, வண்ணாத்திப்பூச்சி என்று சொல்லி அதன் வரவை முன்னோர் வரவாக எண்ணும் பாரம்பரியமும் இங்கு நினைவில் வந்து நிற்கின்றன.

கதையில் நல்லதொரு தரமான பேச்சுத்தமிழின் நடை இருந்தாலும் "அப்பன் கண்டுபிடிச்சான்னா. ஆப்புத்தான்! தெரியும்ல..?" (ப.155) என்று சொல்லும்போது அங்கே அதைக் காதில் கேட்க அவ்வளவு நன்றாக இல்லாத நிலையும் இங்கே சுட்டிக்காட்டப்படவேண்டித்தான் இருக்கிறது.

"திலகா, கண்மணி, கண்ணைத் திறந்து பார். அம்மா வந்திருக்கேன். உனக்குப் பிடித்த நண்டு செஞ்சு எடுத்துட்டு வரதுக்குள்ளே எங்கே கிளம்பிட்டே..? அம்மா கையால ஒரு வாய் சாப்பிடு கண்ணம்மா.. " கண்ணீருக்கும் கதறல் களுக்கும் இடையில் உடைந்து விழுந்தன வார்த்தைகள். " என்று பக்கம் 162இல் வரும் பகுதியும், ஆசிரியரின் கதை யோட்டத்துக்கு ஏற்ற எடுத்துக்காட்டு களாகும்.

"மணம் வலி மிகுந்த இறந்தவர் களுக்கு அல்ல. இருப்பவர்களுக்கு! பிரியமானவர்களின் மரணத்தை நேருக்கு நேர் சந்தேகித்தவர்களுக்குத்தான் இந்த வலி புரியும்." என்ற பக்கம் 163இல் வரும் பகுதியும்,

""கீச்.. கீச்..", அடுப்பங்கரையிலிருந்து மைனாவின் கீச்சிடும் ஒளி என் நினைவு களிலிருந்து என்னை மீட்டு வந்தது. வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே நிமிர்ந்த போது அம்மாவின் நிழல் வேகமாக அடுப்பங்களைக்குச் செல்வது தெரிந்தது" என்று முடியும் கதையின் 163ஆம் பக்கக் கூற்றும் கதையில் கதைக்கு உரமூட்டும் சில பகுதிகள் எனலாம்.

கற்றல் கற்பித்தலில் இச்சிறுகதையும் முடிவுரையும்

இங்கு, இத்தகு சிறுகதைகளை வகுப்பில் பாடமாக நடத்தும்போது மனித வாழ்க்கை, அதன் சிறப்புகள், மனித உறவுகள், அவற்றின் சிறப்புகள், பண்பாடு, அது சார்ந்த இன்றைய வாழ்க்கை, புலம்பெயர் சமூகங்கள் எவ்வாறு தாம் வந்த புலங்களில் வேரூன்றி நிலைத்து நிற்கும் பாங்கைப் பெற்றுள்ளன, இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டு

வாழ்க்கை, அது தரும் நேர்நிலையான எனும் ஆக்கப்பூர்வமான அல்லது எதிர்மறையான மன உளைச்சல்கள், அவற்றில் தம்மைத் தமக்குத் தெரியாமலே ஈடுபடுத்திக் கொள்ளும் குழந்தைகள், சிறுவர்கள், பதின்மவயதினர், இளையர்கள், இளம் ஆடவர், பெண்டிர், நடுத்தர வயதினர், முதியோர் எனப் பல தலைப்புகளைப் பற்றி ஆசிரியர்கள் பேச இயலும். மாணவர்களின் முன்னறிவைத் தூண்டுவதுடன் அவர்களது வாழ்க்கை அனுபவங்களையும் வயதுக்கொத்த செய்திகளையும் அவர்களுடன் கலந்துரை யாடிப் பகிர்வது பயன்மிக்க வாழ்க்கை விழுமங்களையும் வாழ்க்கையை ரசிக்கவும் நினைவுகளைப் பொத்திப் பாதுகாக்கவும் சொல்லித் தர முடியும் என்பது சிறுகதை இலக்கியத்தின் சிறப்பு ஆகும்.

முதன்மை நூல்

பிரேமா மகாலிங்கம். (2017). கடகம். நீர்த்திவலைகள் என்ற நூலில்.. (ப.153-164) சிங்கப்பூர்: ஆர்யா கிரியேஷன்.

புதுக்கவிதை மரபில் புதுமைபித்தன் கவிதைகளும் விவாதங்களும்

41

முனைவர் கு. சுதாகர்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)

அரும்பாக்கம், சென்னை – 600 106.

41

ஆய்வுச் சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டு தமிழ்ப் படைப்பாளியில் பாரதிக்குப் பின், மிக முக்கியமானவராக கருதப்படுபவர் புதுமைப்பித்தன் எனலாம். ஆரம்ப கால புதுக்கவிதையில் சோதனை முயற்சிகளை மேற்கொண்டவர். புதுமைப்பித்தன் தம் கட்டுரை பலவற்றில் கவிதைகள் குறித்தும் சமகால கவிஞர்களின் கவிதைகள் குறித்தும் விமர்சித்து எழுதியிருந்தார். புதுமைபித்தன் கவிதைகளை எல்லாம் தொகுத்து ரகுநாதன் வெளியிட்டிருந்தார். அதனை மையமிட்டு அவரது கவிதை போக்கையும் அது குறித்தான விமர்சனத்தையும் வெளிப்படுத்துதல், கதைகளில் கையாண்டுள்ள கவித்துவத்தை வெளிப்படுத்துதல் மற்றும் தன் மனைவிக்கு எழுதிய கடிதங்களில் காணப்படும் கவிநடையை வெளிப் படுத்துதல் போன்றவை இக் கட்டுரையில் பேசப்படுகிறது. மேலும் புதுமைப்பித்தனின் கவிதைகள் குறித்து எழுத்தாளர்களின் கருத்துகளும் விமர்சனங்களும் ஆங்காங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. பல்துறை ஆளுமையாக உள்ள புதுமைப்பித்தனின் கவிதைகள் ஆய்வுலகில் கவனம் பெற வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

திறவுச்சொற்கள்

புதுமைப்பித்தன், மணிக்கொடி, ஓடாதீர், மாகாவியம், ரகுநாதன், கமலா, கவித்துவம், பொன்னகரம்.

முன்னுரை

அச்சு ஊடக வருகைக்குப் பின் தமிழ்ச் சமூகப் படைப்பிலக்கிய தளத்தில் பெரும் மாற்றம் நிகழ்ந்தது. அவற்றில் ஆறுமுக நாவலர், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பாரதியார், புதுமைப்பித்தன், நா.பிச்ச மூர்த்தி, ஈரோடு தமிழன்பன் மற்றும் பலர் படைப்புலகில் பல புதுமுயற்சிகளை மேற்கொண்டனர். அவர்களில் பாரதிக்குப் பின்னர் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த படைப்பாளிகளில் ஒருவராக கருதப் படுபவர் புதுமைப்பித்தன் என்றால் அது மிகையன்று. தன் எழுத்துகளின் மூலமாக புனைகதை உலகில் புத்துணர்ச்சியை ஏற்படுத்திய புதுமையாளன் புதுமைப் பித்தன். இவரது சிறப்பைப் பற்றி

விதந்துரைக்கும் எழுத்தாளர் ஜெயகாந்தன், "காவியத்திற்குக் கம்பன் கவிதைக்குக் பாரதி என்றால் கதைக்குப் புதுமைப்பித்தன்"[1] என்று கூறுவது முற்றிலும் பொருந்தமே. சிறுகதை இலக்கியத்தில் மன்னனாக போற்றப்படும் புதுமைப்பித்தன் கதைகள் மட்டுமின்றி கவிதைகள், நாடகங்கள், மொழிபெயர்ப்புகள், கட்டுரைகள், கடிதங்கள், திரைப்பட வசனங்கள், புதின முயற்சி எனப் பல்துறையிலும் பயணித் திருப்பது குறிப்பிடத்தக்கது. படைப்பிலக்கிய பயணத்தில் புதுமைப்பித்தனின் கவிதைகள் குறித்தும் பிற படைப்பிலக்கிய (கதைகள், கடிதங்கள்) செயல்பாட்டில் அவரது கவித்துவத்தையும் வெளிக்கொண்டு வருவதும் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

கவிதை குறித்துப் புதுமைப்பித்தனின் கருத்து

சொ.விருத்தாசலம் எனும் இயற் பெயரைக் கொண்ட புதுமைப்பித்தன் பல புனைப்பெயர்களைச் சூட்டிக் கொண் டாலும் புதுமைப்பித்தனே அவர் விரும்பிய பெயராகும். புதுமைப் பித்தனுக்குக் கவிதை குறித்து தெளிவான பார்வை இருந்ததை, 'கவிதையைக் கலையின் அரசி' என்பார்கள். கல்லாத கலை என்பார்கள். கவிதை என்றால் என்ன? யாப்பிலக்கண விதிகளைக் கவனித்து வார்த்தைகளைக் கோர்த்து அமைத்து விட்டால் கவியாகுமா? கவிதையின் இலட்சணங்கள் என்ன? கவிதைக்குப் பல அம்சங்கள் உண்டு, ஆனால் அவைகளின் கூட்டுறவு மட்டும் கவிதையை உண்டாக்கிவிடாது. கவிதையின் முக்கியபாகம் அதன் ஜீவ சக்தி. அது கவிஞனது உள் மனத்தின் உணர்ச்சி உத்வேகத்தைப் பொருத்துத்தான் இருக்கிறது[2] எனக் கூறியிருப்பதிலிருந்து தெளிவாகிறது.

புதுமைப்பித்தன் எழுதிய கட்டுரை பலவற்றில் கவிதைகள் குறித்து ஆழமான கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். அவற்றில் ஒழுக்கமும், தர்மமும், மோகூஷமும் கவிஞனது உள்ளத்தில் ஊறி இருதயத்தின் கனிவாக வெளிப்படும் இசைதான் கவிதையாகும் எனப் புதுமைப்பித்தன் குறிப்பிடுவதாக வாணீசரணன்[3] எடுத்துக் காட்டுவதைக் காணலாம். இலக்கணம் கவிதை உணர்ச்சியைத் தடை செய்யும்போது, அதை விட்டு விலகியோ, ஏறி விழுந்தோ, பாதை மாற்றியோ, சொல்லவந்த விஷயத்தைக் கொண்டு செல்வதே புதுமைப்பித்தன் கையாண்ட முறை. எனினும் அப்படிச் செய்வதன் மூலம் பாட்டின் தாள லயத்தைச் சிதைத்து விடாமல் பாட்டுக்குப் புதிய லயம் ஒன்றைக் கொடுத்தார்[4] என ரகுநாதன் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

கவிதை குறித்துக் கருத்துரைக்கும் போது, ஐந்து குருடர்கள் ஒரு சமயத்தில் யானை என்பது எப்படிப்பட்ட மிருகம் என்பதை முடிவாகக் கண்டு தெளிந்துவிட வேண்டும் எனக் கருதிய செயலோடு ஒப்பிட்டு கூறும் புதுமைப்பித்தன், 'கவிதை அல்லது பாட்டு என்ற பொருள் பற்றித் தமக்குள் விவாதம் தொடங்கி

விட்டால் வெட்டுப்பழி குத்துப் பழி வரைக்கும் போய் நிற்பார்களே ஒழிய, தாமும் குருடர்கள் யானை பார்த்த கதையாக கவிதையைப் பார்க்கிறோம் என்பதை உணரமாட்டார்கள். இயல்பாக விவேகத்துடன் பேசுகிறவர்கள் இந்தக் கவிதை யென்ற பொருள் பற்றி விவாதம் தொடங்கும்பொழுது ஏன் தம் இயல்பை அறவே மறந்து விடுகிறார்கள்? கவிதை யென்ன அத்தனை வசீகரம் பொருந்தி அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப அவரவர்க்கு தெரியும் அல்லது அவரவர் உணரக்கூடிய அழகுகளை மட்டும் காண்பிக்கும் மோகினியா? எனக் கேள்வி எழுப்பி[5] கவிதை உண்மையில் ஒரு மோகினிதான்.

அதாவது மோகினி என்பதற்கு நாம் கொடுக்கும் விகல்பமான, மட்டமான பொருள் இல்லாமல், வசீகரத் தன்மை வாய்ந்தது என்ற பொருளை மட்டும் கொண்டால் கவிதை மோகினி என்பது பொருந்தும் என்கிறார். மேலும் கவிக்குயில் இதழுக்குக் கவிதை, சுட்டுரை வாங்க எண்ணி புதுமைப்பித்தனிடம் சென்ற எஸ்.சிதம்பரம், அவருடன் உரையாடிய நிகழ்வைப் பதிவுசெய்யும் போது,

"இதுக்காகவா வந்தே? வா, கவிதை எழுத இந்த இடம் சரிப்படாது. உங்க வீட்டுக்கே போவோம்" என்றார் அவர்.

இருவரும் எனது வீட்டுக்கே வந்தோம். வீட்டில் புதுமைப்பித்தனுக்கு ஒரு தட்டு நிறைய முறுக்கு, ஏற்றங்காய் வற்றல், வெற்றிலைப் பாக்கு, புகையிலை எல்லாம் தயாராயிருந்தன. அவற்றை யெல்லாம் கண்டதும் புதுமைப்பித்தன் 'ஏது? தளவாடங்கள் எல்லாம் தயாரா யிருக்கே, பிரகடனம் கொடுக்கட்டுமா?" என்று கூறிச் சிரித்தார். பிறகு "ஏ ராசா! தேங்குழலை எடு. தின்னுக்கிட்டே கவிதை பாடுறேன். நீ எழுதிக்கிட்டு வா!" என்று கூறினார்.

அப்போது உருவான கட்டுரைதான் 'பாட்டும் அதன் பாதையும்' என்பதாகும். இக்கட்டுரையில், உனக்குக் காவியம் தாரதானா அது இருக்கணும் ஆமா, பேரை இப்படி வச்சிரு. 'மாகாவியம்' என்றார்.

"மாகாவியம்" என்று நானும் திரும்பச் சொல்லிக்கொண்டேன். "சரி, வேளூர், வெ. கந்தசாமிக் கவிராயர் பாடுகிறார் எழுதிக்கோ" என்றார்.

காளான் குடை நிழலில்
கரப்பான் அரசிருக்க
வேளான் குடியூரில்
வெண்னெருக்கு மூட்டருலே
கள்ளி தலைதூக்க
காட்டெருமை புறத்தேலி
சீட்டுக் குருவியவள்
சிங்காரப் பாட்டிசைத் தான்

என்று தொடங்கினார். பாட்டு விறுவிறு வென்று சென்றது. பிறகு இடையில் தடைப்பட்டு நின்றது. புதுமைப்பித்தன் மீண்டும் சொன்னார். "சரி, ராசா பாட்டு ஸ்டாக் தீர்ந்து போச்சு. கட்டுரையை எடு"[6] எனக் கூறியிருப்பதிலிருந்து மெனக்கெடல் ஏதும் இல்லாமல் இயல்பாய் கவிதையும் கவிதை குறித்த கருத்துரைகளும் வெளிப் படுத்தி இருப்பதைக் காணமுடிகிறது.

மேலும் வேளூர் வெ. கந்தசாமிக் கவிராயர் என ஏன் பெயரிட்டுக் கொண்டார் என்பதற்கான காரணத்தைப் புதுமைப் பித்தனும் குறிப்பிடவில்லை. உடனிருந்த வர்களும் விளக்கம் கேட்டதாக தெரிய வில்லை. பல புனைப்பெயரில் எழுதிய புதுமைப்பித்தன் கவிதைகளுக் கென்று தனித்துத் தெரிவதற்காக இப்பெயரை வைத்துக் கொண்டார் எனக்கருத முடிகிறது.

புதுமைப்பித்தன் வேளூர். வெ. கந்தசாமிக் கவிராயராக அவதாரம் எடுத்தது 1944-ம் ஆண்டில் தான். அதற்கு முன்பும் அவர் ஒன்றிரண்டு பாடல்கள் எழுதியிருக்கிறார். எனினும் தாம், எழுதப்புகும் புதுமுறைப் பாடலுக்காக அவர் தமது புனைபெயரையும் மாற்றிக் கொண்டார். இப்பெயர் பாட்டுக்காக மட்டும்தான் என ரகுநாதன் கூறுகின்றார். வேளூர் வெ. கந்தசாமிப்பிள்ளை என்ற பெயரில் எழுதிய அவரது முதல் பாட்டு 'ஓடாதீர்!' என்பதாகும். இக்கவிதை 'கிராம ஊழியன்' பத்திரிகையில் வெளிவந்தது.

இத்தனைக்கும் மேலே
இனி ஒன்று; ஐயா, நான்
செத்ததற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்பு கட்டி
கல்லில் வடித்து வையாதீர்!
'வானத்து அமரன்
வந்தான் காண்! வந்தது போல்
போனான் காண்' என்று
புலம்பாதீர்!
அத்தனையும் வேண்டாம்
அடியேனை விட்டுவிடும்![7]

எனும் இக்கவிதை கு.ப.ரா., இறந்த பிறகு கவனிக்க முனைந்த, நிதி சேர்க்க முனைந்த தமிழர்களின் நிலையைக் கண்டு பாடிய பாட்டே 'ஓடாதீர்' எனும் இப் பாடலாகும். இப்பாடல் கு.ப.ரா. செத்து விட்டார்; அவரது குடும்பத்துக்கு நிதி திரட்டப்பட்டது. எழுத்தாளனைச் சாகவிட்டுக் கௌரவிப்பதைக் கண்டு மனம் புழுங்கி வெளிப்படுத்திய பாடலே புதுமைப்பித்தனின் இப்பாடல் எனத் தெரிகிறது. அதே கவிதையில் எழுத்தாளன் ஒருவன் உலகத்தோரை அழைத்து என்னைப்பார்த்துக் கவிராயரே என்று எண்ணி ஓடி ஒளியாதீர்," சரஸ்வதியார் அருள் பெற்ற வண்ணக்கவிராயன் நானல்ல. சத்தியமாகச் சொல்லுகிறேன். என் நாவில் சரஸ்வதியார் வந்து நடம் புரியும் வளமை கிடையாது. உலகத்திலுள்ள மற்றவர்களைப் போல் நானும் ஒருவன் எழுத்தை என் உழைப்பாகக் கொண்டு பொய்கள் புனைந்து புளுகுகளைக் கொண்டும்மைக் கட்டிவைத்து, ஏமாந்தால் காசைக் கறந்திடும் ஒரு எழுத்தாளன்தான் நான்."[8] எனச் சாலி வாஹனன் எடுத்து காட்டி யிருப்பதைக் காணலாம்.

புதுமைப்பித்தன் வேளூர்க் கவி ராயராக அவதாரம் எடுத்துப் பாட்டுக்கள் எழுதியது போலவும், சீட்டுக்கவி எழுதியது போலவும், சமயங்களில் துக்கடாவாகச் சில வேடிக்கைப் பாட்டுக்களும் சொல்வதுண்டு.

உதாரணத்திற்கு யுத்த காலத்தில் வேவல் சுமத்ராவிலிருந்து விலா வெலும்பு முறிந்து ஓடி வந்தது ஞாபகமிருக்கிறதா? அப்போது புதுமைப்பித்தன் அந்தச் செய்தியைக் கேட்டதும் பக்கத்திலிருந்த நண்பர்களைப் பார்த்து ஒரு விடுகதைப் பாட்டுப் பாடினார்.

'வேலமுள் விழுந்ததேன்?
வேவல்விலா முறிந்ததேன்?'

என்று கேட்டுப் பிறகு "வலுவற்று, வலுவற்று" என்று அவரே அதற்குப் பதிலும் கூறினார் 9 என ரகுநாதன் குறிப்பிடுவதிலிருந்து பாரதி போன்று புதுமைப்பித்தனும் வசன கவிதைகளில் முயற்சிகள் பல மேற்கொண்டார் என்பது தெளிவாகிறது.

புதுமைப்பித்தன் பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், பாரதி படைப்புகள் மீது ஆர்வம் கொண்டிருந்தாலும் தமிழின் மகோன்னதமான படைப்பு என்று அவர் கருதியது கம்ப ராமாயணம்தான். "கம்பன்தான் எனக்குத் தமிழ் நடையைக் கற்றுத் தந்தவன்" என்று அவரே கூறுவார். ஒரு பெண்ணை வருணிக்கும்போது அவளைக் "கவிதா ரசிகனுக்குக் கம்பன் மாதிரி" என்றுகூட அவர் வருணித்திருக் கிறார்[10] எனச் சுந்தர ராமசாமி குறிப்பிடுவதிலிருந்து புதுமைப்பித்தனின் கம்பராமாயண ஈடுபாட்டையும் அவரது படைப்பில் உள்ள கவிநயத்திற்கான காரணத்தையும் நாம் அறியலாம்.

புதுமைப்பித்தன் கவிதையும் காரணமும்

தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் மாப்பாஸனாக கொண்டாடப்பட்ட புதுமைப்பித்தன் வறுமையில் உழன்ற நிலையைப் பற்றிக் குறிப்பிடும் போது, அவர் கையில் பணமில்லை; வேலை யில்லை; வீட்டு ஆதரவும் இனிமேல் கிடையாது. காணாக்குறைக்கு, துணைக்கு ஒரு கால்கட்டு - மனைவி. எங்கே போவது? என்ன செய்வது? எதற்கும் பதில் கிடையாது. இச்சூழலில்தான்,

செல்லும் வழி இருட்டு
செல்லும் மனம் இருட்டு
சிந்தை அறிவினிலும்
தனி இருட்டு!'
நடையால் வழிவளரும்
நடப்பதனால் நடை தொடரும்
அடியெடுத்து வைப்பதற்கு
ஆதி வழி ஏதுமில்லை

என்று எழுதியிருந்தார். இவ்வரிகளே அவரது வாழ்வின் போராட்ட நிலையை அறிய சான்றாகிறது. இக்கவிதை குறித்து பேசும் க.நா.சு, 'இருட்டு வெறும் குருட்டு இருட்டு அல்ல. இந்த இருட்டில் உருவங்கள் பலவும் சிகரங்கள் பலவும் உள்ளத்துக்கு இன்பம் பயக்கும். லேண்ட்ஸ்கேப்ஸ் பலவும் புதுமைப் பித்தனின் வார்த்தைகள் என்கிற விளக்கினால் கருத்துக்கள் என்கிற நிர்மாணத்தினால் தெரிகின்றன. இந்த இருட்டிலும் பாதைகள் இருக்கின்றன. உயிர்த் துடிப்புள்ள மனிதர்கள் வந்து வந்து

போகிறார்கள். இருட்டுத்தான். ஆனால், வாழ்வு, வாழ்க்கை இரண்டும் அற்றுவிட வில்லை. கலை அம்சம் நிறைந்த இருட்டு'[11] எனக் கூறியிருப்பதைக் காணலாம்.

புதுமைப்பித்தனின் கவிதைகளைத் திரட்டிய ரகுநாதன், அவர் இயற்றிய கவிதைகளாக 18 கவிதைகளை நூலாக 1954 ஆம் ஆண்டில் ஸ்டார் பதிப்பகத்தாரால் வெளியிட்டார். அந்நூலில் புதுமைப் பித்தன் சிறுகதைக்கு எப்படிப் புதுப்புது உருவ அமைப்புக்களை உண்டாக்கித் தந்தாரோ, அதுபோலவே அவர்தாம் எழுதிய கவிதைக்கும் புதிய உருவ அமைதியை உண்டாக்கித் தந்திருக்கிறார். இந்த உருவ அமைதியையும் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் வரவேற்றார்கள்[12] என அந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டி ருந்தது கவனிக்கத்தக்கது.

'புதுமைப்பித்தன் கவிதைகள்' எனும் தொகுப்பில் இடம்பெறும் முதல் கவிதையான 'நிசந்தானோ சொப்பனமோ' எனும் இக்கவிதையில்,

'வட்டமுலை மின்னார்
வசமிழந்த காமத்தால்
நீலமணி மாடத்து
நெடியதொரு சாளரத்தைத்
தொட்டுத் தடவிவந்து
தோயும்நிலாப் பிழம்பை,
எட்டி, எடுத்து,
இடைசுற்றிச் சேலையென
ஒல்கி நடப்பதாய்
உவமை சொல்'

கவிதா தேவியான சரஸ்வதியை முன்னிறுத்திக் கேட்கின்ற பாவனையில் பாடப்பெற்றது. இக்கவிதை முதலில் இருப்பது ஏதோ தற்செயலாக நிகழ்ந்த ஒரு வைப்பு முறையானாலும் சிந்தா தேவியின் செழுங்கலை நியமத்தின் ஒரு கூறோ என்று ஐயுறும் வகையில் அமைந்திருக்கிறது எனச் சாலி வாஹனன்[13] குறிப்பிடுகின்றார்.

புதுமைப்பித்தன் எழுதிய கவிதைகள் எத்தன்மையுடையன என்று இன்றைக்கு விவாதம் செய்தல் வேண்டியதாகும். "வசன கவிதை" இலக்கியம் படைத்து வந்த சிலரும் புதுமைப்பித்தனின் புதிய கவிதையைக் கண்டு அவற்றை பின்பற்ற தொடங்கியதே அவரது கவிதைக்குக் கிடைத்த வெற்றி 14 என்று பிரகாசம் குறிப்பிடுகின்றார். புதுமைப்பித்தனின் கவிதைகளை மதிப்பிடும் சுந்தர ராமசாமி, அவை பொருட்படுத்தத் தகுந்த சோதனை முயற்சிகள் என்கிறார். மேலும் புதுமைப் பித்தன் தானே சொன்ன மாதிரி ஒரு புதிய ரூபத்தில் கவிதை எழுதும் முயற்சியைத் தொடங்கி வைத்தார். எனினும் அவர் அவ்வாறு எழுதிய கவிதைகளில் 'நிசந்தானோ 'சொப்பனமோ?', 'ஓடாதீர்!', 'காதல் பாட்டு', 'மகா காவியம்' என்ற ஐந்தும்தான்உருப்படியானவை என்றாலும், அவருக்கே இது தொடக்கம் தான். ஒருவேளை அவர் உயிரோடு இருந்திருந்தால் இதே பாணியில் மேலும் வலுவான சோதனைகளைச் செய்திருக் கலாம்[15] (சுந்தர ராமசாமி 145) எனச் சுந்தர ராமசாமி குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. அவ்வகையில் புதுமைப்பித்தனை அடியொற்றி திருலோக சீதாராமும்

நானும் அவரது கவிதையின் உருவ ரகசியத்தைப் புரிந்து கொண்டு அந்த வழியில் நடை பயின்று சில கவிதைகளை எழுதியிருக்கிறோம் 16 என ரகுநாதன் குறிப்பிடுவதிலிருந்து பாரதியார் பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை போல படைப்புலகில் புதுமைப்பித்தன் பரம்பரை என்று ஒன்றை அடையாளம் காண வழிவகுக்கும்.

எழுத்து, வானம்பாடி போன்ற புதுக்கவிதை வளர்ச்சிக்கு வித்திட்டது மணிக்கொடி காலப் படைப்புகளே எனலாம். அதில் ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா, புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன் முதலானவர்கள் மணிக்கொடியில் முக்கியமானவர்களாக உள்ளனர்[17] என ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுவதைக் காணலாம். மேலும் மணிக்கொடி இதழ் 'தன் பக்கங்களில் நடத்திய கவிதைச் சோதனையிலிருந்து வசனகவிதை என்றொரு புதிய கவிதை மரபை உறுதிப்படுத்தியது. தான் உருவாக்கிய கவிதைக் கோட்பாடுகளிலிருந்து தமிழின் அடுத்த கட்ட கவிதைக்கான எழுச்சியைத் தந்தது'[18] என மஞ்சுளா தேவி குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது.

புதுமைப்பித்தன் கவிதை எழுதியதோடு மட்டுமின்றி, தன் கால கவிதை முயற்சி மேற்கொண்டவர்களை விமர்சிக்கவும் செய்தார். இதன் வெளிப்பாடாக, ந.பிச்சமூர்த்தியின் ஆரம்ப காலக் கவிதை முயற்சிகள் வசன கவிதைகள்தாம்; புதுக்கவிதைகள் அல்ல. (பிச்சமூர்த்தி, கு.ப.ரா போன்ற வர்களின் இத்தகைய வசனகவிதை முயற்சிகளைத் தான் புதுமைப்பித்தன் 'வசனமுமல்ல, கவிதையுமல்ல' என்று விமர்சனம் செய்தார்) அதைத் தொடர்ந்து 1944 வரையிலும் சப்தநயம் மிகுந்த கவிதை களையும் எழுதினார் பிச்சமூர்த்தி. இந்தக் காலகட்டக் கவிதைகள், மரபுக்கவிதை களின் பாதிப்புக்குட்பட்ட பிச்சமூர்த்தியை நமக்குக் காட்டுகின்றன[19] என ராஜமார் தாண்டன் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

புதுமைப்பித்தன் படைப்புகள் மணிக்கொடியிலும் ஊழியனிலும் வெளிவந்து பலராலும் வாசிக்கவும் விவாதிக்கவும் பட்டன. அதன் வெளிப்பாடாக தான் ஆடையணியாத சிறு குழந்தையைப் போல் என்றும், அவர் இலக்கியம் நம்மைக் கவருகிறது என்றும், "பித்தனின் இலக்கியம் நேர்மையும் சத்தியமும் கொண்டது' "தன் மனதில் தோன்றுவதை முலாம் பூசாமல் அப்படியே தரக்கூடிய திராணி படைத்தவர் புதுமைப்பித்தன்" என்றும் 1951இல் புதுமைப்பித்தன் நினைவு மலரில் எழுதிய சுந்தரராமசாமியின் கணிப்பில் அரை நூற்றாண்டுக்குப் பின்னரும் எந்த மாற்றமும் இல்லை[20] எனக் குறிப்பிடு வதிலிருந்து புதுமைப்பித்தன் எனும் ஆளுமை இருபத்தோராம் நூற்றாண்டிலும் தொடர்வதை நம்மால் காணமுடிகிறது.

புதுக்கவிதைகளில் புதுமுயற்சிகளை மேற்கொண்ட புதுமைப்பித்தன் மரபுக் கவிதையும் நன்கு அறிந்தவர் என்பதற்கு சூழலுக்கு ஏற்ப சில இடங்களில் வெண்பா பாடல்களை எளிய நடையில் பேச்சு வழக்கில் சிலவற்றை எழுதியிருக் கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடல்கள் பெரும்பாலும் தன்னுடைய கோபத்தையும் விமர்சனத்தையும் வெளிக் காட்ட பயன்படுத்தி இருப்பதைக் காண முடிகின்றன. இதற்குச் சான்றாக, புதுமைப்பித்தன் லட்சுமி - சரஸ்வதி தொடர்பான படத்திற்காக கதை எழுதியதற்குப் பணம் முழுதும் வராத நிலையில் மதுரை ஹோட்டலில் நீண்ட நேரம் காத்திருந்து விட்டு அங்கே விட்டு வந்த பாடல் பற்றிக் குறிப்பிடும் ரகுநாதன்[21]

வருகின்றேன் சென்னைக்கு; வந்தவுடனே
கதையைத் தருகின்றேன் ; தவணைச்
சொல்லித்தப்பாதே – உருவான
பாதிக்கதை இங்கே, பஞ்சணையின்
கீழிருக்கு ; மீதிக்கதை அங்கே வந்து!

எனக் கூறியிருப்பதிலிருந்து அவரது பொருளாதார நெருக்கடியும் பட நிறுவனமும் அக்கதைக்கான தொகையைச் செலுத்தாமல் கதையையும் பயன்படுத்தி கொள்ளாமல் இருந்ததையும் நம்மால் அறியமுடிகிறது. தான் இறந்து விட்டால் எதிரிகள் எப்படி மகிழ்ச்சி அடைவார்கள் எனக் கருதி, அந்த வேளையில் புதுமைப் பித்தனின் நண்பர் ஒருவர் இந்தப் போலி களின் கூத்தைக் கண்டு வயிறெரிந்து, அவர்களைப் பார்த்துப் பாடுவதாக, புதுமைப்பித்தனே பாடிய பாட்டு,

திருச்சிக்கு என்றான்;
தென்திசைக்கே
சென்றுவிட்டான்
கிரிச்சிச் சடாச் சத்தம்
கேட்டாயோ? – உரிச்சி
வச்ச மடையா! வக்கு அத்த
மடையா! எச்சிற் காசு
மடையா போடா!

என எழுதிச் செல்வதைக் காணலாம். இதன் ஊடாகப் படைப்புலகில் புதுமைப் பித்தனுக்கு இருந்த எதிர்வினைகளை நம்மால் அறிந்து கொள்ளமுடிகிறது. இதன் ஊடாகப் படைப்புலகில் புதுமைப் பித்தன் மேற்கொண்ட கவிதை முயற்சி களும் அதற்கான காரணங்களையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

கதைகளில் கவித்துவம்

மணிக்கொடி எழுத்தாளர்களில் மாறுபட்ட சிந்தனை கொண்ட புதுமைப்பித்தன் சிறுகதை மர்மங்கள் பலவற்றையும் நன்கு அறிந்துள்ளவர் என்றே சொல்லலாம். புதுமைப்பித்தனின் கதைகளுக்கிடையே திரியும்போது ஒரு கவி உலகிலே திரிகிற உணர்ச்சி வருகிறது. இவருடைய கதை ஒவ்வொன்றும் ஒரு தனி அனுபவ முத்திரை பெற்றிருக்கிறது. ஒவ்வொன்றிலும் உண்மையின் நாதம் ஒலிக்கிறது.

ஒரு கவி உள்ளம் - சோகத்தினால் சாம்பிய கவி உள்ளம் வாழ்க்கை முட்களில் விழுந்து ரத்தம் கக்குகிற உள்ளம் கதையின் மூலம் பேசுகிறது[22] எனச் சுந்தர ராமசாமி நுட்பமாய் குறிப்பிடுவதைக் காணலாம். இதற்கு அடிப்படை காரணமாக இருந்தது அவரது குடும்பப் பின்னணியும் அதில் பெற்ற அனுபவமும் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது வாழ்வியலைப் பற்றிக் குறிப்பிடும் போது,

புதுமைப்பித்தன் ஒரு மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தவர். தாயைச் சிறுவயதில் இழந்த இவரது இளமைக் காலம் சோதனைகள் நிறைந்தது; மனவடுக்கள் கொண்டது. சிடுக்காய்ப் போய் இவருக்கும் இவருடைய தந்தைக்குமான உறவு, இவருடைய திருமணத்திற்குப் பின் அறுந்துபோகிறது. மனமொப்பும் இலக்கியப் பணியை வாழ்வின் நோக்கமாகத் தொடர இவருக்குச் சந்தர்ப்பம் இல்லை. எழுத்துத் தொழில் கலைஞனுக்கு வருமானமற்றது. வருமானமற்றது என்பதால் சமூக மதிப்பு அற்றது. குடும்பத்தினரால் அலட்சியப் படுத்தப்படுவது. பிழைப்பை முன்னிட்டுச் சென்னை செல்லும் புதுமைப்பித்தன் சொந்த மண்ணிலிருந்து வேரொடு பிடுங்கி எறியப்பட்ட வேதனைக்கு ஆளாகியுள்ளதை இவருடைய கதைகள் வெளிப்படுத்துகின்றன எனச் சுந்தர ராமசாமி குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. இப்பின்புலத்தில் மனைவியை நீண்ட காலம் பிரிந்திருந்த புதுமைப்பித்தன் தன் கதைகள் அதனை உணர்வுப் பூர்வமான தாகவும் கவித்துவமானதாகவும் வெளிப் படுத்துவதை, 'அவளை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டால் வாழ்க்கை எவ்வளவு இன்பமாக இருக்கும்! இலட்சியத்திற்கு அவள் எவ்வளவு பெரும் ஊக்கமாக இருப்பாள். மனிதப் புழுக்களே இல்லாத, மனிதக் கட்டுப் பாடற்ற, மனித நாகரிகம் என்ற துர்நாற்றம் வீசாத கானகத்தில் வாழ்க்கை யையே ஓர் இன்பப் பெருங்கனவாகக் கழித்தால் என்ன?'[23] கல்யாணி என்ற கதையில் வெளிப்படுவதைக் காணலாம். சாப விமோசனத்தில்,

'பதுமையின் கண்களிலே ஒரு சோகம்- சொல்லில் அடைபடாத சோகம் - மிதந்து, பார்க்கிறவர்களின் வெறும் தசை ஆசையான காமத்தைக் கொன்று அவர் களையும் சோகத்தில் ஆழ்த்தியது. அது சிற்பியின் அபூர்வக்கனவு அன்று. சாபத்தின் விளைவு. அவள்தான் அகலிகை.'[24] எனக் கவித்துவமாக அறிமுகப்படுத்துவதைக் காணமுடிகிறது. கவந்தனும் காமனும் எனும் மற்றொரு கதையில்,

'டிராம் வண்டிகளின்
கணகணவென்ற ஓலம்,
ஒருவேளை
இது நாகரிக யக்ஷனின் வெற்றிச்
சிரிப்போ என்னவோ!

பெண்களின் பல் வரிசைக்கு முத்துக் கோத்தாற் போல் என்கிறார்கள். இந்த வரிசையான மின்சார விளக்குகளுக்கு உபமானமாகத் தேவலோகத்திலும் இவ்வளவு பெரிய முத்து கிடையாதே!

புதிதாக வந்தவன்
மலைத்துப் போகலாம்.
உற்சாகப்பட முடியாது.
வெளிச்சம்! வெளிச்சம்!
கண்ணைப் பறிக்கும் வெளிச்சம்!
இதுதான் தெரு மூலை!
இதுதான் மனித நதியின் சுழிப்பு!
இதற்கு உபநதிகள்போல்
பெரிய கட்டடங்களுக்கிடையே
ஒண்டி ஒடுங்கிப் போகும்
ரஸ்தாக்கள்.
இது வேறு உலகம்!'[25]

என நயம்பட உரைப்பதைக் காண முடிகிறது. இவ்வாறு புதுமைப்பித்தனின் கவித்துவத்தையும் அதில் நுட்பமாய் வெளிப்படும் வாழ்வியல் போராட்டத்தையும் அவருடைய கதைகளின் வழியாகவும் நம்மால் அறியமுடிகிறது.

புதுமைப்பித்தன் கதைகளில் எள்ளி நகையாடும் அங்கதம் எப்பொழுதும் இழையோடும் என்று குறிப்பிடும் தமிழண்ணல்[26] 'கதைகளில் ஏதேனும் ஒரு தத்துவம் அல்லது உண்மை பளிச்சிடும். கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் அல்லது பொன்னகரம் என்ற கதை ஏதேனும் ஒன்றைப் படித்தாலே பித்தன் திறமை மனத்திற் பதிந்துவிடும்' என்கிறார். புதுமைப்பித்தனின் நடையில் அவருடைய சுயரூபம் மிளிர்கின்றது. தமக்கென்று ஒரு நடை வகுத்துக் கொண்டார் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. நடை என்பது எழுது வோனின் சுயரூப ஒலி என்ற உண்மையை இவரிடம் நாம் பார்க்க முடிவதாக[27] ரா.தேசிகன் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

புதுமைப்பித்தன் தம் கதைகளுக்கான கருவைக் கவிதைகளில் இருந்தே பெற்றார் என்பதை, 'பொன்னகரம்' என்ற கதைக்கு அடியெடுத்துக் கொடுத்தவரே பாரதியார் தான். "கற்பு கற்பு என்று கதைக்கிறீர்கள், இது தானய்யா பொன்னகரம்!" என்று கதையை முடிக்கிறாரே, அதுவே பாரதியின் எதிரொலிதான். இதனைப்,

பேணுமொரு காதலினைக்
கருதியன்றோ
பெண்மக்கள் கற்புநிலை
பிறழுகின்றார்;
காணுகின்ற காட்சியெல்லாம்
மறைத்துவைத்துக்
கற்பு கற்பு என்று உலகோர்
கதைக்கின்றாரே'

என்ற பாரதியின் அடிகள்தான் 'பொன்னகரம்' கதைக்கான தோற்று வாயும் விளக்கமும் என்பதை நன்கு அறியலாம். இதேபோல் 'துன்பக் கேணி' என்ற அவரது நெடுங்கதைக்கு அடியெடுத்துக் கொடுத்ததும் பாரதியின் 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாட்டுத்தான். "துன்பக் கேணியிலே எங்கள் பெண்கள் அழுங்குரல் மீட்டும் உரையாயோ?" என்று பாரதி கேட்டாரே, அதற்குப் பதில் எழுதுவதுபோலத்தான் கரும்புத் தோட்டத்துக்குப் பதிலாக, தேயிலைத் தோட்டத்தைக் களமாக்கி, 'துன்பக்கேணி' என்ற கதையில் தமிழ்நாட்டுப் பெண்கள் பட்ட துயரைக் கூறினார்[28] எனச் சுந்தர ராமசாமி மற்றும் ரகுநாதன் ஆகியோர் எடுத்துக் காட்டியிருப்பதைக் காணமுடிகின்றது.

புதுமைப்பித்தன் கதைகளை மதிப்பிடும் க.நா.சு, 'கதை சொல்லும் மேன்மையும் சொந்தக் கற்பனை ஆட்சியும் புதுமைப்பித்தனுக்குக் கை வந்திருப்பது போல தமிழில், இந்த நூற்றாண்டில், வேறு ஒருவருக்கும் இருந்ததில்லை என்பது சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் நிரூபிக்கப்பட்டு விட்ட விஷயம்'[29] என்கிறார். இது போலவே, எழுத்து நடையில் லகுவில் சிக்காது நழுவும் விஷயங்களையும்

இழுத்துப் பிடித்துக் கொண்டு வந்து அற்புதமான சொல்லாட்சியினால் தமது வசன கதிக்குள் சிறைப்படுத்தும் அசுர சாதனை புதுமைப்பித்தன் ஒருவரிடம்தான் இருக்கிறது 30 என ரகுநாதன் மதிப்பிடுவதும் இங்கே கவனிக்கத்தக்கது.

கடிதமும் கவிநடையும்

புதுமைப்பித்தனின் கவிதைகள், கதைகள் மட்டுமின்றி அவர் தம் மனைவி கமலாம்பாளுக்கு எழுதிய கடிதங்களிலும் கவித்துவமான வரிகளைக் காண முடிகிறது. 'எனது ஆருயிர் கண்ணாளுக்கு' என்றே அவர் பல கடிதங்களில் குறிப்பிடு வதைக் காணமுடிகிறது. அவ்வாறு எழுதிய கடிதத்தில்,

'அன்பில் காமம் ஒரு படி
காமம் இல்லாமல் ஒருவரைக்
காதலிக்க முடியும் என்று
நீ ஒருமுறை சொல்லிக்
கொண்டிருந்த விஷயத்தின்
உண்மை இப்பொழுதுதான்
எனக்குப் புலப்படுகிறது.
உனது இளம் மனதிற்கு
அந்தக் காலத்திலேயே
தெளிவாகத் தெரிந்த உண்மை
புலப்பட எனக்கு இந்த அனுபவம்
வேண்டியிருந்தது'[31]

எனக் குறிப்பிடுவதைக் காணலாம். மேலும் மற்றொரு கடிதத்தில், 'துன்பத்தை நாம் எதிர்த்து நின்றால்தான் தப்ப முடியும். மனதிற்குப் புதுபலம் கொடுக்கும் ஒரு உதாரணம் சொல்லுகிறேன். சமுத்திரத்தில் குளிக்கப் போயிருக்கிறோம் என்று வைத்துக் கொள். அலைமேல் அலையாக வருகிறது. பெரிய அலையைக்கண்டு கரையை நோக்கி ஓட முயலுகிறவன் குப்புறத் தள்ளப்பட்டு, மூக்கிலும், கண்ணிலும், மணலும் உப்புத்தண்ணீரும் செலுத்தப்படுகிறான். தைரியமிருந்தால் அலையை எதிரேற்றித் தாவுகிறது. அல்லது குனிந்து கொடுத்து, அது நம்மீது சென்று விடும்படி மூழ்கி நிற்கிறது'32 என்று புதுமைப்பித்தன் தன் மனைவிக்கு ஆறுதலையும் நம்பிக்கையும் வெளிப் படுத்தும் வகையில் கவித்துவமான வரிகளில் கடிதங்கள் எழுதியிருப்பதைக் காணமுடிகிறது.

இக்கடிதங்களைப் பற்றிக் குறிப்பிடும் சுந்தர ராமசாமி[33] தன் கணவரின் கடிதங்களைச் சுமார் அறுபது வருடங்கள் பாதுகாத்து வந்துள்ள கமலாம்பாளையும் இவற்றைத் தொகுத்துத் தந்திருக்கும் இளையபாரதியையும் பாராட்ட வேண்டும். புதுமைப்பித்தன் தன் மனைவிக்கு எழுதியுள்ள எல்லாக் கடிதங்களையும் அச்சேற்றுவது சாத்திய மில்லை. ஆனால் ரகுநாதனின் 'புதுமைப் பித்தன் வரலாற்றில் குடும்பமும் குழந்தையும் என்ற அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ள, 1943இல் அவர் தன் மனைவிக்கு எழுதிய கடிதம் இதில் சேர்க்கப்படாதது விளங்கவில்லை எனக் குறிப்பிடுகிறார். இதிலிருந்து புதுமைப் பித்தனின் உணர்வுப் பூர்வமான சில கடிதங்கள் அச்சில் வெளிவரவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

இறுதிக் காலமும் இலக்கியமும்

இளம் வயதிலேயே டி.பி.க்கு இரையாகி மரணப் படுக்கையில் படுத்துக் கிடந்த புதுமைப்பித்தனிடமிருந்து தனக்கு ஒரு குறிப்பு வந்ததாகக் கூறும் எஸ். சிதம்பரம், 'ஒளி அணைந்து வருகிறது. நீ வந்தால், ஒரு வேளை தூண்டி விடுவாய். கொஞ்ச நேரமாவது வெளிச்சமாக இருக்கும். வா' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கடிதம் நெஞ்சை என்னவோ செய்தது. அவசரமாக ஓடினேன். புதுமைப்பித்தன் படுக்கையில் மூடிப் புதைத்துக்கொண்டு படுத்திருந்தார். என்னைக் கண்டதும். 'வாடா, ராசா' தமிழுலக இலக்கிய மேதை கிடக்கிற கிடையைப் பார்த்தியா?"34 என்று புதுமைப்பித்தன் கூறுவதிலிருந்து படைப்புலகில் தனக்கான அங்கீகாரத்தைப் பிறரிடம் எதிர்பாராமல் தன்னைத்தானே இலக்கிய மேதையாக அறிவித்துக் கொண்டதற்கு அவரது படைப்புகளே சான்று. உண்மையில் பாரதிக்குப் பிறகு பன்முக தன்மை கொண்ட (பாரதிக்கு நிகரான) ஆளுமையாக கொண்டாட படவேண்டியவர் புதுமைப்பித்தன் என்பதில் ஐயமில்லை. காலம் கடந்தும் பாரதியின் படைப்புகள் முன்னெடுக்கப் படுவதைப் போல புதுமைப்பித்தனின் படைப்புகளும் பல்வேறு வகையில் (பதிப்புகள், ஆய்வுகள், விமர்சனங்கள்) முன்னெடுக்கப் பட்டு வருவதும்/ வரவேண்டியதும் அவசியமாகும்.

"இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்குப் புதுமையும் புத்துயிரும் கொடுத்தவர் பாரதி. தமிழ் வசனத்துக்குப் புதுமையும் புத்துயிரும் கொடுத்தவர் புதுமைப்பித்தன். ஆனால் பாரதிக்கு முன் தமிழில் மிகச்சிறந்த கவிச் செல்வங்கள் இருந்தன. புதுமைப் பித்தனுக்கு முன் மிகச்சிறந்த வசன செல்வங்கள் இருந்தன எனச் சொல்ல முடியாது. புதுமைப் பித்தனின் இலக்கியம் தமிழ் நாட்டு வசன இலக்கியத்தின் சொத்து. அவர் வசன இலக்கிய மன்னர்"[35] என்று கு.அழகிரி சாமி கூறுவது குறிப்பிடத்தக்கது. சுந்தர ராமசாமி தன் கவிதை ஒன்றில்,

புதுமைப்பித்தனை அறிவீர்களா என்று
கேட்டேன் ஆஹா அறிவேன் என்றவர்.

சில திரைப்படப் பாடல்களை
முனகியவாறு புலமைப்பித்தன்
அற்புதமானவர் என்றார்
உருக்கம் தணிய
வெகு நேரம் ஆயிற்று.

என வரும் இக்கவிதையில்,

'பாரதியின் வீரியம்
பற்றிய நினைப்பு
புதுமைப்பித்தன்
மீது அந்தப் பிரியம்'[36]

என இரு படைப்பாளிகளை மட்டுமே அக்கவிதையில் சுட்டிச் செல்வதையும் புதுமைப்பித்தனை அறியாதவர்கள் இருப்பதை வருத்தத் தோடும் வெளிப் படுத்துவதைக் காணலாம். ஆனால் தி.க.சிவசங்கரன், மகாகவி பாரதியோடு புதுமைப்பித்தனைச் சரிசமமாக ஒப்பிடுவது எவ்வளவு வேடிக்கையான விஷயமோ, அவ்வளவு வினோதமான விஷயம் இது.

எந்த ஆசிரியனை உரைகல்லில் ஏற்றினாலும், உருவத்தையும் உள்ளடக்கத்தையும் சேர்த்துதான் மதிப்பிட வேண்டும்[37] எனக் குறிப்பிடுகிறார். பாரதியைக் கொண்டாடக் கூடிய தமிழ்ச் சமூகத்தில் அவனைக் கடந்து தேர்ந்த படைப்பாளியான புதுமைப் பித்தனுக்கு வீரவணக்கம் செலுத்துவதையோ கொண்டாடுவதையோ தவிர்த்து விமர்சன நோக்கில் அணுக வேண்டும் என்ற கருத்தையே முன் வைக்கின்றார். தமிழ்ப் படைப்பாளிகளை உலகளவில் கொண்டு செல்வதும் அவர்களது படைப்பு செயல்பாட்டின் மேன்மையை வெளிப்படுத்துவதும் கொண்டாடுவதும் கூட நம்மை போன்ற ஆய்வாளர்களின் கடமை என்றே கருதுகிறேன்.

முடிவாக

தமிழ்ப்படைப்புலகில்மட்டுமல்லாமல் உலகளாவிய படைப்பு தளத்தில் தனக்கென்று ஒரு தனித்துவத்தை கொண்டிருந்த புதுமைப்பித்தனைப் பற்றி ரகுநாதன் குறிப்பிடும்போது, இலக்கியத் திருடனின் பேய்க் கனவு: புத்தகாசிரியர்களுக்கு ஒட்டக்கூத்தன்; வலுவற்றுக் கிடந்த தமிழ் வசனத்துக்கு வாலிபம் தந்த சஞ்சீவி; உலக இலக்கிய சத் சங்கத்திலே தாமாகவே இடம் பிடித்துக்கொண்ட மேதை; சிறுகதை இலக்கியத்தின் ஆசிய ஜோதி; இளம் எழுத்தாளர்களின் லட்சியம்; யதார்த்தவாதிகளின் முன்னோடி: தமிழ் நாட்டில் எழுதிப் பிழைப்பது என்பது எத்தனை அபாயகரமானது என்பதை தமது உயிரையே பணயம் வைத்துக் காட்டிச் சென்ற உதாரணம்- இவர்தான் புதுமைப் பித்தன்![38] எனக் கூறியிருப்பது முற்றிலும் உண்மையே.

எழுத்தையே முதன்மையாகக் கொண்டு பாரதி எப்படி வாழ்ந்தானோ அதுபோலவே புதுமைப்பித்தனும் வாழ்ந்தான். பாரதியின் தாக்கம் புதுமைப்பித்தனிடம் இருப்பதை அவரது படைப்பில் வெளிப்படும் அழகியல் கூறுகளை எடுத்துக் கொண்டால் புதுமைப்பித்தனைப் பாரதிக்கு இணையான அழகியல்தன்மை கொண்டவர் என்று சொல்லலாம். தமிழ்ப் படைப்புலகில் பல புதிய முயற்சிகளை மேற்கொண்ட புதுமைப் பித்தனின் படைப்புகள் வாசிப்பவர்களுக்குப் பல புதிய வாயில்களைத் திறக்கிறது எனலாம். அவ்வகையில் புதுமைப்பித்தனின் பன்முக படைப் பாளுமை குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளவேண்டும் என்பதும் உலகளவில் அவரது படைப்புகளைக் கொண்டு சேர்ப்பதும் நம் கடமையாகும்.

அடிக்குறிப்புகள்

1. ஜெயம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.323
2. ரகுநாதன், புதுமைப்பித்தன் கவிதைகள், ப.34
3. ப.கிருஷ்ணசாமி, புதுமைப்பித்தன் இலக்கிய தடம், ப. 108
4. ரகுநாதன், புதுமைப்பித்தன் வரலாறு, ப. 191

5. எஸ்.சிதம்பரம், கடைசி நாட்களில் புதுமைப்பித்தன், ப. 29

6. எஸ்.சிதம்பரம், கடைசி நாட்களில் புதுமைப்பித்தன், ப. 5

7. ரகுநாதன், புதுமைப்பித்தன் கவிதைகள், ப.40

8. ப.கிருஷ்ணசாமி, புதுமைப்பித்தன் இலக்கிய தடம், 66

9. . ரகுநாதன், புதுமைப்பித்தன் வரலாறு, ப.179

10. சுந்தர ராமசாமி, புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம், ப.138

11. ப.கிருஷ்ணசாமி, புதுமைப்பித்தன் இலக்கிய தடம், ப.46

12. ரகுநாதன், புதுமைப்பித்தன் கவிதைகள், ப. 11

13. ப.கிருஷ்ணசாமி, புதுமைப்பித்தன் இலக்கிய தடம், ப.66

14. பிரகாசம், சிறகு, இணைய கட்டுரை, 2007

15. சுந்தர ராமசாமி, புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம், ப.145

16. ரகுநாதன், புதுமைப்பித்தன் வரலாறு, ப.241

17. ந.சுப்பு ரெட்டியார், புதுக்கவிதை போக்கும் நோக்கும், ப.17

18. மஞ்சுளா தேவி, மானுடம் பாடிய வானம்பாடி, ப.8

19. ராஜமார்தாண்டன் ,புதுக்கவிதை வரலாறு, ப.38

20. சுந்தர ராமசாமி, புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம், ப.12

21. ரகுநாதன் , புதுமைப்பித்தன் வரலாறு, ப.71

22. சுந்தர ராமசாமி, புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம், ப.77

23. ஆ.இரா.வேங்கடாசலபதி, புதுமைப்பித்தன் கதைகள், ப.277

24. ஆ.இரா.வேங்கடாசலபதி, புதுமைப்பித்தன் கதைகள், ப.535

25. ஆ.இரா.வேங்கடாசலபதி, புதுமைப்பித்தன் கதைகள், ப.108

26. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப. 480

27. ப.கிருஷ்ணசாமி, புதுமைப்பித்தன் இலக்கிய தடம், ப.75

28. சுந்தர ராமசாமி, புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம், ப.144

29. சுந்தர ராமசாமி, புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம், ப.78

30. ரகுநாதன், புதுமைப்பித்தன் வரலாறு, ப.194

31. இளையபாரதி, கண்மணி கமலாவுக்கு.. புதுமைப்பித்தன், ப.31

32. இளையபாரதி, கண்மணி கமலாவுக்கு.. புதுமைப்பித்தன், ப.47

33. சுந்தர ராமசாமி, புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம், ப.54

34. எஸ்.சிதம்பரம், கடைசி நாட்களில் புதுமைப்பித்தன், ப. 9

35. சுந்தர ராமசாமி, புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம், ப.148

36. சுந்தர ராமசாமி, புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம், ப.105

37. ப.கிருஷ்ணசாமி, புதுமைப்பித்தன் இலக்கிய தடம், ப.172

38. ரகுநாதன் , புதுமைப்பித்தன் வரலாறு, ப. 71

பார்வை நூல்கள்

1. புதுமைப்பித்தன் கவிதைகள் – ரகுநாதன், ஐந்திணைப் பதிப்பகம், பதிப்பு:1991.
2. புதுமைப்பித்தன் கதைகள் – ஆ.இரா. வேங்கடாசலபதி, காலச்சுவடு பதிப்பகம், பதிப்பு: 2006.
3. புதுமைப்பித்தன் வரலாறு – ரகுநாதன், என்.சி.பி.எச், பதிப்பகம், பதிப்பு:1991
4. புதுமைப்பித்தன்: மரபை மீறும் ஆவேசம் – சுந்தர ராமசாமி, காலச்சுவடு பதிப்பகம், பதிப்பு: 2006.
5. கண்மணி கமலாவுக்கு.. புதுமைப்பித்தன் – இளையபாரதி, புதுமைப்பித்தன் பதிப்பகம், பதிப்பு: 2000.
6. கடைசி நாட்களில் புதுமைப்பித்தன் – எஸ். சிதம்பரம், என்.சி.பி.எச், பதிப்பகம், 2005.
7. புதுமைப்பித்தன் நாடகங்கள் – ....., மீனாட்சி புத்தக நிலையம், பதிப்பு:1978.
8. புதுமைப்பித்தன் இலக்கிய தடம் – ப.கிருஷ்ணசாமி, காவ்யா பதிப்பகம், பதிப்பு:1995.
9. புதுக்கவிதை வரலாறு – ராஜமார்த் தாண்டன், யுனைடெட் ரைட்டர்ஸ் பதிப்பகம், பதிப்பு: 2003.
10. புதுக்கவிதை போக்கும் நோக்கும் – ந.சுப்பு ரெட்டியார், பாரி நிலையம், பதிப்பு: 1983.
11. எது புதுக்கவிதை – சுபாசு, சுபாலிகா பதிப்பகம், பதிப்பு: 2003.
12. மானுடம் பாடிய வானம்பாடி – மஞ்சுளா தேவி, காவ்யா பதிப்பகம், பதிப்பு:2004.
13. முன்னுரையும் பின்னுரையும் – பாலா, மீரா பதிப்பகம், பதிப்பு:1995.
14. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு – தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், பதிப்பு:2000.
15. தமிழ் இலக்கிய வரலாறு – ஜெயம், ஜனகா பதிப்பகம், பதிப்பு: 2016.
16. புதுமைப்பித்தன் கவிதைகள்(கட்டுரை) – பிரகாசம், சிறகு, இணையப் பக்கம், 2017.

சோகவனம் சிறுகதை முன்னிறுத்தும் சூழல் மாற்றமும் உயிர்களின் வாழ்வியல் மாற்றமும்

சு.கா. சுந்தரவதனி
முனைவர்பட்ட ஆய்வாளர்
எம்.ஜி.ஆர். கல்லூரி, ஓசூர் – 635 109

ஆய்வுச் சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியவாதிகளில் சோ.தர்மன் மிகக் குறிப்பிடத்தக்க எழுத்தாளராவார். இவர் கவிதை, சிறுகதை, புதினம், கட்டுரை முதலான இலக்கிய வடிவங்களில் தம் கரிசல் பகுதி சார்ந்த மக்களின் வாழ்வியலை அவர்களின் மொழியோடு பதிவு செய்தவர். இவர் தமிழ் மண்ணின் மீதும், பண்பாட்டின் மீதும் மிகுந்த ஈடுபாடும், அவற்றைப் பாதுகாப்பதில் ஆர்வமும் கொண்டவர். இந்நிலையில், இவர் இயற்றிய சிறுகதைகளில் "சோகவனம்" என்னும் சிறுகதைக் குறிப்பிடத்தக்க வரவேற்பைப் பெற்ற சிறுகதையாகும். இக்கதையில், தமிழக மண் சார்ந்து ஏற்படும் மாற்றம், காடுகளின் அழிப்பின் மூலம் உலக உயிர்களுக்கு ஏற்படும் அழிவை எவ்வாறு பதிவு செய்திருக்கிறார்? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

புதினம், புனைவு, கரிசல், சோகவனம், சருகுகள், நுட்பம், இரைகள்.

தமிழ் இலக்கிய வடிவங்களும் மொழியும்

தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு என்பது மக்களின் உணர்வை எவ்வித இலக்கண கட்டுப்பாடின்றி யதார்த்தமாகவும், புனைவாகவும் பதிவு செய்வதற்கான ஒரு பொற்காலம் எனலாம். இக்காலச் சூழலில் அறிமுகமான இலக்கிய வகைமைகளில் புதுக்கவிதை, நாடகம், சிறுகதை, நாவல் எனும் புதினம் முதலான இலக்கிய வகைகள் குறிப்பிடத்தக்க இலக்கிய வகைகளாகும். இந்த இலக்கிய வகைகளின் மூலம் மக்களின் வாழ்க்கைமுறையை இயல்பான போக்கில் தேவைக்கேற்ற வருணனைகளோடு பதிவுசெய்ததன் மூலம் மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் அடையாளப்படுத்த எளிதான செயலாக உருவம் பெற்றது. இந்நிலையில், காலந்தோறும் பல்வேறு இலக்கியவாதிகள் உருவாகி இனம் சார்ந்தும், வட்டாரம் சார்ந்தும் தங்களின் அனுபவங்களையும், மக்களின் வாழ்வியலையும் நவீன இலக்கிய வடிவங்களில் பதிவு செய்தனர்.

தமிழ் இலக்கிய உருவாக்கத்தில் ஒரு குறிப்பிட்ட வட்டாரம் சார்ந்த இலக்கியவாதிகளும் இலக்கியங்களும் உருவானது குறிப்பிடத்தக்கது. இவ் வாறான உருவாக்கத்தை நோக்கும் பொழுது, கரிசல் வட்டாரம் எனும் கோவில்பட்டியை மையமாகக் கொண்டு உருவான இலக்கியவாதிகளும் இலக்கியங்களும் தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவமுடையது. கி.ரா. எனும் கி.ராஜநாராயணன், தேவதச்சன், பூமணி, கௌரி சங்கர், கோணங்கி, தமிழ்ச் செல்வன் முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களால் கரிசல் மொழியும், கரிசல் மக்களின் பண்பாடும் இலக்கிய வடிவங்களில் வரலாறாகப் பதிவு பெற்றன எனலாம்.

இத்தகைய செயல்பாட்டிற்கு உரைநடை என்னும் மொழி வடிவம் முதன்மைப் பெற்றது எனலாம். மொழியின் இன்றியமையாமையைப் பற்றி ஆ.தன்ஞ்செயன் அவர்கள் குறிப்பிடும்பொழுது,

"ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகளில் மொழி என்பது மிகவும் வலிமையான கூறாகச் செயல்படுவது. வெறும் தகவல் தொடர்புச் சாதனம் என்பதைக் கடந்துக் குறிப்பிட்ட இனம், அதன் சமூக ஒழுங்கமைப்பு, சிந்தனை முறை, அறிதல்சார் பார்வை உலகக் கண்ணோட்டம் என்பன உள்ளிட்ட அனைத்துத் தளங்களிலும் மொழி தவிர்க்க முடியாத அளவில் ஆதிக்கம் செலுத்தக் கூடியது"[1] (சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலும், முன்னுரை ப.1)

என்கிறார். இதன் மூலம் மொழி என்பது ஒரு கருத்து நிலைக்கு எத்தகைய இன்றியமையாதது என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

சோ.தர்மன் அவர்களின் படைப்பு மொழியும் கருத்தியலும்

கி.ராஜநாராயணன் அவர்களின் இலக்கியப் படைப்புகளால் ஈர்க்கப்பட்டு, அவருடைய மொழிநடையை, கருத்து வெளிப்பாட்டு நெறியைப் பின்பற்றி 1980இல் இலக்கிய உலகிற்கு வெளிப் பட்டவர் சோ. தர்மன். கி.ராஜநாரா யணன் எவ்வாறு கரிசல் மண் மணத் துடனும், அம்மக்களின் மொழியை பின்பற்றியும் இலக்கியங்களைப் படைத் தாரோ அதேபோன்று தொடக்கக்கால இலக்கியங்களை சோ.தர்மன் அவர்கள் படைத்தார். இவரின் மொழியைப் பற்றியும், படைப்பின் கருத்தைப் பற்றியும் தமிழ் இந்து நாளிதழ் "கண்மாயின் ஈரம் கொண்ட எழுத்தாளர்"2 என்று பதிவிட்டது. அதன்பிறகு ஜெயமோகன், அரங்கநாதன் உள்ளிட்ட பல எழுத்தாளர்களின் எழுத்தின் வாசிப்பால் தனக்கான ஒரு எழுத்துமொழியை அதாவது புனைவு மொழியை உருவாக்கிக் கொண்டார். அதன் அடிப்படையில் ஈரம், சோகவனம், வனக்குமாரன், அன்பின் சிப்பி உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும், கூகை, சூல், தூர்வை உள்ளிட்ட புதினங்களையும்,

கட்டுரைகளையும் படைத்தப் பெருமை சோ.தர்மன் அவர்களுக்கு உண்டு.

சோகவனம் கதைக்கரு

சோ.தர்மனின் சிறுகதைப் படைப்புகளில் சோகவனம் எனும் சிறுகதைத் தொகுப்பு, தமிழ் இலக்கிய வாசிப்பில் மிக முக்கிய கருத்தியல் கொண்ட படைப்பாக வாசகர்களால் கொண்டாடப்பட்டது. குறிப்பாக, சோகவனம் என்னும் சிறுகதை, மிகப் பெரும் தாக்கத்தை உருவாக்கியது எனலாம். ஏனெனில், இக்கதையில் இயல்பான மொழி நடையும், காலத்தின் தேவைக்கேற்ற, அவசியமான கருத்தை மையமாகக் கொண்டும் உருவாக்கப் பட்டதே காரணம் எனலாம்.

ஆலைத் தொழிலாளியாக இருந்து, தற்பொழுது முழுநேர எழுத்தாளராகவும் பகுதிநேர விவசாயியாகவும் இருக்கும் சோ. தர்மன் அவர்கள், தன் படைப்புக்கும் தான் வாழும் வாழ்க்கைக்கும் இடைவெளியற்ற போக்கைக் கொண்டவராக உள்ளார். அவற்றின் அடையாளமாகத்தான் சோகவனம் சிறுகதையும் அமைந்துள்ளது. இத்தகைய இலக்கியங்களின் மூலம் மனிதர்களின், வன உயிர்களின் வாழ்வாதரத்தை படைக்கும் யதார்த்தப் போக்கை,

> ''மனித நேயத்தையும் யதார்த் தத்தையும் அடிப்படையாகக் கொண்ட சமுதாய வளர்ச்சியில் அக்கறையும் பொறுப்பும் உடைய புதுமைப் படைப்பாளிகளின் தொகை தமிழகத்தில் வளர்ந்து வருகிறது. மக்களிடம் அன்பு செலுத்தவும் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும் அவர்களது போராட்டத்தில் தமது கலைப் படைப்புகளை ஒரு கருவியாகப் பயன்படுத்தவும் இந்தப் படைப்பாளிகள் உறுதி பூண்டுள்ளனர்''3 (ஆறு.இராம நாதன், குமுறல்,முன்னுரை)

என்னும் தி.க. சிவசங்கரன் அவர்கிளின் எழுத்துக்களின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

சோகவனம் சிறுகதையில் அறிவியல் தொழில் நுட்பத்தின் காரணமாக எங்கும் தொழிற்சாலைகளும், அந்த தொழிற்சாலைகளுக்கான சாலை அமைப்பும், வாகன அதிகரிப்பும், மக்களின் துரிதமான வாழ்க்கைச் சூழலும் இணைந்து காடுகளை அழிந்து நாடாக்கும் சூழலால் உலக உயிர்களும் அழிவும் மாற்றமும் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை இரண்டு கிளிகளின் துன்ப நிலையோடு ஒப்பிட்டு உணர்த்துவது சோ.தர்மன் அவர்களின் கதைகூறும் நேர்த்தியை வெளிப்படுத்து கிறது.

காடுகளின் அழிப்பினால் விளையும் கிளிகளின் சோகம்

ஓங்கி வளர்ந்து, முதிர்ந்து பல பொந்துகளை உடைய மரங்கள் இருந்த காட்டின் அமைப்பு, தொழில் வளர்ச்சி என்னும் காரணத்தினால் காடுகள் அழிக்கப்பட்டு தொழிச்லைகளின் பெருக்கத்திற்காக மரங்கள் குறைந்து செடிகள் நிறைந்த வனம் இப்போது

செடிகள் குறைந்து கொடிகள் நிறைந்த வனமாயின எனும் கருத்தின் அடிப்படையிலான காடுகளின் அழிப்பை வெளிப்படுத்தும் சோ.தர்மன்,

"மண் விழுங்கும் சரகுகள் கூட உரமாகி உயிர் பெற்று மரமாய்த்தானே வெளிவருகிறது. அப்படியெனில் இந்த மரங்கள் எங்கே போய் ஒளிந்து கொண்டன"

"மூத்த மரங்களைக் காணவே யில்லை"

"மரங்களற்று செடிகளாகிப் போன வனங்கள். பல்வேறு மலர்களின் சௌந்தர்ய நிறங்களும் மணங்களும் அற்ற வனம். பழங்களின் வாசனை இல்லாத வனம். கூட்டங் கூட்டமாய் திரியும் காட்டு மிருகங்களற்ற வனம்"

என்று பல்வேறு கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். இந்த எழுத்துகளுக்குப் பின் உள்ள கணமான மனமும், இயற்கையின் மீது கொண்ட ஈடுபாடும், இயற்கையைப் பாதுகாக்கத் துடிக்கும் மனமும் நம் கண் முன் தெரிகிறது. தொழில் நுட்பங்கள் உலக உயிர்களின் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்தும் தன்மையை பக்தவத்சல பாரதி அவர்கள் விளக்கும் பொழுது,

"கருவிகளின் தொழில்நுட்பமும் பயன்பாடும் வாழ்வியல் முறையில் வேறுபாடுகளைத் தோற்றுவித்தன."4

என்கிறார். இக்கருத்தின் அடிப்படைப் புரிதலோடு சோ.தர்மன் தன் சிறுகதையில் குறிப்பிடும்,

"தேசிய நெடுஞ்சாலை உருவாக்கம்"

"ஓயாமல் கேட்கும் ஹாரன் சத்தும்"

"சாலையோர கேண்டீன் உருவாக்கம்"

"புகை கக்கும் குழாய்"

"ஸ்டியோ சினிமாப் பாடல்"

"காற்றில் பரவிவரும் விசித்திரமான பிரியாணி வாசனை"

"வாகனங்கள் கக்கிச் செல்லும் டிசல், பெட்ரோல் புகை நாற்றம்"

"ஒர்க்ஷாப்பில் கழிவுகள் சேர்ந்து எண்ணெய்ப் படலம் மிதக்கும்

கருமைநிறத் தண்ணீரின் நாற்றம்"

"சாலையோர கேன்டீனிலிருந்து வெளியேறி கிடங்கில் பெருகிக் கிடந்த மீன் செதில்கள் மிதக்கும் தண்ணீர்"

"பம்புசெட் கிணற்று நீர் உப்புத் தணிணீர்"

முதலான மாற்றங்கள், புதிய தலைமுறையினரின் வாழ்வியலுக்கான அச்சுறுத்தலாக உள்ளதும். பெண் கிளி தன் இனப்பெருக்கத்திற்கான மரப் பொந்து கிடைக்காததால் ஒற்றைப் பனைமரத்தை தேர்ந்தெடுத்து, நாளடைவில், மேற்கண்ட மாற்றங்களால் கிளிகள் தனக்கான தாய் மொழியை கற்காமலும், கிளி உண்ணும் உணவையும், உண்ணும் முறையையும் அறியாமல் வாகத்தின் ஹாரன் சத்தமே தன்னுடைய மொழியாகிப் போகும் அவல நிலையை எடுத்துக்காட்டுவதன்

மூலம் காடுகளின் அழிவினால் உருவாகும் எதிர்கால ஆபத்தான வாழ்வியலை எழுத்தாளர் பதிவு செய்துள்ளார். அவற்றை,

"தன் குஞ்சுக்கு இரையூட்டும் போது அதன் தாய் பாஷையின் கிகீகீ சத்தத்தைக் குஞ்சுகள் கேட்கவிடாமல் வாகனங்களின் ஹாரன் சத்தம் மேலெழுப்பி அமுக்கியது"

"கிளி பச்சை நிறம் நீங்கி செம்பச்சையாய் வளர்ந்தது"

"கொய்யாய் பழத்தை ஆசையாய் கொண்டு வந்து ஊட்டியது தாய்க்கிளி. பழங்கள் வாசனை அறியாத, ருசியறியாத குஞ்சுக்கிளி தூ வென்று துப்பி உமிழ்ந்தபோது தாய்க்கிளிகள் இரண்டும் கண்ணீர்விட்டு அழுதன"

"கிளிகள் ஹாரன் சத்தத்தையும், மயில்கள் ரயில் வண்டி எழுப்பும் பயங்கரமான ஹாரன் சத்தத்தையும், குயில்கள் ஆலையின் சத்தத்தையும் தம் குரல்களாக்கி கத்துவதால் . பலவிதமான ஹாரன் சத்தம் மட்டும் விடாமல் கேட்டுக் கொண்டே யிருக்கின்றன வனங்களையும் கடந்து"

என்ற மனம் நெகிழ்ச்சியடையும் நிலையிலான வரிகளின் மூலம் தெளிவாக பதிவு செய்துள்ளார் சோ.தர்மன் அவர்கள்.

முடிவுரை

இன்றைய மக்களின் வாழ்வியல் நாகரீகம் என்ற பெயரில் பல்வேறு மாற்றங்களை உருவாக்கிக் கொண்டுள்ளது. இத்தகைய மாற்றங்கள் உலக உயிர்களின் இயல்பான வாழ்வியலை மாற்றம் பெறச் செய்து பெரும் துன்பமயமான வாழ்நிலைக்குச் செலுத்துகிறது. காடுகளில் காற்றைப் போல் இயல்பாக திரிந்து, தன் இனப்பெருக்கத்தை மரப் பொந்துகளில் செய்து, தம் இனிமையான தாய்மொழியை தம் குஞ்சுகளுக்குக் கற்பித்து வாழும் இன்பமான வாழ்க்கை என்பது, காடுகளின் அழிப்பினால் முற்றிலுமாக அழிவதை மிகவும் நுட்பமாக "சோகவனம்" என்னும் சிறுகதை உணர்த்துவதை மேற்கண்ட ஆய்வின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

இன்னொரு தேசிய கீதம் கவிதை நூல் முன்னிறுத்தும் பன்முக அடையாளங்கள்

ம. செந்தில்குமார்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)
அரும்பாக்கம், சென்னை – 600 106.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்று மரபைப் பொறுத்தவரையில் இலக்கண கட்டமைப்பைக் கொண்ட வளமான செவ்விலக்கிய மரபைக் கொண்டது. பதினெட்டாம் நூற்றாண்டுவரை தொடர்ந்து நிலவிய செவ்விலக்கிய மரபு, ஆங்கிலேயர்களின் வரவால் தமிழ்ச் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களில் இலக்கியங்களின் அமைப்பு, உள்ளடக்கப் பொருண்மை முதலானவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும் குறிப்பிடத்தக்க மாற்றங் களாகும். இந்நிலையில், ஆங்கிலேயர்கள் தங்களுடைய சமயம், ஆட்சி, அதிகாரத்தை மட்டும் தமிழகத்தில் பரப்பவில்லை. அவற்றோடு பல புதிய புதிய இலக்கிய வகைகளையும் அறிமுகப்படுத்தினர். அவற்றில் புதுக்கவிதை, சிறுகதை, புதினம், உரைநடை முதலான இலக்கிய வடிவங்கள் குறிப்பிடத்தக்க வடிவங் களாகும். இவற்றில் புதுக்கவிதை வடிவம் தமிழ்ச் சூழலில் பெரும் மாற்றத்தை உருவாக்கியது எனலாம். குறிப்பாக, வானம்பாடி இயக்கத்தின் மூலம் உருவான கவிஞர்களால் உருவான இலக்கியங்களின் தாக்கம் என்பது முதன்மையானது. வானம்பாடி இயக்கத்தைத் தொடர்ந்து உருவான கவிஞர்களில் வைரமுத்து குறிப்பிடத் தக்கவர். இவர் "வைகரை மேகங்கள்" என்னும் கவிதைத் தொகுப்பின் மூலம் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகமான நிலையில் பல்வேறு கவிதைத் தொகுப்புகளையும், புதினங்களையும் தமிழ் மொழிக்கு வழங்கியுள்ளார்.

கவிஞர் வைரமுத்து மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியிட்டக் கவிதைத் தொகுப்பு "இன்னொரு தேசிய கீதம்" என்னும் கவிதைத் தொகுப்பாகும். இத்தொகுப்பில் பல்வேறு கருத்தியல் களைத் தனக்கே உரிய கவிதை நடையில் விவாதித்திருப்பதுச் சிறப்பாகும். இந்நிலையில், இந்நூலில் இடம் பெற்றுள்ள வைரமுத்து அவர்களின் பன்னோக்குத் திறனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

ஏகாதிபத்யம், கருப்பை, தீ தின்றுவிட்ட தென்றல், கலாபம், முதிர்கன்னி.

முன்னுரை

"இன்னொரு தேசிய கீதம்" என்னும் கவிதை நூலில் தன் கவிதைகளின் வலிமையைப் பற்றியும், காதல் உரையாடலையும், முதிர்க்கன்னிகளின் முனகல்களையும், சினிமாவைப் பற்றிய விமர்சனத்தையும், ஆடம்பரத் திருமணங் களின் அவலங்களையும், கலப்பு மணம் குறித்த இன்றைய சமூகப் பார்வை குறித்தும், ஆண்களின் அதிகாரத்துவம் குறித்தும், மகாகவியின் கவித்துவம் குறித்தும், கண்ணதாசனின் இறப்பிற்கான இரங்கல் குறிதும், இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரம் பற்றியும் வலியோடும் வலிமையோடும் கருத்து களை உள்ளடக்கி கவிதைகளைப் படைத்திருப்பது கவிதை இலக்கியத்தின் கவிஞனின் சமூகத்திற்கான பொறுப்பை மெய்ப்பித் திருக்கிறது என்றுதான் கூற வேண்டும். இந்நூல் ஆய்வின் மூலம் சமூகமும் இலக்கியம் ஒன்றுபடும் புள்ளியை உணர்ந்துகொள்ளலாம்.

வைரமுத்து எனும் கவிஞர்

கவிஞர் வைரமுத்து எனும் கவிஞர் என்றதும் ஒரு திரைப்படப் பாடலாசிரியர் என்ற நினைவு வரும். அந்த அளவிற்குத் தேசிய விருதுகள் மூலம் தமிழ்த் திரைப்படங்களுக்குப் பெருமை சேர்த்தவர். திரைப்படங்களுக்கான பாடல் இயற்றுவதில் மட்டுமல்ல, புதுக்கவிதை என்னும் நடையைக் கைவசப்படுத்திய முதன்மையான கவிஞர்களில் வைரமுத்து அவர்களும் ஒருவராவார். இவர் கவிதைக்கான வடிவம் குறித்துக் கூறும்போது,

"தமிழில் யாப்பு என்பது தீர்மானிக்கப்பட்ட ஒரு சப்தக் கூடுதான். தொல்காப்பியச் செய்யுளியலும், யாப்பருங்கலமும், காரிகையும்கூட கவிதையின் எலும்புக் கூடுகள் பற்றிய எடுத்துக்காட்டுகளே தவிர, கவிதையின் ஆவி பற்றியன அல்ல."[1] (திருத்தி எழுதிய தீர்ப்புகள்,முன்னுரை)

"கவிதை எப்போதும் வடிவத்தைப் பற்றி வருத்தப்பட்டதில்லை. தனக்குச் சௌகரியமாய் இருக்கும் எல்லா இடங்களிலும் அது ஆனந்தம் பாடி அமரும். புதுக்கவிதை என்னும் பெயர் தற்காலிகமானதே. கவிதையின் பெயர் கதைதான்" [2](மேலது,முன்னுரை)

என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் யாப்பு என்பது எலும்புக் கூடுகளின் எடுத்துக்காட்டுகள் என்றும், அதற்கான மாற்று வடிவம் தேவைப்படுகிறது என்பதை உணர்த்துவதையும் காணலாம்.

இலக்கியவாதிகள் தங்களுடைய படைப்புகளை ஒரு தலைப் பிரசவத்தைப் போல மொழிகளின் துணையோடு பிரசவிக்கின்றனர். இவற்றில் கவிதை வடிவத்தைத் தேர்ந்தெடுத்து தம் உணர்வுகளை வெளிப்படுத்தும் கவிஞர் களுக்கு கூடுதலான வலி உண்டு. கவிஞர்

வைரமுத்து தன்னுடைய உணர்வின் வெளிப்பாட்டைப் பற்றி,

"இதனால் சகலமானவர்களுக்கும் நன்மை சொல்ல வந்தேன். நல்ல நல்ல செய்திகள் நான் கொணார்ந்தேன். நானும் ஒருவகையில் குடுகுடுப்பைக்காரன்தான். ஆனால் எனது வயதில் நான் எடுத்து வைத்திருப்பது குடுகுடுப்பை அல்ல; என் இருதயம்"[3] (இதனால் சகலமானவர் களுக்கும், முன்னுரை)

என்று கூறுவதிலிருந்து ஒரு கவிதை உருவாக்கத்தின் வலியையும், கவிஞனின் உணர்வையும் புரிந்துகொள்ளலாம். மேலும்,

"ஒரு வாசகனுக்கு அல்லது ரசிகனுக்குத் தெரிவதெல்லாம் வாக்கியங்களின் வாளிப்பு மட்டுந்தான். அந்த வாக்கியத் திற்குப் பின்னால் இருக்கும் வலி, அந்த வாக்கியத்தை வார்த்தவனின் முனகல், தன் உணர்ச்சியை அவன் சித்தரிக்க எத்தனித்த ரணம் இவையாவும் மர்மமாக கிடக்கின்றன"[4] (இன்னொரு தேசிய கீதம், முன்னுரை)

என்ற வார்த்தைகள் ஒரு கவிஞனுக்கும் மொழி தேர்ந்தெடுப்பின் மூலமாக ஒரு கவிதைப் பிறப்புக்கும் இடையிலான வலியை நுட்பமாக உணர்த்துகிறது.

புதுக்கவிதை படைப்பில் வைரமுத்துவின் பங்களிப்பு

இலக்கணக் கட்டமைப்பில்லா உருவம் தாங்கியது புதுக்கவிதை என்னும் இலக்கிய வடிவம். பாரதியின் வசனகவிதை மரபைத் தொடர்பு உருவான புதுக்கவிதை மரபைத் தொடங்கி வைத்தவர்களில் நா.பிச்சமூர்த்தி முதன்மை யானவர் ஆவார். இதனால்தான் புதுக்கவிதையின் தந்தை என்று நா.பிச்சமூர்த்தி அவர்கள் அழைக்கப்படு கிறார். இவ்வாறு தோற்றம் பெற்ற புதுக்கவிதை மரபு பல்வேறு இதழ்களின் துணையோடும், புதியதாக உருவான கவிஞர்களாலும் வளர்த்தெடுக்கப் பட்டது.

தம் உணர்வுகளை வெளிப்படுத்துவதற் கான வடிகால் தேடிக்கொண்டிருந்த இளைஞர்களுக்கான கருவியாகப் புதுக்கவிதை என்னும் இலக்கிய வடிவம் கிடைக்கப்பெற்றதுக் குறிப்பிடத்தக்கது. பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயின்ற வைரமுத்து அவர்களுக்கும் இப்புதுக்கவிதை இலக்கிய வடிவம் என்பது வாராது வந்த மாமணிபோல் பயன்பட்டது எனலாம். இவ்வடிவத்தில் தமிழ்மொழி, தமிழ்நாடு, காதல், நட்பு, சுதந்திரம், உறவு முதலான பல பொருண்மைகள் சார்ந்தும், உலகியல் கருத்தியலுக்கு எதிரான விமர்சன நிலையிலும் பல்வேறு கவிதைகளை உருவாக்கியப் பெருமை கவிஞர் வைரமுத்து அவர்களுக்கு உண்டு. இவரின் கவிதைப் படைப்பின் தரத்தை வெளிப்படுத்தும் சூர்யா பதிப்பகத்தார்,

"நல்ல கவிதைகளை வாசிக்கவும் நேசிக்கவும் ஒரு தலைமுறை இளைஞர்களுக்குக் கற்றுக் கொடுத்தவர்

வைரமுத்து. கவிதைகள் நமக்கானவை அல்ல என்னும் சாமானியர்களின் தயக்கத்தை வைரமுத்துவின் புதுக்கவிதைகள் முறித்துப் போட்டன. புரிகிறது; உணர்வுடன் கலக்கிறது; மயக்குகிறது; மிரட்டுகிறது; கெஞ்சுகிறது இவர் கவிதை. கரும்பைப் போல் காதலைப் போல் கவிதையும் இனிக்கிறது. எனில், என்னாலும் கவிதை எழுத முடியுமே என்ற நம்பிக்கையை இன்னொரு தலைமுறை இளைஞர்களுக்கு வழங்க இதோ புறப்பட்டிருக்கிறது வைரமுத்துவின் இன்னொரு தேசிய கீதம்''5 (இன்னொரு தேசிய கீதம், பதிப்புரை)

என்று ''இன்னொரு தேசிய கீதம்'' என்று கவிதை நூலுக்கான பதிப்புரையில் குறிப்பிடுவதன் மூலம் இலக்கியம் என்பது ஒரு தலைமுறை உருவாக்கத்திற் கானது என்பதை உணர்ந்துகொள்ளச் செய்கிறது. இவை தமிழ் மொழிக்கு கவிஞர் வைரமுத்துவின் பங்களிப்பு என்றே கூறலாம்.

இன்னொரு தேசிய கீதம் முன்னிருத்தும் பன்னோக்கு நிலைகள்

கவிதை என்னும் இலக்கியத்தின் வடிவத்திலும் உட்பொருளிலும் பெரும் மாற்றம் பெற்ற காலம் மகாகவி பாரதியின் காலமாகும். மகாகவி பாரதி 1882இல் பிறந்தவர். இவருடைய நூற்றாண்டு விழா 1982இல் கொண்டாடப்பட்டபோது, மகாகவியின் கவிதைகள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட கவிஞர் வைரமுத்து அவர்களுக்காக ஒரு கவிதைத் தொகுப்பைக் கொண்டு வந்தார். அவைதான் ''இன்னொரு தேசிய கீதம்'' என்னும் கவிதைத் தொகுப்பாகும். இத்தொகுப்பில் பல்வேறு கருத்தியல் களையும், கவிஞர்களையும் தம் நினைவில் கொண்டுவந்து பதிவு செய்த பெருமைக்குரியர் கவிஞர் வைரமுத்து.

ஒவ்வொரு எழுத்தாளனும் சமூகத்திற்குப் பொறுப்பானவன் என்பதை கைலாசபதி அவர்கள்,

> ''ஒரு எழுத்தாளன் தனித்து இருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப் பிராணி. சமுதாயத்தில் எல்லா காலங்களிலும் முரண்பாடுகளும், போராட்டங்களும் இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வர்க்க வேறுபாட்டினால் இவை எழுகின்றன. இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும் வாழ்கின்றான்''6 (சமூகவியலும் இலக்கியமும், ப.30)

என்று குறிப்பிடுவதிலிருந்து எழுத்தாளனும் சமூகமும் கொண்டிருக்கும் ஒற்றுமையை உணர்ந்துகொள்ளலாம். இப்புரிதலின் அடிப்படையில் கவிஞர் வைரமுத்து எடுத்துக்காட்டும் சமுதாயத்தை உணர்ந்துகொள்ளலாம்.

நிலத்தை ஜெயித்த விதை

கவிஞர் வைரமுத்து அவர்கள் தம் நூலில் பன்முகங்களில் தன் கருத்துகளைப்

பதிவு செய்திருந்தாலும் மகாகவி பாரதியார் குறித்த நினைவுகளும் கருத்துகளும் முதன்மையானது என்றே குறிப்பிடலாம். மகாகவியைப் பற்றி,

"அது எப்படி ?
எட்டயபுரத்தில் மட்டும்
ஒருத்திக்கு
நெருப்பை சுமந்த கருப்பை
அது கூட சாத்தியந்தான்!
ஆனால் – இது எப்படி?
ஏகாதிபத்திய எரிமலையை
ஒரு தீக்குச்சி சுட்டதே
இது எப்படி"7
[இன்னோரு தேசிய கீதம்,ப.60]

என்று பாரதியின் கவிதையின் தாக்கத்தைப் பற்றியும்,

"உன் எழுத்தில்தான்
முதன்முதலில்
வார்த்தை, வாக்கியத்தைப்
பேசியது"7
[இன்னோரு தேசிய கீதம்,ப.61]

என்று கவிதையின் பொருண்மையைப் பற்றியும் குறிப்பிடுவதிலிருந்து வைரமுத்து மகாகவியின் கவிதையின் உட்பொருளை உணர்ந்த தருணங்களைக் காண முடிகிறது.

இராமர்களுக்கு இன்று ரத்தமில்லை

"மாதராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்மமா" என்ற கவிதை வரிகளின் பொருண்மை காலாவதியான காலம் இக்ககாலம். வரதட்சணை என்னும் அம்பைக் கொண்டு பல சீதைகளின் கனவை களவாடிக் கொண்டிருக்கும் இராமர்கள் சூழ்ந்த உலகம் இவ்வுலகம். பெண் பெற்றால் வரதட்சணைக் கொடுத்து மீள முடியாது என்பதால் பெண் பிறந்தால் கள்ளிப்பால் ஊட்டி இறக்கடிக்கும் வரலாற்றிற்கு சொந்தமானது தமிழ்ச் சமூகம். யார் இல்லை என்றால் இம்மானிடச் சமூகம் இல்லையோ, அவளையே பிறப்பிக்க மறுக்கும் சமூகம் நம் சமூகமாகிப் போனது. இக்கொடுமையினால் ஒரு பெண் திருமணமாகி வாழ வேண்டிய வயதில், வரதட்சணைக் கொடுமையால் தன் கனவுகளோடு மட்டுமே வாழும் பெண்சமூகத்தை,

"தன் பெயரைக்
கல்யாணப் பத்திரிக்கையிலேனும்
அச்சில் பார்க்க
அவள் ஆசைப்பட்டாள்
ஆனால்
அச்சு எந்திரங்களைப் போலவே
மனித எந்திரங்களுக்கும்
மனசுகள் இல்லை"8
– [மேலது, ப.19]

என்றும்,

"முன்பெல்லாம்
கனவுகளுக்காகவே
உறங்கினாள்
இப்போதோ
உறக்கமே
ஒரு கனவாகி விட்டது"9
– [மேலது, ப.20]

என்றும் தம் கவிதை வரிகளால் செய்த

பதிவிற்குப் பின் இருக்கும் முதிர்கன்னி களின் வலியும் வேதனையும் வார்த்தை களால் அளவிட முடியாததே ஆகும்.

தீக்குச்சிக்குத் தின்னக் கொடுப்போம்

இன்றைய நவீன கால ஊடகங்களில் சினிமா எனும் ஊடகம் மிக முதன்மையான ஊடகமாக மக்கிளிடையே இடம்பிடித்துள்ளது. சினிமாவில் காட்சிப்படுத்தப்படும் அனைத்தும் உண்மையானவை என்றும், நடிகர் அனைவரும் நல்லவர்கள் என்றும் அசைக்க முடியாத நம்பிக்கையை மக்கள் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கல்லூரி வாழ்க்கையாக இருந்தாலும் சரி, திருமண வாழ்க்கையாக இருந்தாலும் சரி அனைத்தையும் கற்றுக்கொடுக்கும் அரிச்சுவடியாகச் சினிமா ஊடகம் வளர்ந்திருக்கிறது என்றால் மிகையாகாது. ஆனால், மக்கள் கொள்ளும் நம்பிக் கைக்குரிய ஊடகமாகவும், இளைஞர்கள் நடிகர் சங்கம் வைத்து தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்யும் இளைஞர்கள் எண்ணும் ஹீரோக்களாக நடிகர்களும் விளங்குகிறார்களா? என்றால், பெரும் கேள்விக்குறிதான் நம் முன் உள்ளது.

கவிஞர் என்ற அடையாளத்தை வைரமுத்து அவர்கள் தன்னுடைய கவிதை நூல்களின் மூலம் பெற்றரோ இல்லையோ, சினிமாக்களுக்கு தேர்ந்த பாடல்களை இயற்றியதன் மூலம்தான் பெற்றார் என்று குறிப்பிடுவதே உண்மையானதாக இருக்கும். இந்நிலையில் அச்சினிமாக்கள் மக்களின் எதிர்மறையான ஊடகமாக எவ்வாறு உள்ளது என்பதை,

"சினிமா என்பது இப்போது

வெறும் வியாபார வெளிச்சம்
சில படங்கள்
தங்கள் முகங்களுக்கு
முற்போக்கு முலாம் பூசமுனையும்
ஆனால், அந்த மீன்கள்
கரை நோக்கி வருவது
கரைக்கு வர அல்ல
இரவில் வெளிச்சம் காட்டிப்
பகலை இருட்டாக்கிவிடும்
பகட்டும் இது"

என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் மனிதனுக்குக் கிடைத்த அற்புதமான கலைப் படைப்பின் மூலம் உலக யதார்த்தத்தைக் காட்டி சமூக வளர்ச்சிக்கு உதவ வேண்டிய ஊடகம், சினிமா வெளிப் படுத்தும் வாழ்க்கைக்கும் யதார்த்த வாழ்கைக்கும் இட்டு நிரப்ப முடியாத இடைவெளியாய் உள்ளது வேடிக்கை யானதாகவும் வேதனைக்குரியதாகவும் உள்ளதை வைரமுத்து அவர்கள் வெளிப்படுத்துவதை உணரலாம்.

தீ தின்றுவிட்ட தென்றல்

ஒரு கவிஞன் மற்றொரு கவிஞனைப் பாராட்டும் மரபு குன்றிவிட்ட காலம். ஆனால், பாரட்ட வேண்டியது மரபு. கவிஞர் கண்ணதாசன் தமிழ் இலக்கியங் களையும் தன் அனுபவங்களையும் திரையிசைப் பாடலாக ஒலிக்கச் செய்த மா கவிஞன். "மாற்றம் ஒன்றே மானிடத் தத்துவம்" என்ற வரிகளால் தமிழ்

மொழிக்குக் காலத்தால் அழியாத இலக்கியங்களைக் கொடுத்தப் பெருமை கண்ணதாசனுக்கு உண்டு. அந்த மகா கவிஞன் மறைவிற்கு வைரமுத்து இயற்றிய இரங்கற்பாவை,

"மா கவிஞனே!
தீயீன்
நாவுகளில் இரண்டு
மூடப்படாத உன்
முகத்தை நோக்கி
முந்தியபோது
கண்ணிரும் கைகளும்
என்
கண்களைப் பொத்தின"

என்ற வரிகளால் நிரப்பப்புகிறார். கவிஞர் கண்ணதாசன் சினிமா என்னும் தம்முடை இலக்கிய வாசிப்பினால் புனிதப்படுத்த முயற்சித்தவன். இத்தன்னையினால்தான், வைரமுத்து எனும் கவிஞனால் அக்கவிஞனின் இறப்பை, சாதாரண மனிதர்களின் இறப்பைப் போல கடந்துவிட முடியவில்லை.

முடிவுரை

கவிஞர் வைரமுத்து அவர்களின் "இன்னொரு தேசிய கீதம்" என்னும் கவிதை நூல், தமிழ் மொழியின் இலக்கியம், வரலாறு, படைப்பாளிகள் கடப்பாடு, பண்பாடு, சமூக ஒழுங்கு, மாற்றியமைக்கப்பட வேண்டிய கருத்தியல்கள் என பலவற்றை நமக்கு அடையாளம் காணச் செய்யும் பன்முக நோக்கிலான ஒரு ஆவணம் என்பதை மேற்கண்ட ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

துணைநூல் பட்டியல்

1. வைரமுத்து, இன்னொரு தேசிய கீதம், சூர்யா பதிப்பகம், 22ஆம் பதிப்பு. 2018
2. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், சூர்யா பதிப்பகம், பதினேழாம் பதிப்பு, 2001
3. ய.மணிகண்டன், பாரதி பன்முகக் களஞ்சியம், விழிகள் பதிப்பகம், மு.ப. 2017
4. கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும், குமரன் பப்ளிகேஷன்ஸ், மு.ப.2002
5. வைரமுத்து, இதனால் சகலமானவர் களுக்கும், சூர்யா பதிப்பகம், ஆறாம் பதிப்பு, 2001

கவிஞர் வைரமுத்துவின் தமிழுக்கு நிறமுண்டு உணர்த்தும் சமுதாய நிலை

முனைவர் செ. செல்லப்பிள்ளை
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி)
அரும்பாக்கம், சென்னை – 600 106.

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் நிலத்தில் பல்வேறு சமுதாயம் உண்டு. நவீனஇலக்கியத்தில் கவிதைக்கு சிறப்பான இடம் உண்டு. கவிஞர் வைரமுத்துவின் தமிழுக்கு நிறமுண்டு என்ற கவிதைத் தொகுப்பில் சமுதாய நிலையை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

திறவுச்சொற்கள்

குமுககம், கங்குகள், ஞானத்தீ, எவ்வ, கமுகுகள்

முன்னுரை

குமுகத்தில் மாந்தர் வாழ்வு, காட்டாற்று வெள்ளமாய் கரையுரண்டு ஓடுவதும் புயலடித்த சோலையாய் புதிராக நிற்பதும் தனிமனிதரின் தேர்வினில் இல்லை. புலவர் புனையும் காவியம் போல சமுதாயம் வரையும் ஓவியம் தான் உலக வரலாற்றில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே தனக்கென தனி வாழ்வியல் கூறுகளுடன் வாழந்தது தமிழ் கூறும் நல்லுலகமே

உள்ளூர் மாந்தர் பற்றி

புகழெனின் உயிரும் தொடுக்குவர் பழியெனின்உலகொடுவரினும்கொள்ளார் என்று உரக்கச் சொன்ன தமிழ்ப் பாட்டு.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று உலக ஒருமைப்பாடு பேணவும் தவறவில்லை, எனினும் பல்வேறு திசைகளில் இருந்தும் வந்து சேர்ந்து இனக்குழு மாந்தர் கலப்பால் தனித்தன்மை இழந்து பிளவுபட்டு கிடப்பதும் தனிமனித வாழ்வு சவாலாகிப் போனதும் பற்றி கவிஞர் வைரமுத்துவின் கவிவரிகள் மூலம் இக்கட்டுரையில் காணலாம் பல்வேறு தலைப்புகளில் தமிழுக்கு நிறம் உண்டு எனும் கவிதை நூலில் கவிவரிகள் அவர்தம் மனத்தில் எழுந்து எழுதுகோல் வழி சிந்தனைத் துளியாய், கோப ப் பொரியாய், குருதிப் புனலாய் பல்லாற்றானும் வெளிப்படு வதைக் காணலாம்.

கவிஞரும் கட்டளையும்

இருபதாம் நூற்றாண்டு உலக வரலாற்றை பல்லாற்றானும் புரட்டிப்

போட்டது அறிவியல், சமூகம், ஆன்மீகம் இலக்கியம் எனப் பல்வேறு கிளைகளாக விரிந்த கரங்களில் திசைக்கொரு விரல்போல வீறுகொண்டு மாற்றங்கள் ஏற்பட்டன இலக்கிய வாதிகள் புதுமை நோக்கியும் புரட்சி நோக்கியும் தம் எழுத்தாணித்தேரில் சிந்தனைக் குதிரைகளப் பூட்டினர் பாரதியின் பாடுபொருள் நாடும் மொழியும் என்றால் பாரதிதாசனின் பாடுபொருள் மொழியும், நாத்திகமும் என்றால் கவிஞர் வைரமுத்துவின் பாடு பொருள புதுமையும் நாத்திகமும் ஆனது.

தொண்டு செய்து பழத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு
தொழும்
மனக் குகையில் சிறுதை எழும்

என்று புரட்சிகவிஞரால் பாராட்டப்பட்ட ஈரோடுக் கவிஞனின் புரட்சி இயக்கம் கவிஞரின் சிந்தையை முற்போக்குடைய ஒற்றுமை சமுதாயத்தை காண்பதில் விருப்பமுடையதாக மாற்றியது. கவிஞரின் கட்டளைகள் எனும் தலைப்பு கவிவரி

எங்கே ஊர்களில்
சாதி இல்லையே
அங்கே கூவுக குயில்களே
எங்கே பூமியில்
போர்கள் இல்லையோ
அங்கே பாடுக குயில்களே

என்கிறார் எங்கள் மூல வாழ்க்கை என்று ஒன்று இருக்கிறது. அது எங்களுக்குள் உண்டு அதைவெளிக் கொணர்வோம் என்பதை

மதம் அடித்த மணல்
அண்ணியர் வீசிய தண்ணீர்
உள்ளூர் ஜாதிக் காற்று
இத்தனைக்கும் அணையாமல்
எங்கள் நெருப்பின் வேர்
எங்கோ இருக்கிறது.

என்கிறார் இருண்ட காலத்தில் மருண்ட வாழ்வு விரைவில் மாறும் என்பது வரிகள் தரும் உறுதி அத்தடன் சமுதாயம் சாதியால் பிரிந்து கிடப்பதும் உலகத்தால் பேரால் மாண்டு போவதும் மாற்ற வேண்டும் என்பதை கட்டளையாகப் பதிவிடுகிறார்.

பாட்டாளிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்பார்கள் ஆனால் அந்த பாட்டாளியின் நிலை அன்றும் இன்றும் பரிதாப நிலைதான் அதனால் தான் ஜீவா அவர்கள்

பாலின்றிக் குழந்தை அழும்
பசியால் தாயழுவாள்
பாலுக்கு உழைத்தோமடா
தோழனே
பசையற்றுப் போனோமடா

என்கிறார் கவிஞர் வைரமுத்து அவர்கள்

எங்கே உழைப்பவர்
உயரம் உயருமோ
அங்கே சுழலுக அலைகளே
எங்கே விதைத்தவர்
வயிறு குளிருமோ
அங்கே விளைந்திடு
நெல்மணியே

என்கிறார் ஆண்டாண்டு காலமும் உழைக்கும் இனம் உயர்வின்றித் தாழ்வதும் அவர் உழைப்பால் பிழைப்பவர் உயர்வதும் காலத்தின் தவறான கணக்கு அறிந்து உழைப்பவர்க்கு துணையாக ஆலைகளையும் உழுபவர் களுக்குத் துணையாக நெல்மணிகளையும் ஆதரவாக இருக்க கட்டளை பிறப்பிக்கிறார்.

ஞானத்தீ

அறியாமை இருட்டை அறிவி னின்றும் முகிழ்ந்த ஞானத்தீ விரட்டுவது உலக மானுட வரலாறு காட்டும் உண்மை கவிஞரின் ஞானத்தீ சமுதாய அழுக்கு மூட்டைகளை சலவை செய்யத் தூண்டுகிறது.

நெருப்பின் பொதுப் பண்பு
உலகெல்லாம் ஒன்றென்றால்
மேற்கு எப்படி
ஒளி கூட்டியது
கிழக்கு எப்படி
இருள் கட்டியது

என்று கூறுவதில் புராணப் புழுகு முட்டையால் மூழ்கிப் போன சமுதாயம் அறிவில் முதன்மை பெற வில்லை மேற்கத்திய நாடுகளில் புராணங்கள் இல்லை கடவுள் பெயரில் புழங்கு கதைகள் இல்லை இருந்தாலும் அதை ஒரு பொருட்டாக மாந்தர் எண்ணவில்லை அதனாலே அறவுத் தீ சுடர் விட்டு எரிந்தது ஆனால் நாம் என்ன செய்தோம் என்பதை

சற்றே முதுகுப் பக்கம்
முகம் திருப்புவோம்
நெருப்பை அழுக்குச்
செய்த சாதி நம் சாதி
கற்பை கண்டறியும் தர்மா
மீட்டராய்
அழுக்குச் செய்தான்
அயோத்தி மன்ன ன்

இராமாயணத்தில் இராமன் தன் மனைவியின் கற்பை உண்மையாக்க நெருப்பில் இறங்கச் செய்ததை அறிவிற்கு ஒவ்வாத நிலை என்று பதிவு செய்கிறார் இன்னும் ஒன்றும் கெட்டுப் போக வில்லை போனது போகட்டும் இனி நாம் அறிவில் உயர்ந்து பகுத்தறிவுடன் ஞானத்தீ வளர்ப்போம் என்பதை

அறிவின் கங்குகள்
அணையவில்லை இன்னும்
எல்லோரும் சேர்ந்து
உயிர்காற்று ஊதுவோம்
ஞானத்தீ எழுப்புவோம்

என்கிறார்.

சமுதாய அக்கறை இல்லாதவனை குறை உடையவர் என்கிறார் தன் கண்முன் நடக்கும் அறியாமையை அறிவுக்கு ஒவ்வாத அதை கண்டுகொள்ளாத எவனோ அவனே முதல் சுயநலக்காரன் சீர்செய்ய முயலாதவன் குற்றவாளி என்று ஒன்று என்று கூறி நல்லோர் எல்லோருக்குள்ளும் ஞானத்தீ உண்டு என்பதை

ஒன்று மட்டும் புரிந்தது
நமக்கு உள்ளே
இணைப்பு இல்லாதவனுக்கு
சூரியனும் ஒரு கரித்துண்டு

நெருப்பு
உள்ளவனுக்கு கரித்துண்டு
ஒரு சூரியன்

என்று கூறுகிறார் கவிஞர் முடிதிருத்தம் செய்யும் தொழிலாளி போகிறபோக்கில் சொல்கிறார் நான் சிறுவனாய் இருந்த போது நல்லவர் 90 சதம் இருந்தார்கள் என்று என் தந்தை கூறுவார் என்று நான் என் மகனுக்கு சொல்கிறேன் அது 10 சதம் என்று என்று இந்த நிலையை மாற்ற துடிக்கிறது கவிஞரின் வரிகள்.

மனிதனும் மிருகமும்

எவ்வ துறைவது உலகம் உலகத்
தோடு
அவ்வ துறைவ தறிவு.

என்கிறார் வான் மறையான். உலகத்தைத் திருத்த முடியாது உன்னைத் திருத்திக் கொள் என்கிறார் மூவா அறிவு எனும் செடி வளர அது மலர கல்வியே உயிர் நீர் ஆகும் ஆனால் பிற விலங்குகளிடம் இருந்து தன்னை வெளிப்படுத்திக் கொண்ட மனித வாழ்வியல் விடயங்கள் அவற்றின் தாழ்வாக போனதையும் எந்த ஆறாம் அறிவு விலங்கின் என்றும் பிரித்து மனிதரை மாற்ற வைத்ததோ அதே அறிவு அவரை தாம் என்ற மமதை பலனாக மாற்றி அதையும் பற்றி கூறுகிறார்.

மனிதா
விலங்கை வணங்கு
ஒவ்வொரு விலங்கும்
உன் ஆசான்
யானையின் காலில்
யானை விழுந்ததாய்
தகவல் இல்லை
பூனைக்கு எலிகள்
பல்லாக்கு சுமந்ததில்லை.

காட்டு விலங்குகள் அனைத்தும் தன் வாழ்வியல் முறைகளை எப்பொழுதும் மாற்றியது இல்லை ஆனால் மனிதன் அதிகாரமும் செல்வமும் எவரிடம் இருக்கிறதோ அவர்களின் துதி பாடு வதையும் போற்றுவதும் வாடிக்கையாக கொண்டுள்ளனர் தும்மினால் அதை அறிவுத்தும்மல் என்றும் இருமினால் அதை ஆன்மீக இருமல் என்றும் இதுவரை யாரும் இதை நிகழ்த்தியதை இல்லை என்றும் வெளிப்படையாக துதிபாடி பெற்ற அறிவை புதைத்துவிட்டு தொடர்ந்து அறிவு துரோகம் இழைத்து கொண்டுள்ளனர். விலங்குகளை பார்த்தாலும் தன்மான வாழ்வை கற்க என்றாவதுஒன்று சுதந்திரத்தின் வானம் இல்லை மரணத்தின் பள்ளம் இடைப்பட்ட வாழ்க்கை விலங்குக் இல்லை.என்று கூறுவதுடன்மனிதர்கள் வணங்கும்படி சில விலங்குகள் உண்டு விலங்குகள் வழங்கும்படி இங்கு மனிதர்கள் உண்டா?

என் விலங்கு உலகத்தை
மானுடத்தின் உயர்த்திப்
பிடிக்கிறார்.

மதம் எனும் மாயாவி

மதம் ஒரு திறமையின் எதிர்காலம் அது ஒரு காட்சி பிழையா வே அன்றி வேறொன்றும் இல்லை என்கிறார் சிக்மண்ட் பிராய்ட். கவிஞர் மதம்

மாந்தரை தன் தன்மையை இழக்கச் செய்வதைமதம் பிடித்தலையும் மனிதனைத் தவிர மற்ற விலங்குகள் எதற்கும் மதம் பிடித்தது ஒரு கிறிஸ்தவ கிளி இந்து புலி சமண கொக்கு பௌத்த பசு சீக்கிய சிங்கம் முகம் அதியமான் காட்டுக்குள் அடையாளம் காட்ட முடியுமா மதம் ஒரு பிரமை மதம் ஓர் அருவம் நம் வானத்தை காலம் காலமாக கழுகுகள் மறைத்தன போகட்டும் இனிமேல் புறாக்கள் பறக்கட்டும். என்று மதம் வன்முறையைத் தூண்டுவது என்றால் இனி அது வேண்டாம் என்று புதிய பூமி படைக்க வேண்டும் என்கிறார்.

வாழ்க்கைப் பாடம்

உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்

என்கிறார் வள்ளலார் பெருமான் ஆனால் நாகர் சமூக வாழ்வில் அது கொஞ்சம் சிரமம்தான் என்றாலும் பர்வீன் கூற்றுப்படி அதையும் தாண்டி வாழ்வதே தப்பி பிழைப்பதற்கான தகுதி என்றாகி விட்டது அதோடு அதை சமாளிக்க பல தொடர் வசனங்களும் தோன்றிவிட்டன.

1. எதையும் கண்டு கொள்ள வேண்டாம்

2. நம்ம வேலைய மட்டும் பார்ப்போம்.

3. நமக்கென்ன வந்தது

போன்ற பொறுப்பற்ற பண்புகள் பழக்கமாகி வருவதை பார்க்க முடிகிறது ஆனால் கவிஞர் தன் வாழ்நாள் அனுபவம் ஒன்றை முடிவாக உரைக்கிறது வாழ்ந்தாரே கண்டால் மனதுக்குள் வெறுக்கும் விழுந்தார் கண்டால் வாய்விட்டுச் சிரிக்கும் என்று வையத்தை விமர்சித்தார் கா.மு.ஷெரீப் அவர்கள். கவிஞர் வைரமுத்து,ஒவ்வொரு வாயிலும் ஒற்றை நாக்கு உலகின் வாயில் இரட்டை நாக்கு என்கிறார்.எளிய தோற்றமே இயல்பென இருந்தேன் வடிக்கட்டி வழியது என்றது அழகாய் நானும் ஆடைகள் கொண்டேன் கழுதைக்கெதற்கு கண்மை என்றது.

கவிஞர் இயல்பாக வாழ்ந்ததையும் விமர்சித்து தோரணை ஆனா அதையும் இழிவு பேசி இவ்வுலகம் வதைப்பதை கூறி. அப்படி இருந்தால் அதுவும் தப்பு இப்படி இருந்தால் இதுவும் தப்பு உலகின் வாயைத் தைப்பது கடினம் உந்தன் செவிகள் மூடுதல் சுலபம் என்று முடிவுரை எழுதுகிறார்மனிதன் எதையோ பேசட்டுமே மனசப் பாத்துக்க நல்லபடி என்று கண்ணதாசன் கூறுவதுபோல நிம்மதியான வாழ்விற்கு வழிவகை கூறுகிறார் கவிஞர்.

முடிவுரை

உருண்டோடும் வாழ்வியல் பயணத்தில் நாம் நினைக்கின்ற விரும்புகிற வாழ்வு யாவருக்கும் கிட்டுவதில்லை கிடைக்கிற வாழ்வை விரும்ப தொடங்குவது தவிர வேறு வழியில்லை என்றாகி விடுகிறது அதுபோல மாந்தர் வாழ்க்கை எனும் நிலக்கரி துன்பவியல் அனைத்து குளிர்ந்து தான் வைரமாக முடியும் என்பதை

சமுதாயம் நிலைப்பாடு பற்றிய வைரமுத்துவின் வரிகள் உணர்த்துகின்றன பட்டு நிலா வானில் பளிச்சென்று ஒளிவிடும் போதும் வெட்டவெளியில் மின்மினிப்பூச்சிகள் ஒளி செய்கின்றன ஒன்றை ஒன்று இயேசுவும் இல்லை யாரும் பேசவும் இல்லை அதனதன் தன்மைக்கேற்ப தான் இருக்கின்றன அப்படித்தான் மனிதர் வாழ்வில் எதிர்கொள்ளும் பேரலை வாழ்வில் மனம் கெடாமல் நல்லெண்ணம் நிறைந்தவராய் நாம் வாழப் பழகினால் நம் வாழ்நாள் எல்லோரும் விரும்பும் பூக்கடை ஆகும்

துணைநூற்பட்டியல்

1.தமிழுக்கு நிறம் உண்டு, கவிஞர் வைரமுத்து, சூர்யா பிரஸ், திருமகள் நிலையம் , சென்னை. ஆண்டு 2010

சூல் நாவல் காட்டும் வேளாண்மை

முனைவர் வெ. டில்லிபாபு
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சிந்திக் கல்லூரி
சென்னை – 600 077.

ஆய்வுச்சுருக்கம்

உலகில் தோன்றிய அனைத்து உயிரினங்களுக்கும் உணவுத் தேவை என்பது இன்றியமையாததாக அமைகிறது. இந்த உணவு மனித இனத்திற்கு பெரும்பான்மை வேளாண்மையில் இருந்தே கிடைக்கின்றது. உணவு உற்பத்திக்கு நீர்நிலைகள் அவசியமாகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதனின் வாழ்வியலோடு கலந்தவை உணவு உற்பத்தி முறைகள். இவை மூத்த குடிகளின் அனுபவத்தோடு இன்றளவும் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. அவ்வகையில் நீர் நிலைகளைத் தூர்வாரி ஆழப் படுத்துவதற்கும், கரை உடைப்பு ஏற்படும் பொழுதும் ஊர் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல் பட்டுள்ளனர். மேலும் உழவு வேலைகள் தொடங்குவதற்கு முன்பே கோடை காலங்களில் பெரும்பான்மையான உழவர்கள் தங்களுக்குத் தேவையான வேளாண் கருவிகளைத் தயார் செய்து வைத்திருந்தனர்.தச்சு வேலை மற்றும் கொல்லு வேலை செய்யும் இடங்களில் எப்பொழுதும் ஆரவாரம் இருந்து கொண்டே இருக்கும். மழை பெய்தவுடன் உழவு வேலைகளைத் தொடங்கி வயல்களுக்கு இயற்கை உரமிட்டு, நிலங்களைத் தயார் செய்வர். சரியான பருவத்தில் புஞ்சையில் தரமான விதைகளை விதைத்தும், நஞ்சை வயல்களில் நடவு நட்டும் தானியங்களை உற்பத்தி செய்வர். அதுமட்டுமின்றி ஒரு சில நிகழ்வுகளில் நம்பிக்கை மற்றும் சடங்கு முறைகளை வேளாண்மையில் கடைபிடிக்கப்படுவதை இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

திறவுச் சொற்கள்

ஊர்ச்சாற்றுதல், தண்டோரா, சூல், ஆரவாரம், மராமத்து, தூர், புஞ்சை, நஞ்சை.

முன்னுரை

சூல் என்ற சொல்லிற்கு நிறைசூலி என்பது பொருளாகும். கருவுற்ற பெண் பத்துமாதங்கள் பத்திரமாகப் பாதுகாத்து குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள்.

அதேபோன்று தான் கண்மாயும் நிறை சூலியாக இருந்து ஆயிரக்கணக்கான

உயிர்களைப் பிரசவிக்கின்றது என்னும் பொருண்மையில் சோ. தர்மன் அவர்கள் இந்நாவலைப்படைத்துள்ளார். உழவு சார்ந்த பல்வேறு செயல்பாடுகளை இன்றைய அறிவியல் வேளாண்மை என்ற சொல்லால் சுட்டுகின்றது. அவ்வகையில் சூல் நாவல் காட்டும் வேளாண்மை சார்ந்த பல்வேறு செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

ஊர்ச்சாற்றுதல்

ஊர்ச்சாற்றுதல் என்பது தண்டோரா (ஒருவித இசைக்கருவியை இசைத்தல்) மூலமாக ஊர் மக்கள் அனைவருக்கும் செய்தியை அறிவிப்பது. திருவிழா தொடங்குதல், நீர்நிலைகளைத் தூர்வாருதல், வெள்ளப்பெருக்கு, நீர் நிலைகளின் கரை உடைதல் போன்ற பல்வேறு முக்கிய நிகழ்வுகள் அல்லது அவசர செய்திகளை இந்த தண்டோரா மூலமாக ஊர் மக்கள் அனைவருக்கும் உடனடியாக அறிவிப்பார்கள். "கரை திறந்த அன்றைக்கு ஊர்ச்சாற்றிய தொத்தல் பகடை இன்றைக்கும் தெருவழியே ஊர்ச்சாற்றிக்கொண்டு போனான். அய்யாமாரே, அம்மாமாரே, நல்லா கேட்டுக்கோங்க சாமிமார! நாளைக்கு நம்ம ஊரு கண்மா நடை சாத்தப் போறாங்க இது மகாராஜா உத்தரவு சாமியோவ்"[1]. என்னும் செய்தியால் அறியலாம். இச்செயல். மழக் காலங்களில் அணைகள் திறக்கும் பொழுதும், வெள்ளப் பெருக்கு ஏற்படும் பொழுதும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசாங்கம் தற்காலத்திலும் தண்டோரா போடுதல் நடைமுறையில் உள்ளதை அறியலாம்.

நீர்நிலைகளைத் தூர்வாருதல்

ஏரி, கண்மாய், குளம், குட்டை போன்ற பல்வேறு நீர்நிலைகளைத் தூர்வாரி சுத்தம் செய்வதை குடி மராமத்துப் பணி என்பார்கள்." பரம்பரை நீர்பாய்ச்சி கரைமேல் நின்றபடி பல்வேறு சாத்திரங்கள் செய்து கொண்டிருந்தான். சாத்திர சம்பிரதாயங்கள் முடிந்து விட்டதற்கு அறிகுறியாக நீர்ப்பாய்ச்சி தலை நிமிர்ந்தான். கோவில் பூசாரி கைகள் நடுங்க அரண்மனை மண்வெட்டியை நீர்பாய்ச்சியின் கையில் கொடுத்தான். பக்தியுடன் பவ்வியமாக மண்வெட்டியை வாங்கிய நீர்பாய்ச்சி அய்யனார் கோவில் பக்கம் திரும்பி நின்று கொண்டு கரையின் மேல் மூன்று முறை வெட்டினான். இதற்காகவே காத்திருந்தவர்களைப் போல் கூடியிருந்த அனைவருமே தாங்கள் கொண்டுவந்து தயாராய் வைத்திருந்த மண்வெட்டி, கடப்பாரைக் கம்பிகளால் கரையை வெட்ட ஆரம்பித்தனர்" என்றும் "சரியாக இன்றோடு கண்மாய்க்கரை வழி திறந்து நாற்பது நாட்கள் ஆகிவிட்டன. நாளைக்கு நம்ம ஊரு கண்மா நட சாத்தப் போறாங்க"[2] என்றும் குறிப்பிடுவதன் மூலம் நீர்நிலைகள் தூர்வாரப் படுவதை அறியமுடிகிறது. மேலும் "சங்கஞ்செடி புதர்களின் வேர்கள் கண்மாய்க்கரையை வலை போல பின்னிக்கொண்டு சல்லடையாய் மண் அரிப்பைத் தாங்கும் (தடுக்கும்) என்பதால் புதர்களை ஊர்க்காரர்களே பாதுகாத்து வருகின்றனர். கரை எங்கும் நிறைந்து வரிசை வரிசையாய் நிற்கும் வளர்ந்த பனைமரங்களின் சல்லடை போன்ற சல்லி வேர்களும்

கண்மாய்க் கரையைத் தாங்கி நிற்கும் தடுப்பரன்கள். கரைகளில் மற்ற இடங்களில் கால் வைக்க முடியாதபடி தலையை பாதுகாக்கும் பல்வேறு வகைப் புதர் செடிகள்.சில இடங்களில் திருகு கள்ளிகளும் இன்னும் சில இடங்களில் சப்பாத்திக்கள்ளிக் கூட்டங்களும் கரைக்கு அரணாக நிற்கும் வேலிகள்''3என்னும் செய்தியால் கரைகளின் பாதுகாப்பை பன்மடங்கு உறுதி செய்துள்ளதை அறியலாம். இவ்வாறு ''நீர்நிலைகளை தூர்வாரும் பணியைப் பல ஜாதிகள் உள்ள ஊர்களில் எல்லாரும் சேர்ந்து செய்வதும் உண்டு. இல்லை எனில் வருடத்திற்கு ஒரு ஜாதி என பிரித்து மராமத்து பார்ப்பதும் உண்டு.''4என சோ. தர்மன் பதிவு செய்துள்ளார்.

வேளாண் கருவிகள் தயார்செய்தல்.

மழைபெய்த உடனே உழவு வேலையைத் தொடங்க வேண்டும் என்பதால் கோடை காலங்களில் பல்வேறு வகையான வேளாண் கருவிகளை உழவர்கள் தயார் செய்து வைத்திருப்பார்கள் ''சித்திரை மாதம் கோடை வெயில் கொளுத்துகிறது. தச்சாசாரி தங்கவேலின் வீட்டுக்கு முன்னால் உள்ள வேப்ப மரம் தழைத்து நிற்கிறது.எப்போதும் மரத்தடியில் கூடியிருக்கும் சம்சாரிகள் தார்ப்பாச்சலும், கையில் வாச்சாத்தும், காலுக்கடியில் கலப்பை குத்தியுமாக தங்கவேல் ஆசாரியும்''5 ''மண்வெட்டி, கடப்பாரை, செதுக்கி, பண்ணரிவாள், வெட்டரிவாள் போன்ற பல்வேறு வகையான இரும்பு சார்ந்த பொருட்கள் சண்முகன் ஆசாரியின் கைவண்ணத்தில் தகதகக்கும் இரும்பு பட்டறையில் இருந்து உருமாறிக் கொண்டே இருக்கும்''6 என்னும் கூற்றிலிருந்தும் வேளாண் கருவிகள் கோடை காலத்திலேயே தயார் செய்து வைத்துளனர் என்பதை நோக்க தச்சுத் தொழிலும் கொல்லுத் தொழிலும் சிறந்து விளங்கியுள்ளமை அறியமுடிகிறது.

உரமிடுதல்

இயற்கை உரம் நிலத்திற்கு இடுவதால் மண்வளம் வளம் பெறு கின்றது. இவ்வாறு வளம் பெற்ற மண்ணில் விளையக்கூடிய தானியங்கள் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்த தானியங்களாக கிடைக்கின்றன இவற்றை உண்ணும் மக்களின் உடலும் ஊட்டச் சத்துக்கள் நிறைந்த பக்கவிளைவுகள் இல்லாத உறுதியான உடல் அமைப்பை பெறுகின்றனர். இந்த ஊட்டச் சத்துள்ள தானியங்கள் நீர்நிலைகளில் தூர்வாரக் கூடிய கரம்பைமண், குப்பை (சாணம்), கிடைவைத்தல் மூலம் கிடைத்துள்ளதை ''கண்மாயின் கரம்பையும் குப்பைகளும் கிடயும் நிலத்தை மறைத்து நிரம்பிக் கிடந்தன''7 என்னும் செய்தியால் அறியலாம். மேலும் ''கோடை வெயில் அனலாய்க் கொதிக்கிறது. சங்கன் குப்பைக் குமிகளைக் கூடையில் அள்ளி, இரு கைகளிலும் ஏந்தி வட்டம் சுற்றி வீசி எறிகிறான்.குப்பைக் கூடையை கைகளில் ஏந்திய சங்கன் சிதறுவதற்காகக் குப்பையை வீசி எறிந்த போது கூடை கைநழுவிப் போய் தரையில் உருண்டு கொண்டே போய் குப்புற விழுந்தது''8 என்னும் குறிப்பால் வேளாண் நிலத்திற்கு

இயற்கை உரம் பயன்படுத்தியுள்ளதை அறியலாம். இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி வந்த உழவர்கள் ஆங்கிலேயரின் வருகைக்குப் பிறகு மேலை நாடுகளில் செயற்கையாக உருவாக்கப்பட்ட உரங்களை பயன் படுத்தத் தொடங்கினர். கால நகர்தலில் கால்நடைகளின் உற்பத்திக் குறைவும் சிறிது சிறிதாக தொடங்கிய மேலைநாட்டு பொருள்களின் மோகமும் தற்காலத்தில் பெரும்பான்மையாக செயற்கை உரங்களை பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

உழவு

நம் நாட்டின் தட்பவெப்ப நிலை களால் மண் இறுகிக் காணப்படும். வயல்களில் இறுகிய மண்ணை உழவு செய்து மென்மையாக்குவர். மண்ணை மென்மையாக்கி விதைகளைத் தேவை யான அளவு மண்ணுக்குள் புதைப்பதற்கும் களைகள் அகற்றுவதற்கும் எருவும் மண்ணும் நன்கு கலப்பதற்கும் உழவை மேற்கொள்வர். "நான்கு ஏர்களும் கீழக்காட்டுப் புஞ்சையை அடைந்த போது கிடை ஆடுகள் எழும்பி மேய்ச்சலுக்குத் தயாராய் நின்றன. ஏர்க்கால்களை மாற்றிக் கட்டி மேழியோடு சேர்த்து உழவு வடத்தால் இறுக்கினார்கள். முன்னத்தி ஏர் சேவுகன், அதற்குப்பின்னால் பெருமாள், மூன்றாவதாக முத்துவீரன். கடைசிஏர் செம்பட்டையன். முன்னத்தி ஏர் பிடிக்கும் சேவுகன் எட்டு கலப்பைக்கு ஒருசால் என்ற கணக்கில் மாடுகளை வேக வேகமாய்ப் பத்தினான்"[9] என்னும் குறிப்பால் கூட்டாக பல ஏர்கள் ஒன்றிணைந்து உழவு செய்துள்ளதை அறியமுடிகிறது. மேலும் "சித்திரை உழவு பத்தரை தங்கம்" என்னும் சொலவடை யும் இதனை உறுதிப்படுத்தும்.

விதை தயார் செய்தல்

வேளாண்மையில் நல்ல விளைச்சல் பெற வேண்டுமென்றால் தரமான விதைகள் தேவை. இந்தத் தரமான விதைகளை உழவர்கள் நன்கு காயவைத்து தேர்ந்தெடுத்து வைத்திருப்பார்கள். இதனை, தங்கள் தோட்டங்களில் விளைந்த வாட்டசாட்டமான மிளகாய் வற்றலைப் பிரித்து நன்றாகக் காய வைத்துத் தனியே வைத்திருப்பார்கள் அதுதான் விதை வற்றல். வத்தல்களை இரண்டாய் ஓடித்து விதைகளை எடுத்து வைப்பர்.சம்சாரிகள் தங்கள் நிலத்தில் விளைந்த பருத்தியை அரவைக்குக் கொடுத்து விதைகளை வாங்கிக் கொள்வார்கள். சாணக்கரைசல் அல்லது களிமண் கரைசலுக்குள் போட்டு பருத்தி விதைகளை நன்றாகக் கிண்டி பிசைந்து முற்றத்தில் படர்த்திக் காய வைப்பர். விதைகளில் ஒட்டியிருந்த பஞ்சு இப்போது அறவே நீக்கப்பட்டு விதை பட்டாணிக் கடலை களைப் போல் தனித்தனியே பிரிந்து விடும். விதைத்தால் படர்ந்து சிதறி நிலத்தில் விழ வேண்டும், இல்லாவிட்டால் எத்தும் குத்துமாக, பத்தா பரக்க முளைத்து பழுதாகிப் போகும். மேலும் விதைக் கடலை உடைப்பு என்பது ஒரு நுணுக்கமான வேலை. கடலைப் பருப்பின் மேல் மூடியிருக்கும் மெல்லிய சிவப்புத் "தொலி" யில் லேசாக காயம் பட்டாலும்

கடலைச் செடி முளைக்காது. ரொம்பவும் கோளாறாக உடைக்க வேண்டும்."[10] என்று குறிப்பிடும் சோ. தர்மன் பல்வேறு வகையான விதைப்புப் பொருட்களின் நுட்பங்களையும் அவற்றைப் பாதுகாக்கும் முறைகளையும் யதார்த்தமாக பதிவு செய்திருப்பார்.

நிலமும் விதைப்பும்

நிலம் புஞ்சை நஞ்சை என்று இரண்டு நிலைகளில் காணப்படுகிறது. புஞ்சை நிலம் என்பது வானம் பார்த்த பூமியாகும். மேலும் நீர்நிலைகளில் இருந்தும் கிணறுகளில் இருந்தும் நீர்ப்பாசனம் பெறக்கூடிய நிலங்களை நஞ்சை என்று சுட்டப்படுகிறது. அவ்வகையில் விதை களை மண்ணுக்குள் புதைக்கும் செயலை விதைப்பு என்கிறோம். பதப்படுத்திய விதைகளை சரியான பருவத்தில் வயல்களில் விதைக்க வேண்டும். "காடு பூராவும் வெதப்பு முடிஞ்சிருச்சு வயக்காடு நடவு ஆரம்பிச்சாச்சு."[11] என்னும் கூற்று விதைப்பை உறுதிப் படுத்துகிறது. புஞ்சை நிலத்தில் "பருத்தி, துவரை, கொள்ளு, குருதவாலி, மல்லி, வெங்காயம், தட்டப்பயிறு, பாசிப்பயிறு, உளுந்து"[12] போன்ற பயிர்களும் நஞ்சை நிலத்தில் நெல், கரும்பு, வாழை, வெற்றிலைக் கொடி போன்ற பயிர்களும் பயிர் செய்யப்படுகின்றன.

நீர்ப்பாசனம்

பாசனம் என்பது நீர் நிலைகளிலிருந்து வாய்க்கால்கள் வழியாக பயிர்களுக்கு நீரைப் பாய்ச்சுவது நீர்ப்பாசனம் எனப்படும். இது இரண்டு நிலைகளில் அமைகிறது. முதலாவது கண்மாய் ஏரி, குளம் ஆறு போன்ற நீர் நிலைகளில் இருந்து நீரைப் பாய்ச்சுவது. இரண்டாவது கிணறுகளிலிருந்து நீரைப் பாய்ச்சுவது, "மூன்று மடைகளுக்கும் தலைகீழாக வடக்குப் பக்க நீர் பாய்ச்சல்தான். எந்த மடைத் தண்ணீரையும் வேறு திசையில் திருப்பினால் தண்ணீர் ஏரி பாயாது. கீழ மடையிலயும், மேலமடையிலயும் தண்ணி ஓழுங்காப் பாயும்போது நடு மடையில் மட்டும் எப்படி அடைக்கும்."[13] என்னும் கூற்றும் கிணற்றுக்குள் இருந்த சொருகு கல்லில் "தக்" கென்று குதித்தார். தன் காலுக்கு அடியில் கிணற்றுத் தண்ணீர். தெலாக் கம்பை இழுத்து குனிந்து தண்ணீர் மோந்து, நிமிர்ந்து வாய்க்காலில் ஊற்றினார். தொடர்ந்து ஊற்ற வாய்க் காலில் தண்ணீர் பாய்ந்தோடியது."[14] என்னும் கூற்று நீர்ப் பாசனத்தை உறுதி செய்கிறது. புஞ்சை நிலம் மழை பெய்தால் மட்டுமே விளையும்.

மடைக்குடும்பன்

மடை குடும்பன் என்பது நீர்பாய்ச்சி களைக் குறிக்கும் ஒரு பட்டப்பெயர். அன்றைய காலகட்டங்களில் கண்மாய், ஏரி, குளம்போன்ற பல்வேறு நீர் நிலைகளின் கரைகளைப் பாதுகாப் பதும் நீரைப் பங்கீடு செய்து வேளாண் நிலங்களுக்குப் பாய்ச்சுவதும் மடைக் குடும்பன் வேலையாகும். இந்த மடை குடும்பனுக்கு நீர்பாய்ச்சி என்ற வேறொரு பெயரும் உண்டு. " அந்தக் காலத்தில் நீர்ப்பாய்ச்சி என்ற பெயர்

கிடையாது. மடை குடும்பன் என்றுதான் சொல்வார்கள். மடைக் குடும்பன் கட்டக் கருப்பன், பரம்பரை பரம்பரையாய் மழையைப் பராமரித்து நீர் பங்கீடு செய்து, வருஷக் கூலி வாங்கி கண்மாய் காவல் காத்து வரும் வாரிசு"[15] என்னும் கருத்து அன்றைய காலகட்டங்களில் நீர்நிலை களின் கரைகளை பாதுகாப்பதற்கும், நீரைப் பாசனவசதி பெற்றஅனைத்து வயல்களுக்கும் முறையாகப் பாய்ச்சு வதற்கும் ஆட்களை நியமித்துள்ளதை நோக்க நீருக்கும் அந்நீரினால் செழிக் கின்ற வேளாண்மைக்கும் தந்திருக்கின்ற முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது.

நம்பிக்கை மற்றும் சடங்கு

நம்பிக்கை

பல்லாயிரம் ஆண்டுகளாக தொன்று தொட்டு மக்கள் கடைபிடித்து வரும் செயல் நம்பிக்கை என்கிறோம். இது இயற்கை சார்ந்த பல்வேறு அடிப்படை யான செய்திகளைக் கொண்டு நம்பு வதாகும். "இந்த வருசம் நெற பெருக்கு, சந்தேகமேயில்ல. எல்லாக் கூடுகளும் மாமரத்துல உச்சிக் கொப்புலதான், ஒன்னுகூட தாடிக் கொப்புல கட்டல"[16] என்னும் பட்சி ஜோஸ்யமும், ஆடு,கூடிக் கூடி நிற்றல், தூண்டிலில் மீன் சிக்காமல் இருத்தல், தைலான் குருவி தரையோடு தாழப் பறந்து திரிதல், ராத்திரியில் நிலா கோட்ட கட்டுதல், எறும்புகள் முட்டைகளை தூக்கிக்கொண்டு சாரை சாரையாக மேடு தேடி போகுதல், இரவில் கூகை கூப்பாடு போடுதல், காற்றடிப்பது நின்று வேகாட்டம் கூடுதல்"[17] நம்பிக்கையின் உச்சகட்டம் மேலும்" நாமக்கோழியின் வரவு என்பது ஒரு பறவையின் வரவும் மட்டுமல்ல கிராமத்தின் செழிப்பையும், அவ்வருட வெள்ளாமையின் உத்தர வாதத்தையும், மழை அதிகரிப்பதையும், நீர்நிலைகளின் நிரம்பலையும் உறுதி செய்து கிராம மக்களின் சந்தோஷத் தையும், குதூகலத்தையும் கொண்டு சேர்க்கும் வரவாகும்."[18] இவை அனைத்தும் முத்துவீரன் தாத்தாவின் அனுபவத்தில் கூறப்பட்ட இயற்கை சார்ந்த நம்பிக்கைகளாகும்.

சடங்கு

மனிதனின் பிறப்புமுதல் இறப்புவரை பல்வேறு வகையான சடங்குகள் நிகழ்த்தப் படுகின்றன. அவற்றுள் திருமணம், வளை காப்பு, பிறப்பு, காது குத்துதல், பூப்புச் சடங்கு போன்ற பல்வேறு வகையான சடங்குகளை மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் நடை முறைப்படுத்தி வருகின்றனர். இவை மட்டுமின்றி இயற்கை சார்ந்த குறிப்பாக வேளாண்மை சார்ந்த சடங்கு முறை களையும் மக்கள் பின்பற்றி வருகின்றனர். அவற்றுள்நடவு செய்தல், மழையை நிறுத்துதல் என்னும் இரண்டு சடங்குகள் நிகழ்த்தப்படு கின்றன. "ஐயனாரப்பனைக் கும்பிட்டு முதல் நடவு தொடங்கும் பொங்கலுக்காக ஊரே கூடி கண்மாய்க் கரையில் நிற்கிறது. இந்த வருடம் முதல் நடவு பொன்னையா ரெட்டியார் வயலில் என்று ஊர் முடிவு செய்திருந்தது. மடைக்குடும்பன் முதல் நெல் நாற்று

முடியைக் கும்பிட்டு குடும்பச்சியின் கையில் கொடுக்க, கும்பிட்டு வாங்கிய குடும்பச்சி முதல் நாற்றை தண்ணீருக்குள் பதித்து நட்டாள். குலவைச் சத்தம் வேகமாய் ஒலித்தது. நாளையிலிருந்து நடவு வேலைகள் ஆரம்பித்து விடும்." என்றும் மேலும்" வருகிற வெள்ளிக் கிழமை ஊர் சாற்றி கொடி வளைந்து தோரணம் கட்டுவது என்றும், அடுத்த வாரம் வெள்ளி தூள்மாவுச் சாமியைப் பொங்கல் வைத்து வழிபட்டுக் கொண்டாடுவது என்றும் முடிவு செய்து கூட்டம் கலைந்தது." "மேளதாளத்துடன் ஊர்க்கூட்டம் மேலக் களத்தில் கூடியது. பெண்கள் அனைவரின் கையிலும் சிறிய ஓலைக்கொட்டான். ஒரே இடத்தில் வட்டமாக பரப்பி வைத்துவிட்டு வட்டம் சுற்றி நின்று கொண்டது ஊர்க்கூட்டம். ஓலைக் கொட்டான் அனைத்திலும் வெள்ளை வெளேரென்று வெயில் பட்டு மின்னிக் கொண்டிருந்தது தூள் மாவுகள். கூட்டத்தில் ஏராளமானவர் களிடம் இரண்டு சாமிகளும் மாவைக் கொடுப்பது போல் சைகை காட்டி, போதும் போதும் வேண்டாம், வேண்டாம் என்ற சொல் மந்திரத்தை பெற்றுக்கொண்டார்கள். மறந்தும் யாரும் வேணும் என்று சொல்லி விடாமல் பார்த்துக் கொண்டார்கள். இரண்டு சாமிகளும் ஆளுக்கொரு மாவுக் கொட்டானைக்கையில் எடுத்துக் கொண்டார்கள். கூட்டம் ஒரு பக்கம் ஒதுங்கி நின்று வழி விட்டது. இருவரும் வேகமாக ஓடி ஓரிடத்தில் நின்று கொண்டு மாவை கையில் எடுத்து காற்றில் வீசினார்கள்". மேலும் 'மேகமே புகையே போ. மேகமே மழையாப் பொழியாத. மேகமே வெயிலுக்கு வழிவிடு. மேகமே காத்தோட ஓடிப்போ' என்றும் சத்தமிட்டனர் காற்றில் தூவிய தூள் மாவு மேகமாய் மாறி காற்றோடு போனது. அதோடு சேர்ந்து மழையும் போய்விட்டது. மேகம் இல்லாமல் மழையா? எல்லோரும் தங்கள் கைகளில் உள்ள அவரவர் மாவுக் கொட்டானில் உள்ள மாவை காற்றில் வீசினார்கள். மேகத்தைப் புகையாக்கினார்கள். மழைப் பொழிவைக் கட்டுப்படுத்தினார்கள். வெயிலுக்கு வாசலாய் நிற்கும் மேகத்தை விலகி, வழி விடும் படி கேட்டு வெயிலை வரவேற்றார்கள். சூழ்ந்துகொண்டு கொட்டித் தீர்க்கும் மழை மேகங்களைக் காற்றோடு சேர்ந்து ஓடிப் போகும்படி கேட்டுக் கொண்டார்கள்."[19] போன்ற செயல்கள் வேளாண்மையில் சடங்கு களாகவே நிகழ்த்தப்படுகின்றன என்பதை சோ. தர்மன் மிகச் சிறப்பாக எடுத்துரைப்பார்.

அறுவடை

"காடுகளில் கதிர் பொறுக்கி வண்டியில் களத்திற்கு வந்து விட்டால் காணியானவன் களத்திற்கு வந்து விடவேண்டும். சாணம் தெளித்து களத்தைத் தயார் பண்ணுவது, கதிர்களைத் தினமும் காயப்போட்டு உலர்த்துவது, ஆடு, மாடுகள், கோழிகள் வராமல் காவல் காப்பது, பிணையலுக்கு மாடுகள் கொண்டு வருவது, பிணையல் அடித்து சக்கைகளையும் தானியத்தையும் தனியே பிரித்தெடுக்க உதவுவது, காற்றில் தூற்றி

தூசுகளை அப்புறப்படுத்தி தானியங்களை ஒதுக்குவது, சம்சாரியின் வீட்டில் கொண்டு போய்ச் சேர்ப்பது வரை காணிக்காரனுக்கு ஓய்வே இருக்காது."[20] என்னும் இப்பதிவில் வேளாண்மையில் விளைந்த பயிர்களை அறுவடை செய்து தானியங்கள் வீடு வந்து சேரும்வரை இருக்கக்கூடிய பல்வேறு இன்னல் களையும் சிரமங்களையும் நாவலாசிரியர் சிறப்பான முறையில் பதிவு செய்துள்ளதை அறிய முடிகிறது.

முடிவுரை

நீர்நிலைகளை ஊர் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி சீர் செய்வதும், நிலத்திற்கு கரம்பை மண், கால்நடைகளின் கழிவுகள், கிடை வைத்தல் போன்ற செயல்களின் மூலம் மண் வளப் படுத்துதல் சிறப்பாகும். மேலும் கூட்டாக இணைந்து உழவு செய்யும் முறையும், விதைகளின் இன்றியமையாமையும் அவற்றின் நுட்பங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் கண்மாய் மற்றும் கிணறுகளிலிருந்து நீர்ப்பாசனம் செய்யும் முறைகளையும், பல்லாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் இயற்கை சார்ந்த நம்பிக்கைகள் மற்றும் சடங்குகள் தற்காலத்திலும் மூத்த குடிகள் மூலம் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப் படுவதை அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் அறுவடைக்குப் பிறகும்கூட தானியத்தைப் பிரித்தெடுப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதையும் இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

மேற்கோள்கள்

1. சோ. தர்மன், சூல், ப.3
2. மேலது, பக்.1–3
3. மேலது, ப.1
4. மேலது, ப.3
5. மேலது, ப.128
6. மேலது, ப.132
7. மேலது, ப.11
8. மேலது, ப.4
9. மேலது, பக்.11–12
10. மேலது, பக்.24–26
11. மேலது, ப.86
12. மேலது, ப.127
13. மேலது, ப.57
14. மேலது, ப.113
15. மேலது, ப.55
16. மேலது, ப.7
17. மேலது, ப.20
18. மேலது, ப.67
19. மேலது, பக்.89–91
20. மேலது, பக்.135.